CHAKKARAPALLI - 614 211, Thanjavur Dist, Tamil Nadu, India.

Date : ......................

அதன் காரணமாக இன்று உலகில் பல்வேறு நாடுகளில் " ஜமாலியன்கள்" சிறப்பான இடத்தில உள்ளனர். அனைத்து துறைகளிலும் உயர்ந்த நிலையில் இருக்கின்றனர்.

ஜமால் முஹம்மது கல்லூரி துவங்கிய காலம் முதலே எங்கள் பகுதியில் இருந்து உயர் கல்வி பயில அதிகப்படியான மாணவர்களை அனுப்பி வைத்தது மாத்திரமின்றி எங்கள் ஊரின் கொடை வள்ளல்கள் மர்ஹூம்ஹளாகிய உச்சி அப்துல் காதர் ஹாஜியார், B. A. ரஹீம் ஹாஜியார் மற்றும் மர்ஹபா A. K. பஷீர் அஹமது அவர்கள், ஹாஜி D.M. ஜபருல்லாஹ் அவர்கள் போன்ற இன்னும் பல தனவந்தர்கள் ஜமால் முஹம்மது கல்லூரியின் வளர்ச்சியில் அன்பும் அக்கறையும் கொண்டு உதவி வருகிறார்கள் என்பது எங்கள் ஊருக்கு பெருமை சேர்க்கும் விஷயமாகும்.

சமுதாயத்தின் கண்ணியம் கல்வியில் தான் இருக்கிறது, சமுதாயத்தின் உயர்வு கல்வியில்தான் உள்ளது என தீர்க்க தரிசனத்தோடு சிந்தித்து பல கோடி பெறுமானமுள்ள தங்களது இடம், பொருள், உழைப்பு ஆகியவற்றை தந்து இந்நிறுவனைத்தை உருவாக்கிய பெருந்தகையாளர்கள் மர்ஹூம்கள் ஹாஜி M. ஜமால் முஹம்மது சாஹிப், ஜனாப் N. M. காஜா மியான் ராவுத்தர் ஆகியோரை இந்நன் நேரத்தில் நன்றியோடு நினைவு கூர்ந்து பிரார்த்திக்கின்றோம்.

– ஜமாத்தார்கள்

*Dr. M.A. ALEEM, M.D.D.M., (Neuro),*

Consultant Neurologist and Epileptologist

Trained at Institute of Neurology Queen's Square. London. UK.,

President

Tamilnadu & Pondicherry Association of Neurologists

Former Vice – Principal

Former HOD & Professor of Neurology, KAPV Govt. Medical College, Trichy – 620 001.

Former Senior Civil Surgeon, Mahathma Gandhi Memorial Govt. Hospital, Trichy – 620 017.

Secretary.

Neurologists Association, Tiruchirappalli.

Consultant Neurologist ABC Hospital, Annamalai Nagar, Trichy – 620 018.

**ADDRESS FOR CORRESPONDENCE –**

Consultant Neurologist, ABC Hospital, Trichy – 620 018, Tamilnadu. India.

Fax : 91-431-2760850, Mobile : 94431 – 59940, E-mail : drmaaleem@hotmail.com


TNRC



**11:07:2018**

## வாழ்த்துரை

காவிரி கரை அமைந்த திருச்சியில் இயங்கிவரும் நேர்வழியின் தீபமாம் ஜமால் முகமது கல்லூரியின் நிறுவனார் நாள் காண்கின்ற இன்நேரம்
ஒரு நன்நாள் .

நிறுவனர்களின் மனத்துய்மையால் இந்த ஜமால் முகமது கல்லூரி இன்று விருட்சமாய் வானுயர்ந்து நிற்கிறது. இங்கிருந்து வெளியாகும் கல்விசால் அறிஞர்கள் விண்ணை அலங்கரிக்கும் தாரகைகள் போல் சேவையால் மண்ணை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மங்காத மாணிக்கங்களை உருவாக்கும் ஜமால் முகமது கல்லூரி ஒளியுடன் திகழ்ந்திடவும்.அதன் உயிரோட்டமாய் திகழும் தாளாளர் **ஹாஜா நஜ்முத்தின்** தலைமையிலான பொருளாளர் துணைசெயலாளர் உட்பட்ட நிர்வாகப் பெருமக்கள் முதல்வர் துணைமுதல்வர் மற்றும் பேராசிரியர்களின் சேவை யுகமுடிவு நாள்வரை தொடர்ந்திடவும் மறையளித்த இறைவனிடம் மனமாரப் பிரார்த்தனை புரிகின்றேன்.

இப்படிக்கு

டாக்டர். எம்.ஏ.அலீம் எம்.டி.டி.எம். (நியுரோ)

ஜமாலியன

தலைவர்

தமிழ்நாடு பாண்டிச்சேரி மூளை நரம்பியல் நிபுணர்கள் கழகம்


**ADDRESS FOR CORRESPONDENCE -**

Residence : 27, Mudaliyar Street, Thuvarankurichy, Trichy – 621 314, Tamilnadu. India.

# ABS HERBAL GARDENS

8/17, First Cross, Vidhya Nagar, Salem - 636 003.
Web: www.absbotanicalgardens.com

Nagalur Road, Yercaud, Salem - 636602.
E.Mail: absbotanicalgardens@gmail.com

Executive Director: Dr. A. Balasubramanian
Former Siddha Consultant (AYUSH) Ministry of Health & Family Welfare, New Delhi.
Mobile: 94433 62747

Honorary Co-ordinators :

Mrs. **Suganya Ravisankar** M.Sc., (Coun. Psy.), D.T.T.M.
Dr. **N. Loganathan,** M.Sc., Ph.D. Poorveegam Trust, Pudhucherry.
Dr. **R. Marimuthu,** M.Sc., Ph.D. (Retd.) Reader. Dept. of Botany, Periyar University, Salem.
Dr. **S. Sridhar,** B.S.M.S., M.Sc., Ph.D., (Siddha) Tamil Nadu Arasu Siddha Maruthuvar.
Dr. **R. Richard Kennedy,** M.Sc.(Hort.), Ph.D. Professor & Head, Tamilnadu Agriculture University.
Dr. **S. Ashok,** B.S.M.S., Y.I.C.C., M.B.B.S., Saravana Hospitals, Salem.
Dr. **R. Selvaraj,** M.Sc., Ph.D. (Retd.) Joint Director of Horticulture.
Mr. **Magudapathy,** M.Sc.(Agri.) Exporter - Dunhills Phyto Herbs, Vellakoil.



Janab M. Jamal Mohamed Sahib

JMC



Janab N.M. Khajamiyan Rowther

## A JAMALIAN'S REPORT ABOUT HIS HOME INSTITUTION

With continuous efforts and tireless works of the management, our **JAMAL MOHAMED COLLEGE** become a world reknowned college and one of the best colleges in India. The students coming out of our college are in good possition allover the world. This is like a big BANYAN tree. The roots of the Banyan tree is the rooutcauseof its substatial growth, which give lives to thousands of birds, animals, humanbeings and for enviorment also. Like BANYAN tree, the ROOTS are our father-founders **JANAB M. JAMAL MOHAMED SAHIB** and **JANAB N.M. KHAJAMIYAN RAWTHER,** our ~~ever memorable and~~ honorable and ever memorable people. We should never forget our founders. Let their family people, our management, our staff, alumini students and present students may live long with the sweet memory of our founders.

## INTRODUCTION

1959 is the year I joined in JMC in P.U.C. I am proud to be a JAMALIAN, because I obtained basic and fundamental knowledge from JMC which made me a technolegy oriented person and subsequently a FIELD BOTANIST. 25 years of field experience encouraged me to be an auther of DICTIONARY on HERBAL PLANTS. My DICTIONARY OF MEDICINAL PLANTS have world-wide regcognition and more than 15 countries accepted my Dictionary with good honour (including KEW garden, London). I travelled around 35 countries and documenting the world-wide plant species.

Thanking you.

Botanically yours,

01/05/2018

Dr. A. Balasubramanian
Former Siddha Research Consultant
Ministry of Health and Family Welfare, New Delhi.

ABS HERBAL GARDENS ★ SALEM & YERCAUD ★ 1/5/18

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சமூக சிந்தனையாளர் வள்ளல் ஜமால் முகம்மது | 37 |
| 2. | காலத்தை வென்று நிற்கும் காவியம் – வள்ளல் காஜாமியான் | 48 |
| 3. | அற்றம் காக்கும் கல்வியின் இரண்டு கண்கள் – ஒரு வரலாற்றுப் பார்வை | 55 |
| 4. | திருச்சி கண்ட சீதக்காதி | 60 |
| 5. | Contribution of Jamal and N.M. Family in the promotion of Education in Madras and Trichy | 63 |
| 6. | Life and Achievement of Haji Jamal Mohamed Sahib Founder of Jamal Mohamed College | 69 |
| 7. | ஜமால் முகம்மது இராவுத்தரின் வரலாற்றுச் சுவடுகள் | 73 |
| 8. | தென்னிந்தியாவின் வர்த்தக இளவரசர் ஹாஜி. எம்.ஜமால் முஹம்மது சாகிபு பஹதூர் | 86 |
| 9. | பல்துறை வித்தகர் – ஜமால் முஹம்மது | 92 |
| 10. | வள்ளல் ந.மு.காஜாமியான் ராவுத்தரின் பன்முகப் பங்களிப்பு | 97 |
| 11. | Tribute to Jamal Mohamed Family | 100 |
| 12. | வள்ளல் ஜமால் முகம்மது | 108 |
| 13. | வள்ளல் காஜாமியான் | 112 |
| 14. | தம்பி எஜமான்! | 116 |
| 15. | வள்ளல் ந.மு.கா. | 118 |
| 16. | ஹாஜியார் ஜமால் முகம்மது | 121 |
| 17. | The great valuable visionaries: Founders of Jamal Mohamed College | 126 |
| 18. | வரலாற்றில் வாழ்பவர்கள் | 131 |
| 19. | குர்ஆன் கருத்துப் பரப்புரையில் கல்லூரி நிறுவனங்களின் பங்களிப்பு | 133 |
| 20. | கான்சாகிப் காஜாமியான் அவர்கள் | 138 |
| 21. | ஹாஜி ஜமால் முகம்மது சாகிப் | 139 |
| 22. | கல்விக் கொண்டல் வள்ளல் ஜமால் முஹம்மது | 140 |
| 23. | காஜாமலையில் அமைந்துள்ள மாப்ளா முஸ்லிம்களின் அடக்கஸ்தலமும் வள்ளல் ந.மு.காஜாமியான் ராவுத்தரின் பங்கும் | 144 |

| | | |
|---|---|---|
| 24. | மனிதருள் மாணிக்கம் ஜமால் முஹம்மது இராவுத்தர் | 146 |
| 25. | Life Sketch of Janab. M.J. Jamal Mohideen Sahib Ex. MP., My revered Grandfather and the real Architect and Father of Jamal Mohamed College, Trichy | 140 |
| 26. | ஸதகத்துல் ஜாரியா | 152 |
| 27. | Our beloved Founder Secretary and Correspondent : 'ATTAU SAHEB!' | 157 |
| 28. | எளிமை... நேர்மைக்கு ஒரு N.M.K. | 158 |
| 29. | Leadership and Governance in Jamal | 160 |
| 30. | ஜமாலின் ஜாம்பவான்களின் உயர்ந்த உள்ளம் | 163 |
| 31. | (Late) Haji. M.J.M. Abdul Gafoor My Mentor - An Immortal Legend and Life Line of JMC | 164 |
| 32. | அருங்குணச்செம்மல் ஹாஜி M.J.M. அப்துல் கபூர் சாஹிப் | 168 |
| 33. | கலங்கரை விளக்கமான கஃபூர் சாஹிப்... ! | 171 |
| 34. | இரு நிகழ்வுகள் ஒருமனிதர் | 173 |
| 35. | 'நேர்மையான கல்வியாளர்' | 175 |
| 36. | The Vision and Mission of Hajee M.jamal Mohamed Sahib and Janab N.m.kajamian Rowther. | 177 |
| 37. | ஜமால் – என் திருவரங்கம் | 179 |
| 38. | ஜமால் முஹம்மது கல்லூரி | 186 |
| 39. | மலைக்கோட்டை மாநகரில் ஒரு கலைக்கோட்டை | 189 |
| 40. | உலகக் கல்வியும் மார்க்கக் கல்வியும்... | 190 |
| 41. | நிர்வாகம் | 191 |
| 42. | மலரும் நினைவுகள் | 195 |
| 43. | ஜமால் ஓர் அழகிய குடும்பம் | 205 |
| 44. | என் இரண்டாம் கருவறை | 206 |
| 45. | இந்தியக் கலாச்சாரத்தை உலக அரங்கில் நிகழ்த்திக் காட்டிய ஜமால் – ஜமாலியர்கள் | 209 |
| 46. | JAMAL THE BEAUTY | 216 |
| 47. | ஜமால் முகம்மது கல்லூரி சரித்திரத்தில் ஓர் அரிய சகாப்தம் | 219 |
| 48. | ஜமால் – என் இனிய நினைவலைகள் | 223 |
| 49. | அழகு ஜமால் – மலரும் நினைவுகள் | 225 |
| 50. | உயர் கல்வியில் ஜமால் முகம்மது கல்லூரியின் பங்கு | 228 |
| 51. | Jamal – The Elixir of Life | 231 |
| 52. | My Sweet Memories of Jamal | 233 |

| | | |
|---|---|---|
| 53. | ஒரு ஜமாலியனின் நினைவு அலைகள் | 236 |
| 54. | பசுமை நிறைந்த நினைவுகள் | 240 |
| 55. | என் வாழ்வில் வழிகாட்டும் கைக்காட்டியாய் ஜமால் முகம்மது கல்லூரி | 242 |
| 56. | 1963 - 66 GOLDEN PERIODS | 244 |
| 57. | என் இரண்டாவது தாய் – ஜமால் | 246 |
| 58. | ஜமால் முஹம்மது கல்லூரியில் என் நினைவுகள் | 247 |
| 59. | Pleasant Memories of Jmc | 249 |
| 60. | 'SHOW US THE RIGHT PATH' - INSHA ALLAH | 250 |
| 61. | Memoirs of the College days… 1984-89 | 251 |
| 62. | அடிப்படையில் ஓர் அடிப்படை ஜமால் முஹம்மது கல்லூரிக்கு நன்றியுரை | 253 |
| 63. | விலாசம் தந்த விடிவெள்ளி | 257 |
| 64. | நீங்காத நினைவுகள் | 260 |
| 65. | இராவுத்தர் இனமும் பரிமள சுன்னத் ஜமாத்தும் | 261 |
| 66. | சமுதாயத்தின் ஒளி விளக்குகள்... ! | 264 |
| 67. | பேரொளி வீசும் பெருமைமிகு ஜமால் | 266 |
| 68. | காதலின் ஆசையிலே! | 267 |
| 69. | கடமை வீரர் ஜமால் அப்துல் கஃபூர் அண்ணார் | 269 |
| 70. | Memories of My Father, Founder Treasurer Janab N.M.K. Abdus Samad Rowther | 270 |
| 71. | Some Recollections | 272 |
| 72. | Remembrance of Things Past | 274 |
| 73. | Khajamian Rowther - A Titan among Tanners | 277 |
| 74. | Great Devotees to the cause of Education | 279 |
| 75. | THEY HAD A DREAM: A DREAM COME TRUE | 281 |
| 76. | The Glorious Journey of Jamal | 285 |

# சமூக சிந்தனையாளர் வள்ளல் ஜமால் முகம்மது



முனைவர் ஜெ.ராஜா முகமது,
இயக்குநர், இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம், ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.

நூறு இளைஞர்களை என்னிடம் தந்தால் நான் இந்த நாட்டையே மாற்றிக்காட்டுகிறேன், என்றார் விவேகானந்தர். ஆனால், அப்படிப்பட்ட நல்ல இளைஞர்கள் உருவாக வேண்டுமே என்று கவலை கொண்டிருந்த மாபெரும் சமூக சிந்தனையாளர் ஜமால் முகம்மது. திருச்சியில் ஜமால் முகம்மது கல்லூரிக்கு வித்திட்ட புரவலர்களில் ஒருவர். இவர் பெயரே கல்லூரிக்கு சூட்டப்பட்டுள்ளது. தீர்க்கமான பார்வை, குறுந்தாடி, அமைதியான தோற்றம், ஆரவாரமில்லாத பேச்சு, அடக்கமான முண்டாசு – இது ஜமால் முகம்மதின் தோற்றம்.

1927–ம் ஆண்டு! இஸ்லாமிய சமுதாயம் ஆங்கிலேயக் கல்வியை நோக்கி காலடி எடுத்து வைத்திருந்த நேரம். உயர் கல்வி நிலையங்கள் அப்போது சென்னை நகரை மையப்படுத்தி இருந்ததால், கல்லூரிகளில் சேர்ந்திருந்த மாணவர்கள் பலர், தங்களது படிப்புச் செலவை ஈடுகட்டமுடியாமலும், சரியான உணவு, இருப்பிடம் இல்லாது அல்லல்படுவது வள்ளல் ஜமால் முகம்மது அவர்களின் கவனத்திற்கு வந்தது. இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற சிந்தனை அவரது மனதில் உதித்தது. இந்த தருணத்தில் இவர்களை ஊக்குவிக்காவிட்டால் பலர் இடையில் கல்வியை நிறுத்தி விடுவார்கள், இதன் மூலம் இளைஞர்களின் முன்னேற்றம் பாதிக்கப்படும் என்பதையும் உணர்ந்து, தனது நண்பர்களுடன் கலந்துபேசினார்.

சென்னை பெரம்பூரில் தனது மாளிகைக்கு எதிரே ஒரு பெரிய கட்டடத்தில் 'ஜமால் தங்கும் விடுதி', ஒன்றினைத் தொடங்கினார். சென்னையிலுள்ள கல்லூரிகளில் இண்டர்மீடியட், இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்புகள், பொறியியல், மருத்துவம் ஆகியன பயிலும் மாணவர்கள் இங்கு தங்குவதற்கு ஏற்பாடாகியது. நல்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மாணவர்கள் பலர் அங்கு வந்து சேர்ந்தனர். இங்கு தங்கியிருந்த மாணவர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு இலவசமாக வழங்கப்பட்டது. அவர்கள் படிப்பதற்குத் தேவையான வசதிகள் அனைத்தும் அளிக்கப்பட்டன. அரபு மொழி மற்றும் திருக்குர்ஆன் பயிலவும் மாணவர்களுக்கு அங்கேயே ஏற்பாடும் செய்யப்பட்டது. இதற்காக, அருகிலிருந்த ஜமாலியா அரபிக்கல்லூரியின் முதல்வர் மௌலானா மஹ்முது ஹசன், இந்த விடுதியிலேயே தங்கி இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். மாணவர்கள், இளைஞர்கள் ஆன்மீக பலம் மிக்கவர்களாக வளரவேண்டும் என ஜமால் முகம்மது கருதினார். சில மாணவர்கள் தாங்கள் பயிலும் கல்லூரிக்குச் செல்லுவதற்குப் பேருந்துக்கட்டணம் செலுத்த இயலவில்லை என்பதை அறிந்து, அங்கு தங்கியிருக்கும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 7 முதல் 10 ரூபாய் வரை நிதி உதவி வழங்கினார். மாணவர்கள் மகிழ்ந்துபோய் படிப்பில் கவனம் செலுத்தினர். (பணத்திற்கு அப்போது மிகுந்த மதிப்பு 1 ரூபாய்க்கு 16 அணா. ஒரு அணாவுக்கு நான்கு காலணா. இரண்டு காலணா இருந்தால் காலை உணவு சாப்பிடலாம். ஒரு சவரன் தங்கம் ரூ.2/– என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்) பொருளாதாரப் புயலில் மாணவர்கள் சிக்கிவிடக்கூடாது என்பதால் இந்த உதவி! எவ்வளவு பெரிய மனம்! ஊரார் பிள்ளைகளை ஊட்டி வளர்த்த பாரி! இந்த விடுதியில் தங்கியிருந்த மாணவர்களுள் பலர் பின்னாளில் மாவட்ட ஆட்சியர்களாகவும் காவல்துறை அதிகாரிகளாகவும், மருத்துவர்களாகவும், பொறியாளர் களாகவும், வழக்கறிஞர்களாகவும் பதவியிலமர்ந்து அவர்களது வீட்டிற்கும், நாட்டிற்கும், நல்லதைச் செய்வதற்கு அவர்களை உருவாக்கிய பெருமை வள்ளல் ஜமால் முகம்மது அவர்களைச் சாரும்.

ஜமால் முகம்மது சாஹிப் தேர்ந்த அறிஞர், பல்கலை வித்தகர், நேர்மையான வணிகர். தனது ஓய்வு நேரத்தில் இந்த விடுதிக்கு வந்து மாணவர்களுடன் உரையாடுவார். எளிமையான பாவனையில் திறந்த மனதுடன், மாணவர்களுடன் அன்புடன் பேசுவார். அவர்களை ஊக்கப்படுத்துவார். தான் பிற நாடுகளில் பெற்ற அனுபவங்கள், அன்றைய இந்திய அரசியல் சூழல், ஆகியனவற்றை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லுவார். அவர்களது சந்தேகங்களை தெளிவுபடுத்துவார்.

அக்காலத்தில் சென்னை நகரில் வாழ்ந்த செல்வந்தர்களுள் அனைத்துத்தரப்பு மக்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தவர் ஜமால். சமுதாய முன்னேற்றம் குறித்த அவரது தொலைநோக்கு சிந்தனை, பல்துறைப் புலமை ஆகியனவற்றைக்கண்டு அப்போது இந்தியாவிலிருந்த பொருளாதார நிபுணர்களும், அறிவியலாரும் இவரைப் பாராட்டியுள்ளனர். அதனால்தான், நாம், அவரைப்பற்றி இன்றும் பேசிக்கொண்டிருக்கிறோம், இவ்வாறு தனது மாணவப்பருவத்தையும், ஜமால் விடுதியில் தங்கியிருந்து பயன்பெற்ற தனது அனுபவங்களையும் நினைவு கூர்கிறார், ஜமால் முகம்மது கல்லூரியின் முதலாவது முதல்வர் அல்ஹாஜ் எம்.ஜே.முகம்மது சயித் சாஹிப் அவர்கள்.

தேசியத்தலைவர்கள் மற்றும் கற்றறிந்தவர் களை, அழைத்து வந்து ஜமால் விடுதியில் தங்க வைத்து அவர்களது சொற்பொழிவுகளின் மூலம் இளம் தலைமுறையினருக்கு நல்வழி காட்ட ஏற்பாடு செய்திருந்தார். மௌலானா அப்துல் கலாம் ஆசாத், டாக்டர் அன்சாரி, டாக்டர் ஜாகிர் உசேன், உலக மகாகவி இக்பால், சுலைமான் நத்வி போன்றவர்களெல்லாம் இங்கு தங்கியிருந்து மாணவர்களிடையே உரையாற்றி உள்ளனர். இளைஞர்களின் எதிர்கால வாழ்விற்கு முன்னேற்றப் பாதையைக் காட்டுவதாக இது அமைந்திருந்தது.

'ஜமால் விடுதியில்' தங்கியிருந்தபோது வள்ளல் ஜமால் முகம்மது அவர்களிடம் கண்ட சில நற்பண்புகளை மேலும் கூறுகிறார் சயீத், ஜமால் முகம்மது ஒழுக்க சீலர். செல்வந்தர்களும் சாதராண மக்களின் வாழ்வியலைப்புரிந்து கொள்ள வேண்டுமென்ற உணர்வு கொண்டவர். தனது மூத்த மகன் ஜமால் மொகிதினை விடுதியிலுள்ள மாணர்வலுடன் தங்கியிருக்குமாறு வலியுறுத்துவார். இளைஞர்கள் இஸ்லாமிய மார்க்க நெறிகளைப் பின்பற்றி நடக்க வேண்டுமென விரும்பியவர். இந்நாட்டு இளைஞர்களை சிறந்த கல்வி பயின்று நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களாக உருவாக வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தேசியவாதியாக விளங்கியவர்.

சிறந்த ஆன்மீகவாதியான ஜமால் முகம்மது, அறிவியல் அறிஞராகவும் விளங்கினார். அப்போது பரிச்சயமாகி இருந்த அறிவியல் கோட்பாடுகளை நண்பர்களுடன் விவாதிப்பார். உயிரியல், இயற்பியல், வானசாஸ்திரம், மருத்துவம் என பல துறைகளிலும் ஆழ்ந்த சிந்தனை கொண்டவர். இரவு நேரங்களில் தனது பங்களாவின் மேல்தளத்திலிருந்து, ஒரு தொலை நோக்கிக் கருவியைக் கொண்டு (டெலஸ்கோப்) வானத்தைப் பல மணிநேரம், பார்த்து ஆராய்ந்து கொண்டிருப்பார். ஒவ்வொரு விஷயமும் அவரது சிந்தனையில் ஏன் ? எப்படி ? என்ற எண்ணத்திற் குட்படும். ஜமால் முகம்மது அவர்கள் பயன்படுத்திய இந்த தொலை நோக்கிக் கருவி (டெலஸ்கோப்) பின்னாளில் ஜமால் முகமது கல்லூரி இயற்பியல் துறைக்கு அவரது மகனால் வழங்கப்பட்டது எனக்கூறுகிறார் சயீத்.

இவ்வாறு ஜமால் முகம்மது அவர்களை நேரில் கண்டு பேசிய பழகிய வாய்ப்புப் பெற்றவரும், முதலாவது முதல்வருமான சயீத், அவர்கள் கூறும் செய்திகள் வள்ளலைப் பற்றித் தெரிந்து கொள்ள முதன்மைச்சான்றாக அமைகின்றன.[1]

ஜமால் முகம்மது அவர்களின் பூர்வீகம் தற்போதைய ராமநாதபுரம் மாவட்டம் நரிக்குடியாகும். அக்காலத்தில் இதுவும் மதுரை மாவட்டத்துடன் இணைந்திருந்த பகுதி. இவரது பெயரில் வரும் M.J. என்னும் முன்னெழுத்தில் 'M' என்பது மதுரை என்பதைக் குறிக்கும் எனக்கூறுகிறார் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர்.[2] ஜமால் முகம்மதின் தந்தையார் ஹாஜி ஜமால் முஹையத்தீன் 1875–ம் ஆண்டு வாக்கில் சென்னைக்கு வந்து உப்புத்தோல் வணிகம் செய்துவந்தார். இவரது அலுவலகம் சென்னை தம்புச்செட்டித் தெருவில், ஜமால் மொஹிதீன் அன் கோ என்ற பெயரில் விளங்கியது. உப்புத்தோல் ஏற்றுமதியில் பெரு வணிகராகத் திகழ்ந்த இவர் முதல் உலகப்போர்க் காலத்தில், 1914–1918–ல் மிகப்பெரிய செல்வந்தரானார்.

இந்நாட்டு மக்கள் வளம் பெற வேண்டுமென்ற எண்ணம் கொண்ட கொடை வள்ளல் ஹாஜி ஜமால் மொய்தீன் 1898–ம் ஆண்டு சென்னை பெரம்பூரில் 'மதரசா ஜமாலியா', என்ற அரபிக்கல்லூரியைத் தொடங்கினார். சென்னையில் தொடங்கப்பட்ட முதல் 'அரபிக்கல்வி நிறுவனம்' இதுவேயாகும். அதற்கு எதிரே ஒரு பள்ளிக்கூடத்தையும் தொடங்கினார். இவற்றின் பராமரிப்பிற்கு தனது சொத்தில் கணிசமான பகுதியை வழங்கியிருந்தார். மேலும் அன்று தமிழ்நாட்டில் செயல்பட்ட பல அரபிக் கல்லூரிகளுக்கும், அறநிறுவனங்களுக்கும் நிறைய நிதி உதவி செய்துள்ளார். பல பள்ளி வாசல்களைக் கட்டியுள்ளார். இவ்வாறு தமிழக மக்களிடம் பிரபல்யமாகி இருந்த தமிழ் முஸ்லிம் தலைவராகவும், கொடை வள்ளலாகவும் விளங்கியவர் ஜமால் மொகிதீன் என ஆய்வாளர் ஒருவர் கூறுகிறார்.[3]

இத்தகைய சீலமிகு வணிகச் செம்மலின் மூத்த புலவர்தான் ஹாஜி ஜமால் முகம்மது 1882–ம் ஆண்டு பிறந்த இவர், பள்ளி உயர்கல்வி பெற்று தந்தையாருக்கு உதவியாக 13 வயதிலேயே தோல் வணிகத்தில் ஈடுபடலானார். 1910–ம் ஆண்டுவாக்கில் இவர்களது குடும்ப தோல் வர்த்தக நிறுவனம் சென்னை ராஜதானியில் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனமாக விளங்கியது.

இளம் வயதிலேயே கூர்ந்த அறிவுமிக்கவராக விளங்கிய ஜமால் முகம்மது, உலகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், வரலாறு, தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, அறிவியல் சம்மந்தமான நூல்களையும், ஆங்கில இதழ்களையும் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இது போன்ற புத்தகங்களைப் படித்துத் தனக்குத்தானே பாடம் சொல்லிக் கொள்வார். எந்த எழுத்தாளரின் கருத்தையும் திறனாய்வு செய்யும் தகைமை உள்ளவர் என்பதை, இவர் படிக்கும் புத்தகங்களின், ஓரத்தில் இவர் எழுதியிருக்கும் கருத்துக்கள் புலப்படுத்தும். தகைமையாளர், புலமைவாய்ந்தர்களைச் சந்தித்து உரையாடுவதில் மிகுந்த விருப்பம் கொண்டவர். இவரது தாய்மொழி தமிழ், ஆனால் சென்னையில் வாழ்ந்த மிகப்பெரும்பாலானோர் உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். தன்னைச் சூழ்ந்து இருக்கும் மக்களோடு இணக்கமாகப் பழகுவதற்கு உருது மொழியின் அவசியத்தை உணர்ந்து அம்மொழியை நன்கு கற்றறிந்தார். இளைஞரான இவரிடம் அறிவுத்தேடல் இயல்பாகவே இருந்தது என இவரது வரலாறு கூறும் நூல் கூறுகிறது.[4]

1910–ம் ஆண்டு தனது 28–வது வயதில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு எகிப்து, இத்தாலி, ரோம், பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, துருக்கி போன்ற நாடுகளைக் கண்டு வந்தார். தமது குடும்ப தோல்வர்த்தகத் தொழில் முன்னேற்றம் காணவும், அதிக அளவில் ஏற்றுமதி செய்வது குறித்த சாத்தியக்கூறுகளை ஆராய்வதும், இவரது முக்கிய நோக்கமாக இருந்த போதிலும், சுற்றுப்பயணம் மூலம் பலதுறைகளில் நல்ல அனுபவமும் பெற இயலும் என்று கருதினார்.

தனதுதந்தையார்ஏற்படுத்தியுள்ளஜமாலியா அரபிக் கல்லூரியின் போதனா முறைகளில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர இப்பயணம் வாய்ப்பாக இருக்கும் எனவும் அவர் கருதினார். ஜமாலியா அரபிக்கல்லூரியின் அப்போதைய பாடத்திட்டப்படி, அரபி மொழி, திருக்குர்ஆன் பாடம் மற்றும் மார்க்க விஷயங்கள் குறித்து தெரிந்துகொண்டால் போதும் என்று கருதினர். பொதுக் கல்வி உள்ளிட்ட சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தவது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவின. இந்த சுற்றுப்பயணத்தின்போது இதற்கு தீர்வு காணவும் எண்ணம் கொண்டார். அதன்படி துருக்கி நாட்டில் இருந்த இஸ்லாமிய உலகின் தலைமை காஜியாகக் (குருமார்) கருதபட்ட ஷைகுல் இஸ்லாம் அவர்களைச் சந்தித்துத் தெளிவு பெறலாம் என்று கருதினார்.

இங்கிலாந்து நாட்டின் தலைநகரான லண்டன், ஒரு எழில் நகரம். இயற்கை எழிலான பூங்காக்கள் பல அந்த நகருக்கு அழகூட்டுகின்றன (இன்றும் தான்). இந்த பூங்காக்கள், ஜமால் முகம்மதுவை வெகுவாகக்கவர்ந்தன. மகிழ்ச்சியுடன் பல பூங்காக்களிலும் சுற்றி வருவார். பேண்ட், முழங்காலுக்குக் கீழ் அளவுள்ள கருப்பு கோட், குறுந்தாடி, வெள்ளை நிறத்தலைப்பாகை சகிதம் இவரது தோற்றத்தைக் கண்ட ஆங்கிலேயர் சிலர், வியந்து போய், இந்தியாவிலிருந்து வந்திருக்கிற ஒரு சந்நியாசி போலும் என்று தங்களுக்குள் வேடிக்கையாகப் பேசிக்கொண்டு சென்றனர், என்று கூறுகிறது இவரது வரலாறு கூறும் நூல்.

லண்டனில் உள்ள உலகிலேயே மிகப் பெரிய அருங்காட்சியகமான ‘பிரிட்டிஷ்’ அருங்காட்சி யகத்திற்கு சென்று அங்கிருந்த பல்வேறு அரிய பொருட்களைக் கண்டு வியந்து நின்றார். மேலும் லண்டன் நகரில் பிரபல்யமான தொழிலதிபர்களையும், தோல் இறக்குமதி வணிகம் செய்பவர்களையும் சந்தித்து தமது வணிக வளர்ச்சிக்கான வழிமுறை களைக் கண்டறிந்தார்.

எகிப்து நாட்டு அரபிக் கல்வி நிறுவனங்களில் மதம் சார்ந்த கல்வியுடன், பொதுக்கல்வியும் கற்பிக்கப்படுவதைக் கண்டார். துருக்கி நாட்டின் தலைநகர், கானஸ்டாண்டிநோபிலில், இஸ்லாமிய மதத்தின் தலைமைக் காஜியாகக் கருதப்பட்ட ஷைகுல் இஸ்லாம் அவர்களைச் சந்தித்து, அரபிக் கல்வி நிறுவனங்களில் பொதுக்கல்வியையும், சேர்த்துக் கற்பிப்பது குறித்து, அவரது கருத்தை கேட்டறிந்தார். அரபிக் கல்வி நிறுவனங்களில் பொதுக்கல்வி, கற்பிப்பது ஏற்புடையதே எனவும், இதற்கு தடையேதும் இல்லை என்ற கருத்து, எழுத்து மூலம் பெறப்பட்டது.

கெய்ரோவிலிருந்து ஹஜ் பயணமாக மக்கமா நகருக்குச்சென்றார். ஹஜ்பயணம் என்பது அப்போது

அவ்வளவு எளிதான காரியமாக இருக்கவில்லை. பெரும்பாலான தூரத்தை ஒட்டகத்தின் மீது அமர்ந்து பயணிக்க வேண்டியிருந்ததைக் குறிப்பிடுகிறார் ஜமால்.

தமது சுற்றுப்பயணத்தின் போது பல்வேறு நாடுகளிலும் கண்டவற்றையும், தனது அனுபவங்கயையும் பதிவு செய்து வந்துள்ளார். இதில் நாடு, நகரம், மக்கள், வணிகம் போன்ற செய்திகள் இடம்பெற்றிருந்தன. அரேபிய நாட்டு மக்களின் வாழ்வியலில், பண்புகளின் பற்றாக் குறையைக் கண்டு வருத்தமுற்று எழுதியுள்ளார். இங்கிலாந்து நாட்டு மக்களின் நேர்மை, பிறரிடம் காட்டும் பரிவு, உண்மையான மரியாதை, சட்டத்தை மதிக்கும் பாங்கு போன்றவை தனது நெஞ்சைத்தொட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்கிறார் இவரது வரலாறு கூறும் நூலாசிரியர் நில்கன்பெருமாள்.[5] மேலும் ஐரோப்பிய நாட்டு அரசியலில் நிலவிய ஆதிக்கப் போட்டிகளை உணர்ந்து கொண்ட ஜமால் முகமது விரைவில் உலக அளவில் போர் மூளும் அபாயம் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவரது கணிப்பு தவறவில்லை. 1914–ல் முதல் உலகப்போர்!

1911–ல் தாயகம் திரும்பியதும், ஜமாலியா அரபிக்கல்லூரியின் பாடத்திட்டங்களில் மாற்றங்களை அறிமுகப்படுத்தினார். மதரசா கல்வியோடு பொதுக் கல்விப்பாடங்களையும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் தமிழ் ஒரு பாடமாக சொல்லிக்கொடுக்கப்பட்டது. தமிழ் முஸ்லிம்கள் உயர் கல்வியில் மிகவும் பின்தங்கயிருப்பதைக் கண்டு கவலை கொண்டார். இந்தியாவில் இருந்த இஸ்லாமிய கல்வி மற்றும் அறநிறுவனங்களுக்கு வாரிவழங்கியதோடு, இஸ்லாமிய கோட்பாடுகளிலும், தத்துவங்களிலும், பண்பாட்டு விழுமியங்களிலும் நாட்டம் கொண்டிருந்த ஜமால் முகம்மது இஸ்லாமிய ஆன்மீகப் பெருமக்களையும், அறிஞர்களையும் பெரிதும் போற்றிய புரவலராவார். அறிஞர்கள் பலரை அழைத்து வந்து இஸ்லாமியத் தத்துவங்களை முஸ்லிம்களுக்கு எடுத்துக் கூறச் செய்தார். இங்கிலாந்து நாட்டு அறிஞர் பிக்தால், திருக்குர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்து அது பதிப்பித்து வெளிவரக்காணமானவர் ஜமால்.

1914–ல் முதல் உலகப்போர் தொடங்கியதும் தோல் ஏற்றுமதி பெரிதும் பாதிக்கப்பட்டது. அரசு பல கட்டுப்பாடுகளை விதித்தது. இத்தருணத்தில் தோல் வணிகர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி தென்னிந்திய தோல் வணிகர்கள் சங்கத்தை நிறுவினார். மேற்படி சங்கத்தின் தலைவராக பல ஆண்டுகள் இருந்து தோல் தொழில் சிறப்பிற்கு ஆவன செய்தவர்.

வணிகத்தில் ஜமால் முகம்மது பெற்றிருந்த பரந்துபட்ட அனுபவத்தின் காரணமாக, அவர் இந்திய வணிகர் சங்கத்தின் தலைவராக 1930–31ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார் (Federation of Indian Chamber of Commerce). சுமார் 7 ஆண்டுகள் இப்பொறுப்பில் இருந்த இவர்தான் இதுவரை இந்த நிறுவனத்தின் முதல் மற்றும் கடைசி முஸ்லிம் ஆவார்.

## பொருளாதார நிபுணர்

இந்தியா – இங்கிலாந்து சார்ந்த பொருளாதார விஷயங்களில் நிபுணராக விளங்கினார் ஜமால். 1927–ல் இந்திய அரசு, இங்கிலாந்து நாட்டு செலாவணியான ஸ்டெர்லிங்–பவுண்டுக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு விகிதத்தைக் குறைத்து உத்தரவிட்டது. இத்திட்டத்தின் மூலம் இந்தியப் பொருளாதாரமும், ஏற்றுமதியும் பெரிதும் பாதிக்கும் என்பதால் ஜமால் இதனை எதிர்த்துப் பேசியும் எழுதியும் வந்தார். அரசின் உயர் அலுவலர்களுடனும், ஏன் அமைச்சர்களுடனும் கூட சொற்போர் புரிந்து தனது கருத்தை எடுத்து வைத்துள்ளார். உலகப் பொருளாதார நிபுணர்களும் இங்கிலாந்து ஆட்சியாளர்களும் இவரது பொருளாதார ஆற்றலைக்கண்டு வியந்ததோடு, இவரது கருத்தில் இருக்கும் நியாயத்தையும் உணர்ந்தனர். பல்கலைக்கழகங்கள் பாராட்டின. ஆனால் உலகை ஆளப்பிறந்தவர்கள் நாங்கள் என்ற ஆங்கிலேயரின் ஆதிக்க மனப்பான்மை ஒரு இந்தியனின் நியாயமான கருத்தை ஏற்க மறுத்தது. இருப்பினும் தமது தோல் வர்த்தகத்தில் சிறந்த பொருளாதாரக் கோட்பாட்டு; முறைகளைக்கொண்டு பெருமளவு லாபம் ஈட்டினார்.

ஜமால் முகம்மது அன்றைய அரசியலிலும், ஈடுபாடு கொண்டிருந்தார். காங்கிரஸ் முன்னின்று நடத்திய போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்த தேசியவாதியாக விளங்கினார். அதே சமயத்தில் முஸ்லிம் லீக் கட்சியிலும் தொடர்பு வைத்திருந்தார். அப்போதைய அரசியல் சூழலில் தமிழகத்தின் பிரபல்யமான முஸ்லிம் தலைவர்கள் இரண்டு கட்சிகளிலும் உறுப்பினர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய சுதந்திரப்போராட்டத்தில் இந்து – முஸ்லிம் என்ற பாகுபாடின்றி ஒன்றிணைந்து ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக குரல் கொடுத்த மக்கள், தங்களுக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளத்தவறி, சிறிய, சிறிய காரணங்களை முன்னிறுத்தி 1920–க்கும்

1933–க்கும் இடைபட்ட காலக்கட்டங்களில், சேலம், திருச்சி, வேலூர், கமுதி, உத்தமபாளையம், போன்ற இடங்களில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மோதல் வெடித்தது துரதிர்ஷ்டவசமானது. இவ்வாறான மோதல்களையும், கலவரங்களையும் முடிவுக்குக் கொண்டு வந்து மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ உருவாக்கப்பட்ட சமாதானக்குழுக்களில் ஜமால் முகம்மது முக்கிய பங்கு வகித்தார். கல்வியின்மையே மத சகிப்புத்தன்மை இல்லாது கலவரங்களுக்குக் காரணம் என திடமாக நம்பிய ஜமால், முஸ்லிம்கள் கல்வியில் நாட்டம் கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார்.

## வட்டமேஜை மாநாட்டில்

இங்கிலாந்தின் காலனி ஆட்சியிலிருந்த இந்தியாவின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முயற்சியாக, இந்திய அரசியல் தலைவர்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் பல்வேறு இயக்கம் சார்ந்தவர்களையும் அழைத்துப்பேச முடிவு செய்த இங்கிலாந்து அரசு இத்தகைய கூட்டங்களை லண்டனில் ஏற்பாடு செய்தது. இதற்கு வட்ட மேஜை மாநாடு என்று பெயர். இதில் இரண்டாவது மாநாட்டில் இந்திய வர்த்தக சங்கத்தின் பிரதிநிதியாக ஜமால் முகம்மது கலந்து கொண்டார். இந்தியாவின் பிரபல வணிகர்களான ஜி.டி.பிர்லா, மற்றும் புருசோத்தமதாஸ் தாக்கூர் ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். காங்கிரஸ் மற்றும் இந்திய முஸ்லிம் லீக் ஆகிய முக்கிய அரசியல் கட்சிகளில் அப்போது மிகுந்த தொடர்புடையவராக இருந்த போதிலும் இவர் இக்கட்சிகளின் சார்பாக பிரதிநிதித்துவம் பெறவில்லை. ஜமால் முகம்மது தனது இரண்டாவது மகன் ஜமாலுதீனையும் உடன் அழைத்துச்சென்றிருந்தார். இந்த மாநாட்டில் ஜமால் முகம்மது உரையாற்றினார். அவரது அருமையான உரை அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.

நாங்கள் இங்கிலாந்து நாட்டு அரசின் மீது புதியதொரு நம்பி;க்கைக்கொண்டு இங்கு வந்துள்ளோம். இந்திய மக்களில் பெரும்பாலோர் விவசாயிகள், வணிகர்கள், தொழிலாளர்கள். இவர்கள் அரசியல் அதிகாரம் பெற மத்திய சட்டசபையில் கூடுதலான பொறுப்புகளும், மாநிலத்தில் தன்னாட்சி உரிமையும் வழங்கப்பட வேண்டும். மக்களின் இந்த கோரிக்கைக்கு செவி மடுக்கவில்லையானால், அரசின் மீதிருக்கும் எதிர்ப்பு அலை மேலும் அதிகரிக்கும்;,

இந்திய நாட்டு இயற்கை வளங்களை இந்திய மக்களின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற் காகவும் மட்டுமே அரசு பயன்படுத்தவேண்டும். இந்தியாவில் வணிகம் செய்யும் ஆங்கிலேய வணிகர்களுக்கு நாங்கள் இடையூறு செய்யவில்லை. ஆனால் அவர்களது பொருளாதாரச் சுரண்டலை எதிர்க்கிறோம். இந்தியாவின் பொருளாதாரம் மிகவும் சீர்குலைந்திருக்கிறது. செலாவணி முறையில் பல தவறுகள் இருக்கின்றன. இதனால் இங்கிலாந்துக்கு கடன்பட்டு, கடன்தொகையை செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது. இந்தியா – இங்கிலாந்து பணமதிப்பு விகிதத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டும். மக்கள் மீது அதிகமான வரிகள் சுமத்தப் பட்டிருக்கின்றன. இதற்குக்காரணம் ராணுவத்திற்கானச் செலவு கட்டுப்பாடின்றி பெருகி இருப்பதுதான். அரசு ராணுவச்செலவை கட்டுப் படுத்தினால் இந்தியாவுக்கும் இங்கிலாந்திற்கும் நல்லது.

இந்தியாவில் சில பகுதிகளில் நடைபெற்று வரும் மத இனக்கலவரங்கள் கவலையளிப்பதாகவே உள்ளது. இருப்பினும் இது எங்களுக்குள் உள்ள அண்ணன் – தம்பிகள் பிரச்சினை. இதனை நாங்களே பேசி தீர்த்துக்கொள்வோம். எரியும் தீயை அணைப்போம். அதன்பங்கிற்கு, ஆங்கிலேய – இந்திய அரசு எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோன்ற செயல்களில் ஈடுபடாமல் இணக்கம் ஏற்படுத்த உதவ வேண்டும்

இவ்வாறு, அக்கால கட்டடத்தில் இந்தியாவை ஆட்டிப்படைத்துக்கொண்டிருந்த அரசியல், சமுதாய பொருளாதார விஷயங்கள், அனைத்தையும் அலசி ஆராய்ந்து பேசிய இவரது பேச்சு மாநாட்டு பிரதிநிதி களையும், இங்கிலாந்து நாட்டு சிந்தனையாளர்களையும் நெகிழ வைத்தது. ஜமால் முகம்மதின் பேச்சில் ஒரு முக்கிய அம்சமாக நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் அவரது கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்துவதாக இருப்பதுதான்.

அண்ணல் காந்தியடிகளும் இந்த மாநாட்டிற்கு வந்திருந்தார். காந்தியடிகளையும், ஏனைய இந்தியத் தலைவர்களையும் ஜமால் முகம்மது அடிக்கடி சந்தித்து இந்திய மக்களிடம் நிலவிவரும் மதமாச்சரியங்களைப் போக்குவது குறித்துப் பேசினார். இதற்குத் தீர்வு காண அனைத்துத்தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தார். இவ்வகைக்கு இவர் மீது அண்ணல் காந்தியடிகளுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டது.

தென்னிந்தியாவில் அனைத்து சமூகத்தினரும் ஒன்றிணைந்து மத நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்று மக்களிடையே பேசுவதற்கு வேறு முஸ்லிம்

தலைவர்கள் இல்லை. இந்த வேலையை செய்ய சரியானவர் ஜமால் முகம்மதுதான் எனக்கூறினார். அண்ணல் காந்திஜி, மாநாட்டிற்கு வந்திருந்த பல தலைவர்களுடன் கலந்து பேசியதின் பயனாக, இந்தியாவில் மத, இன சர்ச்சைக்கு தீர்வு காண்பது குறித்து தலைவர்களிடையே ஒருமித்தக் கருத்து உருவாகிக் கொண்டிருந்தது. இதில் ஜமால் முகம்மதுவின் பங்கு அளப்பறியது. ஆனால் இறுதியில் எந்த முடிவும் எட்டப்படாமல் வட்டமேஜை மாநாடு தோல்வியில் முடிந்தது. ஜமால் முகம்மது சற்று மனம் தளர்ந்து போனார்.[7]

லண்டனில், இங்கிலாந்து நாட்டு பிரதம மந்திரியையும் ஏனைய அமைச்சர்களையும் ஏனைய பெருந்தலைவர்களையும் சந்தித்து, இந்தியாவின் பொருளதாரம் அரசியல் குறித்து கலந்துரையாடினார். இங்கிலாந்தின் மன்னர் பக்கிங்ஹாம் அரண்மனையில் அளித்த விருந்திலும் கலந்து கொண்டார். இங்கிலாந்திலிருந்து, பிரான்ஸ், ஜெர்மனி வட அமெரிக்கா, அல்ஜீரியா, மொராக்கோ, டுனிசியா ஆகிய நாடுகளுக்குச் சென்று விட்டு 1932 ஜனவரியில் தாயகம் திரும்பினார். வட்டமேஜை மாநாட்டுத்தொடர்பு இவரை ஒரு பொருளாதார நிபுணராகவும் மத நல்லிணக்க வாதியாகவும் உலகிற்கு அடையாளம் காட்டியது எனலாம்.

ஜமால் முகம்மதுவுடன் வட்டமேஜை மாநாட்டிற்கு சென்ற புருசோத்தமதாஸ் தாக்கூர் பின்னர் ஜமால் முகம்மதுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்திய வணிகச் சங்கப்பிரதிநிதியாக தாங்கள் மாநாட்டில் எடுத்துவைத்தக் கருத்துக்கள் பாராட்டத்தக்கவையாகும். உங்களது தொலை நோக்குப்பார்வையும் நடைமுறை சாத்தியமான சிந்தனைகள், மனிதநேயம், ஆகியன என்னை மிகவும் கவர்ந்தன எனக்குறிப்பிட்டிருக்கிறார்.[8].

## அரசியல் களத்தில்

1920–30 ஆண்டுகளில் தமிழ்நாட்டு அரசியல் களத்தில் இருந்த பிலபல்யமான தமிழ் முஸ்லிம் தலைவர் ஜமால் முகம்மது மட்டுமே. காங்கிரசின் தேசிய நடவடிக்கைகளுக்கு தனது ஆதரவைத் தெரிவித்து வந்தார். அரசின் அடக்கு முறைப் போக்கினைக் கண்டு தனது வருத்தத்தினை தெரிவித்தார். காங்கிரஸ் கட்சியின் எல்லா கொள்கைளிலும் ஜமால் முகம்மதுக்கு உடன்பாடு இல்லை. காந்திஜியின் நிலைப்பாடுகள் சிலவற்றில் கூட மாற்றுக்கருத்து உடையவராக இருந்தார். ஆனால், தீண்டாமை ஒழிப்பு, கதர் துணி இயக்கம் ஆகியவற்றை வெகுவாக ஆதரித்தார். கூடிய வரையில் உள்நாட்டுப் பொருட்களையே வாங்கிப் பயன்படுத்தினார். ஆனால் இந்தியப் பொருட்களை உபயோகிக்க மக்களிடம் ஆதரவு தேடும் அதேநேரத்தில், பிற நாட்டுப்பொருட்களின் மீது வெறுப்பு ஏற்படுத்துவதை இவர் விரும்பவில்லை. இவ்வகையில் இவர் ஒரு தேசிய வாதி (Nationalist) என்பதோடு, ஒரு பன்னாட்டுக்குடிமகனாகவும், (Internationalist), யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற முதுபெரும் தமிழ் வழக்கினைப் போற்றுபவராகவும், காட்சியளிக்கிறார்.

எனவேதான் காங்கிரஸ் கட்சியின் வெளிநாட்டுத்துணி புறக்கணிப்புப் போராட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை. இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் புறக்கணிப்பு என்ற அளவோடு நிறுத்திக்கொள்ளப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார். ஏனெனில் அன்றைய காலக்கட்டத்தில் சென்னை, மாகாணத்தில் குறிப்பாக சென்னை நகரில் நூற்றுக்கணக்கான குறு வணிகர்கள் துணி வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டுத் துணிகளுக்கு எதிரான போராட்டம், மற்றும் வெளிநாட்டுத் துணிகள் புறக்கணிப்பு மூலம் பல வணிகர்களின் பொருளாதாரம் சீர்குலைவதை அவர் விரும்பவில்லை.[9]

1930–ம் ஆண்டு சென்னை வணிகர் தொகுதியிலிருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். சட்டமன்றத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான வழிகள் குறித்தே அதிகம் பேசினார். நிதி குறித்த விவாதங்களில் கலந்துகொண்டு அரசின் வரிவிதிப்புக்கொள்கைகளை கடுமையாக சாடினார். இவ்வாறு இந்திய பொருளாதாரம் சார்ந்த மக்கள் நலன் குறித்து பேசும் நல்லதொரு மக்கள் பிரதிநிதியாக விளங்கினார் என பாராளுமன்றப் பதிவேடுகள் பாராட்டுகின்றன.

1930க்கு முற்பட்ட ஆண்டுகளில் சென்னை மாகாண முஸ்லிம் லீகின் அரசியல் நடவடிக்கைகளில் சற்று தொய்வு ஏற்பட்டது. இக்கட்சிக்குப் புத்துயிர் ஊட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் ஜமால் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். இந்நிலையில், 1930–ம் ஆண்டு அகில இந்திய முஸ்லிம் லீகின் சென்னை மாநிலத்தலைவராக ஜமால் முகம்மது நியமிக்கப்பட்டார்.

சென்னை ராஜதானியின் முஸ்லிம் லீக் கட்சிக்கு மிகவும் சோதனையான காலம் அது. 1930க்கு முன்பு மாகாண முஸ்லிம் லீக் உருது மொழி பேசும் சென்னை வாழ் முஸ்லிம்களின் ஆளுமையிலேயே இருந்தது. இவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு கட்சி நலனை புறக் கணித்தனர். கட்சியும் பிளவுபட்டிருந்தது. ஜமால் முகம்மது தமிழ் முஸ்லிம் தலைவராக இருந்தபோதிலும் அவர் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பண்புடையவராக இருந்தார். 1930ம் ஆண்டில் மாநிலத்தின் பல இடங்களில் நிகழ்ந்த மதக் கலவரங்கள் முஸ்லிம்களிடம் ஒரு பதற்றத்தை ஏற்படுத்தி இருந்தது. தமிழ் முஸ்லிம்கள் காங்கிரசின் மீது வெறுப்புற்றிருந்த போதிலும், முஸ்லிம் லீகை ஆதரிக்க முன்வரவில்லை. ஈ.வே.ராமசாமியின் சுயமரியாதைக்கட்சியின் பக்கம் முஸ்லிம்கள் தங்கள் கவனத்தைக் கொண்டிருந்தனர். முத்தாய்ப்பாக முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவரான முகம்மது அலி ஜின்னா மனம் தளர்ந்துபோய், 1931–ல் லண்டன் சென்று விட்டார். இந்நிலையில் மூழ்கிக் கொண்டிருந்ததாகக் கருதப்பட்ட ஒரு கட்சியின் தலைமையை ஜமால் முகம்மது ஏற்றார். [10]

அதுவரை முஸ்லிம் லீக் மேல்குடிமக்களின் அமைப்பாகவே இருந்தது. எனவே கட்சியினை பாமர மக்களிடம் எடுத்துச்செல்லும் நடவடிக்கையாக மாவட்டங்களில் கட்சியின் கிளைகளைத் தொடங்க முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டன.மேலும்முன்புமுன்னணித் தலைவர்களாக இருந்தவர்களான யாகூப் ஹசன் சேட், பஷிர் அகமது சையது போன்றவர் தங்கள் போக்கில் தனியாகச் சென்று கொண்டிருந்தனர். சிலருக்கு ஜமால் முகமது மீது தனிப்பட்ட முறையிலான காழ்ப்புணர்ச்சிகளும் இருந்தன. இந்த நிலைகளையெல்லாம் பொறுமையுடனும், அரசியல் சாதுரியத்துடனும், தரை தட்டிய கப்பலை கடலுக்குள் இழுத்துச் சென்றதைப் போன்று லீக் கட்சியை செயல்பாட்டிற்குக் கொண்டுவந்தார் ஜமால் முகம்மது.

ஜமால் முகம்மது முஸ்லிம் லீகின் தலைவராக இருந்தபோதிலும் அதன் கோட்பாடுகள் சிலவற்றில் மாறுபட்ட கருத்து கொண்டிருந்தார். எடுத்துக்காட்டாக 1909–மிண்டோ–மார்லி சீர்திருத்தத்தின் பயனாக முஸ்லிம்களுக்கு தனித் தொகுதி அளிக்கப்பட்டிருந்தது. தனித்தொகுதி என்பது முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்த தொகுதிகளைக் கண்டறிந்து அதனை முஸ்லிம்களுக்கு ஒதுக்குவது. இந்தத் தொகுதிகளில் முஸ்லிம்கள் மட்டுமே போட்டியிடமுடியும், முஸ்லிம்கள் மட்டுமே வாக்களிக்க முடியும். இது முஸ்லிம்களை தேசிய நீரோட்டத்திலிருந்து பிரித்துவிடும் எனக்கூறி காங்கிரஸ் இதை எதிர்த்து வந்தது. ஜமால் முகம்மது இவ்வகையில் காங்கிரசின் நிலைப் பாட்டை ஆதரித்தார். தனித்தொகுதி வேண்டாம், அனைவருக்கும் வாக்களிக்க ஏதுவான பொதுத் தொகுதியையே சிறந்தது எனக்கூறி வந்தார்.

இருந்தபோதிலும் அப்போதைய அரசியல் சூழலில் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே இருந்தன. ஆனால் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் பலர் தேசிய (காங்கிரஸ்) முஸ்லிம்களாகவும் இருந்தனர். தமிழ் முஸ்லிம்கள் அரசியல் விழிப்புணர்வு பெறத்தொடங்கினர். இளைஞர்கள் பலர் ஜமால் முகம்மதுக்கு ஆதரவு அளித்தனர். அவர்களிடம் தேசியப்பார்வை நிறைந்திருந்ததையும், அவர் குறை கூறவில்லை. இவ்வாறு நெருக்கடியான இந்த காலகட்டத்தில் முஸ்லிம் லீக் கட்சியை சென்னை மாகாணத்தில் சிதைவிலிருந்து காப்பாற்றிய பெருமை ஜமால் முகம்மதுவைச்சாரும் என்றால் அது மிகையாகாது.

1937–ம் ஆண்டு நடைபெற்ற மாகாண சட்டசபைத்தேர்தல்களில் முஸ்லிம் லீக் தனது கட்சியின் அதிகாரப்பூர்வான வேட்பாளர்களை இந்தியா முழுவதும் 482 தொகுதிகளில் போட்டியிடச் செய்து 460 தொகுதிகளில் வெற்றி பெற்று புதுபலம் பெற்றது. சென்னை மாகாணத்தின் தமிழ்ப் பகுதியில் போட்டியிட்ட ஆறு தொகுதிகளையும் முஸ்லிம் லீக் கைப்பற்றியது. ஆனால் இத்தேர்தலில் போட்டியிட்ட ஜமால் முகம்மது தோல்வியடைந்தார்.

தனிப்பட்ட முறையில் முஸ்லிம்களுக்கு தனித்தொகுதி தேவையில்லை என்று பேசிவந்த ஜமால் முகம்மது, முஸ்லிம்களுக்கென ஒதுக்கப் பட்டிருந்ததனித்தொகுதியில்நிற்காமல்சென்னைவர்த்தகத் தொகுதியில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட டி.டி. கிருஷ்ணமாச்சாரி வெற்றி பெற்றார். பின்னாளில் இவர் பண்டித நேரு அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தார். முஸ்லிம் லீக்கிலிருந்து பிரிந்து ‘முஸ்லிம் முற்போக்குக் கட்சி’ என்ற கட்சியை ஆரம்பத்திருந்த மேல்விஷாரம் தொழிலதிபர் சி.அப்துல் ஹக்கீமுடைய சூழ்ச்சியும், எதிர்ப்பும் காங்கிரஸ் கட்சி கிருஷ்ணமாச்சாரிக்கு அளித்த ஆதரவும் ஜமால்

முகம்மதுக்கு எதிராக அமைந்து தோல்வியடைய வேண்டியதாயிற்று.

இந்திய வர்த்தக சபைத்தலைவராகவும், மதிக்கத்தக்க அரசியல் தலைவராகவும், கொடை வள்ளலாகவும் விளங்கிய ஜமால் முகம்மதின் தோல்வி தமிழக முஸ்லிம்களிடையே பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. ஒரு முஸ்லிம், அவர் எவ்வளவு செல்வாக்குடையவராகவும் செல்வந்தராகவும் இருந்த போதிலும், முஸ்லிம் அல்லாதவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் தொகுதியிலிருந்து அவர் வெற்றிபெற இயலாது என்ற எண்ணத்தை முஸ்லிம்களிடம் தோற்றுவித்தது. இது முஸ்லிம்களை, குறிப்பாக தமிழ் முஸ்லிம்களை, அடையாளம் சார்ந்த அரசியலுக்கு இட்டுச்சென்றதாக ஒரு ஆய்வாளர் கூறுகிறார்.[12]

1937–ம் ஆண்டு தேர்தலில் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்ற காங்கிரஸ் ராஜாஜியின் தலைமையில் மந்திரிசபை அமைத்தது. பிரதம அமைச்சரான ராஜாஜி, பொது நிகழ்ச்சிகளிலும், பள்ளிகளிலும் ‘வந்தே மாதரம்‘ பாடல் கட்டாயம் பாடவேண்டுமென உத்தரவிட்டார். முஸ்லிம்களின் ஓரிறைக் கோட்பாட்டிற்கு எதிரான கருத்துக்கள் இப்பாடலில் உள்ளதால் இதனை முஸ்லிம்கள் எதிர்த்தனர். நாடெங்கிலும் கிளர்ச்சி. 1.3.1938–ல் வந்தே மாதரம் பாடுவதை நிறுத்தி ஆணையிடப்பட்டது. மாகாண முஸ்லிம் லீக் தலைவர் என்ற முறையில் ஜமால் முகமது இப்போராட்டத்தினை முன்னின்று நடத்தினார்.

இதே காலக்கட்டத்தில் பள்ளிகளில் இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டு ஆணையிடப்பட்டது. இதற்கு மாகாணத்தின் தமிழ்ப்பகுதி முழுவதும் பெரும் எதிர்ப்பு வெடித்தது. ஈ.வே.ராமசாமி இந்த போராட்டத்தை முன்னின்று நடத்தினார். முஸ்லிம் லீக் தலைவர்கள் பலரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். திருச்சிராப்பள்ளி தொகுதியிலிருந்து முஸ்லிம் லீக் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட கான்பகதூர் கலிபுல்லா சாஹிப் இந்தி எதிர்ப்புப்போராட்டத்தில் ஈவே. ராமசாமியுடன் தீவிரமாக பங்கு கொண்டார். எனினும் மாகாண முஸ்லிம் லீக் தலைவரான ஜமால் முகம்மது இந்தி எதிர்ப்புப் பேராடட்டத்திலிருந்து விலகியே இருந்தார். உருதுமொழியைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிம் லீக் உறுப்பினர்களும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. உருதுவும் இந்தியும் கலந்த இந்துஸ்தானி மொழியே ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்பது ஜமால் முகம்மதின் விருப்பமாகும். இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ் முஸ்லிம்கள் நலன் சார்ந்த போராட்டமல்ல என்பது அவரது கருத்தாக இருந்தது. இருப்பினும் அக்கால அரசியலில் தமிழ் முஸ்லிம்கள் தங்களது தமிழ் அடையாளத்தை முன்னிலைப்படுத்திக்கொள்ள இந்தி எதிர்ப்புப்போராட்டம் ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது எனக்கூறலாம்.

1930–ம் ஆண்டிற்குப்பிறகு பாமர முஸ்லிம் மக்களிடம் முஸ்லிம் லீக் சென்றடைந்து எதிர்கால அரசியல் போக்குகளுக்கு வழிவகுக்க ஜமால் முகம்மதே காரணமாக இருந்தார். மாவட்டங்களில் முஸ்லிம் லீகின் கிளைகள் அதிகமாக தொடங்கப்பட்டன. 1940 வாக்கில் மாகாணம் முழுவதும் சுமார் 200 கிளைகளில் 50,000 உறுப்பினர்கள் இருந்தனர். இதே சமயத்தில் வட இந்தியா முழுவதும் 328 கிளைகளும், 88,833 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் லீக் என்ற அரசியல் கட்சியை சென்னை மாகாணத்தில் ஒரு வெகுஜன இயக்கமாகக் கொண்டுவந்த பெருமை ஜமால் முகம்மதை சாரும்.

1940–க்குப் பின் முஸ்லிம் லீக்கின் அரசியல் போக்கில் பெறும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த நிலையில் ஜமால் முகம்மது தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டதோடு, மாநில முஸ்லிம் லீகின் தலைவர் பொறுப்பிலிருந்தும் விலகினார். இந்தியா – பாகிஸ்தான் பிரிவினையை ஆதரிக்காத தேசிய முஸ்லிமாகவே ஜமால் முகம்மது இருந்தார். 1947–ல் இந்தியப்பிரிவினை நடந்துவிட்டபோது, இதனால் இந்திய மக்களுக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் இழப்புகள் குறித்து மிகவும் வருத்தமடைந்தார். இந்து – முஸ்லிம் ஒற்றுமையை அப்போதும் வலியுறுத்தினார்.

அவரது அரசியல் நடவடிக்கைகளை உற்று நோக்கும்போது ஜமால் முகம்மது தன்னை எந்தக் கட்சியுடனும் முழுமையாக ஐக்கியப்படுத்திக் கொள்ளாமல் தனது லட்சிய அரசியல் கருத்துக் களுடன் தன்னை முழுமையாக ஐக்கியப் படுத்திக்கொண்ட ஓர் அரசியல் வாதியாகத் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.[13] இவர் காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த முக்கிய அரசியல் தலைவர்கள் அனைவரும் ஜமால் முகம்மதின் நண்பர்களாக விளங்கினர். குறிப்பாக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் குடும்ப நண்பராக விளங்கியவர்.

## சுதந்திரப் போராட்ட வீரர்

சுதந்திரத்திற்காக பாடுபட்ட தேசிய தலைவர்களில் ஒருவராக திகழ்ந்த ஜமால் முகமது காந்திஜி கேட்டுக்கொண்டதன் விளைவாக நிரப்பப்படாத காசோலை (Blank Cheque) கொடுத்து, நீங்களே தொகையை நிரப்பிக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதற்கு காந்திஜி அவர்கள் எனது நண்பர் பிர்லாகூட இவ்வாறு செய்ததில்லை என்று கூறினார். அதே போன்று 1920–ல் கிலாபத் மூவ்மெண்டுக்காக ராஜாஜி மற்றும் மௌலானா சவுக்கத்அலி ஜமால் முகமதை சந்தித்து நிதி உதவி கேட்டபொழுதும் Blank Cheque கொடுத்தார்கள். அப்பொழுது இராஜாஜி ரூ.20,000/– (இருபதாயிரம்) என்று நிரப்பிக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சியை இராஜாஜியின் பேரன் ராஜ்மோகன் காந்தி பதிவு செய்துள்ளார்கள்.

## கல்விக் கொடை வள்ளல்

1925 ஜாமியா மில்லாயா என்ற நிறுவனத்திற்காக ரூபாய் ஒரு லட்சம் முன்னாள் ஜனாதிபதி Dr. ஜாகீர் உசேனிடம் கொடுத்தார்கள். அலிகர் பல்கலைக்கழகம், திபியா கல்லூரி, டெல்லி தேவ்பந்து மதரசா மற்றும் நத்வா போன்றவற்றிகு பணஉதவி செய்துள்ளார்கள். நத்வாவில் Jamalia Hall கட்டிக்கொடுத்துள்ளார்கள்.

## கல்விப்பணியில்

சென்னை ஜமாலியா அரபிக்கல்லூரியில் ஜமால் முகம்மது கொண்டு வந்திருந்த கல்வி சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். கல்வியே முஸ்லிம்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பது அவரது கருத்தாக இருந்தது. மேலும் அரசு செய்யும் முயற்சிகளோடு முஸ்லிம்களும் சமுதாய ரீதியாக சுயமாகவும், கல்வியில் வளர்ச்சி காண முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென வற்புறுத்தினார். பொதுக்கல்வியை முஸ்லிம்களிடம் அறிமுகப்படுத்தும் முகத்தான் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கும் ஜமால் முகம்மது உதவி செய்தார். இதுதொடர்பாக மாநிலத்தின் பல பகுதிகளிலும் நிறுவப்பட்ட முஸ்லிம் கல்வி சங்கங்கள் ஜமால் முகம்மதுவின் ஆதரவைப் பெற்றன.

1902–ம் ஆண்டு 'மியாசி' (Muslim Educational Association of South India) முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டிற்காக சென்னையில் தொடங்கப்பட்டது. அப்போது உருதுமொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த முஸ்லிம்களே இதில் முதன்மை பெற்றிருந்தனர். உருது, அரபி, பாரசீகம், போன்ற மொழிகளை முன்னிலைப்படுத்தியே இந்த சங்கத்தின் செயல்பாடுகள் அமைந்திருந்தன. பின்னாளில் சென்னையில் புதுக்கல்லூரி என்னும் முஸ்லிம் தனியார் கல்லூரி இந்த சங்கத்தினாலேயே தொடங்கப்பட்டது. ஜமால் முகமது, மியாசியின் ஒரு உறுப்பினராகத் தன்னை இணைத்துக்கொண்டு 1920–ம் ஆண்டு முதல் அதன் செயற்குழு உறுப்பினரகவும், 1925 முதல் 1935 வரை துணைத் தலைவராகவும், 1935 முதல் 1941 வரை தலைவராகவும் இருந்து முஸ்லிம்கள் உயர்கல்வி வளர்ச்சிக்கு பல்லாற்றானும் உதவிகள் செய்துள்ளார். இவர் தலைவராக இருந்தகாலத்தில் புதுக்கல்லூரியில் பயின்ற பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கு நிதி உதவி அளித்து அவர்களின் உயர்கல்விக்கு துணை நின்றார் என மியாசி பதிவேட்டுச் செய்திகள் கூறுகின்றன.[14]

கல்லூரி ஒன்றினை நிறுவவேண்டும் என்பதும் அவரது நோக்கமாக இருந்தது. இது குறித்து திருச்சிராப்பள்ளியின் பெருவணிகராகவும் அறப்பணிச் செம்மலாகவும் விளங்கிய ந.மு காஜாமியான் ராவுத்தரோடு இணைந்து கலந்தாலோசித்து வந்தார். இருப்பினும் அவரது வாழ்நாளில் இந்த முயற்சி கைகூடவில்லை. திருச்சிராப்பள்ளியில் ஒரு கல்லூரி நிறுவுவதற்குத் தேவையான பொருளாதார உதவியைக் குறிப்பிட்டு அதை நிறைவேற்றிவைக்கத் தனது மூத்த குமாரர் எம்.ஜே.ஜமால் முகையதீனுக்கு உரிய அறிவுரை வழங்கி இருந்தார்.

தனது தந்தையாரை போல தாராள மனமும், கொடையுள்ளமும் கொண்டிருந்தார் எம்.ஜே.ஜமால் முகையதீன். இவர் அரசியலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். 1940–ம் ஆண்டிலிருந்து முஸ்லிம் லீகின் நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தார். பின்னாளில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 1957–ம் ஆண்டு திண்டுக்கல் தொகுதியிலிருந்து சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1962–1968ல் பாராளுமன்ற ராஜ்ய சபை உறுப்பினராகவும் இருந்தார். இன்னும் பல்வேறு பொதுப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். திருச்சிராப்பள்ளியில் காஜாமியான் ராவுத்தரின் நிர்வாகத்தில் 120 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்பட்டு வந்த இஸ்லாமியக் கல்வி மற்றும் அறநிறுவனங்கள் நடைபெற்று வந்த இடத்தில் கல்லூரி தொடங்குவது குறித்து காஜாமியான் ராவுத்தருடன் கலந்து பேசி, திட்டம் உருவானது. ஜமால் குடும்பப் பங்களிப்பாக ரூ.275,000 பொருட்செலவில் கல்லூரிக்கு எழிலான

கட்டடம் கட்டிக்கொடுக்கப்பட்டது. 1951–ம் ஆண்டு ஜமால் முகம்மது கல்லூரி தொடங்கப்பட்டது. எளிய முறையில் தொடங்கிய இந்த கல்லூரிதான் தென்னகத்தின் அலிகர் என்ற சிறப்பான கல்வி நிறுவனமாக இன்று விளங்குகிறது.

ஜமால் முகம்மது கல்லூரி நிறுவனர் தாளாளராக விளங்கிய ஜமால் முகையதீன் குறித்த சில முக்கியச் செய்திகள் சொல்லப்படவேண்டும். ஜமால் முகமது கல்லூரி தொடங்கப்பட்ட பின் அதன் வளர்ச்சியில் அவர் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். 1952–1953ம் ஆண்டுகளில் இவர், அப்போதைய சென்னை மாநில முஸ்லிம் லீக் தலைவர் முகமது இஸ்மாயில் அவர்களின் உதவியுடன், மலேசியா, சிங்கப்பூர் போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று கல்லூரியின் வளர்ச்சிக்கு நிதி திரட்டி வந்தார். ரூ.6.5 லட்சம் நன்கொடை திரண்டது. ஜமால் முகையதீன் சென்னை 'மியாசி' கல்வி சங்கத்திலும் துணைத்தலைவராக இருந்ததாலும், முகமது இஸ்மாயில் அவர்களின் ஆலோசனையின் படியும் கிடைத்த நிதி ஜமால் முகமது கல்லூரிக்கும் சென்னை கல்லூரிக்கும் 70:30 என்ற விகிதத்தில் வழங்கப்பட்டு இந்த நிதியைக் கொண்டு, ஜமால் முகமது கல்லூரியின் முதன்மை மாணவர் விடுதியான காஜாமியான் விடுதியும், சென்னை புதுக்கல்லூரியில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஒன்றும் கட்டப்பட்டது. தமிழ்நாட்டு இளைஞர் சமுதாயத்தின் முன்னேற்றத்தில் சமுதாயத் தலைவர்களான இவர்களது தொலைநோக்குப்பார்வை பாராட்டுதலுக்குரியதன்றோ! ஜமால் முகையதீன் பெரம்பூர் ஜமாலியாவை மேலும் வளர்ச்சிப்பாதையில் வழிநடத்தினார். அறிஞர்கள் பலர் இங்கிருந்து உலகின் பல பகுதிகளுக்கும் செல்லும் வாய்ப்பு கிட்டியது. இவரது முயற்சியால் தான் சென்னையில் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (Central Leather Technology Institute) உருவானது என்பது கூடுதல் செய்தி.

இவ்வாறு தமிழ் முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்கு ஜமால் முகம்மது குடும்பம் செய்துள்ள சேவை தமிழக முஸ்லிம்களின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். உள்ளபடியே கல்லூரியை முன்னின்று நிறுவியது எம்.ஜே.ஜமால் முகையதீன் என்ற போதிலும் இப்படிப்பட்டதொரு திட்டத்திற்கு கருவாக விளங்கிய ஜமால் முகமது அவர்களையே கல்லூரியின் நிறுவனராக வரித்து, அவரது பெயரையே கல்லூரிக்குச் சூட்டி மகிழ்ந்தனர், நிர்வாகக்குழு பெருந்தகையாளர்கள்.

## ஜமால் முகம்மது – ஒரு தத்துவ மேதை, கருணையாளர்...

ஜமால் முகமது அவர்களின் சில சிறப்புப் பண்புகளைக் குறிப்பிடுவது அவரை முழுவதுமாக புரிந்துகொள்ள ஏதுவாகும். ஜமால் முகம்மது ஒரு சிறந்த சிந்தனையாளர், தத்துவமேதை, மனிதநேய மாண்பாளர், கருணை உள்ளம் கொண்டவர். இதற்கெல்லாம் விரிவான செய்திகள் உண்டு. இருப்பினும் ஒரு சில செய்திகள் மட்டுமே இங்கு குறிப்பிடப்படுகின்றன.

இளம் வயதிலிருந்தே ஆன்மீகம் மற்றும் தத்துவக் கருத்துக்களில் ஜமால் முகம்மது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். கடவுள் நம்பிக்கை என்பது அனைவர் உள்ளத்திலும் உள்ளது எனவும், அனைத்து மதக்கோட்பாடுகளும் மனித மாண்பைப் போற்றுவதையே வலியுறுத்துவதாகவும் அடிக்கடி எடுத்துக்கூறுவார். கடவுள் இருப்பதும் இல்லை என்பதும், சபைக்கு உதவாத வீண் பேச்சு என்றதொரு நவீன கவிஞனின் கருத்து இவருக்குப் பிடித்தது.

தனிமையில் இருக்கும்போது உலகின் படைப்பு ரகசியங்களைக் குறித்து தான் படித்ததை சிந்தித்துப் பார்ப்பார். பூமி உருண்டையானது, புவி ஈர்ப்பு விசை, உயிர்களின் பரிணாமக் கொள்கை போன்ற அறிவியல் செய்திகள் இவரது சிந்தனைக்குட்படும். எதையும் ஏன், எப்படி, எதற்கு என்று ஆழ்ந்து சிந்தித்து உணருவார்.

ஒரு கவியுள்ளம் ஜமாலின் உள்ளுணர்வில் இருந்தது: இயற்கையின் அழகைக்கண்டு ரசிக்கும் ஒரு ரசிகன். தனது வீட்டுத் தோட்டத்திலிருக்கும் மலர்களைக் கண்டு மகிழ்ந்து நேரம் போவது தெரியாமல் அவற்றையே பார்த்துக் கொண்டிருப்பார். பூக்களைப்பறிக்கக் கூடாது, அப்படி செய்வது அந்த பூ பூத்திருக்கும் செடியினை ஊனப்படுத்துவதாக அமையும் என்ற மெல்லிய அன்பு இழை அவரது எண்ணத்தில் ஓடும். தோட்டத்துச் செடிகள் நீரின்றி வாட்டம் கண்டிருந்தால் வருந்துவார், இந்த வள்ளல். இல்லை, இல்லை வள்ளலார்!

பூச்செடிக்குத் தண்ணீர் ஊற்ற முனையும் போது அந்தச் செடியின் பக்கத்தில் ஓடும் எறும்புக்கூட்டத்தைக் கண்டு தயங்கி, எறும்புக்கூட்டம் அங்கிருந்து அகன்ற பின்னேரே தண்ணீர் ஊற்றுவார். அதற்காகக் காத்திருப்பார்.

அண்ணல் காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவம் இவருக்கு மிகவும் பிடிக்கும். இவரது கருணை உள்ளம் குறித்து திறனாய்வு செய்யும் ஒரு நவீன கவிஞரின் கருத்தைப் பார்ப்போமா ?

புதுச்சேரியில் தங்கியிருந்த முண்டாசுக் கவிஞன், மீன்காரியிடம் மீன்வாங்கி அவற்றை மீண்டும் ஆற்றில் விட்டு அழகு பார்த்ததைம், ஒரு பெரும் மழையில் மரங்கள் விழுந்து, வெள்ளத்தில் சிக்கி மக்கள் தவித்தபோது, அரவிந்தர், துன்பப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கிக் கொண்டிருந்தார். தனது நண்பர்களுடன் அங்கு சென்ற முண்டாசுக்கவிஞன் மழையில் மரத்தோடு விழுந்து மரணமுற்றுக் கிடந்த பறவைகளை சேகரித்து, மயானத்தில் நல்லடக்கம் செய்து, ஜீவகாருண்ய சிகரமாக நம்முன் அவன் காட்சியளிக்கிறான். ஆனால் வள்ளல் ஜமால் முகம்மது கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பறவைகளை விலைக்கு வாங்கி, விடுதலை செய்து, அவை பறப்பதைக்கண்டு மகிழ்ந்து நிற்பார். மேலும், தமது பங்களாவைச் சுற்றியிருந்த பனைமரங்களில் பறவைகள் வசிக்கக் கூடுகள் கட்டி மகிழ்ந்தார்.[17]

வாய்பேசாத ஜீவன்களிடத்திலும் கருணை மழை பொழிந்த இந்த சின்ன முண்டாசுக்கவிஞன் – ஜமால் – பாரதியின் உயிர் நேசத்தையும் விஞ்சி விடுவது நம் நெஞ்சத்தைத் தொடுவதோடு, மனித நேயத்தின் மொத்த உருவமாகவும் நமக்குக் காட்சியளிக்கிறார். சமுதாய சிந்தனையே மூச்சாகக் கொண்டிருந்த இந்த புனித ஆத்மா 1947–ம் ஆண்டு நவம்பர் 7–ம் நாள் இறைநாட்டப்படி நிறைவு எய்தியது.

ஆனால் அவர் இன்று பேசப்பட்டுக் கொண்டிருக்கிறார்! அவரது மானுட சிந்தனை போற்றப்படுகிறது! என்றும் பேசப்படுவார்!!

## அடிக்குறிப்புகள்

1. Jamal Mohamad College Golden Jubilee Souvenir - 2000-2001.
2. From S.A.Nather Khan, President JMC Alumni, Malaysia, in a chat, in may 2018.
3. Kenneth MecPherson, “How Best We Survive - A Modern Poitical History of Tamil Muslims, New Delhi, 2010, p.45.
4. Nilkan, Perumal, Jamal Mohamad - A Biograpichal Record - Madras 1936.
5. மேலது
6. British Parlimentary Papers, 1931-32, Indian Round Table Conference (second session) Proceedings, Vol.8 (cmd.3997)p.324.
7. Nilkan Perumal – மேலது
8. Purushothaman Das Thakuradass Papers 1932, file No.126 letter to Jamal Mohamad as quoted by MecPherson, opt.cit.p.174
9. சேயன் இப்ராகிம், ‘முதல் தலைமுறை’ மனிதர்கள், சென்னை, 2016.
10. ஜே.பி.பி.மோரே, முஸ்லிம்களின் அரசியல் பரிணாம வளர்ச்சி – தமிழ்நாடு மற்றும் சென்னை ராஜ்ஜியம் 1930–1947, 2005, அடையாளம், புத்தாநத்தம் – பக்கம் 122.
11. MecPherson, op.cit.p.195
12. ஜே.பி.பி.மோரே, மேலது பக்கம் 133–136
13. மேலது
14. H.Kurshid Begum, The Muslim Educational Association of Southern India, un published M.Phil. Thesis, University of Madras, 1987.
15. Anuual Report of MEASI - Chennai, for the year 1953. P.13; New College Chennai Magazine 1955; Jamal Mohamad College Golden Jubilee Souvenir, 2000-2001.
16. Nilkan Perumal, மேலது
17. கு.ஜமால் முகம்மது, முப்பெரும் வள்ளல்கள், திருச்சிராப்பள்ளி, 2008, (இதில் வாணியம்பாடியிலிருந்து புறப்பட்ட வானம்பாடி அப்துல்காதர் மதிப்புரை)

* * * * *

# காலத்தை வென்று நிற்கும் காவியம் வள்ளல் காஜாமியான்



முனைவர் ஜெ.ராஜா முகமது,
இயக்குநர், இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம், ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.

இருபதாம் நூற்றாண்டு!
இன்பத் தமிழில் ஒலித்தது,

அளவற்ற அருளாளன்
நிகரற்ற அன்புடையோன் – அல்லாஹ்

இப்போது புரிந்தது! திருக்குர்ஆனின் தொடக்கம்!

1300 ஆண்டுகள் இதற்காகக் காத்திருந்தது தமிழ் முஸ்லிம் சமுதாயம். இந்த நெடிய ஆவல் நிறைவடையக் காரணமானவர் நமது காவிய நாயகன் காஜா மியான் என்னும் வள்ளல் பெருமகனார்!

காஜாமியான் ராவுத்தர் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும், மாபெரும் கொடையாளி, வாழ்ந்த காலத்தில் மலைக்கோட்டை மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்! 50 ஆண்டுகள் மக்கள் சேவையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட அறமனச் செம்மல் காஜா மியான் ராவுத்தரின் வரலாறு குறித்த சில செய்திகள் இதோ!

19–ம் நூற்றாண்டு ஓடிக்கொண்டிருக்கிறது! பல்வேறு அரசியல் திருப்பங்கள். ஆனாலும் தமிழ் முஸ்லிம்களின் அக்கறையானது மரபு வழியான வர்த்தகத் துறையிலேயே நிலைபெற்றிருந்தது. வணிகம் செய்வதில் அவர்கள் பெருமை கொண்டார்கள். ஐரோப்பியரின் ஊடுருவலையும், போட்டிகளையும் எதிர்கொண்டு, ஒரு வர்த்தக சமூகமாகத் தொடர்ந்து செயல்படுவதில் வெற்றி பெற்றார்கள்.[1]

இந்த சமயத்தில்தான் சென்னை ராஜதானியின் தொழில் துறையில், தமிழ்ப் பேசும் உட்பகுதிகளிலிருந்து புதியதொரு தொழில் முனைவோர் முஸ்லிம் குழு தோன்றிக் கொண்டிருந்தது. இவர்கள் தென்தமிழ் நாட்டு ராவுத்தர்கள், தமிழ் முஸ்லிம்களுள் ஒரு பிரிவினர். திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து இத்தகையோரின் பரவலான இடப்பெயர்வு நிகழ்ந்து கொண்டிருந்தது. எட்டயபுரம் பகுதியிலிருந்து புறப்பட்ட ஒரு வணிகக்குழு திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், சேலம், மதுரை, கன்னியாக்குமரி போன்ற நகரங்களில் தங்கள் தொழிலுக்காகத் தங்கலாயினர். நறுமணப் பொருள் வணிகத்தில் சிறப்புப் பெற்றவர்கள் இவர்கள். வணிக இடப்பெயர்வோடு நறுமணமும் கூடவே வந்தது. சமூக வாழ்வில் இவர்கள் தங்களை பரிமள ஜமாத்தார்கள் என அழைத்துக்கொண்டார்கள்.[2] (பருமணம் என்பது பரிமளமாக மருவியதாகக் கொள்ளலாம்). (இவ்வாறு இடம் பெயர்ந்தவர்கள், கோயமுத்தூர் பகுதியில் அத்தர் ஜமாத்தார் என்று அழைக்கப்படுவது நோக்கத்தக்கது) 1850 வாக்கில் திருச்சியில் குடியமர்ந்த வணிகர் நல்லகனி ராவுத்தர் தோல் வணிகத்தில் ஈடுபட்டார். இவரது மகன் மியான் ராவுத்தர். இவரது அருந்தவப் புதல்வர்தான் 1880–ல் பிறந்த காஜாமியான்! காஜாமியான் கருவில் திருவுடையவராக (born genius) திகழ்ந்தார்.[3]

காஜாமியான் ராவுத்தரின் முன்னோர் திருச்சிராப்பள்ளி நகரில் பாலக்கரை பகுதியில் குடியேறினர். இவர்களால் உருவாக்கப்பட்ட நகரின் பழைய பள்ளிவாசலை இங்கு காணலாம். மேலும் இவர்களது வழிவந்தோர், 'பரிமள சுன்னத் ஜமாத்' என்று இன்றும் அழைக்கப்படுவது இவர்களது வரலாற்றை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

காஜாமியான் ராவுத்தரின் பாட்டனார் நல்ல கனி ராவுத்தர் மற்றும் அவரது முன்னோர் வாழ்ந்த எட்டயபுரம் பகுதியில், எமது குழுவுடன் சென்று 2018 மே மாதத்தில் கள ஆய்வு மேற்கொண்டோம். இங்கு முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்த பகுதி நடுவீரப்பட்டி. இங்கு அழகானதொரு சிறிய பள்ளி வாசல் உள்ளது. கருங்கல்லினால், திராவிடக் கட்டடக்கலைப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. இவ்வகை, இஸ்லாமியக் கட்டுமானம் கல்லுப்பள்ளி என்று அழைக்கப்படுகிறது. இந்த பள்ளிவாசல் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகலாம். இதற்கு சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு இங்கு முஸ்லிம் குடியிருப்புகள் ஏற்பட்டிருக்கலாம். இவ்வூர் முஸ்லிம்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள

காலத்தால் முற்பட்ட சான்றாக விளங்குவது இந்த பள்ளிவாசல்.

கி.பி.14–ம் நூற்றாண்டிலிருந்து எட்டயபுரம் பகுதி அரசியல் நடவடிக்கைகள் நிறைந்த களமாக விளங்கியது. இதன் காரணமாக இங்கு பல இன மக்களின் குடியேற்றங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். வணிக நிமித்தம் வந்த முஸ்லிம்கள், தமக்குக் கிடைத்த சாதகமான சூழலின் காரணமாக இங்கு தங்கிவிட்டனர் போலும். இங்கிருந்து வணிகம் செய்ததோடு, இப்பகுதியின் ஆட்சியாளர்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொண்டதன் காரணமாகவே இங்கு இஸ்லாமியக் குடியிருப்பு நிலை பெறலாயிற்று. ஆட்சியாளர்களின் ஆதரவுடனேயே அக்காலத்தில் இங்கு ஒரு கல்லுப்பள்ளி கட்டப்பட்டிருக்க வேண்டும்.

சீறாப்புராணம் தந்த உமருப்புலவரின் ஊர் எட்டயபுரம். இவ்வகையில் இவ்வூர் சார்ந்த முஸ்லிம்களுக்குப் பெருமை. உமருப்புலவருக்கு இங்கு தமிழ்நாடு அரசு நினைவு மணிமண்டபம் அமைத்துள்ளது. முண்டாசுக்கவிஞன் பாரதி பிறந்த ஊர் இது. பாரதியின் வீடு முஸ்லிம்களின் குடியிருப்புப் பகுதிக்கு அருகிலிருக்கிறது. எட்டயபுரத்தில் பாரதிக்கு ஒரு மணிமண்டபம் கட்டி அவரது வரலாற்றை ஆவணப்படுத்தியுள்ளனர்,

இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்பே சோழமண்டலப் பகுதியிலிருந்து விலங்குகளின் உப்பிட்ட தோலும், பதனிடப்பட்ட தோலும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், ஜப்பானுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.[4] இந்துக்கள் விலங்குதோலை தூய்மையற்றதாகக் கருதியதால் அவர்கள் இந்தத் தொழிலிலிருந்து விலகி இருந்ததாகத் தெரிகிறது. இதனால் முஸ்லிம்கள் இத்தொழிலில் தாராளமாக நுழைந்தனர். ராவுத்தர்கள் பலர் தோல் வணிகத்தில் முன்னணியில் இருந்தனர். மேலும் அதிக லாபமும் ஈட்டினர். இவ்வகையில் நல்லகனி ராவுத்தர், திருச்சியில் தோல் வர்த்தகத்தைத் நடத்தி வந்தார். மேலும் திண்டுக்கல்லுக்கு அருகில் லாயல் மில், என்ற நூற்பாலையையும் நடத்தி வந்தார்.

நல்லகனி ராவுத்தர் மகன் முகம்மது மியான் ராவுத்தர் திருச்சி செம்பட்டில் 1883–ல்; தோல் வர்த்தகத்தைத் தொடர்ந்தார். 1883–ல் இங்கு இவருக்கு 7 ஏக்கர் பரப்பளவில் மூன்று தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருந்தன. இவரது நிறுவன தயாரிப்புகளின் தரம் கருதி வெளிநாட்டு நிறுவனங்கள் போட்டியிட்டுக் கொண்டு வாங்கிச் சென்றன. இவரது தொழிற்சாலையில் பாரம்பரிய பதனிடும் முறைகளோடு நவீன இயந்திரங்கள் கொண்டும் தோல் பதனிடும் வேலை நடந்து வந்தது. மாதம் 30,000 ஆட்டுத்தோல்களும், 5000 மாட்டுத்தோல்களும் பதனிடப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்பட்டது. இவரது தொழிற்சாலையில் 150 தொழிலாளர்கள் வேலை செய்தனர். மாதம் தோறும் பணியாளர்களுக்கு ரூ.5000– அளவிற்கு சம்பளமாக வழங்கப்பட்டது. இவர் திருச்சிராப்பள்ளி நகரம் பாலக்கரையில் வசித்து வந்தார். இவரது வணிகம் மேலும் வளர்ந்து வந்தது. பல்வேறு பொது வேலைகளுக்கும், பள்ளிவாசல்கள் கட்டுவதற்கும், ஏழை எளியவர்களுக்கும் நிறைய நிதியுதவி அளித்தார். சில காலம் திருச்சிராப்பள்ளி முனிசிபல் கவுன்சில் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.[5]

தனது தந்தை முகம்மது மியான் ராவுத்தர் விட்டுச்சென்ற வணிகத்தை, இளம் வயதிலிருந்தே காஜா மியான் தொடர்ந்தார். சென்னை கிருத்துவக் கல்லூரி உயர் துவக்கப்பள்ளியில் 5–ம் வகுப்பு படிப்போடு இவரது பள்ளிப் படிப்பு நின்று போனது. கல்வி கற்க வணிகம் தடையில்லையே! திருச்சி வந்து வணிகத்தோடு தனது முயற்சியால் தமிழ், உருது, ஆங்கிலம் ஆகிவயற்றில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றார். இது இவரது பிற்கால வாழ்வு நடைமுறைக்கு பெரிதும் துணையாக இருந்தது. இவர் திருச்சியில்ஒருபெரும்தொழிலதிபரானார்.தனதுதொழிலில் பல நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தினார். பெரும் பொருள் ஈட்டினார். அக்காலத்தில் இவரது வணிகத்தில் சுமார் 1 கோடி ரூபாய் முதலீடு இருந்தது என இவர்களது சந்ததியினர்கூறுகின்றனர்.இவரதுதொழிற்சிறப்பைக்கருதி அக்கால அரசு நிறுவனங்கள் இவரைப் பெருமைப் படுத்தின. எடுத்துக்காட்டாக இவரது தொலைபேசி, மகிழுந்து, மின்தொடர்பு, தண்ணீர் விநியோகம் ஆகியவற்றிற்கான எண்கள் ‘1’ என அளிக்கப்பட்டிருந்தன.

அக்காலத்தில்(1920–30)தோல்பதனிடல்பாரம்பரிய முறையிலேயே நடைபெற்று வந்தது. நவீன இயந்திரங்கள், சிலவற்றைத் தனது தொழிற்சாலைக்கு 1940–களில் மேலை நாடுகளிலிருந்து காஜா மியான் இறக்குமதி செய்தார். இதன்மூலம் பதனிடப்பட்ட தோலின் தரம் கூடியது. இவரது கூர்ந்த தொழில் நுட்ப அனுபவத்தைக்கொண்டு தாமாகவே புதியஇயந்திரங்களைஉருவாக்கிப்பயன்படுத்தினார்.இதன் மூலம் இவரது தோல்பதனிடும் தொழிற்சாலை இந்தியாவில் சிறந்த ஒன்றாகக் கருதப்பட்டது. இவருக்கு ஐதராபாத், திண்டுக்கல் ஆகிய இடங்களிலும் தோல்பதனிடும்

தொழிற்சாலைகள் இருந்தன. இந்தியா முழுவதும் உப்புத்தோல் கொள்முதல் நிலையங்கள் 80 மையங்களில் செய்யப்பட்டன. இவரது திருச்சி தொழிற்சாலை சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்தது. சுமார் 450 தொழிலாளர்கள் வேலை செய்தனர். உப்புத்தோலும், இவரது தொழிற்சாலையில் தயாரான பதனிடப்பட்டத்தோலும் பெருமளவிற்கு ஏற்றுமதியானது. இங்கிலாந்தில் 'H.Donnar' என்னும் இறக்குமதி நிறுவனம் இவர்களது தொழிற்கூட்டாளியாக இருந்தது. இவ்விரு நிறுவனங்களும் இணைந்து விற்பனை செய்த தோல் 'HDNM' என்ற வணிக முத்திரை (Trade Mark) பெற்று நல்ல வரவேற்பு கிட்டியது. ஆட்டுத்தோல் பதனிடுவதில் புதிய தொழில் நுட்பங்களுடன் வண்ணம் சேர்த்து மெருகூட்டியதால் இவர்களது தயாரிப்புகளுக்கு உலகச் சந்தையில் நல்ல விலை கிடைத்தது.

இந்திய சுதந்திரப் போராட்டம் உச்சகட்டத்தில் இருந்தகாலம் அது. திருச்சி மாவட்டத்தில் 1920–21–ல் கிலாபத் இயக்கம் மிகத் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. திருச்சியைச் சேர்ந்த பல முன்னணித் தலைவர்கள் இந்த தேசியப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இதில் காஜாமியான் ராவுத்தரும் இணைந்து கொண்டார். திருச்சியில் T.S.S. ராஜன் இந்த இயக்கத்தில் முன்னிலையில் இருந்தார். 17.8.1920–ல் அண்ணல் காந்திஜி திருச்சிராப்பளிக்கு வருகை தந்தார். இவருடன் மௌலானா சௌகத் அலியும் உடன் வந்திருந்தார். திருச்சி சௌக் மைதானத்தில் நடந்த கூட்டத்தில் காந்திஜி உரையாற்றினார். இதனை முன்னின்று நடத்தியவர்களுள் காஜாமியான் ராவுத்தர், ஜமால் முகம்மது, கலிபுல்லா, வி.எஸ்.முகம்மது இபுராகிம், சையது முர்த்துசா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.இந்தியசுதந்திரப்போராட்டடத்திற்கு முஸ்லிம் மக்களின் ஆதரவு இதன் மூலம் வெளிப்பட்டது. சுதந்திரப் பேராட்ட நிதிக்கும் காஜாமியான் ராவுத்தர் தனது பங்களிப்பை அளித்துள்ளார்.[6]

சுதந்திரப் பேராட்டத்தில் அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராக சுதேசிப் பொருட்களின் உற்பத்தியும் அவற்றின் பயன்பாடும் வலியுறுத்தப் பட்டன. கைத்தறியில் நெய்யப்பட்ட கதர்துணியினை மக்கள் பயன்படுத்த வேண்டுமென தேசியத் தலைவர்கள் கேட்டுக்கொண்டார்கள். தேவைக்கு ஏற்ப நாடெங்கும் கதர் துணி தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1928–ம் ஆண்டு வாக்கில் காஜாமியான் ராவுத்தர் கரூர் பகுதியிலிருந்து நலிந்த சில நெசவாளர் குடும்பங்களை அழைத்து வந்து, இன்றைக்கு ஜமால் முகம்மது கல்லூரி அமைந்துள்ள பகுதிக்கு அருகில் அவர்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்து கொடுத்து நெசவாளர் காலனி ஒன்றினை ஏற்படுத்தினார். இது கைக்கோளர் காலனி என்று இன்றும் அழைக்கப்படுகிறது. துணி தயாரிப்புத் தொழிற்சாலை தென்னூர் (தற்போதைய அண்ணாநகர்) பகுதியில் அமைக்கப்பட்டது. தனது சொந்த செலவில், ரூ.50,000 மதிப்பில் கதர் தயாரிக்கும் தொழிற்கூடத்தையும் நிறுவினார். இதில் தயாரான கதர்துணி வகைகள் மக்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட்டன. இவ்வகையில் ராவுத்தருக்கு பெரும் பொருள் இழப்பு ஏற்பட்டாலும், தேசிய நலனைக்கருத்தில் கொண்டு அதனை அவர் பெரிதுபடுத்தவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக தனது மேற்பார்வையில் நடைபெற்ற மஜ்லிஸுல் உலமா அரபிக்கல்வி நிறுவனத்தில் பயிலும் முஸ்லிம் மாணவர்களுக்கும் கதர், கைத்தறித் தொழிலை கற்றுக்கொடுத்தார் என்பது கூடுதல் சிறப்புச் செய்தி.

வள்ளல் காஜாமியான் ராவுத்தர் எத்தனையோ அறப்பணிகளை செய்துள்ளார். திருச்சிப் பகுதியின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பல உதவிகளைச் செய்துள்ளார். அந்தப் பட்டியல் மிக நீளமானது. ஆனால் இவற்றில் நாட்டிற்கும், மக்களுக்கும் நமது சமூகத்திற்கும் செய்துள்ள நிலையான சில சேவைகளை, சாதனைகளை இங்குக் குறிப்பிடலாம். அவையாவன;

1) மஜ்லிஸுல் உலமா

2) திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு செய்யப்பட உதவி

3) ஜமால் முகம்மது கல்லூரி

நபி பெருமானார் அவர்களது காலத்திலேயே இஸ்லாம் தென்னிந்திய பகுதிகளுக்கு வந்துவிட்டது. அதிலும் திருச்சிராப்பள்ளி பகுதியில் கி.பி. 8–ம் நூற்றாண்டிலேயே இஸ்லாமியக் குடியிருப்புகள் தோன்றி விட்டதற்கான அறுதியான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றன.

இஸ்லாமியக் கோட்பாடுகளின் சமரச நோக்கு கருதி மக்கள் பலர் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டு முஸ்லிம்களாக வாழ தலைப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு மார்க்க நெறிகளை எடுத்துரைத்து நல்வழிப்படுத்த போதிய வசதிகள் ஏற்படவில்லை. இதனால் மக்கள் பழமைவாத இருளில் சிக்கி அவதிப்பட்டு செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்தனர். (சமீபகாலம் வரையிலும் இந்நிலைதான்).

முஸ்லிம்களின் இந்த நிலை காஜாமியான் ராவுத்தருக்கு கவலை அளிப்பதாக இருந்தது. தமிழகத்து தலைசிறந்த உலமாப் பெருமக்களையெல்லாம் அழைத்துப் பேசினார். இதன் பயனாக 'தென்னிந்திய மஜ்லிஸுல் உலமா சபை' என்ற அமைப்பைத் தொடங்குவது என முடிவு செய்யப்பட்டது. இந்த அமைப்பை ஏற்படுத்துவதற்காக வள்ளல் காஜா மியான் ராவுத்தர், (தற்போது ஜமால் முகம்மது கல்லூரி அமைந்துள்ள வளாகம்) தனக்கு சொந்தமான 124 ஏக்கர் நிலத்தை மஜ்லிஸுல் உலமா சபை அமைய நன்கொடையாக அளித்தார்கள். ஆகா! எவ்வளவு பெரிய மனது! இது கடலா, சமுத்திரமா, இல்லை, அதனினும் பரந்து விரிந்தது என்று சொல்லலாமா!

சென்னையில் தோல் வர்த்தகத்தில் முன்னணியிலிருந்த வள்ளல் ஜமால் முகம்மது குடும்பத்தினர் இப்பரந்த நிலத்தில் சிறந்த கட்டடம் கட்டிக்கொடுத்தனர். இஸ்லாமிய ஞானமும் நிறைந்த அறிஞர்களும், சொற்பொழிவாளர்களும் தரமான ஊதியத்தில் நியமனம் செய்யப்பட்டனர். இங்கிருந்து அறிவெளிச்சுடர் புறப்பட்டது.

இந்தச் சபையின் மூலமாக கற்றறிந்த மார்க்க அறிஞர்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று மக்கள் இஸ்லாமிய நெறியினைப் பேணி நடத்தல் குறித்து எடுத்துரைத்து அவர்கள் நல்ல முஸ்லிம்களாக வாழ்வதற்கு வழிகாட்டினர். இவ்வாறு அக்காலத்தில் தமிழ் முஸ்லிம்களை இஸ்லாமிய மார்க்கத்திற்கு நெறிப்படுத்தியப் பெருமை வள்ளல் காஜாமியான் ராவுத்தரைச்சாரும். இதனால் ஆன்மீக ரீதியாக தமிழ் முஸ்லிம்களுக்கு நல்ல பலன் கிட்டியது.

மார்க்கக் கல்வியுடன் உலகியல் சார்ந்த பொதுக்கல்வியும் புகட்டும் நோக்கத்தில் பள்ளி ஒன்றிணையும் இங்கு தொடங்கினார். மேலும் இங்குப் பயின்ற மாணவர்களுக்கு பல்வேறு கைத்தொழில்களும் கற்பிக்கப்பட்டன. இந்த பள்ளியே பின்னர் காஜாமியான் உயர்நிலைப்பள்ளியாக உருவாகியது. பின்னாளில் இங்கு ஆதரவற்ற குழந்தைகளுக்கான விடுதி ஒன்றும் தொடங்கப் பட்டது.[8]

திருச்சிராப்பள்ளி என்றதும் தமிழக முஸ்லிம்களின் நினைவுக்கு வருவது ஜமால் முகம்மது கல்லூரியாகும். 'தென்னகத்தின் அலிகர்' எனப் போற்றப்படும் இக்கல்லூரி தமிழக முஸ்லிம்களின் கல்வி, கலாச்சார பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது..

அக்காலத்தில் தமிழ் முஸ்லிம்களிடையே இஸ்லாம் சமயம் சார்ந்த கல்வியே அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. எனவே தமிழ் முஸ்லிம்கள் உயர் கல்வியில் மிகவும் பின் தங்கியிருந்தனர். 1872–ல் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரக்கணக்குப்படி சென்னை ராஜதானியில் ஒரே ஒரு முஸ்லிம் பட்டதாரிதான் இருந்தார். இந்த நிலையை மாற்ற சமுதாயப்பெரியோர் சிலர் முனைப்புக் காட்டினர். இதன்பயனாக 1921–ம் ஆண்டில் வாணியம்பாடியில், 'இஸ்லாமியக்கல்லூரி' தொடங்கப்பட்டது.தனியார்முயற்சியில்கல்விநிறுவனங்கள் தொடங்குவதை அரசும் ஊக்குவித்தது. இருப்பினும் 1950–ம் ஆண்டுவரை வேறு உயர்கல்வி நிறுவனங்கள் எதுவும் முஸ்லிம்களால் தொடங்கப்படவில்லை. சென்னையில் செயல்பட்டு வந்த அரசு முகமதன் கல்லூரியின் பெயர் இந்திய சுதந்திரத்திற்குப் பின், அரசு கலைக்கல்லூரி என மாற்றப்பட்டது. அரசின் இச்செயல் முஸ்லிம்களிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. உயர்கல்விப் பெறுவதன் மூலமே முஸ்லிம்கள் அரசுத்துறையில் வேலைவாய்ப்புகளைப் பெறமுடியும், ஆட்சியதிகாரத்தில் பங்கு கொள்ள இயலும் என்பதை உணர்ந்து கொண்ட கல்வியாளர்கள் சமுதாயப் பெரியோர்கள் இதற்கான வழிவகைகளைக் காணத்தொடங்கினர். திருச்சிராப்பள்ளி முஸ்லிம்களுக்கு பீடித் தொழிலும், தோல் தொழிலும் பிரதான தொழிலாக இருந்தன. கிடைத்த சொற்ப வருமானத்தைக் கொண்டு திருப்தியடைந்தனர். கல்வியைக் குறித்து பெரிதும் அலட்டிக்கொள்ளவில்லை.; இத்தகைய மக்களின் வாழ்வு வளம்பெற வேண்டுமே என்ற கவலை கொண்ட காஜா மியான் ராவுத்தரும், ஜமால் முகமது அவர்களும் திருச்சியில் ஒரு கல்லூரியைத் தொடங்க திட்டமிட்டனர். இருப்பினும் இடைப்பட்ட காலகட்டத்தில் வள்ளல் ஜமால் முகம்மது அவர்கள் மறைந்துவிட்டதால் அவரது விருப்பப்படி அவரது மூத்த குமாரர் எம்.ஜே. ஜமால் முகையதீன் இப்பணியைத் தொடர்ந்தார்.

முகமது மியான் ராவுத்தர் மஜ்லிஸுல் உலமா நிறுவனத்திற்கு அளிந்திருந்த 120 ஏக்கர் வளாகத்திலேயே கல்லூரி உருவாக்கவும், அதற்குத் தேவையான கட்டடங்களை ஜமால் முகம்மது குடும்பத்தினர் கட்டித்தரவும், ஏற்பாடாகியது. இதன் விளைவாக ஜமால் முகம்மது கல்லூரி உருவானது. இக்கல்லூரியை 11.07.1951 அன்று அன்றைய சென்னை மாகாண முதலமைச்சர் பி.எஸ். குமாரசாமி ராஜா அவர்கள் தொடங்கி வைத்தார்.

250 மாணவர்களுடன் அன்று தொடங்கிய இந்த கல்லூரி இன்று சுமார் 11,200 மாணவர்களின் கல்வித்தேவையை நிறைவு செய்து வருகிறது. கல்லூரியின் நிர்வாகக்குழுத்தலைவராக வள்ளல் காஜாமியான் ராவுத்தர் 1951 முதல் 1954–ம் ஆண்டுவரை பொறுப்பு வகித்தார். காஜாமியான் ராவுத்தரின் நினைவைப் போற்றும் வகையில் கல்லூரியின் முதன்மை மாணவர் விடுதி இவரது பெயரால், 'காஜாமியான் விடுதி' எனப் பெயர் சூட்டி அழைக்கப்படுகிறது. முஸ்லிம் மாணவர்களுக்கு மட்டுமின்றி, சமுதாயத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் இங்கு பரந்துபட்ட கல்வி வாய்ப்பு கிடைத்து வருவது இக்கல்லூரியின் தனிச்சிறப்பாகும்.

காஜாமியான் ராவுத்தர் பல்துறை விற்பன்னர் என்று சொல்லலாம். இவரது பொறியியல் அறிவு குறித்து முன்பே குறிப்பிட்டுள்ளோம். சித்த வைத்தியம், யூனானி மருத்துவம் என பாரம்பரிய மருத்துவ முறைகளையும் நன்கறிந்து பின்பற்றியதோடு, பிறருக்கும் எடுத்துக்கூறி உதவி செய்வார். ராவுத்தர் சிறந்த மார்க்கப்பற்று உடையவர். இஸ்லாமிய மெய்ஞான இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். குணங்குடி மஸ்தான், தக்கலை பீரப்பா ஆகியோரது ஞனப்பாடல்களையும்; சூஃபி ஞானியர்கள் மற்றும் மார்க்கம் சம்மந்தமான நூல்களையும் விரும்பிப்படிப்பார். மார்க்க விஷயங்கள், சூபித்துவம், இஸ்லாமிய இலக்கியங்கள் குறித்து அறிஞர் பெருமக்களுடன் கலந்துரையாடுவார்.

இஸ்லாம் மத வேத நூலான திருக்குர்ஆன், முஸ்லிம்களுக்கு முதல் வேதம். முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி உலக மக்களின் நல்வாழ்விற்காக வழங்கப் பட்ட வான்மறை இது. திருக்குர்ஆன் ஓதுவதற்கு முஸ்லிம்கள் இளம் பிராயத்திலிருந்தே பயிற்சி பெறுகிறார்கள். ஓதுகிறார்கள். மனப்பாடம் செய்கிறார்கள். ஆயிரம் ஆண்டுக்கு மேலாக இப்படித்தான். கற்றறிந்த பெருமக்கள் திருக்குர்ஆன் படிக்கப் பயிற்றுவிப்பார்கள். படிப்பவர் 'கிளிப்பிள்ளைபோல்' சொல்லிக் கொடுத்ததை அப்படியே மனதில் பதிய வைத்துக்கொள்வார். ஆனால் அதில் பொதிந்து கிடக்கும் பொருளைப்புரிந்து கொண்டாரில்லை. அறிவியல், அரசியல், பொருளியல், அருளியல், வாழ்வியல் என திருக்குர் ஆன் உரைக்கும் நற்கருத்துக்களை மக்கள் புரிந்து கொள்ள தம்மால் இயன்றதை செய்ய வேண்டுமென வள்ளல் காஜாமியான் ராவுத்தர் நினைத்தார். திருக்குர்ஆனைத் தமிழில் மொழி பெயர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது மார்க்க விஷயங்களில் தன்னிகரற்று விளங்கிய மௌலானா மௌலவி ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி, மேலப் பாளையம் அப்துல்காதர் பாகவி ஆகியோர் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு பணி தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வந்ததை அறிந்து அவர்களை யெல்லாம் திருச்சிக்கு அழைத்து வந்து அவர்களது பணிக்கு ஊக்கமளித்தார். மேலும் இந்த அறிஞர்களின் குடும்பங்களையும் அழைத்து வந்து தங்க வைத்துத் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டன.[7]

இஸ்லாமிய நூல் பிரசுரங்கம், என்ற அமைப்பும் தொடங்கப்பட்டது. இதற்கென்று அச்சுக்கூடமும் தனியாக அமைக்கப்பட்டது. காஜாமியான் ராவுத்தருடன், ஜமால் முகம்மது சாஹிப் மற்றும் காரைக்கால் மு.தம்பி சாஹிப் மரைக்காயர் ஆகியோரும் இப்பணியில் தங்களை இணைத்துக்கொண்டார்கள்.

1926–ம் ஆண்டு பிப்ரவரிமாதம் 19–ம் நாள் ஜுஃம்மா தொழுகைக்குப்பின் திருக்குர்ஆன் தர்ஜுமா – மொழி பெயர்ப்புப்பணி – தொடங்கியது. மூன்றாண்டுகளுக்குப்பின் திருக்குர்ஆன் முதல் பாகத்தின் மொழி பெயர்ப்பு, அரபி மூலத்துடனும், விரிவுடையுடனும் வெளியிடப்பட்டது.[9]

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்ற அரபிச் சொற்றொடருக்கு நிறைபொருள் கொண்ட தமிழ் வாசகமான,

அளவற்ற அருளாளனும் நிகரற்ற
அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின்
திருப்பெயரால்

என்ற வாசகம் இன்பத்தமிழில் நமது செவியில் ஒலித்தது. மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தனர். எவ்வளவு பொருள் பொதிந்த வேத வசனங்கள்! இவ்வாறு திருக்குர்ஆனின் ஒரு பகுதி தமிழில் விளக்கம் கண்டது. இத்தகைய சிறப்புமிகு மொழி பெயர்ப்பை நமக்களித்தவர் அப்துல் ஹமீது பாகவி, அதற்குக் காரணமானவர்கள் காஜாமியான் ராவுத்தர் மற்றும் ஜமால் முஹம்மது சாஹிப்! உலகம் உள்ளவரை இதற்காக வரலாறு அவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும். இப்பணி உடனடியாகத் தொடர்ந்து நடைபெறுவதில் இடர்பாடுகள் ஏற்பட்ட போதிலும், பின்னாளில் திருக்குர்ஆனுக்கு பல்வேறு அறிஞர்கள் நிறைவான மொழிபெயர்ப்புகளை

அளித்துள்ளார்கள். இதனால் முஸ்லிம்கள் தங்களைப் பற்றியும், தங்களது மார்க்கம் மற்றும் கடமைகள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ள வாய்ப்பானது. அளவற்ற அருளாளன், என்று தமிழ் ஒலிக்கும் போதெலலாம் அப்துல் ஹமீது பாகவியும், காஜாமியானும் நம் உள்ளத்தில் நிழலாடுவார்கள். மேலும் தமிழ் மொழியறிந்த சகோதர சமுதாயத்தினர் திருக்குர்ஆன் கூறும் அருமையான வாழ்வியல் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளவும் இது வாய்ப்பானது.

வள்ளல் காஜாமியான் இராவுத்தர் செல்வச் சீமானாயினும், எளிமையானவர், ஆரவாரமோ, ஆடம்பரமோ கிடையாது. அறச் செயல்களில் பலவற்றில் முதன்மைப்பெற்றவர். சாதி மத வேறுபாடின்றி அனைவரின் அன்பிற்கும் பாத்திரமானவர். திருச்சிராப்பள்ளியில் சிறந்த தமிழறிஞராக விளங்கிய முத்தமிழக் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் நமது வள்ளலின் உற்ற நண்பர். இவரிடம் ஒருமுறை வள்ளளைப் பற்றிக்கேட்டபோது ஒன்றா இரண்டா, எடுத்துச் சொல்ல என்று தொடங்குகிறார் கி.ஆ.பெ. வள்ளளின் தந்தை மியான் ராவுத்தர். அவர் பெயர் பலருக்கும் தெரியாது. ந.மு என்றால் அனைவருக்கும் தெரியும். அவரது காலத்திலேயே அவரது மகன் காஜாமியான் செல்வாக்குடன் விளங்கினார். பெரியவரை எல்லோரும் ‘எஜமான்‘ என்று அழைப்போம், காஜாவை ‘தம்பி எஜமான்‘ என்று அழைப்போம். இனிமையாக பேசிப்பழகக்கூடியவர் காஜா மியான். ஏழை எளிய மக்களின் மீது மிகுந்த கருணை கொண்டவர். என்னிடத்திலும், பெரியார் ஈ.வே. ராமசாமியிடமும் மிகுந்த பாசம் கொண்டவர். 1937–38ல் திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், தனது குடும்பத்துடன் கலந்துகொண்டவர். இதில் இவரது துணைவியார் பெரும்பங்கு வகித்தது பெருமைக்குரியது. இந்தியத் தோல் வணிகத்திற்குப்புத்துயிர் ஊட்டியவர். திருச்சி மாநகரில் அவரின் பங்களிப்பைப் பெறாத நிறுவனங்கள் கிடையாது. நகரின் மின் விநியோகம், அப்போது, சேஷசாயி என்ற நிறுவனத்திடம் இருந்தது. இந்த நிறுவனத்தின் பெருமளவு பங்குகளை வாங்கி உதவி செய்து நகரம் வெளிச்சம் பெறச்செய்ய முன்னின்றவர். அக்காலத்தில் அரசு மேற்கொள்ளும் எல்லா திட்டங்களிலும் காஜாமியான் ராவுத்தரின் பங்களிப்பும் ஈடுபாடும் இருக்கும். அன்றைய ஆட்சியாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். எல்லாவற்றிற்கும் மேலாக நபிகள் நாயகம் காட்டிய வழியில் வாழ்ந்த மனித நேயம் மிக்கவர்.[10] என்று நினைவு கூர்ந்து பதிவிட்டிருப்பது காஜாமியான் ராவுத்தரின் நற்பண்புகளுக்கு முதன்மைச் சான்றாகும்.

காஜாமியான் ராவுத்தர் தோல் வணிகத்தோடு, துணி, தானியங்கள், மர அறுவை மில் போன்ற தொழில்களிலும் ஈடுபட்டிருந்தார். ஒலையூரில் சர்க்கரை ஆலை ஒன்றும் நடத்தி வந்தார். தென்மாவட்டங்கள் பலவற்றில் காடுகளும், விவசாய நிலங்களும் இவரது குடும்பத்திற்கு சொந்தமாக இருந்தன.

திண்டுக்கல் சிறுமலையில் இவருக்கு பெருமளவு நிலம் இருந்தது. இவரது நிலம் அமைந்திருந்த சாலையில் இருந்த வளைவு (Hairpin Bend) ‘ந.மு.வளைவு’ என்று அழைக்கப்பட்டது. தற்போதும் அவ்வாறே அழைக்கப்படுகிறது. காடு வளர்ப்பிலும், விவசாயத்திலும் காஜாமியான் ராவுத்தர் ஈடுபாடு கொண்டிருந்தார். கம்பம் மலைப்பகுதியில் தனக்கு சொந்தமான நிலங்களில் மலைப்பயிர்களைப் பயிரிட்டார். விவசாயத்தை நவீன மயமாக்க ஜப்பானிலிருந்து நவீன இயந்திரங்களை வரவழைத்தார். தமது ஏற்றுமதித் தொழில் நிமித்தம் தங்கியிருப்பதற்காக சென்னை அங்கப்ப நாயக்கன் தெருவில் பல வீடுகள் இவருக்கு இருந்தன. வணிகத்தோடு பிள்ளைகளின் படிப்புக்கு இது உதவியாக இருந்தது.

திருச்சி நகரில் செம்பட்டு தோல் தொழிற்சாலை தவிர பல பகுதிகளில் இவருக்குச் சொந்தமான இடங்கள் இருந்தன. திருச்சி பாலக்கரையில் இருக்கும் ந.மு.பள்ளிவாசல், கபர்ஸ்தான் ஆகியன இவரது குடும்ப கொடைதான். திருச்சி பாலக்கரையில் இருந்த பிரபாத் தியேட்டர், அதனருகில் சுமார் 25 ஏக்கர் பரப்பில் ‘என்.எம்.’ குடியிருப்பு ஆகியனவும் இவருக்கு சொந்தமாக இருந்தது. திருச்சி நகர எல்லைக்குட்பட்ட செங்குளம் காலனி, ஹவுசிங் யூனிட், மத்திய சிறைச்சாலை, மின்வாரிய அலுவலகங்கள் போன்றவற்றிற்கு நில எல்லைகள் கூறும்போது என்.எம். எஸ்டேட்டிற்கு, வடக்கு, கிழக்கு போன்ற பதிவுகள் வருவாய் துறையின் பழைய பதிவேடுகளில் காணப்படுகின்றன. இவ்வளவுசொத்துக்களுக்குசொந்தக்காரராகஇருந்தாலும், ஏழை எளிய மக்களிடம் பறிவு கொண்டவர் காஜாமியான். எப்போதும் அடக்கமாக இருப்பார். உடுக்க ஒரு 4 முழ வேஷ்டி அல்லது சிறிய கட்டமுள்ள கைலி, ஒரு அரைக்கை கதர்சட்டை! வெளியூர்களுக்கு செல்லும்போதும், முக்கியமானவர்களை சந்திக்கச் செல்லும்போதும் கோட் அணிந்துகொள்ளுவார். அன்றைய பெரும் தலைவர்களாக இருந்த காந்திஜி, ஜாகிர் உசேன், முகமது அலி, பெரியார், காயிதேமில்லத் மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் பலருடனும் இவருக்கு நெருங்கிய நட்பு இருந்தது (வள்ளல் காஜாமியான் அவர்களது சந்ததியைச்சேர்ந்த மகன்வழிப்

பேரன்களான ஹாஜி K.A. கலீல் அஹமது மற்றும் டாக்டர் காஜா நஜுமுத்தீன் ஆகியவர்களிடம் தமிழ்த் துறை பேராசிரியர் முகம்மது இஸ்மாயில் நேர்முகம்) வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளல் காஜாமியான் ராவுத்தர் தனது 74 வது வயதில் 14.11.1954 அன்று காலமானார்.

இவ்வாறு வள்ளல்கள் காஜாமியான் – ஜமால் முகம்மது கூட்டணி தமிழ் முஸ்லிம் சமுதாயத்திற்கு பெருமை சேர்த்தது. பலரது வாழ்வு ஒளிபெற காரணமானது. மக்கள் மனதில் காஜாமியான் ராவுத்தர் என்றும் இருப்பார்!

வாழ்க வள்ளல் காஜாமியான் புகழ்!

வளர்க அவரது அறப்பணிகள்!!

## அடிக்குறிப்புகள்


1. ஜே.பி.பி.மோரே, முஸ்லிம்களின் அரசியல் பரிணாம வளர்ச்சி – தமிழ்நாடு மற்றும் சென்னை 1930–1947, அடையாளம், புத்தானத்தம், 2005, பக்கம். 44–45.

2. A.K. ரிபாயி, தமிழகத்தில் இஸ்லாமியர் வரலாறு, தென்காசி, 1988 பக்கம்.224.

3. சி.நைனார்முகம்மது, வள்ளல் காஜாமியான், ஜமால் பொன்விழா மலர் 2000–2001.

4. S.Arasaratnam, Merchants Companies and Commerce on the Coromandal 1650-1740 Delhi, 1986, p.492.

5. Somerset Playne, (ed) Southern India, Its History People, commerce and industrial Resources, London, 1914-1918, pp.491-2.

6. சேயன் இபுராகிம், முதல் தலைமுறை மனிதர்கள், சென்னை 2016, பக்கம் 94–100

7. தா.பிச்சை முகம்மது, வள்ளல் ந.மு.கா., ஜமால் பொன்விழா மலர், 2000–2001.

8. சி.நைனார் முகம்மது மற்றும் தா.பிச்சை முகம்மது, மேலது

9. சங்கைமிகு குர்ஆன் மற்றும் சிறப்புமிகு தமிழாக்கம், ஆ.கா.அப்துல் ஹமீது பாகவி, தாருல் ஹுதா வெளியீடு, சென்னை, அக்டோபர், 2006, பக்கம்.7

10. கி.ஆ.பெ.விஸ்வநாதம், தம்பி எஜமான், ஜமால் பொன்விழா மலர், 2000–2001.


* * * * *

# அற்றம் காக்கும் கல்வியின் இரண்டு கண்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை



முனைவர். ஆயிஷா. இரா. நடராசன்
சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர்
(ஜமால் முகம்மது முன்னாள் மாணவர்)

கரூருக்கு அருகே ஆதிரெட்டிப்பாளையம் எனும் குக்கிராமத்தில் இருந்து – அப்போது என் தந்தை அங்கே பஞ்சாயத் அரசு ஆணையராக இருந்தார் – திருச்சி சுப்ரமணியபுரம் எனும் குட்டி சிங்கப்பூரில் அமைந்த ஜமால் முகம்மது கல்லூரி எனும் தமிழகத்தின் ' அலிகார்' கல்வி நிலையமாய் மிளிர்ந்த கல்வியின் மெக்காவில் இடம் கிடைத்து அங்கே எனது மானசீக ஆசான்களின் கையில் என்னை ஒப்படைத்து கொண்டதைத்தான் என் வாழ்க்கையின் மிகப்பெரிய திருப்பு முனையாக நான் கருதுகிறேன். கண்களில் கண்ணீர்மல்க சொல்கிறேன் தோழர்களே அந்த ஆசான்களின் இதயத்தில்தான் நான் என் இறைவனை உணர்கிறேன் இது என் தாய்மீது சத்தியம்.

படித்தது ஜமால் முகம்மது கல்லூரி. உணவும் உறைவிடமும் தந்ததோ காஜாமியான் விடுதி. இரு கண்கள். என்னை தீவிரமாய் கண்காணித்து மந்தைகளிடம் இரக்கம் காட்டி மேய்ப்பராய் எண்ணும் எழுத்தும் எண்ணமும் ஏற்றமும் தந்து என்னை செதுக்கித்தந்தார்கள். என்போன்ற லட்சக்கணக்கானவர்களை தங்கள் சொந்தப் பிள்ளைகளாக கருதி உலகெங்கும் எனக்கு சொந்த சகோதர்களை உருவாக்கித் தந்த அந்த உத்தமர்களை அவர்களது கல்விக் கனவுகளை நிறைவேற்றுவதே லட்சியம் என அயராது இன்றும் போராடும் அவர்தம் சந்ததியைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் அவர்களையே சந்திக்கும் எண்ண எழுச்சி ஏற்பட்டு நன்றி பெருக்கால் சிலிர்க்கிறேன்.

இந்த மண்ணின் மதவெறி சண்டையும், மூடப்பழக்க வழக்கங்களும், கடும் சாதிய சட்டங்களும் இன்று நினைக்கவே முடியாத சமூக அவலங்களும் நிரம்பிக்கிடந்த போது நமது கல்வி என்பதே எட்டாக்கனியாக இருந்த நாட்களில், அற்றம் காக்கும் கருவியான கல்வியை அனைவருக்கும் பகிர்ந்து தந்திட கடும் சமூக போராட்டங்களை நடத்தவேண்டி இருந்தது. நாடு தழுவிய நவீன அறிவு புகட்டும் கல்வியை இந்தியர்களால் தரமுடியாது. உலக அறிவை தங்களால் மட்டுமே தரமுடியும் என மார்தட்டியபடி ஆங்கிலேயர்கள் நம் நாட்டை அடிமைசெய்து பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் நிலைகொள்ள துடித்த நாட்களில் கல்வி என்பது எப்படி இருக்கவேண்டும் என வழிகாட்டியவர்கள் பலர். அதில் பிரதான இருகண்கள் நமது ஜமால் முகம்மது சாகிபும், காஜாமியான் ராவுத்தரும் ஆவர்.

1854 முதல் நாம் தொடங்கலாம், ஜமால் முகம்மது கல்லூரியின் தோற்றத்திற்கு ஏறக்குறைய 100 வருடங்களுக்கு முன் பிரித்தானிய சாம்ராஜ்யம் சார்லஸ் உட் என்பவரது தலைமையில் ஒரு கல்விக்குழுவை அமைத்தது. இந்தியர்கள் உருவாக்கிய கல்விசாலைகளுக்கான அப்போதைய மானியமான – வருடத்துக்கு 10,000 ரூபாய் என்று இருந்ததை அது ரத்து செய்தது. இந்திய கல்வியை அது போதனை (instruction) என்று சுருக்கியது. பெக்ராம்ஜி மலபாரி, ராஸிக் கிருஷ்ணாமாலிக், ஈஸ்வர சந்திர வித்தியாசாகர், கேஷாப் சந்திரசென் போன்ற சமூக போராளிகள் அதனை கடுமையாக எதிர்த்தார்கள். தாதாபாய் நவ்ரோஜி, கோபாலகிருஷ்ண கோகலே போன்றவர்கள் மூலம் இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ள அதே தரமான கல்வி இந்தியாவிற்கும் தேவை என குரல் கொடுத்த மாமனிதர்களில் சர் சையது அகமதுகான் சாகிப்பின் பங்களிப்பை நாடு மறக்காது.

சர் சையது அகமது கான் இந்திய அறிவியல் கல்வியின் பிதாமகர் எனப் போற்றப்படுகிறார். நம் மவுலியாக்கள் நவீன கல்வி நமக்கு எதற்கு என கேட்டபோது நமது பாரம்பரிய மதராஸாக்களை கைவிடாமலேயே நவீன கல்வியை எப்படி சுவீகரிக்க முடியும் என செய்து காட்டியவர் அவர். அவர் தொடங்கிய அலிகார் கல்வி இயக்கம்தான் இந்தியக் கல்வியின் திருப்புமுனை.

பாரம்பரிய இறைப்பணி என்பது கல்விப்பணிதான் என்பதை காலகாலமாக நிருபித்த மொகலாய வம்சத்தின் கல்வி சக்ரவர்த்தியான சர் சையது அகமதுகான் உருவாக்கிய அலிகார் இசுலாமிய பல்கலைகழகம்தான்

உண்மையில் இந்திய தாய் திருநாட்டின் ஆக்ஸ்போர்டு என்று பின்நாட்களில் டாக்டர் ராதாசிருஷ்ணன் கமிட்டி தனது அறிக்கையில் குறிப்பிட்டது. ஜமால் முகம்மது சாகிபு தமிழகத்தின் சையது அகமதுகான் என்றால் அது மிகைஇல்லை. பல்வேறு விதங்களில் நாம் இருவருக்குமான ஒப்புமைகளை ஒப்பீடுகளை முன் வைக்கமுடியும்.

இந்திய இசுலாமிய அறிவுக்குழுமம் பாகிஸ்தானா, இந்தியாவா என திக்கு தெரியாமல் நின்றபோது நம் சுப்பிரமணியபுரம் வழியாக தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் 1932ல் திருச்சிக்கு விஜயம் செய்கிறார். அப்போது தேசியக்கல்லூரி, தற்போதைய இந்திராகாந்தி கல்லூரி வளாகத்தில் செயல்பட்டுவந்தது. அந்த காலத்தில் அங்கே முதல்வராக இருந்த கல்வியாளர் சாரங்கநாதனை பற்றி கேள்விப்படாதவர்கள் இருக்கமுடியாது, அவர்தன் கல்லூரி மாணவர்களிடையே உரை நிகழ்த்துமாறு காந்தியடிகளை அழைந்திருந்தார். மகாத்மா காந்தியடிகள் தனக்கே உரிய பாணியில் திருச்சி மாநகரின் நாட்டுப்பற்று மிக்க இசுலாமிய அன்பர்களை சந்திக்க விரும்பினார்.

அவ்விதம் அவரை சந்தித்த நமது ஜனாப் ஜமால் முகமது சாகிப்பிடம் காந்தி அவர்கள் தேச விடுதலைபோருக்கு நன்கொடை என கேட்டபோது ஒரு காசோலையை தந்து ‘எவ்வளவு தேவையோ நிரப்பிக் கொள்ளுங்கள். நாட்டு விடுதலைதான் உண்மையான சொத்து’ என கூறியதாக காந்தியடிகள் தேசிய கல்லூரி மாணவர்களிடையே எழுச்சி உரை ஆற்றிய போது குறிப்பிட்டார். இதனை அக்கூட்டத்தில் பங்கேற்று பின்நாட்களில் அதே தேசிய கல்லூரியில் முதல்வரான திருவாளர் முத்துசாமி அவர்கள் எழுதிய ‘திருச்சியில் காந்தியடிகள்’ எனும் கட்டுரையில் நான் வாசித்திருக்கிறேன்.

எல். சபாபதி எனும் வரலாற்று அறிஞர் இந்திய சுதந்திரப்போர் எனும் பிரமாண்ட நூல் ஒன்றை எழுதி இருக்கிறார். அந்த புத்தகம் சென்னை கன்னிமாரா நூலகத்தில் மட்டும் ஒரே ஒரு பிரதி உள்ளது. அதில் பக்கம் 352ல் திருச்சி சத்யாகிரக போர்பற்றிய இடங்கள் வருகின்றன. டாக்டர். டி.எஸ்.எஸ். ராஜன் வேதாரண்ய உப்பு யாத்திரைக்கு பங்காற்றியதை மட்டும் குறிப்பிட்டு வரலாற்றாளர்கள் இசுலாமிய விடுதலை போராளிகளைப் புறக்கணிக்கிறார்கள் என்பதை தனியே அவர் குறிப்பிடுகிறார். அதில் காஜாமியான் ராவுத்தர், ஜமால் முகம்மது ஆகியோர் தமிழக உப்பு சத்தியாகிரகத்திற்கே தலைமை வகித்த தலைவர்களில் அடங்குவர் என்று எழுதுகிறார். இதே உப்பு சத்தியாகிரகத்தின் போது கைதான ஏனைய இசுலாமிய விடுதலை வீரர்களான மதிப்பிற்குறிய மதுரை பாவா மொய்தீன், ஆச்சி பாஷா ராவுத்தர் (திருமங்கலம்), முகமதுகனி, மொய்தீன்அப்துல்காதர், திண்டுக்கல்லின் சையது இப்ராஹிம் உட்பட திருச்சியில் சிறை சென்ற வரலாற்று சிறப்புமிக்க விடுதலைபோர் வீரர்களோடு நம் கல்வி – நாயகர்களான ஜனாப் ஜமால்முகமது சாகிபு மற்றும் காஜாமியன் ராவுத்தர் ஆகியோர் பெயர்களும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டது கண்டு கண்கலங்கி தொழுதுநின்றேன்.

இந்திய கல்விப்போராளிகள் எனும் நூலை நான் சமீபத்தில் எழுதி முடித்திருக்கிறேன். மெக்காலேவாதிகள் வேற்றுமை இல்லாத பொதுக் கல்வியை இந்தியாவிலே விதைத்தவர்கள். ஆண்டாண்டு காலமாக தந்தையின் தொழிலை மகன் செய்யும் குலக்கல்வியும், மனுதர்ம சாதிவெறி கல்வியும் ஆணாதிக்க அடிமை கல்வியும் மட்டுமே இருந்த நாடு இது. இன்று சிலர் குருகுல வாசத்தை உயர்த்தி பிடிக்கிறார்கள். காவி மயக்கல்வியை பெரிய மாற்றுக் கல்வியாக ஆட்சியாளர்களான பிறகு அவர்கள் வீதிக்கு வீதி முழங்குகிறார்கள். குருவின் குலத்திற்கு மட்டும்தான் கல்வி என முழங்கிய சனாதன கல்வியில் ஜனநாயகம் என்பது துளியும் இருந்ததில்லை என்பது ஏகலைவர்களின் குற்றச்சாட்டு. சேரிகளின் சகோதரரை அண்ணல் அம்பேத்கார் மேதை ஆக்கியதும், இராமேஸ்வர படகோட்டி மைந்தனை டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் ஆக்கியதும் மெக்காலேவாதிகள் வழிகாட்டிய ஜனநாயக வகுப்பறைகள் அல்லவா. ஆனால் அத்தகைய கல்வி சிறுபான்மை மக்களையும் ஒன்றிணைத்து தங்களது பாரம்பரிய அடையாளங்களை தக்கவைத்து அறிவியலில் கலை இலக்கியத்தில் முத்திரை பதிக்க உதவும் வகையில் செதுக்கப்பட்ட வரலாறு ஒரு போராட்ட வரலாறு. எப்படி விடுதலை போராட்டத்தின் வரலாற்றில் நம் ஸ்தாபகர்களின் பெயர் மிளிர்கிறதோ அதேபோல கல்வி எனும் சமூக போராட்டத்தின் சமரசமற்ற தியாகிகளாக நாம் அவர்களை பார்க்கிறோம். எப்படி என்று சொல்கிறேன்.

1948–ல் டாக்டர் ராதாகிருஷ்ணன் கல்வி குழுவிலே ஜனாப் ஜமால்முகம்மது சாகிபு உயர்கல்வி குறித்து தனது நிலைப்பாடுகளை நேரில் சென்று சாட்சியமாக முன்வைத்ததை அக்கமிட்டியின் பட்டியல் சொல்கிறது. அந்த கமிட்டிதான் இந்திய விடுதலைக்கு பிறகு அமைக்கப்பட்ட முதல் கல்விக்குழு. 1904–க்கு பிறகு பல்கலைகழக ஆய்வுக்குழுவாகவே மையஅரசு நியமித்த முதல் குழு அது. மதிப்பிற்குறிய டாக்டர் ராதாகிருஷ்ணன்

நமது திருவாணைக்காவலில் பிறந்தவர். அவரது நேரடி அழைப்பின் பேரில் ஜனாப் ஜமால் முகம்மது சாகிபும், காஜாமியான் ராவுத்தரும் அக்குழுவின் முன் தோன்றி இந்திய இசுலாமிய அறிவுக்குழுமத்தின் பிரதிநிதிகளாக தங்களது பக்கத்து நிலைப்பாடுகளை முன்வைத்தார்கள் என வரலாறு சொல்கிறது.

டாக்டர் ராதாகிருஷ்ணன் கல்விக்குழு முன் சாட்சியம் தந்த மற்றொரு இசுலாமிய கல்வியாளர் பாப்பா – மியான் என அன்போடு போற்றப்படும் அலிகார் அப்துல்லா கல்லூரியின் ஸதாபகர் கான் பகதூர் டாக்டர் ஷேக் அப்துல்லா அவர்கள். அவரும் அவரது வாழ்க்கை துணை வாகீத் ஜகான் பேகம் அம்மையாரும் இணைந்து டாக்டர் ராதாகிருஷ்ணன் கமிட்டி முன் சாட்சியம் தந்தவர்கள். அங்கே அலிகாரில்தான் கல்வி சாலைகள் – பட்டபடிப்பு கல்லூரிகள் இருக்க வேண்டுமா எனக் கருதி நம் திருச்சிராப்பள்ளியில் அதனை ஸ்தாபிக்க நம் – கல்வி இரட்டையர்கள் – முடிவு செய்திருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

விடுதலைக்குப் பிறகு – வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் ஒரே பாதையாக வறுமை பிணி சாக்காடு என யாவற்றிலிருந்தும் விடுதலை தரும் ஒரே அருமருந்தாக கல்வி மாறுகிறது. அனைத்து தரப்பு மக்களும் தங்களது பிரதிநிதித்துவத்திற்காக போராடுகின்றனர். கிருத்துவ மிஷினரிகளும், மடாதிபதிகளும் தங்களது பிரதிநிதிகளுக்கே வசதி – வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்கும் நியாமற்ற சூழலில்தான், அனைத்து தரப்பு மக்களுக்குமான முதல் உயர்கல்வி கூடமாக நம் ஜமால் முகம்மது கல்லூரி 1951–ல் தொடங்கப்பட்டது. திருச்சி மாநகர் மட்டுமல்ல சுத்துபட்டு சிறு நகர பகுதி மட்டுமல்ல குக்கிராமங்கள் தொலைதூர சிற்றூர்கள் கல்வி எனும் விடுதலைக் கீற்று நுழையாத இருள் பிரதேசங்களில் இருந்தும் யார் வந்தாலும் இடம் தந்த திறந்த ஆலகால விருட்சமாய், போதி எனும் கல்வியின் கடாட்ஷம் – எல்லாரும் அருந்தும் புனித நீரோடையாய் ஓடத்துவங்கியது.

1952–ல் அமைக்கப்பட்ட லட்சுமணசாமி முதலியார் கல்விக்குழு – ஜமால் முகம்மது கல்லூரிக்கு பொதுக் கல்விசாலை அந்தஸ்த்தைத் தருகிறது. தங்களது அளப்பறிய தியாகங்கள் மூலம் ஒரு கேம்பிரிட்ஜாக, ஒரு ஆக்ஸ்போர்டாக கல்வி நிலையம் மிளிர்ந்திட நாடு முழுதும் இருந்து நல்ல பல பேராசிரியர்களைத் தேடித்தேடி கொண்டுவந்து எத்தனையோ செலவு செய்தாவது நம் ஜமால் முகம்மது கல்லூரிக்கு நம் ஸ்தாபகர்களான ஜனாப் ஜமால்முகம்மது சாகிபும், ஜனாப் என்.எம். காஜாமியான் ராவுத்தரும் நியமித்து தரத்தின் முன் உதாரணமாக உயர்த்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

எந்த அளவிற்கு அவர்களது பங்களிப்பு இந்த விஷயத்தில் இருந்தது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். 1957–ல் அமெரிக்காவின் டான்ஃபோர்த் பவுண்டேஷன் எனும் கல்வி – குழுமம் உலக அளவில் உயர்கல்வி தரம் பற்றி ஒரு பட்டியல் வெளியிடுகிறார்கள். இந்திய துணைக்கண்டம் (ஆறு நாடுகளை உள்ளடக்கியது) அளவில் திலைசிறந்த முப்பது தரமான கல்லூரிகளின் பெயர் பட்டியலை வெளியிடுகிறார்கள். உலகின் அப்படியான முதல் கல்லூரி அளவிலான தரப்பட்டியல் அதுதான் அதில் நம் ஜமால் முகமது கல்லூரியின் பெயர் பதினோராவது இடத்தில் இருந்தது மட்டுமல்ல, ஜமால் முகமது கல்லூரியில் கல்வி கற்று உயர்கல்விக்காக அமெரிக்கா சென்றால் ஃபெலோஷிப் மானியம் தரப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றும் அந்த அறிக்கையை நாம் இணையத்தில் வாசிக்கலாம். ஒரு கல்வி நிறுவனம் தொடங்கப்பட்ட ஆறே வருடங்களில் உலக கல்வி தரச்சான்று பெற்ற வரலாறு எங்காவது நிகழ்ந்தது உண்டா. அப்படியாயின் நமது ஸ்தாபகர்களின் உழைப்பை அர்ப்பணிப்பை விளக்க இதைவிட வேறு என்ன முன் உதாரணம் வேண்டும்.

மாலிக் கஃபூர் காலத்தில் கில்ஜி வம்சத்தாலும் பிறகு திப்புசுல்தான் காலத்தில் சுல்தான் வம்சத்தாலும் நவாப் முகம்மது அலிகான் வாலாஜா சந்தா சாகிபு என நம் திருச்சியை செதுக்கி வடிவமைத்து வெற்றி நகரமாக ஆக்கியதில் இசுலாமிய ஆட்சியாளர்கள் பெரும்பங்கு வகித்தார்கள் என்பது வரலாறு. உம்மது உல்–உம்ராவும் திப்பு சுல்தானும் இணைந்து பிரித்தானிய அயல்படைகளுக்கு எதிராக 1801–ல் தீரமுடன் போரிட்ட நான்காவது ஆங்கிலோ மைசூர் யுத்தம் மறக்கத்தகுந்ததா.

வரலாற்றின் நாயகர்கள் பலரை தோற்றுவித்த திருச்சிராப்பள்ளி கம்பேனியர் ஆட்சியில் 'சுருட்டு' (புகைப்பான்) நகரமாகியது. பின் தென்னக ரயில்வேயின் தலைமையிடத்தை அவர்கள் 1874ல் பொன்மலையில் நிறுவி தமிழகம், கர்நாடகம், கேரளா முதல் தெக்காணம் வரை புகைவண்டிப் பாதை அமைத்து திருச்சியை அதன் மையமாக்கினார்கள்.

கல்வியை பொறுத்தவரை திருச்சி நோபல் அறிஞர் சர்.சி.வி. ராமன், முன்னாள் ஜனாதிபதி ஏவுகணை நாயகன் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்காலாம், முன்னாள் ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமன், மட்டுமல்ல தத்துவமேதை பேறிஞர் டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்களும் நம் திருச்சியில் கற்றவர் என்பதை சேர்த்தால் மூன்று ஜனாதிபதிகளை

உருவாக்கிய நகரம். இவர்களோடு கவிஞர் வாலி, எழுத்தாளர் சுஜாதா என பலரை உருவாக்கி கிழக்கின் கேம்பிரிட்ஜ் (The Cambridge of the East) என புகழ்பெற்றது நம் திருச்சி. அந்த புகழுக்கான காரணிகளில் முதன்மையானதாக நம் ஜமால் முகமது கல்லூரி திகழ்ந்தது என்பதே உண்மை. ஒரு உதாரணம் சொல்கிறேன்.

2009–ல் ஈரோடு புத்தக கண்காட்சிக்கு வந்த மேதை அப்துல் கலாம் அவர்கள் திருச்சி ஜமாலில் நான் படித்த காலம் எது என கேட்டார்கள். நான் 1982 முதல் 85 வரை இயற்பியல் துறையில் கல்வி கற்றேன் என்றேன். அந்த காலகட்டத்தில் இந்தியவிலேயே ரேடார் மற்றும் ரேடியோ அலைகளுக்கான ஆண்டனா வசதி கொண்ட வான் – இயற்பியல் (Astro - Physics) ஆய்வுக்கூடம் ஜமாலில் மட்டுமே இருந்தது என அவர் என் தோளை தட்டியபோது சிலிர்த்துபோனவன் நான். இப்படி எத்தனையோ கல்வி சாதனைகளை சத்தமின்றி சந்தடி இன்றி நாம் படைத்திருக்கிறோம்.

இன்று ஆல் போல் தழைத்து உயர்ந்து நிற்கும் நமது கல்வி – கோயிலான ஜமால், சாதாரண மத்தியதர அதனினும் குறைந்த வசதிமிக்கவர்களின் கடும் உழைப்பினால் வரலாறு படைத்தது. எனது இலக்கிய பயணத்தின் உன்னத விதைகள் அங்கேதான் பேராசான்களால் விதைக்கப்பட்டது. 2014–ல் சாகித்ய அகாடமியின் குழந்தைகள் இலக்கியத்திற்கான விருது – பெற்ற அந்த நிகழ்வில் நான் படித்த என் தாய் கல்லூரியான ஜமால் முகமது கல்லூரியின் பெயரை குறிப்பிட்டார்கள். கூடவே அகாடமியின் செயலர் சீனிவாச ராவ் ஜி ஜமால் முகம்மது கல்லூரியில் பயின்றவர்களில் வழங்கும் மூன்றாவது சாகித்ய அகாடமி விருதாளர் என என்னை குறிப்பிட்டார். நான் மகிழ்ச்சியில் திளைத்த இறைவனுக்கு நன்றி தெரித்த நாளின் சாட்சியாக. ஆதிரெட்டி பாளையம் எனும் மிக சிறிய ஊர்காரன், நம் கல்லூரி ஸ்தாபகர்களின் தியாகத்தாலும் நம் மேதமை மிகு பேராசிரியர்களின் வழிகாட்டுதல்களாலும். டில்லியில் விருது பெற்றதே நம் ஸ்தாபர்களின் நோக்கமாக இன்றும் நம் கல்லூரி மிளிர்வதற்கு சாட்சி.

நான் இங்கே கல்வி கற்ற காலத்தில் எங்களது பேராசானாக இருந்த மதிப்பிற்குரிய உருது பேராசிரியர் ஹஸ்ரத் சுஹரவர்த்தி அவர்கள்தான் – திருக்குறளை தமிழிலிருந்து உருதுமொழிக்கு கொண்டுவந்து நம் கல்லூரியின் முதல் சாகித்ய அகாடமி விருதை பெற்றார்கள். நம் கல்லூரியின் முன்னாள் மாணவர் முனைவர் சிற்பி பாலசுப்ரமணியம் தலைசிறந்த அறிஞர். அவர் சாகித்ய அகாடமி விருதாளர்களில் மிகப்பிரபலமானவர். இன்று சாகித்ய அகாடமியின் தமிழகத்தின் ஆலோசனைக் குழுத் தலைவராக அவர் இருக்கிறார்.

தமிழ் இலக்கியம் மட்டுமல்ல அறிவியல் துறை, கணிதம், கணினி இயல் என நாம் சாதிக்காத துறை இல்லை. 1977–ல் ஒரு கல்லூரி பட்டியலில் சென்னை பல்கலைகழக கல்லூரிகளில் முதன்மையான ஐந்து கல்லூரிகளில் ஒன்றாக மிளிர்ந்த பெருமை நம் ஜமால் முகமது கல்லூரிக்கே உண்டு. இன்று இருபாலரும் கல்விகற்கும் தமிழகத்தின் அலிகார் அது எனில் மிகையில்லை.

நாங்கள் கல்விகற்ற அந்த பொற்காலத்தில் தான் நாங்கள் தோழர்கள் இணைந்து ‘கைக்கூலி கைவிட்டோர் கழகத்தையும் லியோ–கிளப் உட்பட பல அரிய அமைப்புகளையும் தோற்றுவித்தோம். பேரறிஞர். கி.ஆ.பே. விசுவநாதம், கவிஞர் மு.மேத்தா, ஞனபீட விருதாளர் ஜெயகாந்தன், கவிக்கோ அப்துல்ரகுமான் உட்பட பலரை களம் காண வைத்த கலை சங்கமத்தை உருவாக்கினோம். புகழ்பெற்ற ஜாலி ஜாமாலியா இசைக்குழுவில் நான் ஒரு பலகுரல் (மிமிக்ரி) ஆர்டிஸ்டாக இருந்ததை மறக்கமுடியுமா ?.

நான் கல்லூரியில் கல்வி கற்ற நாட்களில் எனது பாடம் இயற்பியல். இன்று அறிவியலைத் தமிழில் தருவதை என் வாழ்நாள் நோக்கமாக நான் ஆக்கிகொண்டதற்கு அந்த துறையில் வழிகாட்டிய பேராசான் உமர் பாஷா சார் உட்பட பலருக்குப் பங்கு உண்டு. என் நெஞ்சம் நிறைந்த தமிழ் பேராசான் மன்சூர் சார் எனது வாழ்வின் வழிகாட்டி அவரது வகுப்பு – பாடமுறையை இன்றும் மனப்பாடமாக நான் அவர் போலவே சொல்வேன். கல்வியியலில் முனைவர் பட்டம் பெற்ற அந்த நாளில் அவரைதான் மானசீகமாக நினைத்து நான் தொழுதேன். அவர் எனக்கு ‘ அபூ – தாவூத் ‘ எனும் ஒரு நூலை பரிசாக வழங்கினார். நாற்பது வருடங்கள் ஓடிவிட்டன. அதில் கைஸ் பின் ஸ அத்(ரலி) எனும் நபிகள் நாயகத்தின் (ஸல்) நிழலாக வாழ்ந்த மாமனி ஒரு குறிப்பு தருகிறார்கள். அதில்தான் சீனாவிற்கு சென்றாவது கல்வி கற்றுக்கொள் என்று கூறிய உம்மி நபியின் வாசகங்கள் வருகின்றன. நாம் கல்வி கற்க சீனாவுக்கு செல்ல வேண்டியதில்லை. நம் கல்வி ஸ்தாபகர்களான ஜனாப் ஜமால் முகம்மது சாகிபு மற்றும் ஜனாப் எம். என். காஜாமியான் ராவுத்தர் இருவரும் உருவாக்கிய கல்வியின்

மெக்காவான நம் ஜமால் முகம்மது கல்லூரி சென்றாலே போதும். அந்த வரலாற்று நாயகர்களை என்றும் மறவோம். அவர்தம் பங்களிப்பை உழைப்பை என்றும் போற்றுவோம்.

## துணைநின்ற நூல்கள்


1. Ashirbadi lal srivastava, தி அலிகார் மூவ்மெண்ட், எம்மா. ஜெய்னாபுகஸ், புதுதில்லி – 1942
2. ஆர்.பவுல் பிராஸ், சர் சையது அகமதுகானின் கல்வி வழித்தோன்றல்கள் – அலிகார் – மூவ்மெண்ட் அண்டு ஆஃப்டர் – The next Generation Library, மும்பை , 1954
3. இந்திய சுதந்திரப்போர், எல். சபாபதி (மூன்று பாகங்கள்) பூம்புகார், மதராஸ் 1961.
4. J.B.P. More, Muslim Identity and the Dravidian Factor in Tamilnadu, ஓரியண்ட் பிளாக்ஸ்வான் வெளியீடு 1982
5. ஏ.ஆர். சையது, Indian Islam and the Modernisation -1977 Social History Review Vol-XIV


* * * * *



கவிஞர் மு. மேத்தாவை நேர்காணல் செய்யும் நான்



பேரறிஞர்களான தமிழ்திரு. கி.ஆ.பெ.விசுவநாதம் மற்றும் என்னை செதுக்கிய மாமனிதர் பேராசிரியர். நயினார் முகம்மது ஆகியோருடன் நான்

# திருச்சி கண்ட சீதக்காதி

ந.மு. காஜாமியான் ராவுத்தர்
(ஹாஜி இஸ்மாயில் நசீருத்தீன்)

(நன்றி : திருச்சி– புதுகை மாவட்ட இஸ்லாமிய பெரியார்களின் சிறப்பு மலர் 1981)

1954–ம் ஆண்டு நவம்பர் மாதம் 14–ந் தேதியன்று திருச்சி நகர் முழுவதும் மாபெரும் துக்கத்தில் ஆழ்ந்தது. ஹிந்து, முஸ்லிம், கிருத்துவ மக்கள் அனைவருடைய முகங்களும் சோர்ந்து போய் விட்டன. ஏழை–பணக்காரார், ஆண்–பெண் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோருடைய கண்களும் கலங்கி நின்றன. வியாபாரங்கள், தொழில்கள், வேலைகள் யாவும் ஆங்காங்கும் நிறத்தப்பட்டன. உரத்துப்பேச வலுவின்றி, மக்கள் மெதுவாக ஒருவருக்கொருவர் செய்தியைச் சொல்லி, தங்கள் துக்கங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

வெளியூர்களிலிருந்து ரயிலிலும், பஸ்களிலும், கார்களிலும் லட்சக்கணக்கானவர்கள் திருச்சிக்கு வந்து குவிந்து கொண்டிருந்தனர். பரபரப்பாக பாலக்கரையை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். தமிழ் நாட்டின் பல பாகங்களிலுள்ள வர்த்தகர்கள், பிரமுகர்கள், ஆலிம் உலமாக்கள், அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், தேச பக்தர்கள், பல மத பெரியோர்கள், ஏழைகள், பணக்காரார்கள் ஆகியோரெல்லாம் ஜாதி, மத பாகுபாடில்லாமல் பாலக்கரையில் கடலெனத் திரண்டு கொண்டிருந்தனர். ஒவ்வொருவரின் கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது, ஒவ்வொருவர் முகத்திலும் துக்கத்தின் சாயல் படிந்திருந்தது.

வர்த்தக உலகின் மன்னர் போய் விட்டாரே என்று கலங்கினர் வியாபாரிகள்.

மனித சமுதாயத்தின் மாணிக்கம் போய்விட்டதே எனப் புலம்பினர் பிரமுகர்கள்.

ஆலிம்– உலாமக்களின் ஆதரவாளர்கள் கண் மூடிவிட்டாரே எனக் கதறினர் மார்க்கப் பெரியார்கள்.

அறிவின் சிகரத்தைப் பறிகொடுத்துவிட்டோமே எனப் பரிதவித்தனர் அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் அனைவரும்.

நாட்டுப்பற்று மிக்க நற்பெரியாரை இழந்தோமே எனத் துடித்தனர் தேச பக்தர்கள்.

கருணையின் உருவை இழந்து விட்டோமே எனக் கதறினர் பல மதப் பெரியவர்கள்.

எஜமான் எஜமான் எங்களை விட்டுப் போய்விட்டீர்களே என அலறினர் ஏழைமக்கள்.

மக்கள் சமுதாயத்தின் எல்லா தரப்பினருடைய இதயத்தைக் கவர்ந்திருந்த அந்தப் பெரியாரின் நல்லுடல், அவர் வீட்டில் வைக்கப் பட்டிருந்தது. அந்தப் பரிசுத்தமான திரு உருவத்தைக் காண மக்கள் திரள் சிரமப்படாமல் இருக்க, க்யூ வரிசை முறை ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஆனால் அடுத்த நாள் கழிந்தும் க்யூ வரிசை ஓயவில்லை.

ஜனாஸாவை அந்த வீட்டிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டது. அதைக் கண்ட ஜன சமுத்திரம் முழுவதும் ஓ,,, வென்று அலறியது ஜனாஸா தொழுகை நடத்த எந்த மாபெரும் பள்ளிவாசலிம் இடம் போதவில்லை.

இத்தனை மகத்தான சிறப்புக்குரிய நல்லவர் யார் ?

ந.மு. என்ற இரண்டு எழுத்துக்களைச் சொன்னால், நம் நாடு மட்டுமல்ல உலகம் முழுவதும் நன்கறியும். இந்த உலகின் இறவாத புகழ்பெற்ற புனிதத் திருப்பெயர்களில் ஒன்றாக ந.மு. என்ற பெயர் நிரந்தரமாக நிலைபெற்று நின்றிலங்குகிறது.

திருச்சி பாலக்ரையில் ந.மு. பள்ளிவாசல் என்பது திருச்சி நகரத்திலேயுள்ள மாபெரும் பள்ளிவாசல்களில் ஒன்று.

அந்தப் பள்ளிவாசல் அமைந்துள்ள தெருவுக்கு ந.மு. தெரு என்று பெயர்.

அந்தத் தெருவையொட்டி பாலக்கரை ஆறுவரையுள்ள பலநூறு வீடுகள், கடைகள் உள்ள சுற்றுப் பகுதிக்கு ந.மு.எஸ்டேட் என்று பெயர்.

திருச்சி செம்பட்டில் உள்ள பிரம்மாண்டமான தோல் ஷாப்புகளில் ந.மு. டானரி உலகப் புகழ் பெற்றதாகும்.

இவ்விதம் ந.மு. அவர்களின் பெயரை சப்தமிட்டுச் சொல்லும் பல நினைவுக்குரிய இடங்கள் இருந்தாலும், இவற்றையெல்லாம் விட சப்தமில்லாமல் அந்தப் புனிதப் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கும் கொடைகளை அறிவோர் பிரமிப்பு அடையாமல் இருக்க முடியாது.

திருச்சிக்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கே பெருமை தரும் விதமாக தலை நிமிர்ந்து நிற்கும் ஜமால் முஹம்மது கல்லூரியின் எல்லைகள் எவை என்றால் ஒரு பக்கத்திலிருந்து கையை நீட்டினால் அதன் எல்லைகளைச் சுட்டிக்காட்டிவிட முடியாது. கட்டியுள்ள கட்டிடங்கள் போக அது போன்று பதின்மங்கு கட்டிடங்கள் கட்டவும், ஒரு சர்வ

கலாசாலையை நடத்தவும் போதுமான அளவுக்குள்ள சுமார் 120 ஏக்கருக்கு மேல் உள்ள அந்த நிலப்பரப்பு அனைத்தும், பெருமைக்குரிய ந.மு. அவர்களின் நன்கொடையை சப்தமில்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறது.

மர்ஹூம் ந.மு. அவர்கள், தான் பிறந்த சமுதாயத்தின் உண்மையையும், உயர்வையும் உலகுக்கு உணர்த்த வேண்டும் என்பதை தம் பிறப்பின் லட்சியமாகக் கொண்டவர்கள். 'தமிழகத்தின் மத்தியில், இருதயமாக விளங்குகின்ற திருச்சிராப்பள்ளி, இஸ்லாமிய மார்க்கப் பிரசாரத்திற்குத் தலைநகரமாக அமைய வேண்டும் என்று அடிக்கடி கூறக் கூடியவர்களாக இருந்தார்கள். வாயளவில் கூறுவதோடு மாத்திரமில்லாமல் செயலளவில் அது உருவாக, பல திட்டங்களை வகுத்தார்கள்.

மர்ஹூம் ந.மு, அவர்களே இந்தப் பணிக்கான தமிழகத்திலுள்ள பிரதான ஆலிம் பெருமக்களை ஒன்று திரட்டி, தமிழ் மொழியில் திருக்குர்ஆனை மொழி பெயர்த்து, விளக்கத்தோடு அதை வெளியிட வேண்டும் என்று முதன் முதலாகச் சிந்தித்து அதைச் செயலுக்கு கொண்டுவர முயன்றவர்களுள் முதல்வர். அதற்காக இஸ்லாமிய பிரஸ் ஒன்றைத் தோற்றுவித்து முயற்சியைத் தொடங்கினார்கள். பள்ளபட்டியைச் சேர்ந்த, அரபி மொழியிலும் தமிழிலும் ஞானமிக்க, மௌலானா, மௌலவி, ஆ.கா. அப்துல் ஹமீத் (பாகவி) சாஹிப் அவர்கள் தலைமையில் இந்தப் புனிதப் பணி ஆரம்பமானது. தர்ஜுமாவும் (மொழி பெயர்ப்பும்) நப்ஸீரும் (விளக்கவுரையும் சேர்த்து ஆரம்ப இரண்டு ஜுஸ்வுக்களும், மற்றும் இரண்டொரு இஸ்லாமிய நூற்களும் வெளியிட்டதோடு, ஏதோ காரணங்களால் அந்த முயற்சி நின்றுவிட்டாலும், பிற்காலத்தில் அல்லாமா ஆ.கா. அப்துல் ஹமீது (பாகவி) சாஹிப் அவர்கள், திருக்குர்ஆன் ஷரீபைப் பூரணமாகத் தமிழில் தந்து, தமிழ் மொழிக்குள்ள குறையை அகற்ற, மர்ஹூம் ந.மு. அவர்களின் துவக்கமே காரணமாக இருந்தது என்பதுதான் உண்மையாகும். அந்த நல்ல உள்ளத்தின் நோக்கத்தை, காலதாமதமானாலும், இறைவன் பூர்த்திசெய்துவிட்டான் என்பதை முஸ்லிம் சமூகம் உணரவே செய்கிறது.

இது போன்றே, திருச்சியில் 'மஜ்லிசுல் உலமா' என்னும் பேரில், ஆலிம்களின் மாபெரும் சபையைத் தோற்றுவித்து மார்க்கக் கல்வியிலும், பொது அறிவிலும், மற்றும் இஸ்லாமிய கலா ஞானங்களிலும், தமிழகத்துக்கே ஒரு கலங்கரை விளக்காக திருச்சி, ஒளி பாய்ச்சி வழிகாட்ட வேண்டும் என்று 'மஜ்லிசுல் உலமா'வுக்காக 120–க்கும் மேற்பட்ட பெரும் நிலப்பரப்பை அன்பளிப்பாக வழங்கினார்கள். பல்லாயிரக்கணக்கான பனை மரங்கள் நிறைந்து நின்ற அந்த நிலப்பரப்பை வழங்குகின்றபோது, அவர்கள், 'இந்த மரங்களெல்லாம் வெட்டப்பட்டு விடலாம். ஆனால் ஒவ்வொரு மரத்துக்கும் ஒரு ஆலிம் (அறிஞன்) இங்கிருந்து உற்பத்தியாக ஆண்டவன் கிருபை செய்ய வேண்டும்' என்றார்கள்.

அந்த நல்ல உள்ளத்துடைய 'துவா'வை, அல்லாஹ் ஒன்றுக்கு நூறாக அங்கீகரித்து விட்டான் போலும். அந்த நிலப்பரப்பில், மர்ஹூம் ஜமால் முகம்மது சாஹிபவர்கள் 'மஜ்லிசுல் உலாமா'வுக்கான அழகியதொரு கட்டிடத்தை எழுப்பினார்கள். இன்று ஜமால் முஹம்மது கல்லூரியின் முகப்பாக நின்று, இஸ்லாமிய கலாச்சாரத்தைப் பிரதிபலித்து வருவதோடு நில்லாமல், 1950–ம் ஆண்டிலிருந்து இன்றுவரை பல்லாயிரம் அறிஞர்களை உற்பத்தி செய்து அனுப்பிக் கொண்டிருக்கும் மாபெரும் கலைக்கூடமாகவும் திகழ்கிறது.

பொது அறிவுத் துறையில், 'காஜாமியான் ஹைஸ்கூல்' என்றும், மார்க்கத்துறையில், மஜ்லிசுல் உலமா அனாதை சிறுவர் இல்லம்' என்றும் 'ஜமியா அன்வாருல் உலூம்' என்ற அரபிக் கல்லூரி என்றும், 'கல்லூரி பள்ளிவாசல்' என்றும் அந்த நிலப்பரப்பில், பள்ளிவாசல்களும், மதரஸாக்களும், கல்விக் கூடங்களுமாக உற்பத்தியாகிக் கொண்டே இருக்கின்ற அதிசயத்தை அறிவுலகம் பார்த்து வியப்படைந்து கொண்டு இருக்கிறது.

'ந.மு' என்ற இரண்டு எழுத்துக்களால் குறிப்பிடப்படும் மதிப்புக்குரிய அந்தப் பெரியாரின் பெயர் காஜாமியான் என்பதாகும். 'ந.மு' என்பது அவர்களின் தந்தையார் ந.முகம்மது மியான் ராவுத்தர் அவர்களைக் குறிக்கும் முன்னெழுத்துக்களாகும. தோல் பதனிட்டு வர்த்தகம் செய்யும் தொழிலில் முஹம்மது மியான் ராவுத்தர் அவர்கள் தம் காலத்தில் குறிப்பிடத்தக்கவர்களாகச் சிறப்புற்று விளங்கினார்கள். அவர்களின் அருந்தவப் புதல்வராக 1880–ம் ஆண்டில் பிறந்த காஜா மியான் அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் அருளிய அறிவுத்திறமை, உழைக்கும் ஆற்றல், கருணைத் தன்மை, மார்க்கப்பற்று, நாட்டுப்பற்று ஆகிய அனைத்தின் காரணமாக, அவர்கள் தம் தந்தையாரின் தொழிலைச் சிறப்புச் செய்து தந்தையின் காலத்திலேயே புகழ்பெற்று, பெற்றவர்களைப் பூரிக்க வைத்தார்கள்.

தோல் பதனிடும் தொழிலில் உலக நாடுகளே அதிசயிக்கும் வண்ணம் பல புதுமைகளைப் புகுத்திய பெருமை காஜா மியான் ராவுத்தர் அவர்களையே சாரும். கூட்டுத் தோலுக்குப் பாடம் செய்யும்போதே செயற்கை வண்ணங்களை சேர்த்து அதை, இயற்கை வண்ணம்போல மாற்றி, தோல் அழிந்தாலும் இறுதிவரை வண்ணம் குன்றாத ஒரு தனிரக உற்பத்தியை இந்தியாவிலேயே கண்டுபிடித்த நிபுணராக அவர்கள் புகழ் பெற்றார்கள். தமது தயாரிப்புக்குரிய இயந்திரங்கள் இல்லாத காலத்தில்,

மரக்கட்டையினாலும், களி மண்ணினாலும் தாமே தம் தொழிலுக்குரிய இயந்திரங்களைச் செய்து அற்புதம் விளைவித்துக் காட்டினார்கள். இந்திய மார்க்கெட்டில் வினியோகிக்க முடியாத அளவுக்கு அவர்களின் உற்பத்திக்குக் கிராக்கிகள் நிறைந்திருந்த நேரத்தில், வெளி நாட்டுக்காரார்கள் போட்டி போட்டுக் கொண்டு உச்சவிலை கொடுக்க முன் வந்து நின்றனர். தம் தந்தையின் முன் எழுத்துக்களான N.M. என்ற முத்திரையுடன் அவர்கள் தயார் செய்த தோல்கள் ஒன்றுக்குப் பத்து விலையாக உலக மார்க்கெட்டில் விற்பனையாகி பெரும் பொருளும், புகழும் வந்தடையப் பெற்றவர்களானார்கள்.

பொருளும் புகழும் சேரச்சேர, அவையனைத்தையும் தனக்கு மட்டிலும் சொந்தமாக்கிக் கொள்ளாமல், தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும், தான் பிறந்த சமூகத்துக்கும், பிறந்த பொன்னாட்டுக்கும், வாரி வாரிக் கொடுத்தார்கள்.

மர்ஹூம் காஜாமியான் ராவுத்தர் அவர்களால் நிறைவேற்றப் பட்ட ஏழைத் திருமணங்கள் பல்லாயிரம், செய்த தான தர்மங்கள் பல லட்சம், செய்த உதவிகள் பல கோடி. அவைகளைக் கணக்கெடுக்க முடியாது. இளமையிலேயே தேச சுதந்திர ஆர்வமிக்க அவர்கள், அந்நிய துணியைப் பகிஷ்கரித்து கதர் உடுத்துபவராக இருந்தார். காந்தியடிகள் விடுத்த வேண்டுகோளுக்கு தன்னை அர்ப்பணித்து அக்காலத்தில் 50 ஆயிரம் செலவில் கதர் ஆலையைத் தோற்றுவித்து, அதனால் ஏற்பட்ட மாபெரும் நஷ்டத்தையும் பொருட்படுத்தாதவர்களாக இருந்தார்கள். அந்தக் காலத்தில் இந்தியாவின் பல தேச பக்தர்கள் காஜாமியான் ராவுத்தர் அவர்களின் உதவியைப் பெறக் கூடியவர்களாக இருந்த ரகசியம் மூத்த தலைவர்கள் பலருக்கு இன்றும் தெரியும். பெயரளவுக்கு காங்கிரசின் பொருளாளராக இருந்து தம் சொந்தப் பொருளை வாரிக் கொடுத்தார்கள்.

சேஷாயி மின் உற்பத்தி கம்பெனியை திருச்சியில் தொடங்க முதன் முதலில் 50 ரூபாய்க்கு பங்கு வாங்கிய பெருமை காஜாமியான் ராவுத்தர் அவர்களையே சாரும். அவர்கள் முன்னின்று மின் உற்பத்தி கம்பெனியை திருச்சியில் நிலைநாட்டினார்கள் என்பது மிகைபடிக் கூறுவதல்ல.

திருச்சியில் உள்ள ஹஜ்ரத் நத்ஷஹர்வலி தர்கா சில தனிப்பட்ட நபர்களின் சொந்த சொத்தாகப் பயன்பட்டுவந்ததை எதிர்த்து, தம் சொந்தப் பொறுப்பில் பெருந் தொகையை செலவு செய்து நீதி மன்றத்தில் வழக்காடி அதை முஸ்லிம் சமுதாயத்தின் பொதுச் சொத்தாக்கிய பெருமை மர்ஹூம் காஜாமியான் ராவுத்தர் அவர்களையே சாரும்.

தர்காவை மீட்டுக் கொடுத்து அதன் எஸ்ஸிகியூட்டிவ் டிரஸ்டியாக தாமே பொறுப்பேற்று, பல அபிவிருத்திகளையும் செய்தளித்தார்கள்,

மர்ஹூம் காஜாமியான் ராவுத்தர் அவர்களின் பூர்வீகம், உமறுப் புலவர் பிறந்த எட்டையபுரம் – நாகலாபுரத்தைச் சேர்ந்ததாக இருந்த காரணத்தினாலோ என்னவோ, தமிழ் இலக்கியத் துறையில் மிகவும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்கினார்கள். தன் நண்பர்களின் மத்தியில் சீறாப் புராணத்துக்கு அபூர்பவமான விளக்கங்களை அளிப்பவராக மட்டுமின்றி, இஸ்லாமியப் புலவர்களின் பல அபூர்வ பாடங்களில் ஞானமிக்கவர்களாகவும் விளங்கினார்கள்.

ஒரே சமயத்தில் உலகிலேயே சிறந்த தொழில் மன்னராகவும், மார்க்கப் பற்று மிகுந்த மேதையாகவும், தேசியப் பற்று நிறைந்த தேசியவாதியாகவும், இலக்கிய நிபுணராகவும், கொடையாளிக்கெல்லாம் மிகப் பெரிய கொடையாளியாகவும் விளங்கிய, திருச்சி கண்ட சீதக்காதி மர்ஹூம் காஜாமியான் ராவுத்தர் அவர்களின் பிரிவை யாரால்தான் சகிக்க முடியும் ?

பெருமதிப்பிற்குரிய காஜாமியான் ராவுத்தர் அவர்கள் மக்களை விட்டுப் பிரிந்து போய்விட்டார்கள் என்று சொல்வது சம்பிரதாய வார்த்தைகள்தான் அவர்கள் உண்மையில் பிரிந்து போய்விடவில்லை.

இம்மண்ணில் பிறந்தவர்களுக்கெல்லாம் ஒரு நாள் மரணம் வந்தே தீரும் என்ற தத்துவத்தைப் பெரியார் காஜாமியான் அவர்கள் எப்போதோ தோல்வியுறச் செய்துவிட்டார்கள். அவர்கள் மரணத்தை வென்று விட்டார்கள். அவர்கள் நிரந்தரமாக நம்மிடையே இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். உலகம் உள்ளளவும் அவர்கள் இருந்து கொண்டேதான் இருப்பார்கள்.

வள்ளல் காஜாமியான் ராவுத்தர் அவர்களின் புத்திரச் செல்வங்களாக (மர்ஹூம்) அப்துல் ஸமத் அவர்கள், இன்றைய ஜமால் முஹம்மது கல்லூரியின் செக்ரெட்டரி ஜனாப் N.M.K. அப்துல் காதர் அவர்கள், தொழிற் துறைகளில் சிறந்து விளங்கும் N.M.K. அப்துல் காலிக் ராவுத்தர், N.M.K. அப்துல் ஜலீல் ராவுத்தர் ஆகியோர் தம் தந்தையார் விட்டுச் சென்ற கடமைகளைப் பூர்த்தி செய்யும் நல்லவர்களாகத் திகழ்ந்து வருகிறார்கள்.

* * * * *

# Contribution of Jamal and N.M. Family in the promotion of Education in Madras and Trichy



**M.J. Jamal Mohamed**
Treasurer, JMC, Trichy,
son of Haji. MJM Abdul Gafoor

In the later part of the 18th century some prominent Muslims of the undivided Madras Presidency had a social awakening and thought about the future of our Muslim community and also were concerned about the plight of our Muslim orphans. So they decided to start an organization and chose Trichy which was centrally located in the map of Tamil Nadu to promote education apart from Madras.

Haji. M.Jamal Mohideen, a leading tanner and exporter of leather hides and skins from Madras started the Madarasa Jamalia Arabic College in 1898 at Perambur, Madras at a cost of Rs. 40,000/- and he also gifted some properties for the Jamalia Madarasa. J P Moore a freelance writer in his book says that the opening of the Jamalia Madarasa was a turning point in the lives of the Dravidian Muslims (Tamil Speaking). Thus he fulfilled the owe he has taken that “If Allah gives me wealth, I will start a Madarasa for the benefit of our Community” in his early age when he was a school student. The students studying in Madarasa Jamalia were given free boarding, education and lodging. The medium of instruction was Arabic.

In 1910, Jamal Mohamed his first son got a permission from the Sheikul Islam at Constantinople (Turkey) to teach general English, Science and Geography to the students of the Madarasa Jamalia along with the regular Moulavi and Fazil Courses.

## MAJLISUL ULAMA

காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியை விட்டு விலகிய அப்துல் ஹமீத் கான், ஜமால் முஹம்மது சென்னை ராஜதானி முஸ்லிம் லீகின் தலைவராயிருந்த காலம் முழுவதும் அதன் செயலாளர்களில் ஒருவராயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஜமால் முஹம்மது தமிழ் முஸ்லிமாக இருந்தாலும், அவர் சென்னை ராஜதானி முஸ்லிம் லீகை முற்றிலும் தமிழ் முஸ்லிம் நிறுவனமாக்க ஒருபோதும் விரும்பவில்லை என்பதற்குச் சான்று, ஒரு பிரபல உருதுபேசும் முஸ்லிம் தலைவரான அப்துல் ஹமீத் கான் அவருடைய செயலாளராகப் பணிபுரிய இணங்கியது. மாறாக, ஜமால் முஹம்மது உருதுபேசும் முஸ்லிம்கள் உள்ளிட்ட எல்லா முஸ்லிம் பிரிவுகளின் ஒத்துழைப்பையும் வேண்டினார். ஜமால் முஹம்மது உருது பேசுவோருடன் நெருங்கிய உறவு வைத்துக் கொள்ள விரும்பினார் என்பதற்கு இன்னொரு சான்று, அவர் உருது பேசுபவரான அப்துல் வஹாப் புகாரியை 1930ஆம் ஆண்டில் மதரஸா ஜமாலியாவுக்குத் தலைவராக நியமித்தமை ஆகும்.

அவர் வட்டமேஜை மாநாட்டில் ஆற்றிய உரையின் மூலம் தம்மை ஓர் ஆர்வமிக்க தேசியவாதியின் எல்லாத் தன்மைகளும் கொண்டவராக நிருபித்துக் கொண்டார். அவர் ஒரு முழுமையானக தேசியவாதியாகவும் காங்கிரஸ் ஆதரவாளராகவும் கருதப்பட்டாலும், ஒவ்வொரு காங்கிரஸ் உறுப்பினரும் வழக்கமாக ஏற்றுக்கொள்ளும் உறுதிமொழிகளில் ஒரு போதும் கையெழுத்திடவில்லை. அவர் இந்து–முஸ்லிம் ஒற்றுமையில் தீவிர நம்பிக்கை கொண்டவர். மதச் சச்சரவுக்கு அடிப்படைக் காரணம் வேறெதையும்விடக் கல்வியின்மையே என்பதை அவர்கண்டார். ப.எண்.123,123.

* * * * * * * * * * *

ஓராண்டுக்குப் பிறகு, தனித்தொகுதிகள் நாட்டுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் நல்லதல்ல என்று கருதிய வங்காள முஸ்லிம் லீக் அவற்றைக் கோருவதில்லை என்று முடிவு செய்தது. கூட்டுத்தொகுதிக்கு ஆதரவாக அது நிறைவேற்றிய தீர்மானத்தைச் சொன்னை ராஜதானி முஸ்லிம் லீகும் ஏற்றுக்கொண்டது. ஒதுக்கப்பட்ட இடங்களுடன் கூடிய கூட்டுத் தொகுதிகள்,தனித்தொகுதிகளைவிட இந்து–முஸ்லிம் நலன்களுக்கும் நாட்டுநலனுக்கும் உகந்தவை என்ற கருத்தை ஜமால் முஹம்மது பலமுறைகள் வெளியிட்டிருந்தார். இவ்வாறு, ராஜதானியில் கூட்டுத் தொகுதிகளின் பிரபலமான ஆதரவாளர்களில் ஒருவராக இருந்ததன்மூலம், ஜமால் முஹம்மது அனைத்திந்திய முஸ்லிம் லீகின் அரசியல் கருத்துகளுக்கு முரண்பட்ட கருத்துகளை வெளியிட்டார்.

கூட்டுத்தொகுதிகளின் சார்பில் யாகூப் ஹசன் சேட் கொண்டிருந்த ஆர்வத்துக்கு இணையான ஜமால் முகம்மதின் ஆர்வம், அவரை ஒரு காங்கிரஸ் அனுதாபி முஸ்லிமாகக் காட்டலாம். ஆனால்,சேட் இறுதியில் காங்கிரசில் சேர்ந்தபின்னும், ஜமால் முஹம்மது ராஜதானி முஸ்லிம் லீகின் தலைவராகத் தொடர்ந்ததோடு தம் சுதந்தரக் கருத்துகளிலும் உறுதியாக இருந்தார். இது லகின் மேலும் அதன் ஆதாரங்களின்மேலும் அவருக்கிருந்த முழுமையான ஆதிக்கத்தைக் காட்டுகிறது. 1930களின் தொடக்க ஆண்டுகளில் சென்னை முஸ்லிம்களின் ஒருபிரிவு, முஸ்லிம் நலன்களுக்கு எதிராக அனைத்திந்திய முஸ்லிம் லீகை எதிர்ப்பதாக ஜமால் முகம்மதின் மேல் குற்றஞ்சாட்டினார்கள்: என்றாலும் காங்கிரஸ்காரர்;கள் பொதுவாக அவரைத் தனிப்பட்ட முறையில் விமரிசிப்பதைத் தவிர்த்தனர். ராஜதானி முஸ்லிம் லீக், முஸ்லிம் நலன்களுக்கெதிராகத் தொடர்ந்து செயற்பட்டால், அது அனைத்திந்திய முஸ்லிம் லீகிலிருந்து துண்டிக்கப்படும் என்ற அச்சுறுத்தலும் அதிகப் பயனளிக்கவில்லை. இதுதான் ஜமால் முஹம்மதும் அவரது தலைமையில் ராஜதானி முஸ்லிம் லீகும் மேற்கொண்ட சுதந்தர அணுகுமுறையாக இருந்தது.

சென்னை ராஜதானி முஸ்லிம் லீகைப் பொறுத்தவரையில் அவரும் அவருடைய கொள்கைகளும் அதிக எதிர்ப்புக்குள்ளானதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம். ராஜதானியின் உருதுபேசாத முஸ்லிம்கள் அவருக்களித்த கணிசமான ஆதரவுதான். அவர் உருதுபேசுபவர்களை எந்த வகையிலும் விரோதித்துக் கொள்ளாமலிருப்பதிலும் கவனமாயிருந்தார். அவர் மொழி மற்றும் பண்பாட்டு வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், ராஜதானியின் அனைத்து முஸ்லிம் பிரிவுகளின் தலைவராகத் தம்மைக் காட்டிக்கொண்டார். எனினும், அவரால் ராஜதானி முஸ்லிம் லீகை முற்றிலும் தம் செல்வாக்கில் வைத்திருக்க இயலவில்லை. அந்த அமைப்பில் அவரையும் அவருடைய கொள்கைகளையும் எதிர்ப்பவர்கள் இருந்தனர்.

ஜமால் முஹம்மதுக்குமுன் ராஜதானி முஸ்லிம் லீக்கின் தலைவராக இருந்தவர் சையீத் முர்த்துஸா: இவர் தெற்கே திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து கூட்டுத்தொகுதிகளுக்காக எதிர்ப்புக் குரல் எழுப்பினார். அங்கு நடைபெற்ற ஒரு கூட்டத்தில், பகுத்தறிவும்

அனுபவமும் முஸ்லிம்களிடம் தனித்தொகுதிகள் கோரச் சொல்கின்றன என்று முர்த்துஸா அறிவித்தார். இன்னொரு முக்கிய முஸ்லிம் பிரமுகரான பி.கலிஃபுல்லாஹ்வும், இந்திய வாக்குரிமைக் கமிட்டியின் முதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டபோது தனித் தொகுதிகளை ஆதரித்தார்.

தாம் தலைவராகிய சூழ்நிலையை நன்கு உணர்ந்திருந்த ஜமால் முஹம்மது ஒருபோதும் தம் தமிழ் அடையாளத்தை வலியுறுத்தவில்லை. அவர் தம்மை ஒரு தமிழ் முஸ்லிம் தலைவராக அன்றி, முஸ்லிம்களின் தலைவராகக் காட்டிக்கொள்ள விரும்பினார். அப்துல் ஹமீத் கான் என்ற உருது பேசும் சிறந்த துணைவர் ஒருவர் அவருக்குக் கிடைத்தார். அவர் எப்போதும் அனைத்து முஸ்லிம்களின் சார்பாகப் பேசினார்: நடந்து கொண்டார். 1930–களின் தொடக்க ஆண்டுகளில் தமிழரல்லாத முஸ்லிம்கள், அவரது தமிழ் முஸ்லிம் சார்பு பற்றிப் புகார் செய்ய எந்த சந்தர்ப்பமும் நேரவில்லை. ப.எண்.124,125.

* * * * * * * * * *

அவர் தம்மைத் தமிழ் முஸ்லிம் என்று மட்டுமல்ல, தென்னிந்தியர் என்றோ, திராவிட முஸ்லிம் என்றோகூட வலியுறுத்திக் கொள்ளவில்லை. தமிழ் முஸ்லிம்களுக்கும் நாத்திக சுயமரியாதை இயக்கத்துக்குமிடையே நெருங்கிய உறவு இருந்தாலும், திராவிட இயக்கங்களாலும் அவற்றின் கொள்கைகளாலும் அவர் சற்றும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அனைத்திந்திய முஸ்லிம் லீக் தனித்தொகுதிகளை விரும்பினாலும், அவரும் சென்னை ராஜதானி முஸ்லிம் லீகும் கூட்டுத்தொகுதிகளையே ஆதரித்தனர். அவர் எப்போதும் இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். மரபுசார்ந்த முஸ்லிம் மேட்டுக்குடி வர்த்தகர்களும் முஸ்லிம் சமூகமும், தங்கள் நலனுக்காகவும் வளத்துக்காகவும் இந்துப் பெரும்பான்மையைச் சார்ந்திருந்தனர்: எனவே இந்து–முஸ்லிம் ஒற்றுமையின்றேல் முஸ்லிம்களின் நிலை சீர்குலைந்துவிடும். ஆகையால், முஸ்லிம்களுக்கு இந்த ஒற்றுமை தேவை என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே, தென்னிந்தியாவில் அமைதியான மதஉறவுச் சூழலை நிலைநிறுத்த அவர் மிகவும் பாடுபட்டார்.

பெரும்பான்மையான முஸ்லிம்கள் இந்தக் கட்சிகளில் எதையும் ஆதரிக்கவில்லை. உருதுபேசும் முஸ்லிம் தலைவர்கள் பெருமளவு ஆதிக்கத்துக்குட்பட்ட தனி முஸ்லிம் கட்சிகளையே அவர்கள் விரும்பியதாகத் தோன்றுகிறது. இந்தத் தலைவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தபோது, லீகின் முக்கியத்துவம் மிகவும் தாழ்ந்திருந்த நிலையில், ஒருவராலும் அதிகம் கவனிக்கப்படாமலேயே ஜமால் முஹம்மது சென்னை ராஜதானி முஸ்லிம் லீகின் தலைவரானார். இந்த நிகழ்ச்சி ராஜதானி முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமையவிருந்தது. – ப.எண். 126.

* * * * * * * * * *

ஜமால் முஹம்மது தம்மை ஒரு தமிழ் முஸ்லிமாக வலியுறுத்திக் கொள்ளாவிட்டாலும், அவர் சென்னை ராஜதானி முஸ்லிம் லீகின் தலைவராகியதே ராஜதானியின் அரசியலில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாயிற்று. இதன்பிறகு தமிழ் முஸ்லிம்களின் அரசியல் உணர்வு முற்றிலும் விழித்தெழுந்தது. மதங்களைப் பற்றியும் தங்கள் அரசியல் ஈடுபாடு பற்றியும் அவர்களது நம்பிக்கை வளர்ந்தது. அவர்கள் மென்மேலும் மாகாண அரசியலில் ஈடுபடத் தொடங்கினர். இன்னொரு பிரபல தமிழ் முஸ்லிமும் ஜமால் முகம்மதின் உறவினருமான கே.டி.எம்.அஹ்மது இப்ராஹீம், இந்தக் காலகட்டத்தில் சென்னை ராஜதானி முஸ்லிம் லீகின் செயலாளர்களில் ஒருவராக இருந்தார். இது, ராஜதானியின் மிகப் பழமையான முஸ்லிம் அரசியல் நிறுவனத்தில் தமிழ் முஸ்லிம்களின் வளர்ந்து வந்த ஈடுபாட்டுக்குச் சான்றாகும். 1934ஆம் ஆண்டிலிருந்து உருவாகிக்கொண்டிருந்த முஸ்லிம் அரசியல் சக்திகளின் ஒருங்கிணைப்புடனும், வரவிருந்த அரசியல் சட்டச் சீர்திருத்தங்களுடனும், முன்னணி அரசியலில் தமிழ் முஸ்லிம்களின் இந்த வளர்ந்துவந்த பங்கேற்பு ஓர் உடன் நிகழ்வாக அமைந்தது.

முஸ்லிம் வள்ளல்தன்மையின் வரலாற்று மரபுக்கேற்ப ஜமால் முஹம்மது, தென்னிந்தியா முழுவதிலும் தம் ஈகைத் தன்மைக்காகவும் தரும சிந்தைக்காகவும் பிரபலமாயிருந்தார் என்பது இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கது. மதரஸா ஜமாலியா மூலம் இஸ்லாமிய ஆராய்ச்சியின் வளர்ச்சிக்காக அவரது பங்களிப்பு பரவலாக அறியப்பட்டிருந்தது. முஸ்லிம்களின் நன்மைக்காக இஸ்லாம் பற்றி உரையாற்ற சுலைமான் நத்வி, டாக்டர் கவிஞர் சர் முஹம்மது இக்பால் போன்ற பிரபல இஸ்லாமிய அறிஞர்களை அவர் வரவழைத்தார். அவர் எல்லா முஸ்லிம்

பிரிவுகளுடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள இந்த நடவடிக்கைகள் உதவின. அவர்களும் அவரது தலைமையை ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு அவரது மேட்டுக்குடி அந்தஸ்துக்கும் சாதாரண முஸ்லிம்களின் நிலைக்குமிடையே பாலம் அமைக்கப்பெற்றது. – ப.எண். 127.

* * * * * * * * * *

சென்னை ராஜதானி முஸ்லிம் லீகின் மறுஎழுச்சியோடு கூடவே கட்சியில் ஆதிக்கத்துக்காக ஒரு தீவிர உட்கட்சிப் பூசல் நிகழ்ந்தது. சையீத் முர்த்துஸாவுக்குப் பிறகு தலைமைப்பொறுப்பை ஏற்ற ஜமால் முஹம்மது படிப்படியாகக் கட்சியைத் தம் முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்.

1937ஆம் ஆண்டுத் தேர்தல்களை முன்னிட்டு அமைக்கப்பட்ட லீகின் மத்திய பார்லிமெண்டரி குழுவில், ராஜதானியின் நான்கு பிரபல முஸ்லிம்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். அவர்கள் ஜமால் முஹம்மது (ராஜதானி லீகின் தலைவர்), அப்துல் ஹமீத் கான் (சென்னைமேயர்), சையத் முர்த்துஸா(மத்திய சட்டசபை உறுப்பினர்) மற்றும் மலபாரைச் சேர்ந்த பி.போக்கர் ஆவர்.

தமிழ் முஸ்லிமான ஜமால் முஹம்மது, தமிழ் முஸ்லிம்களின் குறிப்பாகத் தென்மாவட்டங்களின் தமிழ் முஸ்லிம்களின் – ஆதரவைப் பெற்றிருந்தார். அவர் சென்னையைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதி, பொதுவாக மற்ற முஸ்லிம் தலைவர்களுக்குத் தலைநகர் சென்னையில் பலமான ஆதாரம் இல்லை. அவர்கள் பெரும்பாலும் வெளியூர்க்காரர்கள். அவர்களது செல்வாக்கும் பெருமளவு அந்தந்தப் பகுதிகளில் மட்டுமே பரவியிருந்தது. மாகாணத்தின் அரசியல் அதிகாரத்தின் மையமான சென்னையில் வாழ்ந்ததால் ஜமால் முகம்மதால் மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களுடன் எளிதில் தொடர்புகொள்ள முடிந்தது. தவிர, அவர் ஒரு பிரபல வர்த்தகராக இருந்ததால் தேர்தல் காலத்தில் கட்சியின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவர். – .ப.எண். 130

லீகுக்கு முக்கிய எதிர்ப்பு நவாப் சி. அப்துல் ஹக்கீம் மூலம் உருவாகத் தொடங்கியது. தம் சொந்த மாவட்டமான வடஆர்க்காட்டில் முஸ்லிம் பொதுமக்களின் பெரும் ஆதரவைப் பெற்றவரும் செல்வாக்குள்ள வர்த்தகருமான அப்துல் ஹக்கீம், முஸ்லிம் அரசியலில் நிகழ்ந்து கொண்டிருந்த அண்மைக்கால நிகழ்ச்சிகளால் தம் அரசியல் எதிர்காலத்துக்கு நேரக்கூடிய பாதிப்புகளை உணர்ந்து, ஜமால்முஹம்மது மற்றும் அப்துல் ஹமீத் கானின் ஆதிக்கத்துக்குட்பட்ட லீகுக்குப் போட்டியாக 1936 ஜூலை 24ஆம் நாள் முஸ்லிம் முற்போக்குக் கட்சியை நிறுவுவதன் மூலம் ஒரு தனிப்பட்ட போக்கை மேற்கொண்டார். தாராளக் கொள்கைகள் கொண்ட, அதே சமயத்தில் முஸ்லிம்களின் நலன்களை வளர்க்கக்கூடிய எந்தக் கட்சியுடனும் சட்டசபையில் ஒத்துழைத்துச் சீர்திருத்தங்களைச் செயற்படுத்த இந்தக்கட்சி தயாராயிருந்தது.

அப்துல் ஹக்கீம் மீது கொண்ட கோபத்தால் மைய பார்லிமெண்டரி குழுவின் சென்னை உறுப்பினர்கள், இத்தகைய எதிர்ப்பால் ஒரு மாகாண பார்லிமெண்டரி குழு அமைப்பது பற்றிய தங்கள் முடிவிலிருந்து பிறழவில்லை. அவர்கள் இந்தக் குழுவை அமைப்பதற்காக, ராஜதானியின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த, பலவகை அரசியல் சிந்தனைகளைக் கொண்ட, முஸ்லிம்களின் ஒரு கூட்டத்தை 1936 ஆகஸ்ட் 2ஆம் நாள் கூட்டி முஸ்லிம் அரசியல் ஒற்றுமையை வலுப்படுத்தும் ஒரு பரந்த உபாயத்தை மேற்கொண்டனர்.

ஜமால் முகம்மதைத் தலைவராகவும், அப்துல் ஹக்கீம், சையீத் முர்த்துஸா, அப்துல் கரீம், உப்பி சாகிப் மற்றும் உமரலியைத் துணைத் தலைவர்களாகவும், அப்துல் ஹமீத் கான், போக்கர் சாகிப் மற்றும் கே.டி.எம். அஹ்மது இப்ராகிமைச் செயலாளர்களாகவும், காக்கா முஹம்மது இஸ்மாயிலைப் பொருளாளராகவும் கொண்ட மாகாண பார்லிமெண்டரி குழு ஆகஸ்ட் 2ஆம் நாள் கூட்டத்திலேயே நிறுவப்பட்டது. பக்தீம் அப்துல் காதர், யீஃபா–உல்–முல்க் ஹாஜி, ஹக்கீம் சையீத் மஹ்மூது அரஃப், ஏ.ஜி. அப்துல்ரஹீம், யாகூப் ஹசன்சேட், பி.கலிஃபுல்லாஹ், கே.பி.வி.எஸ். முஹம்மது மீரா ராவுத்தர், எம். முஹம்மது இஸ்மாயில் (காயிதே மில்லத்), அப்துல் சத்தார் இஸ்லாக் சேட், ஈரோட்டைச் சேர்ந்த கான் சாகிப் கே.ஏ. சூக் தாவூத், கர்நூலைச் சேர்ந்த அப்துல் சலாம் கான்,அனந்தபூர்வாசியான முஹம்மது ரஹமத்துல்லாஹ் ஆகியோர் இதன் செயற்குழு உறுப்பினர்களாயிருந்தார்கள். இந்தக் குழுவின் மற்றும் மலையாள முஸ்லிம்களின், ஆதிக்கம் தெளிவாகத் தெரிகிறது. – ப.எண். 131.

* * * * * * * * * *

மைய பார்லிமெண்டரி குழுவில், சென்னையின் பிரதிநிதிகளாயிருந்த நால்வரில் இருவர் உருது

பேசுபவர்கள். ஆனால், மாகாணக் குழுவில் தமிழ் முஸ்லிமான ஜமால் முகம்மதின் தலைமையில், உருது பேசாத முஸ்லிம்கள் ஆதிக்கம் பெற்றனர். மாகாணக் குழு அமைவதற்கு வெகுமுன்பாகவே ஜமால் முஹம்மதுடன் ஒரு கூட்டணி அமைப்பதாக இருந்த அப்துல் ஹமீத்கான் இப்போது மலபாரின் பி. போக்கருடனும், ஜமால் முகம்மதின் உறவினராகிய கே.டி. எம். அஹ்மத் இப்ராகிமுடனும் மூன்று செயலாளர்களில் ஒருவராக அந்தஸ்து குறைந்த பதவியைப் பெற்றார். ஐந்து துணைத்தலைவர்களில் ஒருவரான சையீத் முர்த்துஸாவுக்கு உண்மையில் பெரிய அதிகாரம் எதுவுமில்லை. ஜமாலும், ஜின்னாவும்கூட சென்னை முஸ்லிம்களை ஒன்றுபடுத்த எவ்வளவோ முயற்சிகள் செய்தும்கூட, அப்துல் ஹக்கீமும் சேட்டும் தங்கள் நிலையில் உறுதியாயிருந்ததால் அந்தமுயற்சிகள் தோல்வியுற்றன. – ப.எண். 132

* * * * * * * * * *

சென்னை ராஜதானி முஸ்லிம் லீகின் தலைவர் ஜமால் முஹம்மது, வணிகத் தொகுதியில் அடைந்த தோல்வி இந்தத் தேர்தல்களின் ஒரு முக்கிய அம்சமாகும். ஆச்சரியப்படத்தக்க வகையில், ஜமால் முஹம்மது ஒரு முஸ்லிம் தொகுதியில் போட்டியிடவில்லை. அதற்குப் பதில–ாகப் பொதுவான வணிகத் தொகுதியில் போட்டியிட்டார். இதன்மூலம் அவர் ஒருவேளை தாம் ஒரு முஸ்லிம் கட்சியின் தலைவராயிருந்தாலும், எல்லாவற்றுக்கும் மேலாக, கூட்டுத் தொகுதிகளில் நம்பிக்கை கொண்ட காங்கிரசிடம் சிறிது அனுதாபம் கொண்ட ஒரு தேசியவாதியாகத் தம்மை நிருபித்துக்கொள்ள விரும்பியிருக்கலாம். ஆனால், அவரது துரதிருஷ்டம், சுயேச்சை வேட்பாளராக நின்ற டி. டி. கிருஷ்ணமாச்சாரியால் பெருத்த அளவில் தோற்கடிக்கப்பட்டார். இந்து காங்கிரஸ் வாக்காளர்கள், வகுப்புவாதத்தால் தூண்டப்பட்டு அவருக்கெதிராக வாக்களித்ததாக நம்பப்படுகிறது.

ஆனால், அப்துல் ஹக்கீமுடனும் முஸ்லிம் முற்போக்குக் கட்சியுடனும் அவருக்கு தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட கருத்துவேறுபாடு அவர் இவ்வாறு ஒரு பொதுத்தொகுதியில் போட்டியிட்டதற்குக் காரணமாயிருந்திருக்கலாம். தேர்தலில் ஜமாலுக்கு எதிராக அப்துல் ஹக்கீமை நிறுத்தத்தாம் விரும்பியதாகவும், ஆனால் ஜமால் அப்துல் ஹக்கீமுடன் நேரடியாக மோத விரும்பவில்லை என்றும் அப்துல் லத்தீஃப் ஃபரூக்கி கூறுகிறார். இதற்குப் பதிலாக, ஹக்கீம் தமக்கெதிராக வர்த்தகத் தொகுதியில் போட்டியிடாமல் விலகிக்கொள்வதாக ஜமால் சொன்னாராம். அப்துல் ஹக்கீம் வடஆர்க்காடு முஸ்லிம் தொகுதியிலிருந்து போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், முஸ்லிம் முற்போக்குக் கட்சி ஜமால் முஹம்மதுக்கு எதிராக டி. டி. கிருஷ்ணமாச்சாரியை நிறுத்தி ஜமாலைத் தோல்வியுறச் செய்தது. ஆகவே, ஜமால் முஹம்மதின் தோல்விக்குக் காரணமே முஸ்லிம் முற்போக்குக் கட்சியின் சூழ்ச்சிதான். இந்து வாக்காளர்கள் வகுப்புரீதியாக வாக்களித்தது அல்ல என்பது சாத்தியமே. எப்படியும் இது ஒரு முஸ்லிம், பெரும்பான்மையாக முஸ்லிம் அல்லாதார் உள்ள தொகுதியிலிருந்து தேர்தலில் வெற்றிபெற இயலாது என்ற கருத்தை முஸ்லிம்களிடம் தோற்றுவித்தது.

ஜமால் முஹம்மது தோல்வியுற்றாலும் தேர்தல்கள் – குறிப்பாகத் தமிழ் மாவட்டங்களில் – லீகுக்கு வெற்றியளித்தன. முஸ்லிம்களின் தனிக் கட்சிக்காகத் தென்னிந்திய முஸ்லிம்களின் ஆதரவுப் போக்கு நிறுவபெற்றுவிட்டது. – ப.எண். 133,134

* * * * * * * * * *

லீகின் இந்த வெற்றியை நிச்சியமாகத் தமிழ் முஸ்லிம்களின் அரசியல் தனித்தன்மையின் வலியுறுத்தலாகக் கொள்ளலாம். இந்த வலியுறுத்தலின் விளைவாகவும் தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் பொதுவாக வளம் பெற்றிருந்தாலும் அவர்கள் ஒருநாள் ராஜதானியின் முஸ்லிம் அரசியலில் ஒரு முக்கியப் பங்கு ஏற்பார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதுதான். 1937 தேர்தல்களில் தமிழ் மாவட்டங்களில் முஸ்லிம் லீகின் பெருமளவு வெற்றி இந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்ததாகத் தோன்றுகிறது. ஆனால், இந்தத் தனித்தன்மை வலியுறுத்தல் உருது பேசும் முஸ்லிம்களுக்கெதிராகத் தூண்டப்பட்டதாகக் கொள்வது தவறாகும். மாறாக, ஜமால் முஹம்மது சென்னையின் உருது பேசும் முஸ்லிம்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறப் பாடுபட்டதோடு, பெரும்பாலும் உருதுபேசும் முஸ்லிம்களின் நிறுவனமான அனைத்திந்திய முஸ்லிம் லீகின் தேசியத் தலைமையையும் ஏற்றுக்கொண்டிருந்தார். தேர்தலில் அவருடைய முக்கியப் போட்டியாளர் தமிழ் முஸ்லிமான அப்துல் ஹக்கீம்தான்: உருது முஸ்லிம் எவருமல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும். சென்னை ராஜதானியில் உருது முஸ்லிம் தலைமையின் வீழ்ச்சிக்குக் காரணம், அவர்கள் சிறுபான்மையாக இருந்தமையும், செல்வச் செழிப்பு மிக்க

தமிழ் முஸ்லிம்களின் அரசியல் ஊக்கத்தின் வளர்ச்சியுமே தவிர வேறெதுவுமில்லை.

ஜமால் முஹம்மதும் பெரிய வள்ளலாக இருந்தார். மதச் செயற்பாடுகளில் அக்கறை எடுத்துக்கொண்டார். ராஜதானியின் முக்கிய முஸ்லிம் மதரஸாவான மதரஸா ஜமாலியா, அவரது நிர்வாகத்திலிருந்தது. இந்த மதரஸாவின் தலைவரான அப்துல் வஹாப் புகாரி 1937ஆம் ஆண்டில் சென்னை கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். யாகூப் ஹசன் சேட் தாமே ஒரு மௌலவியாக இருந்ததோடு, பல மதநூல்களையும் இயற்றினார். அவற்றில் ஒன்றான குர்ஆன் விளக்கவுரை நிஜாமால் வெளியிடப்பட்டது. தென்னிந்தியாவில் நிறைய மதரஸாக்கள் இருந்தாலும், வடஇந்தியாவில் மக்களுக்கு மதத்தலைமை அளிக்க தேவ்பந்த், ஃபிரங்கி மஹல் போன்ற உலமாப் பள்ளிகள் இருந்தாற்போல், தென்னிந்தியாவில் பள்ளிகள் இல்லை. ஆகவே இந்த முஸ்லிம் வர்த்தகர்கள் முஸ்லிம்களின் மதம் சார்ந்த வாழ்க்கையில் கொண்டிருந்த ஈடுபாடு, அவர்களுடைய தலைமைக்கு மதம் சார்ந்த அந்தஸ்தையும் அளித்தது. – ப.எண். 136.

* * * * * * * * * *

சுயமரியாதை இயக்கம் இந்தித் திணிப்புப் பிரச்சினையில், முஸ்லிம் லீக் காரர்களுக்கும் மற்ற முஸ்லிம்களுக்குமிடையே பிளவு உண்டாக்குவதில் ஒருவகையில் வெற்றிபெற்றது. இனம் மற்றும் மொழியின் அடிப்படையில் தமிழ் முஸ்லிம்கள் தங்களின் தனித்தன்மையை வலியுறுத்திக்கொள்ள அது உதவியது. ஜமால் முஹம்மது தமிழ் முஸ்லிமாக இருந்தாலும், அவர் எப்போதும் மொழிவேறுபாடின்றி, அனைத்து முஸ்லிம்களின் ஒற்றுமையை நிலைநிறுத்த முயன்று வந்தார். முஸ்லிம் லீகில் அவரது ஆதிக்கத்தைத் தென்னிந்திய முஸ்லிம் அரசியலில் தமிழ் முஸ்லிம்களின் செல்வாக்காகக் கொள்ள முடியாது. மொழியின் அடிப்படையில் அரசியலில் தமிழ் முஸ்லிம்களின் தனித்தன்மையின் திடீர் வலியுறுத்தலுக்கு வழிவகுத்தவர் கலிஃபுல்லாஹ்தான் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தாலும் அதன் உதவியுடனும் கலிஃபுல்லாஹ் உருவாக்கிய போக்கு ஒரு நிலையான கூறு ஆகிவிட்டது. அது சுந்தரத்துக்குப் பின் தென்னிந்திய அரசியலில் இன்னும் வலுவாக வெளிப்பட்டது. –ப.எண்.158, 159.

* * * * * * * * * *

ஈ.வெ. ராமசாமி தமது தனிநாட்டுக் கோரிக்கைக்குச் சென்னை ராஜதானி முஸ்லிம் லீகின் ஆதரவை எதிர்பார்த்திருக்கலாம். ஆனால், அது ஜின்னாவின் தலைமைக்குட்பட்ட இந்திய முஸ்லிம் லீகின் கிளைதான். ஆகவே, அது இவ்வளவு முக்கியமான ஒரு பிரச்சினையில் தனிப்பட்ட முறையில் செயற்பட இயலாது. ஜமால் முஹம்மதே திராவிட இயக்கத்தின் லட்சியங்களில் அதிக ஆர்வம் காட்டவில்லை. கலிஃபுல்லாஹ்வை முக்கியப்பிரதிநிதியாகக்கொண்ட தமிழ் முஸ்லிம் பிரிவு ஈ.வெ.ராமசாமியின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து ஆதரித்து வந்திருந்தாலும், அது திராவிட நாடு கோரிக்கையை ஆதரிக்க முன்வரவில்லை. ஆனால், ஈ.வெ. ராமசாமி முஸ்லிம்களின் இந்த நிலைப்பாட்டால் மனம் தளர்பவரல்லர். அவர் தொடர்ந்து தம் கோரிக்கைக்கு முஸ்லிம் ஆதரவைப் பெற முயன்றார்: முஸ்லிம் லீகின் கூட்டங்களில் கலந்து கொண்டார். பட்டுக்கோட்டை தாலுகா முஸ்லிம் மாநாட்டில் அவர் அறிவித்தார். – ப.எண்.160,161.

* * * * * * * * * *

விடுதலை தினத்துக்கு எதிர்ப்பு காங்கிரசிடமிருந்து மட்டும் வரவில்லை. லீக் உறுப்பினராகச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பசீர் அஹ்மது சையீத், ஜின்னாவின் கோரிக்கையை வெளிப்படையாக விமர்சித்தார். காங்கிரஸ் மந்திரிசபைகளின் ராஜிநாமா பற்றிய லீகின் கருத்தை அவர் முற்றிலும் எதிர்த்தார். தாம் ஜின்னாவை அவரது வீட்டில் முன்னேற்பாட்டின் படி சந்தித்து இந்தப் பிரச்சினையை விவாதித்ததாக அவர் அறிவித்தார். லீகின் அதிகாரபூர்வமான நிலைப்பாட்டுக்கெதிராக பசீரின் இந்த நடவடிக்கைகள், பல சென்னை முஸ்லிம் லீக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஆனால், ஜமால் முஹம்மது இத்தகைய நிகழ்ச்சிகளைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை. மாறாக, மந்திரிசபை ராஜிநாமா அவருக்கும் உற்சாகமளித்ததாகத் தெரியவில்லை. இந்தியா இரண்டாவது உலகப்போருக்குள் இழுத்து வரப்பட்டபோது, அதை எதிர்த்துக் காங்கிரஸ் மந்திரிசபைகள் ராஜிநாமா செய்யவேண்டும் என்பது காந்தியின் முடிவு: அதை அவர் மாற்றிக்கொள்வதற்கு ராஜகோபாலாச்சாரியோடு ஜமால் முஹம்மதும் சேர்ந்து முயற்சி செய்தார். சென்னை லீகின் தலைவர் என்ற முறையில் அவர் எடுத்துக்கொண்ட கடைசி நடவடிக்கைகளில் இந்த முயற்சியும் ஒன்றாகும். இந்திய

விடுதலைக்குப்பின் முஸ்லிம் லீகீன் தலைவரானவரும் ஜமால் முஹம்மதின் நெருங்கிய உறவினருமான முஹம்மது இஸ்மாயில் இந்தச் செய்தியைத் தெரிவித்துள்ளார். ஜமால் முஹம்மது, ஜின்னாவின் அந்த சமயத்து அரசியல் நடவடிக்கைகளுடன் முற்றிலும் முரண்பட்டார் என்பதை இந்த ஒரு செய்கையே நன்கு நிரூபிக்கிறது.

இதற்கு மாறாக, ராஜதானி முஸ்லிம் லீகின் இரண்டாம் நிலைத் தலைவராயிருந்த அப்துல் ஹமீத் கான், ஜின்னாவின் வழியைப் பின்பற்றியதாகத் தெரிகிறது. ஜின்னாவின் பலமான ஆதரவாளர்களாயிருந்த கலிஃபுல்லாஹ், ஈ.வெ. ராமசாமி இவர்களுடன் சேர்ந்து அவர் கூட்டங்களிலும் பேசத் தொடங்கிவிட்டார். – ப.எண். 162.

* * * * * * * * * *

இந்திய முஸ்லிம்களின் கோரிக்கைகளையும் குறைகளையும் ஒட்டு மொத்தமாகச் சித்தரித்த பீர்பூர் அறிக்கை, அவர்களுடைய பொருளாதாரத் தேவைகளிலேயே கவனம் செலுத்தியிருந்தது. ஆனால், அனைத்திந்திய முஸ்லிம் லீகும் ஜின்னாவும், இந்து ஆதிக்கத்துக்குட்பட்ட இந்தியாவில், முஸ்லிம்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்ற முடியாது என்று ஒருக்கால் நினைத்திருக்கலாம். ஆகவே, அவர்கள் மதத்தைத் தேசியத்தின் அடிப்படையாகக் கருதினர். இதன்விளைவாக, முஸ்லிம்கள் ஒரு தனி தேசிய இனமாகக் கருதப்பட்டனர். – ப.எண். 163.

* * * * * * * * * *

1940 ஏப்ரல் 19ஆம் நாள் ராஜதானி முழுவதும் பாகிஸ்தான் தினம் கொண்டாடப்பட்டது. ஈ.வெ. ராமசாமியும் மற்ற நீதிக்கட்சித் தலைவர்களும் இந்தக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டனர். இக்கொண்டாட்டங்களில் ஜமால் முஹம்மதின் பங்கு என்ன என்று தெளிவாகத் தெரியவில்லை. எப்படியும் முஸ்லிம் அரசியல் தீவிரமடைந்து கொண்டிருந்த இந்தக் காலத்தல், அவர் தம் தொழில் நஷ்டம் மற்றும் உடல் நலச் சீர்குலைவு காரணமாகத் தமிழ்நாட்டின் உட்புறத்திலுள்ள திண்டுக்கல்லுக்குப் போய் அங்கே தம் மீதிநாட்களைக் கழித்தார். அவர் இவ்வாறு சென்னை அரசியலிலிருந்து திடீரென்று வெளியேறியபின், ஜின்னாவின் தாக்கத்தால் சென்னை முஸ்லிம் லீகே தீவிர நிலைப்பாடு உள்ளவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. – ப.எண். 164.

* * * * * * * * * *

1941 மார்ச் மாதத்தில் பாகிஸ்தான் தினத்தைக் கொண்டாடுவதற்காகச் சென்னையிலுள்ள பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற கூட்டத்தில், அப்போது சென்னை மாவட்ட முஸ்லிம் லீகின் தலைவராகிவிட்ட எம்.முஹம்மது இஸ்மாயில், இந்தியா ஒருபோதும் ஒரே நாடாகவோ ஒரே அரசாகவோ இருந்ததில்லை என்றும், மொழி அல்லது பண்பாட்டைவிட மதம் ஒரு மனிதனின் வாழ்க்கையை அதிகம் பாதிப்பதால் நாட்டை அடிப்படையில் பிரித்துவிடலாமென்றும் கூறினார். அப்துல் ஹமீத் கான், அப்துல் லத்தீஃப் ஃபருக்கி போன்ற பிரபல தென்னிந்திய முஸ்லிம் தலைவர்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்துக்கு ஜமால் முஹம்மது வராதது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜமால் முஹம்மது அரசியலில் இருந்து ஓய்வு பெற்றது தென்னிந்தியாவில் முஸ்லிம் அரசியல் தீவிரப்பட உதவியதோடு, சென்னை ராஜதானி முஸ்லிம் லீகில் உட்கட்சிப் போட்டியையும் தோற்றுவித்தது. அப்துல் ஹமீத் கான் கட்சியின் தலைமைப் பதவியை இலக்குவைத்தார். ஆனால், ஆந்திரத்தைச் சேர்ந்த உருதுபேசும் வழக்குரைஞரான எஸ்.எம். பாபாவும் அப்பதவிக்குப் போட்டியிட்டார். ஜமால் முஹம்மதின் தொண்டர்களின் ஆதரவோடு அவர் ஜமால் முஹம்மதுக்குப் பிறகு தலைவரானார். அப்துல் ஹமீத் கான் தமிழ் முஸ்லிம் தலைவர்களிடமிருந்து போதிய ஆதரவு பெறவில்லை என்பது தெளிவாயிற்று. அவர் கலிஃபுல்லாஹ்வின் ஆதரவைப் பெற்றிருக்கலாம். ஆனால், கலிஃபுல்லாஹ் அரசியலிலிருந்து விலகிப் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் திவானாகிவிட்டார். அப்துல் ஹமீத் கான் தமிழ் முஸ்லிம்களை உருது கற்கும்படி கேட்டுக்கொண்டிருந்தார். தமிழ் முஸ்லிம்களின் ஆதரவைப் பெறவும் எல்லாத் தென்னிந்திய முஸ்லிம்களுக்கும் தலைவராகத் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளவும் அப்துல் ஹமீத்கானுக்கு மொழி எப்போதும் ஒரு தடையாக இருந்து வந்தது. எனினும், பாகிஸ்தான் கோரிக்கையும் அனைத்திந்திய முஸ்லிம் அரசியலில் உருதுவின் ஆதிக்கமும்மற்ற முஸ்லிம் தலைவர்கள் மேல் தம் ஆதிக்கத்தை வலியுறுத்திக் கொள்ள அவருக்கு இன்னொரு வாய்ப்பளித்தது. ஆனால், ஜமால் முஹம்மது ஆதரவாளர்கள் அவர் தலைவராவதைத் தடுத்துவிட்டார்கள். இந்தச் சமயத்தில் தென்னிந்திய முஸ்லிம் அரசியல் மறுபடியும் எஸ்.எம். பாபா போன்ற உருதுபேசும் முஸ்லிம் தலைவர்களின் கைக்குப் போய்விட்டதாகத் தோன்றுகிறது. ஆனால் பாபா, ஜமால் ஆதரவாளர்களின் ஒத்தாசையில்லாமல் அவர் ஒன்றும் செய்திருக்க முடியாது என்பதை மறக்கக்கூடாது. – ப.எண். 165.

அடுத்த லீக் மாநாட்டை 1941 ஏப்ரலில் நடத்த விடுத்த அழைப்பை ஜின்னா அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார். 19 சிறப்பு ரயில்களில் ஆயிரக்கணக்கானவர் சென்னை வந்தனர். நுழைவுக்கட்டணமும் என்றுமில்லாத அளவுக்கு வசூலாயிற்று. மாநாட்டுக் கூட்டங்களில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் சென்னையின் முஸ்லிம் தொண்டர்படை கவனித்துக் கொண்டது. ஜமால் முஹம்மதின் மகனான எம். ஜே. ஜமால் முஹையதீன் ராஜதானியின் ஒட்டுமொத்தமான தொண்டர் படையின் தலைவராகவும், எம்,ஏ. ஹஃபீஸ் என்பவர் சென்னை நகரத் தொண்டர்களின் தலைவராகவும் பணியாற்றினார். – ப.எண். 166.

* * * * * * * * * *

ஜமால் முஹம்மதின் தலைமையில் செய்யப்பட்ட சீரமைப்பு, முஸ்லிம் லீகை மாகாண மட்டத்திலும் அடிநிலைத் தொண்டர் மட்டத்திலும் சிறப்பாக நிர்வகிக்கப்பட்ட கட்சிகளில் ஒன்றாகச் செய்திருந்தது. இதனால் அது ராஜதானியின் அரசியலில் ஒரு வலுவான செல்வாக்கையும் பங்கையும் பெற்றது. முஸ்லிம்களின் குறைகளைத் திட்டமிட்ட முறையிலும் வலுவாகவும் முன்வைக்க அதனால் முடிந்தது. முஸ்லிம் அரசியல் மென்மேலும் தீவிரப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் இந்தச் சீரமைப்பு நிகழ்ந்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டமும் காங்கிரஸ் ஆட்சியில் முஸ்லிம்களின் குறைகளும் ஓரளவு இந்தத் தீவிரமாதலுக்குக் காரணமாயிருந்தாலும், பெரும்பான்மையான முஸ்லிம்களைப் பாகிஸ்தான் கோரும்படித் தூண்டுமளவுக்குச் சென்னை முஸ்லிம் அரசியலைத் தீவிரப்படுத்த அவை போதுமான காரணங்களால் எப்படியும் சென்னை முஸ்லிம் லீகின் தலைவர் என்ற முறையில் ஜமால் முஹம்மது இத்தகைய தீவிரப் படுதலை விரும்பவில்லை.

அரசியல் அரங்கத்திலிருந்து ஜமால் முஹம்மதின் திடீர் வெளியேற்றம், சென்னை முஸ்லிம் அரசியலில் முக்கிய விளைவுகளைக் கொணர்ந்தது. அது தீவிரமாதலுக்கு ஆதரவாயிருந்த அப்துல் ஹமீத் கான் போன்றவர்களை முன்னுக்குக் கொண்டுவந்தது. – ப.எண். 181.

* * * * * * * * * *

ஜமால் முஹம்மது அரசியலிலிருந்து விலகியபிறகு, சென்னை முஸ்லிம் லீக் ஜின்னாவின் பாகிஸ்தான் கொள்கைக்கு விரைவில் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டது. 1940ஆம் ஆண்டுவரை அரசியலில் மிதவாதிகளாயிருந்த ஜமால் முஹம்மதின் பெரும்பாலான ஆதரவாளர்கள் இரவோடு இரவாக முஸ்லிம் அரசியலில் தீவிரமாகி விட்டார்கள். இதற்கு முக்கியக் காரணம் வடஇந்திய நிகழ்ச்சிகள்தாம். ஜமால் முஹம்மதின் தீவிர ஆதரவாளர்களில் ஒருவரும், சென்னை ராஜதானி முஸ்லிம் லீகின் செயலாளரும், லீக் காங்கிரசுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று எப்போதும் விரும்பியவருமான அல்லாப்பிச்சை, கட்சிக்குள் பாகிஸ்தானுக்கு ஆதரவு வளர்ந்துவரும் நிலையில், தாம் ஒன்றும் செய்ய இயலாதவராக 1943ஆம் ஆண்டில் கட்சியைவிட்டு விலகினார். அவர் பின்னர் லீகின் 'இரட்டை இனக்' கொள்கையின் தீவிர எதிர்ப்பாளரானார். – ப.எண். 185.

* * * * * * * * * *

பாபாவால் ஒருபோதும் ஒரு சக்திவாய்ந்த தலைவராகச் செயற்பட இயலவில்லை. ஜமால் ஆதரவாளர்களின் ஆதரவால்தான் அவர் தலைவராகியிருந்தார். உருது பேசுபவரான பசீர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. கட்சியில் ஆதிக்கத்தைக் கைப்பற்றும் போராட்டத்தில் உருது பேசுபவர்களுக்கும் தமிழ்ப் பேசுபவர்களுக்குமிடையே அப்பட்டமான பிளவு ஏற்படுத்துவதைத் தற்காலிகமாக வேனும் தடுத்து வைத்தது.

பாபா 1945ஆம் ஆண்டுவரை தலைவராயிருந்தாலும், சென்னை மாவட்ட முஸ்லிம் லீகின் தலைவர் முஹம்மது இஸ்மாயில் போன்ற ஜமால் ஆதரவாளர்களாலேயே, கட்சி நடத்தப்பட்டு வந்தது. 1943ஆம் ஆண்டிலேயே, அனைத்திந்திய முஸ்லிம் லீகின் தலைவராக ஜின்னாவை முன்மொழிந்த சென்னை ராஜதானி முஸ்லிம் லீகின் முக்கியமான கூட்டத்துக்கு இஸ்மாயில்தான் தலைமை வகித்தார். தம் உண்மையான எதிரி பாபா அல்ல, மாகாண முஸ்லிம் லீகின் பதவி வகித்துக்கொண்டு பாபாவைத் தலைவராக்கியவர்கள்தாம் என்பதை அப்துல் ஹமீத் கான் உணர்ந்திருந்தார். – ப.எண். 186.

* * * * * * * * * *

திராவிடக் கழகம் தேர்தல்களில் போட்டியிடவில்லை. காங்கிரஸ், முஸ்லிமல்லாத தொகுதிகளில் அபரிமிதமான பெரும்பான்மை பெற்றது. ஆனால், எல்லா முஸ்லிம் தொகுதிகளையும், லீக் எளிதாகக் கைப்பற்றியது. காங்கிரஸ், மஜ்லிஸ் மூலம், அத்தொகுதிக்குள் ஊடுருவ முடியவில்லை. சட்டசபைக்கான 29 முஸ்லிம் தொகுதிகளில் 13ஐ லீக் எதிர்ப்பின்றிக் கைப்பற்றியது. மேல்சபையின்

தொகுதிகளில் 4 இவ்வாறே லீகுக்கு எதிர்ப்பின்றிக் கிடைத்தன. மீதி 16 சட்டசபைத் தொகுதிகளிலும் 3 மேல்சபைத் தொகுதிகளிலும் லீகின் எதிர்ப்பு வேட்பாளர்கள் படுதோல்வி அடைந்தனர். இவர்களில் பெரும்பாலோர் வைப்புத் தொகையை இழந்தனர். காங்கிரஸ் ஆதரவுடன், குறிப்பாகத் தமிழ் மாவட்டங்களிலும் மலபாரிலும், லீகை 12 தொகுதிகளில் எதிர்த்த மஜ்லிஸ், மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையில் தோற்கடிக்கப்பட்டது. – ப.எண். 189

* * * * * * * * * * *

ஜமால் முஹம்மது தலைவராயிருந்தபோது, அப்துல் ஹமீத் கான் அவருக்கு ஏறக்குறைய அடுத்த நிலையில், கட்சியில் இடமளிக்கப்பட்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால், ஜமாலின் நெருங்கிய உறவினரான இஸ்மாயில் இந்த விஷயத்தில் ஜமாலைப் பின்பற்றவில்லை. அவர் கட்சித் தலைமையை அடைந்தபிறகு, அவருக்குத் துணையாக எவரையும் நியமிக்கும் பிரச்சினை எழவில்லை. கட்சித் தலைமைக்கு இஸ்மாயிலின் ஒரே போட்டியாளராயிருந்த ஹமீத்கான் தந்திரமாக வெளியேற்றப்பட்டு, இஸ்மாயில் அதிகாரமிக்கவராக ஆகிவிட்டார். இஸ்மாயிலை ஜமாலின் அரசியல் அணுகுமுறை மற்றும் மரபின் வாரிசாக நிச்சயமாகக் கொள்ளமுடியாது. ஜமாலின் பதவிக் காலத்தில், உருது பேசும் தலைவர்களுக்குத் தென்னிந்திய முஸ்லிம் அரசியலில் கணிசமான செல்வாக்கு இருந்தது. ஜமால் இயற்கையாகவே அவர்களுடைய விருப்பங்களுக்கும் ஆதிக்க ஆசைகளுக்கும் அதிக அளவில் அனுதாபம் காட்டியதாகத் தோன்றுகிறது.

எதிர்பாராத வகையில், பாகிஸ்தான் போராட்டத்தின் உச்சக்கட்டத்தில், சென்னையில் இஸ்மாயிலின் தலைமைக்குச் சவால் விடக்கூடிய, அரசியல் செல்வாக்கு வாய்ந்த, உருதுபேசும் முஸ்லிம் தலைவர் ஹமீத்கானைத்தவிர, வேறெவரும் இல்லை. ஹமீத் கான் ஓரங்கட்டப்பட்டபிறகு, இஸ்மாயில் தங்குதடையற்ற ஆதிக்கம் பெற்றார். தலைவருக்கு அடுத்தபடியாக அப்துல் லத்தீஃப் ஃபரூக்கி போன்ற ஒரு உருது பேசும் முஸ்லிமை நியமிக்கும் பிரச்சினை, ஜமால் முஹம்மதின் காலத்தில் எழுந்தாற்போல் இப்போது எழவில்லை. தலைவருக்கு அடுத்தநிலையில் யாராவது இருந்திருந்தால், அவர் இஸ்மாயிலின் சகோதரரும், கட்சியின் செயலாளரும், இஸ்மாயிலின் நெருங்கிய ஆலோசகருமான கே.டி.எம். அஹ்மது இப்ராஹிம்தான் என்று தோன்றுகிறது. இது நிச்சயமாக ஜமால் முஹம்மதின் செயல்முறைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இருவருமே தமிழ் முஸ்லிம்களாயிருந்தாலும், இஸ்மாயில் ஒரு தனிப்பட்ட செயல்முறையை மேற்கொண்டார். இதில் தமிழ் முஸ்லிம்களுக்கு முன்பைவிட அதிக செல்வாக்கு கிடைத்தது என்பதில் ஐயமில்லை. ஜமால் முஹம்மதின் காலத்தில் இருந்தது போலன்றி, உருது முஸ்லிம்கள் தென்னிந்திய முஸ்லிம் அரசியலில், தவிர்க்க முடியாததாக இருந்த தமது செல்வாக்கை இப்போது இழந்துவிட்டிருந்தனர். ஆனால், இந்தக் காலகட்டத்தில் தமிழ் முஸ்லிம்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்த அரசியலில் உருது முஸ்லிம்களை எதிர்த்தார்கள் என்பதில்லை. இஸ்மாயில் எப்போதும் புத்திசாலித்தனமாக உருது பேசும் முஸ்லிம்களுடன் நட்பை வளர்த்துக்கொண்டார். மேலும், ஃபரூக்கி, ரசாகான்போன்ற பல உள்ளூர் உருதுப் பிரபலங்களின் ஆதரவையும் ஆலோசனைகளையும் பெற்றார். எனினும், இவர்களில் எவரும் ஹமீத் கானைப் போல முக்கியமானவர்களோ செல்வாக்குடையவர்களோ அல்லர்.

எனினும், ஒரு புறம் சென்னை முஸ்லிம் லீகில் பதவி வகித்தவர்களுக்கும் மறுபுறம் அப்துல் ஹமீத் கான் மற்றும் அவருடைய ஆதரவாளர்களுக்குமிடையே ஏற்பட்ட சச்சரவு, ஜமால் முஹம்மது அரசியலிலிருந்து விலகியபிறகு, கொள்கை வேறுபாட்டால் ஏற்பட்டது அல்ல என்பதைக் குறிப்பிடுவது அவசியம். இத்தகைய வேறுபாட்டைக் காட்டும் சான்று எதுவும் ஆவணங்களில் இல்லை. கருத்து வேற்றுமையாலோ செயல்முறையில் வேறுபாட்டாலோகூட இந்தச் சச்சரவு எழவில்லை. ஆனால், ஏற்கனவே நாம் கண்டதுபோல, இது சம்பந்தப்பட்டவர்களின் தனிப்பட்ட ஆசைகள் காரணமாக, கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் ஆதிக்கம் பெறுவதற்காக, ஏற்பட்ட சச்சரவேயாகும்.ப.எண்.191,192.

ஜமால் முஹம்மதின் தலைமையிலான சென்னை ராஜதானி முஸ்லிம் லீக், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை. மாறாக, அவர் இந்துஸ்தானி, இந்தியாவின் பொதுமொழியாக வேண்டும் என்று விரும்பினார். உண்மையில் தமிழ் முஸ்லிம்களின் சார்பில் இப்போராட்டத்தை நடத்தியவர், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் லீக் தலைவரான பி. கலிஃபுல்லாஹ்தான். உண்மையில், கலிஃபுல்லாஹ் சுயமரியாதை இயக்கத்துடன் தம்மை இணைத்துக்

கொள்வதன் மூலம், தென்னிந்தியாவில் மொழி அடிப்படையிலான தமிழ் முஸ்லிம் தனித்துவத்தை வலியுறுத்தினார். இந்த மொழி சார்ந்த பரிமாணம் 1947–ஆம் ஆண்டுக்குப் பின்மேலும் அழுத்தமாக வெளிப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில், தமிழ் முஸ்லிம் தலைவர்கள் அரசியலில், ஜமால் முஹம்மது வகுத்த வழியைப் பின்பற்றியவர் என்று கூறுவது சரியல்ல. பிற்காலத்தில் தமிழ் முஸ்லிம் தலைவர் கலிஃபுல்லாஹ் வகுத்த வழியையே, பல வியங்களில் பின்பற்றினர் என்ற கருத்தே மிகவும் பொருத்தமாகும்.

ஜமால் முஹம்மதும் கலிஃபுல்லாஹ்வும் அரசியலிலிருந்து விலகிய பிறகு, ராஜதானியின் முஸ்லிம் அரசியலில் பாகிஸ்தான் கோரிக்கை முக்கியத்துவம் பெற்றுவிட்டது. ஈ.வெ.ராமசாமி பாகிஸ்தான் கோரிக்கைக்குத் தம் ஆதரவுக்குப் பதிலாகத் தம் திராவிடஸ்தான் கோரிக்கைக்கு ஜின்னாவின் ஆதரவைப் பெற முயற்சி செய்தார். – ப.எண். 204.

* * * * * * * * * *

1920களில் உருதுபேசும் தலைவர்களுக்கு இடையில் ஏற்பட்ட பரஸ்பர பூசல்களும், உருதுபேசும் முஸ்லிம் லீகுக்கும் சென்னை ராஜதானி முஸ்லிம் லீகுக்குமிடையே ஏற்பட்ட பிளவும், செல்வச் செழிப்புள்ள தமிழ் முஸ்லிம் வர்த்தகரான ஜமால் முஹம்மது 1930 ஆம் ஆண்டில் சென்னை லீகின் தலைமையைக் கைப்பற்ற உதவின. அவர் தலைமைப் பதவி பெற்றது, சென்னை முஸ்லிம் லீகின் அதிகாரத்தைப் பெறுவதற்காக உருது மற்றும் தமிழ் முஸ்லிம்களுக்கிடைப்பட்டபோட்டியின் விளைவால் அல்ல.

ஜமால்முஹம்மது பத்தாண்டுகள் சென்னை லீகின் தலைவராயிருந்தாலும், ஒருபோதும் தம் தமிழ்த்தன்மையை வலியுறுத்த விரும்பவில்லை. அவர் பிராமணரல்லாதாரின் திராவிட இயக்கங்களிலும் அனுதாபம் கொள்ளவில்லை. அவர் இந்து – முஸ்லிம் ஒற்றுமையையும் இந்துஸ்தானியையும் ஆதரித்தார். அவர் காங்கிரசோடு உறவை முற்றிலும் முறித்துக்கொள்ள விரும்பவில்லை. இந்த விஷயத்தில் அவர் கட்சியில் அநேகமாகத் தமக்கு அடுத்த நிலையிலிருந்த உருதுபேசும் முஸ்லிம் தலைவரான அப்துல் ஹமீத் கானின் பலத்த ஆதரவைப் பெற்றார்.

ஜமால் முஹம்மது எளிதில் சென்னை ராஜதானி முஸ்லிம் லீகின் தலைவரானதும், அப்பதவியில் பத்தாண்டுகள் தொடர்ந்திருந்ததும் தென்னிந்திய முஸ்லிம் அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியே. அவர் தலைவராயிருந்த காலத்தில், தமிழ் முஸ்லிம்கள் முன்னைவிட அதிகத் தன்னம்பிக்கையுடன், மென்மேலும் ராஜதானியின் அரசியலில் ஈடுபட்டனர்.

ஜமால் முஹம்மது தலைவராயிருந்தபோது, உருதுபேசும் அப்துல் ஹமீத் கான் கட்சியில் அவருக்கு அடுத்த நிலையில் இருந்தார். ஆனால், இஸ்மாயில், அரசியலில் ஜமால் முஹம்மதின் வழியைப் பின்பற்றவில்லை. உருதுபேசும் முஸ்லிம் தலைவர் ஒருவரைத் தமக்கு அடுத்த நிலையில் கட்சியில் வைத்துக்கொள்வது, தேவையென்று அவர் நினைக்கவில்லை. எனினும், அப்துல் லத்தீஃப் ஃபருக்கி போன்ற பல பிரபல உருது முஸ்லிம் தலைவர்கள் அவரை ஆதரித்தனர். – ப.எண். 205.

* * * * * * * * * *

ஜமால் முஹம்மது தலைவராயிருந்த காலத்தில், பல உருது பேசும் முஸ்லிம் தலைவர்களுக்குக் கட்சியில் நிறைய செல்வாக்கு இருந்தது. அவர்கள் அரசியலில் ஊக்கமாகப் பணியாற்றினர். ஆனால், முஹம்மது இஸ்மாயிலின் வருகைக்குப் பிறகு அவர்களது செல்வாக்கும், அரசியலில் அவர்களது பங்கேற்பும் கணிசமாகக் குறைந்துவிட்டன. இந்த வியத்தில் மட்டுமாவது, இஸ்மாயிலின் செயல்முறை ஜமால் முஹம்மதின் செயல் முறையை ஒத்திருக்கவில்லை. எப்படியாயினும் இந்த சமயத்திலிருந்து தென்னிந்திய முஸ்லிம் அரசியலில், தமிழ் முஸ்லிம் ஆதிக்கம் உண்மை நிகழ்வு ஆகிவிட்டது. – ப.எண். 206.

* * * * * * * * * *

# தென்னிந்தியாவின் வர்த்தக இளவரசர் ஹாஜி.எம்.ஜமால் முஹம்மது சாகிபு பஹதூர்

(நன்றி – முதல் தலைமுறை மனிதர்கள்)

## முன்னுரை

இந்திய வர்த்தக சபையின் தலைவராக ஏழு ஆண்டுகளும் அகில இந்திய முஸ்லிம் லீக்கின் சென்னை மாகாணத் தலைவராக 10 ஆண்டுகளும், தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்கத்தின் தலைவராக 6 ஆண்டுகளும் பொறுப்புகள் வகித்து திறம்பட பணியாற்றிய 'தென்னிந்தியாவின் வர்த்தக இளவரசர்' எனப் போற்றப்பட்ட ஜமால் முஹம்மது சாஹிப் அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் சில துளிகளைப் பதிவு செய்வது ஒரு வரலாற்றுக் கடமையாகும்.

## பிறப்பும் சிறப்பும்

ஹாஜி ஜமால் முஹம்மது ராஹிபின் தந்தையார் ஹாஜி ஜமால் முகையதீன் சாஹிபும் மிகப் பெரும் வணிகரே. சென்னை ஜார்ஜ் டவுன், தம்புச்செட்டித் தெருவில் ஜமால் முகையதீன் அன்கோ என்ற மிகப் பெரிய வர்த்தக நிறுவனத்தின் நிறுவனர் அவர் பதனிடப்பட்ட ஆட்டுத் தோல்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலில் இந்நிறுவனம் ஈடுபட்டிருந்தது. தென்னிந்தியாவின் மிகப்பெரிய தோல் ஏற்றுமதி நிறுவமாக அப்போது விளங்கியது.

ஹாஜி ஜமால் முகையதீன் சாஹிபின் பூர்வீகம் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகா நரிக்குடி ஐந்தாவது வகுப்பு வரை கல்வி கற்ற அவர் தனது 13/ ஆவது வயதில் பிழைப்புத் தேடி சென்னைக்கு வந்து தோல் ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபட்டிருந்த தனது தாய்மாமா முத்துவீரர் இராவுத்தரிடம் வேலைக்குச் சேர்ந்தார். சில ஆண்டுகள் அங்கு பணியாற்றிய அவர், பின்னர் சொந்தமாக தோல் வணிகத்தில் ஈடுபட்டார். சில ஆண்டுகளுக்குள்ளாகவே வணிகத்தில் உச்சநிலை அடைந்தார். 1914–18 ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் கோடீஸ்வரர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

1898–இல் சென்னை பெரம்பூரில் 'மதரஸா ஜமாலியா' அரபிக் கல்லூரியைத் துவக்கினார். சென்னையில் துவக்கப்பட்ட முதல் அரபி மதரஸா இது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு பெரும் அளவிலான தனது சொத்துக்களை அவர் வக்பு செய்தார். மதரஸாவிற்கு எதிரில் ஒரு பள்ளிக்கூடத்தையும் நிறுவினார். இவை தவிர, திண்டுக்கல், ஆடுதுறை ஆகிய உர்களில் தோல் தொழிற்சாலைகளை நிறுவினார்.

இத்தகைய வணிகச் செம்மலின் மூத்த புதல்வரே ஹாஜி ஜமால் முஹம்மது சாகிப். 1882–ஆம் ஆண்டு பிறந்த இவர், முதலில் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியிலும், பின்னர் கிறிஸ்டியன் கல்லூரி உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்றார். பின்னர் தனது தந்தையாருக்கு உதவியாக அவர் நடத்தி வந்த வணிகத் தொழிலில் ஈடுபட்டார். தனது தந்தையுடன் இணைந்தும் அவரது இறப்பிற்குப் பின்னர் (1924) சுயமாகவும், வணிகம் நடத்தி பெரும் புகழடைந்தார்.

## கல்விப் பணி

1910–ஆம் ஆண்டு வர்த்தகம் சம்மந்தமாக ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இவர், அங்குள்ள பல கல்வி நிலையங்களுக்கும் சென்று பார்வையிட்டார். சமயக் கல்வியுடன் ஆங்கிலக் கல்வியும் கற்பதன் மூமமே முஸ்லிம்கள் முன்னேற்றமடைய முடியும் என உறுதியாக எண்ணிய அவர், நாடு திரும்பியதும் மதரஸா ஜமாலியாவிற்குப் புத்துணர்வூட்டும் முயற்சிகளில் ஈடுபட்டார். அம்மதரஸாவில் மார்க்கக் கல்வியுடன். ஆங்கிலக் கல்வியையும், பொதுக் கல்வியையும் அறிமுகப்படுத்தினார். இதற்கு அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்காத காரணத்தினால், செலவுகளைத் தானே ஏற்றுக் கொண்டார்.

1920–ஆம் ஆண்டு மௌலானா முஹம்மது அலி அவர்களால் அலிகாலில் துவக்கப்பட்ட 'ஜமியா மில்லியா இஸ்லாமியா' என்ற கல்விக்கூடம் 1925–இல் டில்லிக்கு மாற்றப்பட்டது. பெரும் பொருளாதா நெருக்கடியில் சிக்கித் தவித்த இந்த கல்விக்கூடத்திற்கு நிதியுதவி அளித்து புத்துயிர் ஊட்ட காரணமாக இருந்தவர்களில் ஜமால் முஹம்மது சாகிபு முக்கியமானவர். அவர் வழங்கிய நன்கொடை எவ்வளவு தெரியுமா? ஒரு லட்சம் ரூபாய்

(அப்போது சென்னை மாகாணத்தின் ஆண்டு வருமானமே 17 கோடிகள்தான்)

வடஇந்தியா முஸ்லிம் தலைவர்களான மௌலானா அபுல் கலாம் ஆஸாத், டாக்டர் அன்ஸாரி, ஹக்கீம் அஜ்மல்கான் ஆகியோர் சென்னை வந்தால், மதரஸா ஜமாலியாவில்தான் தங்குவது வழக்கம். ஜாமியா மிலியா இஸ்லாமியாவுக்குப் புத்துயிரும், புது வாழ்வும் அளித்த அவர், அலிகார் பல்கலைக் கழகம், தேவ்பந்த் மதரஸா, திபியா கல்லூரி (டில்லி) நவ்தத்துல் உலூம் (லக்னோ) ஆகிய கல்வி நிலையங்களுக்கும் நிதி உதவி செய்துள்ளார். அலிகார் பல்கலைக்கழகதில் ஜாமீயா உயர்நிலைப் பள்ளி நிறுவ பொருள் உதவி தந்துள்ளார்.

ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிபின் வர்த்தக நிறுவனம் இஸ்லாமிய சமய பிரச்சாரத்திற்காகப் பெருந்தொகையினை செலவு செய்தது. இஸ்லாத்தின் கொள்கைகளின்பால் ஈர்க்கப்பட்டு முஸ்லிமாக மாறிய இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த முஹம்மது மார்மடிபூக் பிக்தால் என்பவரைச் சென்னைக்கு அழைத்து வந்து இஸ்லாத்தைப் பற்றி ஆங்கிலத்தில் பல சொற்பொழிவுகளை நிகழ்த்திட ஏற்பாடு செய்தது. பின்னர் அவரது சொற்பொழிவுகளை நூலாகத் தொகுத்து இஸ்லாமிய கலாச்சாரம் (cultural side of Islam) என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டது. தலைச்சிறந்த கவிஞரான அல்லலாமா இக்பால் அவர்களையும், சென்னைக்கு வரவழைத்து இஸ்லாமிய தத்துவங்கள் குறித்த சிந்தனையைத் தூண்டும் பல சொற்பொழிவுகள் அவர் நிகழ்த்த ஏற்பாடு செய்ததது. இஸ்லாமிய மார்க்க சிந்தனைகளுக்கான புனரமைப்பு (Reconstruction of Religious thoughts in Islam) என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டது. அன்றைய காலகட்டத்தில் வட இந்தியாவில் புகழ் பெற்று விளங்கிய மார்க்க அறிஞர்களான மௌலானா அப்துல் ஹலீம் சித்திக், மௌலானா ஷபீர் அஹமது உஸ்மான், மௌலானா செய்யது சுலைமான் நத்வி போன்ற அறிஞர்களை சென்னைக்கு வரவழைத்து திருவல்லிக்கேணி பெரிய பள்ளிவாசலில் முன்புள்ள திறந்தவெளி மைதானத்தில் தொடர்ந்து மூன்று நாட்கள் மார்க்கப் பரப்புரை செய்ய வைத்த சிறப்பும் இந்த நிறுவனத்திற்குண்டு. 1930–ல் துருக்கி நாட்டில் பெரும் வறட்சி ஏற்பட்ட போது பொருள் உதவி செய்தார்கள்.

இத்தகைய சீர்மிகு நடவடிக்கைகளுக்குப் பின்னணியில் இருந்து செயல்பட்டவர் ஹாஜி ஜமால் முஹம்மது சாகிப். தனது வியாபாரத்தில் கிடைத்த இலாபத்தின் 17 சதவிகிதத்தை கல்விக்கும், இன்னொரு 17 சதவிகிதத்தை அல்–ஜன்னத் தீனியாத் டிரஸ்ட் மூலம் அறப் பணிகளுக்கும் வாரி வழங்கினார்.

## மசூதியில் தங்கக் கலசம்

நமது கல்லூரியின் முதல் கட்டிடம் (ஜமால் முகைதீன் பில்டிங்ஸ்) 1924–ம் ஆண்டு ஜமால் முஹம்மது சாஹிபால் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் நமது கல்லூரியின் அடையாளமாக இக்கட்டிடமே உள்ளது என்பதும் நமது கல்லூரியின் ஆண்டு மலர் மற்றும் எல்லாப் பதிப்புகளிலும் இக்கட்டிடமே உள்ளது என்பதும் சிறப்புக்குரியது. மசூதியின் மீது 40 அடி கோபுரமும் அதன் மீது 3 அடி உயரத்தில் தங்கக் தகடுகளால் மூடப்பட்ட கலசமும் இருக்கும். அபூர்வமான மசூதியை காண வேண்டுமென்றால், சேலம் நகரின் மையப் பகுதியிலுள்ள முகமதுபுறா தெருவுக்கு வாருங்கள். இங்குள்ள நூறு ஆண்டுகள் பழமையான மசூதியில்தான் இப்படிப்பட்ட அபூர்வம் இருக்கிறது. இது போன்ற தங்க கோபுரம் (மினரா) தமிழகத்தில் வேறு எங்குமே இல்லை என்கிறார்கள். நான் மட்டும் இப்படியொரு மசூதியை கட்டியதாக யாரும் கருதிவிடக்கூடாது என்று நினைத்த பிரபல தோல் வணிகரான ஜமால் மொய்தீன் அப்பகுதி இஸ்லாமிய மக்களிடமிருந்து அவர்களால் முடிந்த வெள்ளிக் காசுகளை தருமாறு சொல்லி, அவையனைத்தையம் கலசத்தின் அடிப்பகுதியில் கொட்டி மசூதியை பொது சொத்தாக மாற்றிவிட்டார்.

## வர்த்தக இளவரசர்

1921–ஆம் ஆண்டு தந்தையாரின் மறைவுக்குப் பின், வர்த்தக நிறுவனத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிபு அதன் மேம்பாட்டிற்காகப் பெரிதும் பாடுபட்டார். 1926–ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தின் வணிகம் உச்ச நிலையை அடைந்தது. அப்போது இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஆட்டுத் தோல்களின் 80 சதவிகிதம் இந்நிறுவனத்தால் ஏற்றுமதி செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய வர்த்தகராக அவர் விளங்கினார். காந்திஜியின் நெருங்கிய நண்பரும், தொழிலதிபருமான ஜி.டி.பிர்லாவிற்கு இணையாகப் பேசப்பட்டார்.

வர்த்தகத்தில் இவர் பெற்றிருந்த உன்னத நிலை காரணமாக, 1931–ஆம் ஆண்டு அகில இந்திய வர்த்தக

சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். (Federation of Indian Chamber of Commerce and Industry - FICCI) அப்பொறுப்பில் சுமார் ஏழு ஆண்டுகள் அதாவது 1938–ஆம் ஆண்டு வரை இருந்தார். இந்த அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் முஸ்லிம் இவரே. இவருக்குப் பின்னர் இந்தப் பொறுப்பிற்கு இதுவரை வேறு எந்த ஒரு முஸ்லிம் வர்த்தகரும் தேர்ந்தெடுக்கப்பட வில்லை.

ஹாஜி ஜமால் முஹம்மது சாகிபு சிறந்த பொருளாதார நிபுணராகவும் திகழ்ந்தார். 1927–இல் இங்கிலாந்து மந்திரி சபையில் இந்தியாவிற்கான நிதி அமைச்சராக இருந்த சர். பேசில் பிளக்கெட் இங்கிலாந்து பவுண்ஸீக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பினை குறைத்து உத்தரவிட்டார். இதனால் இந்தியப் பொருளாதாரம் பெரும் சீர்குலைவைச் சந்திக்க நேரிடும் என்று பொருளாதார வல்லுநர்களும் வர்த்தகர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஜமால் முஹம்மது சாகிபு இங்கிலாந்து அரசின் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அறிவுபூர்வமான விவாதங்கள் ஏற்பட வழிவகுத்தார். இவரது பொருளாதா நிபுணத்துவத்தை உணர்ந்த சென்னை பல்கலைக்கழகம், அதன் Economic and Commerce Board of Studies–ன் கௌவர அங்கத்தினராக இவரை நியமித்து கௌரவமளித்தது.

1931–ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற இரண்டாம் வட்டமேஜை மாநாட்டிற்கு ஹாஜி ஜமால் முஹம்மது சாகிபு சென்ற போது அவருக்குச் சென்னையில் மிகச் சிறந்த அளவில் வழியனுப்பு விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி, காந்திஜியை விட ஜமால் முஹம்மது சாகிபே அபாயகாமானவர் என ஆங்கிலேயர்கள் நினைக்கின்றனர். ஏனெனில், ஆங்கிலேய அரசு இந்தியா சம்பந்தமாக கடைபிடித்து வரும் பொருளாதாரக் கொள்கையால் இந்தியாவிற்கு ஏற்படும் ஆபத்தை உடனே கண்டுபிடித்து அதற்கு எதிராகக் குரல் கொடுப்பார் என்று அஞ்சியே காந்திஜியை அழைத்த பின்னரும் இவரை அழைக்கத் தயங்கினர் என்று குறிப்பிட்டார்.

வட்டமேஜை மாநாட்டில் உரையாற்றிய ஜமால் முஹம்மது சாகிபு, 'இந்தியா அனைத்துத் துறைகளிலும் மிகவும் பின் தங்கியிருப்பதை புள்ளி விவரங்களுடன் எடுத்துக்காட்டி இவை முன்னேற்றமடைய இங்கிலாந்து அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார். வரிவிதிப்பில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்றும், இராணுவத்திற்கு மிக அதிக அளவில் நிதி ஒதுக்குவது தேவையற்றது என்றும், விவசாயத்திற்கும், தொழில் துறைக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். இவரது உரை மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றது.

1931–ஆம் ஆண்டு வட்டமேஜை மாநாட்டிற்குச் சென்றிருந்த ஹாஜி ஜமால் முஹம்மது சாகிபை லண்டனிலுள்ள ரிட்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்த சர். ஆகாகானைத் சந்திக்க அழைத்துச் சென்ற மகாத்மா காந்தி, இந்து முஸ்லிம் ஒற்றுமை பற்றி நீங்களும் ஜமால் முஹம்மதுவும் என்ன முடிவு செய்தாலும் அது எனக்குச் சம்மதமே என்று குறிப்பிட்டார். ஜமால் முஹம்மது சாகிபின் மீது காந்தி கொண்டிருந்த அளப்பரிய நம்பிக்கையை இச்சம்பவம் பறைசாற்றவல்லது. காந்தி தவிர, மோதிலால் நேரு, இராஜாஜி, சத்தியமூர்த்தி ஆகிய தலைவர்களுடனும் அவர் நெருங்கிய உறவு கொண்டிருந்தார்.

## அரசியல் செயல்பாடுகள்

மிகப் பெரிய வர்த்தகராகவும், சமுதாயப பணிகளுக்கு வாரி வாரி வழங்கிய வள்ளல்களாகவும் திகழ்ந்த ஜமால் முஹம்மது சாகிபு, அரசியல் நடவடிக்கைகளிலும் தீவிரப் பங்கு பெற்றிருந்தார். அகில இந்திய முஸ்லிம் லீக் (1906) துவங்கப்பட்ட காலத்திலிருந்தே ஜனாப் ஜமால் முஹம்மது சாபிபு அந்த இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். விடுதலைப் பேராட்ட ஆரம்ப ஆண்டுகளில் (1930 வரை) காங்கிரஸூம் முஸ்லிம் லீக்கும் இணைந்தே பல்வேறு போராட்டங்களை நடத்தின. (பல முஸ்லிம் தலைவர்கள் காங்கிரசிலும், முஸ்லிம் லீக்கிலும் இரட்டை உறுப்பினர்களாக இருந்தனர் என்பதும், அது அப்போது அனுமதிக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத் தக்கது) இதில் துருக்கி கிலாபத்தை பாதுகாக் நடத்தப்பட்ட கிலாபத் இயக்கம் முக்கியமானது. இப்போராட்டத்தில் ஜமால் முஹம்மது சாகிபும் கலந்து கொண்டார்.

1920–க்குப் பிறகு 1933 வரை, தமிழகத்தின் பல இடங்களில் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டன. (சேலம், உத்தமபாளையம், வேலூர், உதயேந்திரம் – வடஆற்காடு மாவட்டம், சென்னை, திருச்சிராப்பள்ளி, கமுதி ஆகிய ஊர்களில் இந்த மதக் கலவரங்களை முடிவுக்கு கொண்டுவந்து மக்களிடையே அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த உருவாக்கப்பட் சமாதானக் குழுக்களில் ஜமால் முஹம்மது சாபிபு முக்கியப் பங்கெடுத்துக் கொண்டார்.

கல்வியின்மையே மதக் கலவரங்களுக்குக் காரணம் என அவர் உறுதியாக நம்பினார். எனவே, முஸ்லிம்கள் கல்வியில் நாட்டம் கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

1930 ஆம் ஆண்டு கிலாபத் இயக்கமும், ஒத்துழையாமை இயக்கமும், உச்சகட்டத்தில் இருந்தபோது, நிதி திரட்டுவதற்காக சென்னை வந்த காந்திஜியும், அலி சகோதரர்களும் ஜமால் முஹம்மது சாகிபை சந்தித்தனர். அப்போது ஜமால் முஹம்மது சாபிபு காந்திஜியிடம் வெற்று காசோலை (Blank Cheque) கொடுத்து நீங்கள் அதில் எவ்வளவு தொகையை வேண்டுமானாலும் அதில் எழுதிக் கொள்ளுங்கள் என்று கூறினார். வியப்படைந்த காந்தி, எனது நண்பர் ஜி.டி. பிர்லா கூட வெற்றுச் செக்கைத் தரவில்லையே, நீங்கள்தான் தந்துள்ளீர்கள் என்று குறிப்பிட்டு, செக்கில் ஒரு லட்சம் என தொகையை எழுதிக்கொண்டார்.

காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் முனைப்புடன் கலந்துகொண்ட ஜமால் மும்மது சாகிபு, அக்கட்சியின் இன்னொரு போராட்டமான வெளிநாட்டு துணிகள் புறக்கணிப்பு என்பது இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் புறக்கணிப்பு என்ற அளவோடு நிறுத்திக்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கருதினார். ஏனெனில், அன்றைய காலகட்டத்தி சென்னை நகரிலும் மாகாணத்தின் பிற ஊர்களிலும் நூற்றுக்கணக்கான சிறு, பெரு முஸ்லிம் துணி வியாபாரிகள் இருந்தனர். காங்கிரஸின் வெளிநாட்டுத் துணிகள் புறக்கணிப்புப் போராட்டம் முஸ்லிம் வணிகர்களின் தொழிலைப் பாதித்து அவர்களின் வாழ்வாதாரங்களைச் சீர்குலைக்கும் என அவர் கருதியே அந்த போராட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

இந்த சூழ்நிலையில் 1930–ஆம் ஆண்டு அகில இந்திய முஸ்லிம் லீக்கின் சென்னை மாகாண அமைப்பாளராக ஜமால் முஹம்மது சாகிபு நியமிக்கப்பட்டார். (அன்றைய சென்னை மாகாணம் என்பது இன்றைய தமிழ்நாடு, திருவாங்கூர் சமஸ்தானம் தவிர்த்த ஆந்திரா, கர்நாடகாவின் சில பகுதிகள் ஆகியவற்றைக் கொண்ட மிகப் பெரிய மாநிலமாக இருந்தது). அவர் தலைமையில் நியமிக்கப்பட்ட அமைப்புக்குழு மாகாணமெங்கும் முஸ்லிம் லீக்கின் கிளைகளை ஏற்படுத்தி புதிய உறுப்பினர்களைச் சேர்த்து அதனை ஒரு பலமிக்க கட்சியாக உருவாக்கியது.

மிண்டோ–மார்லேயின் பரிந்தரைகளின்படி 1909–ஆம் ஆண்டிலிருந்து முஸ்லிம்களுக்கு மாகாண சட்டசபைகளில் தனித்தொகுதிகள்ஒதுக்கப்பட்டுஇருந்தன.(தனித்தொகுதி என்பது முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்த தொகுதிகளைக் கண்டறிந்து அதனை முஸ்லிம்களுக்கு ஒதுக்குவது. இந்த தனித் தொகுதிகளில் முஸ்லிம்கள் மட்டுமே வாக்களிக்க முடியும்) இந்த தனித்தொகுதி முறையை காங்கிரஸ் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தது. இது இந்து முஸ்லீம்களை தேசிய நீரோட்டத்திலிருந்து தனிமைப்படுத்தி விடும் என்பது அக்கட்சியின் வாதம். மாகாண முஸ்லிம் லீக்கின் தலைவராக இருந்தபோதிலும் ஜமால் முஹம்மது சாகிபும் தனிப்பட்ட முறையில் காங்கிரஸின் இந்த நிலைப்பாட்டை ஆதரித்தார். தனித்தொகுதி முறை வேண்டாம். கூட்டுத் தொகுதிகளே வேண்டும் என்பதே அவரது கருத்தாக இருந்தது.

1937–ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சட்டசபைத் தேர்தல்களில்முதன்முறையாகமுஸ்லிம்லீக்தனதுகட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளர்களைத் தனித் தொகுதிகளில் போட்டியிட வைத்தது. 482 முஸ்லிம் தனித்தொகுதியில் போட்டியிட்ட அக்கட்சியின் வேட்பாளர்கள் 460 தொகுதிகளில் வெற்றி பெற்றனர். சென்னை மாகாணத்தில் தமிழ் பகுதிகளில் போட்டியிட்ட 6 தொகுதிகளையும் முஸ்லிம் லீக் கைப்பற்றியது. ஆனால், துரதிருஷ்டவசமாக இந்தத் தேர்தலில் போட்டியிட்ட ஜமால் முஹம்மது சாகிபு வெற்றை வாய்ப்பை இழந்தார். தனிப்பட்ட முறையில் முஸ்லிம்களுக்குத் தனித்தொகுதிகள் தேவையில்லை என்று கருதிய அவர், சென்னையில் முஸ்லிம்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த தனித்தொகுதியில் போட்டி யிடாமல், சென்னை வர்த்தகர் தொகுதியில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து சுயேட்சை வேட்பாளராக டி.டி.கிருஷ்ணமாச்சாரி (பின்னாளில் நேரு அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தவர்) போட்டியிட்டு வெற்றி பெற்றார். காங்கிரஸும், முஸ்லிம் லீக்கிலிருந்து பிரிந்து சென்று மேல்விஷாரம் சி.அப்துல் ஹக்கிம் சாகிபின் தலைமையிலான முற்போக்கு முஸ்லிம் லீக்கும் டி.டி.கிருஷ்ணமாச்சாரிக்கு முறைமுக ஆதரவு தெரிவித்தன.

இந்திய வர்த்தக சபைத் தலைவராகவும், மதிக்கத்தக்க அரசியல் தலைவராகவும் விளங்கிய அவர் தோல்வியுற்றது முஸ்லிம்கள் மற்றும் பிற சமூக மக்களிடையேயும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது இந்நிகழ்வு. ஒரு முஸ்லிம் வேட்பாளர், முஸ்லிம் அல்லாதோர் பெரும்பான்மையாக உள்ள தொகுதியிலிருந்து அவர் எத்தனை செல்வாக்குப் பெற்றவராக இருந்தாலும் வெற்றி பெற இயலாது என்ற

எண்ணத்தை முஸ்லிம்களிடையே தோற்றுவித்தது. மாகாண முஸ்லிம்களை மென்மேலும் முஸ்லிம் அடையாளம் சார்ந்த அரசியலுக்கு இட்டுச் சென்றதாக வரலாற்று ஆய்வாளர் ஜே.பி.பி. மேரே குறிப்பிடுகிறார்.

## தந்தை வழியில் மகன்

பெரும் பொருட்செல்வம் பெற்றிருந்த அவர் மக்கட் செல்வமும் நிரம்பவே பெற்றிருந்தார். அவருக்கு 5 மனைவியர்கள், குழந்தைகள் 16 பேர். இதில் ஆண் மக்கள் 10, பெண் மக்கள் 6. இவரது மூத்த மகனார் எம்.ஜே.ஜமால் முகையதீன் சாகிபு வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்ததோடு, அரசியலிலும் முக்கியப் பங்கு வகித்தார். தனது தந்தையாரைப்போலவே காயிதே ஆஜம் தலைமையிலான அகில இந்திய முஸ்லிம் லீக்கில் இணைந்து தீவிரமாகப் பணியாற்றினார். 1941–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12, 13, 14, 15 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற காயிதே ஆஜம் ஜின்னா கலந்து கொண்ட மாபெரும் முஸ்லிம் லீக் மாநாட்டின் தொண்டர் படையின் தலைவராக இவர் சிறப்புடன் பணியாற்றி அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றார். நாட்டு விடுதலைக்குப் பின்னரும் இவர் தொடர்ந்து அரசியல் பணிகளிலும் அறப் பணிகளிலும் ஈடுபட்டு வந்தார்.

தனது வாழ்நாளின் இறுதிக் காலதின்போது திருச்சியில் கல்லூரி ஒன்றினைத் துவக்க விரும்பிய ஜமால் முஹம்மது சாகிபு கட்டிடம் கட்டிட பெரும் தொகையினைத் தனது மூத்த புதல்வரான எம்.ஜே.ஜமால் முகைதீனிடம் வழங்கினார். தந்தையாரின் விருப்பத்தினை தனயன் நிறைவேற்றினார். 1951–ஆம் ஆண்டு திருச்சியில் ஜமால் முஹம்மது கல்லூரி உருவானது. அக்கல்லூரியின் முதல் தாளாளராக எம்.ஜே.ஜமால் முகையதீன் பொறுப்பேற்று அக்கல்லூரி வளர்ச்சியடைய பெரும் முயற்சிகள் மேற்கொண்டார். தனது கம்பெனியின் மூலம் ரூ. 2,75,000/– கல்லூரியின் கட்டிட பணிகளுக்கு வழங்கினார்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் வளர்ச்சி பணிகளுக்கு வெளிநாடு சென்று வசூல் செய்வதற்காக 1953–ஆம் ஆண்டு கல்லூரியின் முதல் தாளாளரும், செயலாளருமான ஜமால் முகையதீன் (அத்தாவு சாகிப்) MP ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது சென்னை புதுக்கல்லூரியின் செயலாளரும் உடன் வருவதாக கேட்டுக் கொண்டார். முதலில் ஜமால் முகையதீன் ஒத்துக்கொள்ளவில்லை. பின்பு காயிதே மில்லத் புதுக்கல்லூரி சார்பாக வருவதாக கேட்டுக் கொண்டார். அவர் நெருங்கிய உறவினர் என்பதால் ஏற்றுக் கொண்டு, அவருடன் அப்துல் மஜீது என்பவரையும் அழைத்துக் கொண்டு மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஜமால் முகையதீன் சென்றார். வசூலாகும் பணத்தில் 75% ஜமால் முஹம்மது கல்லூரிக்கும், 25% புதுக்கல்லூரிக்கும் பிரித்துக் கொள்வது என்று முடிவானது. ஆனால் வெளிநாடு சென்ற ஓரிரு மாதங்களில் காயிதே மில்லத்தும், அப்துல் மஜீதும் நாடு திரும்பினர். ஆனால் ஜமால் முகையதீன் சாகிபு ஒரு வருடம் வரை மலேசியா, சிங்கப்பூர் மற்றும் செய்கோனில் தங்கியிருந்து வசூல் செய்து 1954–ம் ஆண்டு தாயகம் திரும்பினார். மேலும் காயிதே மில்லத் பணிவாக கேட்டுக் கொண்டதற்காகவும், புதுக்கல்லூரியும் ஒரு கல்வி ஸ்தாபனம் என்பதற்காகவும் ஏற்கனவே ஒப்புக் கொண்ட 75% : 25% என்று இல்லாமல் 5% சேர்த்து புதுக்கல்லூரிக்கு 30% மால் முஹம்மது கல்லூரிக்கு 70% பிரித்துக் கொடுத்து உதவினார். அந்த பணத்தில்தான் ஜமால் முஹம்மது கல்லூரியின் பர்மா–மலேயா பிளாக் (விடுதி மெயின் பிளாக்) கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மதரஸா ஜமாலியாவை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டார். ஒரு வர்த்தகர் என்ற முறையில் தனது பணிகளைத் தொய்வின்றி செய்து வந்தார். இவரது முயற்சிகள் காரணமாகவே சென்னையில் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (Central Leather Institute) துவக்கப்பட்டது. 1959 முதல் 1966 வரை தோல் ஏற்றுமதி கவுன்சிலின் (Council for Leather Exports) தலைவராகவும் இவர் பணியாற்றினார்.

நாடு விடுதலை பெற்ற சில ஆண்டுகளுக்குப் பிறகு இவர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1957–ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்றார். 1962 முதல் முதல் 1968 வரை அக்கட்சியின் இராஜ்ய சபா உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அரும்பணியாற்றினார். இவரது இரண்டாவது மகனார் ஹாஜி எம்.ஜே.எம்.அப்துல் கபூர் சாகிபு 2011–ம் ஆண்டுவரை ஜமால் முஹம்மது கல்லூரியின் தாளாளராகவும், இவரது சகோதரர் ஜமாலுத்தீன் சாகிபின் மகன் எம்.ஜே.நூருத்தீன் சாகிபு இப்போது கல்லூரியின் தலைவராகவும் பொறுப்பேற்று திறம்பட செயல்பட்டு வருகின்றனர். இப்போது காஜாமியான் சாகிபின் குடும்பத்தைச் சேர்ந்த ஹாஜா நஜீமுத்தீன் சாஹிப் தாளாளராக இருந்து வருகிறார். கே.ஏ.கலீல் அகமது சாகிப்

பொருளாளராகவும், எம்.ஜே.எம்.ஜமால் முஹம்மது சாகிப் துணை தாளாளராகவும் இருந்து வருகிறார்கள்.

ஜமால் முகையதீன் சாகிபு, ஜமால் முஹம்மது சாகிபு, எம்.ஜே.ஜமால் முகையதீன் சாகிபு என இம்மூவரும் தமிழ் முஸ்லிம் சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றுள்ளனர். இதில் ஜமால் முஹம்மது சாகிபின் பங்களிப்பு மகத்தானது. 1920–1940க்கும் இடைப்பட்ட 20 ஆண்டுகள் காலகட்டத்தில் சென்னை மாகாணத்தின் மாபெரும் அரசியல் சமுதாயத் தலைவராக அவர் விளங்கினார். உருது முஸ்லிம்கள், தமிழ் முஸ்லிம்கள் என்று பாகுபாடு இல்லாமல் முஸ்லிம்கள் அனைவரையும் அரவணைத்துச் சென்றார். இவரது சீரிய செயல்பாடுகள் காரணமாக சென்னை மாகாணத்தில் முஸ்லிம் லீக் பெரும் வளர்ச்சியடைந்தது. இஸ்லாமிய சமயப் பணிகளுக்கு பணத்தை வாரி வாரி வழங்கினார். முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தினார். அவரது அரசியல் நடவடிக்கைகளை உற்றுநோக்கும்போது அவர் எந்தக் கட்சியுடனும் தன்னை முழுமையாக ஐக்கியப்படுத்திக் கொள்ளவில்லை. சில லட்சிய அரசியல் கருத்துக்களுடன் தான் தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டார் என்ற சில வரலாற்று ஆசிரியர்களின் கணிப்பு சரியானதே என்று தோன்றுகிறது.

* * * * *




## அறிமுகம்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்

"பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்" என்ற அரபிச் சொற்றொடருக்கு ஆழ்ந்த நிறைபொருள் கொண்ட இந்தச் சொற்றொடரை அமைத்துத் தந்த சிறப்பு அல்லாமா **ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி** அவர்களையே சாரும்.

ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் அரபுத் திருநாட்டிலே அண்ணலார் நாயகத் திருமேனி முஹம்மது ﷺ அவர்கள் தோன்றி, அல்லாஹ்வின் தூதராக ஏற்றம்பெற்று திருமறை மறையாகிய குர்ஆனின் வேத வசனங்களை இறைவனிடமிருந்து பெற்று இஸ்லாமிய நெறியை நிலை நாட்டிய அந்த நாட்களிலேயே இன்பத் தமிழகத்திலும் இஸ்லாமிய போதனைகள் எதிரொலிக்கத் தலைப்பட்டன.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இஸ்லாம் தமிழகத்தில் வேரூன்றி வளர்ந்து வந்திருக்கின்றது என்பதற்கு அழுத்தமான வரலாற்று ஆதாரங்கள் நிரம்பக் கிடைக்கின்றன.

இந்தக் காலகட்டத்தில் இஸ்லாமிய மேதைகள், சட்ட விற்பன்னர்கள், மார்க்கத் தீர்ப்பு வழங்கும் முஃப்திகள் எண்ணற்றோர் தமிழகத்திலும் தோன்றி பணியாற்றி இருக்கிறார்கள். அரபி இலக்கணப் புலவர்களும் கவிஞர்களும் விரிவுரையாளர்களும் கூட தமிழ் நாட்டில் பிறந்து வாழ்ந்து சிறந்திருக்கிறார்கள்.

என்றாலும் அல்குர்ஆனை அதன் மூல மொழியாகிய அரபியிலேயே ஓதுபவர்களாகத்தான் கடந்த 13 நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த தமிழ் முஸ்லிம்கள் விளங்கி வந்திருக்கிறார்கள்.

அரபி ஓதி உணர்ந்த மார்க்க மேதைகளால் அவ்வப்போது விளக்கப்பட்டு வந்தது போக கோடானுகோடி மக்களுக்குத் அல்குர்ஆன் பூட்டிய பெட்டகமாகவே விளங்கி வந்திருக்கிறது.

இந்த நிலையை மாற்றி இறை வசனங்களின் கருத்துக்களை இன்பத் தமிழில் பாமரரும் தாமாகவே படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் குர்ஆனுக்கு உரை செய்து வழங்கும் மகத்தான வாய்ப்பு முதன் முதலாக மவ்லானா மவ்லவி ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி அவர்களுக்குக் கிடைத்தது.

இஸ்லாமிய மார்க்க மேதைகளை வரவேற்று உபசரிப்பதில் இன்பம் கண்டு வாழ்ந்த ஒரு வணிகக் குடும்பத்தில் ஹிஜ்ரி 1294 துல் கஅதா பிறை 9 (26-11-1876) ஞாயிறன்று ஹாஜி காதிர் முஹ்யித்தீன் இராவுத்தர் மகனாக அப்துல் ஹமீது பிறந்தார்.

தென்னகத்தில் மார்க்கக் கலை ஞானத்தைப் பரப்பும் நோக்கத்துடன், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வேலூரில், ஷம்ஸுல் உலமா அப்துல் வஹ்ஹாப் ஹழரத் அவர்கள் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் மத்ரஸாவைத் தோற்றுவித்தார்கள். அதில் சேர்ந்த மாணவர்களின் முதல் அணியில் அப்துல் ஹமீதும் ஒருவர். அப்போது அவருக்கு வயது 17. பத்து ஆண்டுகள் அங்கு பயின்று 1906ல் 'மவ்லவி ஸனது' பெற்றார்.

பாக்கியாத்தில் சேர முற்பட்ட நாளிலேயே குர்ஆன் முழுமைக்கும் தமிழில் உரை காண வேண்டுமென்ற குறிக்கோள் மவ்லானா அப்துல் ஹமீது அவர்களுக்கு இருந்தது. என்றாலும் அந்தப் பணியைத் தொடர்வதற்கு முன், சென்னையில் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். பின்னர் அரசியலால் கவரப் பட்டார்கள்.

மார்க்க உணர்வின் அடிப்படையில் விடுதலைத் தாகம் கொண்டிருந்த மவ்லானா அவர்கள், கிலாஃபத் இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டு செயலாற்றினார்கள்.

குர்ஆனின் மொழிபெயர்ப்பையும் மற்றும் இஸ்லாமிய நூற்களையும் அச்சிட்டு வெளியிடுவதற்காக 'இஸ்லாமிய நூல் பிரசுரச் சங்கம்' என்ற நிறுவனத்தை திருச்சியில் தோற்றுவித்தார்கள்.

சமுதாய வள்ளல்களான திருச்சி கான் ஸாஹிப் ந. மு. காஜா மியான் இராவுத்தர், சென்னை கனம் ஜமால் முஹம்மது ஸாஹிப், காரைக்கால் ஹாஜி மு. தம்பி ஸாஹிப் மரைக்காயர் பிரதர்ஸ் ஆகியோர் அதற்குப் பக்கபலமாக இருந்தார்கள்.

# பல்துறை வித்தகர் - ஜமால் முஹம்மது

பேராசிரியர் A. அஷரப் அலி M.A., M.A., B.L., Ph.D.,
முன்னாள் வரலாற்றுத் துறைத் தலைவர்,
சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, திருநெல்வேலி

பெருவணிகம், கொடை வள்ளல், ஆழ்ந்த சிந்தனையாளர், சிறந்த கல்வியாளர், தத்துவ போதகர், பொருளாதார மேதை, விடுதலை வீரர், ஒற்றுமையின் காவலர் என இப்படி பல்வேறு நிலைகளில் பரிணமித்த பெருமகனார்தான் ஜமால் முஹம்மது சாஹிப்.

## குடும்பம்

இவரது தந்தையார் ஜமால் முஹயித்தீன் சாஹிப், இராமநாதபுரம் மாவட்டம், வேம்பங்குடியென்ற கிராமத்தைச் சார்ந்தவர். அவர் அங்கிருந்து கால்நடையாக புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்து பெரு வணிகராக உயர்வடைந்தார். சாதிக்க வேண்டும் என்ற உந்துதல் அவரை தோல் வணிகத்தில் கால் பதிக்க வைத்ததோடு மட்டுமின்றி கைகொடுக்கவும் செய்தது. அந்த வணிக மன்னரின் தலை வாரிசாக 1882–ஆம் ஆண்டு பிறந்தவர்தான் ஜமால் முஹம்மது. இவரது தாயார் அன்றைய நாளில் சென்னையில் பிரபல தோல் வணிகராயிருந்த முத்து மீரா இராவுத்தர் அவர்களின் புதல்வி கிழ்ர்பீவி.

## பள்ளிப் படிப்பு

உயர் வணிகக் குடும்பத்தில் உதித்த ஜமால் முஹம்மது சாஹிப் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியிலும் பின்னர் சென்னை கிறித்துவக் கல்லூரி உயர் நிலைப்பள்ளியிலும் கல்வி பயின்றார். சிறுவராயிருந்த ஜமால் முஹம்மதின் கூர்மதியைக் கண்ட ஆசிரியர் இவரை இரண்டாம் படிவத்திலிருந்து நான்காம் படிவத்திற்கு நேரடியாக உயர்த்தி இரட்டைத் தேர்வு கொடுத்தார். பள்ளி நாட்களில் பரிசுகள் பல வென்று வகுப்பில் முதல் மாணவராகத் திகழ்ந்தார். ஜமால் முஹம்மது ஐந்தாம் படிவம் படித்துக் கொண்டிருக்கும்போது வணிகத்தில் தனக்குத் துணை புரிய அவரது தந்தையார் அவரை அழைத்துக் கொண்டார். பள்ளிப் படிப்பை முழுவதுமாக இவரால் முடிக்க இயலாவிடினும் கற்றலை வாழ்நாள் முழுக்கத் தொடர்ந்தவர் ஜமால் முஹம்மது. அது அவரது இயல்பாகவே திகழ்ந்தது.

## ஜமாலியா அரபிக் கல்லூரி

முஸ்லிம் இளைஞர்கள் இஸ்லாமிய கல்வி பெறுவதற்காக 1898–ஆம் அண்டு இவரது தந்தையாரால் பெரம்பூரில் ஜமாலியா அரபிக் கல்லூரி துவக்கப்பட்டது. 40 மாணவர்களுடன் துவக்கப்பட்ட அக்கல்வி நிலையத்தில் கற்றுவந்த மாணவர்களுக்கு உணவும், உறைவிடமும் இலவசமாக வழங்கப் பட்டன. அக்கல்வி நிலையத்தில் இஸ்லாமிய கல்வியுடன் கணிதம், வரலாறு, புவியியல் போன்ற பொதுக் கல்வியையும் இணைத்துக் கற்றத்தர வேண்டும் என்று ஜமால் முஹம்மது விரும்பினார். ஆனால் இவரது தந்தையாரோ அதனை ஏற்றுக் கொள்ளவிலை. இவருவருக்கிடையில் இது விஷயத்தில் கருத்து மோதல் இருந்தது. அதற்குத் தீர்வு காண வேண்டும் என்ற ஆவல் இளைஞர் ஜமால் முஹம்மதை ஆட்டிப் படைத்தது. அதற்கான வாய்ப்பு 1910ஆம் ஆண்டில் கனிந்து வந்தது. தனது தோல் வணிகத்தை பெருக்குவதற்கான வழிவகையை கண்டறிய ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொண்ட ஜமால் முஹம்மது, அன்றைக்கு இஸ்லாமிய கிலாபத்தின் தலைமை இடமாயிருந்த துருக்கி நாட்டிற்கும் சென்றார். அங்கு இஸ்தான்புல் நகரில் இருந்த தலைமை முப்தி ஷேகுல் இஸ்லாம் அவர்களைச் சந்தித்து இது குறித்து வினவினார். நீண்ட நேரம் ஜமால் முஹம்மதுடன் அளவளாவிய முப்தி, மதரஸா மாணவர்களுக்கு உலகக் கல்வி போதிப்பதில் தவறேதுமில்லை எனக் கூறினார். அதனை பத்வாவாக (தீர்ப்பாக) எழுதி வாங்கிக் கொண்டு இந்தியா திரும்பினார். ஜமாலியா அரபிக் கல்லூரியில் பொதுக் கல்வியும் பாடமானது. தன்னுடைய எண்ணத்தை செயல்படுத்துகையில் எதிர்படும் தடைக்கற்களை தகர்த்தெரிந்திட இவர் தயங்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

## ஜமாலியா ஹாஸ்டல்

ஒருபுறம் மதரஸா மாணவர்கள் பொதுக்கல்வி படிப்பதற்கு பாடுபட்ட ஜமால் முஹம்மது, மறுபடியும் பொதுக்கல்வி பயின்று வந்த மாணவர்களுக்கு இஸ்லாமிய

கல்வி புகட்டுவதற்காக உழைத்தார். 1927–ம் ஆண்டு பெரம்பூரில் ஜமாலியா ஹாஸ்டலை இவர் துவக்கினார். சென்னையில் பல்வேறு கல்லூரிகளில் பயின்றுவந்த முஸ்லிம் மாணவர்கள் இந்த விடுதியில் தங்கி கல்வி பயின்றனர். மாணவர்களுக்கு உணவும், உறைவிடமும், இலவசமாக வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கு மாதந்தோறும் கைச்செலவுக்காக ரூ.10/–வரை தரப்பட்டது. இங்கு மாணவர்களுக்கு அரபிமொழி, திருக்குர்ஆன் விளக்கவுரைகள் மற்றும் இஸ்லாமிய மார்க்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. இந்த விடுதிக்கு ஜமால் முஹம்மது அடிக்கடி வருகை புரிந்து மாணவர்களுடன் பல்வேறு விஷயங்கள் குறித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

## சான்றோன் சங்கமம்

அன்றைய நாளில் மிகப் பிரபலமாகத் திகழ்ந்த முஸ்லிம் அறிஞர்களையும் தலைவர்களையும் அழைத்து வந்து இவ்விடுதியில் தங்க வைத்து மாணவர்களுக்கு சிறப்புரைகள் வழங்க ஜமால் முஹம்மது ஏற்பாடு செய்தார். அவ்வாறு இவ்விடுதிக்கு வந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மௌலானா அபுல்கலாம் ஆஜாத், டாக்டர் அன்சார், டாக்டர் ஜாகிர் ஹூசேன், அல்லாமா முகம்மது இக்பால், மௌலானா சையது சுலைமான் நத்வி ஆகியோர் ஆவர். இவ்விடுதியில் தங்கி கல்வி பயின்றோர் பிற்காலத்தில் கல்லூரி முதல்வராகவும், மாவட்ட ஆட்சித்தலைவராகவும், பிரபல வழக்கறிஞராகவும் இன்னும் அரசாங்கத்துடைய முக்கியப் பதவிகளை அலங்கரிப்பவர்களாகவும் உருவாயினர். திருச்சிராப்பள்ளியில் உள்ள ஜமால் முஹம்மது கல்லூரியின் துவக்க கால முதல்வர் ஜனாப் சையீத் சாஹிப் இவ்விடுதியில் தங்கி கல்வி பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்னிந்திய முஸ்லிம் கல்விச்சங்கம்

ஜமால் முஹம்மது 1935 முதல் 1941 வரை தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்கத்தின் (MEÍSI) தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயல்பட்டார். அப்போது முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காக கடுமையாக உழைத்தார். முஸ்லிம் மாணவர்களின் கல்வி உதவித்தொகை நிதியத்திற்கு வாரி வழங்கினார். இவருடைய பதவிக் காலத்தில் ''இருவார கல்வி விழா'' (Educational Fortnight) சிறப்பாக நடத்தப்பட்டு முஸ்லிம்கள் மத்தியில் கல்வியைக் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## மஜ்லீசுல் உலமா

இஸ்லாத்தின் பெருமையை பாருக்கு பறை சாற்றும் வகையில் முஸ்லிம் அறிஞர்களை அழைத்து வந்து சென்னையில் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்த ஜமால் முஹம்மது ஏற்பாடு செய்தார். திருகுர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த இங்கிலாந்து நாட்டுக்காரரான அறிஞர் ஜனாப் மர்மதூக் பிக்தாலைக் கொண்டு ''இஸ்லாமிய கலாச்சாரம்'' எனும் பொருள் பற்றி உரையாற்றச் செய்தார். அதே போல அல்லாமா இக்பால் அவர்களைக் கொண்டு ''இஸ்லாமிய சிந்தனையின் புணரமைப்பு'' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றச் செய்தார். இவ்வரிய உரைகள் ''சென்னைச் சொற்பொழிவுகள்'' எனும் தலைப்பில் நூல் வடிவம் பெற்று வெளி வந்துள்ளன. மாபெரும் மார்க்க மேதையாகத் திகழ்ந்த மௌலவி சையது சுலைமான் நத்வி அவர்களைக் கொண்டு நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் தொடர் உரையாக நிகழ்த்தச் செய்தார். இவ்வுரையும் ''குத்பாத்தே மதராஸ்'' எனும் தலைப்பில் நூல் வடிவம் பெற்று வெளிவந்துள்ளது. திருச்சி ந.மு காஜாமியான் இராவுத்தர் அவர்களுடன் இணைந்து அங்கு செயல்பட்டு வந்த மஜ்லிசுல் உலமா வளர்ச்சிப் பணிகளிலும் தனது கவனத்தைச் செலுத்தியவர் ஜமால் முஹம்மது. இன்று ஜமால் முஹம்மது கல்லூரியின் முகப்பில் கம்பீரமாக எழுந்து நிற்கும் கட்டிடங்கள் இச்சங்கத்திற்காக இவரால் கட்டித் தரப்பட்டவையாகும்.

## அள்ளிக் கொடுத்த பெருவள்ளல்

தனது செல்வத்தை அறவழியில் செலவு செய்து அகமகிழ்ந்தவர் வள்ளல் ஜமால் முஹம்மது. அது, 1920–ஆம் ஆண்டு கிலாபத் இயக்கம் மிக விறுவிறுப்பாக இந்தியா முழுவதும் பரவிக் கொண்டிருந்த நேரம். இயக்கத்தின் சென்னை மாகாண கூட்டம் மௌலானா சௌகத் அலி தலைமையில் நடைபெற்றது. சி. இராஜகோபாலாச்சாரியார் கிலாபத் இயக்கத்திற்கான நிதியை திரட்டிக் கொண்டிருந்தார். ஜமால் முஹம்மது தனது கிலாபத் நிதியாக நிரப்பப்படாத காசோலை ஒன்றை இராஜாஜியிடம் கொடுத்தார். இவ்வாறு அவர் அக்காசோலையை தந்ததன் நோக்கம், வேண்டிய தொகையை எழுதிக் கொள்ளலாம் என்பதாகும். இராஜாஜி அதில் ரூ.20,000/– என எழுதிக் கொண்டார். வள்ளாண்மைக்கு இலக்கணம் வகுத்தார் ஜமால் முஹம்மத்.

அதே போல் தனது தந்தையார் நோய் வாய்ப்பட்டிருந்த நேரத்தில் மருத்துவம் பார்பதற்காக அவரை டெல்லியிலிருந்த ஹக்கீம் அஜ்மல்கானிடம் அழைத்துச் சென்றார் ஜமால் முஹம்மது. அத்தருணத்தில்

துருக்கி நாட்டிலிருந்து செம்பிறைக் குழுவொன்று நிதி திரட்டுவதற்காக ஹக்கீம் சாஹிபிடம் வந்திருந்தது. அப்போது ஹக்கீம் சாஹிப் ஜமால் முஹம்மதுவிடம், ''முடிந்தால் செம்பிறை குழுவிற்கு ஏதாவது நிதி உதவி செய்யுங்கள்'' என்று கேட்டபோது, ஒரு இலட்ச ரூபாய்க்கான காசோலையை எழுதி நீட்டினார் ஜமால் முஹம்மது. அவரின் வள்ளல் தன்மையைக் கண்ட ஹக்கீம் சாஹிப் அடைந்த வியப்பிற்கு அளவில்லை.

இதே போன்று மற்றொரு வியத்தகு சம்பவம் வள்ளல் ஜமால் முஹம்மதுவின் வாழ்வில் நிகழ்ந்தது. டெல்லியில் இயங்கி வந்த தேசிய கல்வி நிறுவனமான ஜாமியா மில்லியா இஸ்லாமியா பெரும் பொருளாதார நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அந்நிறுவனத்தைக் காக்க பொருள் உதவி தேவைப்பட்டது. அதற்காக மௌலானா அபுல்கலாம் ஆஜாத், டாக்டர் அன்சாரி, டாக்டர் ஜாகிர் ஹீசைன் ஆகியோர் சென்னைக்கு வந்து ஜமால் முஹம்மதை அணுகினர். அப்போது அவர் ''தாங்கள் வேறு யாரிடமும் பொருள் கேட்பதை நான் விரும்பவில்லை. தாங்கள் இறைவனுக்கு உவப்பான வேலையை செய்கிறீர்கள் தங்களுக்கு வேண்டிய பொருளைத் தருவதே எனது கடமை'' என்று கூறி கணிசமான பொருளுதவி செய்து அந்நிறுவனத்தை நிலை பெற உதவினார் ஜமால் முஹம்மது.

## சுயமரியாதைக்குச் சொந்தக்காரர்

அவருடைய கைகள் கொடுத்துப் பழகியனவாக இருந்தனவே ஒழிய வாங்குபவையாக ஒருபோதும் இருந்ததில்லை. ஒருமுறை ஹைதராபாத் நிஜாம் அவர்கள் ஜமாலியா அரபிக் கல்லூரிக்கு வருகை புரிந்தார். சிறப்பான வரவேற்பு அவருக்கு அங்கு அளிக்கப்பட்டது. இனிமையான குரலில் தித்திக்கும் திருமறையின் வசனங்கள் அவருக்கு ஓதிக் காட்டப்பட்டன. அகமகிழ்ந்த நிஜாம், ஜமால் முஹம்மதைப் பார்த்து மதரஸாவின் நிதி நிலையைப் பற்றி வினவினார். அதன் அர்த்தம், பொருளுதவி தேவைப்படின் தருகிறேன் பெற்றுக் கொள்ளுங்கள் என்பதாகும். அதனைக் குறிப்பால் உணர்த்திய நிஜாமைப் பார்த்து, மதரஸாவின் நிதி நிலை சில இலட்சங்கள். ஆனால் அதுவே போதும், என்று சுயமரியாதை கலந்த அடக்கத்துடன் பதிலளித்தார் ஜமால் முஹம்மது. கொடுத்துச் சிவந்த கரங்கள் எடுக்க மறுத்துவிட்டன.

## வணிக வேந்தர்

கொடை கொடுக்கத் தேவையான செல்வத்தை அறவழியில் ஈட்டும் அறிய கலையையும் அவர் அறிந்திருந்தார். தோல் வணிகத்தில் முடிசூடா மன்னராக அவர் திகழ்ந்தார். முதல் உலகப் போர் மூழப் போவதை முன்கூட்டியே தமது கூர் மதியால் உணர்ந்த ஜமால் முஹம்மது, அது குறித்து தனது தந்தையிடம் கூறி தோல்களை வாங்கி இருப்பு வைத்தால் அதிக இலாபம் பெறலாம் என்றுரைத்தார். அவர் எதிர்பார்த்தபடியே முதல் உலகப்போர் முடிந்ததும் தோலின் விலை பன்மடங்காக உயர்ந்தது. அதைத் தொடர்ந்து இவரது வாணிபம் உச்ச நிலையை அடைந்தது.

## வைஸ்ராய் சந்திப்பு

1917 ஆம் ஆண்டு இவர் தென் இந்திய தோல் வர்த்தகச் சங்கத்தை நிறுவி அதன் முதல் செயலாளராகப் பொறுப்பேற்றார். போர் முடிவடைந்த பின்னரும் அரசு தோல் வர்த்தகத்தின் மீது விதித்திருந்த கட்டுப்பாட்டை நீக்க முன்வராததைக் கண்டு வைஸ்ராயைச் சந்தித்து விபரங்களைக் கூற ஒரு குழுவை 1918–ல் இவர் அழைத்துச் சென்றார். அக்குழுவில் சி.பி. இராமசாமி ஐயர், யாகூப் ஹலன் சேட் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். வைஸ்ராய் செம்ஸ்போர்டிடம் நிலைமையை ஜமால் முஹம்மது எடுத்துரைத்ததன் விளைவாக கட்டுப்பாடு நீங்கியது. இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் ஜமால் முஹம்மது பொது வாழ்வில் ஒரு பெரு நபராக உயர்ந்தார்.

## வட்ட மேஜை மாநாடு

தென் இந்தியா மட்டுமின்றி அகில இந்திய அளவிலும் மதிக்கப்படக்கூடிய பெரு வணிகராகத் திகழ்ந்தவர் இவர். இந்திய வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களின் (Federation of India Chambers of Commerce and Industry) நிறுவனர்களில் இவரும் ஒருவர். 1931–ம் ஆண்டில் இவ்வமைப்பின் தலைவராக இவர் செயல்பட்ட போது இரண்டாவது வட்டமேஜை மாநாட்டிற்கு இவர் அழைக்கப்பட்டார். இவருடன் இம்மாநாட்டில் ஜி.டி. பிர்லாவும் இடம் பெற்றிருந்தார். இம்மாநாட்டில் இந்திய ரூபாயின் மதிப்பு ஆங்கில பவுன் ஒன்றுக்கு 16 பென்ஸாக இருந்ததை 18 பென்ஸாக உயர்த்தியதைக் கண்டித்து மிக விரிவாக இவர் பேசினார். அது எவ்வாறு இந்திய ரூபாயின் மதிப்பை வீழ்ச்சியடையச் செய்துள்ளது என்பதை தெளிவாக விளக்கினார். நாணய செலாவணி குறித்த இவருடைய வாதங்களை அன்றைய இந்தியாவுக்கான அமைச்சரின் ஆலோசகரான ஹென்றி ஸ்டிரகாஷ் போன்ற நிபுணர்களால் கூட பதிலளிக்க இயலவில்லை. பொருளாதாரத் துறையில் இவருடைய கருத்துக்களுக்கு

காந்திஜீ பெரு மதிப்பு அளித்தார். இந்திய வளத்தை சுரண்டிச் செல்ல தாங்கள் தயாரிக்கும் இரகசிய திட்டங்களை தனது கூர் மதியால் நொடிப் பொழுதில் ஜமால் முஹம்மது கண்டுபிடித்துவிடுவார் எனும் அச்சமே பிரிட்டீஷார் இவரை வட்ட மேஜை மாநாட்டிற்கு அழைப்பதில் தயக்கம் கொள்ளச் செய்தது. ஜமால் முஹம்மது இம்மாநாட்டிற்கு புறப்படும் முன்னர் அவரை கௌரவிக்கும் வகையில் நடந்த விருந்தில் அன்றைய காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தி இவ்விஷயத்தை விளக்குகையில் ''காந்திஜீயை விட ஜமால் முஹம்மது அதிக அபாயகரமானவர் என்று பிரிட்டீஷார் நினைக்கிறார்கள். ஏனெனில் பிரிட்டீஷார் இந்தியா குறித்து கடைப்பிடிக்க விரும்பும் பொருளாதாரக் கொள்கையால் தமது நாட்டிற்கு ஏற்படும் பாதகத்தைக் கண்டுபிடித்து அதனை எதிர்க்கும்படி அவர் செய்து விடுவார் என அவர்கள் அஞ்சுகிறார்கள். இதனாலேயே காந்திஜீயை அழைத்த பின்னும் இவரை அழைக்கத் தயக்கம் காட்டினார்கள்'' என அவர் தெளிவுப்படுத்தினார்.

## பொருளாதார மேதை

ஜமால் முஹம்மதின் பொருளாதாரக் கொள்கைகள் பிரிட்டிஷ் சாம்ராஜியத்தின் அஸ்திவாரத்தையே அசைப்பதாக இருந்தன. இந்தியாவின் தேவை போக எஞ்சியிருந்த தோலை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் போது அவை பதனிடப்பட்ட நிலையிலேயே ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்றார் இவர். ஏனெனில் அப்போதுதான் இந்தியத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதுடன் இந்தியப் பொருளாதாரமும் செழிக்கும் என இவர் கூறினார். பல்கலைக்கழக பட்டம் பெறாத இவரது பொருளாதார கருத்துக்களால் கவரப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம் இவரை பொருளாதாரம் மற்றும் வணிக இயல் கல்விக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து கௌரவித்தது. இது இப்பல்கலைக் கழக வரலாற்றில் அதுவரை நடந்திராத ஒன்று.

ஆங்கில அரசின் பொருளாார கொள்கைகளுக்கு எதிராக ஜமால் முஹம்மது தொடுத்த போராட்டம் இந்திய வர்த்தகர்களை இவர்பால் ஈர்த்தது. குறிப்பாக அன்றைய பிரபல வர்த்தகர்களான ஜி.டி.பிர்லா மற்றும் சர் புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ் ஆகியோர் இவருக்கு தங்களது ஆதரவை அளித்தனர். இப்பொருளாதார பேராட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்காக இவரை தென்னிந்திய வர்த்தகத் தொகுதியிலிருந்து இந்திய சட்டசபைக்கு அங்கத்தினராக ஏகமனதாக தேர்ந்தெடுத்தார்கள். அப்போது இப்பதவியை வகித்து வந்த இந்திய வங்கியின் செயலாளரான வித்யாசாகர் பாண்டியா தனது பதவியை இராஜினமா செய்து இவரை தேர்ந்தெடுக்க வழிவகுத்தார்.

சட்டமன்றத்தில் பொருளாதார மசோதாக்கள் மீது தனது கருத்துக்களை அழுத்தமாக இவர் எடுத்து வைத்தார். அரசின் புதிய வரிவிதிப்பு கொள்கைகளை இவர் கடுமையாகச் சாடினார். இராணுவ செலவினங்களை அரசு குறைக்க வேண்டும் அப்போதுதான் இந்தியர்கள் மீதுள்ள வரிச்சுமை குறையும் என இவர் வாதாடினார். இவர் பதவி வகித்த இரண்டு ஆண்டு காலமும் மக்கள் பிரச்சினைகளை முன் வைத்து இவர் பேராடினார்.

## அரசியல் ஆர்வம்

பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி அரசியலிலும் இவர் ஆர்வம் காட்டினார். 1906–ல் சென்னை மாகாண முஸ்லிம் லீகை நிறுவியவர்களில் இவரும் ஒருவர். 1928–ல் அதன் தலைவராக பொறுப்பேற்ற இவர் 1940 வரை அப்பதவியில் தொடர்ந்து இருந்தார். லீகின் தலைவராக இருந்தாலும் காங்கிரசுடன் மோதல் போக்கை இவர் கடைப்பிடிக்கவில்லை. 1937–ல் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசும், லீகும் ஒரு சமரச முயற்சியில் ஈடுபட இவர் உதவினார். ஆதலால் இவ்விரு கட்சிகளும் தேர்தலில் இணக்கமாக செயல்பட முடிந்தது. காந்திஜீயின் கதர் கொள்கையை ஏற்று கதராடை அணிந்தவர் இவர். ஹிந்து – முஸ்லிம் ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டவர். இவ்விரு சமுதாயங்களின் இணைப்பில்தான் இந்தியாவின் எதிர்கால வெற்றி அடங்கியுள்ளது என்பதை தெளிவாக இவர் உணர்ந்திருந்தார். ஆதலால் வட்ட மேஜை மாநாட்டின் போது காந்திஜீ – ஆகாகான் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து ஆகாகான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு காந்திஜீயை அழைத்துச் சென்றார். ''நான் வெற்றுக் காகிதத்தில் கையொப்பமிட்டு தருகிறேன். இந்து முஸ்லிம் ஒற்றுமை பற்றி நீங்களும் ஜமால் முஹம்மதுவும் என்ன முடிவு செய்கிறீர்களோ அது எனக்கு சம்மதம்'' என ஆகாகானிடம் கூறினார் காந்தி.

இலண்டனில் நடந்த இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டிற்கு இவர் சென்றிருந்தபோது காந்திஜீயை இவர் சந்திக்கச் சென்றார். காந்தி தங்கியிருந்த அறைக்குள் இவர் நுழைந்த போது இவரைக் கண்ட காந்தி தன்னருகே வந்து அமருமாறு அழைத்தார். ஆனால் பலரும் காந்திக்கு முன்பாக

தரையில் அமர்ந்திருப்பதைக் கண்ட இவர் தயங்கியபடி தானும் தரையில் அமர முற்பட்டார். இதைக்கண்ட காந்தி தன்னுடைய பேச்சை பாதியிலே நிறுத்தி சைகை காட்டி தன்னருகே இவரை அழைத்தார். தயங்கியபடியே அவர் அருகே சென்ற இவரை காந்தியடிகள் தான் அமர்ந்திருந்த மெத்தையில் அமரவைத்து கௌரவித்தார். இது இவ்விருவருக்கும் இருந்த நெருக்கத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு.

## மறைவு

உயிரினங்கள் மீது அளப்பரிய பற்று கொண்டவர் ஜமால் முஹம்மது. வண்ணத்துப் பூச்சிகளையும் வான சாஸ்திரத்தையும் ஆராய்ந்தவர். தத்துவ வித்தகர். கடினமான பொருளாதாரக் கோட்பாட்டைக் கூட எளிமையாக விளக்கும் ஆற்றல் பெற்றவர். இப்பெருந்தகை 1949–ஆம் ஆண்டு சிறிது காலம் நோய் வாய்பட்டு பிறகு காலமானர். இவரது உடல் ஜமாலியா கல்லூரியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. “இவரது மரணம் தேசிய இந்தியாவிற்கே மகத்தான பேரிழப்பாகும்“ என அப்போது இந்திய அரசியல் நிர்ணய சபைத் தலைவராக இருந்த ராஜேந்திர பிரசாத் குறிப்பிட்டார்.

## மேற்கோள் நூல்கள் & பத்திரிக்கைகள் :


1. நீல்கன் பெருமாள் எழுதிய ஜமால் முஹம்மது (1936)
2. ஜமால் முஹம்மது கல்லூரியின் ஆண்டுமலர் (1981)
3. A Brief History of the Muslim Educational Association of Southern India & the New College (1971)
4. ஜமால் முஹம்மது கல்லூாயின் பொன் விழா ஆண்டு மலர் (2001)
5. OMEIAT Journal (June 1987 மற்றும் Aug 1988)
6. அப்துற்றஹீம் தொகுத்த இஸ்லாமிய கலைக்களஞ்சியம் தொகுதி மூன்று (1979)
7. V.K.இரத்தினசாபதி முதலியார் எழுதிய எம் ஜமால் முகம்மத் சாஹேப் அவர்களின் ஜீவிய சரித்திரம் (1949)


* * * * *



# வள்ளல் ந.மு.காஜாமியான் ராவுத்தரின் பன்முகப் பங்களிப்பு



முனைவர் எஸ்.முகம்மது அலி
மேனாள் இணைப்பேராசிரியர் & தலைவர், தமிழாய்வுத்துறை
சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி (துன்னாட்சி)
மேல்விஷாரம் – 632 509

## முன்னுரை :

ஜமால் முகம்மது கல்லூரி என்ற பூந்தோட்டத்தில் பூத்து உலகெங்கும் அதன் நறுமணத்தைப் பரப்பும் மாணவர்களில்நானும்ஒருவன்.எனக்கும்இக்கல்லூரிக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும், ஜமால் முகம்மது கல்லூரியை நிறுவிய வள்ளல்களில் ஒருவரான ந.மு.காஜாமியான் ராவுத்தரின் பன்முகப் பங்களிப்பைப் பற்றியும் இக்கட்டுரை இயம்புகிறது.

## கல்லூரி நினைவலைகள் :

நான் 1981–1983 ஆம் ஆண்டில் முதுகலைத் தமிழ் (Third Batch) இங்குதான் படித்தேன். பெரும்புலவர் முனைவர் சி.நயினார் முகம்மது துறைத் தலைவராக இருந்தார். பேரா.நடராசன், முனைவர் அர.அப்துல் ஜப்பார், முனைவர் தா.பிச்சை முகம்மது, முனைவர் மீ.நாசிர் அலி, பேரா.சதகத்துல்லா, பேரா.ஷாஜகான், முனைவர் பீ.மு.மன்சூர் போன்ற புகழ் மிக்க பேராசிரியர்களிடம் பாடம் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவர்களான நானும், திருஞானமூர்த்தியும் சென்னை கம்பன் கழகம் நடத்திய மாநில அளவிலான சீறாப்புராண கட்டுரைப் போட்டியில் பங்கேற்றோம் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் நம் கல்லூரிக்கு முதல் பரிசான சுழற் கோப்பையை பெற்றுத் தந்தது மறக்க இயலாதவை. அதுமட்டுமல்ல 1985–1986 ஆம் கல்வியாண்டில் முழுநேர துணை விடுதிக் காப்பாளராகப் பணியாற்றினேன். பெரும்புலவர் சி.நயினார் முகம்மது முதல்வராகவும், பேரா.அப்துல்லா பாஷா விடுதிக் காப்பாளராகவும்; இருந்தனர். 2006 ஆம் ஆண்டில் மார்ச் 6,7 ஆம் தேதிகளில் ஜமால் முகம்மது கல்லூரி முதுகலைத் தமிழ்த்துறை நடத்திய மனித மதிப்புகள் என்ற தேசியக் கருத்தரங்கில் ஈழக்கவிஞர் ஜின்னாஹ் ஷரபுத்தீனின் இரட்டைக் காப்பியங்களில் மனித மதிப்புகள் என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தேன். மேடையில் பேசவும் அழைக்கப்பட்டேன். 28.02.2010இல் ஜமால் முகம்மது கல்லூரி முதுகலைத் தமிழ்த்துறை நடத்திய கவிக்கோ அப்துல் ரகுமானின் படைப்பாளுமைத் திறன் என்ற தேசியக் கருத்தரங்கில் இதே தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்ததோடு அமர்வுத் தலைவராகவும் பணியாற்றிய நினைவலைகள் மனதை விட்டு நீங்காதவை.

## காஜாமியான் ராவுத்தரின் இளமைப் பருவம் :

இவர் திருச்சி மாநகரில் இஸ்லாமியர்கள் அதிகமாக வசிக்கும் பாலக்கரையில் ந.முகமது மியான் ராவுத்தரின் மகனாக 1880 ஆம் ஆண்டில் பிறந்தார். இவரின் மூதாதையர் நாகலாபுரத்திலிருந்து திருச்சியில் வந்து குடியேறி வாழ்ந்தனர். இவரின் பாட்டனார் நல்லகனி ராவுத்தரும், தந்தையார் முகம்மது மியான் ராவுத்தரும் சிறந்த வணிகர்களாய் விளங்கினர். சென்னை கிறித்துவக் கல்லூரியைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாவது படிவம் வரை படித்தார், சிறந்த அறிவாற்றல் வாய்க்கப் பெற்றிருந்த இவர் தாமே முயன்று ஆங்கிலம், தமிழ், உருது, அரபி ஆகிய மொழிகளைப் பயின்று தேர்ந்தார். இவருக்குச் சிறந்த பொறியியல் அறிவும் இருந்தது. சித்த, யூனானி வைத்திய முறையிலும் இவர் தேர்ச்சியுற்று தமக்குத் தாமே மருத்துவம் செய்து கொண்டதோடு, தாம் செய்த மருந்துகளை ஏழைகளுக்கும் இலவசமாய் வழங்கி வந்தார். இவரை மக்கள் முதலாளி என்றோ, எஜமான் என்றோதான் அழைத்து வந்தனர். சிலரே 'ந.மு' என்று அழைப்பர். எவரும் இவரைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை. இத்துணை மதிப்புடன் வாழ்ந்த இவர் 1954 இல் நவம்பர் 14ம் தேதி திருச்சியில் காலமானார்.

## கல்வியில் பங்களிப்பு :

மனித சமுதாய வரலாற்றில் கல்வி முக்கியப் பங்கு வகித்து வந்துள்ளது. ஒரு நாடோ அல்லது சமுதாயமோ கல்வி வளர்ச்சியில்லாமல் வளர முடியாது. "Learning is the key to all kinds of success. It is the only ladder to all kinds of progress. With learning all else follows, without learning there is much to lose"

என்று அலிகர் பல்கலைக் கழகத்தை நிறுவிய கல்வியாளர் சர் சையத் அகமதுகான் கல்வியே அனைத்து வகையான வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் மூல காரணம் என்று கூறினார். இதனை நன்குணர்ந்த காஜாமியான் ராவுத்தர் தமிழகத்தின் தலைசிறந்த கல்லூரியாக விளங்கும் ஜமால் முகம்மது கல்லூரியை தமது வணிக நண்பர் ஜனாப் ஜமால் முகம்மது ராவுத்தருடன் சேர்ந்து 1951 ஆம் ஆண்டில் நிறுவினார். காஜாமியான் உயர்நிலைப் பள்ளியையும் நிறுவினார். எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். இந்த நாடு வறுமைப் பிடியிலிருந்து விடுபட வேண்டும். இல்லாமையும் அறியாமையும் அகன்றாலொழியப் பெற்ற சுதந்திரத்தால் பயன் ஒன்றுமில்லை என்பது கவியரசு கண்ணதாசனின் கணிப்பு. இந்த நோக்கத்தை செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டதுதான் ஜமால் முகம்மது கல்லூரி.

## மார்க்கப் பணியில் பங்களிப்பு :

இவர் மார்க்க பக்தி மிகுந்தவர். எவருடனும் உரையாடும்முன் தொழுகையை விட்டு விடாதீர்கள் என்று கூறிய பின்னரே பேச்சைத் தொடங்குவார். இஸ்லாத்திற்கு சிறந்த ஊழியம் செய்ய விரும்பி இவர் திருச்சியில் மஜ்லிஸல் உலமா என்னும் பெயருடன் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த தமக்குச் சொந்தமான 124 ஏக்கர் நிலத்தை அதற்கு அறமாக வழங்கினார். அதிலேயே ஜமால் முகம்மது குடும்பத்தார் மஜ்லிஸல் உலமாவுக்கான கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தனர். மஜ்லிஸல் உலமா மூலம் இஸ்லாமியப் பிரச்சாரப் பணியை முடுக்கி விட்டதுடன் ஓர் அனாதை விடுதியும் தொடங்கினார். அக்கட்டடத்திலேயே ஜமால் முகம்மது கல்லூரித் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. தமிழ் மொழியில் திருக்குர்ஆனை மொழிபெயர்க்கத் திட்டம் வகுத்து இவர் 1924 ஆம் ஆண்டில் அதற்கான அலுவல்களை மௌலவி ஆ.கா.அப்துல் ஹமீது பாக்கவி, எஸ்.எஸ்.அப்துல் காதிர் பாக்கவி ஆகியோரைக் கொண்டுத் தொடங்கினார். திருக்குர்ஆனில் ஓர் அத்தியாயம் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிடப்பட்டது. இஸ்லாமியப் மார்க்கப் பிரச்சாரத்திற்கு உதவியாக இஸ்லாமிய அச்சகம் தோற்றுவித்தார். இஸ்லாம் இயற்கை மதம், இமாம் கஸ்ஸாலி முதலிய நூல்கள் இந்த நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டன.

## தொழில்துறையில் பங்களிப்பு :

தந்தையார் செய்து வந்த தோல் பதனிடும் தொழிலையே கற்று அதில் புதுமைகளைப் புகுத்தினார். ஆட்டுத் தோலை பாடம் செய்யும் போதே செயற்கை வண்ணங்களைச் சேர்த்து அதை இயற்கை வண்ணம் போல் மாற்றினார். தோல் அழிந்தாலும் இறுதிவரை வண்ணம் அழியவில்லை. விஞ்ஞானத்தின் அடிப்படையில் பல பரிசோதனைகளை செய்து குரோம் தோலுக்குப் பல வண்ணங்கள் ஊட்டினார். தம் தோல் பதனிடும் நிறுவனத்தை நவீன மயமாக்கி இந்தியாவிலேயே சிறந்த தோல் பதனிடும் நிறுவனங்களுள் ஒன்றாக அதனை ஆக்கினார். உலக நாடுகள் அதிசயிக்கும் வண்ணம் இவ்வாறு புதுமைகளைப் புகுத்திப் பெருமை பெற்றார். தோல் பதனிடுதலில் தனிரக உற்பத்தியை இந்தியாவிலேயே முதன்முதலாகக் கண்டு பிடித்த நிபுணராக இவர் புகழ் பெற்றார்.

## வாரி வழங்கிய வள்ளல் :

வள்ளன்மை இவரது இரத்தத்தில் ஊறிய பண்பாகும். இவர் தம் மக்களின் திருமணங்களை அழைப்பிதழ் கூட அச்சடிக்காது மிகவும் எளியமுறையில் செய்துவிட்டு அதற்கென ஒதுக்கப்பட்டப் பணத்தை எவருக்கும் தெரியாமல் அறவழியில் செலவழிப்பார். மஜ்லிஸல் உலமா நிறுவனத்தை ஏற்படுத்த தமக்குச் சொந்தமான 124 ஏக்கர் நிலத்தை தானமாக வழங்கினார். அதனுடைய இன்றைய மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபாய் என்று கூறலாம். நகரின் கல்வி வளர்ச்சிக்குப் பெருமை சேர்த்து வரும் ஜமால் முகம்மது கல்லூரி அமைந்துள்ள 120 ஏக்கர் நிலப்பரப்பு அனைத்தும் பெருமைக்குரிய 'ந.மு' அவர்களின் நன்கொடையே. சேஷாயி மின்உற்பத்தி கம்பெனியை திருச்சிராப்பள்ளியில் தொடங்க முதன்முதலில் 50,000 ரூபாய்க்கு பங்கு வாங்கினார். பல தேச பக்தர்களுக்கு இவர் பொருள் உதவி செய்துள்ளார்.

## சுதந்திரப் போராட்டத்தில் பங்களிப்பு :

இஸ்லாமிய மார்க்கம் தமிழ்நாட்டில் நல்ல நிலையில் வளர்ந்து நிற்பதற்கு தமிழுலக முஸ்லிம்கள் சிலரின் சேவைகளும் தியாகங்களும்தான் காரணம். இளமையிலேயே தேச சுதந்திரத்தில் ஆர்வம் கொண்டு கதர் ஆடை உடுத்தினார். காந்தியடிகளின் வேண்டுகோளை ஏற்று சுதேசி இயக்கத்தில் பங்கேற்றார். 50,000 ரூபாய் செலவில் கதர் ஆலையைத் தோற்றுவித்து அதனால் ஏற்பட்ட மாபெரும் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் தேசப் பணியாற்றினார்.

## பண்புகளின் பெட்டகம் :

இவர் தன்னம்பிக்கை மிகுந்தவர். அல்லாஹ்வின் பேரருளில் அளவற்ற நம்பிக்கை உடையவர். அறிவுத்திறமை, உழைக்கும் ஆற்றல், கருணைத் தன்மை,

மார்க்கப்பற்று, நாட்டுப்பற்று கொண்டவராக விளங்கினார். தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் உடையவர்.

## முடிவுரை :

வாரி வழங்கும் வள்ளலாக, விடுதலைப் போராட்ட வீரராக, சிறந்த தொழிலதிபராக, மார்க்கப் பக்தி மிகுந்தவராக, சமய நல்லிணக்கம் கொண்டவராக, கல்வியாளராக, நிர்வாகத் திறன் மிக்கவராக, இவர் ஆற்றிய பணிகள் இஸ்லாமியர் மட்டுமன்றி அனைத்து சமயத்தவரும் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். தம் வாழ்க்கை முழுவதையும் இஸ்லாத்திற்காக, தமிழ்மொழி பேசும் மக்களுக்காக, ஏழை எளிய மக்களுக்காக அர்ப்பணித்த அந்த நல்ல மனிதரை நினைவு கூறுவதும், புகழ்வதும் கூட நமக்கு நன்மையே சேர்ப்பித்து வைக்கும். தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்த வள்ளல் ந.மு.காஜாமியான் ராவுத்தரைப்போல நாமும் வாழ்ந்து காட்டி அவரது புகழுக்குப் பெருமை சேர்ப்போம். இந்த இரு குடும்பத்தினரும் ஒற்றுமையாக இக்கல்லூரியை இன்றுவரை திறம்பட நடத்தி அப்பெரியோர்களின் கனவை நனவாக்கி, மக்களுக்கு சேவை செய்து வருவது பெருமைக்குரிய ஒன்றாகும். இதன் மென்மேலும் வளர்ச்சிக்கு வல்ல இறைவனிடத்தில் நாம் அனைவரும் பிரார்த்திப்போம்.

* * * * *

# வாழிய ஜமால்

கவிஞர். அபிவை தாஜுதீன்

நாகூர் இ.எம். ஹனிபாவிற்கு பாடல் எழுதியவர், ஜமால் கல்லூரி மேனாள் மாணவர்

1. அருளாளன் அன்புடையோன் அல்லாவின் அருட்கருணை
   திருச்சி மாநடுநகரில் திகழும் நல் ஜமால் முஹம்மது!
2. கல்விக்கு கண்திறப்போர் காலத்தால் சிறந்திடுவார் கருணை
   நபி நாயகத்தின் அருமை சொல் ஜமால் முஹம்மது!
3. காலத்தின் கண்ணாடி – கவினார்ந்த முன்னாடி
   சீலத்தின் செழிப்புக்கோர் செழுங்கருணை ஜமால் முஹம்மது!
4. விடிவெள்ளி கல்வித் தந்து விழிப்புணர்வு விவேகம் பெற
   படித்தரத்தின் பாங்கினிலே படியேறும் ஜமால் முஹம்மது!
5. மாதவராம் ஜமால் முஹம்மது மகத்துவத்தின் மகிமையதில்
   மாண்பாளர் காஜாமியான் கருணையதின் ஜமால் முஹம்மது!
6. ஜாம்பவான்கள் இருவரின் சரித்திரத்தின் முறைத்தனத்தை
   சம்பூர்ணமாய் வெளிப்படுத்தும் காட்சியே ஜமால் முஹம்மது!
7. முக்கால் நூற்றாண்டு பணியில் முழு உலகு தெரியும் வண்ணம்
   தக்கபணி கல்வியிலே தலை நிமிர்ந்த ஜமால் முஹம்மது!
8. கலங்கரை விளக்கமாக காசினிக்கு ஒளி காட்டி
   துலங்கிடும் மணிச்சுடரை தூக்கிப்பிடிக்கும் ஜமால் முஹம்மது!
9. நிறுவனர்கள் இருவரையும் நிமிர்ந்துப் பார்த்து மகிழ்ந்து நிற்கும்
   அருமையான கலைக்கூடம் – அதுதான் ஜமால் முஹம்மது!
10. பூபாளம் உள்ள மட்டும் புனிதப்பணி தொடர்ந்திடவே
    பூமான் இறை அருள் பெற்ற புனிதப்பள்ளி ஜமால் முஹம்மது!

# TRIBUTE TO JAMAL MOHAMED FAMILY

Haji **Dr. I.S.A. Nather Khan**, Ph.D
Former Assistant Professor, Jamal Mohamed College
Former Assistant Warden, Khajamian Hostel, JMC
President, JMC Alumni Malaysia
Chairman, Ecotone Worldwide SdnBhd, Malaysia

## 1.0 Introduction

Though I am very far from India for several years, I was invited to write an article for the special magazine to be published during the “Founders Day 2018”. I was thinking what should I write which could be of relevant to the Founders’ Day souvenir. Then I decided to write on Janab M.J. Abdul Gafoor Sahib, the former Secretary and Correspondence to whom I know well and interacted with him for many years. The write up of him would not be completed without touching on the entire Jamal family.

I was searching for literature, I could not find comprehensive information on Jamal Mohamed nor Khajamian Rawther’s families. Therefore I decided to compile genealogy of the entire Jamal family first as I feltit is important for the future generation, otherwise it would remain word of mouth and distorted in time.

I deliberately left out Janab Khajamian Rawther family because I was hoping for an opportunity to write their history with sufficient background literature with me and focusing on Janab Dr. Khaja Najumudeen, the current secretary and correspondence whom I interacted for a longer period as contemporaries similar to Janab M.J. Abdul Gafoor Sahib.

## 2.0 Genealogy of theJamal Mohamed Family

For the clear understanding of the readers including myself, I had to study entire Jamal family first as it was not cohesively written anywhere, even if so scanty. I also wanted to clarify the initials “M.J” and name “Jamal” as they are appearing generation after generation, that intrigued me very long as well as many others. At last I learned that M.J means “Madurai Jamal”, a title most members of the family adapted until now. It all started from first known ancestor of the family, Madurai Jamal Mohamed Ambalam.

### 2.1 Janab Madurai Jamal Mohamed Ambalam Sahib

Madurai Jamal Mohamed Ambalam was from Vembankudi which is located closer to Narikkudi of Ramanathapuram District. The partition of South India into various Districts are recent after India’s independence and Vembankudi and Narikkudi were very much part of Madurai domain, the popular and prominent city of the region.

Madurai Jamal Mohamed Ambalam, the first known family member had the prefix name Madurai. Many members of the family subsequently adapted both Madurai and Jamal from him resulting the initials M.J. in the beginning of their names.

The suffixAmbalam, could be a clan of mukkulator (thevar, maravar or kallar) or mukkulator leader with power to adjudicate dispute of inhabitants of “nadus”. This shows that Madurai Jamal Mohamed Ambalam’s ancestors were from the mukkulator community or leader of the“mukkulatornadus”(country, region or village).

I remember Janab M.J Abdul Gafoor used to explain to me that his forefathers were once thevar community from Narikkudiarea before converted to Islam. This was possible as most of the so called Tamil muslim rawther clan would have originated from thevar (warrior) communities from Mabar (Madurai) region of South India during the Golden Era of Islam

and mostly served in the army, particularly cavalry regiments as soldiers, horse trainers and horse keepers for various kingdoms starting from Pandians, Muslim Sultanates, Madurai and ThanjavurNaickers, Sethupathis of Ramanathapuram, Rajas of Sivagangai and Pudukottai, Kingdom of Travancore and finally with Nawabs of Arcot.

## 2.2 Janab Madurai Jamal MohideenSahib (1856 - 1924)

Madurai Jamal Mohideen, the first son of Madurai Jamal Mohamed Ambalam,was born in Vembankudi and studied initially in a school at Narikkudi. He went on to work in Negapattinam for a while before joininghis maternal uncle MuthuMeeranRawther in Chennai, who initially had some small business before initiating leather tannery and later export business.

Madurai Jamal Mohideen worked hardand improved his maternal uncle's businesswhile acquiring knowledge and skill on leather tannery and export business. In appreciation of his honesty and trust worthiness, Muthu Meeran Rawther arranged marriage for his 16 years old nephew Madurai Jamal Mohideen with his daughter KiluruBeevi of 8 years old. Early marriage were the norms of then society irrespective of religion.

In course of time, Madurai Jamal Mohideen started his own leather tannery and export business and quickly became a rich man of the region. As a wealthy and practicing muslim, he initiated many charity and philanthropic activities for the needy people of the time particularly poor and backward muslim communities.

In the year 1902, he established Jamalia Arabic Madarasa, which was later known as "The Darul Uloom Jamalia Arabic College"in Perembur, Chennai. This was the first education institution established by Madurai Jamal Mohideen for the muslim community to inculcate Islamic knowledge and values for the future generations. Subsequently In the year 1910, he established Jamal Mohideen & Co that exported mostly goat leathers to international markets particularly Europe. The business was so good and as well as his heartresulting increased charity and philanthropy.

The Madurai Jamal Mohideen of Chennai and Mohamed Mian Rawther of Tiruchirappalli were good friends as both were in leather tannery and export business. They had great concern for the well-beings of under privileged backward communities. They responded to requirement of the community with open heart with their hard earned wealth. They worked together with many light minded community leaders and Islamic scholars resulting first educational establishment called "Majlis Ulama" (Islamic Scholars' Council) at Tiruchirappalli in the year 1917. Alarge land bank of around 100 acres belonging to Mohamed Mian Rawther was donated while the iconic moorish style main building was funded by Jamal Mohideen Sahib for the Majlis Ulama activities.

Unfortunately while the building was under construction N. Mohamed Mian Rawther passed away in the year 1920 and subsequently Madurai Jamal Mohideen also passed away in the year 1924. The completion of the Jamal Mohideen building was done by Janab Jamal Mohamed, the popular and dynamic son of Janab Madurai Jamal Mohideen Sahib.

Janab Jamal Mohamed Sahib completed the construction of the iconic main building in 1924 and it was declared opened by Khan Bahadur Sir Muhammad Usman, the first Governor General of the Madras Presidency. In this Majlis Ulama building the Arabic School and Orphanage were started in the year 1924 under the patronage of Majlis Ulama.

Consequently, the Majlis Ulama's Arabic College and Orphanage were the first educational institution sinitiated at the Majlis Ulama main building in the large campus of 100 acres and the founders were Janab N. Mian Rawther Sahib of Tiruchirappalli and

Janab Jamal Mohideen Sahib of Chennai.

## 2.3 Janab Madurai Jamal Mohamed Sahib (1882 – 1949)

Madurai Jamal Mohamed was born in February 1882 at Muthayal Pettai in Chennai for Madurai Jamal Mohideen and Kiluru Beevi. Upon his birth, his father's business has grown many fold as well as his charity. He studied initially at MuthiyaluPettai High School and then Madras Christian College High School in Chennai. He did very well in schools and awarded many first prizes (Mohamed Ismail, 1981).

When he was doing 5th Standard, his father involved him in the business and subsequently arranged marriage for him at the age 16 years with Aisha Beevi. Due to his shrewd business skills his father's business and wealth had increased tremendously. He also followed his father's foot step and involved in many social, educational, business and political activities.

He travelled to many European countries excluding to Russia and met many European leaders,who had greatly appreciated Janab Jamal Mohamed's knowledge, business skills, understanding of world economic affairs and political climate.

In appreciating his capability,then Prime Minister of Turkey Honorable Mr.Mohamed Shoukath Badsha invited him to Turkey to conduct his business which he refused politely as he preferred to be in India. When he met then Prime Minister of Germany His Excellency Mr. VanBethmin Halwek, Janab Jamal Mohamed Sahib had cautioned him of possible World War I. The Prime Minister of Germany admired his knowledge on international politics and wisdom to predict political scenario in Europe (Mohamed Ismail 1981).

Upon returned from Haj trip, Janab Haji Jamal Mohamed Sahib advised his father to stock pile more leather as World War II was looming which would provide greater opportunity to reap more profit due to possible increase in price in the European market. As he predicted, World War I was happened and aftermath of the warthe leather price went up tremendously and company gained huge profit. The year 1922 was the peak of their business and almost half of the goat leather from South India exported through their company. His father Janab Jamal Mohideen Sahib was happy and had high regards for his son and recommended other business man to follow his son's advice for their imminent success (Mohamed Ismail, 1981).

Janab Jamal Mohamed Sahib was very knowledgeable and kind hearted man. His charity and philanthropy were incomparable of his time. His charity to Red Crescent Society of Turkey and support for Jamia Millia of Delhiare commendable ones. He was appointed to Legislative Assembly of Central Government of India and remained the President of Business Council of India for two decades. He lead India's trade and industry mission at the Second Round Table Conference held in London between the years 1930-1931. The other two members were Mr. Purshothamdos and Mr. G.D. Birla. Janab Jamal Mohamed Sahib was held in high esteem by both Muslim and Hindu communities of India at large.

When he worried about the backwardness of muslim communities in South India, he established Jamalia Hostel infrontof his Bunglow in Chennai and provided free accommodation and food for muslim students in addition to monthly stipend for their travel and food expenses. Some of the students who stayed and studied at the Jamalia Hostel later became outstanding government servants and leaders of the country.

Janab Jamal Mohamed and Janab Khaja Mian Rawther continued their team work in the Majlis Ulama and strengthened the institutions initiated by their parents. He was the President of Majlis Ulama for two decades until 1948 while Janab Khaja Mian Rawther as Vice-President. During this period Janab Jamal Mohamed mooted the idea of a College with modern educational infrastructure and facilities upon seeing muslim backwardness in education and also upon witnessing a few muslim institutions being established in other parts of India.

Finally, they decided to establish Jamal Mohamed College for muslims at the Majlis Ulama Campus in the year 1948. However in the year 1949 Janab Jamal Mohamed Sahib had passed away resulting his eldest son Janab M. Jamal Mohideen Saheb had to complete the task initiated by his father.

### 2.4.1 JanabMadurai Jamal Mohideen Sahib (1931- 1975)

Jamal Mohamed Sahib had several children for his first wife Aisha Beevi. The notable ones among them are Jamal Mohideen Sahib, the founder Secretary and Correspondence of Jamal Mohamed College (JMC) between the years 1951 to 1966 and also the President of JMC between the years 1954 to 1975 upon sad demise of the founding President Janab Khajamian Rawther. Another notable son was Janab M.Jamaludin Sahib, the 2nd Secretary and Correspondent of JMC between the years 1966 to 1973.

The Jamal Mohideen Sahib was born on 15th August,1904. He grew under the shadow of his dynamic father Jamal Mohamed Sahib. While he was actively involved in business together with his father he was also active in social and political arena. He was a member of Indian National Congress and elected to State Assembly (MLA) from Dindigul constituency from 1957 to 1962. Later he was elected Member of Parliament (MP) to Raja Sabhaat Central Government of India from 1962 to 1968.

Jamal Mohideen Sahib who was already in the executive committee and Vice President of Muslim Education Association of South India (MEASI) which was planning to establish“The New College” in Chennai. He pursued his father’s proposal with Janab N.M. Khaja Mian Rawther to establish Jamal Mohamed College at the Majlis Ulama Campus in Tiruchirappalli. Janab N.M. Khaja Mian Rawther had in turn delegated the responsibility to M. Jamal Mohideen to complete the task initiated by his popular wealthy father Janab Jamal Mohamed Sahib.

Subsequently the college was approved and named after his father Janab Jamal Mohamed Sahib. It was declared opened at the main building on 11 July 1951 by Thiru P.S. Kumarasamy Raja, then Chief Minister of Tamil Nadu while His Excellency the Maharaja of Bhavanagar who was the then Governor of Madras graciously presided. Though the college concept was mooted by Janab Jamal Mohamed Sahib but it was his beloved son Janab M.J. Jamal Mohideen Saheb who spearheaded and completed the task together with Janab N.M. KhajaMian Rawther. The Arabic College and Orphanage which operated were shifted elsewhere in the MajlisUlama campus.

The Jamal Mohamed College was governed by a “Society of Jamal Mohamed College” which is consisting of selected members of both founders’ families which in turn delegated management of the college to a Management Committee consisting of elected members from founders’ families who in turn include few selected members from public, representative from Barathidasan Univeristy and the sitting Principal as Ex-Officio member. Its first founding president was Janab N.M. Khajamian Rawther,Sahib,founding Secretary and Correspondent was Janab M.JamalMohideen Sahib and founding Treasure was Janab N.M.K Abdul Samad Sahib.

With support of Janab Khajamian Rawther the Jamal Mohamed College was born in the year 1951, thanks to untiring efforts of Jamal Mohideen who had great concern for weak and oppressed as “The Hindu” called in 28 August, 2004. It further says that many occasion Janab Abdus Samad, the founding Treasure had to spent from his pocket to bail out the college whenever it faced difficulties in paying salaries to the teachers.

Janab Jamal Mohideen Saheb was married to Janaba Jamal Fathima. They had 4 boys and six daughters. The notable one among them was Late Janab Abdul Gafoor Saheb, the fourth Correspondence and Secretary of JMC.

### 2.4.2 Janab Madurai Jamaluddin Sahib

Janab Madurai Jamaluddin Sahib was another son of Janab Jamal Mohamed Sahib and younger brother to Janab Jamal Mohideen Sahib. He was elected to the management committee as Secretary and Correspondence between the years 1966 to 1973. I remember seeing him when I was trying to obtain Pre-university admission (PUC) in the year 1972 and also during my admission for B.Sc in Botany in the year 1973.

Upon his sudden demise, Janab N.M.K.Khader Sahib was elected and remained as Secretary and Correspondence from 1973-1988, and during this period I had completed my Bachelor degree in 1976 and later appointed as an Assistant Professor at the Department of Botany between the years 1978-1981 and Assistant Warden at the Khajamian Hostel between the years 1979 to 1981. I had many opportunity to meet the humble Janab N.M.K Khader Sahib.

### 2.5 Janab M.J. M. Abdul GafoorSaheb (1931-2015)

Janab M.J. Abdul Gafoor Saheb was born on 15th December, 1931 in Jamaliya in Chennai as first son of Janab M.J. Jamal Mohideen Saheb and Janab aJamal Fathima. He studied at BRBCC High School in Perembalur until Secondary School Leaving Certificate (SSLC) and then Intermediate for a year at Mohamadan Arts College Chennai. He did not complete his Intermediate due to his involvement in business and also JMC activities along with his father Janab Jamal Mohideen Sahab since 1949.

Though he did not studied further or established successful business like his father and grandfather, but he had specific interest on sports particularly in cricket. He established the Perembur United Cricket Club together with his friends in the year 1948 affiliated with Madras Cricket Club, which was re-named later as Tamil Nadu Cricket Association. He was an active member of Tamil Nadu Cricket Association since its establishment and elected to the executive committee for eight (8) consecutive years. He remained only muslim ever elected and reached to the executive committee in the Tamil Nadu Cricket Association.

He served the JMC for a longer period than anyone else at different capacity, including as Treasurer between the years 1973 to 1989 almost for 16 years, and Secretary and Correspondence between the years 1989 to 2011 for almost 22 years. Altogether, he served in the management for almost 40 years in the two positions. He lived permanently in Chennai and travelled to Tiruchirappalli as and when required.

He was a very simple and humble man, which I know when he was visiting Malaysia in the year 1999 and stayed with us for few days in Petaling Jaya. He did not have any qualm about food though he enjoyed our food made by Indian maid and sleeping in a simple room with other delegates from JMC.

After a few days in Malaysia, we travelled in my car to participate with JMC Alumni meeting in Singapore. It was a memorable trip listening to the stories of Janab Abdul Gafoor Sahib with background of old tamil melodies. Then I realized that how much he engrossed with his sport of cricket and his interaction with all the top Indian cricket players including the former captain the Nawab of Pataudi, Mansor Ali Khan. He told us in detail the romance of the popular Bollywood actress Sharmila Tagor with Captain Pataudi Nawab, which would come to my mind vividly whenever I think about him. Since his Malaysia and Singapore trips we became very close as family friends and shared a lot of personal interests which brought me back to JMCmuch closer.

With such a fatherly relationship with him and also with some of my former teachers and colleagues including Prof M.M Shahul Hameed, who was then Vice Principal of JMC, I donated IRS 10 lakhs to JMC in the year 2010 for construction of first floor of the MBA post graduate block which is named after my father as "Irumeni OMS Ibrahim Memorial Hall".

Whenever I go to India I visit him either in Chennai or Tiruchirappalli. Though he looked very simple and unassuming with his trade mark white lungi, long sleeve shirt and with his white cap and bear, he dared to meet any powerful ministers, politicians, officials and popular figures and handle them well on behalf of the college.

He might not be qualified educationists but he remained committed to cause of education for poor and backward communities without any fear and favor. He remained cordial and accommodative with members of other founders, management and academic staff. Such a simple human of humility departed the world without any sign of sickness on 3rd May 2015 at the age of 84 in Chennai.

Janab M.J Nordeen Sahib who was the last President of Management Committee between the years 1996 - 2014 and Janab M.J. Mohamed Bilal Sahib the current President since the year 2014 were the humble sons o f late Janab M.J. Jamaluddin Sahib and cousin brothers of Janab M.J. Abdul Gafoor Sahibn who in turn married their sister.

## 2.6 Janab M.J. Jamal Mohamed Sahib

The current Treasurer and former Assistant Secretary, Janab Jamal Mohamed Sahib is the first son of Janab M.J.M. Abdul Gafoor Sahib. He was born on 23 August, 1957 and married to Janaba Safiqa who was born in 1963. He worked initially in Apparel Export Council in the Ministry of Commerce, Chennai between the year 1979 to 1981. In the 1981 he joined and worked Reserve Bank of India until his retirement in August 2017. Now he has devoted most his time for JMC and working together with current Secretary and Correspondence Janab Dr Khaja Najumudeen Sahib, to develop the College to the next level.

## 2.7 Conclusion

The Jamal Mohamed College since its humble beginning in year 1951, it has grown many folds steadily with positive outlook with support of Indian Government Institutions and public at large. It has produced hundreds and thousands of graduates especially from under privileged backward communities irrespective of religious affiliations. The outstanding performance and success of JMC was mainly due to the following factors.

1. The first and foremost is the blessing from the Almighty Allah due to good intention, generosity and sacrifices of the founding fathers including past and present governing council, management committee, principals and teachers.

2. The subsequent generations of the founding fathers have continued to govern the college with same spirit of charity and generosity with high ethics and values in appointing members to management committee, recruiting teachers and students, interacting with government institutions and public at large.

3. Most importantly they maintained education standard and provided priority to underprivileged communities based on merits without capitation fees. Such magnanimity was reciprocated with moral support and generous fund from public and alumni which enabled infrastructure development and scholarship for the poor students.

4. The JMC had always maintained high standard of education by introducing new and relevant courses of current interest especially at the post graduate level with well-educated and trained academic staff which ultimately enhanced over all performance of the college compared to other colleges in the region.

5. Though the JMC was established as muslim minority institution, the college management did provide opportunity for all the needy students irrespective religious affiliation. I know since the beginning and until now the number of non-muslim students always more than muslim students, and considerable number of non-muslim teachers remained and still recruited by JMC Management.

5. Though it is a muslim institution it followed certain level of moderation in all level and focused only on education and infrastructure development of the college without embarking on any extremism which received attention of the government, public and alumni at large which facilitated necessary support to the college in the time of the need.

**REFERENCES**


1. JMC (1979). The Jamal Silver Jubilee Sournir
2. JMC (1981). Vallal Jamal Mohamed. The Jamal 1981. Page 85-89 by Mohamed Ismail, E.P, Former Principal, JMC.
3. JMC (2000-2001). Golden Jubilee Celebrations 2000-2001. Founders' Day Special Issue.
4. The Hindus (2004):
5. Jamal Mohamed (2018). Personal Communication with Jamal Mohamed. Current Treasurer.
6. JMC (2018) . http://. jmc@edu.my.
7. JMC (2018). Jamalian Times.

   http.//www.jmconline.in/academic.
8. JMC (2018) Profile of the Society Jamal Mohamed College, Tiruchirappalli.
9. Unknown ( ). Chapter V: Muslim philanthropic efforts and education in Tiruchirappalli and Thanjavur Districts.
10. Unknown ( ). Chapter VIII:Eminentmuslim personalities of Tamil Nadu.


**Table 1:** Chronology of College Management Since Its Establishment

**PRESIDENT :**

| | | |
|---|---|---|
| 1 | Janab N.M. Khajamian Rawther Sahib | 1951 - 1954 |
| 2 | Janab M. Jamal Mohideen Sahib | 1954 - 1975 |
| 3 | JanabHajeeIr.M.B.Abdullah Sahib | 1975 - 1989 |
| | JanabHajee K.A. Kader Sahib | 1989 - 1990 |
| 4 | JanabK.A.K. Abdul Khaliq Sahib | 1990 -1995 |
| 5 | Janab M.J. Nordeen Sahib | 1996 - 2014 |
| 6 | Janab M.J. Jamal Mohamed Bilah Sahib | Since 2015 |

**SECRETARY AND CORRESPONDENCE :**

| | | |
|---|---|---|
| 1 | Janab M.J. Jamal Mohideen Sahib | 1951 - 1966 |
| 2 | JanabM.Jamaludeen Sahib | 1966 - 1973 |
| 3 | JanabK.A. Kader Sahib | 1973 - 1988 |
| 4 | JanabM.B. Abdullah Sahib | 1988 - 1989 |
| 5 | Janab M.J. M. Abdul Gafoor Saheb | 1989 - 2011 |
| 6 | Janab N.M.K. KhajaNajumudeen | Since 2011 |

**TREASURER :**

| | | |
|---|---|---|
| 1 | Janab N.M.K. Abdul Samad Saheb | 1951 - 1964 |
| 2 | Janab K.A. Kader Saheb | 1964 - 1973 |
| 3 | Janab M.J .M. Abdul Gafoor Saheb | 1973 - 1989 |
| 4 | Janab K.A. KhaleelSaheb | 1989 - 2017 |
| 5 | Janab M.J. Jamal Mohamed Saheb | Since 2017 |

**ASSISTANT SECRETARY**

| | | |
|---|---|---|
| 1 | Janab N.M.K. KhajaNajumudeen Saheb | 2003 - 2011 |
| 2 | Janab M.J. Jamal Mohamed Saheb | 2011 - 2017 |
| 3 | Dr. K. Abdul Samad Saheb | Since 2017 |

**PRINCIPAL**

| | | |
|---|---|---|
| 1 | JanabHajee Prof M.J. Mohamed Sayeed Sahib | 1951 - 1970 |
| 2 | Prof. E.W.P. Thomas | 1970 - 1971 |
| 3 | Prof E.P Mohamed Ismail | 1971 - 1985 |
| 4 | Prof Dr C. Nainar Mohamed | 1985 - 1989 |
| 5 | Prof Hajee N. Abdul Samadh | 1989 - 1998 |
| 6 | Prof Dr K. Abdullah Basha | 1998 - 2003 |
| 7 | Prof Dr M. Sheik Mohamed | 2003 - 2011 |
| 8 | PfrofDr R. KhaderMohideen | 2011 - 2013 |
| 9 | Prof. Dr A.M. Mohamed Sindhasha | 2013 - 2014 |
| 10 | Prof Dr S. Mohamed Salique | 2014 - 2017 |
| 11 | Prof. Dr. S. Mohamed Ismail Mohideen | Since 2017 |




**Figure 1: Genelogy of Madurai Jamal Mohamed Ambalam Family**

# வள்ளல் ஜமால் முகம்மது

பேராசிரியர் இ.ப. முகம்மது இஸ்மாயில்
மேனாள் முதல்வர், ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சிராப்பள்ளி–20

நன்றி : Golden Jubilee Celebrations 2000-2001
Founders Day Special Issue

உலகில் பல கோடி மக்கள் வாழ்கின்றனர். இவருள் வயிற்றுக் கவலையால் வருந்துவோர் மிகப் பலர். வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்ற ஓயாது உழைப்போர் பலர். மறவழியில் பிறர் பொருளைப் பறிப்போர் பலர். இரந்து வாழ்வோரும் பலர். இல்லையென வருவோர்க்கு இல்லையெனாது ஈவோரும் உளர். இவருள்ளும் வரையாது வழங்குவோர் வள்ளல் ஆவார். கரம் சிவக்கக் கொடை வழங்கியவருள் வள்ளல் ஜமால் முகம்மது குறிப்பிடத்தக்கவர் ஆவார்கள்.

## பிறப்பும் சிறப்பும்

தோன்றில் புகழொடு தோன்றுக என்றார் வள்ளுவர். கருவில் திருவுடைய சான்றோராக வணிக மன்னர் ஜமால் முகைதீன் அவர்களுக்கும் கிளுருபீவி என்றும் மாதரசியார்க்கும் கி.பி. 1882–ம் ஆண்டு பிப்ரவரியில் சென்னையில் நம் வள்ளல் ஜமால் முகம்மது பிறந்தார்கள். இவர்களின் பிறப்பால் வாணிபம் சிறந்தது. பொருள் நலம் சிறந்தது, சிந்தனை சிறந்தது, அறம் சிறந்தது, அரசியல் சிறந்தது, அருளியல் சிறந்தது.

விளையும் பயிர் முளையிலே என்பர். வள்ளல் ஜமால் முகமது இளமையிலேயே அறிவுக் கூர்மையும் சுறுசுறுப்பும் கொண்டு விளங்கினார்கள். சென்னை முத்தியாலுபேட்டை உயர்நிலைப் பள்ளியிலும் பின்னர் சென்னை கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியிலும் பயின்றார்கள். வகுப்பில் முதல் மாணவராகத் திகழ்ந்துள்ளார்கள். முதல் பரிசுகள் பெற்றுள்ளார்கள். ஐந்தாம் படிவம் படித்த போது தந்தை வாணிபத்தில் துணை புரிய அழைத்துக் கொண்டார். 16–ம் வயதில் திருமணமும் நடத்தி வைத்தனர்.

## உலகப் பயணமும் உயர்ந்த அறிவும்

உலக நாடுகளில் பலவற்றைச் சென்று பார்த்து வர விரும்பினார்கள். ருஷ்யா நீங்கலாக ஐரோப்பிய நாடுகள் அனைத்தையும் பார்த்து வந்தார்கள். சுற்றுப்பயணத்தின் போது உலக தலைவர் பலர் இவர்களின் அறிவுத் திறத்தைக் கண்டு வியந்தனர். துருக்கியின் பிரதமர் முகமது ஷௌகத் பாஷா இவர்களின் அறிவுக் கூர்மையைப் பாராட்டித் தம் நாட்டிற்கு வந்துப் பதவி வகித்துப் பணியாற்றும்படிக் கூறினார். இதனைக் கேட்ட வள்ளல் தன் நாட்டிலிருந்து வாணிபம் செய்து வாழ விரும்புவதாகப் பதிலளித்து விட்டார்கள். ஜெர்மனி நாட்டுப் பிரதமர் வான்பெத்மின் ஹால்வெக் என்பவரைச் சந்தித்தபோது நம் வள்ளல் உலகப்போர் நிகழும் என்று பல காரணங்களைக் காட்டி விளக்கினார்கள். இவர்களுக்கிருந்த பரந்துபட்ட உலக அரசியல் அறிவையும் அனுமானிக்கும் திறத்தையும் கண்டு ஜெர்மன் பிரதமர் வியந்துபோய்விட்டார்கள்.

## வணிகமும் வளர்ச்சியும்

புனித ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றிவிட்டு நாடு திரும்பினார்கள். தந்தையிடம் உலகப் போர் மூளும் என்றும் தோல்களை வாங்கி இருப்பு வைத்தால் இலாபம் அதிகம் பெறலாம் என்றும் கூறினார்கள். மூத்த மகனின் ஆலோசனையில் தந்தைக்கு நம்பிக்கை அதிகம். அவ்வாறே செய்தனர். முதல் உலக மகாயுத்தமும் மூண்டு பேரிழப்பை உண்டாக்கி முடிந்தது. தோல் விலை பன்மடங்காக ஏறியது. சில கோடிகளுக்கு அதிபதியாயினர். 1922–இல் இவர்களின் வாணிபம் உச்ச நிலையை எய்தியது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் ஆட்டுத் தோலின் பாதி இவர்களின் மூலமே ஆயிற்று. ஹாஜி ஜமால் முகைதீன் தன் அருமை மகன் ஜமால் முகமது இவர்களின் ஆலோசனையை மதித்துப் போற்றுவார். பிற வணிகரும் கேட்டு நடக்க வேண்டும் என்று விரும்புவார்.

## கொடையும் வியப்பும்

'செயற்கரிய செய்வர் பெரியர்' என்று வள்ளுவர் பெரியார்க்கு இலக்கணம் கூறுகின்றார். நம் வள்ளல் ஜமால் முகம்மது செயற்கரிய சிறந்த செயல்களைச் செய்துள்ளார்கள். துருக்கியிலிருந்து செம்பிறைத் தூதுக்குழு நிதி வேண்டி நம் நாடு வந்திருந்தது. டெல்லியில் புகழ் பெற்ற வைத்தியராக இருந்த ஹக்கீம் அஜ்மல்கான் சமுதாயப் பணியில் சிறந்து விளங்கினார். நம் வள்ளல்

நோய்வாய்ப்பட்டிருந்த தம் தந்தையை ஹக்கீம் சாயபுவிடம் அழைத்துச் சென்று வைத்தியம் பார்த்து வந்தார்கள். அப்போது நம் வள்ளலை நோக்கி முடியுமானால் செம்பிறைக் குழுவிற்கு நிதி சேர்க்க ஏதேனும் செய்யுங்கள் என்று கூறினார். அவ்வளவுதான், ஒரு லட்சம் ரூபாய்குரிய செக். ஹக்கீம் சாகிப்பிற்கு ஒரே வியப்பு, அந்த காலத்தில் லட்ச ரூபாய் என்றால் வியக்காமல் இருக்க முடியுமா ?

இன்னொரு வகையான வியத்தகு நிகழ்ச்சியும் நடைபெற்றது. ஹைதராபாத் நிஜாம் மன்னர் சென்னை ஜமாலியா அரபி மதரஸாவிற்கும் வருகை புரிந்தார். குதூகலமாக வரவேற்கப்பட்டார். மதரஸாவின் மண்டபத்தில் வந்தமர்ந்தார். குர்ஆன் இனிமையாக ஓதப்பட்டது. கேட்டு மகிழ்ந்த மன்னர் ஓதிய முறையைப் பாராட்டினார். சிற்றுண்டி வழங்கப்பட்டது. அதன்பின் மன்னர் நம் வள்ளலை நோக்கி 'இந்த ஸ்தாபனத்திற்கு உங்களின் நிதி நிலமை என்ன ?' என்று வினவினார். (நிதி வேண்டின் தருகிறேன் என்பதுதான் இதன் குறிப்புப் பொருள்) நம் வள்ளல் ஜமால் முகம்மது அடக்கமாக 'சில லட்சங்கள் உண்டு அது போதும்' என்று பதில் அளித்தார்கள். எப்படிப்பட்ட இதயம்! செல்வம் என்பது சிந்தையின் நிறைவு, போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பவற்றிற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு! கொடுக்கப் பிறந்தவர் பிறரிடம் எடுக்கத் துணிவாரோ ?

டெல்லியில் ஜாமியா மில்லியாவின் முதல்வராக டாக்டர் ஜாகிர் ஹுசைன் இருந்தார். ஹக்கீம் அஜ்மல்கான்தான் இதன் ஸ்தாபகத் தலைவர். இந்த ஸ்தாபனம் தேசீய உணர்ச்சியை வளர்த்து வந்தது. இதில் பணியாற்றியவர்கள் தேசீயத் தலைவர்கள். ஆதலின் ஆங்கில அரசுக்கு அஞ்சி இதற்கு தந்து வந்த ஆதரவைச் செல்வர் பலர் நிறுத்தி விட்டனர். ஸ்தாபனம் வளர்ச்சி குன்றியது. கடன் பெருகியது. ஹக்கீம் அஜ்மல்கான் சாகிபிற்கும் உடல் நலங்குன்றியது. ஆதலின் ஸ்தாபன வளர்ச்சியைப் பேணும் பொறுப்பு ஏற்ற டாக்டர் ஜாகிர் ஹுசைன் நம் வள்ளல் ஜமால் முகம்மதைப் பார்த்தார். பின்னர் மௌலானா அபுல்கலாம் ஆசாத், டாக்டர் அன்சாரி ஆகியவருடன் இரு நாட்கள் இருந்துவிட்டு நிதி வசூலுக்காக சென்னை வந்தார். இவரும் இரு நாட்கள் இருந்துவிட்டு சென்றனர். டாக்டர் ஜாகிர் உசேன் மட்டும் சில நாட்கள் வள்ளல் ஜமால் முகம்மதுடன் தங்கி நிதி சேர்க்கும் பணியில் ஈடுபட்டார். அப்போது தாங்கள் யாரையும் பொருள் கேட்பதை நான் விரும்பவிலை. தாங்கள் இறைவனின் வேலையைச் செய்கின்றீர்கள். தங்களுக்கு வேண்டிய பொருளைத் தருவது எங்கள் பொறுப்பாகும் என்று கூறிவிட்டுப் பலரிடம் சென்று கேட்டு உறுதி பெற்று அவர்கள் தரும்வரை காத்திராமல் தாமும் பெருந்தொகை போட்டு ஒரு செக் எழுதிக் கொடுத்து அனுப்பினார்கள். இப்பெரு நிதியால் ஜாமியாமில்லியாவின் கடன் தீர்ந்தது. தடையின்றி ஸ்தாபனம் வளர்ந்தது. வள்ளல் ஜமால் முகம்மதின் பேருதவி டாக்டர் ஜாகிர் ஹுசைனை வியப்பில் ஆழ்த்தியது.

அவர்கள் உதவி மட்டும் தரவில்லை, உயர்ந்த நட்பையும் தந்தார்கள். அது உள்ளார்ந்த ஆன்மீகச் செல்வமிகுந்த ஒரு மாமனிதரின் நட்பாகும். செயல்களையும் மனிதர்களையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் சான்றோரின் நட்பாகும்.

ஆன்மீக அகப்பார்வையினால் படைப்புகளின் மதிப்புக்களை ஊடுருவி அவை சூழ்ந்துள்ள ஒரு தெளிவான மெய்ப்பொருளிடம் செலுத்தும் பெரியவரின் நட்பாகும். கல்வி அரசியல் சமயம் போன்ற பல பொருட்கள் பற்றியும் பேசுவார்கள் என்று பாரதத்தின் குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர். ஜாஹிர்ஹுசைன் மனம் நெகிழ்ந்து கூறியுள்ளார்.

## வட்டமேஜை மாநாடு

நம் வள்ளல் ஜமால் முகம்மது புகழ்பெற்ற வணி மேதையாவார்கள். தென்னிந்திய தோல் வர்த்தகரின் தனிப் பெருந்தலைவர். தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றினார்கள். 1931–இல் மத்திய சட்டசபையின் உறுப்பினராகவும் இந்திய வர்த்தகம் தொழில் கழகங்களின் கூட்டமைப்பின் தலைவராகவும் திகழ்ந்தார்கள். இதன் காரணமாக இலண்டன் மாநகரில் நடைபெற்ற இரண்டாவது வட்டமேஜை மாநாட்டிற்கு மூன்று வர்த்தவர் அடங்கிய குழுவிற்குத் தலைவராகச் சென்று கலந்து கொண்டார்கள். ஸர். புருஷோத்தாசும், திரு. ஜி.டி. பிர்லாவும் மற்றிரு உறுப்பினராவர்.

## பொருளாதார நிபுணர்

நம் வள்ளல் ஜமால் முகமது பொருளாதார வல்லுநராவார்கள். குறிப்பாக ஸ்டெர்லிங் வீதத்தில் நிபுணராவார்கள். 1/6 வீதமாக ரூபாய் ஸ்டெர்லிங் வீதத்தை பிரித்தானிய அரசு மாற்றியது. (இதற்கு முன் நடைமுறையில் இருந்த வீதம் 1/4 ஆகும்) இம்மாற்றத்தால் நம் நாட்டவருக்கு வரும் இழப்பினை நம் வள்ளல் கடுமையாக எதிர்த்தார்கள். இந்தியா ஏற்றுமதி செய்யும் நாடாக இருந்தது. ரூபாய் ஸ்டெர்லிங் வீதம் 1/4 ஆக குறைந்து இருந்தால்தான்

ஏற்றுமதிப் பொருட்களுக்கு நல்ல ரூபாய் மதிப்பு கிடைக்கும். இதன்படி ஒரு பவுனுக்கு ரூ.15/– ஏற்றுமதிப் பொருளுக்குக் கிடைத்து வந்தது. மாற்றப்பட்ட விகிதத்தில் ஒரு பவுனுக்கும் ரூ.13.66தான் கிடைக்கும். லண்டனில் இந்திய அமைச்சில் நிதிப் பொறுப்பில் இருந்த ஸர். ஜார்ஜ் ஷர்ஸ்டர் என்பாரைச் சந்தித்து வாதாடினார். மன்னர் அரசுக்கு நிதி ஆலோசகராக இருந்த ஸர் ஹென்றி ஸ்ட்ரா கோஷ் என்பாரைக் கண்டு கூறும்படி சொல்லிவிட்டார். அவரிடம் சென்று எடுத்துரைதத்போது அவரால் பதில் கூறு முடியவில்லை. எனினும் வெள்ளையர் நலம் கருதி வள்ளலின் கருத்தினை ஏற்றுக் கொண்டாரல்லர். வள்ளல் போராட்டத்தை அத்துடன் நிறுத்திவிடவில்லை.

## இந்து முஸ்லிம் ஒற்றுமை

நம் வள்ளல் பரந்த உள்ளம் கொண்டவர்கள். இந்து முஸ்லிம்களிடையே வேற்றுமை நிலவியது. நாட்டின் விடுதலைக்குத் தடையாக இருந்து வந்தது நாட்டின் அமைதிக்கும் கேடு பயப்பதாக இருந்தது. ஆதலின் இருபெரும் சமயத்தாருக்கும் இடையே ஒற்றுமை நிலவ வேண்டும் என்றும் நம் வள்ளல் விரும்பினார்கள். லண்டனில் இருந்தபோது காந்தி – ஆகாகான் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்தார்கள். காந்தியடிகள் நம் வள்ளளிடம் அன்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தார். காந்தியடிகளின் புதல்வர் ஹீராலால் காந்தி நம் வள்ளல் இல்லத்தில் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்வியும் கவலையும்

நம் வள்ளல் சிறந்த கல்வியாளர் ஆவார்கள். கல்லாத மக்களைக் கண்டு உள்ளம் வருந்தினார்கள். ‘சீனம் சென்றாகிலும் கல்வி பெறுக’ ‘அறிவு பெறுவது ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண் மீதும் கடமையாகும்’ எனும் நபியின் அருள் மொழிகளை அடிக்கடி கூறுவார்கள். தந்தையார் சிறுவிய ஜமாலியா அரபி மதரஸாவின் வளர்ச்சியில் ஆர்வங்காட்டினார்கள். பொதுக்கல்வி பெரும் முஸ்லிம் இளைஞர் மார்க்க அறிவும் ஒழுக்கமும் கொள்ள வேண்டும் எனக் கருதி சென்னையில் தங்களின் மாளிகைக்கு முன்பாக 1927–இல் ஜமாலியா ஹாஸ்டல் ஆரம்பித்து நடத்தி வந்தார்கள். இங்கு இடைநிலை, இளங்கலை, முதுகலை ஆகிய வகுப்புகளில் மானுடவியல், அறிவியல், மருத்துவம் முதலிய பாடங்கள் எடுத்துப் பல்வேறு கல்லூரிகளில் பயிலும் முஸ்லிம் மாணவர்கள் தங்கிப் படித்து வந்தனர். இடமும் உணவும் இலவசம் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 7 முதல் ரூ. 10 வரை பொருளுதவியும் வழங்கப்பட்டது. இதில் தங்கிப் பயின்றவர்கள் பிற்காலத்தில் பிரின்சிபாலாகவும், மாவட்ட ஆட்சித் தலைவராகவும், பிரபல வழக்கறிஞர்களாகவும், உயர்ந்த அரசாங்க அதிகாரிகளாகவும் விளங்கியுள்ளார்கள்.

இந்த ஹாஸ்டலில் மகாகவி முகம்மது இக்பால், மௌலவி ஸையது சுலைமான் நதுஷா மௌலானா அப்துல் கலாம் ஆஸாத், டாக்டர். எம்.ஏ. அன்சாரி, டாக்டர். ஜாகிர் ஹுஸைன், ஜனாப். இஸ்மாயில்கான் (மீரட்) ஸர் இப்ராகீம் ரஹ்மத்துல்லா முதலிய கவிஞரும், அறிஞரும் தலைவர்களும் வந்து தங்கி உரையாற்றியுள்ளனர்.

இஸ்லாமிய உலகில் பிரசித்தி பெற்ற அறிஞர்களை அழைத்துத் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தச் செய்து மக்கள் கேட்டுப் பயனடையச் செய்துள்ளார்கள். இங்கிலாந்தைச் சேர்ந்தவரும் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாசிரியரும் இஸ்லாமிய ஞானச் செல்வருமான அறிஞர் மர்மதூக்பிக்தாலை அழைத்து இஸ்லாமியக் கலாச்சாரம் (Cultural side of Islam) எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தச் செய்தார்கள். சென்னை மாநகர மக்கள் கேட்டுப் பயனடைந்தார்கள். நாமும் படித்துப் பயனடையும் வண்ணம் அச்சொற்பொழிவுத் தொடர் நூல் வடிவம் பெற்றுவந்துள்ளது. மாபெருங்கவிஞர் சிந்தனைச் செல்வர் புரட்சிப் பேரறிஞர் டாக்டர். சர் முகம்மது இக்பாலை அழைத்து இஸ்லாமிய சிந்தனையில் புரணமைப்பு (Reconstruction of Islamic thoughts) எனும் பொருளில் எனும் பொருளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தச் செய்தார்கள். இப்பயனுள்ள பேச்சுத் தொடரும் நூல் வடிவம் பெற்றுள்ளது. நபிகள் நாயகத்தின் வரலாற்றை நன்முறையில் அமைந்த சிறந்த எழுத்தாளர் மார்க்க மேதை மௌலவி ஸையது சுலைமான் நத்வியை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தார்கள். ‘குத்பாத்தே–மதராஸ்’ என்னும் தலைப்பில் உருது நூலாக வெளிவந்துள்ளது. தங்களின் அலுவலகத்தில் தேனீர் விருந்து அமைத்து அடிக்கடி மார்க்க உரையாடல்களை நடத்துவார்கள். தென்னிந்திய முஸ்லிம் கல்வி சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தார்கள். அப்போது ஏழை முஸ்லிம் மாணவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி அதிகரிக்கப்பட்டது. சென்னை முகமடன் காலேஜ் என்று இருந்ததை நிறுத்திவிட அரசாங்கம் முயன்றபோது நம் வள்ளல் முயன்று மூட விடாமல் செய்தார்கள். திருச்சிராப்பள்ளியில் நடைபெற்றுவந்த மஜ்லிஸுல் உலமா வளர்ச்சியிலும் ஆர்வங்காட்டி வந்தார்கள். இவ்வாறு கல்வி வளர்ச்சியில் கரைகாணா ஆர்வமுள்ள வள்ளல் ஜமால்

முகம்மது பெயரில் ஒரு முதல் தரக்கல்லூரி நடப்பதற்கு அருட்பெருங்கடலாகிய அல்லாஹ் நாடிவிட்டான். 1951–ல் அறிவுத் தாகத்தால் அலைந்து வருவார்க்கு ஆவல் தீர அறிவைப் பருகுவதற்கு அறியதொரு துறையாகக் காவிரிக் கரையிலே ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு ஜமால் முகமது கல்லூரி என்று பெயர் சூட்டப்பெற்று வள்ளாரின் உள்ளவிழைவின்படி உயர்ந்த கல்வித்தொண்டு ஆற்றி வருகிறது. பி.ஏ., பி.காம்., பி.எஸ்.ஸி., எம்.ஏ., எம்.காம்., எம்.எஸ்.ஸி,. முதலிய பல வகுப்புகளில் பல பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆண்டுதோறும் பயனடைந்து வருகின்றனர்.

## அருளுள்ளம்

நம் வள்ளலிடம் உதவி வேண்டி வருவோர் வெறுங்கையுடன் திரும்புவதில்லை. இவர்களிடம மாதந்தோறும் தொடர்ந்து உதவி பெறுவோர் பலர். இங்கு மட்டுமில்லை உலகின் பல பாகங்களிலும் இருந்து பெறுவர் இவர்களின் தயாளத்தை அளவிட முடியாது. கீரை, பழங்கள் முதலியன விற்போர் கூறும் விலையையே கொடுத்து விடுவார்கள். யாராவது கேட்டால் ஏழைகள் அவர்களுக்குச் செய்யும் தர்மமாக இருக்கட்டும் என்று சொல்லி விடுவார்கள். இவர்களின் அருளுணர்ச்சிக்கு அளவே இல்லை. விற்பனைக்காக கடைகளில் பறவைகளைக் கண்டால் அவற்றை விலை கொடுத்து வாங்கி விடுதலை செய்து விடுவார்கள். தங்களின் வீட்டின் முன்னிருந்த பனை மரங்களில் பறவைகள் வந்து தங்கும் பொருட்டுக் கூடு கட்டி வைக்கச் சொல்லுவார்கள்.

## கவிதைக் கண்ணீர்

இத்தகு அருள்ளங் கொண்ட வள்ளல், வணிக மேதை, அரசியல் அறிஞர், பொருளியல் நிபுணர், கல்வி வளர்த்த செம்மல் 1949 நவம்வர் 7–ம் தேதி இவ்வுலகை நீத்து மறுமை எய்திவிட்டார்கள். உறவினர் அழுதனர், நண்பர்கள் கதறினர், ஏழைகள் ஏங்கினர்.

பொருட்டுரையில் அரசியல் பொதுமன்றில்
வர்த்தகத்தில் புதுமை சான்ற

தெருட்டுறையில் அறிவுரையில் செய்வினையில்
நடுநிலையில் செம்மை பூத்த

அருட்டுறையில் சீர்த்துயர்ந்த ஹாஜி ஜமால்
முகம்தென்றும் அண்ணால் வையம்

இருட்டறையில் நின்றிரங்க எங்கெழுந்தாய்
எங்கொளித்தாய் இயம்பாய் அப்பா

என்று சதாவதானம் செய்குத்தம்பி பாவலர் கவிதைக் கண்ணீர் வடிக்கின்றார்.

ஹிஜ்ரத் 15–ம் நூற்றாண்டின் தொடக்க விழாக் கொண்டாடும் நமக்கு, உயர்ந்த அறிவும் ஒழுக்க சீலமும் கொண்ட வளமும் குண நலமும் கொண்ட சிறந்த சான்றோரின் வாழ்வு நல்லுணர்வுகளைத் தருமாக.

## ஹாஜி ஜமால் முகம்மது சாகிப் அவர்கள் இறந்தபோது உலகின் நாலா பக்கங்களிலும் இருந்து வந்த அனுதாபச் செய்திகளில் முக்கியமானவை

**டாக்டர் ஜாக்கீர் ஹுசைன், ஜாமிஆ மில்லியா**

‘தாங்களடைந்துள்ள பெருந்துயரில் நானும் பங்கு கொள்ளுகிறேன். சேட்சாகிபின் மரணம் தேசத்திற்கே ஒரு நஷ்டம். ஆண்டவன் கட்டளை நடந்தே தீரும்.

**மௌலானா அபுல்கலாம் ஆஜாத், டெல்லி**

‘தாங்கள் தந்தி கிடைத்தது. தங்களின் தகப்பனார் மரணமடைந்ததை அறிந்து ஆழ்ந்த துக்கடைந்தேன். குடும்பத்தினருக்கு, எனது அனுதாபத்தை அறிவியுங்கள் மர்ஹூமவர்களின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

**இந்திய கவர்னர் ஜெனரல் ஸ்ரீராஜகோபால ஆச்சாரியார் (ராஜாஜி)**

‘ஓர் உத்தம புருஷரை நாம் இழந்து விட்டோம். உங்கள் குடும்பத்தினுடையவும், உங்கள் தகப்பனாரின் கொடையினால் பயன் பெற்ற எண்ணிறந்த மக்களினுடையவும் துயரில் நானும் பங்கு கொள்ளுகிறேன். அவர்களுடைய ஆன்மா ஆண்டவனுடைய சந்நிதானத்தில் சாந்தி அடைவதாக.

**இந்திய அரசியல் நிர்ணய சபைத் தலைவர் ராஜேந்திர பிரசாத்**

‘தங்கள் தந்தி எனக்கு கிடைத்தது. தங்கள் தகப்பனார் ஜனாப் ஜமால் முகமது சாயபு அவர்கள் மரணமானதை அறிந்து வருத்தமடைகிறோம். அவரது மரணம் தேசிய இந்தியாவுக்கே மகத்தான நஷ்டமாகும். தங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை அறிவித்துக் கொள்ளுகிறேன். இறந்து போனவரின் ஆன்மா சாந்திக்கு பிரார்த்திக்கிறேன்.

# வள்ளல் காஜாமியான்

பெரும்புலவர் முனைவர் சி. நயினார் முகம்மது
மேனாள் முதல்வர், ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 20

(நன்றி : Golden Jublee Celebration 2000 - 2001 Founders Day Special Issue)

நிலையாத இவ்வுலகில் நிலைத்து நிற்பது புகழ்தான். இதனை,

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்

பொன்றாது நிற்பதொன்றில்

– எனும் குறள் உறுதி செய்யும். இப்புகழும் ஈதலால் எய்தல் கூடுமென்பதனை,

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதிய மில்லை உயிர்க்கு

– எனும் வள்ளுவர் வாய்மொழி உணர்த்தும்.

நாடுகள் அழிந்து விட்டன. நகரங்கள் அழிந்துவிட்ன. மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் இருந்த இடம் தெரியாமல் இடிந்து போய் விட்டன. மன்னர்களும் மாமேதைகளும் கொடையளித்த பாரி, ஓரி, காரி, பேகன், சீதக்காதி போன்றவர்கள் இறந்தும் மக்கள் இதயங்களில் இருந்து வருகின்றனர். இவர்களைப் போலவே நம் கொடைவள்ளல் காஜாமியான் இராவுத்தரும் காலத்தை வென்று ஞாலத்தில் வாழும் புகழுடையவர்கள்.

இறைவன் இவ்வுலகத்தையும் மலை கடல் நதி முதலியவற்றையும் படைத்தபோது அமரர்கள் மலையின் நிலையைக் கண்டு வியந்து பல்லுயிரும் பல உலகும் படைத்தளிக்கும் பரம் பொருளிடம் மலையைக் காட்டிலும் வலியது உண்டா ? என்று வினவினர். ‘ஆம், இரும்பு மலையை உடைத்துவிடும்’ என்று இறைவன் பதிலளித்தான். ‘இரும்பைக் காட்டிலும் வலியது இருக்கின்றதா இறைவா’ என்று அமரர் தொடர்ந்தனர். ‘ஆம் நெருப்பு இரும்பை உருக்கிவிடும்’ என்று பதில் கிடைத்தது. ‘நெருப்பினும் வலியது உண்டா இறைவா’ என வேண்டிக் கேட்டனர் வானவர். ‘உண்டு, நெருப்பைத் தண்ணீர் அனைத்து விடுகிறது’ என்றான் இறைவன், கேட்டு வியந்த வானவர் ‘நீரைக்காட்டிலும் அரியது இருக்கவா செய்கிறது எம் இறைவா’ என்று வினவினர். ‘ஆம் இருக்கிறது, இடக்கைக்குத் தெரியாமல் வலது கை வழங்கும் கொடையே அது’ என்றுவானவர்க்கு விடையளித்தான் இறைவன் என்று வையத்தை வாழ்விக்க வந்துதித் வள்ளலிரசூல் திருவாய் மலர்ந்தருளினார்கள். இந்நாயக நன்மொழிக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு நம் வள்ளல் காஜாமிய்யான் இராவுத்தர் ஆரவாரமின்றி அறப்பணிகள் பல செய்துள்ளார்கள். அவர்களின் பெருஞ்செல்வம் ‘மருந்தாகித் தப்பா மரமாக’ எல்லோர்க்கும் பயன்பட்டது. எனவேதான் நம் வள்ளல் இறந்து பல்லாண்டுகள் ஆனபோதும் இன்றும் நம்மிடையே சிறந்து விளங்குகிறார்கள். என்றும் குன்றாத புகழ் ஒளியாக விளங்குவார்கள்.

## பிறப்பும் வளர்ப்பும்

ஏறத்தாழ நூற்றாண்டுகளுக்கு முன்னர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த எட்டயபுரம் முதலிய இடங்களிலிருந்து நானா மூனா குடும்பத்தார் திருச்சியில் குடியேறி வாழ்ந்து வரலாயினர். தோல் வியாபாரத்தில் ஈடுபட்டனர். இத்தொழிலில் சீராகப் பிரபல்யமும் அடைந்து வந்தனர். இக்குடும்பத்தில் ஜனாப் நல்லகனி இராவுத்தர் செல்வமிகுந்த சீமானாக விளங்கினார். இவரின் மகன் ஜனாப் முகம்மது மிய்யான் இராவுத்தர் வணிக வேந்தராகத் திகழ்ந்தார். இவரின் ஏகப்புதல்வராக நம் வள்ளல் கி.பி. 1880–ல் பிறந்தார்கள். கருவில் திருவுடையவராக (born genius) திகழ்ந்தார்கள்.

## பன்மொழிப் பயிற்சி

‘இளமையில் கல்’ என்னும் ஔவைப் பாட்டியின் அமுதவாக்கிற்கேற்ப இளமையில் முறையாகக் கல்விப் பயிற்சியை மேற்கொள்ளச் செய்தனர் பெற்றோர். ‘சீனம் சென்றாகிலும் சீர் கல்வி பெறுக’ என்பது நாயக நன்மொழி. நம் வள்ளலும் சென்னை கிறித்துவக் கல்லூரியைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளியில் பயின்று படிப்பிற்கு புள்ளி வைக்க நேரிட்டுவிட்டது. எனினும் நம் வள்ளல் காலத்தை விரையம் செய்துவிடவில்லை, பிறப்பிலேயே பெற்ற நுண்ணறிவும் அறிவு பெறும் ஆர்வமும் அவர்களை சும்மா இருக்கவிடவில்லை. பள்ளி செல்லாமல் சொந்த முயற்சியால் தமிழ், ஆங்கிலம், உருது, அரபு முதலிய மொழிகளில் நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றார்கள்.

## மார்க்க ஞானம்

மஸ்தான் சாகிப் பாடல்கள், கல்வத்து நாயகம் இயற்றிய உலூமுதீன், தற்கலை பீர் முகம்மது அப்பாவின் பாடல்கள், இமாம் கஸ்ஸாலியின் நூல்கள் முதலிய சூபி ஞான

நூல்களில் நம் வள்ளலுக்கு மிகுந்த ஈடுபாடுண்டு. இஸ்லாம் மார்க்கம் பற்றி நம் வள்ளிடம் உரையாடும் போதெல்லாம் தித்திக்கும் திருக்குர்ஆன் கருத்துக்களும் கதைகளும் மிளிர்வதைக் கண்டு வியந்தோர் பலர். இவர்களின் மார்க்க ஞானத்தில் தெளிவும், வலிவும், பொலிவும் பளிச்சிடும்.

## பொறியியல் நுட்பம்

நம் வள்ளல் பொறியியல் கல்லூரியிலோ தொழில் நுட்பக் கூடங்களிலோ சேர்ந்து பட்டம் பெற்றவர்களல்லர். ஆனால் பொறியியல் அறிவில் சிறந்து விளங்கினார்கள். பொறிகளின் அமைப்பு, செய்முறை பற்றிய நுட்பங்களைக் கூர்ந்து கவனித்து ஆராய்ந்து வந்தார்கள். பொறியியல் கல்லூரி மாணவர் நம் வள்ளலிடம் வந்து தம் ஐயங்களைத் தீர்த்துத் தெளிவு பெற்றுச் சென்றுள்ளனர். வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின் அடிப்படையில் தாமே பல பரிசோதனைகளைச் செய்துள்ளார்கள். குரோம் தோலுக்குப் பல வண்ணங்களையூட்டியுள்ளார்கள். களிமண்ணால் வார்ப்படங்களைச் செய்து அக்காலத்தில் பிரபல்யமாயிருந்த ஜெர்மன் இயந்திரங்களைப் போன்றே செய்வதில் முயன்று வெற்றியும் பெற்றுள்ளார்கள். தங்களின் தோல் பதனிடும் நிறுவனத்தை நவீன மயமாக்கி இந்தியாவிலேயே சிறந்த சில தோல் பதனிடும் நிறுவனங்களுள் ஒன்றாய் உயர்த்தினார்கள்.

## மருத்துவர்

சமூகப் பிணி மருத்துவராகி நம் வள்ளல் உடற்பிணி மருத்துவராகவும் திகழ்ந்து உதவி செய்துள்ளார்கள். சித்த வைத்தியம், யூனானி வைத்தியம் ஆகிய வைத்திய முறைகளை அனுபவ ரீதியில் கற்றுத் தெளிந்து தாமே மருந்துகளை ஆயத்தம் செய்தார்கள். தமக்கு பயன்படுத்தியதுடன் நில்லாமல் பிணியால் வாடிடும் வறிய ஏழைகளுக்கு இலவசமாக வழங்கி அவர் தம் நோய் வருத்தம் நீக்கினார்கள்.

## சிறந்த தேச பக்தர்

அக்காலத்தில் நம் நாடு அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டு அல்லலுற்றது. தேசத் தலைவர்கள் நம் நாட்டு மக்களுக்குச் சுதந்திர தாகத்தை ஏற்படுத்தி வந்தனர். காந்தியடிகளின் தலைமையில் தேசிய இயக்கம் சுடர்விட்டு பிரகாசித்தது. அந்நியப் பொருள் பகிஷ்காரம் நடைபெற்றது. நம் தமிழ்நாட்டுத் தேசியத் தலைவர்களாகத் திகழ்ந்த ராஜாஜி, ஈ.வே.ரா. பெரியார் போன்ற சான்றோர் தம் அணியில் சேர்ந்து தேசத் தொண்டாற்றினார்கள். நம் வள்ளல் மாபெரும் கதர் ஆலை ஒன்றை 50,000 ரூபாய் செலவில் நிறுவினார்கள். இத்தொகை அத்தனையையும் இழந்து விட்டார்கள். இது அந்தக் காலத்தில் நிகழ்ந்தது என்பதை எண்ணிப் பார்த்தால் நம் வள்ளலின் தியாகத்தின் பெருமை புலப்படும். இவரின் தேச பக்தி பலருக்கும் தெரியாது.

## முப்பெருஞ் சாதனைகள்

நம் வள்ளல் கர்ம வீரர். அடக்கமாக ஆனால் ஆக்கப்பூர்வமான பணிகள் பல புரிந்துள்ளார்கள். நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும், நம் சமுதாயத்திற்கும் நிலையான சேவைகளைச் செய்துள்ளார்கள், ஒப்பற்ற பயன்தரும் சில சாதனைகள் குறிப்பிடத்தக்கன. அவையாவன,

(1) மஜ்லிஸுல் உலமா

(2) ஜமால் முகம்மது கல்லூரி

(3) திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு

(4) முதரஸயே முஹம்மதிய்யா (பாலக்கரை)

## மஜ்லிஸுல் உலமா

தமிழகத்து முஸ்லிம்கள் மார்க்க விளக்கமற்று அறியாமை இருளில் மயங்கி அவதிப்பட்ட காலம் அந்தக் காலம். மார்க்க நெறிகளை மக்களுக்கு எடுத்துரைக்கும் வழிதுறைகள் ஏதுமில்லை. நெறி விளக்கம் அறிஞர் அவையொன்று தோன்றாதா என்று ஏங்கியிருந்த வேளையில் நம் வள்ளல் நற்றுணையாக அமைந்தார்கள். தமிழகத்துத் தலை சார்ந்த அறிஞர் பெருமக்களை அழைத்து அமைப்பொன்று காண விழைந்தார்கள். தமிழகத்தின் நடுநாயகமாக விளங்கும் திருச்சிராப்பள்ளியில் தென்னிந்திய மஜ்லிஸுல் உலமா சபை தொடங்குவதென முடிவு செய்தனர். காஜாமலைக்கு வடக்கில் ரேஸ் கோர்ஸுக்கு அருகில் தங்களுக்குச் சொந்தமான 124 ஏக்கர் நிலங்களை மஜ்லிஸுல் உலமாவிற்குக் கொடையாக வழங்கினார்கள். இன்று இந்நிலப்பரப்பு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பெறும். என்னே நம் வள்ளல் பெருந்தகையின் மனப்பரப்பின் சிறப்பு! 1914–ஆம் ஆண்டு ரகீம் சாகிப் தலைமையில் மஜ்லிஸுல் உலமா சபையின் தொடக்க விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

வள்ளல்ஜமால்முகம்மதுகுடும்பத்தார்இப்பரந்தநிலத்தில் சிறந்த கட்டிடம் கட்டிக் கொடுத்தார்கள். இஸ்லாமிய மார்க்க ஞானமுள்ள தகுந்த சொற்பொழிவாளர்களைத்

தரமான ஊதியத்தில் நியனம் செய்து வரச் செய்தார்கள். இத்துடன் ஓர் அனாதை ஆசிரமத்தை ஆரம்பித்து திக்கற்ற சிறுவர்களுக்கு உணவும், உடையும், உறையுளும் தந்து அறிவொளிப் பெறச் செய்தார்கள். மார்க்கக் கல்வியுடன் பொதுக்கல்வியும் புகட்டும் நோக்குடன் உயர் ஆரம்பப் பள்ளியும் தொடங்கினார்கள். தச்சுத் தொழில் போன்ற கைத்தொழிலையும் கற்பிக்க வசதி செய்தார்கள். இது நாளொரு மேனியாக வளர்ந்து காஜாமியான் உயர்நிலைப் பள்ளியாக இன்று உயர்ந்துள்ளது.

## ஜமால் முகம்மது கல்லூரி

அடக்கமாக ஆரம்பிக்கப் பெற்ற இந்த ஸ்தாபனம் இன்று தழைத்துக் கிளைத்துப் பூத்துக் காய்த்து கனிந்து குலுங்கிப் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்குப் பயளனிக்கின்றது,

நம் இளைஞர் அறிவு வேட்கை கொண்டு உயர்தரக் கல்வி பெறும் பொருட்டு கல்லூரிப் படிகளில் ஏறி இறங்கி இடம் கிடைக்காமல் துன்புற்றார்கள். ஆதலின் திருச்சிராப்பள்ளியில் மஜ்லிஸுல் உலமாக் கட்டிடங்களில் ஓர் உயர்தரக் கல்லூரி தொடங்க வேண்டும் என்று நம் வள்ளல் ஆர்வமுடன் முயன்றார்கள். 1951–இல் அந்நாள் சென்னை மாநில ஆளுநர் மேதகு பவநகர் மகாராஜா தலைமையில் முதலமைச்சர் குமாரசாமிராஜா ஜமால் முகம்மது கல்லூரியைத் திறந்து வைத்தார்கள். 220 மாணவர்களைக் கொண்டு ஆரம்பமான இக்கல்லூரியில் இன்று ஆண்டுதோறும் 2800 மாணவர்கள் பயின்று வருகின்றர். 18 ஆசிரியர்தாம் ஆரம்பத்தில் பணியாற்றினர். வளர்பிறையென இக்கல்லூரி வளர்ந்து வருகிறது. P.U.C., B.A., B.Sc., B.Com., M.A., M.Sc., M.Com., முதலிய வகுப்புகளில் கலை அறிவியல் பாடங்கள் பலவும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. மேலும் விலங்கியல் பாடத்தில் பட்டத்திற்கு ஆராய்ச்சிப் பிரிவும் இங்குண்டு.

பாலர்களுக்கு ஆங்கிலக் கல்வியும், மார்க்கக் கல்வியும் சேர்த்துப் புகட்டும் பொருட்டு சமத் இங்கிலீஷ் நர்சரி பள்ளியும் நடைபெற்று வருகிறது.

இம்மட்டோ ! இப்பகுதியில் திருக்குர்ஆனை மனனம் செய்து ஹாபில்களாகத் திகழ்வதற்கும் சிறந்த அரபிக் கல்லூரி ஒன்றும் அமைந்து அரும்பணியாற்றி வருகிறது.

இவ்வாறு ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி வரை பொதுக்கல்வி முதல், மார்க்கக் கல்வி வரை ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆண்டுதோறும் கற்று அறிவுச் சுடர்களாக விளங்கி வருகிறார்கள். நம் வள்ளல் உள்ளம் கனிந்து வழங்கிய நிலப்பரப்பில்தான் எத்தனை அறிவுப்பணிகள்.

## திருக்குர்ஆன் மொழி பெயர்ப்பு

எத்திக்கும் போற்றும் தித்திக்கும் திருக்குர்ஆனை நம் தமிழ் முஸ்லிம்கள் கிளிப்பிள்ளைகளைப் போன்று ஓதி வந்தனரே தவிர அதில் பொதிந்து கிடக்கும் பொருளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அறிவியலும், அரசியலும், பொருளியலும், அருளியலும் வாழ்வியலின் பிற இயல்புகளும் தம்மால் கொண்டு வாழ்வாங்கு வாழ வழி காட்டும் வான்மறையின் தேனுரையைத் தமிழறிந்தோர் ஓதி உணர்ந்து புரிந்து நடந்து பயன்பெற வேண்டும் எனும் பேராவல் நம் வள்ளலுக்கு உண்டு. ஆதலின் திருக்குர்ஆனைத் தமிழறிந்தோர் ஓதி உணர்ந்து புரிந்து நடந்து பயன்பெற வேண்டும் எனும் பேராவல் நம் வள்ளலுக்கு உண்டு. ஆதலின் திருக்குர்ஆனைத் தமிழ்மொழியில் பெயர்த்திடத் திட்டம் வகுத்து ஏற்பாடு செய்தார்கள். மிகுந்த பொருட்செலவில் மொழி பெயர்ப்புப் பணி 1924–ம் ஆண்டு தொடங்கியது. இதற்கென அச்சகம் ஒன்று தொடங்கப்பட்டது. மார்க்க அறிஞர்களாள ஆ.கா. அப்துல்ஹமீது பார்க்கவி, மௌலவி S.S. அப்துல் காதர் பார்கவி முதலியோர் மொழி பெயர்ப்புப் பணியினைச் செய்து வந்தார்கள். ஓர் அத்தியாயம் நிறைவுவுற்றதும் அச்சிட்டு வெளியிட்டார்கள். ‘இஸ்லாம் இயற்கை மதம்’, ‘இமாம் கஸ்ஸாலி’ முதலிய அறிய நூல்களும் வெளியிடப்பட்டன. இப்புனிதப் பணியில் ஈடுபட்டவர்களின் ஒத்துழைப்புக் குறைந்தமையால் மொழி பெயர்ப்பு பணி தடைபட்டது. இதனால் நம் வள்ளலின் உள்ளம் வருந்தியது.

## பண்பும் பயனும்

நம் வள்ளல் ஆற்றல் மிகுந்தவர்கள், ஆனால் அடக்கம் பொருந்தியவர்கள். செல்வம் நிறைந்தவர்கள், ஆனால் எளிமை மிகுந்தவர்கள். கொள்கையில் உறுதியானவர்கள், ஆனால் ஆரவாரமோ ஆடம்பரச் செலவோ எதுவுமிருக்காது. தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் என்றால் அழைப்பிதழும் அடிக்கமாட்டார்கள். விளம்பர வேடிக்கைகளும் இடம்பெறவிடமாட்டார்கள். இன்றியமையாவற்றைச் செய்துவிட்டு திருமண செலவிற்காக ஒதுக்கிய தொகையில் ஒரு பகுதியைப் பள்ளிவாசலுக்கோ, மதரஸாவிற்கோ, அனாதை ஆசிரமத்திற்கோ, கல்விக் கூடத்திற்கோ யாருக்கும் தெரியாமல் கொடுத்துவிடுவார்கள்.

கல்யாணத்திற்கென்ன ? காது குத்து, விருத்தசேதனம் போன்றவற்றிற்கும் வறட்டு கௌரவத்திற்காக கடன் வாங்கியும் விரயம் செய்து கஷ்டப்படும் இக்கால மக்களுக்கு நம் வள்ளல் நல்லதொரு வழிகாட்டியாவார்கள்.

இவ்வாறு நுண்ணறிவும் நூலறிவும் உடையவராய், திறமை மிகுந்த தொழிலதிபராய், செயற்கரிய சாதனைகள் செய்த சான்றோராய், தேச பக்தராய், சமுதாயத் தொண்டராய், தொண்டர்தம் தலைவராய், கரம் சிவக்க வாரி வழங்கிய வள்ளலாய், குணகன்றாய், வாழ்வாங்கு வாழ்ந்த நம் வள்ளல் காஜாமியான் தம் 73–ம் வயதில் 1954–ல் காலமானார். எனினும் கொடையால் தொண்டால் பெரும் புகழால் காலத்தை வென்று விட்டார்கள்.

பாலக்கரை பரிமள சுன்னத் இருக்கும் காலமெல்லாம், மஜ்லிஸுல் உலமா இருக்கும் காலமெல்லாம், ஜமால் முகம்மது கல்லூரி இருக்கும் காலமெல்லாம் நம் வள்ளலின் புகழ் ஒளி வீசும். மக்கள் மனபீடத்தில் கொலுவீற்றிருப்பார்கள்.

வாழ்க காஜாமிய்யான் புகழ்!

வளர்க அவர்களின் அறப்பணிகள்!!

* * * * *




சென்னை, மண்ணடி, அங்கப்பநாயக்கன் தெரு, மஸ்ஜிதே மஹ்மூர் பள்ளிவாசலில் உள்ள தெற்குக் கட்டிடம்

19.6.1902 அன்று திருச்சிராப்பள்ளி ந. முகம்மது மியான் இராவுத்தர் அவர்களால் கட்டிக்கொடுக்கப்பட்டது.

# தம்பி எஜமான்!

முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

(நன்றி : Golden Jublee Celebration 2000 - 2001 Founders Day Special Issue)

04–04–1987 சனிக்கிழமை மாலை 7.30 மணியளவில் முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களை, அவர்களின் இல்லத்தில் சந்தித்தேன். அப்போதுதான் கோவையிலிருந்து திரும்பி வந்திருந்த முத்தமிழ் காவலர் தம் வீட்டின் மாடி முற்றத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். இளைத்து களைத்த அவரது முதிய திருவுருவம் என் மனத்தைக் கனியச் செய்தது. ''நாங்கள் கல்லூரி நிறுவனர் நூற்றாண்டு விழாவினை கொண்டாட இருக்கிறோம். வள்ளல் காஜாமியான் அவர்களைப் பற்றி ஒரு நல்ல கட்டுரை ஒன்றை வடித்து, நிறுவனர் மலருக்கு தர விரும்புகிறேன். இது தொடர்பாக எங்கள் தாளாளர் அல்லாஜ் அப்துல் காதர் அவர்களை சந்தித்து பேசியபோது இக்கட்டுரைக்கான – நீங்கள் விரும்பும் பாணியில் விஷயங்களைத் தரத் தகுதியுடையவர் கி.ஆ.பெ.வி. அவர்கள்தான். நீங்கள் அவர்களிடம் செல்லுங்கள்'' எனக்கூறி அனுப்பி வைத்தார். உங்களைப் பேட்டி கண்டு அக்கட்டுரைக்கான செய்திகளைத் திரட்ட வந்தேன். ஆனால் இன்று நீங்கள் மேற்கொண்டுள்ள பயணம் உங்களை களைப்படையச் செய்திருக்கிறது. நான் மீண்டும் திங்கட்கிழமை வரட்டுமா? எனக்கேட்டு எதிரே உள்ள நாற்காலியில் அமர்ந்திருந்தேன். கொஞ்சம் நேரம் எதுவும் பேசாமல் இருந்துவிட்டு ''தம்பி எஜமானைப் பற்றி என்னிடம் கேட்க வந்திருக்கிறீர்கள், ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல உங்களை தவணை கூறி மீண்டும் வரச் சொல்லவா'' எழுதிக் கொள்ளுங்கள் என்று கூறி, தமது இனிய ஆண்மை ததும்பும் குரலில் கீழ்க்கண்ட செய்திகளைக் கடல் மடை திறந்ததைப்போல் கூறத் தொடங்கினார். நான் மிக விரைவாக அதனை எழுதிக் கொண்டேன். அடிபிறழாமல் எழுத்து மாறாமல் அப்படியே தந்திருக்கிறேன். – பேரா. தா. பிச்சை முகம்மது

ஜனாப் ந. முகம்மது மியான் ராவுத்தர் அவர்கள் திருச்சிராப்பள்ளி இஸ்லாமிய பெருங்குடும்பத்தினர். அவர் பெயர் பலருக்குத் தெரியாது. ந.மு. மட்டுமே குறிப்பிடுவதுண்டு. அவர் பெருங்குடும்பத்தினர் மட்டுமல்லார், பெரும் வணிகர், தோல் தொழில் அறிஞர், இஸ்லாமியத் தலைவராக விளங்கினார். திருச்சி நகர மக்கள் அனைவருக்கம் அவர் குடும்பத்தில் மதிப்பும் மரியாதையும் உண்டு.

அவருடைய காலத்திலே அவரது அருந்தவ மகன் ந.மு. காஜாமிய்யான் ராவுத்தர் பொதுமக்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்று விளங்கினார். 'பெரியவரை எல்லோரும் பெரிய எஜமான்' என்றும் சிறியவரை எல்லோரும் 'தம்பி எஜமான்' என்றும் கூறுவதுண்டு. வயதில் முதிர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் மிக இளையவரும் கூட 'தம்பி எஜமான்' என்றே குறிப்பிடுவர். எளிய தோற்றமும், இளகிய மனதும், எல்லோரிடத்திலும் அன்பும் மரியாதையும் காட்டும் பண்பும், ஏழை எளியர்வளுக்கு 'நன்கொடை' வழங்கும் இயல்பும் அவருடைய இயற்கையான குணங்களாகும்.

சமயப்பற்று நிறைந்தவர். சமயத் தொண்டுகள் பல புரிந்தவர். திருச்சிராப்பள்ளி 'மஜ்லிஸுல் உலமா' நிறுவனத்தின் செயலாளராக இருந்து முஸ்லிம் சமூகத்தவரிடம் பெரும் மதிப்பையும் பராட்டையும் பெற்றவர் என்றாலும் இந்து, கிறித்துவ சமய மக்களிடத்திலும் இனிய முகங்காட்டி உதவிகள் பல புரிந்து நட்புடன் பழகும் பண்புடையவர்.

அவருடன் நெருங்கிப் பழகியவர்களில் நானும் ஒருவன். அவருடைய பேச்சில் சொற்செட்டு இருக்கும். வீண் பேச்சுகள் பேசுவதில்லை. இரண்டொரு பேச்சுக்களாகவே பேசுவார்கள். அவை ஆழ்ந்த கருத்துடையனவாக இருக்கும். ஜமால் முகம்மது ராவுத்தர் அவருடைய நண்பர்களில் ஒருவர், அவருடன் பேசும்போது மட்டும் தம்பி எஜமான் ஞான மார்க்கமாகப் பேசுவதுண்டு. அவற்றை நான் பல முறை கேட்டுப் பெருமகிழ்சியடைந்ததுண்டு. அப்பேச்சுக்கள் எனக்கு மிகவும் பயனளித்துள்ளன. நபிகள் நாயகம் ஆடம்பரமற்ற சிக்கனமான வாழ்க்கையே வாழ வேண்டும் என்று கூறிய அவர் அடிக்கடி என்னிடமும், மற்ற நண்பர்களிடமும் கூறுவதுண்டு. அவர் தம் மக்களுக்குத் திருமணம் செய்யும்போது ஆடம்பரம் இல்லாமல் மிக எளிய முறையில் செய்கின்ற வழக்கத்தை நான் கண்டிருக்கிறேன். இரண்டு, மூன்று திருமணங்களுக்கு அவர் அழைப்பிதழ் கூட அச்சிடவில்லை. தம் வீட்டுத் திருமண நாட்களில் திருமணம் வாய்ப்பும் வசதியும் இல்லாத ஏழை மக்களை அழைத்து முதலில் அவர்கள் வீட்டுத் திருமணங்களை நடத்தி பிறகு தம்முடைய இல்லத் திருமணம் நடத்துவதை நான் கண்டிருக்கிறேன். தம்முடன் நெருங்கிப் பழகும் நண்பர்கள் பிறரைப் பற்றித் தவறாகப் பேசினாலும் தவறுகள் செய்தாலும் அவற்றை அவர்கள் கண்டிப்பதுண்டு. ஆனால் கண்டிப்பு இனிய முகத்தோடு கூடிய எளிய சொற்களாக இருக்கும்.

என்னிடத்திலும் பெரியார் இடத்திலும் அதிகப் பற்றுள்ளவர். எங்கள் தொண்டுகளை அடிக்கடி பாராட்டும் பழக்கமுடையவர். இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு 1937–38ல் பெரும் பொருள் வழங்கியவர்கள். திருச்சியில் நான் நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாட்டு ஊர்வலத்தில் என்னோடும் பெரியாரோடும் நடுவில் இருந்து ஊர்வலம் வந்தவர். திருச்சி நகர மக்கள் அனைவருமே திரண்டு வரும் அந்த ஊர்வலக் காட்சியாகும். எல்லாவற்றையும் விட இந்தி இயக்கத் போராட்டத்திற்கு அவரது அரிய மனைவியார் இஸ்லாமியக் குடும்ப வீடுகளுக்குச் சென்று காலணா, அறையணாக்களை நன்கொடையாகப் பெற்று சேகரித்து அவ்வாறு சேரும் நான்கைந்து ரூபாய்களை நாள்தோறும் தாமே என் வீட்டிற்கு வந்து என்னிடம் வழங்கியதை இன்றும் எண்ணி மகிழ்கிறேன். அந்த அளவிற்குத் தமது அருமை மனைவியாரை மொழிப் பேராட்டத்திற்கு ஆயத்தப்படுத்திய தம்பி எஜமானின் தமிழ் நெஞ்சம் பற்றி எத்தனை பேருக்குத் தெரியும்.

பாலக்கரையில் மட்டுமல்லாமல் நகரம் முழுவதில் உள்ள எல்லா சமயத்தைச் சார்ந்த ஏழை எளிய மக்களின் குறைகளைக் கேட்டு நீதி நெறிமுறைகளைக் கூறி நல்வழியில் நடத்திய பெருமை அவருக்குண்டு. அனேகக் குடும்பங்களின் வழக்குகள் நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் தீர்த்து வைத்த செயல்கள் பல நான் அறிந்தவை.

இந்திய தோல் வணிகத்திற்கு அந்த நாட்களில் பொருளாதாரம் மிகக் குறைவு. டில்லியின் மூலம் பணம் வந்து சேர பல மாதங்களாகும். இந்தியாவிலிருந்து மேல் நாட்டிற்கு தோல்கள் ஏற்றுமதியானதும் வங்கியிலிருந்து முன் பணம் கிடைத்தால் பெரும் உதவியாக இருக்கும் என நினைத்தார். அந்த நினைவு செயல் வடிவம் பெற ஆயத்தங்கள் செய்யப்பட்டன. அப்போது சர்.ஏ.இராமசாமி முதலியார் வர்த்தக மந்திரியாக இருந்தார். எழுவர் அடங்கிய ஒரு குழுவை டெல்லிக்கு அனுப்ப என்னுடன் கலந்தோசித்தார். பல்வேறு ஆலோசனைகளுக்குப் பிறகு கடைசியாக அந்தக் குழுவினர் எழுவரில் நானும் ஒருவனாக இருக்க நேரிட்டது. அவர் கட்டளைப்படி டெல்லி சென்று சரக்கு ஏற்றுமதியானதும் 100க்கு 75 வீதம் வங்கிகள் மூலம் உடனே பணம் கிடைக்குமாறு அனுமதி பெற்று வந்தோம். அந்தக் குழுவில் என்னுடன் வந்த அன்பர்களில் அவர் சம்பந்தி ஜனாப். முகம்மது இப்ராகிம் ராவுத்தர், சென்னை மலங்கு அப்துற் ரஹ்மான் ராவுத்தர், காயிதே மில்லத் என்னும் பட்டப் பெயர் பெற்ற முஸ்லீம் லீக்கின் தலைவரான முகம்மது இஸ்மாயில் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சேஷாயி என்ற பெயரில் அவர்கள் தொடங்கிய (சவுத் மெட்ராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன்) மின்சாரக் கம்பெனிக்கு பெரிய அளவில் பங்குகளைப் பெற்று முதலீடு செய்தது அல்லாமல் நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் அடிக்கடி கடனுதவி செய்தும் பேருதவி புரிந்தவர். இது திருச்சி நகர மக்களுக்கு மிகப் பெரிய பயன்களை விளைவித்தது. இவ்வாறு வெளிப்படையாக தம்பி எஜமானின் பெயர்களைத் தாங்கி நில்லாமல் அவரால் உயிரும் ஊட்டமும் பெற்று வளர்ந்து உயர்ந்த தொண்டு புரியும் நிலையங்கள் பல உள்ளன.

கடைசியாக ஒரு நாள் என் வணிக நிலையத்தில் 40, 50 பேர்களை வைத்து நான் வேலை வாங்கிக் கொண்டிருந்தேன். சிங்கப்பூருக்கு கப்பல்கள் மூலமாக புகையிலையைத் தரம் பிரித்து அனுப்பும் பணி மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. என் கடையின் முன்பாக ஒரு கார் வந்து நின்றது. 'தம்பி எஜமான் கூப்பிடுகிறார்' என்ற செய்தி வந்தது. நான் பதைபதைப்பாக இதோ வந்து விடுகிறேன் எனக்கூறி என் வேலையை மற்றொருவரைப் பார்க்குமாறு செய்துவிட்ட காரில் ஏறித் தம்பி எஜமானரைப் பார்க்கச் சென்றேன். அங்கு அவர் 'என் வியாபாரம், குடும்ப நிலை பொதுத் தொண்டுகள் பற்றி மணிக்கணக்காகக் பேசிக்கொண்டிருந்தார். நான் சளைக்காமல் ஒவ்வொன்றுக்கும் பதில் கூறிக்கொண்டு எஜமான் அழைத்தது எதற்காக? என்று கேட்டுக் கொண்டே இருந்தேன். நான்காம் முறை கேட்டபோதுதான் அவரிடமிருந்து பதில் வந்தது. ''வேலைகள் ஒன்றுமில்லை, நான் எதற்காகவும் உங்களை அழைக்கவில்லை, பார்த்து நாளாயிற்று, பார்க்க வேண்டுமென்று ஆசை ஏற்பட்டுவிட்டது. அதனால் வண்டியை அனுப்பினேன். நீங்கள் அவசரப்படுவதைப் பார்த்தால் உங்களுக்கு வேலை அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. நீங்கள் உடனே கடைக்குத் திரும்புங்கள். உங்களை அழைக்க வந்த என் ஆட்களிடம் வேலை அதிகம் இருக்கிறது பிறகு வருகிறேன் என்று கூறியிருக்கலாமே?'' என்று கூறினார். இந்த சொற்கள் என் உள்ளத்தை உருக்கின. அவர் என் மேல் வைத்திருந்த கட்டுக்கடங்காத அன்பை நினைத்து அந்த அளவுக்கு நான் தகுதியுடையவன் இல்லையே? என்று வெட்கப் பட்டேன். என் கண்கள் நீர்த்துளிகளை உதிர்த்தன. பிறகு இரண்டொரு மாதங்களிலேயே அவருடைய மறைவுக்காக என் கண்கள் மறுபடியும் நிரைக் கொட்டின.

அவரது குடும்பத்தில் நானும் ஒருவன–ாக வாழ்ந்திருந்தவனாதலின் அங்கு நிற்கும் அவரது குடும்பத்தாருள் யாருக்கு யார்அனுதாபம் கூறுவது என்பது அப்போது தெரியவில்லை. மெல்ல நகர்ந்து சென்ற காலம்தான் நானுள் விட்ட அவரது குடும்பத்தாராகிய எங்கள் அனைவருக்குமே ஆறுதலை அளித்தது.

# வள்ளல் ந.மு.கா.

பேராசிரியர் முனைவர் தா. பிச்சை முகம்மது
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், ஜமால் முகம்மது கல்லூரி திருச்சிராப்பள்ளி – 20.
(நன்றி : Golden Jublee Celebration 2000 - 2001 Founders Day Special Issue)

ஆயிரக்கணக்கான மக்கள் முதல்நாள் முழுவதும் க்யூ வரிசையில் சாரை சாரையாக எறும்புகளைப் போல் முன்னேறிக் கொண்டிருந்தனர். இறுக்கமும் சோ–கமும் அவர்கள் மத்தியில் இழையோடிருந்தன. முதல் நாள் முழுவதும் இந்நிலை நீடித்தது. மறுநாளும் கூட்டம் குறையவில்லை. கோடிக்கணக்கில் பொருட்களைக் குவித்து, கோடிக்கணக்கில் தான தருமம் செய்து கோடியில் ஒருவராக விளங்கிய வணிகக் கோமான் ந.மு.காஜாமியான் ராவுத்தரின் தீதார் – இறுதிக் காட்சியை வேண்டித்தான் பெருந்திரளாக கூட்டம் திருச்சி மாநகரின் மையப்பகுதியான பாலக்ரையை நோக்கி அணிவகுக்கத் தொடங்கியிருந்தது. அக்கூட்டத்தில் தமிழ் மாநில அண்டை மாநிலங்களிலிருந்து பதைபதைப்போடு ஓடி வந்திருந்த வர்த்தக சீமான்கள், ஆலிம் உலமாக்கள், அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், தேசபக்தர்கள். இஸ்லாமிய இந்து கிறித்தவ சமயப் பெரியார்கள், பெருந்தனக்காரர்கள், பரம ஏழைகள், தொழிலதிபர்கள், தொழிலாளத் தோழர்கள் அனைவரும் குழுமியிருந்தனர். ஒரு மனிதரின் சவ ஊர்வலத்தின்போது மக்கள் உரையாடல்களிலிருந்து அவர் வாழ்ந்த வாழ்க்கை பற்றி சரியான கணிப்பை நாம் நன்கறிய முடியும். அந்த மாபெரும் மனிதரின் இறப்பை, இழப்பை தாங்கமாட்டாமல் மௌனமாக அரற்றியது. அந்த மக்கள் வெள்ளம் பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும் கேடு கெட்ட மனிதக் கூட்டங்களில் மத்தியில் அல்லாஹ்வுக்காக அழகிய கடன் கொடுத்த அற்புத மனிதரின் அரிய வாழ்வின் பல கோணங்களை அப்போது அப்பெருங்கூட்டம், அலசி ஆராய்ந்து கொண்டிருந்தது. அந்த அழகான ஆன்மா தான் வரையாது வழங்கியவற்றை ஒன்றுக்குப் பத்தாக இறைவனிடம் பெற்றுக் கொள்ள ஆசைப் பயணத்தை மேற்கொண்டு விட்டது. பொருள் தேடும் வழியை மட்டுமல்லாமல் அருள் தேடும் வழியையும் சரியாகப் புரிந்து நடைமுறைப் படுத்தியவர் ந.மு.காஜாமியான் ராவுத்தர்.

இந்த வள்ல்ல பெருந்தகையைப் பற்றித் திருச்சி மாநகரமும், தமிழகமும் அறியவில்லை. மிகப்பெரிய வணிகச் செல்வர், வாணிகத்திலும் தோல் பதனிடும் தொழிலிலும் செயற்கறிய செய்த பெருந்தகை. சமுதாயப் பணிகளுக்கும், சமயக் கல்விக்கும் ஏராளமாக வழங்கிய ஏந்தல் என்ற அளவில் இப்பெருமகனைத் தமிழ் கூறு நல்லுகம் மிக நன்றாகவே அறிந்துள்ளது. ‘ஊருணி நீர் நிறைந்தாற்போல உலகவாம் பேரறிவாளரின் செல்வம்’ இவ்வாறு பயன்படும் என்பது உண்மையே.

ந.மு. காஜாமிய்யான் ராவுத்தர் பெருஞ்செல்வமும், அருஞ்செல்வமும் உடைய சான்றோர் என்பதோடு மட்டுமில்லாமல் உயர்ந்த சான்றோர்களும் மதித்துப் போற்றத்தக்க பல்கலைக் குரிசில் என்ற உண்மையை எல்லோரும் அறிந்திருக்க முடியாது.

நல்லகனி ராவுத்தரின் அன்பு மகனார் ந.முகம்மது மியான் ராவுத்தரின் காலத்தில் ஒரு ஜமீன்தாரின் வளமும் வாழ்வும் உடையதாக அவரின் குடும்ப வாழ்க்கை அமைந்திருந்தது. அத்தகைய செல்வாக்கும் சிறப்பும் ஆடம்பரமும் அவரது ஒரே மைந்தர் ந.மு, காஜாமியான் ராவுத்தர் இம்மியும் நிலைகுலையச் செய்யவில்லை. தந்தையாரின் காலத்திலேயே வணிக பொறுப்புகளில் பங்கு கொண்ட காஜாமியான் ராவுத்தர் அவரோடு தொடர்பு பூண்ட பலராலும் தம்பி எஜமான் என்று அழைக்கப்பட்டார். தந்தையாருக்குப் பின் குடும்ப பொறுப்பையும் வணிகப் பொறுப்பையும் முழுமையாக ஏற்றுக் கொண்ட நிலையில் வீண் ஆடம்பரங்களையும் படாடோபங்களையும் அறவே விட்டொழித்தார். எல்லையின்றிப் பெருகிய செலவினங்கள் முழுமையும் எழைகளின் நலனுக்காகவே செய்யப் பட்டன. திருமணங்கள் பலவும் ஏழை எளியவர்கட்கு நலம் செய்யும் நல்லுதாரணங்களாகவே நடத்தப்பட்டன.

1928–ஆம் ஆண்டு நலிவுற்று நசிந்து வாடிய நெசவாளர் குடும்பங்களைக் கரூர் பகுதியிலிருந்து திருச்சி மாநகருக்கு குடிபெயர்ந்து வரச்செய்தார். இன்றைய ஜமால் முகம்மது கல்லூரி வளாகத்தின் அருகிலுள்ள டோல்கேட் பகுதியில் அவர்களுக்குச் சொந்தமாகக் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தி நவீனமான முறையில் தறிகளை அமைத்துக் கொடுத்து ஒரு சிறந்த கைக்கோளார் காலனியை ஏற்படுத்தினார். இந்த கைத்தறித் தொழிலோடு தமது அறிய தொண்டின் நிலைக்களனான மஜ்லிகல் உலமாவிலும் மாணவர்கள் கைத்றித் தொழிலைக் கற்றுப் பயனடைய ஏற்பாடு செய்தார்.

தந்தை வளப்படுத்தி, நிலைப்படுத்திய தோல் வாணிகத்தை மைந்தர் தொடர்ந்து மேற்கொண்டார். வாணிகத்தை மேலும் பெருகச் செய்தார் என்ற

அளவில் நினைத்துவிடக்கூடாது. சி.எல்.சி, கார்டன் உட்ரா, கிரேஸ்சிக் போன்ற மேல்நாட்டுத் தோல் தொழில் நிறுவனங்களோடு N.M. டேனரி வாணிகப் போட்டி நடத்தி வாகை சூடியது. இந்தியாவிலேயே 'குரோம்' உற்பத்தியில் முதலாவதாக விளங்கியதோடு முதன்முதலில் இத்தொழிலை இங்கு செய்ய முடியும் என்று நிரூபித்தும் N.M. டேனரியே, இந்நிறுவனத்தின் சரக்குகள் லண்டன் மார்க்கெட்டில் மிக அதிகமான உயர்ந்தபட்ச விலையைப் பெற்றன. தோல் பதனிடும் தொழிலில் தெளிவு, சுளிவு, நுட்பங்கள் அனைத்தையும் மிகக் கருத்தாக உணர்ந்து வைத்திருந்தார். சகோதர வணிகர்கள் தரம் சரக்குகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை இவர்களிடம் எடுத்துக்கூறி, என்ன செய்வது என்று தெரிந்து கொண்டு செல்வார்கள். தம் தொழிற் பேட்டையில் எப்போதும் புதுப்புது ஆராய்ச்சிகளைச் செய்த வண்ணம் இருந்தார். தம் தொழிற்சாலையில் இருந்த ஜெர்மானிய எந்திரங்களுக்கு மாற்றாக இங்கே புதிய பொறிகளைத் தயாரிக்க முனைந்து வெற்றி பெற்றார். களிமண்ணாலும் மரத்தாலும் வார்ப்பு அச்சுக்கள் செய்து அந்த எந்திரங்களின் பாகங்களை வார்த்தெடுத்தார். தென்னிந்திய தோல் தொழில் வர்த்தகர்கள் பொருளாதாரச் சிக்கலில் தவித்துக் கொண்டிருந்தபோது அன்றைய வணிக அமைச்சர் சர். இராமசாமி முதலியாரிடம் ஒரு தூதுக்குழுவை அனுப்பி வங்கிகள் மூலம் ஏற்றுமதியாகும் சரக்குகளுக்கு முன்பணம் பெறுவதற்காக வழிவகை செய்தார். தோல் வணிகத்தில் என்ன பிரச்சனை ஏற்பட்டாலும் திருச்சி நகர வணிகர்களுக்கு நிவாரண மருந்தாக இப்பெருந்தகை விளங்கினார்.

பொருட்செல்வம் பெரிதும் உடையாரிடத்தில் அருட்செல்வம் மலிந்து காணப்படுவதில்லை. N.M.K. அவர்களிடத்தில் இவை இரண்டும் ஒருங்கே மண்டியிருந்தன. பெரிய எஜமானின் மாமனாரின் பெயரும் காஜாமிய்யான் ராவுத்தரே. அவரின் அருமுயற்சியால் இன்றும் மிகச்சிறப்புடன் விளங்கும் ந.மு. பள்ளித்தொடக்கம் பெற்று எழுந்தது. பரம்பரையாக இறைத்தொண்டில் ஈடுபட்டிருந்த பாரம்பரியம் இவர்கள் காலத்தில் உச்சநிலையை எய்திவிட்டிருந்தது. பெரியார் என்.எம்.கே. அவர்களின் திருமனையில் ஆலிம்கள், உலமாக்களின் சந்திப்புக்கள் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருந்தன. இஸ்லாமிய இலக்கியத் துறையிலும், மார்க்க ஆராய்ச்சிகளிலும், தேசீயப் பேராட்டங்களிலும் தன்னிகரற்று விளங்கிய மௌலானா மௌலவி ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி அவர்களின் தலைமையில் 1926–ல் இஸ்லாமிய நூற்பிரசுர சங்கம் நிறுவப்பட்டது. இதற்காக மௌலானா அவர்களின் குடும்பமே பாலக்கரையில் குடியேற்றப்பட்டு எல்லாவித வசதிகளும் செய்யப்பட்டன. இறைமறையின் தமிழ் மொழிபெயர்ப்புப் பணி தொடங்கப்பட்டது. மேலபாளையம் மௌலவி S.S. அப்துல் காதர் பாகவி அவர்களும் இஸ்லாமிய நூற்பிசுர சங்கப் பணிகளில் பெரிதும் ஈடுபட்டு உழைத்தார்கள். ஈ.வெ.ரா. பெரியார் முன்னுரையைக் கொண்டுள்ள மௌலானா அப்துல் ஹமீது பாகவியின் இயற்கை மதம் என்ற நூல் ஒன்றும் பிரசுரமாயிற்று. வள்ளல் ஜமால் முகம்மது சாகிப்பின் தொடர்பு நம் திருச்சி வள்ளலின் அகமிய உணர்வுகளுக்கு அற்புத வடிகாலாய் அமைந்தது. மஜ்லிஸுல் உலமாவின் தொடக்கத்தின்போது இன்றைய ஜமால் முகம்மது கல்லூரியின் வளாகத்தில் அன்றிருந்த பனைமரக் கூட்டங்களைப் பார்த்த வண்ணம் வள்ளல் காஜாமியான் கூறினார். ''இங்கிருக்கும் பனைமரங்கள் ஒவ்வொன்றுக்கும் பகரமாக ஒவ்வொரு ஆலிம் உருவாக வேண்டும்'' ஒன்றுக்கு ஒன்றல்ல ஒன்றுக்குப் பத்தாக ஆலிம் உலாமாக்களும் அறிவுலக மேதைகளும் இந்த வளாகத்திலிருந்து வெளிப்போந்துள்ளனர்.

சுதந்திரப் போராட்டத்தின்போது இவர் ஆற்றிய தொண்டு மிகப்பல. யாகூப்கான் சேட், இராஜாஜி, ராஜன், பெரியார் ஆகியோரின் போராட்டச் சகாவாக விளங்கிய இவர், மாநில அளவிலான காங்கிரஸ் பொருளாளராக விளங்கினார். போராட்டத்தில் சிறையிலிருந்த காங்கிரஸ் தலைவர்களுக்குத் தம் இல்லத்தில் தயார் செய்யப்பட்ட உணவுகளை அனுப்பி உதவினார். காந்தியடிகளின் ஆணைக்கிணங்கி ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் கதர் தொழிற்சாலை தொடங்கினார்.

காஜாமியான் ராவுத்தரின் தொழிலார்வம் தோல் தொழில்களுடன் நின்றுவிடவில்லை. வெல்லம், Mass Sugar எனப்படும் நாட்டுச் சக்கரை உற்பத்தியில் நாட்டம் செலுத்தினார். ஒலையூர் கிராமத்தில் உள்ள ஆயிரத்திநூறு ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய அளவில் விவசாயத் தொழில் புரிய ஏற்பாடு செய்தார். மான் மரை முதலியவற்றை வேட்டையாடுவதில் விருப்பமாக ஈடுபடுவதுண்டு. குதிரை சவாரி செய்வதிலும், போலோ விளையாட்டிலும் மிக்க திறமையுடையவர்.

நிலம் சம்பந்தமான பழைய டாகுமெண்டுகளைப் பார்வையிடும்போது நிலங்களின் ஜக்குப் பந்திகளைக் கூறும்போது ''இந்த நிலம் ந.மு. காஜாமியான் ராவுத்தர் நிலத்திற்கும் வடக்கு அல்லது கிழக்கு'' என்றவாறு எழுதப்பட்டிருக்கும். அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டு பழைய டாகுமெண்டுகளை ஆராய்ந்து கண்டு கொண்ட

நிலங்கள் மிகப்பல. அதுபோல வள்ளல் காஜாமியான் பற்றிய பல்வேறு செய்திகள் அவ்வப்போது புலனாகிய வண்ணம் இருக்கின்றன.

இக்கட்டுரைக்குத் தகவல்களும் நூல்களும் தந்து உதவியவர்கள்

1. ந.மு.கா. அப்துல் காதிர், தாளாளர், ஜமால் முகமது கல்லூரி.

2. முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

3. ஜனாப் முஸ்தபா ஹுசைன் – ‘‘நர்கிஸ்’’

4. பேராசிரியர் ஷம்சுதீன், M.Sc., ஜமால் முகமது கல்லூரி

5. இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் ஆசிரியர் M.R.M.அப்துல் ரஹீம்

6. K.அப்துல் கரீம், ஓய்வு பெற்ற மாவட்டப் பதிவாளர், திருச்சி.

* * * * *

# காஜாமியான் என்றொரு ஞானச் சூரியன்


பேராசிரியர் முனைவர் பீ.மு. மன்சூர்
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், ஜமால் முகம்மது கல்லூரி திருச்சிராப்பள்ளி – 20.


*பரந்து விரிந்த*
*கடைக்கண் காட்ட*
*பலருக்கு*
*தோன்றியது.*
*தொழிற்பேட்டையாக*
*தோன்றியிருக்கும்.*

*இன்னும்*
*சிலருக்கோ*
*எதிர்காலத்தில்*
*கூறுபோட்டு*
*கொள்ளை லாபம்*
*குவித்திடும்*
*‘பிளாட்டு’களாக*
*உருக்காட்டும்.*

*இப்படி*
*எத்தனை*
*எத்தனையோ*
*வடிவங்கள்......!*
*ஊனக்கண்களுக்கு*
*அப்படித்தான்*
*தோன்றும்*

*உங்கள்*
*ஞானக்*
*கண்களுக்கோ...!*

*அறிவுமலர்களின்*
*கருவறையாம்*
*ஜமாலியா*
*நந்தவனமாய்ப்*
*பரிணமித்தது.*

*இன்றைய*
*சமுதாயத்தின்*
*அறிவுத் தேடலுக்கும்*
*ஆன்மீகத் தேடலுக்கும்*
*ஞானப் பாசறையாய்*
*தோன்றியது.*
*ஆயிரமாயிரம்*
*அறிவு ஜீவிகளின்*
*புண்ணியத் தலமாய்*
*பூத்தது.*

*மலைக்கோட்டை*
*நகரத்தின்*
*கலைக்கோட்டையாய்*
*உருவெடுத்தது.*

*ஞானச்சூரியனே!*
*உங்களால்*
*ஒளி பெற்றது*
*நட்சத்திரமன்று*
*அமாவாசை.*

*பல்கலைச் செல்வரே!*
*உங்கள்*
*பள்ளிப்படிப்போ*
*ஐந்தாம் வகுப்பு!*
*அரபும் தமிழும்*
*ஆங்கிலமும் உருதும்*
*உங்கள்*
*சிந்தனைப் பயிருக்குச்*
*செழுமழையாயின.*

*தொழில்துறையில்*
*உங்கள் பாதங்கள்*
*புதிய பாதையை*
*உண்டாக்கின.*

*காந்தி அண்ணல்*
*கடைக்கண் காட்ட*
*அந்த நாளிலே*
*ஐம்பதாயிரம்*
*முதலிட்டு*
*கதர் ஆலை நிறுவிய*
*தேசியச் சுடரே!*

*எதுவும் தராமலே*
*எல்லாம் தந்தாய்*
*பேர் போடு*
*தமுக்கடிக்கும்*

*உலகினில்*
*எல்லாம் தந்தும்*
*என்பேர் வேண்டாம்*
*எனதருமை*
*ஜமால் நாமம்*
*சூட்டுக*
*என்றீரே....!*

*புகழ் மயக்கம்*
*படியா*
*உன்றன்*
*புனித நெஞ்சம்*
*புதுமையானது*
*வளர் தமிழ்*
*வாழு நாள்*
*வாழ்க நின் புகழ்!*

# ஹாஜியார் ஜமால் முகம்மது

டாக்டர் அப்துல் ஹக் எழுதிய உருது மூலத்தின் தமிழாக்கம்
பேராசிரியர் பீ. அஹமத் பாஷா
(நன்றி : Golden Jublee Celebration 2000 - 2001 Founders Day Special Issue)

ஹாஜியார் ஜமால் முகம்மது மர்ஹூம் அவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களையும் வாழ்க்கை வரலாற்றையும் விவரமாக எழுதுவதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஏனென்னால் ஹாஜியாரின் வாழ்க்கை பல கோணங்கள் உடையதாக அமைந்திருந்தது. ஒரே சமயத்தில் அவர் நாட்டின் சிறந்த கொடை வள்ளலாகவும், செல்வச் சீமானாகவும், ஒரு பண்பு மிக்க அரசியலறிஞராகவும் திகழ்ந்தார். கல்வி மற்றும் தேசிய சமூக நிறுவனங்களுக்குப் பக்கபலமாக இருந்து வந்தார். சமூக சிறார்களின் படிப்பிற்கும் அவர்களை உயர் பண்புடையோர் ஆக்கவும் பேருதவி புரிந்து வந்தார். வணிகத்தில் வல்லவராகத் திகழ்ந்த அவர் பொது முதலீடு துறையிலும் (Public Finance) சிறந்து விளங்கினார்.

ஹாஜியார் ஜமால் முகம்மது அவர்களின் தந்தையார் ஹாஜியார் ஜமால் முகையுத்தீன் மர்ஹூம் அவர்கள், சென்னை மாகாணத்தின் தெற்கே உள்ள இராமநாதபுரத்தில் வசித்து வந்தார். வணிகம் தொடர்பாக சென்னைக்கு வந்தவர் நிரந்தர சென்னைவாசி ஆனார். அவருடைய புதல்வரான ஹாஜியார் ஜமால் முகம்மது 1881–ல் பிறந்தார். சென்னையில் உள்ள கிருத்துவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் தமிழையும் ஆங்கிலத்தையும் பயின்றார். பத்தாவது வகுப்பு வரை படிப்பை முடித்துக் கொண்டு வணிகப் பணிகளைக் கவனிக்கலானார். இயல்பாகவே அமையப்பெற்ற பேராற்றலால் வணிகத் துறையில் மிகவும் உயர்நிலையை அடைந்தார். ஒரு வெற்றிகரமான வணிகராகப் புகழ் பெற்றார்.

முதல் உலகப் போர் தொடங்குவதற்கு முன்பாக, வணிகத் தொடர்பாக ஐரோப்பா பயணத்திற்கான வாய்ப்பைப் பெற்றார். இவ்வகையில் அவருக்கு இங்கிலாந்து அமைச்சர்களையும், அரசியல்வாதிகளையும் சந்தித்துப் பேசும் வாய்ப்பும் கிடைத்தது.

அதே போல ஜெர்மனியில் உள்ள செல்வ வளமிக்க பெரிய மனிதர்கள் சிலரையும் துருக்கியில் உள்ள ‘அன்ஜீமனே இத்திஹாதேகவும்’ எனும் நிறுவன முக்கியஸ்தர்களையும் அவர் சந்தித்து உரையாடினார். மற்றும் எகிப்து நாட்டின் விடுதலை இயக்கத் தலைவர்களையும் அறிஞர்களையும் சந்திக்கும் வாய்ப்புக்களைப் பலமுறை பெற்றார்.

ஐரோப்பா மற்றும் இஸ்லாமிய நாடுகளின் இந்தப் பயணம் அவருக்குப் பல விதத்தில் பயன்உள்ளதாக அமைந்தது. இதன் மூலமாக அவருடைய வியாபாரத்திலும் பெரும் வளர்ச்சி ஏற்படத் தொடங்கியது.

பல்வேற நிறுவனங்கள் அவரது வள்ளல் தன்மையால் பயன் அடைந்து கொண்டிருந்தன.

‘சமர்னா நிதி‘க்காக ஒரு முறை மஸீஹுல் முல்க் ஹக்கீம் அஜ்மல் கான் மர்ஹூம் தில்லியில் ஹாஜியாரிடம் சந்தா அளிக்கும்படி வேண்டினார். ஹாஜியார் ஜமால் முகம்மது அவர்கள் மிக்க மரியாதையுடன் தமது காசோலை புத்தகத்தை அவரிடம் அளித்துவிட்டு விருப்பப்படி எவ்வளவு தொகை வேண்டுமானாலும் எழுதிப் பெற்றுக் கொள்ளும்படி அவருக்கு அனுமதியும் கொடுத்துவிட்டார். ஆனால் ஹக்கீம் சாகிபு அவர்கள் அதனை ஏற்காமல் தொகையைக் காசோலையில் குறித்திடும்படி ஹாஜியாரையே வற்புறுத்தினார். இந்தச் சம்பவத்தை நினைவு படுத்தி ஹக்கீம் சாஹிப் கூறியதைப் பாருங்கள். அந்தக் காசோலையில் ஜமால் முகம்மது மர்ஹூம் அவர்கள் ரூபாய் ஒரு லட்சத்திற்கான தொகையை எழுதி என்னிடம் அளித்ததும் ஸ்தம்பித்துப் போய்விட்டேன். பற்பல சமூக நல நிறுவனங்களுக்கும் இந்த வகையில் அவர் அள்ளித் தந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஹாஜியாருடன் எனது சந்திப்புக்கள் 1924–ல் தொடங்கின. நான் அப்போது சென்னையில் உள்ள அரசினர் முகம்மது கல்லூரியில் அரபு மொழிப் பேராசிரியராகப் பொறுப்பு ஏற்றிருந்தேன். ஒன்றிரண்டு சந்திப்புகளுக்குப் பிறகு ஹாஜியார் ஜமால் முகம்மது மர்ஹூம் அவர்கள் தாம் வெகு நாட்களாக சிந்தித்து வந்த ஒரு பிரச்சினையைப் பற்றி என்னிடம் விவாதித்தார். அதாவது அரபு மொழி மதரசாவுக்கான ஒரு புதிய பாடத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும், அந்தப் பாடத்

திட்டத்தில் நவீன கல்வி அறிவுப் பாடங்களும் ஆங்கிலப் பாடமும் பங்கு பெற வேண்டும் என்றும் அத்துடன் அரபு மொழிக் கல்வியின் தரமும் காக்கப்பட வேண்டும் என்பதே அவரது திட்டமாகும்.

எனக்கு நன்றாய் நினைவு இருக்கிறது. இது தொடர்பாக ஹாஜி ஜமால் முகம்மது சாகிபு அவர்களின் இல்லத்தில் எத்தனையோ ஆலோசனைக் கூட்டங்கள் நடந்தன. அநேகமாக ஞாயிற்றுக் கிழமைகளில் காலை முதல் மாலை வரை இக்கூட்டங்கள் தொடரும். அவற்றில் பாடத்திட்டத்தை முறைப்படுத்தும் முக்கிய பணி நடந்து வரும் இத்தகைய நீண்ட கால விவாதங்கள் மற்றும் ஆலோசனைகளுக்குப் பிறகு அவர் திட்டமிட்ட பாடத் திட்டம் உருவாக்கப்பட்டது. அப்பாடத்திட்டத்தைச் சோதனைக்காக தாம் நடத்தி வந்த ஜமாலியா மதரசாவிலேயே மேற்கொள்ளச் செய்தார்.

ஜமால் முகம்மது சாகிப் அவர்கள் நாட்டின் பல பகுதிகளில் இருந்து தகுதி வாய்ந்த கல்வியாளர்களைத் தேர்வு செய்து அவர்களைத் தமது மதரசாவில் ஆசிரியர்களாக நியமனம் செய்தார். மதரசாவின் கல்வித் தரம் மென்மேலும் வளர்ச்சி அடைந்து வரலாயிற்று. அத்துடன் ஜமால் முகம்மது சாகிபு அவர்களின் வியாபாரமும் அல்லாஹ்வின் கிருபையால் நாற்தோறும் வளர்ச்சி அடைந்த வண்ணம் இருந்தது. நல்லெண்ணத்துடனும் நல் மனதுடனும் தமது இனக் குழந்தைகளின் கல்விக்காக அவர் செய்த உதவிகளுக்கு ஈடு இணை கிடையாது எனலாம்.

ஒரு விழாவில் நான் பேசும்போது எதேச்சையாக எனது எண்ணத்தை வெளியிட்டேன். அதாவது அரபி மதரசாக்களில் நவீனப் பாடத்திட்டத்தை வழக்கில் கொண்டு வருவதோடு இன்னொன்றும் செய்திட வேண்டும். ஆங்கிய மொழியில் கல்வி பெறும் மாணவர்கள் தங்குவதற்கு ஒரு விடுதியை ஏற்படுத்த வேண்டும். அந்த விடுதியில் மாணவர்களுக்கு தீன் பற்றிய கல்வியும் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் முதலியவைகளையும் கற்பிக்க வசதிகள் ஏற்படுத்த வேண்டும். இதனால் அங்குள்ள ஒரு சிறந்த பண்பாட்டினைப் பெற்று வெளி வருவார்கள் என்று விளக்கினேன்.

காலம் கனிந்த பேச்சாக இருந்ததால் அது ஜமால் முகம்மது சாகிபு அவர்களின் மனதைத் தொட்டுவிட்டது. உடனடியாக அவர் ஒரே வாரத்திற்குள் தமது பங்களாவுக்கு எதிரில் இருந்த ஒரு மாளிகை போன்ற பங்களாவை முன்னூறு அல்லது முன்னூற்றி ஐம்பது ருபாய் மாத வாடகைக்கு மூன்று வருடங்களுக்காக எடுத்துக் கொண்டார். அங்கு நான் மேற்குறிப்பிட்ட வகையில் ஒரு சிறந்த மாணவர் விடுதியை நிறுவினார். அங்கு பல கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

அந்த போர்டிங் ஹவுஸ் ஏற்படுத்தப்பட்டதின் விளைவாக வசதி இல்லாமல் கல்வியைத் தொடர முடியாத ஏராளமான முஸ்லீம் இளைஞர்கள் கல்லூரிகளில் சேரத் தொடங்கினர். அந்த விடுதியில் ஏறத்தாழ நூறு, நூற்றி ஐம்பது மாணவர்களுக்குத் தங்கும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. அங்கு அவர்களுக்கு எழுதப்படிக்க, தங்க வசதிகள் மட்டுமல்லமல் அவரவர் கல்லூரிகளுக் சென்றுவருவதற்கான வாகனச் செலவுக்கு ஐந்து அல்லது பத்து ரூபாய் மாதாமாதம் வழங்கப்பட்டது. மூன்று நான்கு வருடங்கள் வரைஅந்த விடுதி வெற்றிகரமாக நடத்தப் பட்டது. அதன் பயனாக நூற்றுக் கணக்கான இளைஞர்கள் தமது மேற்படிப்பை முடித்துக் கொண்டு வாழ்க்கையின் பல துறைகளில் பணியாற்றச் சென்றனர்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. 1925—ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் ஒரு முறை, அவர் வெகு நேரம் வரை உரையாடிக்கொடிருந்தார். பேச்சுக்கிடையே ஹெப்ரெட் விரிவுரைகள் பற்றிய விவாதம் வந்தது. இது சம்பந்தமாக அவர் தமது உணர்வுகளை என்னிடம் வெளியிட்டார். ஆக்ஸ்போர்டு ஏற்பாடு செய்துவரும் இத்தகைய கல்வி மற்றும் சமயச் சார்பான விரிவுரைகளைப் போன்ற ஏற்பாடு, சிறிய அளவில் நமது இளைஞர்களுக்காக நாமும் தொடர வேண்டும் என்றார். செய்யலாம், ஆனால் இதற்கான செலவுகள் சற்று அதிகமாக இருக்கும் என்று நான் பதில் கூறினேன்.

உங்கள் கணக்குப்படி வருடத்தில் ஒரு முறை ஐந்து விரிவுரைகள் அளிக்க ஒருவரைத் தேர்ந்தெடுத்தால் என்ன செலவாகும் என்று ஜமால் முகம்மது என்னிம் வினவினார். குறைந்த பட்சம் இரண்டாயிரமும் அதிக பட்சம் மூன்றாயிரம் வரையும் செலவு ஆகும். இதன்படி நீங்கள் இந்தியாவின் தலை சிறந்த அறிஞர்களை இங்கு அழைக்க இயலும் என்று பதில் அளித்தேன். ஜமால் முகம்மது சாகிபு உடனே இதனை ஏற்றுக் கொண்டார். தென்னிந்திய முஸ்லீம்கள் கல்வி நிறுவனத்தின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதோடு முதல் விரிவுரையைத் தேர்வு செய்வதற்கான பணி என்னிடம் அளிக்கப்பட்டது. நான் சையத் சுலைமான் நத்வி மர்ஹூம் அவர்களின் பெயரை முன் வைத்தேன். நபிகள் நாயகத்தின் வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றிய பல்நோக்கு விரிவுரை அளிக்கும்படி

அவரைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றேன். அல்லமா மர்ஹூம் எங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு வருகை தந்தார். அப்பொழுது அவர் அளித்த சிறப்பு வாய்ந்த விரிவுரைகள் பெரும் புகழினைப் பெற்றன. பிறகு அவை குத்பாதே மத்ராஸ் (சென்னை சொற்பொழிவுகள்) என்ற தலைப்பில் தாருல் முசன்னி பீன் எழுத்தாளர் இல்லம் எனும் நிறுவனத்தால் புத்தகமாக வெளியிடப்பட்டன. அந்த விரிவுரைகள் பல இளைஞர்களின் வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தையே உருவாக்கி விட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கு அடுத்த ஆண்டில் முகம்மது மார்மா டியூக் பிக்தால் என்பவரை விரிவுரை அளிக்க தேர்ந்தெடுத்தோம். அவரும் எங்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டு சென்னைக்கு வருகை தந்தார். இஸ்லாத்தின் கலாச்சார நோக்கு என்னும் தலைப்பில் ஆறு விரிவுரைகளை அளித்தார். பிற்காலத்தில் இவ்விரிவுரைகளும் புத்தக வடிவில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு புகழ் பெற்றன.

மூன்றாம் ஆண்டு சர் முகம்மது இக்பால் அவர்களை, சென்னைக்கு வந்து இஸ்லாத்தின் குறிப்பிடத் தக்கக அம்சத்தைப் பற்றி சிறப்பு விரிவுரைகள் அளிக்கும்படி அழைப்பு விடுத்தோம். புத்தகமாக வெளி வந்து பிரமிக்கத் தக்க விரிவுரைகளாகத் திகழும் கவிஞர் இக்பால் அவர்களின் விரிவுரைகள் முதன் முதலாக எங்கள் குழுவின் தலைமையில் பல்வேறு தருணங்களில் அவர் இங்கு ஆற்றிய பேருரைகளே என்று பெருமையுடன் கூறலாம்.

அந்த சந்திப்பின்போது கவிஞர் இக்பால், ஜமால் முகம்மது சாகிபு அவர்களின் நற்பண்புகளால் மிகவும் ஈர்க்கப் பட்டார். சென்னையில் உள்ள ஒம்.எம்.ஐ.ஏ. அரங்கில் நடந்த கூட்டத்தில் கவிஞர் இக்பால், ஜமால் முஹம்மது சாகிபு அவர்களைப் பற்றிய தமது கருத்துக்களை கீழ்க்கண்ட வகையில் வெளியிட்டார்.

ஹாஜி ஜமால் முகம்மது சாய்பு அவர்களின் பண்புமிக்க வாழ்க்கை முறை என் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. ஒரு மனிதர் எளிமையான உடையில் காணப்படுகிறார். கோடிக்கணக்கில் வணிகமும் புரிகிறார். அதோடு கடினமான தத்துவப் பிரச்சனைகளை பற்றியும் அவரால் விவாதிக்க முடிகிறது.

இத்தகைய 'PLAN LIVING AND HIGH THINKING' எனும் வழி முறையைத்தான் இஸ்லாமிய மார்க்கம் நமக்கு அளித்துள்ளது. இவர் முகத்தால் எளிமையின் சின்னமாகவும் அகத்தால் அரசருக்குரிய வள்ளல் தன்மை கொண்டவராகவும் திகழ்கிறார். இத்தகைய வாழ்க்கை முறையைத் தான் நபிகள் நாயகம் அவர்கள் நமக்கு அறிவுறுத்தினார்கள். முஸ்லீம்கள் இத்தகைய வாழ்க்கை முறையை என்று கை விட்டனரோ அன்றிலிருந்து வீழ்ச்சி நிலை தொடங்கிவிட்டது. ஆக நாமெல்லாம் ஹாஜியாரின் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றியே ஆக வேண்டும்.

ஜமால் முகம்மது சாகிப் அவர்களுடைய எளிமை மிக்க வாழ்க்கையில் ஒரு முக்கிய அங்கம் யாதெனில் அவர், சமூக வழக்கில் உள்ள எவ்வித அவசியமற்ற சடங்குகளையும் ஏற்காதவராகத் திகழ்ந்தார். தமது குடும்பத்தில் நடக்கும் கல்யாண விவகாரங்களில் அவர் கடைபிடித்த எளிமை தன்னிகரற்றதாகும்.

அவர்நமதுநடை,உடைபாவனையில்தனித்தன்மையான ஒரு எளிமையை எப்போதும் கடைபிடித்து வந்தார். பொதுவாக லுங்கி, வெள்ளைச்சட்டை மற்றும் தொப்பியுடன் காட்சி அளிப்பார். வெளி நாட்டு பயணம் அல்லது பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது கறுப்பு நிறம் கொண்ட பேண்டை அணிந்த வண்ணம் காணப்படுவார். இத்தகைய எளிமையான தோற்றம் அவருடைய வாழ்க்கையில் ஒரு கம்பீரத்தை உண்டாக்கியது. எளிமையின் இந்த கம்பிரமே விஷயம் அறிந்தோரை அவர்பால் ஈர்த்தது. கவிஞர் இக்பாலின் வானுயர் பாராட்டிற்கும் இதுவே காரணமாகும்.

ஜமால் முகம்மது மர்ஹூம் அவர்களின் இன்னொரு பேருதவியைச் சுலபமாக மறக்க முடியாது. தில்லியில் உள்ள ஜாமியா மில்லியா எனும் புகழ் வாய்ந்த கல்வி நிறுவனம் மிகவும் நலிந்த நிலையில் இருந்தபோது தக்க தருணத்தில் அதற்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் அவர் பேருதவி புரிந்தார். அநேகமாக 1927—ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஜாமியா மில்லியா மிகவும் நெருக்கடியான நிலைக்கு வந்திருந்ததால் மஸீஹில் முல்க் ஹகீம் அஜ்மல் கான் மர்ஹூம் அவர்கள் சென்னைக்கு வந்து ஜாமியாவுக்காக நிதி திரட்டும் திட்டத்தை வகுத்தார்.

இதற்காக முதலில் ஜாமியா மில்லியாவின் அப்போதைய துணை வேந்தராக இருந்த டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களை சென்னைக்கு அனுப்பி வைத்தார். தாமும் முக்கியப் பணிகளை முடித்துக் கொண்டு விரைவில் சென்னைக்கு வந்து சேர்கிறேன் என்று கூறி இருந்தார். ஆனால் ராம்பூரிலிருந்து தில்லிக்கு இரயிலில் வந்து கொண்டிருக்கும்போது மாரடைப்பு ஏற்பட்டு ஹக்கீம் சாகிப்

காலமாகி விட்டார். ஜாகிர் உசேன் அவர்கள் சென்னைக்கு வந்து ஹக்கீம் சாகிப்பின் வருகைக்காக காத்துக் கொண்டிருந்தார். தீடீரென்று ஹகீம் சாகிப் காலமான செய்தி பத்திரிக்கை வாயிலாகத் தெரிய வந்ததும் டாக்டர் சாகிப் அதிர்ந்து போய்விட்டார். வந்த வேலை நடக்காமல் போய் விடுமோ என்று துவண்டு போனார்.

இது சம்மந்தமாக நானும் ஜாமியாவின் நலனின் அக்கரை கொண்ட அன்பர்களும் ஜமால் முகம்மது அவர்களிடம் சென்று ஹகீம் சாகிப் அவர்களின் திட்டத்தைத் தெரியப்படுத்தலாம் என்று முடிவு செய்தோம். அதன்படி டாக்டர் சாகிப், ஹாஜியாரிடம் ஜமாலியாவின் நெருக்கடி நிலையைப் பற்றி விளக்கினார். இது தொடர்பாக மஸீஹுல் முல்க் மர்ஹூம் அவர்கள் வகுத்திருந்த திட்டத்தைப் பற்றியும் தெரிவித்தார். எல்லாவற்றையும் கவனமாகக் கேட்ட ஜமால் முகம்மது சாகிப் அவர்கள் சற்றும் தயங்காமல் இந்த விஷயத்தில் தாம் முடிந்த அளவிற்கு உதவி புரிவதாக உறுதி கூறினார்.

ஒன்றிரண்டு நாட்களுக்குள் அவர் டாக்டர் ஜாகிர் உசேன் சாகிப் அவர்களுக்குத் தேனீர் விருந்தளித்தார். அங்கு சென்னையில் உள்ள பெரும்பாலான மதிப்பு வாய்ந்த வணிகர்கள் கூடியிருந்தனர். அத்தருணத்தில் ஹாஜியார் அவர்கள் ஜாமியாவுக்கு உதவி புரியும் இயக்கத்தைத் துவக்கி வைத்தார். அதோடு தம் சார்பாகவும் அளிக்க இருக்கும் உதவித் தொகையைப் பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டார். அந்தத் தொகை எழுபதாயிரத்திற்கும் மேலாகவே இருந்ததாக நினைக்கிறேன். அதன் பிறகு சென்னையைச் சேர்ந்த வணிகர்களிடமிருந்தும் உதவுத் தொகையை பெற்றுத் தந்தார். இரண்டு மூன்று நாட்களுக்குள் கிட்டத்தட்ட நாற்பதாயிரத்திற்கான பெருந்தொகை கிடைக்கும்படி செய்தார்.

ஜாமியா மில்லியாவின் வரலாற்றிலேயே மிகவும் நெருக்கடியான கால கட்டம் அதுவாகத்தான் இருந்தது. அங்கு பணிபுரிபவர்கள் சோதனைகளை சமாளிக்க முடியாமல் நம்பிக்கை இழந்த நிலைக்கு வந்திருந்தனர். இந்த உதவி ஜாமியாவுக்குப் புத்துயிர் ஊட்டியது. அதிலிருந்து ஜாமியா ஒரு புதிய வாழ்வை நோக்கி முன்னேறத் தொடங்கியது.

ஜமால் முகம்மது சாகிப் மர்ஹூம் அவர்கள் ஆற்றிய பொதுத்தொண்டுகளில்முக்கியத்துவம்வாய்ந்தஇத்தகைய தொண்டினை அவர் காதும் காதும் வைத்தாற்போல் செய்து முடித்தார். இதனை விளம்பரப்படுத்தவும் இல்லை. இதனைத் தமது புகழுக்குக் காரணம் ஆக்கிக் கொள்ளவும் இல்லை,

வணிகச் செயல்பாடுகளிலும் பொருளாதாரப் பிரச்சனைகளிலும் அவர் தொலை நோக்குப் பார்வை உடையவராகத் திகழ்ந்தார். உலகப் போருக்குப் பிறகு இந்திய அரசு ரூபாயை பவுண்டுடன் இணைத்து விட்டது. அதனால் வியாபாரச் சந்தையில் ரூபாயின் மதிப்பு இறங்கி விட்டது. செலவாணி மாற்றத்திலும் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது.

அந்தக் காலகட்டத்தில் ஜமால் முகம்மது சாகிப் அவர்கள் இப்பிரச்சனை சம்மந்தமாக பற்பல கட்டுரைகள் எழுதினார். அவை இந்தியாவின் புகழ் வாய்ந்த ஆங்கில செய்தித் தாள்களிலும் பொருளாதார இதழ்களிலும் பிரசுரிக்கப்பட்டன. அவர் தமது கட்டுரைகளில் அரசு மேற்கொண்ட இத்தகைய நியதி இந்தியாவுக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியதாகும் என்று தெளிவாக எடுத்துரைதத்தார். ஜமால் முகம்மது சாகிப் அவர்கள் அந்தக் காலத்தில் தமது ஆய்வுப் பூர்வமான கட்டுரைகளால் அடைந்த புகழானது அவரை அரசவையின் பொருளாதார உறுப்பினராகத் தேர்வு செய்ய வழி வகுத்தது. இதன்படி லெஜிஸ்லேடிவ் அவையில் வெகு காலம் வரை அவர் உறுப்பினராக இருந்து வந்தார். அதே கால கட்டத்தில் அனைத்திந்திய வணிகச் சேம்பர்ஸின் பெடரேஷனும் அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இத்தகையப் பெருமை முஸ்லீம்களில் வேறு யாருக்கேனும் கிடைத்திருக்குமோ என்பது சந்தேகமே!

சென்னைப் பல்கலைக்கழகக் காரணகர்த்தாக்கள் ஜமால் முகம்மது சாகிப் அவர்களின் எழுத்தாற்றலை எந்த அளவிற்கு மதித்தார்கள் என்பதற்குச் சான்றாக, அவர்கள் பல்கலைக்கழக வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு பட்டதாரி அல்லாதவரை பொருளாதாரம் மற்றும் வணிக இயல் கல்விக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து கௌரவித்தததைக் கூறலாம்.

ஜமால் முகம்மது சாகிப் அவர்கள் தொடக்க காலத்திலிருந்தே நாட்டின் அரசியல் பிரச்சனைகளின் மீது நம் கவனத்தைச் செலுத்தி வந்தார். வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய அரசு அவரையும் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தது. அவர் முதல் வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார்.

இங்கிலாந்து பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பிறகு ஜமால் முகம்மது மர்ஹூம் அவர்கள் கல்வி

மற்றும் அரபி மதரசாக்களை சீர்திருத்தும் பணியில் தமது கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டார். வணிகத்தில் அவருக்குச் சரிவு நிலை தொடங்கியது. அது நாளுக்கு நாள் தேய்பிறையாக மாறினாலும் நல்ல காரியங்களை ஊக்குவிப்பதிலும் சமுதாயப் பணிகளுக்கு உதவி புரிவதிலும் அவர் சற்றும் பின் வாங்கவில்லை. அவை எவ்விதக் குறைவுமின்றித் தொடர்ந்தன.

1945–க்குப் பிறகு தோல் வியாபாரிகளின் நிலையும் ஜமால் முகம்மது சாகிப் அவர்களின் வியாபார நிலையும் மோசமான நிலைக்கு வந்துவிட்டது. ஆனால் ஜமால் முகம்மது சாபிப் அவர்கள் நமது வியாபாரத்தைத் தம்மால் தொடர முடியாது என்ற முடிவிற்கு வந்ததும் ஜமால் முகம்மது சாஹிப் அவர்கள் முதலில் செய்த காரியம் என்னவென்றால் தம்மிடம் கடன் பெற்று அதனைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் இருந்தவர்கள் அனைவரையும் அழைத்து அவர்கள் கடனைத் தள்ளுபடி செய்து அவர்களது கடன் பத்திரங்களை மிகவும் பெருந்தன்மையுடனும் சந்தோஷத்துடனும் அவர்களிடம் திரும்பித் தந்துவிட்டார். அத்துடன் தாம் எந்தெந்த நிறுவனங்களுக்குக் கடன் பாக்கி வைத்திருந்தாரோ அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுத்து பைசல் செய்து கொண்டார். அதன் பிறகே தமது கம்பெனி இழுத்து மூடப்படுவதாக அறிவித்தார். நேர்மைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்த அவருடைய இச்செயல் தன்னிகரற்றதாகும்.

ஜமால் முகம்மது சாகிப் அவர்களின் இத்தகைய கண்ணியம் மிகுந்த செயல் முறைகளால் கவரப்பட்டுத்தான் இந்திய நாட்டின் மாபெரும் கவிஞர் இக்பால், அவருக்கு புகழாரம் சூட்டினார் போலும்! மர்ஹூம் ஜமால் முகம்மது சாகிப் அவர்களின் வாழ்க்கை இளைஞர்களுக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. அத்துடன் உயர்ந்த பண்பாடும், உழைப்பும் நேர்மையும் ஒருவரை எந்த அளவிற்கு உயர்த்துகிறது என்பதற்கும் அவரது வாழ்க்கை சான்றாக விளங்குகிறது.

* * * * *

“ ஜமால் முஹம்மது கல்லூரியில் 1980ல் நான் எம்.ஏ. ஆங்கில இலக்கியம் முடித்தேன். என் வாழ்க்கையின் மறக்க முடியாத காலகட்டங்களில் அது ஒன்று. பொக்கிஷங்களைப்போல அமைந்த என் பேராசிரியர்களால் நான் உருவாக்கப்பட்ட பொற்காலம் அது. எல்லாப் பேராசிரியர்களும் மரியாதைக்கு உரியவர்கள். சிலரோ போற்றுதலுக்குரிய சிற்பிகள். ”

கவிஞர் நாகூர் ரூமி,
ஜமால் முகம்மது கல்லூரி மேனாள் மாணவர்

# *The great valuable visionaries: Founders of Jamal Mohamed College*



**Dr. S. ISMAIL MOHIDEEN,**
Principal,
Jamal Mohamed College, Trichy –20.

The very word 'JAMAL' brings a positive vibration in my heart. To visit JAMAL at least once is a dream for many persons but to work and associate myself with JAMAL in my entire life is a heavenly gift. It is the paradise of noble hearts. The niyyath (purity of thought) of the founders still instills our great institution to march ahead in a successful path.

Janab. N.M.Khajamian Rowther and Janab. Haji. M. Jamal Mohamed Sahib enjoyed their true friendship. Their thought and spirit was noble. Both of them unitedly started a new loyal legacy in the name of Jamal Mohamed College in the historical town of Tiruchirappalli, Tamilnadu. Without minding the hardships in starting a new institution meant for higher studies, they dedicated themselves in the new venture.

The fine founders only aim was to give quality higher education to the under privileged and Muslim minority students of Tamil Nadu, without extracting any capitation fee. After 67 years of excellence in educational service, this great institution is marching ahead, not having any deviation from the true aim of the founders even in this materialistic world, where education also has become a marketable commodity. The present generation of Management Committee members is following the legacy of Jamal with the same spirit and vigour of their fore fathers.

I joined in Jamal in the year 1983 to pursue my M.Sc. Mathematics after completing my UG degree in Sathakathullah Appa College in Tirunelveli. Dr. M. Mohamed Meeran, Former Controller of Examinations, Jamal Mohamed College, and Dr. M.H.Abubakar, Former Professor of Economics helped me in gaining the admission. Professor Mohamed Essa, Former Vice Principal and Head, Department of Mathematics and Janab. E.P.Mohamed Ismail, then Principal gave me the admission. Even though I came very late, they were kind enough to provide me a seat in M.Sc. Maths.

My father Late Haji. I.Syed Mohamed Hussain, who was an Elementary School teacher in my native village Panpoli inspired me to join Jamal so that I could inculcate the principles of Islam with my formal education. Yes. Jamal only offered me the platform to practice Islam with true spirit which I extended to my family also. Only after I became a Jamalian my family members also followed the principles of Islam. This is only because of our holy Jamal.

Though not having any formal higher education, my father knew the value of Doctorate Degree in those days and also instilled me to complete it. Janab. N.M.K Abdul Khader sahib was the then Secretary and Correspondent of the College, Janab. M.J.M.Abdul Gafoor Sahib was the Treasurer, Hazrat. Suharvarthy was looking after the affairs of hostel in the capacity of Deputy Warden. The hostel life during the two years (1983-85) made a turning point in my life. The experience which I got there chiselled me in every aspect particularly my academic and spiritual life. Every student who enters into the Khajamian Hostel would carry the same experience and lead a successful and meaningful life because of the positive changes inbuilt in them. It happens in this holy soil only because of the two great visionary Founders who have sown the seeds of righteousness.

My father in law Dr.P.Shahul Hameed, Former HOD of Zoology introduced me to the then Secretary Janab. N.M.K. Abdul Khader Sahib and the then

Principal Dr.C.Nainar Mohamed and requested them for an opportunity to work in Jamal as an Assistant Professor. After appointing me, Janab. N.M.K. Abdul Khader Sahib told me, “Follow the words of the Principal”. The words are still lingering in my mind. Such was the honour offered to the Principal by our Management Committee Members. The legacy continues to till date. I was also appointed as a sub-warden in the Khajamian hostel. It was a period, when students involved in strikes for some or other reasons. Janab. Dr. K. Abdullah Basha was the

Co-ordinator, Janab. P. Shahul Hameed, Janab A. Kamaludeen and Janab Sulthan Ibraheem were the Deputy Wardens of the hostel. They managed the affairs in an excellent manner.

Dr. C. Nainar Mohamed, the Principal of the institution was a dynamic personality and a strict disciplinarian. He wished to put an end to unethical culture of the students. He succeeded in organizing the things in order by taking necessary steps and conducting the parents’ meeting etc. We learnt a lot from that great personality who was not ready to compromise anything for the sake of good education to the students’ community. I was given an opportunity to give ‘Vote of Thanks’ during a Meelad Day celebrations. After the function Janab. Dr. C. Nainar Mohamed greeted me by telling the encouraging words, “Have you delivered Kanni Tamil or Kanyakumari Tamil?” Every staff member was bestowed with opportunities for service by the Management and the Principal irrespective of age difference.

The disciplinary action continued when Janab. N. Abdul Samad took charge as the Principal of the institution in 1989. He not only issued Transfer Certificates to 13 students but also made sure that they got admission in the colleges nearby to their home town. This incident is very much evident for the supremacy of the Jamal culture which didn’t leave any student in the lurch but take efforts to safeguard his future.

During that period Janab M.J.Noordeen sahib, President, Janab.M.J.M.Abdul Gafoor Sahib, Secretary and Correspondent, Hajee.K.A.Khaleel Ahamed sahib, Treasurer and Janab. A.K.Khaja Nazeemudeen Sahib, Asst. Secretary offered unrelenting support to the Principal in his every endeavours by taking account of the needs of staff members and students. I gratefully remember the occasion, when the Management readily promoted me as a Deputy Warden in 1987 so that I could get additional remuneration to meet out my financial difficulties and I remained there up to 1996. Janab. N.Abdul Samad Sahib was kind enough to relieve me and facilitated to complete my Ph.D. and fulfill my father’s dream. Again in 2004, after completing my Ph.D. the then Principal, Dr. M.Sheik Mohamed asked me to take the charge as the Deputy Warden of Khajamian Hostel again.

Janab. M.J.M.Abdul Gafoor Sahib , Hajee. K.A.Khaleel Ahamed sahib, Dr. A.K.Khaja Nazeemudeen Sahib and the Principal Dr.K.Abdullah Basha were instrumental and dedicated themselves for the cause of quality education to women students also. With their constant effort, Women’s sections were started in 1999. When the need for the women hostel aroused, the Management with the support extended by the then Principal Dr.M.Sheik Mohamed, Vice Principal Dr.P.M.Mansure and Coordinator Dr.R.Khader Mohideen were determined to offer it in-spite of many troubles crept in, making the women students to get safe accommodation in the campus itself. At the time, 11 women students stayed near PG New Hostel and food supplied from the PG New Hostel, when I was the Deputy Warden during 2004-05.

It is rewarding and refreshing to state that our Management is an example for honesty, unity, cordial relationship and transparency. They never hesitated to bring me and some of my colleagues along with them when they visited Singapore and Malaysia during 2015, Dubai and Kuwait during 2016 to participate in the Alumni Get together functions. They consider every staff member on par with them without any difference. Absolute freedom is

given by them to Staff members, students and other personalities to approach them at any point of time. The trust on the staff members by the Management and the loyalty shown by the staff members is the unique successful path of Jamal.

Our College Management members are marvelously magnanimous. I can mention a recent incident during March 2018. Myslf, our Secretary Dr.A.K.Khaja Nazeemudeen, our Treasurer Haji. M.J.Jamal Mohamed sahib, our Assistant Secretary Dr.K.Abdus Samad were participating in the farewell party organized by the students, at that time we were informed over phone that three of our students from Kerala met with a fire accident, while they were cooking in a private rental house. Immediately we rushed to the hospital and it was really a pathetic situation, we were not able to identify our own students, one boy was having 40% burnt injury. The Doctor of the hospital told us that it will cost around 1.5 lakhs to offer treatment to them and also he told that the incident happened only outside the campus and hence the College need not spend money for medical treatment. But the immediate response from our Secretary after consulting the Treasurer was " These boys are our students" and we should offer financial assistance and requested the doctor to provide very good treatment.

Jamal not only gave me higher education with ethics but also provided me with an opportunity to serve in various capacities such as, Assistant Professor, Deputy Warden, The Coordinator, The Bursar, Additional Vice Principal and the highest position as The Principal.

The noble tradition and culture of Jamal is inherited by the successive generations of the great founders. May the Almighty shower His choicest blessings on this citadel of education, holiness and humanism.

Long live founders fame ! Long live Jamal's Name !

*****

ந,மு. காஜாமியான் இராவுத்தர் சமயப்பற்று நிறைந்தவர். சமயத் தொண்டுகள் பல புரிந்தவர். திருச்சிராப்பள்ளி 'மஜ்லிஸுல் உலமா' நிறுவனத்தின் செயலாளராக இருந்து முஸ்லிம் சமூகத்தவரிடம் பெரும் மதிப்பையும் பாராட்டையும் பெற்றவர் என்றாலும் இந்து, கிறித்துவ சமய மக்களிடத்திலும் இனிய முகங்காட்டி உதவிகள் பல புரிந்து நட்புடன் பழகும் பண்புடையவர்.

முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

# AMZ INTEGRATED FARMING SYSTEM

• Dairy Farm • Goat Rearing • Fisheries • Fodder

**We wish the very best for the Management, Faculty, Staff and student body of Jamal Mohamed College on it's Founder's Day. The founding of this great institution has been a landmark for the upliftment of our society and God willingly continue to be so in the future – a beacon of light!**

## Our Products:

Organic Products










The AMZ a2 Milk brand from The a2 Milk Company is a pure and naturally occurring cows' milk, free from additives and preservatives.

Cows certified to produce only the A2 protein make exceptional milk, and we go to great lengths to ensure the greatest quality and freshest tasting milk is delivered to consumers.

We conduct several tests from cow to cup so consumers can rest easy in the knowledge that they're getting pure a2 Milk with nothing added and nothing taken away, just as nature intended.

We make Organic Ghee.

AMZ Organics Ghee is unlike any other you will find on the market today. We take great care and consideration in the ingredient selection and preparation method. Our uncompromising commitment to quality combined with obsessive attention to detail allows for a unique hand-crafted ghee.

AMZ Paneer is a fresh Indian cooking cheese with a beautifully dense and crumbly texture, making it the star ingredient in many Indian recipes. It has a mild, milky flavour that pairs perfectly with bold flavours.

Suitable for vegetarians, Everest Paneer is a unique flavour carrying cheese. Stir fry cubes or slices of Paneer and add into your favourite curry. Marinade in sweet chilli and flash grill or barbeque for an authentic chargrilled taste. Season to taste, grill and toss into a warm salad or add to roasted vegetables to make a delicious wrap. Heat and eat, it's so versatile.

AMZ Integrated Farming System, Neermangalam Village, Budamangalam Post, Koothanallur Taluk, Tiruvarur District - 610102.

سوبر سونيك للتجارة (ش.ذ.م.م.)

**SUPER SONIC TRADING L.L.C.**

ESTD. 1989

**Distributors & Dealers:**

**Industrial • Marine • Construction Materials • Automotive Garage Equipments • Tools and Gen. Hardwares**

Finolex – AUTHORISED CHANNEL PARTNERS

MCC ITALY – WIRE TERMINAL & TOOLS

LOCTITE

RUBBERISED CORK SHEETS

ARMORALL – CAR CARE PRODUCTS

SUPER TERMINALS

SUPER Tex – COTTON RAGS - COTTON WASTE - MULMULL

P.O.Box: 55302, Dubai, U.A.E. Tel: +971 4 2272623, Fax: +971-4-2272553
Email: info@supersonicme.com, Web: www.supersonicme.com

سوبر سونيك فاشن (ش.ذ.م.م.)

**SUPER SONIC FASHION L.L.C.**

(A GROUP OF SUPER SONIC TRADING L.L.C.)

SUPER Tex



180Gsm Basic



260Gsm Pique Polo



260Gsm Interlock Polo



220Gsm Polo



Brush Cotton Caps

P.O.Box: 55302, Dubai, U.A.E. Tel: +971 4 2621239, Fax: +971-4-2970409
Email: supertex@eim.ae, Web: www.supertex.ae



இறையருள் என்றும் நிலைக்கட்டும்
உங்கள் இல்ல
சுப நிகழ்ச்சியை மகிழ்ச்சியாய்
கொண்டாட அன்போடு சேர்ந்து
இனிப்பையும் பகிருங்கள்
இனிப்பு பாரம்பரியத்தில்
110
வருடங்களுக்கு மேலாக
BGN
B.G.நாயுடு ஸ்வீட்ஸ்
திருச்சி | புதுக்கோட்டை | பெரம்பலூர் | திண்டுக்கல் | பட்டுக்கோட்டை
நான்கு தலைமுறைகள், எண்ணற்ற வாடிக்கையாளர்கள்
சொந்த பண்ணைப்பாலில் தயாராகும் இனிப்புகள்
For Contact : 95007 10710, 97888 56789

# வரலாற்றில் வாழ்பவர்கள்

ஹாஜி. S. உமர் பாரூக் B.Sc (Zoology)
ஜமால் முகம்மது கல்லூரி மேனாள் மாணவர் (1973–76)

வானுயர்ந்து நிற்பதோ இக்கல்லூரியின் கலை நயமிக்க புராதான கட்டிடங்கள் அதனையும் மிஞ்சி நிற்பதோ தன்னலமற்ற கல்விச்சேவைகள், கருணையாளர் சூட்டப்பட்ட ஹாஜி ஜனாப் M. ஜமால் முகம்மது சாஹிப் மற்றும் தனது பரந்த மனதினைப்போல பரந்து விரிந்து கிடந்த தன்னுடைய நிலத்தை தன்னலம் கருதாது தந்து ஏழை எளிய மாணவர்களுக்கு உதவிட கல்விச் சோலையாக்கிய ஜனாப் N.M. காஜாமியான் இராவுத்தர் ஆகிய இரு நிறுவனர்களின் புகழோ அனைத்தையும் விஞ்சி நிற்கின்றது. நிறுவனர்களின் பெயர்களோ கல்விச் சேவையை தாங்கள் பெற்ற பெரும் பேராக போற்றுவதால் கல்லூரி மென்மேலும் வளர்கின்றது, ஒப்பில்லாமல் ஒளிர்கிறது, புது பொலிவுடன் மிளிர்கின்றது.

நறுமணமிக்க ஏலக்காய், உலக வாணிபத்தில் மருத்துவ குணத்தால் தனி இடம் பெற்ற மிளகு எக்காலத்திலும் எந்த நேரத்திலும் உற்சாகத்தைத் தரும் தேயிலை முதலான மலை படு பொருட்கள் விளையும் தோட்டங்கள் சூழ உள்ள பெரியார் நதிக்கரையில் வண்டிப் பெரியார் நகரிலிருந்து சீனம் சென்றேனும் சீர் மிகு கல்வி பெறுக என்ற நபி மொழி படி நல்லதொரு கல்லூரியை தேர்வு செய்ய விழைந்த பொழுது ஜமால் முகம்மது கல்லூரியில் பயின்ற மாணவர்கள் நற்பண்புகளுடனும் உயரிய குறிக்கோளுடனும் ஒரு தனித்துவமாக உலகின் பல பாகங்களிலும் திகழ்கின்றார்கள் என்பதையறிந்து கல்வி பெற சாலச் சிறந்தது நமது கல்லூரியே எனத் தீர்மானித்தேன், பயின்றேன், பட்டம் பெற்றேன். இதுவே என்னைச் சமுதாயத்தில் நான் எள்ளளவும் எண்ணிப்பார்க்காத உயர்ந்த நிலையில் வாழ்வதற்கு அஸ்திவாரமாக அமைந்தது என்றால் மிகையாகாது.

நிறுவனர்களின் கட்டுப்பாடான நிருவாகத்தின் கீழ் அன்றைய முதல்வர் ஜனாப் இஸ்மாயில் சாகிப் அவர்களின் சீர்மிகு நிர்வாகமும் உரிய வழி காட்டுதலும், தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் பெரும்புலவர் ஜனாப் நயினார் முகம்மது அவர்களின் தமிழ்ப்புலமையும், விலங்கியல் துறைத் தலைவரும், சிறந்த ஆராய்ச்சியாளரும் தொடக்க காலம் முதலே அரும் பணியாற்றி கல்லூரிக்கு பெருமையும் புகழும் ஈட்டித்தந்து Dr. ஹரிராவ் அவர்களின் தலைமையில் Dr. தங்கவேலு, Dr.ஷாகுல் அமீது (MMS) Dr.P.ஷாகுல் அமீது ஆகியோரது கருத்தாழமிக்க விரிவுரைகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. மாணவர்களுக்குப் பாடத்திட்டங்களுடன் பயனுள்ள பல துறை கலந்துரையாடல்கள், விளையாட்டு மற்றும் தடகளப்பயிற்சிகள், NCC, கல்விச் சுற்றுலா மற்றும் சுற்றுப்புற சுகாதார சேவைகளில் ஈடுபடச்செய்து பொது வாழ்வில் ஏற்றத்தாழ்வுகளை எதிர் கொண்டு வாழ்வில் வெற்றி பெற நல்ல முன் அனுபவங்களையும் கற்றுத்தந்தார்கள். பேராசிரியர்கள் மாணவர்கள் தங்களது சகோதரனாக, நண்பனாக பாவித்து பயிற்று வித்தார்கள். இன்றே தினசரி நாளிதழ்களில் – ஆசிரியர் – மாணவர் – பேற்றோர் மோதல் தாக்குதல் செய்திகள் மிகுந்த மன வருத்தத்தை தருவதாக உள்ளது.

ஒரு முறை கல்லூரி விழாவில் எழுத்தாளர், நூலாசிரியர், கவிப்பேரரசு அவர்கள் கலந்து கொண்டு பயனுள்ள பல கருத்துக்களை கூறியதோடு வினைத் தொகையில் நான் எழுதிய பார்த்தேன் ரசித்தேன் பாடலை தனது சொந்தக் குரலிலேயே பாடியது இன்றும் என் மனதில் மாறாத இனிய அனுபவமாக திகழ்கின்றது.

கல்லூரியின் காஜாமியான் விடுதியின் வார்டன் மேஜர் ஷா அவர்களின் இராணுவ மிடுக்குடன் கூடிய நடையும், கூரிய பார்வையும், கம்பீரமான தோற்றமும் தீய சிந்தனைகளைத் துரத்தி மாணவ கூட்டமைப்பையும், இறுதியாண்டு மாணவர்களை உணவகம் நடத்த பயிற்சியளித்து வியாபார நுணுக்கங்களையும், உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்வதையும் விளக்கியுரைப்பார். பேராசிரியர்களும் மேற்பார்வையாளர்களுமான ஜனாப். காதர் முகைதீன், ஜனாப் Dr. மன்சூர், Dr. ஷாகுல் அமீது (MMS) ஆகியோரது கனிவுடன் கூடிய கட்டுப்பாடுகள் பின்னாளில் மனிதநேயத்துடன் நட்புடனும் சகோதர

சமுதாய மக்களுடன் பொது வாழ்வில் 'வாழும் கலையை பயிற்றுவித்தார்கள். பலனை நாங்கள் அறுவடை செய்வதில் பெருமிதம் கொள்கின்றோம்.

நிறுவனர்களின் உழைப்பும், போராட்டங்களும், சாதனைகளும், சோதனைகளும் நிறைந்த இளமைப் பருவ துடிப்பான ஓட்டங்கள், சிந்தை முழுவதும் சமுதாய சேவையுடன் வாழ்ந்த வாழ்வு, பாலுடன் தேனும் சேர்த்து தருவதுபோல் உலகக் கல்வியுடன் மார்க்க கல்வியும் போதிக்கும் மாண்பு, ஏழை எளிய மாணவர்களுக்குத் தனி இடம் அதிலும் முதலிடம் தந்த தாராள மனப்பான்மை, காந்தியடிகள் அவர்களின் சுதந்திர தாகத்திற்கு தொகை எழுதா காசோலை தந்த தர்ம சிந்தனை, லண்டன் வட்ட மேஜை மாநாட்டில் பங்கேற்க சென்ற தேச பக்தி, திருச்சியில் கல்விச் சேவைக்கு கட்டிய கல்விக் கோட்டையும், விடுதலைப் போராட்டத்தில் சுதந்திர போராட்ட வீரர்களுடன் சேர்ந்து நின்ற அபரிதமான பங்களிப்பும், மகாத்மா காந்தியடிகள் முதல் காமராஜர், காயிதே மில்லத் வரை உள்ள அனைத்து பெருந்தலைவர்களையும் போற்றி பழகிய நட்புறவும் ஆக அனைத்து சம்பவங்களும் நிறைந்த தங்களது நிஜ தியாக வாழ்க்கையையே பாடமாக பயின்று வந்த நம் அனைவரின் வாழ்க்கையையும் வளம் பெறச் செய்த, கல்லூரியை குன்றின் மேல் இட்ட விளக்காக பிரகாசிக்கச் செய்த நிறுவனர்களை யாரால் மறக்க இயலும் ? அவர்களுக்கு என்ன கைம்மாறு செய்வது ?

*'கற்க கசடற கற்பவை கற்ற பின்*
*நிற்க அதற்கு தக'*

என்ற வள்ளுவரின் வாக்கின்படி சமூகத்தில் சொல்லாலும் செயலாலும் பிறருக்கு தீங்கு செய்யாமல் பிறர் நலத்தையும் கருத்தில் கொண்டு கட்டுபாட்டுடன் கண்ணியமாக வாழ்வதே நிறுவனர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடன் என நாம் அனைவரும் உறுதி கொள்ளுவோம், சீர்மிகு கல்வியைச் செம்மையாகத் தந்த கல்லூரியை எங்கள் கல்லூரி என்று உரிமை கோருவோம். நிறுவனர்களைப் போல நாமும் நாட்டுப்பற்றுடன், மனித நேயத்துடன், ஏழைப் பங்காளிகளாக ஒன்றுபட்ட சமுதாயத்தை ஏற்படுத்தி பலம் வாய்ந்த பாரதத்தை உருவாக்க உறுதி கொள்ளுவோம்.

வாழ்க ஜமால் முகம்மது கல்லூரி...

* * * * *

# ஜமால் முகம்மது வள்ளலே

முனைவர் த. முகம்மது நூருள் முபாரக்
முனைவர் சே.சித்திகா
கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம்,
திருவனந்தபுரம், கேரளா.

சீனா சென்றேனும் கல்வி பயிலுங்கள்
இம்மை மறுமைப் பேறுகள் பெறுவீர்
பொன்னின் மேலாம் கல்வி பயிலின்
நன்மை தீமை எவையெனத் தெளிந்து
மண்ணில் சிறப்பாய் வாழ்ந்திட லாமெனச்
சொன்னார் நம் அருட்கொடை நாயகம் அவர்கள்
சொன்ன சொல்லின் பொருளினை உணர்ந்து
ஜமால் முகம்மது கல்லூரி நிறுவிய வள்ளலே.

கரையிலாக் கல்விக்கொரு கல்லூரி கண்டீர்,
வரையிலா மாணவர்க்கு ஞானப்பால் வார்த்தீர்.
துறைதோறும் அறிவொளி துளிர்த்திடச் செய்தீர்,
மனைதோறும் மகிழ்ச்சி பொங்கிடச் செய்தீர்.
குறை ஏது மில்லாக் கல்லூரி என்றே
கற்றவரும் மற்றவரும் கூறிடச் செய்தீர்
இறைவனின் தூதரின் அடிஒற்றி வாழ்ந்தீர்.

வள்ளலே நும்பெயர் என்றும் நிலை பெறும்.

# குர்ஆன் கருத்துப் பரப்புரையில் கல்லூரி நிறுவனங்களின் பங்களிப்பு



முனைவர் மீ.அ.ச. ஹபீபுர் ரஹ்மான்
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 20.

இஸ்லாமியப் பார்வையில் இம்மை மறுமையின் வெற்றியே முழுமை பெற்ற வாழ்க்கையாகக் கருதப்படுகிறது. இருமை வெற்றிக்கும் இன்றியமையாச் சாதனமாக விளங்குவது கல்வி ஆகும். கற்று உயர ஆர்வம் கொண்ட அனைவருக்கும் வாய்ப்புக்கிட்டுமாறு உலகக் கல்வி பெறுவதற்குப் பள்ளி, கல்லூரிகளையும், மார்க்கக் கல்வி பயில்வதற்கு அரபிப் பாடசாலைகளான மத்ரஸாக்களையும், அரபிக் கல்லூரிகளையும் வள்ளல் M.J.M. ஜமால் முகம்மது சாகிபு அவர்களும், வள்ளல் ந.மு. காஜாமியன் ராவுத்தர் அவர்களும் நிறுவியுள்ளனர். மனித சமுதாயம் உலகக் கல்வி கற்று இம்மைப் பயன் பெறுவதோடன்றி மறுமை வாழ்விலும் சுவனப்பேறு பெற்று மாண்புறுவதற்கு வழிகாட்டும் இறைவேதமான திருக்குர்ஆனைத் தமிழில் மொழி பெயர்க்கவும், அரிய சான்றோரின் மார்க்கச் சொற்பொழிவுகளை முஸ்லிம்கள் கேட்டுப் பயன் பெறுவதற்கும் பெரும் பொருட்செலவு செய்து, அரிய முயற்சிகள் பல எடுத்துள்ளனர் இந்நிறுவனர்கள். அவற்றை ஈண்டு காண்போம்.

## தேவை – திருக்குர் ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு

திருக்குர்ஆன் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும், நன்மை தீமைகளைப் பிரித்து அறிவிக்கக்கூடியதாகவும் (அல்குர்ஆன் 2 – 185) ஏக இறைவனால் அரபி மொழியில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் உலக மக்களுக்கு நல்வழி காட்டுவதற்காக அருளப்பெற்ற வேத நூல், நபிகளாரின் தாய்மொழியான அரபி மொழியில் இது அமைந்திருப்பினும் இது உலகத்தார் யாவருக்கும் ஒரு நல்லுபதேசமேயன்றி வேறில்லை (வமாஹாவ இல்லா திக்ருல்லில் ஆலமீ) அல்குர்ஆன் (68–52) என இறைவனால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப உலக மொழிகள் பலவற்றிலும் இது மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது. எனிலும் தமிழகத்திற்கு இஸ்லாமிய மார்க்கம் அறிமுகமாகி ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகள் கழித்தே திருக்குர்ஆனின் முழுமையான தமிழ் மொழி பெயர்ப்பு 1949–இல் வெளிவந்துள்ளது. அதற்கு முன்னர் அரபி எழுத்தில் தமிழை எழுதி அரபுத்தமிழ் என்றழைத்து 1874, 1878, 1881 ஆகிய ஆண்டுகளில் திருக்குர்ஆன் மொழி பெயர்ப்புகள் இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிவந்தன என்று திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்புகள் பற்றி ஆய்வு செய்த முனைவர் அ.நிகமத்துல்லா குறிப்பிட்டுள்ளார்.

## தொடக்ககால முயற்சி

தொடக்க காலத்தில் திருக்குர்ஆனைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்குப் பல்வேறு காரணிகள் தடையாக இருந்துள்ளன. அரபி மொழி புனிதமானது. தெய்வமொழி. இறை மொழியான திருக்குர்ஆனை மனிதமொழியான தமிழில் பெயர்த்தல் பாவச்செயல். அது ஆகுமானதல்ல என்னும் கருத்துக்கள் நிலைத்திருந்தன. இக்கருத்தில் உறுதியாக இருந்த மௌலவி அப்துல் அஜீல் சாத்காடு என்பவரை ஆ.கா.அப்துல்ஹமீது பாக்கவி சந்தித்து குர்அனைத் தமிழில் மொழி பெயர்த்தலின் தேவையை விளக்கியுள்ளார்கள் (செ.திவான் – திருக்குர்ஆன் : தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள் ப–61) மொழி பெயர்ப்பு முயற்சியில் ஈடுபட்டிருக்க மற்றொரு அறிஞர் பா.தாவூத்ஷா அவர்களையும் மொழி பெயர்க்கக் கூடாதெனக் கண்டித்துள்ளனர்.

திருக்குர்ஆனைத் தமிழில் மொழி பெயர்க்க திருநெல்வேலி பேட்டையைச் சேர்ந்த கா.மீ.அப்துல்காதர் ராவுத்தர், இராமநாதபுரம் ப.வெ. காதர்முஹ்யித்தீன் ஆலீம், புது நகரம் ஸய்யத் முகம்மது ஆலீம், வழுத்தூர் மஷாயிக் அ.அகம்மது தாஹிர், பா,தாவூத்ஷா, உத்தமபாளையம் S.S. அப்துல்காதர் பாகவி போன்றோர் அரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். எனினும் பல்வேறு காரணங்களால், அம்மொழி பெயர்ப்புப்பணி நிறைவுறாது நின்று போனது. இவை அனைத்தும் தனிமனித முயற்சிகளாகவே இருந்துள்ளன.

‘இஸ்லாமிய மார்க்க அறிஞர்களோ, சமுதாயத் தலைவர்களோ மார்க்க அறிவைப் பயிற்றுவிக்கும் அரபிக் கல்லூரிகளோ திருக்குர்ஆன் மொழி பெயர்ப்புக்குக் கூட்டாக எந்த நடவடிக்கையும் எடுத்ததில்லை’ என்னும் யதார்த்தத்தை முனைவர் அ.நிகமத்துல்லா குறிப்பிடுகிறார்.

## முதல் முயற்சியில் வள்ளல் காஜாமியான்

திருச்சியில் ந.மு.காஜாமியான் ராவுத்தர் பங்களாவில் 19.02.1925ஆம் நாள் இஸ்லாமிய மார்க்க மேதைகள் கூடி திருக்குர்ஆனை தமிழ் விளக்கத்துடன் மொழிபெயர்ப்புச் செய்ய முடிவு செய்து ஆ.கா.அப்துல்ஹமீது பாகவி அவர்களிடம் அப்பொறுப்பை ஒப்படைத்தனர். இஸ்லாமிய நூற்பிரசுரச் சங்கம் ஒன்றும் நிறுவப்பட்டது. அவர்கள் அரபிப் பதங்கள் கலக்காத மொழிபெயர்ப்பாக அதை உருவாக்கவும் முடிவு செய்தனர்.

திருக்குர்ஆன் முதல் பாகத்தின் மொழி பெயர்ப்பு சரியானதாகவும், மார்க்க மேதைகளின் அங்கீகாரம் பெற்றதாகவும் அமைய வேண்டும் என்னும் நோக்கில் உலமாக்கள் நூற்றுவர், அக்கால இஸ்லாமிய இதழ்களின் ஆசிரியர்கள், தலைச்சிறந்த அரபிக் கல்லூரிகள் போன்றவற்றிற்கு அனுப்பப்பெற்று ஒப்புதலும் திருத்தங்களும் ஏற்று சரிசெய்யப்பட்டன.

இதற்கு முயற்சிகள் மேற்கொண்ட மூன்று ஆண்டுகளில் பல்லாயிரம் ரூபாய் ந.மு.காஜாமியான் ராவுத்தர் அவர்கள் செலவு செய்துள்ளார்கள். யாரிடத்திலும் எந்தச் சூழலிலும் இப்பணியில் ஈடுபட்ட ஆ.கா.அப்துல் ஹமீது பாகவி அவர்களைப் பொருளுதவி தேடிச் செல்லும்படி அவர்கள் விடவில்லை, தாமே பெரும் பொருளைத் தந்துதவியுள்ளார்கள்.

## வள்ளல் ஜமால் முகம்மதும் அச்சகமும் :

ஹாஜி ஜமால் முகம்மது சாகிபு அவர்கள் திருச்சிக்கு வந்தபொழுது, திருக்குர்ஆன் மொழி பெயர்ப்புப் பணி நடை பெறும் பாங்கைக் கண்டு, அதற்கு அச்சு இயந்திர சாலை தேவை என்பதை உணர்ந்து அதைத் தம்முடைய பொருட் செலவிலேயே நிறுவித்தந்துள்ளார்கள்.

## முதல் பதிப்பு :

இவ்வரிய முயற்சிகளால் இஸ்லாமிய நூற்பிரசுரச் சங்கத்தின் மூலம் 19.02.1929இல் திருக்குர்ஆன் முதல் பாகத்தின் மொழிபெயர்ப்பு வெளியிடப்பெற்றது. இந்நூலக்கத்திற்குப் பொருளுதவி செய்தவர்களைப் பற்றி ஆ.கா.அப்துல்ஹமீது பாகவி அவர்கள், ‘‘திருக்குர்ஆனின் மொழி பெயர்ப்பு வேலையை முடிக்கும் வரையில் மற்ற எவ்வேலையிலும் பிரவேசிப்பதில்லை என்று முடிவு கட்டிக் கொண்டார். மகா கனம் கான்ஸாஹிப் ந.மு.காஜாமியான் ராவுத்தர் அவர்களைச் கலந்தாலோசனை செய்யும் பொருட்டு திருச்சிக்கு வந்தேன். அவர்களைக் கண்டேன். நான் செய்ய உத்தேசித்திருக்கும் வேலையைக் கூறினேன். அதற்கு அவர்கள் இவ்வேலையைத் தங்களின் முன்பாகவே ஆரம்பஞ்செய்யும்படிக் கூறினார்கள். யானும் ஆரம்பித்துவிட்டேன். இவ்வளவுதான் யான் பொருள் விஷயத்திற்காக செய்து கொண்ட முயற்சி, இன்றைக்கு மூன்று வருஷங்களாகின்றன. இதுவரையில் ஆயிரக் கணக்கான பொருள் செலவாகியிருக்கின்றது. இரவு பகலாக இவ்வேளையில் ஈடுபட்டு உழைத்து வருகின்றேன். எனினும் இதற்கு வேண்டிய பொருட்களுக்காக வேறு எவரிடமும் செல்ல ஓரடி எடுத்துவைத்தவனுமல்ல. பொருளைப்பற்றிஎவரிடமும்ஒருவார்த்தைபேசியவனுமல்ல. அல்லது யான் ஒரு நிமிஷமேனும் பொருளைப் பற்றி ஒரு வார்த்தை பேசும்படியான சந்தர்ப்பமும் இதுவரையில் எனக்கு ஏற்படவுமில்லை. இவ்வாறு அவர்கள் செய்து வரும் அரும்பெரும் உதவியினாற்றான் ஒரு நூற்றுக்கு மேற்பட்ட உலாமாக்களின் அங்கீகாரத்துடன் இவ்வளவு மேலான விதத்தில் இம்முதல் வெளியீடை இன்றைய தினம் தங்கள் முன் சமர்ப்பிக்க சாத்தியமானது.

மகாகனம் ஹாஜி. M.J.ஜமால் முகம்மது ஸாகிபு அவர்கள் திருச்சிக்கு வந்த சமயத்தில் நமது ஸ்தாபனத்திற்கு நேரேவந்து பார்வையிட்டு இவ்வேலை நடைபெற்றுவரும் முறையைக் கண்டு மிக்க திருப்தியுற்று இதற்கென பிரத்தியேகமான அச்சு இயந்திர சாலையை அமைத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டதுடன் அதற்கு வேண்டிய பொருளை முற்றிலும் அவர்கள் கொடுத்து உதவி புரிந்தார்கள். இவ்வாறு ஹாஜி. M.J.ஜமால் முகம்மது ஸாகிபு அவர்களுடைய உதவியைக் கொண்டு ஏற்படுத்தப்பெற்ற அச்சு இயந்திர சாலையில்தான் தங்கள் முன்னிருக்கும் இம்முதல் வெளியீடு அச்சிடப் பெற்றுள்ளது’’ எனக் குறிப்பிட்டுள்ளார். முதல் பாகம் வெளியிட்ட பிறகு திருச்சி பாலக்கரையில் அமைக்கப்பட்டிருந்த இஸ்லாமிய பிரஸ் செயலிழந்து போனதையும் அவர் வருத்தத்துடன் பதிவு செய்துள்ளார்.

வள்ளல் ந.மு.காஜாமியான் ராவுத்தர் அவர்களால் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புக்குரிய திட்டம் 1924–ஆம் ஆண்டிலேயே வகுக்கப்பட்டு அதற்கான அலுவல்கள்

மௌலவி ஆ.கா.அப்துல்ஹமீது பாக்கவி, எஸ்.எஸ். அப்துல்காதர் பாகவி ஆகியோரைக் கொண்டு துவக்கப்பெற்றதாக பன்னூலாசிரியர் M.R.M. அப்துல்ரகீம் இஸ்லாமியக் கலைக்களஞ்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திருக்குர்ஆனுக்குத் தமிழ் மொழி பெயர்ப்பை உருவாக்க வள்ளல் காஜாமியான் ராவுத்தர் அவர்கள் பல ஆண்டுகள் முயற்சி செய்துள்ளார்கள் என்பது வெள்ளிடைமலை.

நூலறிவு, நுண்ணறிவு, புத்தாக்கச் சிந்தனை களுடன் மொழிப் புலமையும் கொண்ட வள்ளல் காஜாமியான் இராவுத்தர் சமூகப் பணிகளில் ஆர்வம் மிக்கவர்களாய்த் திகழ்ந்துள்ளார்கள். சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளில் நாட்டுவிடுதலைக்காக மகாத்மா காந்தியுடன் இணைந்து பங்கேற்றுள்ளார்கள். சமூகப்பணி, மார்க்கப்பற்றும் மனித நேயமும் கொண்ட இச்சான்றோர் சித்த, யுனானி மருத்துவ முறைகளில் தேர்ச்சியுற்று, தமக்குத் தாமே மருத்துவம் செய்து கொண்டதோடு தாம் செய்த மருந்துகளை ஏழைகளுக்கும் இலவசமாக வழங்கி உதவியுள்ளார்கள் என்கிறார் M.R.M. அப்துற்றகீம்.

## வள்ளல் ஜமால் முகம்மதின் சமுதாயப் பணிகள் :

சென்னையில் புகழ்பெற்ற தோல் வணிகராகவும் வள்ளலாகவும் திகழ்ந்த M. ஜமால் முஹ்யித்தீன், மாதரசி கிளிறு பீவி தம்பதியரின் மூத்த மைந்தராய் 06.01.1882இல் சென்னையில் பிறந்த ஜமால் முகம்மது சாகிபு அவர்கள் இளம் வயதிலேயே மாக்கக்கல்வி, உலகியல் கல்வி ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். ஐந்தாம் படிவத்துடன் படிப்பை நிறைவு செய்து 16ஆம் வயதிலேயே தம் தந்தையின் வணிக நிலையத்தில் இணைந்து அதை வளர்ச்சிப் பாதையில் வழி நடத்திச் சென்றுள்ளார்கள். அறிவு, ஆன்ற ஒழுக்கம், வணிக மேம்பாட்டு நுட்பம், அரசியல், பொருளாதாரம், உலக வரலாற்றுச் சூழல் குறித்த ஞானம் ஆகியவற்றில் வித்தகராய் விளங்கிய ஜமால் முகம்மது சாகிபு அவர்கள் இளம் வயதிலேயே ரஷ்யாவைத்தவிர மற்ற ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பிரயாணம் செய்து அங்கிருந்த அரசியல் தலைவர்களையும், அறிஞர்களையும் கண்டு அளாவளாவியுள்ளார்கள் (இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் தொகுதி 3 ப 856) இவர்களின் அறிவு நுட்பத்தைப் பாராட்டி உயர் பதவி தருகிறோம், இங்கேயே இருந்துவிடுங்கள் எனப் பிறநாட்டு உயர்நிலைச் சான்றோர்கள் வலியுறுத்தியபோதும் அதை நளினமாய் மறுத்து தாயகத்திலிருந்து வாணிபம் செய்வதையே பெரிதும் விரும்பி இங்கு வந்தது தம் வணிகத்தைச் சிறப்புறச் செய்தனர்.

தோல் வணிகத்தில் தலைசிறந்து விளங்கிய ஜமால் முகம்மது சாகிபு அவர்கள் தென்னிந்திய வர்த்தகர் சங்கத் தலைவராக இருந்து பல ஆண்டுகள் வர்த்தகர்களின் நலனுக்கும், உயர்வுக்கும் பணியாற்றியுள்ளனர். 1931–இல் மத்திய சட்டசபை உறுப்பினர், இந்திய வர்த்தகம் மற்றும் தொழிற்கழகங்களின் கூட்டமைப்பின் தலைவராகவும் இருந்துள்ளார்கள். ஸர் புருஷோத்தமன் தாகூர் தாஸ், ஜி.டி.பிர்லா ஆகியோருடன் 20–வது வட்டமேஜை மாநாட்டில் மூன்று வர்த்தகர்களின் குழுத் தலைவராக ஜமால் முகம்மது சாகிபு அவர்கள் அதில் பங்கேற்றுள்ளார்கள். காந்திஜி, ஆகாகான் போன்ற முன்னணி சுதந்திரப் போராட்டத் தலைவர்களின் நன் மதிப்பைப் பெற்றவர்கள். அவர்களின் சந்திப்புக்கு உதவிய மாமேதை. இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட்டவர்கள். சென்னை மாநிலத்தில் முஸ்லிம் லீகை நிறுவி (1928–1940) அதன் தலைவராக இருந்து நற்பணி புரிந்துள்ளார்.

செயற்கரிய சாதனைகள் பல செய்துயர்ந்த வள்ளல் ஜமால் முகம்மது சாகிபு அவர்கள் கருணை உள்ளமும், மனித நேயமும் மிக்கவர்கள். கடைத்தெருவில் விற்கப்படும் (கீரை போன்ற) பொருள்களுக்கு அதிகமான விலை கொடுத்து வாங்கியுள்ளார்கள். அவர்கள் ஏழைகள், அவர்களுக்கு நாம் இவ்வகையில் தர்மம் செய்வோம் எனக்கூறிவிடுவார்கள். கூண்டுகளில் அடைத்து விற்கப்படும் சிறு பறவைகளை விலைக்கு வாங்கி வானில் பறக்க விடும் இயல்பினர். தம் வீட்டருகில் இருந்த பனைமரங்களில் கூடுகளை அமைத்து பறவைகள் வந்துவாழ வகை செய்துள்ளார்கள்.

மண்ணுயிர் அனைத்தையும் தன்னுயிர் போல் கருதும் ஈரநெஞ்சம் கொண்ட ஹாஜி. ஜமால் முகம்மது சாகிபு அவர்கள் மனிதர்களின் துன்பம் துடைக்க நாடியதோடன்றி பறவைகள், விலங்குகள் போன்றவற்றின் துயர் நீக்கவும் பெரும் முயற்சிகள் செய்தவர்கள். இவர்களின் வள்ளல் தன்மையைத் தெளிவுறுத்தும் M.R.M. அப்துற்றகீம், ''இவரிடமிருந்து பொருளுதவி பெற்றவர்கள் உலகம் முழுவதும் உண்டு. சிரியா, ஹிஜாஸ் ஆகிய நாடுகளில் உள்ள குக்கிராமங்களில் கூடப் பலர் இவரிடமிருந்து மாதாமாதம் பண உதவி பெற்று வந்தனர்'' என்கிறார். (இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் தொ.3 ப–858)

தாம் பெற்ற செல்வப் பெரும் பயன் இளைஞர்களுக்கு உலகக் கல்வியுடன் மார்க்க நெறிமுறையைப் புகட்டுவதற்குச்

செலவு செய்வதே எனக் கருதினார். பொதுக்கல்வி பயிலும் மாணவர்கள் மார்க்கப் பற்றுடையவர்களாக மார்க்கக் கல்வி பெற்று, ஒழுக்கம் இஸ்லாமிய வாழ்வியல் பிறழாதவர்களாக வாழ வேண்டும் என விரும்பினார்கள். அதற்காகத் தங்கள் மாளிகையின் முன் 1927இல் ஜமாலியா விடுதியைத் தொடங்கி நடத்தி வந்தனர். இடைநிலை, இளநிலை, முதுநிலை பயிலும் முஸ்லிம் மாணவர் பலர் இங்கு தங்கிப் படித்து வந்தனர். இவர்களுக்கு இடம், உணவு இலவசமாக வழங்கப்பட்டதோடு ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ஏழு ரூபாய் முதல் பத்து ரூபாய் வரை உதவித் தொகையும் வழங்கினார்கள்.

தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் பணி புரிந்த இவர்கள் தம் அலுவலகத்தில் தேநீர் விருந்தளித்து மார்க்க அறிஞர்களின் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்களை அங்கு நடத்தியுள்ளனர்.

‘‘தாராளத் தன்மை வாய்ந்த இவர் மாணவர்களின் நன்மைக்காகப் பணத்தை வாரி வாரி வழங்கினார்’’ எனப் போற்றியுரைக்கிறது இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் (ப–858)

இங்கிலாந்தைச் சேர்ந்தவரும், திருக்குர்ஆனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவருமான முகம்மது மர்மடியூக் பிக்தால் இஸ்லாமிய நாடுகள் பலவற்றையும் கண்டு, பின் இந்தியாவிலும் சில ஆண்டுகள் வசித்துள்ளார். ஹைதராபாத்தில் ‘இஸ்லாமியக் கலாச்சாரம்’ என்னும் இதழைத் தொடங்கி வைத்துள்ளார்.

வள்ளல் ஜமால் முகம்மது சாகிபு அவர்கள் முகம்மது மர்மடியூக் பிக்தால் அவர்களை 1927ஆம் ஆண்டு ஹைதராபாத்திலிருந்து சென்னைக்கு அழைத்துவந்து பல நாட்கள் அங்கு தங்கவைத்து சிறப்புச் செய்து ‘இஸ்லாமியக் கலாச்சாரம்’ பற்றி ஆறு சொற்பொழிவுகளை நிகழ்த்தச் செய்தனர். அதற்கு ரூபாய் 1,500/– தருவதாகக் கூறியிருந்தார்கள். வள்ளலின் மனம் தாம் கூறியதைவிட அதிகமாகக் கொடுக்க விரும்பியது. அவர்கள் அதிகமான தொகையை தந்தபோது பிக்தால் ‘‘ஒப்பந்தத்திற்கு மேல் ஒரு பைசாவைக்கூட அதிகமாக நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்’’ என்று மறுத்துவிட்டார்கள்.

அதனால் வள்ளல் ஜமால் முகம்மது சாகிப் அவர்கள் மனம் மிக வருந்தி, ‘‘ஒரு தங்க கடிகாரம் வாங்கி அதை பிக்தால் அவர்களின் துணைவியாருக்கு அன்பளிப்புச் செய்தபொழுது அப்பொழுதும் இவர் (பிக்தால்) குறுக்கிட்டு ஏறுக் கொள்ள வேண்டாமென்று கூறினார். அப்பொழுது ஜமால் முகம்மது சாகிபு அவர்கள் இவரை நோக்கி ‘நான் அதனை என் தாயாருக்கல்லவோ அன்பளிப்புச் செய்கிறேன், தயவு செய்து தாங்கள் இதில் தலையிட வேண்டாம், தங்களின் ஒப்பந்தம் தங்களோடு முடிந்துவிட்டது’’ என்று நாசூக்காகக் கூறினார். இவர் அமைதியுற்றார். (இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் தொ.3 ப–542) என இந்நிகழ்வு பதிவு செய்யப் பெற்றுள்ளது.

வள்ளல் ஜமால் முகம்மது சாகிபின் வேண்டுகோளை ஏற்று ஹைதராபாத்திலிருந்து குர்ஆன் மொழி பெயர்ப்புப் பணி செய்து கொண்டிருந்த முகம்மது மர்மடியூக் பிக்தால் அவர்களிடம் திருக்குர்ஆன் மொழி பெயர்ப்பை நிறைவு செய்யுங்கள். நான் தங்களுக்கு ரூபாய் ஏழாயிரம் தருகிறேன் என்று கூற, வேண்டாம் என பிக்தால் மறுத்துள்ளார். கொஞ்சம் கொஞ்சமாக அன்பளிப்புத் தொகையை உயர்த்தி ரூபாய் ஐம்பதாயிரம் வரை தருவதாகக் கூறியுள்ளார்கள் ஜமால் முகம்மது சாகிபு அவர்கள். தேவைக்கு வாங்கிக் கொள்வதாகக் கூறிய பிக்தால் பணியைத் தொடர்கிறார். வள்ளல் ஜமால் முகம்மது சாகிபு அவர்களின் பேருதவியுடன் மொழி பெயர்ப்புப் பணி நிறைவுற்றபோது அரபிமொழியைத் தாய் மொழியாகக் கொண்ட அல்கம்ராவிற்குப் படித்துக் காட்டிய பிக்தால் தம்முடைய மொழி பெயர்ப்புக்கு ‘மேன்மைக்குரிய திருக்கர்ஆனின் கருத்துரை’ (Meaning of the Glorious Quran) எனும் பெயரை அல்அஸ்ஹர் பல்கலைக்கழக இயக்குநர் ஷைகு அல் மராகியின் ஆலோசனைப்டி சூட்டினார். ஹாஜி ஜமால் முகம்மது சாகிபு அவர்கள் முகம்மது மர்மடியூக் பிக்தால் அவர்களுக்கு சென்னையில் நிகழ்த்தப்பட்ட ஆறு சொற்பொழிவுகளையும், “The cultural side of Islam” எனும் நூலாக்கம் செய்யவும், குர்ஆன் மொழிபெயர்ப்புக்கும் பெருமளவில் பொருட்செலவும் செய்துள்ளார்கள்.

இவ்விடுதிக்கு பெருங்கவிஞர் அல்லாமா இக்பால், ஸையித் சுலைமான் நத்வி, மௌலானா அபுல்கலாம் ஆஸாத், டாக்டர் M.A. அன்சாரி, Dr. ஜாகிர் உசேன், ஜனாப் இஸ்மாயில் கான், ஸர் இப்ராகீம் ரஹ்மத்துல்லா போன்ற புகழ் பெற்ற மார்க்க அறிஞர்கள், கவிஞர்கள், தலைவர்களை அழைத்து வந்து அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதற்கும், கலந்துரையாடுவதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் வள்ளல் ஜமால் முகம்மது சாகிபு அவர்கள். மாணவ சமுதாயமும் மநாகர மக்களும் திருக்குர்ஆன், நபிவழி, இஸ்லாமிய வாழ்வியல்

முதலியவற்றை எளிதில் உணர இத்தகைய வழிமுறைகள் பெருந்துணை புரிந்தன.

## நிறைவுரை :

பால் நினைந்தூட்டும் தாய்போல, நோயின் தன்மையை அறிந்து மருந்தளிக்கும் மருத்துவன் போல, முஸ்லிம் சமுதாயத்திற்கு அதுவரை யாரும் செய்யாத அரும்பணியான திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்புத் தேவையை நிறைவு செய்ய வள்ளல் ந.மு.காஜா மியான ராவுத்தர் அவர்கள் பெரிதும் முயற்சிக்க அதற்குத் தேவையான அச்சகத்தை (Printing Press) வள்ளல் ஹாஜி M.J. ஜமால் முகம்மது சாகிப் அவர்கள் தம் செலவில் நிறுவித் தந்தார்கள்.

பன்னாட்டு அறிஞரும் போற்றும் பன்மொழி வித்தகருமான முகம்மது மர்மடியூக் பிக்தால், கவிஞர் இக்பால், சையத் சுலைமான் நத்வி போன்ற மார்க்கநெறி வித்தகர்களின் வாயிலாக திருக்குர்ஆன் கருத்துக்களை அனைவரும் பெற வள்ளல் ஹாஜி M.J. ஜமால் முகம்மது சாகிப் அவர்கள் பெருமுயற்சி மேற்கொண்டுள்ளார்கள்.

''செயற்கரிய செய்வார் பெரியர்'' என்னும் வள்ளுவரின் வாய்மொழியை வாழ்நெறியாக்கியவர்கள் இவ்வள்ளல்கள் என்பதை இவர்களின் பெரும் பணி மெய்ப்பிக்கின்றது.

மிகவும் வேண்டியவர்களுக்கும் வேண்டாதவர்களாகி விடுகிறோம். அவர்கள் வேண்டியதை வேண்டிய நேரத்தில் செய்து கொடுக்காததால், ஆனால் யாரும் வேண்டிக் கேட்காத நிலையிலும் சமூகத்திற்கு இம்மை மறுமைப் பயனளிக்கும் தேவை இதுவென உணர்ந்து அவற்றை நிறைவு செய்த ஜமால் முகம்மது கல்லூரி நிறுவனர்களான வள்ளல் ந.மு. காஜாமியான் இராவுத்தர் அவர்களுக்கும், வள்ளல் ஹாஜி. M.J. ஜமால் முகம்மது சாகிப் அவர்களுககும் வல்ல இறைவன் மேலான சுவனப் பேற்றை நல்கி அருள்வானாக. ஆமீன்.

## பயன்பட்ட நூல்கள் :


1. திருக்குர்ஆனின் தொடக்க காலத்தமிழ் மொழி பெயர்ப்புகள் (கி.பி. 1874 – 1929) Sadakth : A Research Bulletin VolII, Na2, July 2014, ISSN 2347-7644.
2. செ.திவான், திருக்குர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள், பாளையங்கோட்டை சுஹைனா பதிப்பகம், 1995.
3. இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், தொகுதிகள் 2,3 யுனிவர்சல் பப்ளிஷர்ஸ், சென்னை.


# வையம் உள்ளளவும் வாழும் வள்ளல்!

**காஞ்சி அப்துல் ரவூப் பாகவி**

பிறர் துயரைத் தம் துயராய் கொண்ட ஏந்தல்!
பிறர் வாழத் தமை ஈந்த பெருமனத்தார்!
புறவாழ்வில் பெருவணிகர்! பூமிப் பந்தைப்
புத்துலகு சமைக்க வலம் வந்த சீலர்!

அறவாழ்வை இயல்பாகக் கொண்ட வேந்தர்!
அக இருளை நீக்கிட்ட கல்வித் தந்தை!
மறத் தமிழர்! தாய் மண்ணை நேசித்ததனால்
மாக்கொடையை விடுதலைப் போர்க்கு(ஈ)ந்த வீரர்!

மக்கள்தம் உரிமைக்காய் வட்ட மேசை
மாநாட்டில் சிங்கமென உரைத்த மேதை!
தக்காரைத் தகவிலரைப் பிரித்துத் தேர்ந்து
தரமான சேவைகளை அளித்த தீரர்!

மிக்காரும் ஒப்பாரும் இல்லா எங்கள்
மேதையவர் வள்ளல் ஜமால் முஹம்மத்,
திக்கின்றி தவித்த தமிழ் முஸ்லிம்கட்கு
திசைகாட்டும் கலங்கரையின் விளக்கமானார்!

(வேறு)

சமுதாயம் தழைத்திடவே தமை அர்ப்பணித்தார்,
சன்மார்க்க நெறிநின்று அருஞ்சேவை
செய்தார்!மதென்றே கருதாமல் தம் செல்வம் யாவும் –
தமதிறையின் ஆணைகளை நிறைவேற்றத் தந்தார்!
அமுதெனவே இஸ்லாத்தைப் பருகிட்டார் என்றும்!
அனுதினமும் அதன் மடியில் அடைந்திட்டார் தஞ்சம்!
சுமந்திட்ட ஈமானின் ஒளியால் உம்மத்தை
சுடர்கின்ற தாரகையாய் மாற்றிட்டார் இன்றும்!

பண்புக்குப் பொருள்தந்த பண்பாட்டின் இமயம்!
படித்தோரும் வியந்திட்ட அறிவாற்றல் சிகரம்!
கண்போன்று மார்க்கத்தைக் காத்திட்டார் தினமும்!
கரைகாணா அன்பாலே கவர்ந்திட்டார் இதயம்!

புண்ணான சமுதாயப் புரையெல்லாம் தீர்க்க,
பொன்னென்றும் பாராமல் பொழிந்திட்டார் தருமம்!
மண்மூடிப் போய்விட்ட மனிதாபிமானம்
மலர்ந்தோங்க வாழ்வெல்லாம் புரிந்திட்டார் சமரம்!
வள்ளல் ஜமால் முஹம்மத் என்னும் எம் வைரம்
வாழ்ந்திடுவார் எம் நெஞ்சில், உள்ளளவும் வையம்!

# கான்சாகிப் காஜாமியான் அவர்கள்



முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,
இணைப்பேராசிரியர் & தலைவர்,
முதுகலைத் தமிழாய்வுத்துறை, கலைப்புல முதன்மையர்,
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 20.

*திருச்சியின் மைந்தனிவர் சிறப்புமிகு பண்பாளர்*
*பெருமைமிகு குடும்பத்தில் பிறந்திட்ட பெருமகனார்*
*அதிகமாய் படிக்காத அதிமேதை காஜாமியான்*
*மதிநுட்பம் மிகக்கொண்ட மாபெரும் பொறியாளர்*

*தோல் வண்ணத் தயாரிப்பில் துறைதேர்ந்த உரிமையாளர்*
*பால்வண்ணக் குணமுடைய பன்மொழியில் விற்பன்னர்*
*தம்பிஎஜ மானென்று திருச்சிநகர் மக்களெல்லாம்*
*நம்பிக்கை வைத்தழைத்து நல்வாழ்வு பெற்றார்கள்*

*பல்வேறு மருத்துவத்தை பழுதறக் கற்றமகன்*
*சொல்வேறு செயல் வேறுகல்லாத செயல்வீரர்*
*கதரென்றால் புரட்சியென்று கட்டுரைக்கும் உருதுமொழி*
*கதராடை அணிவதற்கு கொடைகொடுத்தார் கான்சாகிப்*

*இல்லாதோர் அனாதைகள் இயலாதமுதியோர்க்கே*
*இல்லங்கள் அமைத்திட்ட இணையற்றக் கொடையாளர்*
*நைந்திட்ட நெசவாளர் குடும்பங்கள் வாழ்வதற்குக்*
*கைகோளர் குடியிருப்பை திருச்சியில் அமைத்திட்டார்*

*தந்தை பெரியாரின் தன்மான கொள்கைவழி*
*இந்தித் திணிப்பெதிர்த்து போராட்டம் நடத்தியவர்*
*திருக்குரான் புனிதநூலை தீந்தமிழில் மொழிப்பெயர்க்க*
*பொருள்கொடுத்து நிலம்வழங்கி பேருதவி செய்திட்டார்*

*எளிமையின் திருவுருவம் ஏழைகளின் பங்காளர்*
*வலிமைமிகு வணிகமன்னர் வற்றாத தேசபக்தர்*
*சமயத்தை வளர்த்தெடுத்த சமுதாயத் தொண்டரிவர்*
*அமுதாகச் சொல்லாடும் ஆற்றல்மிகு அறிவாளர்*

*கல்விக்கு கொடை கொடுத்தோர் சாவதில்லை*
*கல்லூரி கட்டுதற்கு காணிநிலம் வழங்கியுள்ள*
*செல்வராம் காஜாமியான் காஜாமலை உள்ளவரை*
*கல்லூரி ஜமாலில் காலத்தைவென்று வாழ்வார்*

# ஹாஜி ஜமால் முகம்மது சாகிப்

*அல்லாவின் நாமத்தை அகத்தினில் பதிவேற்றி*
*எல்லாப் புகழும் இறைவனுக்கே என்றுழைத்த*
*வல்லவர் ஜமால்முகமது அய்யாவின் பெருமைதனை*
*நல்லவர் உள்ளமெலாம் நவில்கின்ற புகழாளர்*

*உலகத்தில் உயர்ந்தமகான் யாரென்று கேட்டுவிட்டால்*
*இலமென்று இருப்போரின் இதயத்தில் தெம்பேற்றி*
*வளவன்நான் உள்ளேனென்று உதவுகின்ற குணமுடைய*
*களங்காணும் ஜமால்முகமது அய்யாதான் என்பார்கள்*

*இந்து முஸ்லிம் நல்லிணக்கம் என்றென்றும் நிலைப்பதற்கு*
*முந்திநின்று செயல்பட்டு முன்னேற்றம் கண்டமகன்*
*வணிகர்கள் சங்கத்தின் வலிமைமிகு தலைவராகி*
*வணிகத்தின் வளர்ச்சியினை இமயத்தில் ஏற்றியவர்*

*திருமணத்தில் எளிமையினை கடைபிடிக்க வேண்டுமென்ற*
*பெருமனத்துக் காரரிவர், தன்வீட்டுத் திருமணத்தை*
*நடத்திக்காட்டி எளிமையென்றால் என்னவென்று*
*திடமுடனே மக்களுக்கு தெளிவாக புரியவைத்தார்*

*கெடுதலையைச் செய்துவந்த வெள்ளையரை விரட்டுதற்கு*
*விடுதலைப் போராட்டத்தில் வீரமுடன் செயல்பட்டார்*
*காந்திமகான் திரட்டிய நல்விடுதலையின் நன்நிதிக்குக்*
*காலிக்கா சோலையினைக் கனிவுடனே ஈந்திட்டார்*

*இஸ்லாமியர் எல்லோரும் இன்பமுடன் கல்விகற்றால்*
*விஸ்வரூபம் எடுத்திடலாம் விவேகம் வளருமென்பார்*
*சமுதாயம் முன்னேற்;றப் பாதையிலே பயணித்தால்*
*சமமாவோம் எல்லோரும் சங்கடங்கள் தீருமென்பார்*

*காஜாமியான்; ஈந்திட்ட பலஏக்கர் நிலத்தினிலே*
*ஆசையோடு ஜமால்முகமது கல்லூரி நிறுவியவர்*
*ஜமால்முகமது கல்லூரி பெற்றிட்டப் புகழ்போல*
*ஜமால் முகமதுஅய்யாவின் பெயர்விளங்கும் இந்நிலத்தே!*

# கல்விக் கொண்டல் வள்ளல் ஜமால் முஹம்மது

காஞ்சி அப்துல் ரவூப் பாகவி

## கல்விமழை பொழியும் ஒரு கார்முகிலின் உதயம்

1882ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொன்னினும் அரிய ஒரு நன்னாளில் வறண்ட பாலையில் சுரந்த நீர்ச்சுனையாய், ககனம் மேவி வந்த கவின் நிலவாய் பருகிடக் கல்வியமுதின்றி மனம் தவித்துக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தின் அறிவுத் தாகம் தணித்திட கல்விப் பேரூற்று ஒன்று தோன்றியது! குறிப்பாக, அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த தமிழ் முஸ்லிம் சமுதாயத்திற்கு கல்வி வெளிச்சத்தைத் தந்து, அதன் அறிவு வறுமை நீங்கிடக் கல்விமழை பொழியும் கார்முகிலாய் அது மாறும் என்று எவரும் அப்போது அறிந்திருக்கவில்லை!

ஆம்! 'தோன்றின் புகழோடு தோன்றுக எனும் வாக்கின் சான்றுகளாய்ப் புவிமீது சாகா வரம் பெற்று வான்புகழைக் கொள்வாரும் வாழ்கின்றார். அவரால் தான் நாமும் வாழ்கின்றோம்' என்று பாக்கியாத்தின் நிறுவனர் குறித்து நான் என் மாணவப் பருவத்தில் எழுதிய கவிதை வரிகளே சான்றோர் ஜமால் முஹிய்யுத்தீன் அவர்கள் பெற்றெடுத்த 'கல்விக் கொண்டல் புத்தறிவுப் பூங்கா வள்ளல் ஜமால் முஹம்மது' அவர்களைக் குறித்து கட்டுரை எழுதும் இவ்வேளையில் என் நினைவுக்கு வருகின்றது.

## பொங்கிப் பிரவகித்த புதுமைப் புனல்

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' எனும் பழமொழிக்கேற்ப வள்ளல் ஜமால் முஹம்மது அவர்கள் தமது பதின்ம பருவத்திலேயே தமது துடிப்பான அறிவுத் தேடல் மூலம் 'தான் அனைவரையும் போல் ஒரு சாதாரண இளைஞரல்லர், மாறாக, 'சமுதாயப் புன்மைகள் சாய்த்துப் புத்துலகைச் சமைக்கத் துடிக்கும் ஒரு புரட்;சிக்கனல், பொங்கிப் பிரவகிக்கும் ஒரு புதுமைப் புனல்' என்று நிரூபிக்கலானார்கள்!

## அறிவுத் தேன் சேகரித்த தன்னார்வத் தேனீ

தமது உடல் நலக் குறைவின் காரணமாக முறைசார்ந்த பள்ளிக் கல்விக்கான வாய்ப்பைக் குறைவாகப் பெற்றாலும் உலக அறிவு மார்க்க அறிவு ஆகிய இருவகை அறிவுகளையும் பெறுவதில் இளைஞர் ஜமால் முஹம்மது காட்டிய அயராத ஆர்வத்தைக் கண்டு வியந்தது அன்றைய முஸ்லிம் சமுதாயம்.

துன்பங்கள் கண்டு துவளாத, தொய்வறியா தூயமனம் கொண்ட அந்த இளைஞர் அறிவைத் தேடும் ஆர்வம் மனத்தில் அலையடிக்க, 'கண்டதைப் படித்தால் பண்டிதனாவான்' எனும் பழமொழிக்கேற்ப தமது கண்களில் பட்ட வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், அரசியல் மற்றும் பொது அறிவு சார்ந்த அத்தனை ஆக்கங்களையும் அயர்வின்றிப் படித்தார். அதுவும் அன்று இந்தியத் திருநாட்டில் அறிவுலகையும் புறவுலகையயும் ஒரு சேர ஆட்சி புரிந்து வந்த ஆங்கில மொழியிலேயே அவர்கள் அவற்றைப் படிக்கத் தொடங்கியதால் அது அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் சமுதாயப் பணிகளுக்கும் ஒருசேர ஆக்கமும் ஊக்கமும் அளித்தது.

## பன்முக ஆளுமை கொண்ட மகத்தான மனிதர்

அத்துடன் நில்லாமல், மெட்ராஸ் யுனைடெட் கிளப்பின் உறுப்பினராக மாறி அங்கு வருகின்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் புகழ்மிக்க ஆங்கில வார, மாத இதழ்களையும் மேலும் பல ஆங்கி வரலாற்று நூல்களையும் தீவிரமாக வாசித்ததின் வாயிலாக அவர்கள் தேடிப் பெற்ற அந்த அறிவே ஈரமிக்க சமுதாயப் பணிகளைப் புரிவதற்கும் முஸ்லிம் சமுதாயத்தின் சார்பாக தீரமிக்க அரசியல் பங்களிப்பை அளிப்பதற்கும் முற்றிலும் தகுதியானவராக அவர்களை மாற்றியது. ஏற்கெனவே, வணிகத்தையும் ஒரு வணக்கமாகக் கருதி முனைப்புடன் அத்துறையில் ஈடுபட்டு வந்ததால் பள்ளிவளாகத்தில் கற்ற கல்வியை விட அதிகமான கல்வியை அன்னார் உலகமெனும் பள்ளியில்தான் கற்றிட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் ஏட்டறிவும் பட்டறிவும் ஒருங்கிணைந்த ஏந்தலராய் மாறியதால் வள்ளல் ஜமால் முஹம்மது சாஹிபின் வடிவில் சர் சையித் அஹ்மத் கான் போன்ற மற்றொரு கல்விப் பகலவனைப் பெற்றிடும் பெரும்பேறு தமிழ் முஸ்லிம் சமுதாயத்திற்குக் கிட்டியது.

அவர்களது அந்த அறிவுத் தேடலே அவர்களின் வாழ்க்கைக் கல்வியாகவும் நாளடைவில் பிறரை வாழ்விக்கும் வசந்தமாகவும் மாறியது. பிற்காலத்தில் ஜமால் முஹம்மது கல்லூரியையும் தென்னிந்திய முஸ்லிம் சங்கத்தையும் நிறுவி கல்விப்பணி புரியவும் தூண்டுகோலாய் அமைந்தது.

## படித்த மேதைகளும் வியந்த படிக்காத மேதை, பண்பாளர்கள் வியந்த மாண்பாளர்

மெத்தப் படித்த மேதாவிகளும் கூட வியந்து போற்றும் மேதைமையைப் படிக்காத மேதையான வள்ளல் ஜமால் முஹம்மது அவர்கள் பெற்றிருந்தார்கள். அவர்களின் அரசியல் ஞனமும் நவீன பொருளாதார அறிவும், தீர்க்கமான வணிகத் திறனும், வளைந்து கொடுக்காத நீதியுணர்வும், விலை போகாத நேர்மையும், அசைக்க முடியாத இறைநம்பிக்கையும், பதவிக்காகவும் பட்டங்களுக்காகவும் சொந்த சமுதாயத்தின் நலன்களை அடகுவைக்காத சுயமரியாதை உணர்வும், மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றாலே தவிர மற்ற விஷயங்களில் சமரசம் செய்து கொள்ளாத சமுதாய உணர்வும் ஆங்கிலேய ஆட்சியாளர்களையும் பிற சமுதாயத் தலைவர்களையும் மிகுந்த மரியாதையுடனும் பெரும் வியப்புடனும் அன்னாரை நோக்கச் செய்தது.

## சுதந்திரப்போருக்கு பேராதரவளித்த விடுதலை வீரராய்......

சுதந்திரப் போராட்ட இயக்கத்திற்கு அவர்களின் ஆதரவும் அவர்களின் பங்கும் கணிசமாக இருந்ததால் தான், இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டிற்கு வருகை தரும்படி இங்கிலாந்து அரசால் அழைக்கப்பட்ட இந்தியத் தலைவர்களில் அவர்கள் மிக முக்கியமானவர்களாகத் திகழ்ந்தார்கள். அத்துடன் வட்டமேஜை மாநாட்டில் அவர்கள் நிகழ்த்திய விவாதங்களும் முன்வைத்த கோரிக்கைகளும் கூரிய அறிவுடன் எடுத்துவைத்த ஆணித்தரமான வாதங்களும் ஆங்கிலப் பிரபுக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. அத்துடன் அவை, வள்ளல் ஜமால் முஹம்மது அவர்கள் முஸ்லிம்களுக்கானவர்கள் மட்டுமல்ல, அனைத்து சமுதாயத்திற்கானவர்கள், தேசம் முழுமைக்குமானவர்கள் என்பதைப் பறைசாற்றியதோடு அவர்களின் நாட்டுப் பற்றையும் உலகிற்கு எடுத்துரைத்தன. அவர்களின் வணிகத் திறனையும் பொருளாதார அறிவையும் கண்டு வியந்த பிறசமய வணிகர்களும் ஒருமித்த கருத்துடன் தமது தென்னிந்தியத் தொழில் வர்த்தக சபையின் தலைவராக்கி அழகு பார்த்தனர். இந்தப் பதவி காபினெட் அந்தஸ்துள்ள அமைச்சர் பதவிக்கு சமமானதாகும்.

## வட்டமேசை மாநாட்டில் கூட்டாட்சித் தத்துவம்

ஒரு கூட்டாட்சியின் கீழ் சுயாட்சி முறைக்கு எத்தகைய உயர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும், ஒரு நியாயமான அதிகாரப் பகிர்வின்போது மண்ணின் மைந்தர்களுக்குத் தரப்பட வேண்டிய அடிப்படை உரிமைகள் என்னென்ன, அவர்களுக்குப் பகிர்ந்தளித்துப் பரவலாக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் எத்தகையனவாய் அமைந்திட வேண்டும் என்று ஆங்கிலேயர்களுக்கும் அரசியல் பாடம் நடத்திய ஆசானாய் அந்த வட்டமேஜை மாநாட்டில் வள்ளல் ஜமால் முஹம்மது அவர்கள் விளங்கினார்கள் என்றால் அது மிகையாகாது. அவர்களின் அந்தத் தெளிவான வாதங்கள்தான் கூட்டாட்சித் தத்துவத்திற்கும் மாநில சுயாட்சிக்கும் வழங்கப்பட்ட முதல் வரைவிலக்கணமாக, அந்தத் தத்துவத்திற்கு இடப்பட்ட வித்தாக விளங்கின. இந்த வாதங்களை அடிப்படையாகக் கொண்டே இந்திய சுதந்திரத்திற்குப் பின் அமைந்த அரசியல் நிர்ணய சபையிலும் கூட இந்தியக் கூட்டாட்சி ஒன்றியத்தின் கொள்கைளும் அதன் கீழ் இயங்கும் மாநிலங்களின் சுயாட்சிக்கான கொள்கைகளும் வகுக்கப்பட்டன என்று துணிந்து கூறலாம்.

இவற்றின் காரணமாகவே வள்ளல் ஜமால் முஹம்மது அவர்கள் தேசத்தந்தை மகாத்மா காந்தி மற்றும் இந்திய சுதந்திரப்போரின்தலைவர்களானபாரதத்தின்முதல்பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு, அவரது தந்தை மோதிலால் நேரு போன்றோரின் பெருமதிப்பிற்கு உரியவர்களாகவும் விளங்கினார்கள். அவர்களும் அன்னாரின் குடும்பமும் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு வழங்கிய தார்மீக ஆதரவும், களப்பங்களிப்பும், நிதியுதவிகளும் விலை மதிக்க முடியாதவையாகும். சுதந்திரப் போராட்ட நிதியாக மூதறிஞர் இராஜாஜி அவர்களிடம் தொகை குறிப்பிடாத வெற்றுச் சாசோலையை வழங்கித் தனது நாட்டுப்பற்றை நிரூபித்தவர் தான் வள்ளல் பெருந்தகை ஜமால் முஹம்மது அவர்கள்.

## சமுதாய நிலை கண்டு வாடிய வள்ளல்

கல்வியறிவையும் ஆட்சியதிகாரத்தையும் வாழ்வாதாரமான செல்வத்தையும் மொத்தத்தில் வளங்கள் அனைத்தையுமே இழந்து, 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டுக்கிடந்த' தனது சொந்த சமுதாயத்தைக் கண்டு வாடிய பயிரைக் கண்ட வள்ளலாரைப் போல் வள்ளல் ஜமால் முஹம்மது

மனம் வாடினார்கள். கரைகாணாத் துயரம் கொண்டு கண்கலங்கினார்கள். அதன் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் ஓயாது சிந்தித்தார்கள், பசிநோக்காமல் கண்துஞ்சாமல் ஓடியாடி உழைத்தார்கள்.

## மார்க்க மறுமலர்ச்சிக்கு ஒரு ஞனக்கூடம் – ஜமாலியா

மார்க்க அறிஞர்கள் நவீன உலகின் சவால்களுக்கு முன்னால் தாக்குப்பிடித்து நின்று மார்க்கத்தைக் கட்டிக் காத்திட அறிவாயுதம் ஏந்திப் போராடிட வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்த நமது வள்ளல் பெருமகனார் அவர்கள் திருமக்கா, திருமதீனா ஆகிய புனித நகரங்களின் மார்க்கக் கல்விக் கூடங்கள் உட்பட, எகிப்து நாட்டில் கெய்ரோ நகரத்து பழைமையும் புதுமையும் பின்னிப் பிணைந்த அல் அஸ்ஹர் பல்கலைக்கழகம், இஸ்லாமிய கிலாஃபத்தின் தலைமைப் பீடமாகத் திகழ்ந்த இஸ்தான்புல் நகரத்து (முந்தைய கான்ஸ்டான்டி நோபிள்–Contantinoble) கல்விக்கூடங்கள் அனைத்தையும் பார்வையிட்டு வந்து சென்னை பெரம்பூரில் ஜமாலிய்யா அரபுக்கல்லூரி என்னும் பெயரில் நவீன மார்க்கக் கல்விக்கும் அடித்தளமிட்டார்கள். அன்று அவர்கள் இட்ட விதையானது இன்று பெரும் ஆலவிருட்சமாக மாறிநிற்கின்றது. அம் மார்க்க ஞனக் கூடத்திலிருந்து நவீன அரபு மொழியும் அறிவார்ந்த சிந்தனைகளும் கற்றுத் தேர்ந்த ஏராளமான மார்க்க அறிஞர்கள் உருவாகி அவர்கள் இன்றும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மார்க்க மற்றும் உலகியல் சேவைகளை ஆற்றிவருவதை நாம் பார்க்கின்றோம். அது மட்டுமன்றி வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் இருந்த பிற அறிஞர்கள் நிறுவிய புகழ்மிக்க மார்க்கக் கல்விக் கூடங்களுக்கும் ஏராளமான பொருளுதவியை வழங்கியுள்ளார்கள் என்று சையித் சுலைமான் நத்வீ (ரஹ்) அவர்களே தமது நூலொன்றின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்கள்.

## இஸ்லாமிய எழுச்சியுரைகளுக்கு அடிகோலிய மறுமலர்ச்சியாளர்

முஸ்லிம்கள் தரம் தாழ்ந்து நிற்பதற்கும் பிற சமயத்தார் அவர்களை தாழ்வாகக் கருதுவதற்கும் காரணம் இஸ்லாத்தின் உயர் அந்தஸ்தையும், அதன் வரலாற்றுச் சாதனைகளையும் அறியாமலிருப்பதுதான் என்றும் புரிந்து கொண்ட வள்ளல் அவர்கள் முஸ்லிம்களிடையே நவீன சிந்தனையை மார்க்க அடிப்படையிலேயே கட்டமைத்திடவும் பிற சமயத்தார்க்கும் இஸ்லாத்தின் எழில் மிக்க அமைப்பையும் அதன் கொள்கைகளின் மேம்பாட்டையும் அவர்களுக்கு எடுத்துரைத்திடவும் முடிவுசெய்தார்கள். அத்துடன் இஸ்லாம் வரலாறு நெடுக இவ்வுலகில் நிகழ்த்திய விந்தைகளும், முஸ்லிம் சமுதாயத்தின் சிறப்புமிக்க வரலாறும், அனைத்திற்கும் மேலாக, அண்ணல் நபிகளாரின் மகோன்னதமான வாழ்வும் வாக்கும் நமது நாட்டின் அறிவுஜீவிகளையும் முக்கியஸ்தர்களையும் கல்வியாளர்களையும் படிப்பறிவுள்ளவர்களையும் முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதார் என்கிற பேதமின்றி அனைவரையும் சென்றடைய வேண்டுமென்ற தணியாத ஆவல் கொண்டார்கள்.

இந்தக் குறிக்கோளை அடைந்திட, அப்போதுதான் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வள்ளல் அவர்களாலும் அவர்களின் நண்பர்களாலும் உருவாக்கப்பட்ட தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்கத்தின் சார்பாக உலகப் புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞர்களைக் கொண்டு மியாஸீ (MEASI) அமைப்பின் சார்பாக தொடர் சொற்பொழிவுகளை நடத்தினார்கள். அதில் கலந்து கொண்டு அந்த அறிஞர்கள் ஆற்றிய இஸ்லாமிய உரைகள் உலகப் புகழ் பெற்றன. அவை பின்னர் நூல்வடிவிலும் வெளியிடப்பட்டன. எடுத்துக்காட்டாக, அந்த நிகழ்வில் கலந்துகொண்டு அல்லாமா இக்பால் (ரஹ்) அவர்கள் ஆற்றிய பேருரை ‘Reconstruction of Religious thought in Islam’ ஆற்றியபெயரிலும், திருக்குர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பிரிட்டிஷ் முஸ்லிம் சர் மர்மட்யூக் பிக்தால் (ரஹ்) அவர்கள் ஆற்றிய பேருரை ‘The Cultural Side of Islam’ என்னும் பெயரிலும், அல்லாமா சையித் சுலைமான் நத்வீ (ரஹ்)அவர்கள் ஆற்றிய பேருரை ‘Madras Speeches’ என்னும் பெயரிலும் வெளியாகின.

## ஜெகம் போற்றும் கல்விப் பேருவி ஜமால் முஹம்மது கல்லூரி

வள்ளல் காஜா மியான் ராவுத்தருடன் இணைந்து வள்ளல் ஜமால் முஹம்மது அவர்கள் கட்டியெழுப்பிய மாபெரும் கலாசாலை தான் ஜமால் முஹம்மது கல்லூரி என்னும் கல்விச்சோலை! அது வள்ளல்கள் இருவரும் நம் சமுதாயத்திற்காற்றிய ஈடிணையற்ற புனிதச் சேவை! இந்தச் சேவையின் வாயிலாக வள்ளல் பெருந்தகையின் திருப்பெயர் வரலாற்றின் பொன்னேடுகளில் வைரவரிகளால் பதிக்கப்பட்டு விட்டது.

ஒருமுறை, ‘நான் பொருளாதாரச் சுரண்டலைக்

கூடப் பெரிதாகக் கருதவில்லை. அறிவுச் சுரண்டலையே மிக மோசமான சுரண்டலாகக் கருதுகிறேன்' என்று தமிழகத்தின் முன்னாள் முதல்வர் முத்தமிழ் வித்தகர் திரு. மு. கருணாநிதி அவர்கள் கூறினார்கள். அவர்களின் இந்தக் கூற்று முற்றிலும் உண்மையே. ஏனெனில், எல்லாச் சுரண்டல்களுக்கும் ஆணிவேராக விளங்குவது இந்த அறிவுச் சுரண்டல் தான். இதையே திருக்குர்ஆனும் உரத்துக் கூறுகின்றது. அண்ணல் நபி (ஸல்) அவர்களும் 'அறிவுச் சுரண்டலுக்கு ஆட்படுவதும் இணைவைப்பே' என்னும் கருத்துப்படக் கூறியுள்ளார்கள். அந்த அறிவுச் சுரண்டலுக்கெதிரான ஓர் அறப்போராட்டக் களம் தான் நமது ஜமால் முஹம்மது கல்லூரியாகும். தென்னிந்தியாவின் அலிகார் பல்கலைக் கழகம் என்று இந்தக் கலாசாலையை எவ்விதத் தயக்கமும் இன்றி நாம் அழைக்கலாம்.

இந்த வகையில் தமது கல்விச் சேவையால் அறியாமைக்கும் அறிவுச் சுரண்டலுக்கும் எதிராக வெஞ்சமர் புரிந்த அறப்போராட்ட வீரர் என்றே வள்ளல் அவர்களை நாம் குறிப்பிடலாம். இன்று இக்கல்விக் கூடத்தில் பயின்ற பழைய மாணவர்களான ஜமாலியன்கள் தமிழ்நாட்டிலும் இந்தியாவின் பல பகுதிகளிலும் மட்டுமன்றி உலகெங்கும் பரவி பற்பல துறைகளிலும் சேவை செய்து அதன் நறுமணத்தைப் பாரெங்கும் பரப்பிவருகின்றனர். வாழ்க வள்ளல் ஜமால் முஹம்மது அவர்களின் புகழ்! மேன்மேலும் ஓங்குக ஜமால் முஹம்மது கல்லூரியின் சேவை!

கட்டுரையாளரின் அலைபேசி எண்: 98946 95224

* * * * *



Mr. Kamaraj Nadar addressing the gathering after unveiling the portrait of the late Janab Haji Jamal Mohamed Saheb.

# காஜாமலையில் அமைந்துள்ள மாப்ளா முஸ்லிம்களின் அடக்கஸ்தலமும் வள்ளல் ந.மு.காஜாமியான் ராவுத்தரின் பங்கும்

முனைவர் அ.அக்பர் உசேன்
தலைவர் – வரலாற்றுத்துறை, ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 20.

## முன்னுரை

திருச்சிராப்பள்ளியின் அனைத்து சமய மக்களாலும் முதலாளி என அன்புடன் அழைக்கப்படுபவர் வள்ளல் ந.மு.காஜாமியான் இராவுத்தர் ஆவார். இவர் திருச்சி மாநகரில் இஸ்லாமியர்கள் அதிகமாக வாழும் பாலக்கரையில் ந.முகமது மியான் ராவுத்தர் அவர்களின் மகனாக 1880–ம் ஆண்டில் பிறந்தார். ந.மு.காஜாமியான் அவர்கள் அறிவுத்திறமை, உழைக்கும் ஆற்றல், கருணைத் தன்மை, மார்க்கப்பற்று மற்றும் நாட்டுப்பற்று கொண்டவராக விளங்கினார்.

தனது தந்தையார் செய்துவந்த தோல் பதனிடும் வர்த்தகத்தையே கற்று, அதில் தனது முழுத்திறனையும் பயன்படுத்தி உலக நாடுகள் அதிசயிக்கும் வண்ணம் பல புதுமைகளைப் புகுத்திப் பெருமை பெற்றவர்.

ஆட்டுத் தோலைப் பதனிடும்போத செயற்கை வண்ணங்களைச் சேர்த்து அதை இயற்கை வண்ணம்போல் மாற்றி தோல் தேய்ந்துபோனாலும் இறுதிவரை வண்ணம் குன்றாத ஒரு தனிரக உற்பத்தியை இந்தியாவிலேயே முதன் முதலாகக் கண்டுபிடித்த நிபுணராக இவர் புகழ் பெற்றார்.

இளமையிலேயே தேச சுதந்திரத்தில் ஆர்வம் கொண்டு கதர் உடுத்துபவராகவும், காந்தியடிகளின் வேண்டுகோளை ஏற்று அக்காலத்தில் ரூ.50 ஆயிரம் செலவில் கதர் ஆலையைத் தோற்றுவித்து அதனால் ஏற்பட்ட மாபெரும் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல தேசப்பணியாற்றினார்.

பல தேசபக்தர்களும் இவரது உதவியைப் பெற்றுள்ளார். இவரது வள்ளல் தன்மைக்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. சேஷாயி மின் உற்பத்திக் கம்பெனியைத் திருச்சிராப்பள்ளியில் தொடங்க முதன்முதலில் 50 ஆயிரம் ரூபாய்க்கு பங்கு வாங்கிய பெருமை இவரையே சாரும்.

தமிழ் இலக்கியத்தில் மிகவும் ஆர்வம் கொண்டவராக விளங்கியுள்ளார். தமிழ் மொழியில் திருக்குர்ஆனை மொழி பெயர்க்க மௌலானா ஆ.கா.அப்துல் ஹமீது பாகவி அவர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்தார்.

## கேரளா மாப்ளா முஸ்லீம்கள்

மாப்ளா(Moplach or Mappilla) என அழைக்கப்படும் முஸ்லிம் சமூகத்தவர் கேரளாவில் வசிக்கும் மக்களாவர். இந்தியாவில் முதன் முதலில் தோன்றிய முஸ்லிம் மதத்தவர் இவர்களே. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே சேர நாட்டுடன் அரபு நாடு மக்கள் நீண்ட கால வணிக உறவு கொண்டிருந்தார்கள் என்பது வரலாறு. அரேபிய மண்ணில் தோன்றிய இஸ்லாமிய மதத்தின் போதனைகளில் கவரப்பட்ட சேரநாட்டு மக்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவினார்கள். கடல் தாண்டிய வணிக உறவு என்பதன் பின்னணியில் பார்க்கும்போது, கேரளாவின் மேற்குக் கடற்கரைப் பிரதேசமான மலபாரில் இஸ்லாமிய மதம் பரவியதும், அப்பிரதேசத்தில் மக்கள் அம்மதத்தைத் தழுவியதும் இயற்கையாக நடந்தேறிய ஒன்றாக இருந்தது. இம்மக்களே மாப்ளாக்கள்.

## மாப்ளா முஸ்லீம்களும், ஆங்கிலேயர்களும்

வீரமும், விவேகமும், சமயப்பற்று மற்றும் தேசப்பற்றும் மிக்க மாப்ளா முஸ்லிம்கள் ஆங்கிலேயே ஆட்சியை தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வந்தனர். முதல் உலகப்போரில் (1914–19) ஜெர்மனிக்கு ஆதரவாக துருக்கியர்கள் போரில் ஈடுபட்டனர். இதில் துருக்கியர்கள் (முஸ்லிம்கள்) வெல்வது உறுதி என மாப்ளாக்கள் நம்பிக்கையுடன் இருந்தனர். ஆனால் துருக்கியர்களை ஆங்கிலேயர்கள் வென்றனர். இதனால் ஆங்கிலேயர்கள் மீது மாப்ளாக்கள் கடும் கோபம் கொண்டனர். கிளாபத் இயக்கத்திலும் அதிக அக்கரை உள்ளவர்களாகவும் இருந்தனர்.

## மாப்ளா கிளர்ச்சி

1921–ல் மாப்ளா கிளர்ச்சி உச்சத்தை அடைந்தது. கோழிக்கோடு, பொன்னாணி, ஏரநாடு, வள்ளுவநாடு ஆகிய நான்கு தாலுக்காவில் இருந்து ஆங்கிலேயோர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். 1921 ஆகஸ்ட் 25–ம் நாள் தீவிர மண்டலத்துக்குள் மீண்டும் ஆங்கிலேயப்படை நுழைய முடிந்தது. கோழிக்கோடு கடல் பகுதியில் H.M.S. கோமஸ் என்ற பீரங்கி தாங்கிய கப்பல் நிலைநிறுத்தப்பட்டது. இத்தாக்குதலில் ஆங்கிலேய படையில் 169 பேரும் மாப்ளா தரப்பில் நான்கு ஆயிரம் பேரும் உயிர் இழந்ததாக ஆங்கிலேயே அரசு தனது ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளது.

## ரயில் பெட்டி கோரச்சாவு
(Train Tragedy or Waggon Tragedy)

1921–ம் ஆண்டு மாப்ளா கிளர்ச்சியின் உச்சகட்ட துயரநிகழ்வு ரயில்பெட்டி கோரச்சாவு என்ற கொடூர நிகழ்வாகும். கிளர்ச்சியாளர்கள் 70 பேரை (சில ஆவணங்கள் 122 பேர் என்கிறது) கிரிமினல் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டிய பிரிட்டிஷ் நிர்வாகம், கற்பனை கூடச் செய்ய முடியாத கொடூரச் செயலில் இறங்கியது. 122 பேரையும் சரக்கு ரெயில் பெட்டி ஒன்றில் ஏற்றி அடைத்து, கதவுகளையும் மூடி கேரளாவிற்கு வெளியே அனுப்பியது. சிறிதும் காற்றுப்புகாத சரக்குப்பெட்டி, வெளிச்சம், இருக்கை, கைப்பிடி எதுவும் இல்லாத சரக்கு பெட்டி 1921– நவம்பர் 10–ம் நாள் கோவை ரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்தது.

பெட்டியை திறந்து பார்த்தபோது பெட்டியில் இருந்த 122 பேரும் மூச்சு திணறி இறந்து கிடந்தனர். கோயம்புத்தூரில் இறந்தவர்களை அடக்கம் செய்தால் அருகில் உள்ள மலபார் முஸ்லிம்கள் அறிந்தால் பிரச்சினை வரும் என்பதால் அப்பெட்டியை உடனே ஈரோடு, கரூர் வழியாக திருச்சிராப்பள்ளி சந்திப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## அஞ்சுமனே ஹிமாயதே இஸ்லாம்

பிணங்களாக வந்த மாப்ளா முஸ்லிம்களை திருச்சியில் ஆங்கிலேய அரசு அடக்கம் செய்ய முயன்றது. இதனை அறிந்த திருச்சிராப்பள்ளிவாழ் இஸ்லாமிய முன்னோடிகள் மாப்ளா முஸ்லிம்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு வேண்டினர். அதற்கு பிரிட்டிஷ் அரசு தனி மனிதர்களிடம் ஒப்படைக்க முடியாது என்றும் ஒரு அமைப்பிடம் மட்டுமே ஒப்படைக்க முடியும் என்றது.

உடனே திருச்சிவாழ் மக்கள் ஒரே நாளில் ‘அஞ்சுமனே ஹிமாயதே இஸ்லாம்’ என்ற பெயரில் அமைப்பு ஒன்றை உருவாக்கினர். இவ்வமைப்பிற்கு ஹஸ்ரத் சையத் முர்துஷா சாகிப் அவர்கள் தலைவராகவும், கான் பகதூர் கலிபுல்லா சாகிப், முகம்மது யூசுப் சாகிப், பாலக்கரை காஜா மொய்தீன், முகம்மது இப்ராகிம் சாகிப் ஆகியோர் சேர்ந்து மாப்ள முஸ்லிம் சடலங்களை அதிகாரிகளிடமிருந்து பெற்றனர்.

வள்ளல் ந.மு.காஜாமியான் அவர்கள் தனது சொந்த செலவில் காஜாமலை அடிவாரத்தில் உள்ள காஜாமலை கப்ரஸ்தானில் நல்லடக்கம் செய்தார்.

திருச்சிராப்பள்ளி முஸ்லிம்களுக்கு பல்வேறு உதவிகள் செய்தது போலவே கேரள மாப்ளா முஸ்லிம்களின் இறுதிச் சடங்கிற்கு வள்ளல் ந.மு.காஜாமியான் இராவுத்தர் பொருட்செலவு செய்தார்.

அஞ்சுமனே ஹிமாயதே இஸ்லாம் 1921–ல் இருந்து திருச்சி மாநகரில் உள்ள இஸ்லாமிய அனாதை சடலங்களை நல்லடக்கம் செய்து வருகிறது. ஏழை இஸ்லாமிய சிறுவர்களுக்கு சுன்னத் செய்து வைக்கிறது. ஏழை இஸ்லாமிய பெண்களுக்குத் திருமணம் (நிக்காஹ்) செய்து வைக்க பண உதவி செய்துவருகிறது.

## முடிவுரை

தற்பொழுதும் கேரளாவில் இருந்துவரும் மாப்ளா முஸ்லிம்கள் தமிழகத்திற்கு நாகூர் தர்காவிற்கு வரும் பொழுது தங்களது மூதாதையர் அடக்கமாயிருக்கும் காஜாமலை மஹல்லா காபர்ஸ்தானுக்கு வந்து பாத்திகா (பிரார்த்தனை) செய்து செல்கின்றனர்.

கேரளா முஸ்லிம்களின் வருகையே காஜாமலை அடிவாரத்தில் மாப்ளா முஸ்லிம்கள் அடக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதற்கான முதன்மை சான்றாக விளங்கி வருகிறது.

* * * * *

# மனிதருள் மாணிக்கம் ஜமால் முஹம்மது இராவுத்தர்

பா. சிராஜுதீன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 20.

மனிதம் என்பது மனிதன் மனிதனாக உலகில் வாழ்ந்தான் என்பதற்குரிய அடையாளத்தின் வேராகும். மனித நேய மாண்புகளில் இன்றியமையாத பண்பு சமத்துவம், சகோதரத்துவம். இது உண்மையிலேயே நிலை கொள்ள வேண்டுமானால் அதற்குரிய ஒப்பரிய ஒரு மார்க்கம் உளதென்றால் அது கல்வியால் மட்டுமே நிலவ முடியும் என்பதில் நீக்கமற உறுதி பூண்டு செயலாற்றிய மனிதருள் மாணிக்கம் வள்ளல் ஜமால் முஹம்மது சாஹப் என்றால் மிகையாகாது. இராமநாதபுரத்தில் உதித்த உத்தமச் செம்மல் இந்தியாவில் வாழும் ராம், ரஹீம், ராபர்ட் யாவரும் இந்தியன் என்று ஒரு மூச்சில் சுவாசித்து வாழ வேண்டுமென்ற உறுதிப்பாட்டை நிலை கொள்ளச் செய்தவர். குறிப்பாக முஸ்லிம்களின் கேள்விக்குறியான வாழ்விற்கு ஒரு ஆச்சரிய குறியை ஏற்படுத்த முயன்றவை.

## தென்னிந்தியாவில் வர்த்த இளவரசர்

சுதந்திரத்திற்கு முன் முஸ்லிம்களின் நிலை கல்வி பொருளாதாரத்தில் கேள்விக் குறியாகவும், வருத்தத்திற்குரியதாகவும் இருந்தது. குறிப்பாக தென்னிந்தியாவில் முஸ்லிம்களின் நிலை 19–ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களின் கடுமையான போட்டியாலும் கட்டுப்பாடற்ற வர்த்தகத்தாலும், தமிழ் முஸ்லிம் வர்த்தகர்களின் வருமானமும், முக்கியத்துவமும் குறைந்தன. இருப்பினும், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த ந. முஹம்மது மியான் இராவுத்தர் பகதூரும், ராமநாதபுரம் ஜமால் முஹையதீன் இராவுத்தரும் தோல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த முக்கியமான இராவுத்தர்களில் சிலர். முன்னர் 1883–ஆம் ஆண்டு வாக்கில் ஒரு தொழிற்சாலை தொடங்கினார். பிறகு, திருச்சியை அடுத்த செம்பட்டில் மூன்றுதொழிற்சாலைகளின்சொந்தக்காரரானார்.பின்னவர் 19–ஆம் நூற்றாண்டின் பின்பாதியில் சென்னைக்குப் போய் அங்கு தொழிலைச் தொடங்கினார். அவருடைய நிறுவனம் பதனிடப்படாத தோலையும், பதனிடப்பட்ட தோலையும் ஏற்றுமதி செய்தது. மேலும், தென்னிந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்த தோல் பதனிடுபவர்களுக்குக் கமிஷன் ஏஜெண்டாகவும் செயல்பட்டது. அவருடைய மகன் ஜமால் முஹம்மது ராவுத்தர் தம் தந்தையின் தொழிலில் ஈடுபட்டார். தந்தை இறந்தபின் அத்தொழிலைத் தாமே நடத்தினார். அவர் தம் செல்வச் செழிப்பு, தொழில் அறிவு காரணமாகத் 'தென்னிந்தியாவின் வர்த்தக இளவரசர்' என்பதாக போற்றப்பட்டாரென்று வரலாற்று அறிஞர் ஜே.பி.பி. மோரே குறிப்பிடுகிறார்.

## வள்ளல் குணம்

தமிழ் முஸ்லிம்களில் வள்ளல் தன்மை மிக்க சீதக்காதி சந்ததியினராக சுல்தான் சையீத் முஹம்மது மரைக்காயர், ஹபீப் முஹம்மது மரைக்காயர், ஹபீபரசர் போன்றோர் ஆவர். இதில் ஹபீபரசர் பரவலாக அறியப்பட்டவர். ஹபீபரசர் கடற்கரை ஊர்களில் பல பள்ளிவாசல்களைக் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. 19–ஆம் நூற்றாண்டிலும், 20–ஆம் நூற்றாண்டின் முதல் பாதியிலும் அரசியல், பொருளாதாரச் சூழல் மாறுபட்ட நிலையில் கொடை, தாராளத்தன்மை, பக்தி இவற்றால் புகழ்பெற்ற பல முஸ்லிம் பெரியவர்களின் வரிசையில் கான்பகதூர் பி.ஆர்.எம். காசிம் முஹம்மது மரைக்காயர், திருச்சிராப்பள்ளி ந.மு.காஜாமியான் இராவுத்தர் பகதூரும், இராமநாதபுரம் ஜமால் முஹையதீன் இராவுத்தர் அவருடைய மகன் ஜமால் முஹம்மது ஆகியோர் குறிப்பிடத்தக்க தகைமையாளர்கள். திருச்சி நத்ஹர்வலி தர்காவில் அறங்காவலராக இருந்து அரும்பணியாற்றியவர் ந.மு.காஜாமியான் ராவுத்தர் பகதூர் ஆவார்.

## முஸ்லிம்களின் கல்வி நிலை

பிரிட்டிஷார் தம் கொள்கை சார்ந்த முடிவுகள் மூலம் படிப்படியாக 'புதிய நவீனக் கல்விக் கொள்கை' ஒன்றை இந்தியாவில் அறிமுகப்படுத்தினார். இது முஸ்லிம்களுக்கு மதரீதியிலான கொள்கைகளுக்கு சவாலாக இருந்தது. 1835–இல் வெளியிடப்பட்ட மெக்காலேவின் குறிப்புகள் அடிப்படையில் மதம், பண்பாடு, சார்ந்திருந்த மரபுவழிக் கல்வியில் மிக முக்கியமான மாற்றங்களைக் கொண்டுவந்தது.


B.S. Javid Ahamed
98424 41141
RCS
2413666, 2411568
93644 77577
98429 41143
Rahman Computer Spares
Computer Peripherals & Accessories
All Multi Brand Laptops, Desktops, Keyboard, Mouse, UPS Sales & Service
B-8, Jenne Plaza, No.5, Bharathiyar Salai, Tiruchirappalli - 620 001.
e-mail:rcstrichy@yahoo.co.in


Eswarr SCIENTIFIC & CO.,
All Scientific Needs Under One Roof
STOCKIST
Chemicals : SRL, Isochem, CDH, Merck, Loba, Qualigens, Rankem, Avra, Himedia
Imported Chemicals : TCI Chemicals, Sigma Aldrich
Filter Paper : Axiva, Whatman
Instrument : Deep Vision, Systronics, Elico, Guna
Balance : Shimadzu, Citizen, K.Roy, Dhona
Glasswares : Eswarr Glass Wares, Borosil Glass
P.V.C. : Poly Lab, Tarson, Axiva
#46, 4th Cross, RMS Colony, Karumandapam, Trichy - 620 001.
Ph : 0431 2481415 Cell : 94422 69605, 97900 92600
Website : www.eswarrscientific.com, E-mail : eswarrscientific@gmail.com


ELITE
ENTERPRISES
SPECIFICATIONS :
3LCD, 3-Chip technology
1080p (1920 x 1080)
2200 lumens
PROJECTORS
SPECIFICATIONS :
High & Mid-Volume Applications
High Security ID & Access Control Cards
Secure & Batch Issuance
ID CARD PRINTERS
SPECIFICATIONS :
Warm up time : 24 seconds
Continuous Output Speed : 60 pages per minute
HDD : 320 GB
MULTIFUNCTIONALS PRINTERS
JB Complex, First Floor, (Opp to Maruthi PLA Showroom),
35/B, Promenade Road, Cantonment, Trichy - 620 001.
Ph : 0431 - 2400202, 99 44 99 43 21, E-mail : raghu@elitemail.in


A.K. BUILDERS
(Flat & Plot Promoters)
A.K. INTERNATIONAL
(Importers & Exporters)
P. ABDUL KADIR
B.Sc., B.Tech.,
Managing Partner
No.509/4, III Floor, Anna Salai, Nandanam, Chennai - 35.
Cell : 98402 46265 / 89399 47080, E-mail : pa_kadir@yahoo.com


"Give your children a foundation that lasts a lifetime"
Exclusive Coaching for JEE and NEET by explicit faculty for each subject within the Campus.
Advantages
Environmental Friendly Campus
Digital Classrooms
Exclusive Pre-Primary Curriculum
Experimental and Inquiry Based Learning
CCE coupled with great curriculum
Well-equipped Air-conditioned Library / ICT / Science Labs
English Language Lab and Math Lab
Personality Development Lab
Indoor sports facility
Student Lead Clubs
Safe transportation
Variety of co-curricular & Extra - Curricular Activities
ORCHARD
Learning for Life
Secondary School Education
IA Physics, Chemistry, Mathematics, Biology
IB Physics, Chemistry, Mathematics, Computer Science
IIIA Commerce, Accountancy, Economics, Computer Science
IIIB Commerce, Accountancy, Economics, Business Mathematics
Extensive coaching for Olympiads, Spell Bee, ASSET etc.; within the School Hours from Grade 1 itself.
ORCHARD SCHOOLS
Iyer Thottam, KK.Nagar, Trichy-21
Phone: 0431 2457990 / 9600874553
Write to us at info@orchard.edu.in Visit us at www.orchard.edu.in

பிரிட்டிஷார் முஸ்லிம்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக மாணவர்களுக்கு அரபு, பாரசீக மொழிகளை போதிக்கும் ஓர் அரபு மதரஸாவை சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் நிறுவித் தகுந்த ஆசிரியர்களை நியமித்தனர். 1851–ம் வருடம் அக்டோபர் மாதம் 28–ம் நாள் அரபு, பாரசீக மொழிக் கல்வியின் மறுமலர்ச்சியாக மதரஸா–ஈ ஆசம் என்ற பள்ளியை நிறுவினர். கருத்தளவில் அந்தப் பள்ளி எல்லாருக்கும் பொது என்றாலும், மேட்டுக்குடி மக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் குழந்தைகளே அதில் பயில வாய்ப்பு பெற்றார்கள். பிறகு 1859 மே 1–ம் நாள் பிரிட்டிஷார் மதரஸா–ஈ ஆசமை மதச்சார்பற்ற கல்வியைப் புகட்டும் ஆங்கிலப்பள்ளியாக மாற்றிவிட்டார்கள். சென்னை முஸ்லிம்கள் தங்கள் மத ஈடுபாடுகளுக்கும் வாழ்க்கை முறைக்கும் ஊறு செய்வதாக இந்த புதிய கல்விக் கொள்கை திணிக்கப்படுவதாக உணர்ந்தார்கள். இக்காலக்கட்டத்தில்தான் சமுதாய மற்றும் மத அடிப்படையில் தங்களின் இருத்தல் நிலையை வலுப்படுத்திக் கொள்ளும் வழியைத் தேடிச் செல்ல வைத்தது.

## ஜமாலியா மதரஸா துவக்கம்

முஸ்லிம்கள் தம் மதக்கோட்பாட்டிற்கு ஊறு வந்துவிடாமல் இருப்பதற்கு பல அரபு மதரஸாக்களை நிறுவத் தொடங்கினர். 1898–ஆம் ஆண்டிலிருந்துதான் தமிழ் முஸ்லிகள், சென்னையின் இஸ்லாமியக் கல்வி மற்றும் மத வட்டாரங்களில் தங்கள் இருப்பை வெளிப்படுத்தினர். தென் தமிழ் மாவட்டங்களிலிருந்து ஏராளமான தமிழ் முஸ்லிம்கள் சென்னைக்கு வந்தார்கள். இது சாத்தியமாயிற்று. அவ்வாறு சென்னைக்கு வந்த ஜமால் முஹையதீன் இராவுத்தர் என்ற பிரபல தோல் வர்த்தகர், சென்னையின் புறநகர்ப்பகுதியான பெரம்பூரில் 1900–ஆம் ஆண்டில் மதரஸா ஜமாலியாவை நிறுவினார். இது திராவிட முஸ்லிம் மத வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். 1924–இல் ஜமால் முஹையதீன் மறைவுக்குப்பின் அவருடைய மகனார் ஜமால் முஹம்மது அதை நிர்வகித்தார். அவர் வட இந்திய அறிஞர்களை அங்கு அழைந்து வந்ததன் மூலம் அதற்கு ஒரு தேசிய அறிமுகத்தை அளித்தார். 1925–ம் ஆண்டு சையீத் சுலைமான் நத்வீ, டாக்டர் மகாகவி சர். முஹம்மது இக்பால் போன்றோர் உரையாற்றினார். 1930–இல் ஹைதராபாத்தைச் சேர்ந்த மௌலானா சையீத் அப்துல் வஹாப் புகாரியை இந்த நிறுவனத்தின் தலைவராக நியமித்தார்.

## ஒற்றுமை வளர்ச்சிக்குழு

1920–களில் இந்து – முஸ்லிம் உறவு சுமூகமாக இல்லை. வடஇந்தியாவின் முஸ்லிம் அரசியல் தாக்கம் தொடர்ந்து தெற்கே பரவியமை இவையெல்லாம் சேர்ந்து 1930–களில் தென்னிந்தியாவின் மத உறவுகளில் கவலை தரும் போக்குகளை விளைவித்தன. காலங்காலமாக இந்து–முஸ்லிம்களிடையே இருந்ததாக. குறிப்பாக, தமிழ் மாவட்டங்களில் நிலவியதாகச் சொல்லப்படும் நல்லுறவு 1930–களில் குலைந்து போயிற்று. இந்து–முஸ்லிம் கலவர அபாயத்தைக் கருத்தில் கொண்டு தெலுங்குத் தலைவர் டி.பிரகாசம் மற்றும் சென்னை ராஜதானி முஸ்லிம் லீக்கின் தலைவர் ஜமால் முஹம்மது போன்ற இந்து–முஸ்லிம் தலைவர்களின் முயற்சியால் ஒற்றுமைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஜமால் முஹம்மது சாஹிப் சமய நல்லுறவை வளர்ப்பதற்காக இந்தக் குழுக்களின் கிளைகள் பல்வேறு இடங்களில் நிறுவினார். எப்படியும் மத அமைதியை நிலைநிறுத்த விரும்பினர். கல்வியின்மையே மதக் கலவரங்களுக்குக் காரணம் என்று ஜமால் முஹம்மது கேரள முஸ்லிம் மாநாட்டில் கூறினார்.

## கல்லூரி தொடங்க அச்சாரம்

1901–ஆம் ஆண்டில் ஐஸ்டிங் ஹங்கர்ஃபோர்டு டியூடர் போடார், முஸ்லிம் கல்வியைப் பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டார்.

தொடக்கப் பள்ளிகளில் 57,704 முஸ்லிம் குழந்தைகள் உள்ளனர். இடைநிலைப் பள்ளிகளில் 1,529தான். 11 பேர்கள் மட்டுமே பி.ஏ. தேறியுள்ளனர். சட்டம், மருத்துவம், பொறியியல் துறைகளில் ஒருவர் கூட இல்லை. மைசூர், திருவாங்கூர், ஹைதராபாத் சமஸ்தானங்களையும் உள்ளடக்கிய சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுள்ள 7230 பேர்களில் மேற்கண்ட முஸ்லிம்களே தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இந்தப் புள்ளி விவரம் ஜமால் முஹம்மது சாஹிபை பெருத்த கவலையில் ஆழ்த்தியது. இந்தக் கவலையை தனது நண்பர் திருச்சியைச் சேர்ந்த ந.மு.காஜாமியான் இராவுத்தர் பகதூரிடம் அவ்வப்போது கூறிக் கொண்டு வந்துள்ளார். இவரின் உண்மையான ஏக்கத்தை அறிந்த வள்ளல் பெருந்தகை ந.முகமது மியான் இராவுத்தர் அவர்கள் தனது 120 ஏக்கர் நிலத்தையே கொடுத்து நீடித்த புகழை எய்திவிட்டார். 1951–ல் உதயமான ஜமால் முஹம்மது கல்லூரி அந்நிலத்தில் ஜமால் முஹையத்தின் கட்டிடம் ஜமால் முஹம்மது அவர்களால் கட்டப்பட்ட முதன்மையான

கட்டிடம். அக்கட்டிடத்தில் மஜ்லிசுல் உலமா என்பதை நிறுவி சமூகப் பணியும், உலமாக் கூட்டமும் நடந்தேறியது.

## வட்டமேஜை மாநாடு

1931 மார்ச்சில் செய்துகொள்ளப்பட்ட காந்தி – இர்வின் ஒப்பந்தப்படி காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டு இலண்டனில் இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள இணங்கியது. ஃபெடரேஷன் ஆஃப் இண்டியன் சேம்பர்ஸ் ஆஃப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ரியின் தலைவர் என்ற முறையில் ஜமால் முஹம்மது இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து 1931 நவம்பர் இறுதியில் நடைபெற்ற சிறிது நேர முழு அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்த உரையில் அவர் தாம் நன்கு அறிந்திருந்த நிதி மற்றும் பொருளாதார விஷயங்களைப் பற்றியே முக்கியமாகப் பேசினார். மதம் சார்ந்த சிக்கலில் அதிகம் நுழையவில்லை. மதப்பிரச்சினை ஓர் அண்மைக்கால பிரிட்டிஷ் இந்திய நிகழ்வு என்றும், இந்து–முஸ்லிம்களிடையே நிகழும் சச்சரவுகள் சகோதர்களுக்கிடையே நேரும் தற்காலிக வேறுபாடுகள் என்றும் அவர் கூறினார்.

## முஸ்லிம்லீக் தலைவர்

1930–ஆம் ஆண்டில் திருச்சியைச் சேர்ந்த சையீத் முர்துஸாவுக்குப் பிறகு ஜமால் முஹம்மது சாஹிப் அதிகாரபூர்வமான சென்னை ராஜதானி முஸ்லிம் லீக்கின் தலைவரானார். தேசியத் தலைவரான ஜின்னாவோ 1931–ம் ஆண்டில் இலண்டனுக்குப் போய்விட்டார். இந்த நிலையில் மூழ்கிக் கொண்டிருப்பதாகத் கருதப்பட்ட ஒரு கட்சியின் தலைமையை ஜமால் முஹம்மது சாஹிப் ஏற்றது ஒரு முக்கிய நிகழ்வாக கொள்ளலாம்.

அனைத்திந்திய முஸ்லிம்லீக் தனித்தொகுதிகளை விரும்பினாலும், அவரும் சென்னை ராஜதானி முஸ்லிம் லீகும் கூட்டுத் தொகுதிகளையே ஆதரித்தனர். அவர் எப்போதும் இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். இந்து–முஸ்லீம் ஒற்றுமையின்றேல் முஸ்லிம்களின் நிலை சீர்குலைந்துவிடும். ஆகையால், முஸ்லிம்களுக்கு இந்த ஒற்றுமை தேவை என்பதை அவர் அறிந்திருந்தார். தென்னிந்தியாவின் அமைதியான மதஉறவுச் சூழலை நிலைநிறுத்த அவர் மிகவும் பாடுபட்டார்.

## இறவாப்புகழ்

1941–க்குப் பிறகு அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற அவருடைய வாழ்நாளில் அவர் எடுத்துக் கொண்ட ஒவ்வொரு செயலிலும் செம்மையும், பெருமையுடையதாக செயலாற்றினார். அரசியலில் நாகரீகமும், சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்த அவர் செய்த முயற்சியும், பிரிவினைவாதத்தை எதிர்த்து இந்தியர்கள் யாவரும் அமைதிபெற ஒற்றுமையை வலியுறுத்தினார்.

முஸ்லிம் சமுதாயத்திற்கு அவர் ஆற்றிய பணி போற்றுதற்குரியது. பொன்னேடுகளால் பொறிக்கப்பட வேண்டியது.

பல ஆண்டுகளாக மனதில் நீக்கமற நிலைகொண்டிருந்த கல்வியால் முஸ்லிம்களையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் உயர்த்த வேண்டும் என்ற அவா தனது நண்பர் ந.மு.காஜாமியான் இராவுத்தர் அவரோடு இணைந்து பல்வேறு சமூகப் பணியை செய்தார்கள். கல்லூரி துவங்க வேண்டுமென்று முயற்சி செய்தார். ஜமால் முகம்மது சாகிப் அவர்கள் அவருடைய உண்மையான எண்ணத்தை உயிர்ப்பாக உணர்ந்த வள்ளல் ந.மு.காஜாமியான் ராவுத்தர் பகதூர் தனக்கு சொந்தமான 120 ஏக்கர் நிலத்தை கல்லூரி துவங்க வாரி வழங்கினார். 1951–ஆம் ஆண்டு கல்லூரி துவங்கும் முன்பு ஜமால் முஹம்மது சாகிப் இறையடிச் சேர்ந்துவிட்டார். அவர் நெஞ்சத்தில் ஊறித் திளைத்த கல்லூரிக் கனவினை நனவாக்கி வைத்ததன் மாத்திரமின்றி தனது நண்பர் ஜமால் முஹம்மது பெயரையே கல்லூரிக்கு வைத்து அழகுபார்த்த அரும்பெரும் வள்ளல் ந.மு.காஜாமியான் இராவுத்தர் பகதூர். இறவாப்புகழ் பெற்றார், மனிதருள் மாணிக்கம் ஜமால் முஹம்மது சாஹிப் என்றால் மிகையாகாது.

சோறிருக்கும் சோணாட்டின் சொத்திருக்கும்
சுகமிருக்கும் அறிருக்கும் இந்நகரில்
அருந்தமிழின் நெஞ்சிருக்கும்
பேறிருக்கும் பெரிய ஜமால் பேரிருக்கும்
அவையிடத்தே நூறிருக்கும் அனைவருக்கும்
நுவலுகின்ற சலாமிருக்கும்'

என்ற இறையருட்கவிமணி கா. அப்துல் கபூரின் கவியுரை இப்புண்ணிய மண்ணில் உதித்தெழும் உண்மையான உளநேசர்களான ஜமாலியனின் உள்ளத்தில் இளகிவரும் உளச்சாரமாகும்.


Anywhere - Anytime
N
XI
I
X
II
W
E
VIII
IV
VII
V
S
PROFESSIONAL
COURIERS
Domestic | International | Cargo
THE
PROFESSIONAL
COURIERS
24X7 Booking Office
No.17, Cathedral Garden Road
Chennai-600 034
Ph: 6620 2020
General Enquiry & Customer Care Service
Ph: 4499 9944, Fax: 6620 2100
E-mail: maatn@tpcindia.com
www.tpcglobe.com
Corporate Business Enquiry
Ph: 4555 3222
Fax: 2855 4241
E-mail: maa_mktg@tpcindia.com

# Life Sketch of Janab. M.J. Jamal Mohideen Sahib Ex. MP., My revered Grandfather and the real Architect and Father of Jamal Mohamed College, Trichy



**Hajee. M.J. Jamal Mohamed**
Treasurer
Jamal Mohamed College, Trichy

Janab. M.J. Jamal Mohideen Sahib, Ex.M.P., was born on 15th August 1904 in Madras and passed away on 24th January 1975. His father was Alhaj Janab. M. Jamal Mohamed Sahib, a leading leather merchant and a nationalist. He studied in the Madras Christian College High School. In the year 1921, he joined his grand-father's firm M/s Jamal Mohideen Sahib & Co. and later on established his own concern i.e. M/s Jamal Mohideen Sahib & Co. M/s B. B. Voss and Bevingtons and Sons were the selling agents for M/s M.J.Jamal Mohideen Sahib & Co., in London for tanned hides and skins.

## Business activities and services to leather Industry :

He was a big business magnate. He started manufacturing finished leather at the N. M. Tannery, Tiruchirappalli. He was an influential and highly respected member of Southern India Skin and Hide Merchants Association and All India Skin & Hide Tanners and Merchants Association, serving in various capacities like committee member since 1931 and Vice President upto his demise in 1975.

He used his good offices with the then Prime Minister Pandit Jawaharlal Nehru to get the Central Leather Research Institute established in Madras in the year 1948, instead of at Calcutta. He played a vital role in designing the Central Leather Research Institute Tannery at Adyar, Madras.

Mr. Shyam Prakash Mukerji the Union Minister of Commerce wanted CLRI to be established in Calcutta because he is from West Bengal. Mr. Jamal Mohideen consulted with Rajaji the then Chief Minister of Madras Presidency. And Rajaji advised Jamal sahib to meet Prime Minister. Jamal Mohideen met Jawaharlal Nehru and informed that Madras (periamet) is the biggest market in the world for leather and leather goods and got CLRI established in 1948 in Madras.

For the foundation laying stone function of CLRI Jamal Mohideen invited Mr.Shyam Prakash Mukerji. Mr.Shyam Prakash Mukerji said "you have hit me very hard Jamal sahib by taking CLRI to madras instead of Calcutta and inviting me to lay the foundation stone also." Jamal Mohideen said to Mr.Sham Prakash Mukerji "You are not a minister for West Bengal alone you are a Union minister of India and you belong to the whole of India. Whenever any function or activities takes place in our country which falls under your ministry you should come and inaugurate. Subsequently Shyam Prakash Mukerji agreed and came to Madras and laid the foundation stone for CLRI at Adayar.

He was also instrumental in the formation of the Leather Export Promotion Council in 1956, first of its kind in India to promote export of all kinds of leather, leather on goods etc. He was the first non-official Chairman of the Leather Export Promotion council from 1956 to 1966. He solved many trade related problems such as quality control, pre-shipment inspections, sales tax channelization through the State Trading Corporation, grading scheme under Agmark for the bye-products of the tanning industry (wool, goat hair, hide cuttings and fleshings etc.,) for exports. He led the first Indian Leather Trade delegation to U.K., U.S.A and Europe in 1947, immediately after Independence. He invited

many foreign delegations connected with the leather industry from many parts of the world to Madras and sent many delegations from India to various countries to promote exports and to create new markets through the Leather Export Promotion Council.

In 1962 Mr. Manubhai Shah the Union Minister of State for Commerce gave a telegram asking Jamal Mohideen, chairman of LEPC to meet him at Madras airport. Mr. jamal Mohideen gave a return telegram “I have no business with you . Meet me in my chamber if necessary” Manubhai Shah met Mr. Jamal Mohideen in his chamber at LEPC and discussed about export promotions . He said “You are very adamant for which Jamal Mohideen said I will be further more adamant if needed because it is yourself who wanted to discuss with me, so naturally you only should meet me. If at all I have an obligation or any business I will meet you definetly at your office in Delhi.” Mr. Manubhai Shah belongs to Gujarat.

## Services in Educational Field :

Janab. M.J. Jamal Mohideen Sahib was the Muthavalli of the Jamalia Arabic College, Madras (from 1949 to 1975), a leading Arabic Institution which was established by his grand father in the year 1898. He was the Vice-President of Muslim Educational Association of South India and also one of the founder members of the New College, Madras. He was the Founder Secretary and Correspondent and Second President of the Jamal Mohamed College, Tiruchirappalli which was established in the year 1951, mainly due to his untiring efforts. He was the main architect to bring the Jamal Mohamed College to its present advanced position. He was also the Founder and President of the Jamalia Educational Society which runs the Jamalia Higher Secondary School, Madras-12.

## Services in the Political Field :

He was an active member of the Indian Union Muslim Leaque and was member of its Central Committee formed by Quaid-e-Azam Mr. M.A.Jinnah till the partition in August, 1947. He later joined the Indian National Congress and got elected as an M.L.A. from Dindigul during the period from 1957 to 1962. That is the only constituency where an absentee was elected. When Pandit Jawaharlal Nehru visited Gandhigram, he mentioned that an absentee was elected only in this South Indian constituency. It is first of its kind in South Indian History and I still wonder about this. He was later nominated to the Rajya Sabha in recognition of his services. He was a Member of Parliament from 1962 to 1968 and closely associated with leaders like Pandit Jawarharlal Nehru, Moulana Abul Kalam and Dr. Zakir Hussain representing the Congress Party.

In 1956, when he was staying with Dr. Moulana Abul Kalam Azad, Mr. T.T.Krishnamachari, the then Union Finance Minister met him and offered the agency for Iron and Steel for South India. T.T.K said “You can use your own office and your son (Abdul Gafoor) and all the business people in the trade will come and take the quota from you.” Mr. Jamal Mohideen did not agreed to this. Then Mr. T.T.K said Jamal Sahib please think over it and take a decision. Jamal Mohideen asked his son Abdul Gafoor (our Former Secretary and Correspondent) are you angry with me for refusing the accept the offer made by T.T.K. Mr. Gafoor said “Defienetly I am angry because you refused the offer.” Mr. Jamal Mohideen said “Already there are people in that trade and I don’t want to enter in to it and spoil the chances of the people who are already in the trade and earn the wrath and badua of them. This shows his qualities as a human being who was not greedy and also who does not want to harm anybody. Likewise, he was also offered the agency for Horlicks and Marcony Radios. These offers were also refused by him. This clearly shows that he never used his power and status as a politician for his own benefit. He only used his good offices and influence only for the benefit of the leather trade and for other public causes like starting of educational institutions to benefit the student community. It is very rare to come across such selfless persons. May his soul rest in peace and let the Almighty bless him with heavenly abode.

முஃப்தி **முஹம்மது ரூஹீல் ஹக்** ரஷாதி காஸிமி -
முதல்வர், ஜாமிஆ அன்வாருல் உலூம் அரபிக்கல்லூரி, திருச்சி
தலைவர், திருச்சி மாவட்ட ஜமாஅத்துல் உலமா -
துணைத் தலைவர், தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா
உறுப்பினர். All India Muslim Personal Law Board

## ஹஜ்ரத் அபூஹுரைரா(ரழி) அறிவிக்கின்றார்கள்

அருமை நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு மனிதன் இறந்து விட்டால் அவன் அமல் செய்யும் கதவு அடைபட்டு நன்மையின் பாக்கியம் முடிந்துவிடும், ஆனால் மூன்று காரியங்களின் நன்மைகள் மனிதன் இறந்த பின்பும் தொடர்ந்து கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

1) ஸதகாயே ஜாரியா எனும் தொடர் தானம்.
2) மக்களுக்கு பலனளிக்கும் கல்வி ஞானம்
3) அவன் மரணித்த பின் அவனுக்காக துஆ செய்யும் சாலிஹான பிள்ளைகள்
(அபூதாவூத் நஸயீ)

இப்னு மாஜா, சஹீஹ் இப்னு ஹீஜைமா, சஹீஹ் இப்னு ஹிபான்,
ஹழ்ரத் அபூஹுரைரா(ரழி) அறிவிக்கின்றார்கள்:

قال رسول الله صل الله عليه وسلم ان مما يلحق المؤمن من عمله وحسناته بعد موته علم علمه ونشره او ولدا صالحا تركه او مصحفا ورثه او مسجدا بناه او بيتا لا بن السبيل بناه او نهرا اجراه او صدقة اخرجها من ماله في صحته وحياته يلحقه بعد موته

ஒரு முஃமின் இறந்த பின் அவன் செய்த அமல்கள் நற்கருமங்களில் இருந்து அவன் இறந்த பின்பும் தொடர்ந்து கிடைக்கக்கூடிய நன்மையான காரியங்களில் இல்மை கற்றுக் கொடுத்து அதை பரப்பிய செயல், அவன் விட்டுச் சென்ற ஸாலிஹான பிள்ளை, அவன் வக்ஃபு செய்து விட்டுச் சென்ற குர்ஆன், பள்ளிவாசல் கட்டியது, வழிப்போக்கர்களுக்காக மடத்தை கட்டியது, ஆறு, கிணறு போன்றவைகளை வெட்டியது, ஆரோக்யத்துடன் தான் வாழ்ந்திருக்கும் நாட்களிலேயே தன் மரணத்திற்குப் பின் தொடர்ந்து நன்மை கிடைக்கும் வகையில் செய்த தான தர்மம், இந்த ஏழு காரியங்களின் நன்மைகள் மனிதன் இறந்து மண்ணில் சென்ற பின்பும் தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்கும் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்து அருளியதாக ஹழ்ரத் அபூஹுரைரா(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்

عن انس بن مالك رضي الله عنه عن اللنبى صلى الله عليه وسلم قال ما من مسلم غرس عرسا فاكل منه انسان او دالة الا كان له صدقة رواه بخارى كتاب الادب ١٢-٣٥

سيدنا انس (رضى):

அறிவிக்கின்றார்கள் :

எந்த ஒரு முஸ்லிம் ஒரு மரத்தை நடுகிறாரோ அந்த மரத்தில் இருந்து மனிதன் அல்லது கால்நடைகள் சாப்பிட்டால் அது அவனுக்கு ஸதகா ஆகும் என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

புனித இஸ்லாத்தில் ஸதகாவின் பொருள் மிகவும் விசாலமானதாகும். ஒரு ஹதீஸில்

"كل معروف صدقة" ஒவ்வொரு நன்மையான காரியமும் ஸதகாவாகும்). ஒரு ஹதீஸில், "تبسمك في وجه اخيك صدقة" (நீங்கள் உங்கள் சகோதரர் முன் புன்முறுவல் பூப்பதும் ஸதகாவாகும்). மேலும், ஒரு رواية ல் "لكلمة الطيبة صدقة" (ஒரு நல்ல வார்த்தை பேசுவதும் ஸதகாவாகும்). ஸதகாவென்பது குறிப்பிட்ட ஒரு செயலில் முடக்கப்பட்டதல்ல. அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி எந்த சுயநலமும் இல்லாமல் அல்லாஹ்வின் படைப்பிற்கு பலன் கிடைக்கும் வகையில் செய்யும் ஒவ்வொரு காரியமும் ஸதகாவாகும். அதை தானமாக தர்மமாக எழுதப்படும். அல்லாஹ்வின் சன்னிதானத்தில் எந்த மனிதன் அல்லாஹ்வின் படைப்பிற்கு மிகவும் நன்மையளிக்கக்கூடியவனாக இருப்பானோ அவனே அல்லாஹ்விற்கு மிகவும் நேசமானவன், பிரியமானவன்.

இந்த தான தர்ம தொடரில் தான் ஒரு மரத்தை நடுவதையும் ஸதகா(தர்மம்) என்று சொல்லப்பட்டது. ஒரு மரம் முழுக்க முழுக்க நன்மைகளை அடியான் மீது பொழியவைக்க காரணமாகும். வளர்ந்து, அடர்ந்து, படர்ந்த மரத்தை கண்டாலே ஒரு மகிழ்ச்சி. யாரெல்லாம் மரத்தைக் கண்டு மகிழ்வார்களோ அவர்கள் மகிழ்ந்ததற்கான நன்மை மரத்தை நடுபவனுக்கேசாரும். ஒரு மரத்தை ஒருவர் மட்டும் கண்டுகளிப்பதில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு நெகிழ்வார்கள். அத்தனை நன்மைகளும் மரம் வைத்தவனுக்குக் கிடைக்கும். அந்த மரத்தின் நிழலில் யாரெல்லாம் அமர்வார்களோ அந்த நன்மையும் மரத்தை நட்டியவனுக்குக் கிடைக்கும். மரம் ஆக்ஸிஜன் தருன்றது, Pollution-னை நீக்குறது. கார்பன்டை ஆக்ஸைடை கிரகித்துக் கொள்கிறது. நாள் முழுவதும் மரம் இந்த சேவையில் தன்னை அர்பணிக்கிறது. இந்த நன்மைகள் யாவும் மரத்தை நட்டவனுக்கே கிடைக்கும். மரம் உயிரற்றது. அதற்கு நன்மைகள் சேர்வதில்லை. மரத்தை நாட்டியவனுக்கு தான் நன்மை வந்து சேரும்.

ஒரு மரம் பூக்கவில்லை, காய்க்கவில்லை ஆனால் அந்த மரத்தின் கிளைகளை வெட்டி பலவிதமான ஃபர்னீச்சர்கள் தயாரிக்கப்படுறது. குர்ஆன் ஓதும் ரைஹாலிகள் தயாரிக்கப்படுன்றன. பாடங்கள் படிக்கும் மேஜை தயாரிக்கப்படுறது, புத்தகங்களை வைக்கும் அலமாரிகள் தயாரிக்கப்படுன்றன. அவைகளில் காலமெல்லாம் குர்ஆன் ஓதப்பட்டது, பாடங்கள் படிக்கப்பட்டன, புத்தகங்கள் பாதுகாக்கப்பட்டன என்றால் இந்த நன்மைகள் யாவும் வைத்தவனுக்கே கிடைக்கும். பள்ளிவாசலில் மிம்பராக மாறிவிட்டது, பள்ளிவாசலில் மிஹ்ராபாக மாறிவிட்டது,

மஸ்ஜிதே நபவியில் மிம்பராக மாறிவிட்டது என்றால் அதன் நன்மைகள் மண்ணிவிருந்து விண்ணைத் தாண்டி அர்ஷ் அளவில் சென்றுவிடும். இப்படியாக தானதர்மத்தில் பல்வேறு வகைகளை எண்ணிக் கொண்டே போகலாம், வர்ணித்துக்கொண்டே இருக்கலாம்.

வாருங்கள், தென்னத்தின் தர்மசீலர்கள், கொடைவள்ளல்கள், கொடைவள்ளல் சிகரங்கள், தானதர்மகோலின் இரு துருவங்கள், வள்ளல் M. ஜமால் முஹம்மது சாஹிப் அவர்களையும், வள்ளல் கான் சாஹிப் N.M. காஜா மியான் ராவுத்தர் அவர்களையும் நினைத்துப்பாருங்கள். மேலே ஹதீஸ்களில் குறிப்பிட்ட ஸதகாக்களின் எல்லா வகைகளையும் உயிர்ப்பித்து தர்மயுகத்தில் கல்வியுலகில் பெரும் புரட்சியை செய்துவிட்டார்கள். ஜமால் முஹம்மது கல்லூரி வளாகத்தின் நடுவில் நின்று கொள்ளுங்கள். அதன் எட்டு திசைகளையும் உற்று நோக்குங்கள்.

மேலே ஹதீஸில் வர்ணிக்கப்பட்ட ஸதகயே ஜாரியாவின் எல்லா வகைகளும் பளிச்சிடும். அதாவது இங்கு கல்வியை - இல்மை கற்று, அதனை கற்றுக்கொடுத்து பரவச் செய்யப்படுன்றது. அந்த இரு வள்ளல்களின் பிள்ளைகள் ஸாலிஹானவர்களாக இந்த உலகிற்குத் தரப்பட்டு, மேலும் இந்தக் கல்லூரி ஆரம்பிக்கும் முன் மஜ்லிஸில் உலமாவினை ஆரம்பித்து அதில் ஆரம்பமாக திருக்குர்ஆனின் தமிழாக்கத்தினை எழுதி மக்கள் பயன் பெறும்படி செய்தார்கள். மேலும், ஜமால் முஹம்மது கல்லூரியில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல் அனைவரும் தொழுவதற்கேற்ப ஒரு பள்ளிவாசலினைக் கட்டியிருக்றார்கள். மேலும், மாணாக்கர்கள் தங்குவதற்காக வேண்டி ஒரு மிகப்பெரிய விடுதியை கட்டியுள்ளார்கள். மேலும், இந்த ஜமால் முஹம்மது

கல்லூரியின் மாணாக்கர்களும், ஆசிரியர்களும், அறிவின் ஊற்றாக வெளியேறி பலரின் தாகத்தைத் தீர்க்க வழி செய்துள்ளார்கள். இறுதியாக தாங்கள் ஆரோக்கியமாக இருந்த காலகட்டத்திலேயே 99 ஏக்கர் பரப்பளவு இடத்தினை வழங்யுள்ளார்கள். அதில் தமிழகத்தின் மையமான மலைக்கோட்டை மாநகரத்தின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாக பல கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ளன.

ஜமால் கல்வி வளாகத்தில் மஜ்லீசுல் உலமா எதீம்கானா (அநாதை இல்லம்), தொடக்கப்பள்ளி, ஜமால் முஹம்மது கல்லூரி, சமது மேல் உயர்நிலைப்பள்ளி (CBSC) அல் -அமீன் காஜாமியான் தொழில் நுட்ப கல்லூரி, கல்வி இயல் கல்லூரி, ஆயிஷா மெட்ரிகுலேஷன் பெண்கள் பள்ளிக்கூடம், ஜாமிஆ அன்வாருல் உலூம் அரபிக் கல்லூரி ஆகிய கல்விக்கூடங்கள் அமைந்துள்ளன.

கல்வி வளாகம் உருவாகுவதற்கு அடித்தளமாக அமைந்த நிறுனவர்கள் வள்ளல் M.ஜமால் முஹம்மது சாஹிபையும், கான் சாஹிப் N.M. காஜா மியான் ராவுத்தர் அவர்களையும் சமுதாயம் மறக்க முடியாது. நிறுவனர் நினைவாக மலர் வெளியிடுவது அவர்களுக்கு ஆற்றக்கூடிய நன்றிக் கடனாகும். இப்பணியில் ஈடுபட்டுள்ள நல்ல உள்ளங்களுக்கு எனது வாழ்த்துக்களையும், துஆவையும் தெரிவித்துக் கொள்றேன்.

அந்தக் கல்வி நிறுவனங்களில் ஜாமிஆ அன்வாருல் உலூம் அரபிக் கல்லூரி சமுதாயத்திற்கு மிகவும் தேவையான மௌலவி, ஹாபிழ் பட்டங்களை பெறக்கூடியவர்களை உருவாக்கும் தலை சிறந்த இஸ்லாமிய கல்விக்கூடமாக திகழ்ன்றது. எனது மரியாதைக்குரிய தந்தை அப்துஸ் ஸலாம் ஹஜ்ரத் அவர்கள் அரபிக் கல்லூரியின் நிறுவனமுதல்வர் ஆவார்கள். எனது தந்தையைக் கொண்டு மதரஸா உருவாவதற்கு கனம் ஹாஜி K.A. காதர் சாஹிப், அப்துல் ஹக்கீம் ஹாஜியார், சுக்கூர் ஹாஜியார் போன்ற மற்றும் சிலர் உறுதுணையாகவும், காரணமாகவும் இருந்தார்கள்.

மேலும் மேலே உள்ள ஹதீஸில் குறிப்பிட்டுள்ள மரத்தினைப் போல் ஜமால் முஹம்மது கல்லூரி திகழ்கிறது. ஜமால் என்ற நிழலில் வாழ்ந்தவர்கள் பலர். ஜமால் என்ற மரத்தின் கனிகளான பாடதிட்டங்களை மாணாக்கர்கள் புசித்து, புத்துணர்ச்சி பெற்று வெளியோறுகிறார்கள். மேலும், இந்த ஜமால் முஹம்மது கல்லூரியானது ஒரு மரமாய் திகழ்ந்து உலகில் தீமையை ஏற்படுத்தும் கார்பன் டை ஆக்ஸைடை போல் உள்ள மாணாக்கர்களின் அறியாமையை உறிஞ்சி, ஆக்ஸிஜனைப் போல் பயன்களைத் தரும் மனிதர்களை வெளியாக்குகிறது.

இப்படியாக, ஒரு மரமாய் திகழ்ந்து அதில் அதிகமான பிரயோஜனங்களை வெளியாக்குகிறது. இவ்வாறு கிடைக்கும் இந்த ஸதகயே ஜாரியாவின் நன்மைகள் யாவும் தர்மத்தின் தலைசிறந்த வள்ளல்களான M.ஜமால் முஹம்மது சாஹிப், கான் சாஹிப் N.M. காஜா மியான் ராவுத்தர் அவர்களையே சாரும்.

ஹதீஸில் ஹதீஸில் கூறப்பட்ட ஒவ்வொன்றையும் விவரித்து ஒப்பிட்டு, சிலாத்து கூற ஆரம்பித்தால் நிறுவனர்கள் நினைவு நாளை எடுத்துக் கூறும் இந்த சிறப்பு நூலை விட பெரியதானதோர் சரித்திர ஏடு உருவாகிவிடும். அத்தகைய வள்ளல் பெருமான்கள் நாட்டிய ஜமால் எனும் விருட்சம் வானங்களை தொடட்டும், வைகறைகளை தமது சேவைகளால் மூடி மறைக்கட்டும், இதன் கிளைகள் ஆலமர விழுதுகளாக அகிலமெங்கும் பரவட்டும். அறியாமை மடமையின் இருள்நீங்கட்டும். வறுமை, பட்டினியின் காரிருள் மேகங்கள் சிதறட்டும். மனிதர்கள் புனிதர்களாக மாறி மனித நேயத்தின் இஸ்லாமிய கொடிகளை உயர்தட்டும். பின்தோன்றியவர்களின் பணிகள் தொடரட்டும். அவர்கள் விட்டுச்சென்ற சந்ததிகளின் வாழ்கை என்றென்றும் மலரட்டும். இந்த எளியோனின் ஆழ்ந்த மனதில் இருந்து வெளியாகும், இந்த துஆக்கள் கியாமத் வரை தொடரட்டும்.

ஆமீன்! ஆமின்! யாரப்பல் ஆலமீன்!

# OUR BELOVED FOUNDER SECRETARY AND CORRESPONDENT : 'ATTAU SAHEB!'

**Prof. M. Nyamathullah,**
Former H.O.D of Commerce,
Old Boys Association, J.M.C

One fine morning, while I was in the First B.Com class in 1953, Principal Sayeed Saheb entered the room accompanied by a tall well built person, with fast receding hairline, pepper and salt beard and a set of steady and penetrating eyes. He looked a man of means and good lineage! When Principal announced that he was the Founder Secretary & Correspondent of the college we got the confirmation.

He was the grand son of Jamal Mohideen Saheb a leading Tanner of Madras and the philanthrope who built the main block of the present day college as far back as in 1924. Because our founder secretary was named after his illustrious father, Haji Jamal Mohamed Saheb (after whom the college is named) fondly called his son & our Founder Secretary as "Attau". After the demise of our Founder Secretary's grandfather, his own father Jamal Mohamed Saheb came into the centre stage. This merchant Prince's philanthropy was a legend. Dr. Iqbal refers him as "Seth Jamal Mohamed Saheb of Madras!" After leading a trail blazing life, Jamal Mohamed Saheb expired in 1949 when the fortunes of the Tanners of Madras presidency were fluctuating!

The Muslim educational enthusiasts in Madras city wanted to start a Muslim college there. The Muslim Educational society of southern India opted to house the proposed New College in the Association Gardens in Royapetah in 1951.

In a vast area of 120 acres close to the then Ceylon Labour commission in Tolgate Trichy, the Muslims of Trichy decided to have Jamal Mohamed College in 1951. The leading light of Trichy "Ejman N.M. Khaja Mian Rowther" became the Founder President of Jamal Mohamed College Management Committee and "Attau Saheb" was co-opted as Secretary. Thus Attau Saheb had the unique experience of witnessing the sunset over the Jamal Mohamed College had a meteoric rise! The Founder Principal's uncanny perceptyirty made him keep the image of the management high and the staff loyal!

Attau, being a scion of respectable Muslim merchant family, kept the family tradition of philanthropy and munificence. As an M.P. he strived hard to revive the Leather export business and was instrumental in establishing the Leather Export Promotion council.

His contacts with national leaders and eminent educationists secured national recognition of Jamal Mohamed College very soon. Within 6 years it secured the recognition of the erstwhile University of Madras for its NCC & Sport activities, and "its hospitality and social tea!" soon the Dan forth Foundation came forward to grant study Fellowship to the Faculty. Around 1966, Jamal Mohideen saheb's health started failing, hence he relinquished the office of the Secretary. The members of the Management Committee persuaded him to become the President and he graciously agreed.

One day the Principal called me, the Founder President of the Old Boys Association, to raise funds for the college. We got ready a three-day programme of carnatic music by Thirumathi M.S. Subbulakshmi, Bharata Natyam by Kumari L.VijayaLakshmi and one more day of festivity. Then we invited Attau Saheb and in a grand function handed over a cheque for Rs.10,000/-. The Management utilized it to build the Maths Block. Vice Principal Mr. Thomas insisted on a plaque being placed in that block to remind posterity the contribution of the alumni body.

Jamal Mohideen (Attau Saheb) had quick perception, soft in speech and altruist in attitude. His signature consisted of many spirals. On 24th January, 1975 he breathed his last after prolong illnesses. Nearly 25 members of the Faculty represented the college at his burial.

# எளிமை... நேர்மைக்கு ஒரு N.M.K.



முனைவர். R. காதர் மொய்தீன்
இயக்குநர், மேலாண்மையியல் துறை,
மேனாள் முதல்வர், ஜமால் முகம்மது கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 620 020.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்.

வள்ளல் ஹாஜி N.M.K. அப்துல் காதர் இராவுத்தர் அவர்கள் நமது கல்லூரியின் நிறுவனர்களில் ஒருவரான ஜனாப் மர்ஹூம் காஜாமியான் இராவுத்தர் அவர்களின் இரண்டாவது புதல்வராவார். எஜமான் என்று கண்ணியத்துடன் அனைவராலும் அழைக்கப்பட்ட ஹாஜி N.M.K. அப்துல் காதர் சாகிப் (மர்ஹூம்) அவர்கள் நமது கல்லூரி ஆட்சிமன்றக் குழுவின் பொருளாளர், செயலர் மற்றும் தாளாளராகவும் இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவராவார்.

1972–ஆம் ஆண்டு நான் புகுமுக வகுப்பு (P.U.C) மாணவனாக நம் கல்லூரியில் சேர்ந்த பொழுது கல்லூரி ஆட்சி மன்றக் குழுவின் செயலர் மற்றும் தாளாளராகத் திகழ்ந்தவர் நமது ஹாஜியார் அவர்கள். N.M.T. தோல் பதனிடும் தொழிற்சாலையின் நிர்வாக இயக்குநராகவும், நமது கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளராகவும் சீரிய முறையில் நிர்வகித்து அனைவரின் அன்பையும், மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்தவர் நமது ஹாஜி சாகிப் அவர்கள்.

என் போன்ற சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த 50–க்கும் மேற்பட்ட பேராசிரியர்களைப் பல்வேறு துறைகளில் நியமனம் செய்து – அப்பணியினை வழங்கும் பொழுது அவர்கள் சொல்லக் கூடிய அறிவுரை இங்கே குறிப்பிடத்தக்கதாகும் – கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், மாணவர்களின் உயர்வுக்காகவும் முதல்வரின் வழிகாட்டுதலின் படி உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றுதல் உங்களின் தலையாய கடமையாகும் என்பதே அது. 1978–ஆம் ஆண்டு என்னை வணிகவியல் துறையில் பணியமர்த்தி பணியாணையை வழங்கிய பொழுது என்னைப் பார்த்து அவர்கள் கூறிய அறிவுரையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் (இப்படித்தான் அனைவரையும் மரியாதையுடன் அழைப்பார்கள்) கல்லூரி விடுதியில் பயின்ற மாணவராக இருப்பதால் நமது காஜாமியான் விடுதியின் Sub-Warden இணைக்காப்பாளராக இருந்து வார்டன் மேஜர் ஷா அவர்களுக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றுங்கள் என்று அறிவுறுத்தினார்கள்.

அதன் பிறகு விடுதிப் பணி நிமித்தம் அடிக்கடி அப்போதைய முதல்வர் ஹாஜி மர்ஹூம் E.P. முஹம்மது இஸ்மாயில் அவர்களைச் சந்திக்கச் செல்லும் போதெல்லாம் கண்ணியத்திற்குரிய ஹாஜி சாகிப் அவர்களையும் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றவன் நான். எப்பொழுதும் கல்லூரி விடுதியின் நலன், மாணவர்களின் ஒழுக்கம், அறிவு பற்றிய சிந்தனையிலிருந்த அவர்கள் மிகவும் பாசமாகவும் சாதாரணமாகவும் இவ்விஷயங்களை கேட்டறிந்து கொள்வார்கள். விடுதியின் வளர்ச்சி மற்றும் மாணவர்கள் நலன் தொடர்பான அனைத்து ஆலோசனைகளையும் கவனத்துடன் கேட்டறிந்து அதற்குரிய நடவடிக்கைகளை அறிவுறுத்தும் ஆற்றல் அவர்களிடம் மிகைத்திருந்தது எனலாம். உதாரணத்திற்காக ஓரிரு விஷயங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- விடுதியின் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக ஒவ்வொரு கல்வியாண்டும் நமது கல்லூரியைப் பிப்ரவரி மாதம் இறுதியில் மூடவேண்டிய கட்டாய நிலை இருந்து வந்தது. இதற்குத் தீர்வாக வார்டனை அழைத்து ஓரிரு இடங்களில் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்துக் கொள்ள அறிவுறுத்தி அனுமதி அளித்தார்கள்.

- விடுதி மாணவர்களுக்காக காவிரி குடிநீர் இணைப்பு பெற்றுக் கொள்ள அனுமதி யளித்தார்கள்.

- விடுதி அறைகளில் டியூப் லைட் போட்டுக்கொள்ள ஆவண செய்யும்படி முதல்வருக்கு அறிவுறுத்தினார்கள். அதற்கு முன்னர் குண்டு பல்புகள் வெளிச்சத்தில் தான் மாணவர்கள் படிக்க வேண்டிய நிலையிருந்தது.

- கல்லூரியின் மாணவர்கள் யூனியன் என்ற பெயரில் சில மாணவர்கள் கல்லூரியின் செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் நிலையை மாற்ற – மாணவர் சேவைச் சங்கங்களை உருவாக்குவதற்கு அனுமதி அளித்தார்கள்.

எளிமையான தோற்றம் : ஹாஜி, சாகிப் அவர்கள் எளிமையின் எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். சாதாரண வெண்ணிறக் கதர் ஆடையை உடுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். பெரும்பாலும் தாங்களே தங்களது காரை ஓட்டி வருவார்கள் Cantessa – போன்ற உயர்வகை கார்கள் வீட்டில் இருந்தபோதிலும் FIAT காரையே பயன்படுத்தி வந்தார்கள். சில நேரங்களில் டயர் வண்டியிலும் வருகை தருவார்கள். தனது பேச்சிலும் நடை உடை பாவனைகளிலும் எளிமையை கடைபிடித்தொழுகினார்கள். ஆயினும் கல்லூரியின் விதிமுறைகள் விஷயங்களில் எவ்விதச் சலுகைகளையும் தங்களுடைய உறவினர்கள் விஷயத்தில் கூட அனுமதிக்க மாட்டார்கள்.

ஆசிரியர் நலன் : பேராசிரியர்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொடுக்க ஆவண செய்வார்கள். ஹாஜி சாகிப் காலத்தில் தான் முதன் முதலில் U.G.C ஊதிய விகிதங்கள் தமிழக அரசால் 1979–ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்கான ஏராளமான ஆவணங்களில் கையொப்பங்களிட்டு, அந்தப் பணிச்சுமையைச் செய்து வந்த ஆசிரியர் மற்றும் அலுவலர்களுக்கு உற்சாகப்படுத்தும் வகையில் பல ஏற்பாடுகள் (இரவு உணவு, டிபன் போன்றவைகள்) செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

இறையச்சமும், நேர்மையும் கொடுத்த வாக்கு உறுதியினை நிறைவேற்றல் வேண்டும் என்ற உயரிய கோட்பாட்டினைத் தமது வாழ்க்கையின் அனைத்துக் காரியங்களிலும் கடைபிடித்து ஓர் அழகிய முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். மார்க்க விஷயங்களிலும், பள்ளிவாசல்கள், மதரஸாக்கள், அனாதை இல்லங்கள் – விஷயங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள். தப்லீக் சேவையில் தம்மை முழுமையாக இணைத்துக் கொண்டு மாவட்ட, மாநில அளவில் எடுக்கக்கூடிய முடிவுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். இஸ்திமாக்கள், மஸ்வராக்கள் போன்ற மார்க்கக் காரியங்களுக்கான ஏற்பாடுகளில் பெரும் பங்களிப்பு செய்து வந்தார்கள்.

மார்க்கத்தின் கடமைகளான தொழுகை, நோன்பு, ஜகாத், ஸதகா போன்ற விஷயங்களில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். தமது உறவினர்களைப் பேணி ஏழைகளையும், அனாதைகளையும் அரவணைத்து அனைவருக்கும் உதவி செய்யக் கூடிய பழக்கம் அவர்களிடம் குடிகொண்டிருந்தது. பல ஏழைத் திருமணங்களைத் தாமே முன்னின்று நடத்தி வைத்தார்கள். தீர்க்கமான சிந்தனையும், உறுதியான முடிவும் எடுக்கவல்ல அறிவையும் ஆற்றலையும் பெற்றிருந்த நமது முன்னாள் செயலர் மற்றும் தாளாளரின் சீரிய வழிகாட்டுதலில் கல்லூரியின் பல புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டு அதற்குரிய பல புதிய கட்டிடங்களும் கட்டப்பட்டு கல்லூரியின் வளர்ச்சியில் பல மைல்கல் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன என்பது அழிக்க முடியாத வரலாறு ஆகும்.

அவர்கள் நடந்து சென்ற பாதையில் நாமும் சன்றால் பல வரலாற்று வெற்றிகளைக் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பெறமுடியும் என்பதில் ஐயமில்லை.

தன்நலம் கருதாது சமுதாய நலத்திற்காக கல்விப் பணி ஆற்றி மறைந்த நமது கண்ணியத்திற்குரிய முன்னாள் செயலர் மற்றும் தாளாளர் ஹக்கில் துஆ செய்வது நமது தலையாயக் கடமையாகும்.

இறைவா! அவர்களுடைய நற்காரியங்களைப் பொருந்திக்கொண்டு பாவங்களை மன்னித்து மேலான சுவர்க்கத்தை அவர்களுக்கு வழங்குவாயாக!

ஆமின், யாரப்பில் ஆலமீன்.

* * * * *

## பேராசிரியர்களின் மாண்பு :

Genetics பாடத்தில் எழுந்த ஐயத்தால் நானும் குழம்பி, பேராசிரியர் திரு ஹரிராவ் அவர்களையும் குடைந்து குழம்பியதை எண்ணியா!

ஆற்றாமையால் நான் துவண்டு போனபோது கட்டியணைத்து, அரவணைப்பால் தெம்பாக்கிய பேராசிரியர் திரு தங்கவேலு அவர்களின் பண்பை எண்ணியா!

வகுப்பு தொடங்குவதற்கு முன்பாகவே வந்து கரும்பலகையில் வண்ணப்படம் வரைந்து இடது மூலையில் பாடக்குறிப்புகளை எழுதி பதியவைத்த பேராசிரியர் திரு.சுப்பிரமணியம் வழிகாட்டுதலை எண்ணியா! (பின்னர் நான் கற்பித்த போது இம்முறையே பின்பற்றினேன்)

மா.கண்ணையன்
முதன்மைக் கல்வி அலுவலர் (ஓய்வு)
B.Sc., Zoology | படித்த ஆண்டு : 1967 – 1970

# Leadership and Governance in Jamal

Dr.A.M.Mohamed Sindhasha
Former Principal
Head, PG Department of Commerce (SF)
Jamal Mohamed College, Trichy-20.



All Praise be to the Almighty Allah, the most beneficent and the most merciful.

Jamal Mohamed College is identified as the "Aligarh Muslim University of South India" in the academic circle and also widely acknowledged as the same by the public at large. The college provides quality higher education at an affordable cost to all sections of the society more particularly to the downtrodden and Muslim minority. The college is located in the heart of Tamilnadu and it attracts students from all parts of the state - North, South, East and West - , from other states of the country and even students from abroad, even though colleges are found everywhere even in remote places. The one good reason as to why people are attracted towards Jamal is that the college has created a brand image, giving value based education to all the students and deeniyath education to Muslim students. Thanks to the noble vision of the founders of the college - the two great philanthropists , the business tycoons who created history in leather exports and well-known freedom fighters who made sacrifice to make India a free-nation - Hajee .M. Jamal Mohamed Sahib, and Janab. N.M. Khajamian Rowther , today the college has grown into a multi-faculty institution offering diversified under-graduate, Post-graduate and research Programmes in almost all Arts and Science disciplines for both men and women students.

The College has made tremendous achievements and spectacular growth crossing several milestones over a period of 67 years. The leadership and governance in Jamal is something unique and distinct. What differentiates Jamal Mohamed College from other higher education institutions in this part of the country is the combination of three factors viz,. A visionary management which is teacher-friendly and student friendly, dedicated team of quality teachers with involvement and commitment and also the students - alumni and the present - who love the college the most. Right from the inception of the college to the present day, members of the Jamal family and N.M. family representing the management along with the principals of the college as head of the institution have contributed their might for the growth and development of the college. This is the uniqueness of Jamal Mohamed College.

Establishment of an educational institution was not easy task in those days. The founder secretary of the college Janab. M.J. Jamal Mohideen sahib popularly known as 'Atthavu' sahib took the lead and initiative in 1949 with the co-operation of the former treasurer Janab.N.M.K. Abdul Samad sahib for getting the approval from the Government and affiliation from the Madras University visiting the authorities several times. Finally the college was declared open on 11th July 1951. Janab.M.J. Jamal Mohideen sahib also had the unique honour of serving as the president of the college for 21 years. Our founder secretary appointed Prof. Hajee. M.J. Mohamed Sayeed sahib from Andra Pradesh as the first principal of the college. He served in the college for 19 long years from 1951-1970. His role as the principal getting a special place for the College in the academic map of the country is acknowledged by the alumni of the college who studied in Jamal in the first two decades. The college become very popular in the sports arena producing outstanding national and state level sports persons. The college continues to maintain the standards in the field of sports and games even today. Prof. E.W.P.

Thomas served as the vice –principal of the college during the tenure of Hajee. Sayeed sahib as principal. Later Prof. Thomas was the principal of the college for one year. Eminent scholars like Prof. Devanathan, Dr. Hari Rao, Prof. Kamalapathy who worked as teachers during that time are always remembered by the students community. Hajee. M. J. Jamaludeen sahib as secretary and Hajee. N.M.K. Abdul kader sahib as the treasurer of the college worked together for the uplifttment of the college offering several UG programmes and also a few PG programmes.

Hajee. N.M.K. Abdul kader sahib, called as 'EJAMAAN' by the people of Tiruchy, served as the secretary of the college from 1973 to 1988. He was a very simple, and most respected person always willing to help the poor. He is known for keeping his promises at any cost. Hajee. M.J.M. Abdul Gafoor Sahib was the Treasurer of the college during the same time. Prof. E.P. Mohamed Ismail served as the principal of the college from 1971 to 1985. As principal of the college he took all steps to develop the college to the next level introducing number of PG programmes and a few research programmes. The UGC recognized our college as one of the ten "Lead Colleges" in this part of the country which was a rare honour at that time. His human relation approach towards the staff, students, parents, officials and the general public proved to be successful and was appreciated by everyone associated with the college. Dr. C. Nainar Mohamed took over as the principal in 1985 and served as the principal up to 1989. The starting of the computer science education in the college was a big turning point in the development of the college. Further, Dr. C. Nainar Mohamed, with the permission of the management, took some strong measures doing away with students union and also bringing academic discipline among the staff and students.

Hajee. M. J. M. Abdul Gafoor sahib became the Secretary and Correspondent of the college in 1989 and continued to serve as the secretary up to 2011. His service to the society will ever be remembered in the History of Jamal Mohamed College as all-round development took place during his period of office. The rapport that he established with the officials of the Department of Higher Education in the secretariat , Directorate of Collegiate Education and authorities in the university was commendable and rewarding to the college. Hajee. K. A. Khaleel Ahamed sahib served as Treasurer of the college for a quite a long period from 1989 to 2017.He is a kind hearted, soft-spoken, most loveable gentleman who made it a point to be part of the every activity and event that takes place in the various departments of the college. He played a vital role in the establishment and day - to - day administration of Jamal Mohamed College Ayesha Girls' Matriculation Higher Secondary School.

Prof. Hajee. N. Abdul Samadh, as Principal of the college from 1989 to 1998, did yeoman service in the upgradation of the college in terms of buildings and other infrastructure required for the college. It was during his tenure as Principal the overseas chapters of alumni association were formed and their role in the growth of the college became prominent. Dr. K.Abdulla Basha became the Principal in 1999 and served for four years. With the solid support of the Secretary Hajee. Abdul Gafoor Sahib, Dr. Abdullah Basha took the initiative providing opportunity to the women students to pursue higher education in the college campus. This is a momentous decision in the annals of the history of Jamal Mohamed College, as thousands of women students especially muslim women would not have had the chance to do UG, PG and Ph.D Programmes and transform their life. The college was also accredited with five star status, a high quality mark by NAAC. Jamal Institute of Management was established offering AICTE approval MBA Programme.

Dr.M.Sheik Mohamed served as the Principal of the college form 2003 to 2011. During his period of office, he worked with great enthusiasm and zeal in consultation with the management team Janab. M.J.Noordeen Sahib, President, Hajee. M.J.M.Abdul Gafoor Sahib, Secretary, Hajee. Janab. K.A.Kaleel Ahamed Sahib, Treasurer and Dr.

A.K.Khaja Nazeemudeen Sahib, Assistant Secretary. Autonomous status was conferred on the college. The college became a multi faculty institution offering innovative inter-disciplinary courses such as Bio-Technology, Micro-Biology, Nutrition and Dietetics, Fashion Technology and Costume Designing, Hotel Management and Catering Science, Social Work etc. The college also stared several additional sections in B.Com, BBA, B.Sc and BCA providing more opportunities for students to study in Jamal. Almost all departments in the college became Research Departments offering M.Phil and Ph.D programmes. The students strength of the college reached Ten thousand mark. The college was Re-Accredited with "A" Grade (3.6 CGPA out of 4.0), a unique distinction.

In 2011 Dr. A.K.Khaja Nazeemudeen took charge as Secretary and Correspondent, Hajee. M.J.Jamal Mohamed Sahib, the present Treasurer became the Assistant Secretary of the College. Dr. R.Khader Mohideen assumed charge as Principal of the college during the same year."College with potential for excellence"-CPE status was conferred on the college.

When I had the opportunity to serve as the principal of the college in 2013-2014, the Union Ministry of HRD and the UGC identified our college as one of the Forty – Five Colleges in the whole of the country to be accorded with the power to grant degrees in the status of a State University. Rs.65 Crores was offered to become a University, but no college including our college in the list accepted the offer, as we insisted on salary grant. Our college was the only muslim institution among the 45 colleges, a proud moment for the institution. Dr. S. Momamed Salique served as the principal from 2014–2017. B.Sc Visual Communication Programme was started. Dr.K.Abdul Samad became the Assistant Secretary of the college in 2017. The present team of management with Dr.S.Ismail Mohideen as the principal of the college is taking the institution to the next level as there is always scope for improvement. The college is marching towards Platinum Jubilee.

The secret success of Jamal Mohamed College is its participatory style of leadership and management. The management takes parental care for the staff and students. Principal of the college plays a vital role as the representative of the staff in relation to the management and also as the representative of the management in relation to the staff. By the grace of Almighty Allah, the college will continue to serve the downtrodden in the society to transform their levies by offering higher education. May we pray Allah for the heavenly abode of the founders of the college Hajee.M.J. Jamal Mohamed sahib and Janab. N.M.Khajamian Rowther.

Ameen.

சாதி, மத, இன, மொழி, வேறுபாடுகளைக் கடந்து, சமத்துவமும், சகோதரத்துவமும் பூத்துக் குழுங்கும் நந்தவனமாக இன்றும் விளங்குகிறது ஜமால் முகம்மது கல்லூரி என்றால் அது மிகையாகாது. கல்லூரியில் உயர்கல்வி பயின்று அறிவு வானில் மிளிரும் நட்ச்சத்திரங்களால் இன்று மாணவ சமுதாயத்திற்கு பெருமைமிகு விடயமாகும். ஆக, மேன்மைமிகு நம் கல்லூரியின் சமத்துவத்தின் அடையாளமாக, சகோதரத்துவத்தை வளர்க்கிற பாசறையாக, மனிதநேயத்தை, மாண்பை கற்றுத்தரும் கல்வி நிலையமாக விளங்கி வருகிறது.

**வா. கோபிநாதன்**
M.A., B.Ed., M.Phil., (LLB)
மாநில துணைத் தலைவர்,
தமிழ்நாடு உயர்நிலை – மேல்நிலைப்பள்ளி
பட்டதாரி ஆசிரியர் கழகம்.

# ஜமாலின் ஜாம்பவான்களின் உயர்ந்த உள்ளம்



முனைவர் S. முகம்மது சாலிகு
மேனாள் முதல்வர்,
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 20.

பிரிட்டிஷ்காரர்கள் மக்களை வேற்றுமைப்படுத்தி வைத்திருந்த காலக்கட்டத்தில் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என எண்ணம் பூண்டவர்கள் இருபெரும் வள்ளல்கள். ஹாஜி ஜமால் முகம்மது சாகிப், ஜனாப் காஜாமியான் இராவுத்தர் இவர்கள் இருவரும் உறவினர் அல்ல, வணிக ரீதியாக சந்தித்து நண்பர்களானவர்கள்.

இஸ்லாமியச் சமுதாயம் பின்தங்கியிருப்பதை உணர்ந்து கல்வி புகட்டக் கருதினர். ஒரு சமூகத்தை முன்னேற்ற 'கல்வி'தான் சிறந்த பாதை என எண்ணினர். நபி (ஸல்) அவர்கள், ''யார் கல்வியின் பாதையைத் தேடிச் செல்கிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ் சொர்க்கத்தின பாதையை லேசாக்குகிறான்'' என்றார்கள்.

இஸ்லாமிய சமுதாயம் என்றில்லாமல் அனைத்துச் சமூகங்களிலும் பின்தங்கிய ஏழை, எளிய நடுத்தர மாணவர்கள் வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற குறிக்கோளோடு, ஆரம்பக்கப்பட்டதுதான் இக்கல்வி நிறுவனம்.

## இப்பெருமக்களின் குறிக்கோள் :

- கல்வியின் மூலம் இக்கல்லூரி வளர வேண்டும்.
- பணிபுரியும் பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்.
- மாணவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்பதைச் சொல்லிலும், செயலிலும் கொண்டார்கள்.

கல்வி கற்கும் மாணவர்கள் கல்வி கற்பதோடு மட்டுமன்றி, அன்பு, கருணை, வாய்மை, நேர்மை, ஒழுக்கம் போன்ற பண்புகளோடு 'மனித நேயம்' கொண்டவர்களாக விளங்க வேண்டும். இப்பண்புகள் பொருந்தியவர்களே ஜமாலியன்கள். இவர்கள் தலைச்சிறந்த மாண்புகளோடு உலகெங்கும் வலம் வர வேண்டும் என இரு பெரும் வள்ளல்களும் விரும்பினார்கள்.

'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற கொள்கைக்கு உரமிட்டவர்களாக வாழ்ந்தார்கள்.

இருபெரும் வள்ளல்களும் செல்வச் செழிப்பிலே பிறந்து வளர்ந்திருந்தாலும்கூட மிக எளிமையாக வாழ்ந்து மற்றவர்களுக்கு வழிகாட்டியவர்களாக வாழ்ந்தார்கள். தங்கள் செல்வத்தின் பெரும்பகுதியை பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு வழங்கி 'கல்வி' என்னும் அழியாச் செல்வத்தைக் கொடுத்து மாணவர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தனர்.

அதனால்தான் இப்பெருமை மிகுந்த கல்வி நிறுவனத்தில் கல்வி கற்ற மாணவர்கள் உயர்ந்த நிலைக்குச் சென்றவுடன் இங்கு படிக்கும் ஏழை, எளிய மாணவர்களுக்கு உதவி செய்கின்றார்கள். அறுபது இலட்சத்திற்கும் மேலான உதவித்தொகை இன்றளவும் கிடைப்பதற்கு இப்பெரும் வள்ளல்களின் சீரிய குணமே அடிப்படைக் காரணமாகும்.

இந்நிறுவனர் நாள் விழா கொண்டாடப்படுவதன் நோக்கமே அறத்தின் வழி நடந்த இரு வள்ளல்களையும் இங்கு பயிலும் மாணவ, மாணவிகள் மனதில் நிறுத்தி தாமும் வளம் பெற்று, தன்னைச் சார்ந்த சமூகத்தையும் உயர்த்த வேண்டும் என உறுதி ஏற்க வேண்டும் என்பதற்காகத்தான்.

இப்பெருந்தகைகளின் நட்பும், கல்விச் சேவையும் 'வாழையடி வாழையாக' உலகம் உள்ள அளவும் நீடிக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.

* * * * *

# (Late) Haji. M.J.M. Abdul Gafoor
# My Mentor - An Immortal Legend and Life Line of JMC



**M.J. Jamal Mohamed**
Treasurer, Jamal Mohamed College, Trichy
son of Haji. MJM Abdul Gafoor

Haji. MJM. Abdul Gafoor Sahib was born in Chennai on 15-dec-1931. He was the son of MJ Jamal Mohideen (Ex. MLA & MP) Founder Secretary of Jamal Mohamed College, Trichy and Jamal Fathima.

He was the grand son of Haji. M. Jamal Mohamed Founder of Jamal Mohamed College, Trichy. He studied in DRBCC high school, Perambur and also did his intermediate in Government Arts College, Mount Road, Chennai.

He joined his father's firm Jamal Mohideen & Co., a leading Tanner and Exporter of Leather and Leather Goods.

He was a sports man having proficiency in Cricket, Ball-Badminton and represented his school and college teams. He founded Perambur United Club in 1948 and affiliated it with Madras Cricket Club and played league cricket. Madras Cricket Club is now known as Tamilnadu Cricket Association. He was one of the senior most member of TNCA and was the executive committee member of TNCA continuously for 8 years. He worked in various committees of TNCA and was a very popular figure, known for his hard work, sincerity and honesty. He was the only Muslim who occupied the post of Executive Committee Member of the TNCA till now.

### College Connection (JMC) :

In 1949, when he was a school student, his father took him to Trichy to meet Janab. Khaja Mian Rowther to discuss about starting a college which was planned by our founders Hajee M. Jamal Mohamed and Janab. Khajamian. Janab. Khajamian informed Jamal Mohideen that since he is old and has an eye sight problem, he may not be able to do much and wanted Jamal Mohideen to initiate the process of starting the college and assured his moral support. Jamal Mohideen said since he is one of the founding members of the MEASI and working to start the New College, he will be able to initiate the process of starting our College (JMC) also at Trichy simultaneously and requested Khajamian to give his moral support and said let your 1st son Abdul Samad with me. Accordingly, Jamal Mohideen, Abdul Samad the eldest son of Khajamian, my father Abdul Gafoor and Er. Abdullah son-in-law of Khajamian were the only four persons who entered the present place where the college is situated, which was very bushy and lot of snakes and other creatures were there which really scared my father who was a school student at that time and it required mass cleaning process.

Every time Jamal Mohideen came to Trichy, he took his son along with him. When my father asked him why he should come to Trichy taking leave from school, his father the founder secretary said, "I want to put you in the groove and you are the one who will develop this college in the later years". He advised his son to ensure education in Jamal Mohamed College is not to be commercialised in the years to come.

Abdul Gafoor Shahib was thus connected with the college even before its inception. JMC was started on 11.07.1951. It was declared open by the then Chief Minister of Madras Presidency Shri. P. S. Kumarasamy Raja in the presence of his Excellency the Governor, the Maharaja of Bawanagar who presided over the function.

He was one of the founding members of the college. He was officially made a member of the college committee in 1972 and was elected as Treasurer in 1973 and he continued till 1988. He was elected as the Secretary and Correspondent from 1989 continued till 10-Mar-2011. Even after his retirement, he continued to serve the college by giving his valuable advice and also acted as a liaison for the college by monitoring the work related to college in the DC office, Higher Education Department and other government agencies at Chennai.

Nearly 40 years of his service as Treasurer, Secretary and Correspondent was the golden period in which the college witnessed all round growth both in infrastructure and academic. Many buildings in the campus and new courses were started during his time. During his tenure, the Alumni association of JMC, were started and he inaugurated all the JMC Alumni Chapters in places like Chennai, Cochin, Bangalore in India and overseas countries like Malaysia, Singapore, UAE, Kuwait, Saudi Arabia and Brunei. He had a unique way of getting things he wanted for the development of the college and other sister institutions in the campus. He was mainly instrumental in getting donations from Hajee. AVM Jaffarudeen, Hajee. KNSA Rahamathullah, Dato Barakkathali, Hajee. Basheer Ahamed of Chakkarapalli, Dawood Basha, Late Abdul Malick of Jeddah and many other donors and well-wishers.

Once he wanted to meet Barakkathali of Malaysia to get funds, he was told by Prof. M.M.Shahul Hameed that Barakkathali is a hard nut to crack and he may not get the desired amount as donation. My father said "MMS, I will try to crack him". He duely met Dato Barakkathali and Dato was willing to donate Rs.50,000/- only after much conversation. But my father convinced him to donate Rs. 2 Lakhs. After coming out of the room he told MMS, "I cracked him". Such was his personality and his honesty that nobody dared to say no to him whenever he approached people be it for college, school or mosque and even for poor muslim girl's weddings.

## Moral Secretary and Correspondent :

He always went in person to meet officials of directorate of collegiate education office, AICTE Higher Education Department and University. The personal touch and rapport helped him to get whatever he wanted for the college. Hajee. Hasim Sahib President of MEASI and New College Chennai, once told in a meeting of MEASI that Abdul Gafoor Sahib is the model secretary and Correspondent and every Muslim college should follow his method to get things done as he was getting for JMC. Sri. Ramalingam IAS, presently senior PA to Chief Minister was the then commissioner for Collegiate Education. During his period, my father was able to get nearly 25 appointments for aided teaching staffs and thanked him for giving the orders, Sri. Ramalingam said, "Sir, you are the only person who met me as Secretary and Correspondent of aided college. Others used to send their PA's and their sub ordinates".

My father politely replied, "Sir, this is my duty as Secretary and Correspondent to get appointments for my educated teachers and therefore I came in person. Moreover I always consider me as a servant of Jamal Mohamed College and not as owner of the college, despite being the grandson of the founder as well as son of the founder secretary (1951-1966) and second President of the College (1954-1975)."

## Saviour of staff :

When aided teaching staff of our college participated in a strike during the previous tenure of Miss. Jayalalitha was CM, the govt. wanted to dismiss all the striking staffs but my revered father didn't budge and argued with the Secretary Higher Education Department stating that, "I am the employer and you the govt, is only a financial aid". He further stated that the first day the govt wanted to dismiss the staff by issuing a G.O. and the next day wanted me to suspend them by issuing another G.O., "Had I dismissed them on the first day, how can I

suspend them the next day subsequently, the government withdrew both the G.O.s and didn't punish the staff even with wage cut and in a meeting of the Principals of Aided Colleges in TN Mr. Ganesan IAS, Higher Education Secretary declared that because of the vital part played by the Secretary of JMC, all the staff members of all other Aided colleges in Tamil Nadu were saved as the Govt. withdrew the earlier G.Os issued to dismiss and suspend them. He was also associated with many other institutions.

He was the honrary secretary of the South Indian Athletic Association(SIAA) for many years. He was the secretary of the Jamalia high school from 1970-1974 and senior vice president of the school till his demise. He was instrumental in starting the Jamalia High School founded by his father, Jamal Mohideen (Ex. MP). Our Jamalia Arabic college hostel building was taken under defence of India rule by the army to lodge war refugees. When my father and Grand Father met Dr. Moulana Azad, the first Union Minister for education and requested him to help in the requisition of the building taken by the army, he said it can be vacated for a public cause. My father immediately told his father that we can start a school to which Moulana Azad agreed and said that he will talk to the Defence Minister and subsequently the building was vacated and the Jamalia High School was started in 1962 in that building.

He was the Naazir of Jamalia Arabic college which was started in 1902 and he built the new Jamalia Mosque by collecting donations to the tune of 25 lakhs. He was the Muthavalli of the Rahumaniya Jumma Masjid, Chennai. His devotion and dedication had helped the old mosque in converting itself from a thatched roof building to a new concrete building. He served as the senior most VIce President of OMIEAT and also served as its president for a short period. He was the vice president of Tamil Nadu Private Colleges Management Association and other organizations which are engaged in the educational field run by minorities of Tamil Nadu.

**Qualities :**

He was a multi faceted personality being a Sportsman and Sports Administrator having represented Tamil Nadu Cricket Association (TNCA) on various committees and also accompanied the Tamil Nadu Ranji Trophy Team as Manager on many occasions, in addition to his role of College Administrator. He was also multi-lingual by knowing many languages. He was very honest and straight forward and never bent rules and regulations for him, his family or others. He was very time conscious and punctual. He even denied admission to his youngest son in the JMC because he passed in second attempt.

In spite of then principal Dr. Sheik Mohamed's recommendation, he stoughtly refused quoting the rules that admission will not be given to any attempties. He led a very simple life and never skipped five times prayers daily or fasting in the month of Ramzan. He was the only leader of repute available to our Jamal family after the demise of his father Jamal Mohideen who died in 1975. He had great admiration for his father. He sacrificed any position for the sake of his father. He used to attend the Leather Trade Fair at Delhi looking after the pavilion of Leather Export Promotion Council (LEPC).

He was very popular in the educational circles of Tamil Nadu and also in India and abroad. He performed Hajj pilgrimage in 1985 and 1994 along with his wife and also many Umrahs. He died peacefully on 03-May-2015 at the age of 84 in his house in Jamalia Nagar. Dr. Samad, Director, Jamal Institute of Management condone his death and sent a sms "your father is a legend having devoted his entire life for the growth of all our institutions in our Jamal Mohamed College campus Trichy.

He is an icon of simplicity and statementship". Yes. I fully agree with Dr. Samad as I know having closely moved with my father that he led a very simple life and his elderly statementship won many a laurels for the college and he brought everything he wanted for the development of the college. He never failed in his attempt and he was certainly a man with a golden arm. One more Prof. Dr. Kumar

of Economics Condoned the death of my father by stating,"Death of the saviour of our life" and further condoned as "Death of our Life line of JMC".

Prof. M. J. A. Meeran, HOD of Physics (Rtd.) of The New College condoned his death by saying that all family trusts and educational institutions of Jamal family have received his patronage and service. He was the only leader of our family after Attau Sahib (Jamal Mohideen, Ex. MP who died in 1975) from 1975 onwards. The Secretary of LEPC Mr. Bahir Ali wanted him to join LEPC and my father applied for an employment in LEPC. My grandfather who was the Chairman of LEPC told my father "if you want to have a job, I will resign my position as President of LEPC or if you want me to continue, you take back your application."

My father simply took back his application. So that his father can continue to be the Chairman of LEPC. My father always had great respect for his father and used to say that he was his mentor and crown. What all I am today it is because of my father. He had many offers from many leather firms in Periamet. But he chose to remain with his father and took his advice to develop Jamal Mohamed College. In fact he spent his entire life right from his school days till his death for the sake of developing and bringing Jamal Mohamed College to the present status.

The present stature of JMC with many palatial and tall buildings with modern facilities is a tribute to his hard work, dedication, sincerity and honesty. He kept the promise he gave to his father that he will not allow commercialisation of education and appointment in JMC till he retire as Secretary and Correspondent. As a devoted son, I assure that I will do my best to keep his legacy alive in the years to come with the mutual help and friendship of our present Secretary Dr. A.K.Khaja Nazeemudeen and other members of the Management Committee of the Society of Jamal Mohamed College and I pray the Almighty that may his soul rest in peace and may Allah bless with him Jannath and heavenly abode.

"ஜமால் முகம்மது கல்லூரியின் கைக்கூலி கைவிட்டோர் கழகத்தில் (Anti-Dowry Association) நான் உறுப்பினராக அப்போது இல்லை. ஆனால் காஜாமியான் விடுதியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளேன். கைக்கூலி பெறாமல் (வரதட்சணை) என் வாழ்வின் இணையரை நான் திருமணம் செய்து கொண்டேன் எனப் பெருமையோடும், கர்வத்தோடும் பகிர்ந்து கொள்கிறேன். இதற்குக் காரணம் ஜமால் முகம்மது கல்லூரியில் ஆழ் மனதில் பதியமிட்ட எண்ணங்கள் தான்."

.........................................................................

வா. கோபிநாதன் M.A., B.Ed., M.Phil., (LLB)
மாநில துணைத் தலைவர், தமிழ்நாடு உயர்நிலை – மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகம்.
(ஜமால் முகம்மது கல்லூரி மேனாள் மாணவர்)

# அருங்குணச்செம்மல்
# ஹாஜி M.J.M. அப்துல் கபூர் சாஹிப்



முனைவர். மீ.அ.ச.ஹபீபுர் ரஹ்மான்
இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
ஜமால் முஹம்மது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620020.

அருள் நிறைந்த பார்வை, அன்பு நோக்கு, கம்பீரமான தோற்றம், காட்சிக்கு எளிமை, கடுஞ்சொல் இன்மை, மனித நேயம்மிகு செயலாற்றல், பிறர்க்கு உதவும் பெற்றி, கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளே தம் குறிக்கோள் எனும் இலட்சிய நோக்குடை மாமனிதரான ஹாஜி. M.J.M. அப்துல் கபூர் சாகிப் அவர்கள் கல்லூரி ஆட்சி மன்றக் குழுவின் பொருளாளர் என 29.02.1984–இல் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியராக நான் பணி அமர்த்தப்பட்ட போது அறிந்தேன்.

பழமைச்சிறப்புமிகு அறிவுநிலையமானஇக்கல்லூரி ஆட்சிக்குழுவின் பொருளாளராக 1973 முதல் 1989–ஆம் ஆண்டுவரை பணியாற்றிய அவர்கள், 1989 முதல் 2011–ஆம் ஆண்டு வரை கல்லூரி ஆட்சிமன்றக் குழுவின் செயலராகச் சீரிய பணியாற்றியுள்ளார்கள். கல்லூரி வெள்ளி விழா, பொன் விழா, வைர விழாக்காலங்களில் இவர்களே செயலராக இருந்து செயற்கரிய செயல்கள் பல செய்துள்ளார்கள்.

பேராசிரியர்களை மிகவும் மதித்துப் போற்றும் சீரிய பண்பாளர். தங்களைச் சந்திக்க வரும் பேராசிரியர்களை உடனே அமரச் சொல்வது அவர்களின் இயல்பு. பேராசிரியர்கள் தயங்கினால், “Prof., You are intellectual. You should be honoured. Take your seat” என்று கூறி அமரச்செய்வார்கள். சுருக்கமும், தெளிவும் அமைய இனிய கவிதையைப்போல் பேசும் தகைமையாளர். தம்மைச் சந்திக்க வந்த நோக்கம், அவர்களின் தேவை ஆகியவற்றைக்கேட்டு அதற்கேற்றவாறு நம்பிக்கை யூட்டும் நன்மொழி கூறுவார்கள். நாம் முயற்சிப்போம். இறைவன் நற்பலன் தருவான். இறைவனிடம் இறைஞ்சுங்கள். எல்லாம் அவன் செயல் எனச் சொல்லி அனுப்புவார்கள். இறைவன் நாடினாலன்றி எந்த ஒரு செயலும் நடக்காது என்னும் உறுதியான இறை நம்பிக்கை அவர்கள் பேச்சில் மிளிரும். எல்லாம் வல்ல இறைவனிடம், ‘‘எங்களால் ஒன்றும் இல்லை எதுவும் உன்கருமம் என்று எய்திடற்கு அருள்புரியவும்’’ என்று குணங்குடி மஸ்தான் சாகிபு பாடியதையே இவர்கள் செயல்படுத்திக் காட்டுவது போல் தோன்றும் ‘‘எல்லாம் உன் செயல் என்று வாழ அருள்புரிவாயாக’’ என்று இறைவனிடத்தில் சூபி ஞனியாம் குணங்குடியார் இறைஞ்சியதை மேனாள் செயலர் அவர்கள் ஒவ்வொரு நிலையிலும் அசைவிலும் செயல்படுத்திக் காட்டியுள்ளார்கள். தம்மிடம் வேண்டியவரின் தேவையை நிறைவேற்றக் கடுமையாக முயற்சிப்பார்கள். உடன் ஆவன செய்வது அவர்கள் பண்பு.

யாருடைய மனமும் புண்படாவகையில் பேசும் உயரிய பண்பாளர். சொல்லாலோ, செயலாலோ யாரையும் அவர்கள் துன்புறுத்தியதில்லை. கனிவு, இனிமை, இன்சொல் போன்ற நற்பண்புகளின் உறைவிடம். முப்பால் நூலான திருக்குறள் யாருக்கும் எத்தகைய தீமையையும் உண்டாக்காது சொல்வதே வாய்மை என்பதை,

‘‘வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்

தீமை இலாத சொலல்’’

என்கிறது. இக்குறள் மொழியின் கருத்துருவம் மேனாள் செயலர் அவர்கள்.

அலுவலர்களில் யாரேனும் தவறுசெய்தால் அவர்களை தண்டித்ததில்லை. கடுஞ்சொல் கூறாது, பக்குவமாக அவர்களது தவறினைச் சுட்டிக்காட்டித் திருந்தச் செய்வர்;. கருணை உள்ளம் கொண்ட அவர்கள் யாரையும் வருத்த எண்ணியதில்லை. திருத்தவே நாடினர்.

தவறு செய்ததற்காக நாம் அவரை தண்டித்தால் அவர் குடும்பம் இன்னலுக்கு உள்ளாகும். அல்லாஹ் அவருக்கு நேர்வழி (ஹிதாயத்)யிலான தெளிவைக் கொடுக்கட்டும். நாம் தண்டிக்க வேண்டாம் விட்டுவிடுவோம் எனக் கூறி மன்னிக்கும் மாண்பாளர்.

‘ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்

பொன்றுந் துணையும் புகழ்’

என்னும் திருக்குறள் கருத்துக்குப் பொருந்தும் இனியர் என்பதோடு என்றென்றும், எண்ணுந்தொறும் இனிமை பயக்கும் ஏந்தலராய்த் திகழ்ந்துள்ளார்கள்.

தம்மால் நியமிக்கப்பட்டவர் என்று கருதாது அவர்களின் முதல்வர்களுக்கு மிகுந்த கண்ணியம் தரும் அவர்கள் பண்பு வியந்து போற்றத்தக்கது. யாரேனும், தம்மிடம் வந்து ஏதாவது குற்றம், குறைகள், ஆலோசனைகள் கூறினால் பொறுமையாகக் கேட்டுவிட்டு இதை முதல்வரிடம் சொல்லுங்கள் என்பர். முதல்வர் சொல்லுக்கு மாறாக யாராவது நடந்தால் அவர்களை அழைத்துப் பாங்காக அறிவுறுத்துவார்கள். முதல்வருக்கு கண்ணியம் தர வேண்டியதன் அவசியம், மரியாதை செய்யாததால் உண்டாகும் விளைவுகள் பாதிப்புகள் ஆகியவற்றை எடுத்துக்கூறித் தலைமைக்குக் கட்டுப்பட்டு நடக்கச் செய்துவிடுவார்கள். முரண்பட நினைப்பவரையும் தன் கருத்துக்கு இணங்கச்செய்யும் சொல்லாற்றல் உடையவர்கள்.

நேர்முகத் தேர்வுக்கு வரும் பங்கேற்பாளர்களின் திறம், பண்பு நலன்கள் முதலியவற்றைப் பார்த்த உடனேயே கணித்துவிடும் ஆற்றல் மிக்கவர்கள். இச்செயலைத் திறம்படச் செய்யும் ஆற்றல் உடையவர் இவர்தான் என்பதை உறுதிசெய்து அவர்களுக்கேற்ற பொறுப்புகளை நல்கியுள்ளார்கள்.

''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்''

என்னும் வள்ளுவரின் வாக்கை இவர்களது கணிப்பில் இனிது காணலாம்.

பணி நியமனங்களிலும் உரிமை வழங்கு வார்கள். தமிழ்த்துறையில் பேராசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் போதெல்லாம், Prof. நீங்க சரின்னா வேலைக்குச் சேர்த்துக்கொள்வோம் எனக் கூறி நியமித்துள்ளார்கள்.

சிறந்த நினைவாற்றல் உடையவர்கள். ஒருமுறை ஒருவரை, ஒரு கருத்தை உட்கிரகித்துவிட்டால் ஆண்டு பல ஆயினும் மறதியின்றி நினைவு கூர்தல் அவர்களின் பண்பாகும். காவல்துறையில் உயர் அதிகாரியாகப் பணி புரிந்த அவர்களின் நண்பர் ஒருவர், தங்களைப் போன்றவர்கள் எங்கள் துறையில் இருந்தால் பல குற்றவாளிகள் எளிதில் தப்ப இயலாது அகப்படுவர். குற்றங்களும் குறையும் எனக் குறிப்பிட்டாராம்.

1985 முதல் 1992 வரை அரசு உதவிபெறும் கல்லூரிகளில் புதிய பேராசிரியர் பணிநியமனங் களுக்குத் தடை ஏற்பட்டிருந்தது. அந்தக் கால கட்டத்திலும் இறையருளால் இத்தடை நீங்கும். பொறுத்திருங்கள், விரைவில் அரசாங்கம் ஆவன செய்யும் என ஆறுதல் கூறிவந்தனர்.

புதிய பேராசிரியர் பணி நியமனம் இல்லாமையால் உயர் கல்வியின் தரம் எந்த அளவு பாதிக்கப்படுகிறது என்பதைத் தக்கவர்களுக்கு உணர்த்தி டிசம்பர் 1992–இல் காலிப் பணியிடங்களை நிரப்ப நியமன ஆணையைப் பெற்றார்கள். அப்போது பணிப்பதிவேடு தட்டுப்பாடாக இருந்தது. சென்னையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே கிடைத்த அப்பதிவேட்டை வாங்குவதற்காகத் தாமும் முதல்வருடன் வரிசையில் (கியூவில்) நின்றுள்ளார்கள். ஒருவருக்கு ஒன்று தான் என்பதால் மூன்று முறை நின்று அரிதின் முயன்று வாங்கிவந்தார்கள். இவற்றுக்கெல்லாம் எவ்வகையிலும் யாரும் நன்றி செலுத்தவே முடியாது. தம் நிறுவனத்தில் பணிபுரிபவர்களுக்கு உதவி செய்வதைத் தவிர்க்க வொண்ணாக் கடமையாகக் கருதியவர்கள் மேனாள் செயலர்.

''அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே''

என்ற, வள்ளலார் (இராமலிங்க அடிகள்) பாடியதை நடைமுறையில்செய்துகாட்டியவள்ளல்பெருந்தகையாகவே ஹாஜியார் அவர்களைக் கருத வேண்டும்.

தமிழ்த்துறையில் பெண்கள் பிரிவில் அடுத்தடுத்து இருமுறை பேராசிரியைகள் மகப்பேறு விடுப்பில் சென்றபோது திருமதி. விஜயலெட்சுமி அவர்கள் அப்பணியிடங்களில் பணியாற்றினார். அதற்கு அனுமதி அளித்த செயலர் அவர்கள், நீங்கள் விடுப்புப் பணியிடத்தில் (Maternity Leave) பணியாற்ற அழைக்கும் போதெல்லாம் வந்து உதவும் இவர்களுக்குத்தான் அடுத்து நிரந்தரப் பணிவாய்ப்பு வரும் போது கொடுக்க வேண்டும் என்றார்கள். அடுத்த ஆண்டில் நிரந்தரப் பணி வாய்ப்பு ஏற்பட்டது. நேர்காணலுக்காக திருமதி. விஜயலெட்சுமி அவர்களுடன் செயலரைக் காணச் சென்றபோது ஐயா, தாங்கள் கூறியவாறு ஏற்கனவே இங்கு பணியாற்றிய இவர்களுக்கு வாய்ப்பளிக்கலாமா? என அவர்களின் அனுமதியை வேண்டினேன். ஒரு முஸ்லிம் தன்னுடைய

வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும். என் வாக்கைக் காப்பாற்றச் செய்தீர்கள். அவர்களையே நியமனம் செய்துவிடுவோம் எனக் கூறி ஆணை வழங்கினார்கள். அவர்கள் மனிதர்களிடையே எத்தகைய வேறுபாட்டுக்கும் இடமளிக்காமல் சமத்துவம் பேணும் பண்பாளர். நன்றி மறவாத் தகைமை மிக்கவர்கள்.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாய்க்
கொள்வர் பயன் தெரிவார்

என்று, வள்ளுவர் கூற்றை அவர்கள்தம் செயல்வழி கண்டுணர முடிந்தது.

கல்லூரியில் தன்னிதிப் பெண்கள் பிரிவு தொடங்கப்பெற்ற போது (1999–இல்) மிகக் குறைந்த கட்டணமே நிர்ணயிக்க வேண்டும் என முதல்வரை வேண்டிக்கொண்டார்கள். ஏழ்மையிலிருக்கும் வறியவரும் கல்வி பெற்றுயர வாய்ப்புக் கொடுக்கவேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோள்.

ஆசிரியர் வேலை நிறுத்தத்தில் (2003–ஆம் ஆண்டில்) பங்கேற்ற பேராசிரியர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க முனைந்தது. அப்போது அவர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அவர்களின் உதவி இன்றேல் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியிருக்கும். பணிப் பாதுகாப்பு நல்கிப் பேருதவி புரிந்தார்கள். எத்தகைய அரிய சாதனையைச் செய்தாலும், நான் ஒன்றும் செய்யவில்லை எல்லாம் இறைவன் செயல் அவனுக்கு நன்றி செலுத்துங்கள் எல்லாப் புகழும் இறைவனுக்கே எனக் கூறிவிடுவார்கள்.

கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களிடம் இது எங்கள் கல்லூரி அல்ல. உங்கள் கல்லூரி. (It is not our's It's your's) ஒல்லும் வகையான் இதன் உயர்வுக்குப் பாடுபடுங்கள். நிறுவனர்களின் இலட்சியம் அதுதான் என அறிவுறுத்துவார்கள். கல்லூரி உயர்வுக்காகப் பணி செய்யும் ஒரு பணியாளராகவே தம்மைக் கருதினார்கள். பணி வாய்ப்பு வழங்கிய ஒரு அதிகாரியாகக் கருதியதே இல்லை. (All are servants. You serve in our college one capacity. I am serving in another capacity. We are all serving ifor the betterment of students only) என்பது அவர்களின் வைர வாசகம்.

மனிதர்கள் மத்தியில் தம்மை உயர்வாகக் கருதி, பெருமை கொள்ளாது தாழ்மையைக் கடைப்பிடித் தொழுகுபவரை அல்லாஹ் மிகவும் மேன்மைப்படுத்திச் சிறப்பிப்பான் (மன்தவால அரப அஹல்லாஹ்) என்னும் நபிமொழிக்கு ஏற்ப மேனாள் செயலர் அவர்களின் வாழ்வியலாக இருந்தது.

இறைப்பணி நிறைப்பணி. அன்பர் பணி இன்பப்பணி. கல்விப்பணி கட்டாயப்பணி. எல்லோரும் கல்வி கற்று ஏற்றம்பெற எத்தகைய பேதமுமின்றி மன்னுயிரனைத்தையும் தன்னுயிர் போலெண்ணி மதித்து அன்பு காட்டி 'மனித குலம் அனைத்தும் ஒரே குடும்பம்' என்னும் இறைமொழியைந்து அனைவர்க்கும் பணி செய்தலே என் கடன் என வாழ்ந்த அருங்குணச் செம்மல் ஜனாப் ஹாஜி. M.J.M. அப்துல் கபூர் சாகிப் அவர்கட்கு வல்ல இறைவன் அரிய சுவனப் பயன்களைக் குறைவின்றிக் கொடுத்தருள்வானாக. ஆமீன். * *

இன்று ஆல் போல் தழைத்து உயர்ந்து நிற்கும் நமது கல்வி – கோயிலான ஜமால், சாதாரண மத்தியதர அதனினும் குறைந்த வசதிமிக்கவர்களின்கடும் உழைப்பினால் வரலாறு படைத்தது. எனது இலக்கிய பயணத்தின் உன்னத விதைகள் அங்கேதான் பேராசான்களால் விதைக்கப்பட்டது. 2014–ல் சாகித்ய அகாடமியின் குழந்தைகள் இலக்கியத்திற்கான விருது – பெற்ற அந்த நிகழ்வில் நான் படித்த என் தாய் கல்லூரியான ஜமால் முகமது கல்லூரியின் பெயரை குறிப்பிட்டார்கள். கூடவே அகாடமியின் செயலர் சீனிவாச ராவ் ஜி ஜமால் முகம்மது கல்லூரியில் பயின்றவர்களில் வழங்கும் மூன்றாவது சாகித்ய அகாடமி விருதாளர் என என்னை குறிப்பிட்டார்.

முனைவர் ஆயிஷா இரா. நடராசன்,
சாகித்ய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர்
( ஜமால் முகம்மது கல்லூரி மேனாள் மாணவர்)

# கலங்கரை விளக்கமான கஃபூர் சாஹிப்... !

பீ. அப்துல்காதர் B.Sc., B.Tech
செயலாளர்,
JMC ALUMINI ASSOCIATION, Chennai - Chapter.
Managing Partner, A.K. Builders, Chennai
Cell : 98402 46265

''தோன்றிற் புகழொடு தோன்றுக – அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று''

இந்த வள்ளுவ மொழிற்கு ஏற்ப வாழ்ந்து காட்டி இன்றைக்கும், என்றைக்கும் புகழ் மிக்கதோர் கலங்கரை விளக்காய் உயர்ந்து நிற்பவர் ஜனாப் எம்.ஜே.எம். அப்துல் கஃபூர் சாஹிப் அவர்கள்... !

ஜமால் முகம்மது கல்லூரியின் நிறுவனர் கல்வித்தந்தை ஜமால் முஹம்மது அவர்களின் பேரராய், இறைவன் இவரைப் பிறக்க வைத்தாலும், உள்ளத்தளவில் இவரை இறைவன் இவரது எளிமை, பண்பாடு, பழகும் தன்மை, நிர்வாகத் திறமை ஆகியவற்றால் அனைவர் மனதிலும் உயர்த்தி அமர வைத்திருக்கிறான்.....

ஜமால் முஹம்மது கல்லூரியின் செயலாளராகவும், தாளாளராகவும் இருந்த இவரது தோற்றத்திற்கு இறைவன் தனித்தன்மையை அளித்திருந்தான் எனில் அது மிகையாகாது. ஆம். சிகப்பு மேனி, உயர்ந்த உருவம், சிரித்த முகம், முகத்தில் அழகாய் அளவாய்ப் படர்ந்த வெள்ளைத்தாடி..... உடல் முழுக்க மறைத்த எளிமையான உடை, நடையில் வயதுக்கு மீறிய வேகம்!

இவைகளின் கலவைதான் அல்ஹாஜ் அப்துல் கஃபூர் சாஹிப் !

எளிமை இவரது இயல்பாக இருந்தது. கல்லூரியானாலும், பொது இடங்களானாலும், வயது, பதவி எனும் வித்தியாசம் பாராது பழகிய கஃபூர் சாஹிப் அவர்களை என் மனமெனும் சிம்மாசனத்திலிருந்து என்றைக்கும் யாரும் இறக்கிவிட முடியாது.... காரணம் அவர் பாரம்பரியம்மிக்க – பத்தாயிரம் பேருக்கு மேல் படிக்கும் ஜமாலின் பெரும் நிர்வாகப் பொறுப்பில் இருந்தாலும் என்னுடைய வாகன ஓட்டுனரிடம் கூட அன்பாகப் பழகி அவரை 'திரு. ஏழுமலை' என அழகாக அழைக்கும் பாணியை என்னால் மறக்க இயலாததுதான்... !

கல்லூரி நிர்வாகம் சம்பந்தமான விவகாரங்களுக்காக இவர் சென்னையிலுள்ள கல்லூரி, கல்வி இயக்கமானாலும் இதரவேறு அலுவலகங்கள் ஆனாலும் உயர் அதிகாரிகளிடம் இவரது அணுகுமுறையே எளிமையானது. பிறரும் பின்பற்ற வேண்டியது. நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு இவரது எளிய தோற்றத்துடன் அமைந்த இவரது அணுகுமுறை உயர் அதிகாரிகளால் மதிக்கப்பட்டு பிரச்சனைகள் ஒரே நாளில் தீர்ந்த அனுபவங்களை நான் சில சமயங்களில் உடன் இருந்து அறிந்திருக்கிறேன். இந்த அற்புத மனிதர் சில நேரங்களில், வாகன ஓட்டுநர் அமையாத நேரங்களில், கடமை மற்றும் நேரம் தவறாமை ஆகியவைகளை மனதில் ஏந்தி ஆட்டோ, பேருந்து போன்ற பொது வாகனங்களில் பயணித்ததை கண்டும் வியந்திருக்கிறேன்.

கல்லூரி கல்வி நிர்வாகத்தை திறம்பட நடத்தி ஜமாலை உயர்த்தி ஜமாலியன்களையும், அவரவர்கள் வாழ்க்கையில் சிறந்து உயர உழைத்தவரான இவர், ஒரு சிறந்த விளையாடு வீரர் என்பது குறிப்பிட்டுப் பாராட்டுக்குரிய ஒன்றாகும். கிரிக்கெட்டில் சிறந்த நிபுணத்துவம் பெற்ற இவர் சென்னை கிரிக்கெட் கிளப் (MCC) பொறுப்பிலும் இருந்திருக்கிறார்.

கால்பந்தாட்டத்திலும் சிறந்த முத்திரை பதித்த கஃபூர் சாஹிப் இந்த காரணங்களினால் எழுபது வயதிலும் நாற்பத்தி ஐந்து வயதுக்காரரைப் போல விறுவிறுப்பாக நடந்தவர் என்பதற்கு நானே சாட்சி... ! ஆம்! அவரோடு உடன் சென்று அவர் வேகத்திற்கு நடக்க முடியாமல் பின் தங்கி இருக்கிறேன்.

சுத்தமான தோற்றம் – எளிமை – பாராட்ட வேண்டிய அணுகுமுறை – தரம் பிரித்துப் பார்க்காத பழகுமுறை – ஆத்மார்த்தமான இறைவழிபாடு ஆகியவற்றால் கல்லூரியை உச்சத்துக்கு கொண்டு சென்ற நேரம் எம்.ஜே.எம். அப்துல் கஃபூர் சாஹிப் அவர்கள் மறைந்தாலும் மறையாமல் ஜன்னத்துல் ஃபிர்தௌஸின் அழகான மலர்த்

தோட்டங்களிலிருந்து நம்மையெல்லாம் நிர்வகித்துக் கொண்டிருப்பதாகவே நான் இன்றும் உணர்கிறேன்.

அவரது வழிகாட்டல், அவரது பழகும் தன்மை, அவரது அணுகுமுறை, அவரது நிர்வாகம் இன்னும் நம்மில் தொடரட்டும்.......... ஜமாலியன்களாகிய நாமும் உயர்வோம் ........ ஜமாலும் உயரும்........

கண்ணியமிகு கஃபூர் சாஹிபின் சாதனைகள் நமக்கெல்லாம் போதனைகள்.... நல்லவரும் வல்லவருமான அவரை இன்றும் புகழ்ந்து கொண்டே இருக்கலாம்... இருப்பினும் அவரையும், அவரது சேவையையும் ஓர் கவிதையாக்கிட முயற்சிக்கிறேன்.

மாசற்ற உள்ளம் கொண்ட மன்னவரே....

மாறாத பண்புக்குச் சொந்தக்காரரே...

மங்களச் சொல் சொல்லும் மனம் கொண்டவரே...

மரியாதையின் மாண்பு கற்றவரே...

ஓய்வின்றி உழைத்த உத்தமரே...உழைப்போர் உலகை உயர்த்தியவரே...

எதையும் தாங்கும் இதயமே... அசையா அன்பின் அடையாளமே...

குடும்ப உறவிற்கோர் பல்கலைக்கழகமே... !

இளமைத் தோற்றம் மாறா மாணிக்கமே... !

நட்பு வட்டத்திற்கோர் இலக்கணமே... வாழ்க உம் புகழ்... வாழ்க... ! வாழ்க !

# பெருமானாரின் கல்வித் தோழர்கள்
## இறைவன் அருள் முன் நிற்க

அல்ஹாஜ் மௌலவி முஃப்தீ
க.ஜலீல் சுல்தான் ஆலிம் மன்பயீ, திருச்சி மாவட்ட அரசு காஜி
தலைவர் திருச்சி மாவட்ட ஹிலால் கமிட்டி

சீனம் சென்றேனும்
சீர்கல்வி பெறுக
ஏழை எத்தீம்களோடு
இப்படி இருப்பேன் – என
இருவிரல் காட்டிய
ஏந்தல் பெருமானாரின்
கல்வி பற்றிய
முத்து மொழிகள்
ஏழை எத்தீம்களின்
இதய பீடம்
மஸ்லீசுல் உலமா
பீடத்தின் நாயகர்கள்
மானா ஜானா
நானா மூனா
பெருமானாரின் இருவிரல்கள்
இவர்களால் ஜனித்தது
ஜமால் முஹம்மது
ஏழைக்கு கல்வி
ஈந்த வள்ளல்கள்
இவர்கள் இருவரும்
அற்புத நாயகர்கள்
மானா ஜானா
நானா மூனா
வாழிய அவர்புகழ்
வானம் உள்ளவரை

# இரு நிகழ்வுகள் ஒருமனிதர்

## மர்ஹும் ஹாஜி M J M அப்துல் கபூர்,
## முன்னாள் செயலர் மற்றும் தாளாளர்



அ.ஹிதாயத்துல்லா,
இணைப்பேராசிரியர், பொருளியல் துறை,
ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.

### முன்னுரை

ஒருவரிடமுள்ள இயல்பான நல்ல குணங்களே அவரை சிறந்த மனிதராக உலகிற்கு அடையாளம் காட்டுகிறது. அப்படிப்பட்ட மனிதர்களின் வாழ்கையில் நடந்த நிகழ்வுகளைக் கொண்டுதான் அவர்களை மனித நேயமுள்ள மனிதராக அடையாளம் காண முடியும். நமது கல்லூரியின் முன்னாள் செயளர் தாளாளர் மர்ஹும் MJM அப்துல் கபூர்அவர்களை சந்தித்த இரு நிகழ்வுகளின் வழியாக மதிப்பீடு செய்யும் முயற்சியின் எழுத்து வடிவமே இக்கட்டுரை.

### நிகழ்வு ஒன்று

நம் கல்லூரியில் பொருளியல் துறை உதவி பேராசிரியர் பணியிடம் நிரப்ப போகிறார்கள் என்ற தகவல் கிடைத்து. 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அன்றைய தாளாளர் மர்ஹும் MJM அப்துல் கபூர் அவர்களை சென்னை, பெரம்பூர் ஜமாலியாவில் உள்ள அவரது இல்லத்தில் சந்திக்க சென்றேன். கல்லூரி தாளாளர்கள் என்றாலே ஆடம்பர மாளிகை, பகட்டு ஆடை என்ற பிம்பத்தை மனதில் வரைந்து கொண்டு சென்றேன். உயர்நடுத்தர குடும்பத்தாரின் தோற்றமளிக்கும் வீடு. நாற்பது வயது மதிப்பிடுமளவுக்கான மனிதர் ஒருவர் வீட்டின் படிக்கட்டில் அமர்ந்திருந்தார். கையில் செய்தித்தாள். தோளில் துண்டுபோர்த்தி இருந்தார். அவரிடம் சென்று தாளாளர் அவர்களை சந்திக்க வேண்டும் என சொன்னேன். வீட்டுக்குள் அழைத்து சென்றார். நாற்காலியில் உட்காரசொல்லிவிட்டு உள்ளே சென்றவர் வெள்ளைகைலி அணிந்த எளிமையான தோற்றமளிக்கும் மனிதரை அழைத்து வந்தார். இவர்தான் ஜமால் முஹமது கல்லூரியின் தாளாளர். எதற்காக வந்துள்ளீர்கள் என்று அவரிடம் சொல்லுங்கள் என்றார். ஒரு நிமிடம் அதிர்ச்சியில் உறைந்துபோனேன். பள்ளிகல்லூரி தாளாளர்கள் என்றால் என் மனதில் பதிந்திருந்த உருவத்தை சுருங்க கூற வேண்டுமானால் பெரிய தொப்பை, ஆடம்பர உடை பணக்கார மிடுக்கு. நம் கல்லூரி தாளாளர் அவர்களோ மெலிந்ததேகம், எளிமையான தோற்றம். இதுவே அதிர்ச்சிக்கு காரணம். அதிர்ச்சியிலிருந்து மீண்டு பேசஆரம்பித்தேன்.

ஜமால் முஹம்து கல்லூரியில் பொருளியல் துறையில் உதவி பேராசிரியர் பணியிடம் காலியக இருப்பதாக கேள்விப்பட்டேன். விண்ணப்பம் கொடுக்க வந்தேன் என்றேன்.

நீங்கள் ஜமாலில் படித்தீர்களா ? என்றார். நான் இல்லைஎன்றேன்.

தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் ? என்றார். நான் தமிழ் நாடு அரசு பணியில் இருப்பதாக சொன்னேன்.

நீங்கள் ஜமாலில் படிக்கவுமில்லை. அங்கு தற்காலிக பணியும் புரியவில்லை. நிரந்தர அரசு வேலையிலும் பணிபுரிகிறீர்கள். உங்களுக்கு உதவி பேராசிரியர் பணி வழங்க முடியாது. எங்கள் கல்லூரியில் படித்துவிட்டு தற்காலிகப் பணியில் பல ஆண்டுகள் கல்லூரிக்காக உழைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் நிரந்தர பதவியை வழங்குவோம் என கறார் தொனியில் கூறிவிட்டார்.

நானும் இருக்கையிலிருந்து எழுந்து ஏமாற்றத்துடன் இரண்டு மூன்று அடி நடந்துவிட்டேன். அவர் மனதில் என்ன மாற்றம் வந்ததோ புரியவில்லை. பாபு அவரை கூப்பிடு'' என்று அவர் சொன்னது என் காதில் விழுந்தது. நான் திரும்பினேன். அருகில் வந்தேன். அப்ளிகேஷன் வச்சிருக்கீங்களா ? என்றார். இருக்கிறது என்றேன். பாபு அதை வாங்கி திருச்சி ஃபைலில் வைத்துவிடு என்றார். பாபு என்று அவர் அழைத்தது அவரது மூத்த மகனான இன்றைய நம் கல்லூரியின் பொருளாளர் ஜமால் முகமது அவர்களைத்தான். மேலும் கூறினார் விண்ணப்பத்தை என்னிடம் கொடுத்துவிட்டதாலேயே வேலை கொடுத்துவிடுவோம் என நினைக்க வேண்டாம்.

இண்டர்வியூவில் பர்ஃபாமன்ஸ் நன்றாக இருந்தால் தான் தேர்ந்தெடுப்போம். தேர்வாகவில்லை யென்றால் திரும்பவும் வந்து கேட்கக்கூடாது என கட்டளையிடும் தொனியில் (Commanding Tone) சொன்னார். சலாம் சொல்லி அனுப்பி விட்டார்.

கல்லூரியில் மிகக் குறைவான ஊதியத்தில் நிரந்தமற்ற சூழ்நிலையில் பணியாற்றிக் கொண்டிருந்த வர்களுக்காக கறாராகவும் கண்டிப்பான தொனியிலும் பேசியது வேறு எந்த கல்லூரியின் தாளாளரிடமும் காண முடியாத உயர்வான மனிதத் தன்மையாகும். நிபுணத்துவமோ அல்லது பதவியோ ஒருவரின் மனிதத்தன்மையை வெளியேற்றிவிட்டு அவரது மனதில் பதியக்கூடாது.

நமது கல்லூரியின் முன்னாள் தாளாளர் மர்ஹும் MJM அப்துல் கபூர் அவர்களிடமிருந்த பதவி மற்றும் நிர்வாகத் திறன் அவரின் மனிதத்தன்மையை வெளியேற்றவில்லை.

## நிகழ்வு இரண்டு

அவர் ஆசிரியர்களுக்கு உரிய மரியாதை கொடுப்பது அவரிடம் பழகிய அனைவருக்கும் தெரிந்த ஒன்று. எனக்கும் அவரது மரியாதையை பெற சந்தர்ப்பம் அமைந்தது. நான் பொறுப்பேற்று நடத்திய தேசிய கருத்தரங்கின் அழைப்பிதழை வழங்குவதற்கு நம் கல்லூரியின் விருந்தினர் அறையில் அவரை சந்திக்க குழுவாக சென்றோம். அறையினுள் சென்ற உடன் நாற்காலியை காட்டி அமருங்கள் என்றார். நாங்கள் பரவாயில்லை என்று சொல்லிவிட்டு நின்று கொண்டே பேசினோம். நீங்கள் உட்காராவிட்டால் நான் அழைப்பிதழை பெற்றுக்கொள்ள மாட்டேன் என கறாராக கூறிவிட்டார். நாங்கள் உட்கார்ந்த பிறகுதான் அழைப்பிதழை வாங்கினார்.

நல்ல செயல்களையும் குணங்களையும் கடைபிடிப்பதில் கறாரும் கண்டிப்பும் காட்டினார் என்பதை மேற்கண்ட இரு நிகழ்வுகளிலிருந்தும் எளிதாக புரிந்து கொள்ளலாம்.

## முடிவுரை

முதல் நிகழ்வு நமது முன்னாள் தாளாளர் அவர்களின் கனிவான குணத்திற் குசான்று. இரண்டாம் நிகழ்வு மனிதர்கள் அனைவரும் சமம் என்ற கொள்கைக்கு சான்று. இவ்விரண்டு சான்றுகளிலிருந்தும் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் நம் கல்லூரியின் முன்னள் செயளர் மர்ஹும் MJM அப்துல் கபூர்அவர்கள் பத்தோடு பதினொன்றாக வாழ்ந்து மறைந்த சராசரி நபரல்ல. மனிதநேயமிக்க சிறந்த முன் மாதிரி மனிதர்.

# வசந்த காலங்கள்...

கூத்தாநல்லூர் கு.செ.அமீர் ஹம்ஸா – (துபை)

பாசமிகு உள்ளத்தையும்
பணிவான குணத்தையும்
அள்ளித்தரும் எண்ணத்தையும்
சிந்தனை பழக்கத்தையும்
கற்று தந்தது – எங்களது
பெருமிகு கல்லூரி

சாதிமத பேதமின்றி
சமய நல்லிணக்கத்தையும்
ஏழை எளியவரின் – திறமையறிந்து
தேடிச்சென்று – உதவி செய்யும்
நல்ல மனத்தையும் – கற்று தந்தது
எங்களது – பெருமிகு கல்லூரி

நல்ல அறிஞர்களையும்
திறமை மிகு மேதைகளையும்
துடிப்புள்ள தொழில் அதிபர்களையும்
உருவாக்கி – கடல் கடந்து வாழும்
நம் தமிழர்களின் மனதில்
நீங்கா இடத்தை பெற்றது
எங்களது – பெருமிகு கல்லூரி

காலங்கள் கரைந்தாலும்
நரைமுடிகள் தெரிந்தாலும்
ஒப்பற்ற பழக்கங்களை
சத்தமின்றி சாதித்து

இன்று – நம் சமுதாயத்தில்
தனக்கென்று – தனி இடம் பிடித்த
இளம் தளிர்களின் – நந்தவனமாக
திகழ்ந்து வரும் – எங்களது
பாசமிகு கல்லூரி – மேன்மேலும்
செழுமை பெற – மனதார
வாழ்த்துகின்றேன் – கல்லூரியின்

கடந்த கால நினைவுகள்
எங்களின் மனதில்
காலமெல்லாம்
நிலைத்து நிற்கும் ?

# ‘நேர்மையான கல்வியாளர்’



Dr. A.J. ஹாஜா முகைதீன்
பொருளாதாரத்துறை தலைவர் (பொறுப்பு), ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.

புகழ்மிகு ஜமால் முகம்மது கல்லூாயில் சேர்ந்து படிக்கவும் பேராசிரியராக பணியாற்றவும் வாய்ப்பளித்தவல்ல இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

நமது மதிப்பிற்குரிய முன்னால் செயலர் மற்றும் தாளாளர் ஹாஜி, ஜனாப் M.J.M அப்துல் கபூர் சாஹிப் அவர்கள் பற்றிய நினைவுகளை பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்த நமது கல்லூரியின் நிர்வாகத்தினருக்கு நன்றியை நவில்வதில் பெருமிதம் கொள்கின்றேன்.

1997 ஆம் வருடம் விரிவுரையாளர் தகுதித் தேர்வில் (SLET) தேர்ச்சி பெற்று அப்போதைய முதல்வரும் எனது மரியாதைக்குரிய பேராசிரியருமான அப்துல் சமது சார்அவர்களை சந்திக்க வந்தேன். என்னைப் பாராட்டி அகமகிழ்ந்த சமது சார்அவர்கள் வேலைவாய்ப்பு பற்றி பார்க்கலாம் என்றார்கள். மேலும் எனது அன்புக்குரிய பேராசிரியர்அப்துல்லா பாஷா சார்அவர்கள் ஜமாலில் உனக்கு வேலை நிச்சயம் உண்டு, ஆனால் சிலநாட்கள், சில மாதங்கள் ஆகலாம் எனவே காத்திருக்க வேண்டும் என்றார்கள். சிலமாதங்கள் கழிந்த பின்னர் சமது சார்அவர்களிடமிருந்து சஹாப்தீன் சார் மூலம் அழைப்பு வந்தது. என்னை செயலர்அறைக்கு அழைத்து சென்ற பேராசிரியர் சமது சார்அவர்கள் மே மாதம் 1998–ல் எனது ஆசிரியப்பதவிக்காலம் முடிவடைகின்றது. நான் உங்களிடம் சொன்ன பையன் இவர்தான். என்னுடையபணியிடத்தில் இவருக்கு வாய்ப்புத் தர வேண்டும் University Gold medallist - First Rank Holder என்றார்கள். மறு விநாடியே பணி நியமனம் செய்து கொள்ளுங்கள், நமது கல்லூரியின் பெருமைக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்தினார்கள். பேராசிரியர் சமது சார்அவர்கள் ஒவ்வொரு துறையின் சார்பிலும் நடத்தப்பட்ட பிரிவு உபச்சார விழாக்களில் இந்த நிகழ்வினை நினைவு கூர்ந்து அப்துல் கபூர் சார்அவர்கள் எந்தளவுக்கு ஓய்வு பெறப் போகும் ஒரு முதல்வரை, ஆசிரியரை கண்ணியப் படுத்தியுள்ளதை கூறி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். செயலரின் நேர்மை, வாக்குதவறாமை ஆகியவற்றிற்கு இவையே சான்று. பார்த்துக்கொள், கல்லூரிக்கு என்றென்றும் நன்றியுடன் இருக்கவேண்டும் என்ற அறிவுரையை பேராசிரியர் சமதுசார் வழங்கினார்கள்.

1998 ஆகஸ்ட் மாதம் பேராசிரியர் அப்துல்லா பாஷா அவர்கள் முதல்வராக இருந்த போது எனது பணி நியமனஆணையில் கையொப்பமிடும் போது சமது சார் செலக்ஷன் தானே என்று கூறி செயலர்அவர்கள் வாழ்த்தினார்கள்.

எனது பேராசிரியரின் பணியிடத்தில் எனது பேராசிரியராலே தேர்ந்தெடுக்கப் பட்டு செயலர்அவர்களால் நியமனம் செய்யப்பட்ட வாய்ப்பை என்றென்றும் மறக்க முடியாத – மறக்க கூடாத நிகழ்வாக கருதுகிறேன். மேலும் செயலர்அவர்களின் நினைவு சிறப்பு மலரை எனது பேராசிரியர்சமது சார்அவர்களே வெளியிட அதைப் பார்க்கும் வாய்ப்பை நல்கிய இறைவனுக்கு நன்றியை உரித்தாக்குகிறேன்.

நமதுெ சயலர்அவர்களுடன் பயணம் செய்யக் கூடிய வாய்ப்பு நமது காஜாமியான் விடுதியில் சப்வார்டனாக இருந்தபோது எனக்கு கிடைத்தது. விடுதிப் பணியாளர் ஒருவரின் திருமணத்திற்குகலந்து கொண்டு திரும்புகிறபோது சித்தையன்கோட்டை என்ற ஊரில் தனது நண்பரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்காதர் அவர்களை சந்திக்க அழைத்து சென்றார்கள். பின்பு வரும் வழியில் அவர்களின் தந்தை நினைவிடத்துக்கும் அழைத்துச் சென்று அவர்களுடைய தந்தையைப் பற்றிய பல நினைவுகளை பகிர்ந்து கொண்டார்கள். அவர்களின் எளிமை, எங்களிடம் பழகியவிதம் என் போன்றவர்களுக்கு கிடைப்பதற்கு அரிய நல்ல வாய்ப்பாகும்.

செயலர் அவர்கள் கல்லூரியில் தங்கும் நாட்களில் திரு. சுபேஷ் பாபு அவர்கள் மூலம் துபாய் பிளாக் நியூ

ஹாஸ்டலில் (தற்போதைய பெண்கள் விடுதி) தங்கியிருந்த எனக்கும் சப் வார்டனாக பணியாற்றிய நண்பர்அப்துல் கரிமூக்கும் செயலர்அவர்கள் கிரிக்கெட் பார்க்க கேபிள் கனெக்ஷன் ஏற்பாடு செய்ய அழைப்பு வரும். அதனை ஏற்பாடு செய்து தரும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்துள்ளது.

எனது அன்புக்குரிய பேராசிரியர்கள் அபுபக்கர் சார் மற்றும் சஹாப்தீன் சார் அவர்கள் மூலம் செயலர் அவர்களின் நேர்மை, தொண்டு உள்ளம் பற்றிய நிறைய கேள்விப்பட்டு இருக்கிறோம். பல்வேறு சூழ்நிலைகளில் நேர்மையை விட்டுவிலகாமல் இறைவனின் உண்மையான அடியனாக வாழ்ந்து மறைந்த செயலர் கபூர்சார் அவர்களின் மறுமைபேற்றுக்கு அல்லாஹ்வை இறைஞ்சுகிறேன்.

எனது தந்தையும் (1953–1954) நானும் படித்த நமது கல்லூாயில் எனது மகளும் படிப்பதற்கு வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றி செலுத்தி நமது கல்லூரி மேலும் புகழ் பெற நிர்வாகம் தழைத்தோங்க துவா செய்கிறேன்.

* * * * *

# கலாலயம் தந்த கனவான்கள்

S. உமர் பாருக் (1972–76)
முன்னாள் மாணவர்

வட்டமேஜை மாநாடு இலண்டனில்
சட்ட மேதை அம்பேத்கார்
சட்டையணியாத காந்தி – இவர்களுக்கு
சமானமாய் நிறுவனர் ஜமால் முகம்மது!

விடுதலை வேள்விக்கு நெய் சொரிய
கெடுதலில்லா காந்தி பணம் கேட்டார்
தடுதலின்றி ஜமால் தந்தார்
தொகை எழுதாக் காசோலை!
காந்தி சொன்னார் கண்ணீரோடு
கர்ணன்கள் இன்றுமிருப்பதைக் கண்டேனென்று!

கோலமிகு திருச்சியில்
காலம் அறுபத்தேழு கண்டு நிற்கிறது
காஜாவும் ஜமாலும்
கட்டி வைத்த கல்லூரி...

வளமான காவிரி பாய்வதால்
சிராப் 'பள்ளி'யில் 'கல்லூரி' முளைத்தது!
ஜமால் காஜா என்னும் மனித நேயர்கள்
சிந்திய வேர்வையில் மரமாய் தழைத்தது!

பன்னிரெண்டாயிரம் மாணவப் பறவைகள்
இந்தக் கல்வி ஆலமரத்தில் இன்று
அந்தோ... படித்துப் பறந்தவையோ
பல இலட்சம்!

இது...
பெட்டிகள் வாங்காமல் வேலை தரும்!
கல்வி கற்றிட ஏழைக்கு வாய்ப்பு தரும்!
இங்கு கல்வி மட்டுமல்ல
மட்டில்லா மனித நேயம்
உன்னத உழைப்பு ஒழுக்கத்துடன் நாணயம்
இவையும் இணைந்ததே இங்கே பாடத்திட்டங்கள்!

தரமான கல்வி பாடமாய் பேராசிரியர்கள்
வகுப்பறை கருவறைகளாய்ச் சுமப்பதால்
விளைவதோ மாசில்லா மாணிக்கக் கற்கள்!

தாத்தாக்கள் இருவரின் சாதனையை
பெயரென்கள் இருவரும் தொடர்கின்றார்கள்
தாத்தாக்கள் பெயர்தான் பெயரன்களுக்கும்
இது தொட்டுத் தொடரும் ஒரு கல்வி பாரம்பரியம்!

# THE VISION AND MISSION OF HAJEE M.JAMAL MOHAMED SAHIB AND JANAB N.M.KAJAMIAN ROWTHER.

**DR.J.AUGUSTIN**
Assistant Professor, Department of History,
Jamal Mohamed College (Autonomous),
Trichy-20.
augustinjamesjmc@gmail.com



British Rule in India became the most spectacular case of imperialism in modern times, but it was a special case as well. It might be self-evident to them that the country had to be ruled by command from above, not through representation from below. During the British rule, Education which was a means to office was a vital weapon in the effort either to conserve or to improve status consequently much of the eagerness for the new learning which first gratified and then embarrassed the British, came from an Indian desire to surpass other Indians.

Both higher and lower educations of the western sort were distributed with great unevenness in the province of British India. In 1835 the pressure of Evangelicals and utilitarian's had enabled Bentinck and Macaulay "to win a clear victory for western education over the Orientalists". In 1854 Wood, president the Board of control, modified this policy by laying down that primary education in the vernaculars should be encouraged, but he also decided that the system of higher education in English should be crowned by the Establishments of three universities.

As early as 1817 the Hindus of Calcutta were so enthusiastic for the new learning that they founded Hindu College at their own expenses. In 1823 when the company opened a college to teach traditional studies, some Bengalis urged that European Science and the English language should be taught there. In Bombay a similar enthusiasm brought the Elphinstone Institution into being in 1834 when after 1835, the Government at last began to set up western style schools and colleges of its own it could not cope with the demand. So in 1854 the role of private enterprise was recognized by woods grant in aid system, and this led to a remarkable expansion of privately, run schools staffed by Indians.

In Madras presidency in the year 1870-77, there were 11 Arts colleges and which had the enrollment of 418 pupils. By the year 1891-2 there were 35 Arts Colleges and the enrollment of pupils were 3818. Madras Presidency had produced the largest number of candidates for University entrance, which reflected the greater concern for secondary education in the south.

In Madras presidency the Hindus had a tighter hold upon education than in Bengal and Bombay Seventy three percent of all successful Hindu candidates in Madras University examination between 1876 and 1886 were Brahmins. Indian Christians were relatively well educated as a consequence of missionary effort, but the missions alone could not give them the wealth and the standing to make the most of their advantage. Of 17,115 successful candidates in universities between 1876 and 1886, 85.8 percent were Hindus, 8 percent were Indian Christian and 1.2 percent was Muslims. Those who sent their sons to school in Madras were mainly land holders, officials and Traders.

Since the end of the eighteenth century Islam had been hammered by the blows of European expansion. Throughout the country the community had been thrust into a crisis that was both political and religions. To state that Muslims were backward throughout India is meaningless. By sweeping away the old structure of administration Cornwallis and his successors had edged Muslims out of the revenue collecting system and also when English was needed in the public service and High Courts, they began to squeeze out.

Tiruchirappalli is one of the oldest Districts which formed as a part of the Madras Presidency, carved out in 1801. The revenue system of the British in Tiruchirappalli created a class of wealthy ryots and also it created wealthy traders. As far as the education is concerned the education institution in the district was divided in to three – the first one is the Christian missionaries Institution, second one is the Private Institution and the third one is the Government Institution. In 1853 there were 59 schools in the district if which 35 were instituted by the natives and 24 by the mission. But in the end of 1926, there were five colleges in Tiruchirappalli among which 1707 Male students and only 7 women students were enrolled. Among these the enrollments of Muslims student were very low. The Muslims mainly gave importance to Madarasa education than the English education.

The new wealthy class of Tiruchirappalli, basically the Land Lords and trading class, is fully aware of the ensuring danger of loosing their position in Administration and politics. Among them the leading traders of Tiruchirappalli Hajee M.Jamal Mohamed Sahib and Janab N.M.Khajamian Rowther had an undistributed faith that “one of the determinants of social position was education” and also they had the strong belief that “unless Muslims could be persuaded to the new learning they would continue to fall behind in the race for position”.

Education became the heart of the two personalities and they strongly believed that “The Muslims of this region will not remain a backward community but will sink lower and lower until there will be no hope of recovery left to them.” To knowing the great danger Hajee M.Jamal Mohamed Sahib and Janab N.M.Khajamian Rowther started working toward the establishment of an Arts College in Tiruchirappalli. Hajee.M.Jamal Mohamed Sahib was a staunch supporter of modern system of education that is evident from an incident when the question rose whether the instruction other than religions education should be introduced in Jamalia college, the Maulavis were in favour of the Religious education but Hajee M.Jamal Mohamed Sahib argued the importance of introducing the General subjects like History, Geography, Arithmetic and other Sciences.

When the differences of opinion arose between Hajee M.Jamal Mohamed Sahib and the Maulavis, Hajee Jamal Mohamed argued that if he needed he is ready to get the consent of High Priest Sheikul Islam who was stationed at Constantinople. For this purpose Janab Jamal Mohamed Sahib set forth his trip to Islamic countries of the world with an objective to see the religions and educational institution as well as to meet the High Priest at Constantinople. In 1910 Hajee M.Jamal Mohamed Sahib was thrilled to arrive in the ancient city of the Khalif (Istanbul). He visited the Khalifa and “he got an assent from him that in a religious school, student could be taught other subject too” His trip took around ten months and he returned to Madras in January 1911 with a strong determination which shows his commitment and his love toward his society carrying the dream of his father. After a prolonged struggle both the stalwarts Hajee M.Jamal Mohamed Sahib and Janab N.M. Khajamian Rowther succeeded in establishing Jamal Mohamed College on 11.07.1951 with the blessing of Lord Almighty.

The vast majority of the Muslims who did not want to jeopardize their historical religious conditions and inclination by committing their children to a secular type of education slowly began to enroll their children in Jamal Mohamed College. As a result the college started blooming day by day. Not only from the Muslim community but also student from various communities were attracted by the college. Mostly pupils from downtrodden community in and around Tiruchirappalli district were attracted by the college. At present the college has grown like a Banyan tree and thousands of students both male and female, irrespective of their caste and creed are flooding towards Jamal Mohamed College. Jamal Mohamed College not only has become the centre of learning but also its stands as a “Symbol of secularism and communal Harmony”.

# ஜமால் - என் திருவரங்கம்



கவிஞர். சிற்பி பாலசுப்பிரமணியம்
(1951 – ஆண்டு ஜமால் முகம்மது கல்லூரி முதல் அணியில் பயின்றவர்)
செயற்குழு உறுப்பினர், சாகித்ய அகாதமி,
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

ஆன்மாவின் தவிப்பைக் குலசேகராழ்வார் ஓர் அழகான பாசுரத்தில் பதிவு செய்திருக்கிறார். நடுக்கடலில் சிக்கிய ஒரு பறவை பறந்து பறந்து பார்க்கிறது; கரை காண முடியவில்லை. அதனால் அது கடலில் செல்லும் கப்பலின் பாய்மரக் கம்பில் வந்து அடைக்கலமாகி விடுகிறது.

எங்கும் போய்க் கரை காணாது
எறிகடல் வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம் பேறும்
மாப்பறவை போன்றேனே.

என்பது பாடல்

இன்றைக்கு அறுபத்தேழு ஆண்டுகள் முன்பு கல்லூரிகள் தமிழகத்தில் மிகக் குறைவாக இருந்த ஒரு கால கட்டத்தில் நான் பயில விரும்பிய இண்டர் மீடியட் வகுப்பின் இரண்டாம் பிரிவுப் பாட வகுப்பில் (II Group) தூய வளனார் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இடம் கிடைக்காமல் குலசேகரர் சொல்லும் கடற்பறவை போல் அலைந்து களைத்துப் போயிருந்தேன். மனம் நொந்து வருந்திய தருணத்தில் எனக்கும் ஒரு கப்பலின் பாய்மரம் கிடைத்தது. அது தான் ‘ஜமால்’!

1951 ஜூலையில் திருச்சிராப்பள்ளியில் என்னைப் போன்ற பலருக்குத் தாய் மடியாக ஜமால் முகம்மது கல்லூரி தொடங்கப்பட்டது. அது என் வாழ்வின் பொன்னொளிர் தருணமாய் அமைந்தது. என் தந்தையாரும் நானும் புதிதாய்த் தொடங்கிய கல்லூரிக்கு விரைந்தோம். விண்ணப்பத்தை நிறைவு செய்து முதல்வர் அறைக்குள் நுழைந்தோம். அங்கே சதுர வடிவிலான மூக்குக் கண்ணாடி அணிந்து அன்புப் பார்வை செலுத்திய முதல்வர் முகமது சயீத் நாங்கள் கேட்ட பாடப் பிரிவைத் தந்து எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

‘என்னையும் இருப்பதாக்கினன்‘ என்ற திருவாசக வரியைப் பிற்காலத்தில் நான் பொருளுணர்ந்து கற்க இந்த நிகழ்வு அழுத்தமான எடுத்துக்காட்டாயிற்று.

கல்லூரியின் கம்பீரமான தொடக்க விழா 1951 ஜூலை 11–ஆம் நாள் நிகழ்ந்தது. தமிழக ஆளுநர் பவநகர் மகாராஜாவும் அவர் துணைவியார் மகாராணியும், அன்றைய முதல்வர் குமாரசாமி ராஜாவும் கல்லூரியைத் தொடங்கி வைக்கக் கோலாகலமான விழா நடந்தேறியது. மாணவர்களுக்கான வசதிகளும் வகுப்பறைகளும் தயாராகாததால் மேலும் பதினைந்து நாட்கள் விடுமுறை விடப்பட்டது.

நிறுவனர்களான ஜமால் முகம்மது சாகிப் குடும்பம், காஜாமியான் சாகிபு குடும்பம் இரண்டின் பெரிய மனம் போல் கல்லூரியின் முகப்புக் கட்டடம் உயர்ந்தோங்கி நின்றதென்றாலும் வேறு வசதிகள் அப்போது இல்லை. அந்தக் கட்டடத்தின் பின்புறப் பக்கங்களில் பனை மரங்களும் முள்ளுச் செடிகளும் ஆங்காங்கே காவல் நிற்க, கண்ணுக்கெட்டிய தூரம் வரை வேறு எதுவும் இல்லை. ஒரு வெட்டவெளி வெம் பரப்பு. வெகு தூரத்தில் ஒரு மழை நீர் ஏரி, அதனருகே ஓடுகள் வேய்ந்த எட்டு அறைகள் கொண்ட ஒரு பழைய கட்டடம். அது தான் எங்கள் தங்கும் விடுதி. ஓர் அறையில் கணிதப் பேராசிரியர் முகமது ஈசா விடுதிக் காப்பாளராகவும், உருதுப் பேராசிரியர் துணைக் காப்பாளராகவும் தங்கி இருந்தனர்.

இந்த விடுதிக்கு வெட்டவெளியே காவலானது. விடுதி மாணவர்களுக்கு உணவு தயாரித்துக் கொடுக்கவும் சமையலறை இல்லை. ஒரு சிறிய கூரைக் கட்டடம் சாப்பிடும் அறையாக இருந்தது. அங்கு மேசை நாற்காலி எதுவும் கிடையாது. காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் திருச்சி ரயில் சந்திப்பில் இருந்த அசைவ உணவுச் சாலையிலிருந்து ஒற்றை மாட்டு வண்டி ஒன்று வரும். அதில் தான் காலைச் சிற்றுண்டி, மதிய உணவெல்லாம் வரும். வண்டி வருவதைப் பொறுத்துக் கல்லூரி முதல்மணி அடிக்கும்.

குளியலறையும் இல்லாததால் கல்லூரிக் கட்டடத்துக்கு அருகில் இரண்டு தொட்டிகளில் நீர் நிரப்பி வைத்திருப்பார்கள். அங்கு தான் எங்கள் குளியல், ஒப்பனை எல்லாம். குளித்து முடித்து ஒற்றை மாட்டு வண்டியின் வருகைக்கு வழி மேல் விழி வைத்துக் காத்திருந்த அனுபவம் அபூர்வமானது. மாட்டு வண்டி எங்கள் காமதேனுவாய் இருந்தது.

அன்றைக்கிருந்த ஒரே மாணவர் விடுதியின் நிலை இது. திறந்தவெளி எங்கள் சுதந்தர பூமியாக இருந்ததால் இரவு பகல் எந்த நேரமும் எங்கும் பறந்து திரியும் பறவைகளாக இருந்தோம். வசதிக்குறைவுக்கு நடுவேயும் எங்கள் விடுதியில் இலக்கிய மன்றம் நடத்தினோம். பேச்சுப் போட்டிகள் நடத்தினோம். போடி நாயக்கனூர் சயீத் காப்டனாக இருக்கப் பூப்பந்து விளையாடினோம். போட்டிகளில் கலந்து கொள்ள வேறுகல்லூரிகளுக்கும் போனோம்.

திருப்பூந்துருத்தி முகமது இபுராஹிம், போடி நாயக்கனூர் பன்னீர் செல்வம், பாண்டி, சயீத், கொடுமுடி இரா.பிச்சன், கணபதிபாளையம் ஜி.எஸ்.முத்துசாமி தஞ்சை மாவட்டம் கோவிந்தராஜ், நாகராஜ், விளையாட்டு வீரர் முனாஃப், ஆனைமலை குருநாதன் இப்படிப் பல விடுதி நண்பர்கள் பெயர் நினைவில் இருக்கிறது.

தொடக்க ஆண்டில் இருந்த வசதிக் குறைவுகள் இரண்டாம் ஆண்டில் மாறத் தொடங்கியது. எவ்வாறாயினும் எங்கள் குறைகளையெல்லாம் மறக்கும்படி ஓர் அருமையான ஆசிரியர் பட்டாளம் எங்கள் மீது ஆளுமை செய்தது.

ஆங்கிலத் துறையில் E.W.P. தாமஸ் மெதுவாக சைக்கிளில் வருவார். ஆனால் வாயுவேக ஆங்கிலத்தில் வெளுத்து வாங்குவார். அவருக்கே உரிய ஆங்கிலப் பேச்சின் அழகும், கையெழுத்தின் அழகும் என் செவியிலும் கண்களிலும் நிறைந்து நிற்கின்றன. ஆங்கிலத் துறையில் அப்போது இ.வி. எலியாஸ், நஞ்சுண்டன் எனப் பலர் இருந்தாலும் (ஆங்கிலம் 4 தாள் : அவற்றில் 2 ஷேக்ஸ்பியர் நாடகங்கள்) நாடகச் சுவையும் நடிப்புக் கலையும் பரிமளிக்கக் கற்றுக் கொடுத்தவர் சி.எஸ். கமலபதி நடமாடும் ஷேக்ஸ்பியர் என்று நாங்கள் செல்லமாக அழைக்கிற நல்லாசிரியர் அவர்.

தமிழில் ஆரம்ப மாதங்களில் கோவிந்தசாமித் தேவர்தான் பாடம் எடுத்தார். கரிய திருமேனி, தலையில் தலைப்பாகை, பருத்த உருவம். அப்போதெல்லாம் தமிழ் ஆங்கில வகுப்பு மாணவர் எண்ணிக்கை நூறு, நூற்றைம்பதிருக்கும். தேவர் வகுப்பில் மாணவர்கள் அவருக்குத் தெரியாமல் அறையை விட்டு ஓடி விடுவார்கள். தமிழ் வகுப்புகளில் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் நிலை நாட்டியதுடன் தம் காந்தத் தமிழால் எங்களைக் கட்டிப்போட்டவர் இறையருட்கவிமணி கா. அப்துல் கபூர். பூ உதிர்வது போல் பொன் உதிர்வது போல் தமிழ்ச் சொற்கள் அவரிடமிருந்து ஊர்வலம் வந்தன. எனக்கு அவர் ஆதர்ச ஆசிரியர் ஆனார். நான் அவருக்கு மிகப்பிடித்த மாணவன் ஆனேன்.

அருமையாக ஆடை அணிவார். அவரை ஆடை பாதி அருந்தமிழ் பாதி என அழைக்கலாம். மீண்டும் அவரை நான் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லையென்றாலும் எப்போதேனும் கடிதம் வரைவார். தம் இறுதி நாட்களில் குழந்தைப் பாடல்களைத் தொகுத்துத் தரும்படி கேட்டபோது ‘அரும் பூ’ என்ற தொகுதியை ஒழுங்கு செய்து ஒரு முன்னுரையும் எழுதியனுப்பி என் ஆசிரியருக்கு வந்தனங்கள் செய்தேன்.

மருத்துவக் கல்லூரிக்குப் போகவிருந்த என்னைத் தம் அருவித் தமிழால் தமிழிலக்கியம் கற்கத் தூண்டிய பெருமை (நன்மைக்கோ, தீமைக்கோ) என் சிந்தையில் என்றும் குடி கொண்டிருக்கும் பேராசிரியர் அப்துல் கபூர் அவர்களையே சேரும்.

பிற்காலத்தில் ஜமால் முதல்வராகவும் பெருமை பெற்ற பேராசிரியர் நயினார் முகமது பயிற்றுநர் பணியிலேயே அன்று சேர்ந்திருந்ததால் என் அன்பிற்கினியவராக இருந்தும் ஆசிரியராக அமையவில்லை. எனினும் இன்றுவரை ஜமால் தமிழ்த்துறையோடு என்னை நெருங்க வைத்திருப்பவர்கள் கபூரும், நயினார் முகமதுவும் தான்.

என் ஆசிரியப் பிரான்களில் நான் மறக்க முடியாத மற்றொருவர் விலங்கியல் துறைப் பேராசிரியர் V. ஹரிராவ். கடினமான அறிவியலைத் தேன்துளிகளாக மாற்றியவர். இனிய ஆங்கிலத்தாலும், இளமைத் தோற்றத்தாலும் மனதில் நிறைந்தவர் ஹரிராவ்.

இயற்பியல் துறைத்தலைவராக K.G.டோர்கல், வேதியியல் துறைத்தலைவராக ராஜாராம் ஆகியோரை



Best wishes from...
RICE CITY
Nurturing Tomorrow
Rice City Matriculation Higher Secondary School
Railway Road - Aduthurai - 612101 - Thanjavur District
0435 - 2473350 2470138 - +918344886677
www.ricecityschool.com | email: ricecityschool@gmail.com


B.S. SENTHIL CORPORATION
Dealers in
G.I. & PVC Pipes
Fittings,
Hand Pumps & Goods
Electrical Motors Etc.
6, V.S.S.M. Complex, 54-D/1, West Bouleward Road,
Trichy - 620 008. Ph : 0431-2704119


CCE
CLIMATE
COOL ENGINEER
Sales & Service of Air Conditions - Refrigerators
P. RAVI - 98654 20039
No. 74, West Street,
Veereswaram, Srirangam, Trichy - 620 006.
1/436 Indira Gandhi Nagar,
Malliampathu P.o., Trichy - 620 102.


D. Maheswaran
Ph : +91 96003 62349
+91 97901 34956
GLOBAL RO SYSTEMS
Off : No.15, Rainbow Nagar, 2nd Cross,
UKT Malai, Trichy - 620 102.
E-mail : global.rosystem@gmail.com


M.SYED IQBAL
MANAGING DIRECTOR,
MOBILE : 98940 70778,
PH : 0431-2711556
NRTT
S.THAMEEM MOHAMED
DIRECTOR
MOBILE : 96002 28619
thameem.s1990@gmail.com
NEW RAJA TIMBER TRADERS
BURMA TEAK WOOD
PLY WOODS
WOODEN DOORS
CEMENT ROOFINGS SHEET
METAL ROOFINGS
MS PIPES
We dealing of all types of Wood, Plywoods, Doors, Absestos, Metal Sheets,
GI Sheets, M.S.Pipes & PVC Doors available here.
101, Madurai Road, (Opp.Indar Electricals) Tiruchy - 620 008. Tamil Nadu.

நினைவு கூர்கிறேன். எனினும் கடந்த கால நினைவுகளில் எனக்குள் நிரம்பியிருக்கும் இயற்பியல் ஆசிரியர் எஸ்.என். தேவநாதன் எனக்குள் ஒரு துருவ நட்சத்திரமாகவே நிலைத்திருக்கிறார். அதற்குக் காரணமான இரண்டு நிகழ்வுகளை எண்ணிப் பார்க்கிறேன்.

இண்டர் மீடியட் வகுப்பில் இறுதித் தேர்வுக்கு முன் நிகழ்ந்த செயல் முறைத் தேர்வு (Practical) அறைக்குள் செல்கிறேன். எனக்கு Turing Fork ஒன்றைத் தந்து கேள்விகளும் கொடுத்திருந்தார்கள். கணிதத்தில் நான் ஒரு விறகுத் தலையன். செயலற்று உட்கார்ந்திருந்தேன். எங்கிருந்தோ வந்தார் ஆசிரியர் தேவநாதன். கிடுகிடுவென்று என் விடைத்தாள்களில் தாமே கணக்கைப் போட்டு வைத்து விட்டுப் போய்விட்டார். என் தலையெழுத்தை என் விடைத்தாளில் அவர் போட்ட கணக்கெழுத்து மாற்றியது. எப்படி நான் இதனை மறப்பேன் ?

**மற்றொரு நிகழ்வு,**

1953–இல் ஜமாலில் என் கல்வியை முடித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் (B.A Honour) மூன்றாண்டுகள் தொடர்ந்தேன். 1956–இல் பல்கலைக்கழகத்தில் முதல் மதிப்பெண் பெற்றுத் தேறினேன். (அடித்தளம் ஜமால், இங்கும் பல்கலைக்கழகத் தேர்வில் தமிழில் முதல் மதிப்பெண் பெற்றேன்). 1958–இல் பொள்ளாச்சி என் என்.ஜி.எம். கல்லூரியில் பணியில் சேர்ந்தேன். 1967 மே மாதம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் கோடை காலப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தேன். சென்னை மாநிலக் கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படித்த என் மாணவர் ஒருவர் என்னைத் தேடி அண்ணாமலை நகருக்கு வந்தார். தான் தேர்வைச் சரியாக எழுதவில்லையென்றும், ஜமால் ஆங்கிலப் பேராசிரியர் அப்பாசாமி தான் தேர்வுக் குழுத் தலைவர் என்றும், அவரிடம் சொல்லித் தனக்கு உதவ வேண்டுமென்றும் கேட்டார்.

நான் மதிப்பெண் போடும் பணிகளில் ஈடுபடுவதில்லையென்றும், அப்பாசாமியை எனக்குத் தெரியாதென்றும் சொன்னேன். அவர் விடுவதாயில்லை, என்னைத் தூக்கி ஒரு காரில் போட்டார். வேறு தெரிந்த பேராசிரியர்களிடம் சொல்லி அவரிடம் சொல்லச் சொல்லுங்கள் என்றார். நான் துவண்டு நொந்து போனேன்.

திருச்சியை அடைந்தோம். விடுமுறையாதலால் தமிழ்த்துறை உட்பட எந்தத் துறையிலும் ஆசிரியர்கள் கல்லூரியில் இல்லை. ஆனாலும் என் மாணவர் என்னை வாட்டி வதைக்கிறார். அந்தக் கல்லூரியில் நான் படித்து முடித்து 14 ஆண்டுகள் ஆகிவிட்டன. யாருக்கும் என்னை நினைவில் இருக்காது. சகிக்க முடியாத தொல்லையால் இயற்பியல் துறைத் தேவநாதனைத் தேடினேன். அவருக்கும் என்னை நினைவிருக்காதாதலால் பிரச்சனையை முடித்து விடலாம் என்பது என் எண்ணம்.

பேராசிரியர் தேவநாதன் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தேர்வு நடத்தச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள். சரி, திரும்பி விடலாம் என நினைத்தால் என் மாணவர் காரைக்குடி நோக்கிக் காரைத் திருப்பினார். அழகப்பா கல்லூரியை அடைந்த போது இரவு 8.00 மணி. இயற்பியல் துறையில் விசாரிக்கப் போனபோது மின்சாரம் நின்று போனது. கல்லூரி இயற்பியல் துறையில் ஓர் அறையில் அவர் தங்கியிருப்பதாகச் சொல்லப்பட்டது. அறைக் கதவை மனப் பதைப்போடு தட்டினேன். ‘யார் அது ?’ – பேராசிரியர் தேவநாதன் குரல்.

முகம்தெரியா இருட்டு. சார், நான் தான் 1951–53–இல் உங்கள் மாணவன். பெயர் P.பாலசுப்பிரமணியம் என்றேன். வெண்கலக் குரலில் என் ஆசிரியப் பெருந்தகையின் குரல், உள்ளே வாப்பா நீ P.பாலசுப்பிரமணியம் உன் வரிசை எண் 110 தானே ?

இருளில் எழுந்த இந்தக் குரல் கோடி சூரியப் பிரகாசமாய் ஒளிர்ந்தது. 14 ஆண்டுக்குப்பின் – இடையில் ஒருபோதும் நான் சந்தித்திராத என் ஆசிரியர், நானே மறந்து போய்விட்ட என் பதிவு எண்ணைச் சொல்லும் அதிசயத்தில் என் கண்களில் கண்ணீர்...

ஆசிரியர்களில் ஓர் அற்புதம் பேராசிரியர் எஸ்.என். தேவநாதன் ஜமால் தந்த பொக்கிஷம்.

மீண்டும் இன்று வரை நான் அவரைச் சந்திக்க முடியவில்லை, அதனால் என் உயிருள்ள வரை எனக்குள் அவர் ஒளி வீசிக் கொண்டிருப்பார்.

இத்தகைய அரும் பெரும் அர்ப்பணிப்பு மிக்க பேராசிரியர்களைத் தேடித்தேடி ஜமால் நிர்வாகம் கல்லூரிக்கு அழைத்து வந்தது. விக்ரமாதித்யன் அவையில்,

கிருஷ்ண தேவராயர் சபையில் நவரத்தினங்கள் என அறிஞர்கள் இருந்தார்கள் என்பது கதை. ஜமாலில் பல ரத்தினங்கள் ஒளி வீசின என்பது வரலாறு.

முதல்வர் முகமது சயீது அடிக்கடி மாணவர்களைத் தூண்டி உற்சாகப்படுத்துவார். பழம்பெருமை போதாது என்பதைச் சொல்ல, 'Your fathers were sultans. But what about you?' என்று கேட்பார்.

ஒருமுறை பக்கத்தில் இருந்த காவலர் விளையாட்டுத்திடலில் போட்டியின் வேகத்தில் காவலர்கள் மாணவர்களை அடித்துவிட்டனர். சகித்துக் கொள்ள முடியாத முதல்வர், மாவட்ட ஆட்சியர் முதல் மாவட்டக் காவல் அதிகாரி வரை அனைவரையும் தொடர்பு கொண்டார். அன்று மாலையில் காவல் துறையினர் மாணவர் முன்னிலையில் முதல்வரிடம் மன்னிப்புக் கேட்டு சல்யூட் செய்து சென்ற காட்சியை நான் கண்டேன். அப்படி மாணவர்களை நேசித்தவர் முதல்வர் முகமது சயீத்.

தேசிய மாணவர் படையினர் (NCC) தலைவர் ரகுமானும், விளையாட்டுத் துறைத் தலைவர் தியாகராசனும் ஜமாலுக்குத் தேடித் தந்த புகழும் பெருமையும் வெற்றிகளும் தொடக்க ஆண்டுகளிலேயே கல்லூரியைத் தமிழகமெங்கும் சிறப்பாக அறிமுகம் செய்தன என்பதை மறக்க முடியாது. எப்போது ஆங்கில நாளிதழ்களில் விளையாட்டுப் பகுதியைத் தேடிப் படித்தாலும் வெற்றிப் பட்டியலில் ஜமால் இருக்கிறதா என்று இன்றும் காண ஆசைப்படுவேன். ஜமாலின் விளையாட்டுத் துறைக்குத் தியாகராசன் அமைத்த அடித்தளம் அப்படிப்பட்டது.

முதல் இரண்டு ஆண்டுகளிலேயே மாணவர் களிடையே பேச்சுக் கலைக்குப் பெரிய ஆர்வத்தைத் தூண்டியவர்கள் தமிழில் பேராசிரியர் அப்துல் கபூரும் ஆங்கிலத்தில் சி.எஸ். கமலபதியும் என்றால் மிகையாகாது. ஒரு முறை Ship Wreck என்றொரு பேச்சுப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு கப்பல் கடலில் கவிழப் போகிறது. தப்பிப் போக ஒரே ஒரு ஆள் செல்லும் படகு மட்டுமே உள்ளது. கப்பலில் நேரு, ஷேக்ஸ்பியர், லதா மங்கேஷ்கர் முதலிய பலதுறை விற்பன்னர்கள். அந்தப் போட்டியில் சி.எஸ்.கமலபதி ஷேக்ஸ்பியருக்கு வாய்ப்புக்கேட்டு ஆற்றிய உரை முதல் பரிசு பெற்றது. அப்படியே தேசியக் கல்லூரியில் பணியாற்றிய அவரை ஜமால் இருகரம் நீட்டி ஆசிரியராக வரவேற்றது.

சி.எஸ்.கமலபதி கல்லூரியில் நாடகங்கள் பல நடத்தினார். வெனீசு வணிகன் நாடகத்தில் ஈவிரக்கம் இல்லாத ஷைலக் வேடத்தில் அசத்தினார் அவர். அவருடைய ஆர்வம் மிக்க முயற்சியால் ராஜ்கபூரின் தந்தை மிருத்விராஜ்கபூர் கல்லூரிக்கு வந்து உரையாற்றி நடித்தும் காட்டினார்.

இளம் பிள்ளையாக ஜமால் நடை போட்ட காலத்திலேயே புகழ் பெற்ற அறிஞர்களும் பேச்சாளர்களும் ஜமாலுக்கு வந்திருக்கிறார்கள். அகிலன், தெ.பொ.மீ, ம.பொ.சி, கி.ஆ.பெ.விசுவநாதம், பேராசிரியர் க.அன்பழகன் போன்ற பலரை அந்நாட்களில் நாங்கள் கேட்டு மகிழ்ந்திருக்கிறோம். இலக்கிய அறிவை ஜமால், மிகக் கூர்மையாக வளர்த்திருந்தது. அழகப்பா கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் ஆ.முத்துசிவனைப் போலவே திருச்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள், கரந்தையிலிருந்து பேராசிரியர் ஆ.பழனி ஆகியோர் உரைகள் எல்லாம் என் மனதில் இப்போதும் பசுமையாக இருக்கின்றன. தூய வளனார் கல்லூரிப் பேராசிரியர் அய்யம் பெருமாள் கோனார் தான் வரவில்லை. ஆனாலும் அவருடைய நோட்ஸ் எல்லார் கையிலும் இருந்தது.

ஜமாலில் நான் படித்த (1951–53) ஆண்டுகளில் தான் பாரதியும் பாரதிதாசனும் எனக்குள் அரியாசனமிட்டு அமர்ந்தார்கள். திருச்சி புத்தகக் கடைகளோடு வானொலி உரைகளும் என் அறிவுக்கு வளம் சேர்த்ததைக் குறிப்பிட வேண்டும்.

அன்று ஜமால் இருந்த இடம் சுப்பிரமணியபுரம் அல்லது டோல்கேட் என்று அழைக்கப்பட்டிருந்தது. பொன்மலைக்குப் போகும் சாலை மரங்கள் அடர்ந்து அழகு மிக்கதாக இருந்ததால் மாலைப் பொழுதுகளில் பொன்மலைக் குன்று மீதேறிப் பொழுது போக்குவோம். இல்லையெனில் திருச்சி ரயில் சந்திப்பில் சுற்றி வருவோம். தஞ்சை–திருச்சி சாலை அப்போது இங்கு இருக்கவில்லை. பொங்கல் விழாப் போதில் காஜா மலை மீதிருந்து கீழே நடைபெறும் மஞ்சுவிரட்டுப் பார்ப்போம்.

திருச்சி அன்று கிராமிய அழகுடன் இருந்தது. நெரிசல் இல்லை. தென்னூர், உறையூர் எல்லாம் தனித்தனி ஊர்களாகத் தெரிந்தன. இன்று வாகனங்களின் பெருக்கம், மக்கள் தொகைப் பெருக்கம் திருவெறும்பூர் போன்ற

தொழிற்சாலைப் பெருக்கம். அதே சமயம் ஜமால் நாங்கள் மன மகிழும்படி தமிழகத்தின் பெரிய கல்லூரிகளில் ஒன்றாக வளர்ந்துவிட்டது. மகளிரும் பயில்கிறார்கள். வெட்ட வெளியெல்லாம் கட்டடங்களாய் நிறைந்து விட்டன. உலகம் முழுதும் ஜமாலியன்கள் கூட்டம். அண்மையில் சிங்கப்பூரில் உணவகம் நடத்தும் பழைய மாணவர் ஷாநவாசை சந்தித்த போது இணையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

எப்பொழுதாவது என் காலத்தில் படித்த மன்னார் குடி வெங்கட்ராமன், மேட்டூர் நாராயணசாமி, கரூர் சீனிவாசன், திருச்சி நாகலிங்கம் போன்றவர்களைச் சந்திக்கும் போது ‘புதையல் எடுத்த தனம்‘ போல உற்சாகம் அடைகிறேன்.

எந்த நேர்காணலிலும் நான் ஜமாலைப் பற்றிப் பேசாமல் இருந்ததில்லை. திருச்சி வரும்போதெல்லாம் யாருக்கும் தெரியாமல் ஜமாலைச் சுற்றி வருவேன். பல்வேறு துறைகள் செழிந்தோங்கும் வரலாற்றில் ‘என் கல்லூரி’ என்று பூரிப்புக் கொள்வேன்.

எழுபதை நோக்கி அடியெடுத்து வைக்கும் ஜமாலை எண்பத்திரண்டு வயதில் பெருமிதத்தோடு பார்க்கிறேன். இப்பேரால் விருட்சத்தை நட்டுவைத்த கரங்களை நன்றி சொல்லி வாழ்த்துகிறேன். அதன் எழுபதாம் ஆண்டு விழாவிலும் கலந்து கொள்ள மனது பேராசைப்படுகிறது.

எனக்கு ஜமால் வெறும் கட்டடமல்ல –

ஒரு ஜீவ ஆலயம்.

மனதுக்குள் ஆயிரம்முறை நான் வணங்கும் திருவரங்கம்.

நான் அதன் மடிப்பிள்ளை.

அதைவிடப் பெருமை வேறு எனக்கு இல்லை.

*****

# வாழிய நிறுவனர் வாழியவே...

டாக்டர். எம்.ஏ.அலீம் எம்.டி.டி.எம் (நியுரோ)
ஜமாலியன்
தலைவர், பாண்டிச்சேரி மூளை நரம்பியல் நிபுணர்கள் கழகம்

அழகே! அறிவே!
ஜமாலே வெற்றியே
உன்னை நிறுவிய
நிறுவனர் வாழியவே

நிறுவனர்
இருவர்களின்
நினைவில் படர்ந்த
நிழல்கள் இன்று
நிஜமாய் மலர்ந்தன

தெள்ளிய ஆலின்
சிறுவிதைக் குள்ளே
உறங்கிய சிறுசெடி
ஆலமாய் உயர்ந்தது

கருவறைக் குள்ளே
சிந்திய வெண்துளி
உருவம் பெற்று
குழந்தையாய்
உயிர்த்தது

கல்விச் சிறுதுளி
கடலாய் மாறி
முத்தாய் பவளமாய்
செல்வம் கொழித்தது

ஏழைஎளி யோர்க்கு
ஏணியாய் நின்றதால்
ஏற்றம் பெற்றவர்
எத்தனை ஆயிரம்

இத்தகையச்
சிறப்பினை
ஈன்ற இந்நிறுவனர்
இறையருள் பெற்ற
சுவர்க்கம் புகுவரே.



இப்படிக்கு,



# ஜமால் முஹம்மது கல்லூரி

பேராசிரியர் N.அப்துல் சமத்
மேனாள் முதல்வர், ஜமால் முகம்மது கல்லூரி திருச்சிராப்பள்ளி – 20.
நன்றி : Golden Jubilee Celebrations 2000-2001, Founders Day Special Issue

''இன்னமல் அஃமாலு பின்னிய்யாத்'' என்பது பெருமானார் (ஸல்) அவர்களின் அமுத மொழி. தமிழகத்தில் முஸ்லிம்களால் நடத்தப்பெறும் கலை, அறிவியல் கல்லூரிகளில் முதன்மைக் கல்லூரியாகத் திகழும் ஜமால் முஹம்மது கல்லூரி, பெருமானாரின் வாக்கிற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 1951–ம் ஆண்டில் இக்கல்லூரியைத் தோற்றுவித்த பெரியவர்கள் அல்ஹாஜ் ஜமால் முஹம்மது மற்றும் காஜாமியான், படிப்படியாகக் கல்லூரியை நிர்வகித்து வரும் ஸ்தாபர்களின் வழித்தோன்றல்கள், கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிவரும் நல்லுள்ளம் கொண்ட பெருமக்கள் மற்றும் கல்லூரி முதல்வர்களின் நல்ல நிய்யத்தே ஜமால் முஹம்மது கல்லூரியின் சீருக்கும் சிறப்புக்கும் முழு முதற்காரணமாகும் என்றால் அது மிகையாயாது.

சுமார் 250 மாணவர்களைக் கொண்டு இன்டர்மீடியட் மற்றும் ஒரு சில பட்டப்படிப்புகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி, இன்று 3000 மாணவர்களுக்கு ஏராளமான இளநிலை, முதுநிலை பாடப்பிரிவுகளையும், பட்டயப் படிப்புகளையும் அளிக்கின்ற மாபெரும் கல்லூரியாகத் திகழ்கிறது. கல்வியை வணிகமாக்கி M.C.A., M.Sc., B.Sc., பாடப்பிரிவுகளின் ஒவ்வொரு ஸீட்டுக்கும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கட்டாய நன்கொடையாகப் பெற்று உயர் கல்விச் சேவையைப் பெரும்பான்மையான கல்லூரிகள் புரிந்து கொண்டிருக்கின்ற இன்றைய கால கட்டத்தில் கட்டாய நன்கொடை என்று ஒரு காசு கூடப் பெறாமல் சமுதாயத்தில் பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கியிருக்கின்ற மாணவர்கள் தரமான கல்வியைக் கற்று தங்களையும் தங்களுடைய குடும்பங்களின் இன்றைய நிலையையும் உயர்த்திக் கொள்வதோடல்லாமல் அவர்களின் எதிர்கால சந்ததியினர் மேம்பாட்டிற்கும் வழி வகுத்துக் கொடுத்து 'சதக்கத்துல் ஜாரியா'வாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஜமால் முஹம்மது கல்லூரி, சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மாணவர்களிடம் கட்டாயக் கட்டணம் வாங்காததோடு மட்டுமில்லாமல், அவர்கள் தங்களுடைய படிப்பை நல்ல முறையில் தொடர்ந்து முடிப்பதற்கான நிதி உதவிகளைத் துபாயிலிருக்கும் IMAN சார்பிலும், தாவுத்பாட்சா ஸ்காலர்சிப் மூலமும், ஜெய்லானிபாஷா நினைவு அறக்கட்டளை சார்பிலும், உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இருக்கின்ற நல்லெண்ணம் கொண்ட தனி நபர்கள் மூலமாகவும் இக்கல்லூரி பெற்றுத் தந்து கொண்டுள்ளது. கல்லூரியின் இன்றைய தாளாளர் ஹாஜி M.J.M. அப்துல் கபூர் அவர்கள் தம்முடைய தந்தையாரும் கல்லூரியின் முதல் தாளாளருமான மர்ஹூம் ஜனாப் M.J. ஜமால் மொஹிதீன் அவர்கள் கூறிய ''கட்டாய நன்கொடை வசூலிப்பது ஹராம்'' என்ற வார்த்தைகளை வேதவாக்காகக் கருதி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இத்தகைய செயல்பாட்டினைக் குறை கூறும் சிலரும் உள்ளனர். அவர்கள் கல்லூரிக்குப் 'பிழைக்கத் தெரியாத கல்லூரி' என்ற பட்டத்தையும் சூட்டியுள்ளனர் என்பது இங்கே குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் வரலாற்றில் சில முக்கியமான காலகட்டங்களைக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமானதாக அமையும்.

## தொடக்க காலம்

கல்லூரியின் தொடக்கமே தமிழக முஸ்லிம் சமுதாயத்தைப் பொருத்தவரையில் மிகவும் முக்கியமான காலகட்டமாகும். இந்திய விடுதலைக்குப் பின் மக்களிடையே கல்வியைப் பற்றிய விழிப்புணர்ச்சியும் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி பெற வேண்டும் என்ற ஆர்வமும் மக்களிடையே வேகமாகப் பரவிய காலமிது. ஆனால், அக்கால கட்டத்தில் இருந்த கல்லூரிகளோ விரல்விட்டு எண்ணக்கூடிய நிலையில்தான் இருந்தன. அக்கல்லூரிகளில் வசதி குறைவான மாணவர்கள், அதிலும் குறிப்பாக முஸ்லிம் மாணவர்களுக்கு அட்மிஷன் கிடைப்பதென்பது முயற்கொம்பாக இருந்த நிலையில்தான் ஜமால் முஹம்மது கல்லூரி முஸ்லிம்களுக்காக மட்டுமின்றி சமூகத்தில் உயர்கல்வி பெற வேண்டுமென்ற ஆர்வமுடைய அனைத்து மக்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இக்கல்லூரி அமைந்த காரணத்தினால்தான் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இன்டர்மீடியேட், புகுமுக வகுப்பு மற்றும் பட்டப் படிப்புகளை முடித்து டாக்டர்களாகவும், இன்ஜினியர்களாகவும் மற்றும் உயர் அதிகாரிகளாகவும் ஆகின்ற வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

## இரண்டாவது காலகட்டம்

கல்லூரியில் முதுநிலை பட்ட படிப்புகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தைக் கல்லூரியின் வரலாற்றில் இரண்டாவது

முக்கியமான காலக்கட்டமாகக் கொள்ளலாம். 1963–ல் இந்தியாவின் அன்றைய குடியரசுத் துணைத்தலைவர் டாக்டர். ஜாகிர் உசேனால் M.Sc., கணக்கியல் மற்றும் M.A., பொருளியல் பாடப்பிரிவுகள் தொடங்கப் பெற்றன. இதனைத் தொடர்ந்து படிப்படியாக ஆங்கிலம், தமிழ், அரபு, விலங்கியல், வணிகவியல், தாவரவியல் பாடங்களிலும் முதுநிலைப் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்ட காரணத்தினால் இக்கல்லூரியின் மாணவர்கள் கணிசமான எண்ணிக்கையில் I.A.S., I.P.S., I.F.S., போன்ற தேர்வுகளில் வெற்றி பெற்று அதிகாரிகளாக பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர்.

## மூன்றாவது காலகட்டம்

கணிப்பொறிக் கல்வி கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தை கல்லூரியின் வரலாற்றில் மூன்றாவது முக்கியமான காலகட்டமாகக் கொள்ளலாம். கணிப்பொறி இயல் கல்வியைப் பொருத்தவரையில் திருச்சியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு மற்ற பல்கலைக்கழகங்களுக்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு உண்டு. மற்ற பல்கலைக்கழகங்கள் கணிப்பொறியியல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்த நிலையில், பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் மணிசுந்தரம் முன்னோக்கோடு பாரதிதாசன் பல்கலைக் கழகத்தினுடன் இணைவு பெற்ற கல்லூரிகளில் கணிப்பொறிக் கல்வி ஆரம்பிப்பதற்கு ஆர்வம் ஊட்டினார். கணிப்பொறிகள் போதிய எண்ணிக்கையில் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, பாடப்பிரிவு ஆரம்பித்துவிட்டு பொறிகளை வாங்கிக் கொள்ளலாம் என்று கூறி இக்கல்வி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குட்பட்ட மண்ணில் வேரூன்றச் செய்த பெருமை பேராசிரியர் மணி சுந்தரத்தையே சாரும்.

இந்த நிலையில் கோலாலம்பூர் ராஜிக் பரீத் நிறுவனத்தின் உரிமையாளர் ஹாஜி ஏவி.எம். ஜாபர்தீன் அவர்களது தந்தையார் மர்ஹூம் ஹாஜி ஏவி.எம். முஹம்மது இப்ராஹிம் அவர்கள் கட்டிடத்திற்காகவும், கணிப்பொறிக்காகவும் வழங்கிய இருபது லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட நிதி உதவியைக் கொண்டு B.Sc., கம்ப்யூட்டர் சயின்ஸ் ஜமால் முஹம்மது கல்லூரியில் 1986–ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்தியக் குடியரசின் அன்றைய துணைத் தலைவர் ஆர். வெங்கட்ராமன், இப்பாடப் பிரிவையும், கல்லூரியின் ஹாஜி. ஏவி.எம். முஹம்மது இப்ராஹிம் கம்யூட்டர் சென்டரையும் தொடங்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து அடுத்து வருடமே M.C.A., M.Sc., கம்யூட்டர் சயின்ஸ் P.G.D.C.A. போன்ற கம்ப்யூட்டர் சார்ந்த கல்வியைக் கற்று இன்று உலகெங்கிலும் பரவலாக நல்ல சம்பாத்தியத்தில் இருக்கின்ற பன்னூற்றுக் கணக்கான மாணவர்கள் இப்படி ஒரு வாய்ப்பினைப் பெற முடியாமல் இருந்திருப்பர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கல்லூரியின் அன்றைய முதல்வர் டாக்டர். சி. நயினர் முஹம்மது அவர்கள் இது தொடர்பாக எடுத்துக் கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது.

## முன்னாள் மாணவர் ஈடுபாடு

முன்னாள் மாணவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் ஆர்வமாக ஈடுபட்ட 1990 முதல் உள்ள காலத்தைக் கல்லூரியின் வரலாற்றில் முக்கியமான நான்காவது காலகட்டமாகக் குறிப்பிடலாம். ஐக்கிய அரபு நாடுகள், சவூதி அரேபியா குறிப்பாக ஜெத்தாவில் பணிபுரிகின்ற கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் தாங்களாகவே முன்வந்து கல்லூரியின் வளர்ச்சிக்கான முயற்சிகளில் பங்கு கொள்ள ஆரம்பித்தனர். பிலால் அஹமது, தாவுத்பாட்சா, அப்துல் கதீம், அப்துற்றஹ்மான், வெங்கட், அக்பர்கான், நூருல்ஹக் போன்றவர்களின் ஈடுபாடு கல்லூரிக்குக் கணிசமான நிதியினைப் பெற்றுத் தந்ததோடு மட்டுமல்லாமல், கல்லூரியின் மேம்பாட்டில் அவர்கள் தொடர்ச்சியாக அக்கரை கொள்ளும் பாங்கினையும் உருவாக்கியது. அபுதாபியில் இருக்கும் ஜனாப். அப்துல் வஹாப் பெரும் முயற்சியினை மேற்கொண்டு ஏறத்தாழ பதினாறு இலட்ச ரூபாயினைக் கல்லூரியின் கட்டிட நிதிக்காகவும், கணிப்பொறி மற்றும் கணினி மென்பொருள் வாங்குவதற்காகவும், ஷேக்ஜைது அல்நஹ்யான் அறக்கட்டளையிலிருந்து பெற்றுத் தந்திருக்கிறார். ஜித்தாவில் இருக்கும் அப்துல் மாவிக், மீரா மொஹிதீன், ரஹ்மத்துல்லா, சிராஜுதீன் ஆகியோரின் நிதி உதவியும் கல்லூரியின் வேகமான வளர்ச்சிக்கும், தேவையான கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்கள் உருவாவதற்கும் உறுதுணையாக இருந்தன. அமெரிக்காவில் இருக்கும் முன்னாள் மாணவர் டாக்டர். அழகிரிசாமி அவர்கள் தம்முடைய தந்தையின் நினைவாக தமிழ்நட்டில் வேறெங்கும் இதுபோன்ற அரங்கு இல்லை என்று சொல்லுமளவு அழகான கூடைப்பந்து அரங்கு ஒன்றினை ஏறத்தாழ ஐந்து லட்ச ரூபாய் செலவில் கட்டித் தந்துள்ளார். வெளிநாட்டிலிருக்கும் மாணவர்களுக்கு நாங்கள் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல என்று கூறுமளவிற்கு உள்ளூரில் இருக்கும் முன்னாள் மாணவர்களும் குறிப்பாக மர்ஹூம் ஹாஜி மின்னா நூர்தீன் குடும்பத்தைச் சேர்ந்த ஹாஜி. பசீர்அகமது சகோதரர்கள் பரந்த பத்து வகுப்பறைகளையும் கூட்டங்கள் மற்றும் தேர்வுகள் நடத்துவதற்கு வசதியான முறையில் பெரும் அரங்கு ஒன்றினையும் கட்டுவதற்கு பேருதவி புரிந்துள்ளனர்.

இக்கால கட்டத்தில் முன்னாள் மாணவர்கள் மட்டுமல்லாமல் கொடையுள்ளம் கொண்ட பெருந்தகைகள்

சிலரும் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். பினாங்கில் இருக்கும் கூத்தாநல்லூரைச் சேர்ந்த வணிக மன்னர் ஹாஜி M.M. பரக்கத் அலி தம் தந்தையார் மறைந்த ஹாஜி. மாயின் அபூபக்கர் நினைவாக நூலகக் கட்டிடம் ஒன்றையும், அழகான ஒரு தொழுகைக் கூடத்தையும் கட்டித் தந்துள்ளார். ஹாஜி V.M. மொஹிதீன்சா குடும்பத்தினரும் கல்லூரியில் பத்து வகுப்பறைகள் உருவாவதற்கு பேருதவி புரிந்துள்ளனர். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மறைந்த ஹாஜி. உ.அ, (உச்சிபிள்ளை அப்துல் காதர்) அவர்கள் கல்லூரி விடுதியில் மேல் நிலைத் தொட்டி உருவாகவும், சக்கராப் பள்ளியைச் சேர்ந்த ஹாஜி. பஷுீர் அஹமது அவர்கள் கல்லூரி விடுதியில் மாணவர்களுக்கான தங்கும் அறைகள் கட்டவும் பெரிதும் உதவியுள்ளனர். திருச்சியின் பிரபல மருத்துவர் ஹாஜி. டாக்டர். ஜமீர்பாஷா அவர்கள் விலங்கியல் துறைக்கு ஒரு பரிசோதனைக்கூடம் உருவாவதற்கு உதவி புரிந்துள்ளார்.

கல்லூரியின் காஜாமியான் விடுதியில் ஏழை எளிய மாணவர் விடுதிக்கட்டணமின்றி இலவசமாகத் தங்கிப் படிப்பதற்காக இருந்த தங்கச்சியம்மாள் கட்டிடத்திற்கு மேல் S.A.S. ஹமிதியாஹால் என்று பெயரிடப்பட்டுள்ள கூடத்தை கீழக்கரை ஹாஜி. S.A.S. முஹம்மது அப்துல் ஹமீது அவர்கள் சுமார் 3 லட்சம் ரூபாயில் கட்டித் தந்துள்ளார். இதன் மூலம் இன்னுமொரு இருபது ஏழை மாணவர்கள் விடுதியில் வாடகைக் கட்டணமின்றித் தங்கிப் படிக்கும் வசதியைப் பெற்றிருக்கிறனர்.

இக்கால கட்டத்தில்தான் 1986–ல் விதைக்கப்பட்ட விதை ஒன்று பெரும் விருட்சமாக உருப்பெற்றது. கல்லூரியில் இன்ஸ்டிட்யூட் ஆப் கம்யூட்டர் ஸ்டடீஸ் (Institute of Computer Studies) கட்டுவதற்காகவும் அதற்காகக் கணிப்பொறிகள் வாங்குவதற்காவும் ரூ. 45 லட்சம் நிதி உதவி கோரி ஜெத்தாவில் இருக்கும் இஸ்லாமிய மேம்பாட்டு வங்கியிடம் (Islamic Development Bank) சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் ஒப்புக் கொள்ளப்பட்டு இது சம்மந்தமான வேலையைத் தொடங்குவதற்கு பச்சை விளக்குக் காட்டப் பட்டது. கம்யூட்டர் துறைக் கட்டிடத்திற்கு IDB அங்கீகரிக்கப்பட்ட தொகையான சுமார் 25 லட்ச ரூபாய்களுடன் கல்லூரி நிர்வாகத்தின் பங்களிப்பு, ஹாஜி. ஏவி.எம். ஜாபர்தீன் அவர்கள் வழங்கிய பத்து லட்ச ரூபாய் நன்கொடை பிரதிபலிப்பதாகவும் கல்லூரி நிர்வாகத்தின் கொள்கைகளுக்கு கிடைத்த வெற்றியையுமே காட்டுகிறது. அட்மிஷனுக்காகக் கட்டாய நன்கொடை வாங்கிக் கல்லூரிக்குத் தேவையான கட்டிடங்களையும், ஆடம்பரமான செலவுகளையும் செய்திருக்க முடியும். ஆனால், இதற்குக் கல்லூரி சமுதாயத்தில் சம்பாதித்திருக்கும் நல்ல பெயரையும், இறைப் பொருத்தத்தையும் இழக்க நேர்ந்திருக்கும்.

கல்லூரியில் சேர்கின்ற ஒரு மாணவன் காசு கொடுக்காமல் சேர்ந்து, கல்லூரியன் ஒழுக்க நெறிகளைக் கற்ற அவன் முஸ்லிமாக இருந்தால் தொழுகை, நோன்பு ஆகியவற்றைப் பேணுபவனாக வெளியே செல்லுகிறான். கட்டாயக் கட்டணம் செலுத்திக் கல்வி கற்பவனிடம் நான் ஒழுக்க நெறிகளை எவ்விதம் எதிர்பார்க்க முடியும்? அவன் எப்படி நல்ல குடிமகனாக உருவாக முடியும்? முதலிலே கோணல் என்றால் முற்றிலும்தானே கோணல்?

## கல்லூரி முதல்வர்கள்

கல்லூரியின் தொடக்க கால முதல்வர் அல்ஹாஜ் சயீத் சாஹிப் அவர்களும் ஒரு வருட காலமேயானாலும் மிகச் சிறப்பான முறையில் பணியாற்றிய பேராசிரியர் இ.டபிள்யூ.பி. தாமஸ் அவர்களும், அவருக்குப் பின் பேராசிரியர் இஸ்மாயில், அவருக்குப் பின் பெரும்புலவர் டாக்டர் நயினார் முஹம்மது, அவருக்குப் பின் கல்லூரியின் முன்னாள் மாணவரான இக்கட்டுரையின் ஆசிரியர் ஆகிய ஐவர் கல்லூரியின் முதல்வர் பொறுப்பினை ஏற்று சிறப்பான வகையில் சேவை செய்துள்ளனர். 1998–99 கல்வியாண்டு முதல், கல்லூரியின் முன்னாள் மாணவர் பேரா. அப்துல்லா பாஷா முதல்வராக பொறுப்பேற்று கல்லூரியை 21–ம் நூற்றாண்டுக்கு அழைத்துச் சென்று கல்லூரியின் பொன் விழாக் கொண்டாட்டங்களுக்கும் கட்டியம் கூறுபவராக அமைந்துள்ளார்.

## கட்டுரையை முடிக்கும் முன் கல்லூரியைப் பற்றிய தகவல்

வேறெந்த கல்லூரிக்கும் இல்லாத தனிச் சிறப்பு ஜமால் முஹம்மது கல்லூரிக்கு மட்டுமே உள்ளது. கல்லூரி நிர்வாகத்தின் பெருந்தன்மையும் கல்லூரி முதல்வர்களுக்கு நிர்வாகம் தந்துள்ள சுதந்திரமுமே ஆகும்.

இச்சிறப்பம்சம் தொடர வேண்டும் என்பது கட்டுரை ஆசிரியரின் அவா. ஜமால் முஹமது கல்லூரி விரைவிலேயே தன்னாட்சி கல்லூரியாகவும் அடுத்த சில சில ஆண்டுகளில் ஒரு பல்கலைக்கழகமாகவும் உருவாக வேண்டும் என்பது நல்லோரின் துவா. வல்ல அல்லாஹ் இத் துஆவினை அங்கீகரிப்பானாக, ஆமின்.

– நன்றி : Golden Jubilee Celebrations 2000-2001
Founders Day Special Issue

# மலைக்கோட்டை மாநகரில் ஒரு கலைக்கோட்டை

பேராசிரியர் கே. அப்துல்லா பாஷா
மேனாள் முதல்வர் , ஜமால் முகம்மது கல்லூரி திருச்சிராப்பள்ளி – 20.
நன்றி : Golden Jubilee Celebrations 2000-2001, Founders Day Special Issue

1951–ம் ஆண்டில் வள்ளல் ஜமால் முஹம்மது சாஹிப் அவர்களும், வள்ளல் காஜாமியான் ராவுத்தர் அவர்களும் இணைந்து சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட, நடுத்தர, ஏழை, எளிய மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்பளிக்கத் திருச்சிராப்பள்ளியில் ஜமால் முஹம்மது கல்லூரியைத் தோற்றுவித்தனர். **பொன் விழாவை நோக்கிப் பீடுநடை போடும்** இக்கல்லூரி நன்கொடை என்ற பெயரில் கல்வியை வியாபாராமாக்காமல் சேவை செய்து வருகிறது.

கணிப்பொறியியல், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், நுண்ணுயிரியல், வணிகவியல், பொருளியல். தமிழ், ஆங்கிலம், அரபி ஆகிய பாடங்களில் முதுகலைப் பாடப் பிரிவுகளையும், பல ஆய்வுத் துறைகளையும் கொண்ட இக்கல்லூரியில் 3000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கின்றனர். 150–க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் பணியாற்றுகின்றனர். பாரதிதாசன் பல்கலைக்கழகத் தரப்பட்டியலில் (Rank) 50–க்கும் மேற்பட்ட இக்கல்லூரி மாணவர்கள் இடம் பெற்றுள்ளதே இக்கல்லூரியின் தரத்திற்கும், தகுதிக்கும் சான்று பகரும்.

இரத்ததானம் வழங்குவதில் இக்கல்லூரி மாணவர்கள் முன்னோடியாகத் திகழ்கின்றனர். நாட்டு நலப்பணித் திட்டத்திலும், இந்திய தேசிய மாணவர் படையிலும், அகில இந்திய அளவில் சாதனை புரிந்துள்ள இக்கல்லூரி, பண்பாட்டுப் பறவைகளின் சரணாலயமாகத் திகழ்கிறது.

சூடான், பங்ளாதேஷ், மலேசியா, இலங்கை போன்ற பிற நாடுகளில் இருந்தும் மணிப்பூர், ஆந்திரா, கேரளம் போன்ற பிற மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் பயில்கின்றனர்.

ஆசியாக் கண்டத்தில் மிகப் பெரிய அமைப்புகளாக இக்கல்லூரியின் லியோ கிளப்பும், ரோட்ராக்ட் கிளப்பும் தொடர்ந்து தொண்டாற்றி வருகின்றன. நாட்டின் வேறு எந்தக் கல்லூரியிலும் இல்லாத அளவிற்கு இம்மாணவர்கள் வரதட்சணை எதிர்ப்பு இயக்கத்தை தொடங்கி கைக்கூலி கைவிட்டோர் கழகம் என்ற பெயரில் நடத்தி வருகின்றனர்.

இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் சிறந்த விளங்குகின்றனர். இன்றைய கல்வித் துறைச் செயலர் திரு. செல்வம், ஐ.ஏ.எஸ்., தமிழக முதல் அமைச்சரின் சிறப்புப் பாதுகாப்பு அதிகாரி திரு. ஜாபர்சேட், ஐ.பி.எஸ்., போன்ற பல ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ்., அதிகாரிகளும், மருத்துவர்களும், பொறியாளர்களும் இக்கல்லூரியில் பயின்றவர்கள்.

இம் முன்னாள் மாணவர்கள் ஒன்று கூடி துபாய், சவுதி அரேபியா, குவைத், அமெரிக்கா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ‘முன்னாள் மாணவர்கள் சங்கம்’ அமைத்து கல்லூரி வளர்ச்சிக்கு உதவுவது தனிச்சிறப்புடையது. இவர்களின் கூட்டு முயற்சியால் இந்தக் கல்வியாண்டில் M.B.A., பாடப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. பல புதிய கட்டிடப் பணிகள் பொலிவு பெற்று வருகின்றன.

30–க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் முனைவர் பட்டம் பெற்று உள்ளனர். உலக அளவிலும் தேசிய அளவிலும் கருத்தரங்க மாநாடுகளில் கட்டுரை சமர்ப்பித்துள்ளதும் குறிப்பிடத் தக்கது.

இக்கல்லூரியின் காஜாமியான் விடுதியில் சுமார் 950 மாணவர்கள் தங்கிப் பயில்கின்றனர். துபை முன்னாள் மாணவர்களின் முயற்சியால் நிறுவப்பட்டுள்ள புதிய விடுதியில் 500–க்கும் அதிகமான மாலை நேர முதுகலை மாணவர்கள் தங்கிப் பயின்று வருகின்றனர். இவ்விடுதியின் கட்டுப்பாடும், உணவுத் தரமுமம் நாடறிந்தது. கணிப் பொறித்துறை பிற கல்லூரிகளுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது. இங்குதான் முதன்முதலாக இணையம் (Internet) திருச்சிராப்பள்ளியில் தொடங்கப் பெற்றது. இந்த ஆண்டு கணிப்பொறித்துறையில் இரு (M.Sc., Information Technology, M.C.A.,) முது நிலை வகுப்புகளும் B.C.A., M.C.A., இள நிலை வகுப்புகளும் துவங்கப்பட்டுள்ளது. மாலை நேரக் கல்லூரியில் பெண்களுக்காக மட்டும் நடத்தப்படும் B.B.A., B.Com., B.Sc., Computer Science, B.C.A., மற்றும் B.A. (Litt), போன்ற வகுப்புகளில் 400–க்கும் மேலான பெண்கள் பயின்று வருகின்றனர். பெண்களுக்காக மட்டும் கட்டி முடித்துள்ள புதிய பிரிவை இந்த ஆண்டு மேதகு ஆளுநர் பாத்திமா பீவி திறந்து வைக்கிறார்.

கலை அறிவியல் கல்லூரிகளில் நன்கொடை வழங்காமல் தரத்தோடு கல்லூரியை மாணவர் நலனுக்காக நடத்த முடியும் என்பதற்கு ஜமால் முஹம்மது கல்லூரி ஓர் அழகிய முன் மாதிரி. சுருங்கச் சொன்னால் மலைக் கோட்டை நகரில் கலைக்கோட்டை ஜமால். இது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.

# உலகக் கல்வியும் மார்க்கக் கல்வியும்...

பேரா. காதர் இப்ராஹிம்
(PUC - 1963)
மேனாள் பேராசிரியர், வேதியியல் துறை,
ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி,

நான் 1963–ல் PUC–ல் மாணவராகச் சேர்ந்தேன். 2003–ல் லெக்சராக ஓய்வு பெற்றேன். 40 வருடம் இந்த மண்ணில் இருந்தேன்.

இந்த காலேஜ் புனித மனிதர்களால் ஆரம்பிக்கப் பட்டது. முதல் முதல்வர் சையது சாஹிப் தாடி இல்லாத அவுலியா, தஹஜ்ஜத் தொழக் கூடியவர். ஜமால் முதலாளி, அப்துல் காதர் எஜமான் ஆகியோர் செயலாளர் மற்றும் பொருளாளராக இருந்த காலம். ஜமால் முதலாளி, இப்ப இருக்கும் பிரசிடண்ட் Mr. Bilal உடைய தகப்பனார் அப்துல் காதர் எஜமான் இப்ப இருக்கும் செயலாளர் Dr. நஜீமுதீன் உடைய தகப்பனானர். இந்த காலேஜ் முன்னேற்றத்திற்குக் காரணம் தீனுடைய அடிப்படையே. தீன்தாரியாகவும் தீனுக்கு உதவி செய்யக் கூடியவர்களாகவும் நிர்வாகிகள் இருந்தார்கள். பேராசிரியர் இஸ்மாயில் பேனாவை கழற்றி அப்துல் காதர் எஜமானிடம் கொடுப்பார். கை நடுங்கிக் கொண்டே கையெழுத்துப் போடுவார்.

Management எப்பொழுதுமே Administrative மற்றும் Academic இரண்டிலும் தலையிடாது. Principal கிரீடம் இல்லாத பாதுஷாவாக இருந்தார். இது முதல் காரணம் காலேஜ் உடைய முன்னேற்றத்திற்கு. இரண்டாவது உண்மையில் Non Muslim Staff அதிகமாக தியாகத்துடன் உழைத்தார்கள். எங்கள் காலத்து ஆசிரியர்கள் கோட்டு, சூட்டு அணிந்திருப்பார்கள். Subject–ல் மன்னர்களாக இருந்தார்கள். மாணவர்கள் பெரிய பெரிய பயில்வான்களாக இருந்தார்கள். ஆனாலும், discipline 100% இருந்தது. அக்காலக்கட்டத்தில் Management உடைய பிள்ளைகள் படித்தார்கள். (1) இப்ப உள்ள President (2) இப்ப உள்ள Secretary Brothers Mr. Hussain, Mr. Kaja Kamal. ஆனால் இவர்கள் Management சம்மந்தப் பட்டவர்கள் என்பது வெளியில் தெரியாது.

இந்த காலேஜில் இருந்த Staff - கள் பல காலேஜ்கள் ஆரம்பிக்கும் பொழுது Principal–களாகப் போனார்கள்.

1. Mr. Basha
   மேல்விஷாரம் கல்லூரி
2. Mr. Naseerudeen -
   சதக்குத்துல்லா அப்பா கல்லூரி, திருவெல்வேலி
3. Mr. Basheer Al Usman
   ஆம்பூர் கல்லூரி
4. Mr. Abdul Kadir
   இளையான்குடி

மேலும், இந்தக் காலேஜில் படித்த பல மாணவர்கள் தமிழ் நாட்டில் உள்ள Muslim College Principal–ளாக உள்ளனர்.

தமிழ் நாட்டில் தீனும் தீனுடைய வேலை பரவுவதற்கு இந்த காலேஜூம் ஒரு காரணம். இன்று உலகம் முழுவதும் Jamal Student தீனுடைய வேலை செய்கிறார்கள். இப்பவும் இந்த காலேஜ் நடப்பதற்கு தீன்தான் Main காரணம். இந்த College–ல்தான் பல Staff-கள் வேலை பார்த்து முன்னேறினார்கள். நான் 1.5 ரூபாய் சட்டை போட்டு வந்தேன். 32 ரூபாய் சட்டை போட்டு வெளியானேன்.

"Jamalian"

என்ற பெயர் இந்த காலேஜில் படித்த மாணவர்களால் பிரசித்திப் பெற்றது.

Non-Muslim

மாணவர்கள் ரொம்ப கண்ணியமாய் படித்திருக்கிறார்கள்.

இந்த காலேஜ் முன்னேறிக் கொண்டே இருக்கும். தீனுடைய வேலையின் காரணமாக.

ஆமீன்.

# நிர்வாகம்

பேராசிரியர் N.அப்துல் சமத்
மேனாள் முதல்வர், ஜமால் முகம்மது கல்லூரி திருச்சிராப்பள்ளி – 20.

1951–ம் ஆண்டு இண்டர் மீடியட்டின் இரண்டே இரண்டு பாடப்பிரிவுகளில் சற்றேறக்குறைய 240 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட ஜமால் முஹம்மது கல்லூரி 68 ஆண்டுகள் கடந்து இன்று இங்கு இல்லாத இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவுகளே இல்லை என்று எண்ணுமளவு மட்டுமல்லாமல் முனைவர் பட்டத்திற்கான பல்வேறு ஆராய்ச்சி படிப்புகள், பட்டதாரி ஆசிரியர் படிப்பு, மேலாண்மைத்துறையில் முதுநிலைப் பட்ட வகுப்பு என ஒவ்வொரு ஆண்டும் 3000–க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் தரமான வாழ்வாதார கல்வியையும், மறுமைக்கு பயன் தரும் அறநெறி கல்வியையும் ஒருங்கே பெறுகின்ற பிரமாண்ட வளர்ச்சியினைப் பெற்று ஒரு மாபெரும் கல்விக் கோட்டையாகவும், சாதி மத வேறுபாடின்றி எல்லா சமூகத்தைச் சேர்ந்த மாணாக்கர்களின் வளமான எதிர்கால வளர்ச்சிக்கு நுழைவாயிலாகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இந்நிலையில், இக்கல்லூரியின் தோற்றத் திற்கும் அதன் தொடர் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்த பெருமக்களை நினைவு கூர்வதும், அவர்தம் பங்களிப்புகளைப் பதிவு செய்வதும் கல்லூரியினை வழிநடத்தும் பொறுப்பினை பெற்றிருக்கும் நிறுவனர்களின் வழித் தோன்றல்களின் கடமையாகும். அந்நல்ல முயற்சியில் தற்பொழுது ஈடுபட்டிருக்கின்ற பொறுப்பாளர்கள் பாராட்டுக்குரியவர்களாவர். இந்த முயற்சியின் ஒரு பகுதியாக நிறுவனர்கள் நினைவாக வெளிக் கொணர இருக்கும் மலருக்கு ஜமாலின் முன்னாள் மாணவன், அதன் ஆசிரியர் மற்றும் அதன் முதல்வராகவும் இருந்த பாக்கியத்தையும் பெற்றவன் என்ற முறையிலும் கல்லூரியின் அண்மைப்பகுதியில் வசித்திருந்தவன் என்ற முறையிலும் கல்லூரியின் தோற்றுனர், கல்லூரியை வழிநடத்தும் பொறுப்பினைப் பெற்றிருந்த அவர்தம் முதல், இரண்டாம் மற்றும் இதர தலைமுறையினரைப் பற்றியும் நானறிந்த தகவல்களை துணுக்கான சங்கதிகளாக இக்கட்டுரை மூலம் பதிவு செய்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் நிறுவனர்கள் பன்னாட்டு வணிகர்களாக திகழ்ந்து பெருமளவு செல்வம் ஈட்டியவர் என்பதும் இந்திய நாடு ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலைப் பெற்றபின் உயர்கல்வி பெறுவதில் தேட்டமும், மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற தொழிற்கல்வியை பெற வேண்டும் என்கின்ற மிக்க ஆர்வமடைந்திருந்த 'முதல் தலைமுறை' இஸ்லாமிய மாணவர்களுக்கு உயர்கல்வி கல்லூரிகளில் இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்த நிலை கண்டு ஆதங்கப்பட்டு, இந்நிலைக்கு ஒரு நல்ல விடியலைத் தர வேண்டும் என்கின்ற அக்கரையுடன் செயல்பட்ட கல்லூரியின் தோற்றுனர்கள் ஜனாப் காஜாமியான் சாஹெப் மற்றும் ஜனாப் ஹாஜி ஜமால் முஹம்மது சாஹெப் ஆகியோர் ஆவர். முன்னவர் மஜ்லிசுல் உலமாவுக்காக வழங்கிய பரந்த நிலப்பரப்பின் மஜ்லிசுல் உலமா நடுநிலைப்பள்ளி ''ஜமால் மொஹிதீன் பில்டிங்'' என்னும் கட்டிடத்தில் இயங்கி வந்தது. 1951–ம் ஆண்டு இறையச்சம் மிகக்கொண்டிந்த மேற்கூறப்பட்ட நிறுவனர்கள் உள்ளத்தூய்மையோடு விதைக்கப்பட்ட விதைதான் இன்று மாபெரும் விழுதுகள் பல நிரம்பிய மாபெரும் ஆல விருட்சமாகவும் அதன் விழுதுகளும் விருட்சமாக உருவெடுக்கின்ற காட்சியினைக் காண்கிறோம். இத்தகவல், பொதுவாக எல்லோரும் அறிந்த ஒன்று என்ற போதிலும், இப்பெருமக்கள் தொடர்பான கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிய துணுக்கான சில தகவல்களை இங்கு பதிவு செய்வது நலமாக இருக்கும் என நம்புகிறேன்.

கல்லூரியின் தொடக்க காலத்தில் (எவ்விதமான, ஆடிடோரியம் போன்ற அரங்கமும் இல்லாத நிலை) கல்லூரிக்கு வருகை தந்து மாணவர்களுக்கு உரை நிகழ்த்திய VIP–களின் பட்டியல் பிரமிக்கத்தக்கது. சுதந்திர இந்தியாவின் முதல் பாராளுமன்றத்தின் Speaker திரு அனந்த சயன அய்யங்கார், முதல் துணை குடியரசுத் தலைவர் Dr. இராதா கிருஷ்ணன், மத்திய அமைச்சர் ஜனாப் ஹுமாயூன் கபீர், குடியரசுத் தலைவர் ஜனாப் பக்ருதீன் அலி அஹமது, குடியரசின் துணைத் தலைவராக இருந்த டாக்டர். ஜாகீர் ஹுசைன் போன்றோர் கல்லூரிக்கு வருகை தந்து, கல்லூரிக்கு பெருமை சேர்ந்தவர்களாவர். குறுகிய காலத்தில் இத்தனை VIP–களும் கல்லூரிக்கு வருகை தந்தது எப்படி சாத்தியமாயிற்று என்றால் அது கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளராக செயல்பட்டுக் கொண்டிருந்த, நிறுவனர்

ஜனாப் ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் அவர்களின் புதல்வர் கல்லூரியின் முதல் தலைமுறை தலைவர் ஜனாப் ஜமால் மொகைதீன் சாஹிப் அவர்களின் முயற்சியாகும். டெல்லி பாராளுமன்ற ராஜ்ய சபா உறுப்பினராக இருந்த அன்னாரின் வேண்டுகோளுக்கு கட்டுப்பட்டவர் களாகவே நம் கல்லூரிக்கு அவர்கள் வருகை தந்தது இங்கே குறிப்பிட தகுந்தது.

அவர்களைப் போலவே, நிறுவனர் காஜாமியான் சாஹிப் அவர்களின் காங்கிரஸ் இயக்கத்திலும் அதன் தலைவர்களிடமும் கொண்டிருந்த தொடர்பு, நம் கல்லூரியைப் பற்றிய அறிமுகத்தையும் நல்லெண்ணத்தையும் மாநில அளவில் பரவச் செய்தது.

## சுவையான ஒரு தகவல் :

திரு. காமராசர் அவர்கள் முதல்முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்ற பின் மேற்கொண்ட தமிழக சுற்றுப்பயணத்தில், திருச்சிக்கு வந்த போது அன்றைய மதிய உணவுக்கும் ஓய்வுக்கும் தங்கிய இடம் ஜனாப். காஜாமியான் சாஹிப் அவர்களின் பங்களாவே ஆகும் (தற்பொழுது TVS டோல்கேட்டில் N.M.K. காலனியில் உள்ள S.S திருமண மஹால்) கல்லூரியின் அன்றைய பொருளாளர் ஜனாப் அப்துல் சமது சாஹிப் அவர்களின் விருந்தோம்பல் முயற்சி எல்லோராலும் பாராட்டப்பட்டதாக அமைந்தது.

கல்லூரியை தோற்றுவித்த பெருந்தகைகள் இறைவனடி சேர்ந்தபின், அதன் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான பொறுப்பினை ஏற்று திறம்பட செயல்பட்டவர்கள், தோற்றுனர்களின் முதல் மற்றும் இரண்டாம் தலைமுறையினர். அவ்வகையில் மேற்குறிப்பிட்ட ஜமால் முஹைதீன் சாஹெப் அவர்கள் கல்லூரியின் தொடக்க காலத்திலிருந்து ஏறத்தாழ 12 ஆண்டுகள் (1954–66) அதன் தலைவர் மற்றும் செயலாளர் ஆகிய இரட்டைப் பொருப்புகளையும் ஏற்று அதன் வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றியவர்கள் என்பது நிதர்சனமான உண்மையாகும். தவிரவும், கல்லூரியின் அன்றாட நிர்வாகம் இப்படித்தான் செயல்பட வேண்டும் என்கின்ற ஒரு நல்ல வழிமுறையினை வகுத்து தந்து அதன் படி செயல்பட்டு, தனக்கு பின்னால் வந்தவர்களையும் கடைபிடிக்கச் செய்தவர். அதாவது, கல்லூரியின் அன்றாட நிர்வாகம் முதல்வரை மையப்படுத்திதான் அமைய வேண்டும் என்பதில் மிகவும் கண்ணும் கருத்தாக இருந்தவர். கல்லூரியின் அட்மிஷன் காலத்தில் பரிந்துரைக்காக சென்னையில் இருந்த அவர் இல்லத்திற்கு யாராவது சென்றால், கல்லூரியில் அட்மிஷனுக்காக முதல்வர் இருக்கிறார், அவரைப் போய் பாருங்கள், இங்கே வராதீர்கள் என்று அனுப்பிவிடுவார். நான் முதல்வராக இருந்த காலத்தில் ஜனாப் காஜாமியான் இராவுத்தர் அவர்களின் மைந்தர் ஜனாப் N.M.K. அப்துல் காதர் சாஹெப் அவர்கள் இருந்த காலகட்டத்தில் அட்மிஷன் நேரத்தில் நடந்த ஒரு சம்பவம் பொருப்பில உள்ளவர்கள் மாணவர் அட்மிஷனில் கூட தலையிட மாட்டார்கள் என்பதை தெளிவாகக்காட்டியது.

ஒவ்வொரு நாளும் காலை 10 மணியளவில் ஜனாப் அப்துல் காதர் சாஹெப் அவர்கள் கல்லூரிக்கு வந்து முதல்வர் அறையில் லுஹர் நேரம் வரையில் அமர்ந்திருப்பார். கல்லூரியில் தன்னுடைய உறவினருக்குத் தேவையான முக்கியமான பாடப்பிரிவுக்கு செயலாளர் அட்மிஷன் வாங்கித்தருவார் என்ற நம்பிக்கையில் அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் முதல்வர் அறைக்கு வந்து இருக்கையில் அமர்ந்து Admission விஷயமாகப் பேச ஆரம்பித்தவுடன், காதர் சாஹெப் அவர்கள் சைகை மூலம் அவர் பேசுவதை நிறுத்தச் சொல்லி தன் ஆள்காட்டி விரலால் முதல்வரைக் காண்பித்து தனது இருக்கையிலிருந்து வெளியே சென்றுவிட்டார். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னால் நடை பெற்று என் நெஞ்சத்தில் பதிந்த இந்நிகழ்வு இன்றும் பசுமையாக உள்ளது. அவர்களைப் போலவே, பல்வேறு காலகட்டத்தில் பொருப்பேற்றிருந்த அவர்களுடைய மூத்த சகோதரர் ஆட்சிக்குழுவில் பொருப்பாளராக இருந்த ஜனாப் N.M.K. அப்துல் சமத் சாஹெப் அவர்கள் பொருளாளராக பொறுப்பேற்றிருந்த காலத்தில் நான் கல்லூரி மாணவன். கல்லூரியில் நடந்த அனைத்து துறைசார் கூட்டங்கள் உட்பட அனைத்து கூட்டங்களுக்கும் தவராமல் வருகை தந்து அவைகளின் நிறைவு வரை அமர்ந்திருப்பவர். பல்வேறு வழிகாட்டல்களை முதல்வருக்கு அளித்து கல்லூரியின் செயல்பாட்டிற்கு உற்ற துணையாக இருப்பவர் என்று கல்லூரி பேராசிரியர்கள் தங்களுக்குள் உரையாடியதை பல நேரங்களில் அறிந்திருக்கின்றேன்.

அப்துல் சமத் சாஹெப் மறைவுக்குப் பின் சமீபிய காலக்கட்டத்தில் அதே பொறுப்பினை ஏற்று செயல்பட்ட ஜனாப் கலீல் அஹமது சாஹெப் அவர்களும் தந்தையின் அடியொற்றி சிறப்பாகச் செயல்பட்டது யாவரும் அறிந்த ஒன்றே. 1951 முதல் 1965 வரை இரட்டைப் பொறுப்புகளை ஏற்று அழகிய முன்மாதிரி நிர்வாகியாக செயல்பட்ட ஜனாப் M.J.M. ஜமால் மொஹிதீன் சாஹெப் அவர்களுக்குப்பின் ஹாஜி ஜனாப் M.J. ஜமாலுதீன் சாஹெப் அவர்கள்

1965 முதல் 1973 வரை செயலாளர் மற்றும் தாளாளர் பொறுப்புகளை ஏற்று கல்லூரியை அழகிய முறையில் வழிநடத்திச் சென்ற பெருந்தகையாளராவர்.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட, நிறுவனர் ஜனாப் காஜாமியான் சாஹெப் அவர்களின் இரண்டாவது குமாரர் ஜனாப் N.M.K. அப்துல் காதர் அவர்கள் 1973–88 வரை செயலாளர் மற்றும் தாளாளர் பொறுப்புகளிலும் 1989–90–ல் ஆட்சிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றி முத்திரை பதித்த செம்மலாவார். எளிமையான தோற்றம், எளிமையான நடைமுறை, எல்லோரிடமும் இனிமையாக பழகுகின்ற மனப்பாங்கு ஆகியவை அனைவரையும் கவர்ந்த அன்னாரின் பண்புகளாகும்.

1973 முதல் 1988 வரை செயலர் மற்றும் தாளாளர் பொறுப்பேற்றிருந்த ஜனாப் அப்துல் காதர் சாஹெப் அவர்கள் 1989 முதல் 1990 வரை தலைமைப் பொருப்பேற்க அவ்வாண்டு வரை பொருளாளர் பொருப்பேற்றிருந்த ஹாஜி ஜனாப் M.J.M. அப்துல் கபூர் சாஹெப் அவர்கள் செயலாளர் மற்றும் தாளாளர் பொருப்பிற்கு ஜமால் முஹம்மது கல்லூரி சங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்குமுன், 1988–ன் பிற்பகுதி மற்றும் 1989–ன் முற்பகுதியான கால கட்டத்தில் ஹாஜி ஜனாப் Er. அப்துல்லாஹ் சாஹெப் தாளாளராக பொருப்பேற்று இருந்தார். கல்லூரியின் கட்டிட கட்டுமான பணிகள் நெடுங்காலமாக அவர்களின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையில்தான் நடைபெற்று வந்தன என்பதை இங்கே குறிப்பிடுவது அவசியமாகும்.

ஹாஜி ஜனாப் M.J.M. அப்துல் கபூர் சாஹெப் செயலாளர் மற்றும் தாளாளராக (1989–2011) இருந்த 23 ஆண்டுகாலம் கல்லூரியின் வரலாறு ஆரோக்கியமான திருப்புமுனை கண்ட காலம் என்றால் அது மிகையாகாது. அப்துல் கபூர் சாஹெப் அவர்கள் பொருப்பேற்ற 1989–ல் துவக்கம் கண்ட கல்லூரியின் புதிய சகாப்தம் அன்னாரின் வழிகாட்டல் மற்றும் அவர் அளித்திருந்த பயிற்சியினால் தொடர்ந்து வரும் இளைய தலைமுறை பொருப்பாளர்களால் மிடுக்கான வேகத்தில் தொடரப்பட்டு வருவது கண்கூடு.

ஹாஜி கபூர் சாஹெப் அவர்கள் பொறுப்பேற்று இருந்த 23 ஆண்டுகால கட்டத்தில் ஒன்பது ஆண்டுகள், அதாவது 1989–1998 வரை அவர்களின் வழிகாட்டலில் முதல்வராக பணியாற்றுகின்ற வாய்ப்பினை பெற்றிருந்தவன் என்ற முறையில், அவர்களின் எண்ண ஓட்டம், சொல்லாட்டம் கல்லூரியின் வளர்ச்சிக்காக அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் ஒவ்வொரு அசைவையும் நன்றாக அறிகின்ற வாய்ப்பினை பெற்றேன்.

அந்த ஒன்பதாண்டு காலத்தில் கல்லூரி கண்ட வளர்ச்சி எப்பொழுதுமில்லாதவாறு பல்வேறு வகைகளில் அமைந்திருந்தது என்பதில் எந்த விதமான மாற்று கருத்தும் இருக்க முடியாது. ஹாஜியாரின் தந்தையான ஜனாப் M.J. ஜமால் மொஹிதீன் அவர்கள் கிழக்காசிய நாடுகளுக்கு பயணம் செய்து நிதி திரட்டி கல்லூரியின் காஜாமியான் விடுதியை கட்டித்தந்தார்கள் என்றால், ஜனாப் கபூர் சாஹெப் அவர்கள் பொருப்பேற்ற இரண்டு வருடங்களிலேயே மேற்காசிய நாடுகளுக்கு பயணம் செய்து கல்லூரியின் செயல்பாடு, அது கட்டிக்காக்கும் விழுமங்கள், கல்லூரிக் கல்வி வணிகமாக்கப் பட்டிருந்த காலத்திலும் எந்தவிதமான Capitation Fee–ம் வாங்காமல் ஏழை எளிய மாணவர்களும் உயர்கல்வி பெறும் வாய்ப்பினை அளித்துக் கொண்டிருப்பது போன்ற உண்மைகளை உணர்த்தியதின் காரணமாக, ஜமால் முஹம்மது கல்லூரியை மேற்காசியாவில் வசிக்கின்ற கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் தங்களது கல்லூரியாக தத்தெடுத்துக்கொண்டுள்ளனர்.

மட்டுமல்லாமல், அக்கால கட்டத்தில் விலை ஏறிக் கொண்டிருந்த MBA, MCA, M.Sc Computer Science, PGDCA, PGDCH., M.Sc. Chemistry, B.Sc., Computer Science, BCA போன்ற முதுநிலை, மற்றும் இளநிலை கணிணி தொடர்பான பாடப்பிரிவுகளுக்காக மாலைநேரக் கல்லூரி ஆரம்பிப்பது, ஒவ்வொரு பாடப் பிரிவுக்கும் Additional Section ஆரம்பிப்பது போன்ற ஹாஜி கபூர் சாஹெப் மேற்கொண்ட முயற்சியினால் முஸ்லிம் மாணவர்கள் மட்டுமல்லாமல் சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட, நலிவடைந்த பிரிவினரும் மிகவும் பயனடைந்தனர் என்பது உண்மை. அவர்கள் இன்று IT Professionals மற்றும் Software Engineers என்ற வகையில், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, Ireland, துபாய், அபுதாபி, குவைத், சவுதி அரேபியா போன்ற மேற்காசிய நாடுகளிலும் பரவி உள்ளது கண் கூடு. கணிணி தொடர்புடைய முதுநிலை மற்றும் இளநிலை பாடப்பிரிவுகளில் இடம் கொடுக்கப்பட்டு மேற்கூறப்பட்ட நாடுகளில் நல்ல ஊதியத்தில் வேலை கிடைக்கப் பெற்ற மாணவர்களின் ஒட்டு மொத்த குடும்ப சூழ்நிலையும் நல்ல முறையில் மேம்பாடைந்தது மட்டுமல்லாமல் அவர்களின் பிச்சரங்களின் எதிர்கால கல்வி திட்டத்திற்கும் பேருதவியாக இருந்தது. இவ்வகையில், பெரும் எண்ணிக்கையாலான மாணவர்கள் பயன்பெற

வேண்டும் என்ற நோக்கில் மாலை நேரக்கல்லூரி, சுயநிதி பாடப்பிரிவுகள் போன்றவற்றை முதன்முதலில் ஆரம்பித்த பெருமை ஹாஜி அப்துல் கபூர் சாஹெப் அவர்களையே சேரும்.

கல்லூரியின் கட்டிடங்களைப் பொறுத்த வரை, ஹாஜியாரின் மேற்காசிய பயணத்தின் விளைவாக ஏராளமான கட்டிடங்கள் கல்லூரி மற்றும் விடுதி வளாகங்களை அலங்காரம் செய்யத் துவங்கின என்பது எல்லோரும் அறிந்த உண்மை. விலங்கியல் துறை இயங்கிக் கொண்டிருக்கும் தாவுத் பாஷா கட்டிடம், உசைனுதீன் ஹால் மற்றும் அதன்மேல் அமைந்திருக்கும் ஷானவாஸ் ஆய்வுக்கூடம், கல்லூரியின் நூலகத்திற்கு தெற்கிலும் வடக்கிலும் உள்ள கட்டிடங்கள். பேராசிரியர்கள் ஓய்வறைக்குமேல் அமைந்துள்ள தொழுகைக்கூடம், தற்பொழுது New Block - Dubai Block என அழைக்கப்படும் மாணவர் விடுதி கணினி ஆய்வுக்கூடம் மற்றும் வகுப்புகள் இயங்கிக் கொண்டிருக்கும் இப்ராஹீம் பிளாக், மின்னா நூர்தீன் பிளாக், VMT. மொய்தீன் சாஹெப் ராவுத்தர் பிளாக், விடுதியின் புருணை பஷீர் அகமது பிளாக், முத்தாய்ப்பாக சுமார் 200 பேர் மட்டுமே தொழக்கூடிய முறையில் இடவசதி பெற்றிருந்த கல்லூரியின் பள்ளிவாசலை ஒரே நேரத்தில் 1000–ற்கும் மேற்பட்டோர் தொழும் அளவில் தரை தளம் முதல் மற்றும் இரண்டாம் தளம் அமைத்து திருச்சி மாவட்டத்திலேயே பெரிய பள்ளிவாசலாக அமைத்தது ஹாஜி அப்துல் கபூர் சாஹெப் அவர்களின் முன்னோக்குடன் செயலாற்றும் திறனுக்கு நல்லதொரு உதாரணமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இறுதியாக, கீழே குறிப்பிட்டுள்ள தகவலும் கல்லூரியின் நிர்வாக வரலாற்றின் முக்கியமான சம்பவம் ஆகும். அது NMK அப்துல் காலிக் இருக்கும் இடத்தை வணிக நோக்கத்திற்காக சிலர் ஆக்கிரமிக்க வந்த தருணத்தில், அந்த இடத்தின் தலைவர் காலிக் அவர்களைக் கண்டவர்கள் எதுவும் பேசாமல் உடனே திரும்பிச் சென்றது அன்னார் இரும்புள்ளம் கொண்ட நிர்வாகி என்பதை எதிரிகளும் அறிந்திருந்ததை தெளிவாக காட்டியது.

* * * * *




# மலரும் நினைவுகள்



மேஜர். எம். அரவாண்டி
மாணவர் : 1954–56, பேராசிரியர் :1959–94
மேனாள் கணினி அறிவியல் துறைத்தலைவர்,
ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.

நான் ஜமால் முஹம்மது கல்லூரியில் இண்டர்மீடியட் என்ற வகுப்பில் சேர்ந்ததே ஒரு புதிய அனுபவம். புத்தனாம்பட்டி என்ற கிராமத்தில் உள்ள நேரு உயர்நிலைப்பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு திருச்சியில் படிக்க வந்தேன். கிராமத்துப் பள்ளி என்பதால் போக்குவரத்து வசதி இல்லாத அன்றைய நிலையில் எஸ்.எஸ்.எல்.சி., புத்தகம் பல நாட்கள் கழித்துத்தான் அங்கே வரும். அதை வாங்கிக் கொண்டு திருச்சியில் சேருவதற்காக வந்த பொழுது நேராக தூய வளனார் கல்லூரிக்குச் சென்றேன். இடம் தீர்ந்து விட்டது என்றார்கள். இன்று இந்திரா காந்தி கல்லூரி இருக்கும் இடத்தில் தேசியக் கல்லூரி இருந்தது. அங்கும் இடம் கிடைக்கவில்லை. ஒரு மரத்தடியில் நின்று கொண்டு பேசிக்கொண்டிருந்த போது அந்தப் பக்கமாக வந்த ஒருவர் சுப்பிரமணியபுரம் பகுதியில் ஒரு இஸ்லாமிய கல்லூரி துவங்கி இருக்காங்களே அங்கு இடம் கிடைக்கும் என்று சொன்னார்.

ஒரு பேருந்தில் ஏறி ஜமால் முஹம்மது கல்லூரிக்கு வந்து அன்றைய முதல்வர் ஜனாப். செய்யது முகமது அவர்களைப் பார்த்து எனது எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தைக் கொடுத்தேன். அவர் உடனடியாக வாங்கி அவர் மேஜை ட்ராவில் வைத்துக் கொண்டு கணிதம், இயற்பியல், வேதியியல் என்று சொல்லக்கூடிய முதல் Group-ல் சேர அனுமதி கொடுத்தார்கள். அன்று சேருவதற்கான பணம் என்னிடம் இல்லாத காரணத்தால் எனது எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தைக் கொடுங்கள் நான் பிறகு வருகின்றேன் என்று கேட்டேன். நீ எப்பொழுது வேண்டுமானாலும் வந்து பணம் கொடு என்று சொல்லி சான்றிதழைக் கொடுக்க மறுத்துவிட்டார். தங்க காசிம் என்னும் பெயரை உடைய ஒரு பியூன் வெளியில் நின்று கொண்டிருந்தார் (பியூன்) அவரிடம் சான்றிதழை வாங்கிக் கொடுக்குமாறு கேட்டேன். உன்னுடைய மதிப்பெண் என்னவென்று என்னைக் கேட்டார். அதை கேட்ட மாத்திரத்தில் இவ்வளவு மதிப்பெண் உள்ளவர் இந்த கல்லூரிக்கு யாரும் வரவில்லை, சான்றிதழைக் கொடுத்தால் நீங்கள் வேறு கல்லூரியில் சேர்ந்து விடுவீர்கள் என்ற உணர்வில்தான் முதல்வர் உங்கள் சான்றிதழை கொடுக்கவில்லை என்று சொன்னபிறகுதான் நான் மனம் மகிழ்ந்து சிறிது நாட்கள் கழித்து நமது கல்லூரியில் சேர்ந்தேன். இங்கு சேர்ந்தது இறையருள்தான் என்று சொல்லவேண்டும். இண்டர்மீடியட் வகுப்பை முடித்து, மேற்கொண்டு படிப்பதற்கான பாடப்பிரிவு இங்கு இல்லாத காரணத்தாலும் நான் கணித ஆசிரியராக வரவேண்டும் என்ற கனவிலும் இருந்த காரணத்தாலும் தூய வளனார் கல்லூரியில் B.A (Hons) என்ற கணித பாடத்தில் சேர்ந்தேன். சிறந்த முறையில் படித்து முடித்து 1959–ல் நம் கல்லூரி முதல்வரைச் சந்தித்த பொழுது உடனடியாக எனக்குப் பணிநியமனம் கொடுத்தார்கள்.

அன்றைய சம்பளமாக 150 ரூ –10 300 என்ற முறையில் ரூபாய் 62 டி.ஏ. சேர்த்து கொடுத்தார்கள். நான் ஜமாலில் படித்த போது எனக்கு மிகச்சிறந்த பேராசிரியர்கள் இருந்தார்கள். சான்றாக ஆங்கிலத்துறையில் பேராசிரியர்கள் தாமஸ், இலியாஸ் என் மனதைத் தொட்டவர்கள். தமிழுக்கு பேராசிரியர்கள் சிவகுருநாதன், அப்துல் கபூர், கோவிந்தசாமி தேவர் இயற்பியலுக்கு பேராசிரியர்கள் K.G. டோர்கல், தேவநாதன், விக்டர், இரசாயனத்துக்கு பேராசிரியர்கள் சர்மா, உஸ்மான் அலி, கிருஷ்ணமாச்சாரி கணிதத்திற்கு பேராசிரியர்கள் ஈ.சா., ரங்கநாதன் ஆகியோர் என்மனதில் நிறைந்தவர்கள்.

1959 ஜூன் 23–ம் தேதி ஜமாலில் கணிதத்துறையில் நியமிக்கப்பட்ட நாளில் இருந்து என்னுடைய தொழிலில் மனசாட்சிக்கு மாறாக என்றுமே நான் நடந்து கொண்டது இல்லை. இக்கல்லூரிதான் கடைசிநாள் வரை என்று தீர்மானித்தேன். 1986–ல் கணிப்பொறித்துறை துவங்கிய பொழுது அந்தத்துறையின் தலைவராக கூடுதல் பொறுப்பாக நிர்வாகம் என்னை நியமித்தது. அத்துறைத் தலைவராக வரவேண்டும் என்று பலர் போட்டியிட்ட நிலையில், நான் நினைத்துக்கூட பார்க்காத நிலையில் என்னிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்தார்கள் என்றால் நான் இறைவனுக்குத்தான் நன்றி செலுத்த வேண்டும். கணிதத்துறையின் (முழு) பணியோடு அத்துறையையும் கவனித்தேன். புதிய துறை என்பதோடு, பரந்த உள்ளம் கொண்ட ஹாஜி ஜாபருதீன் என்ற பெரிய மனிதருடைய கொடையில் முதல்வர் முனைவர் நைனார் முகம்மது

அவர்களின் தளராத முயற்சியால் துவங்கப்பட்ட இத்துறையை உலகறியச்செய்ய வேண்டும் என்று தளராது நானும் உழைத்தேன். இரண்டே ஆண்டுகளில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலேயே மிகச் சிறந்த துறை எனப் புகழும் வண்ணம் இது வளர்ந்தது. அவ்வளர்ச்சியால் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கணிப்பொறித் துறையில் பாடத்திட்டக்குழுத் தலைவராக என்னை அன்றைய துணைவேந்தர் முனைவர் முத்துக் குமரன் அவர்கள் நியமித்தார்கள். தமிழகமே போற்றும் அளவு துறை வளர்ந்தது. பல அறிஞர்கள், அறிவியல் மேதைகள், ஆய்வு வித்தகர்கள் இத்துறையுடன் தொடர்புக்கொள்ள நான் மேற்கொண்ட முயற்சிகள் வீண்போகவில்லை.

கணினித்துறைத் தலைவராக இருந்த காலத்தில் பாடத்தை ஒட்டிய, சிறப்புச் சொற்பொழிவாற்றும் பெரியவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பெங்களூர் இந்திய அறிவியல் தொழில்நுட்பக்கழகம் (I.I.Sc) ஆகிய இடங்களில் இருந்து ஞாயிற்றுக் கிழமைகள்தான் அவர்கள் வருவதற்கு வசதியாக இருக்கும் என்பதால் ஏற்பாடு செய்யப்படும். சொற்பொழிவு முடிந்ததும் வருகைப்பதிவு எடுக்கப்பட்டு பங்குபெறாதமாணவர்களைகடுமையாகசாடியிருக்கிறேன். துறையில் இருந்த சில பேராசிரியர்களின் வெறுப்பையும் சம்பாதித்ததும் உண்டு. எனக்கு அதில் பெருமை இல்லை. ஒழுங்கு என்பது எல்லோருக்கும் பொதுவானது என்ற கருத்தில் உறுதியாக இருந்தேன். அன்று என் மேல் கோபமாக இருந்த அவர்கள் இன்று என்னை நல்ல உள்ளத்தோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றால் புகழ் அனைத்தும் இறைவனுக்குத்தான்.

நான் எந்தப் பிரதிபலனையும் யாரிடத்தும் எப்போதும் எதிர்பார்த்தது இல்லை. B.Sc. பயிலும் மாணவர்களின் பெற்றோர்களை சுதந்திர தினவிழா அன்றும் குடியரசு தினவிழா அன்றும் துறைக்கு அழைத்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டு குறைகளைக் கலைய முயல்வது உண்டு. மிகச்சிறப்பாக ஆண்டாண்டு தோறும் அனைத்துக் கல்லூரிகளும் கலந்துக் கொள்ளும் கணினி விழா SWAP என்ற பெயரில் தொடங்கப்பட்டு அவ்விழா இன்றும்தொடர்ந்துநல்லமுறையில்நடைபெறுவதைஅறிந்து மகிழ்வடைகின்றேன். SWAP முதலில் துவங்கப்பட்ட போது அதன் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட முனைவர் ஆர்.சீனிவாசன் எனும் கணினி அறிஞர் இன்றும் நம் கல்லூரியுடன் தொடர்பு கொண்டிருக்கின்றார் என்பதோடு நம் துறை பேராசிரியர்களுக்கு முனைவர் பட்டம் பெறுவதற்கு துணை புரிந்து இருக்கிறார் என்று அறிந்து மட்டற்ற மகிழ்வு அடைகின்றேன். அவர் பெங்களூரில் ஒரு சிறந்த அறிவியல் மேதையாகப் பணிபுரிந்ததையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

வகுப்புகளுக்குத் தாமதமாக வரும் மாணவர் களையும் சாமியார்கள் போல் முடிவைத்திருந்த மாணவர்களையும், மாணவனாக மட்டும் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுருத்தி ஒழுங்கு படுத்தியதையும் எண்ணிப்பார்க்கின்றேன். சொல்வதைப்போல் நடந்து காண்பிக்க வேண்டும் என்பதை வேத வாக்காக எடுத்துக் கொண்டு செயல்பட்டிருக்கின்றேன். நான் என்னுடைய அனுபவத்தில் ஒரு நாள் கூட காலம் தாழ்த்தி வகுப்புகளுக்கோ கல்லூரிக்கோ சென்றதில்லை என்று கூறுவதில் பெருமைப்படுகின்றேன். துறையில் கூட்டிய கூட்டங்கள் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்க வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தேன்.

‘கூட்டம் துவங்கும் முன் முக்கியமாக யாரும் முதல்வரைப் பார்க்க வந்தார்கள் என்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை புரிந்தவரை முதல்வர் கூடவே அழைத்து வந்துவிடுவார்’ அல்லது அவரை சீக்கிரம் அனுப்பிவிட்டு சரியான நேரத்திற்கு வந்துவிடுவார். மாணவர்களுக்கு நாம் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதில் முனைப்போடு இருந்தேன். அதில் என்றுமே நான் சமரசம் செய்துகொண்டது இல்லை. முனைவர் நைனார் முகம்மது ஐயா அவர்களும், பேராசிரியர் அப்துல் சமது ஐயா அவர்களும் என்னுடைய ஒழுங்கு நடவடிக்கைகளை முழு மனதோடு ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நன்றியுடன் இங்கு குறிப்பிடுகின்றேன். 42 மாணவர்களைக் கொண்டு துவங்கப்பட்டத் துறையில் 3000–க்கும் அதிகமானோர் படிப்பதை அறிந்து என் உள்ளமெல்லாம் பூரிக்கின்றது. எனது எஸ்.எஸ்.எல்.சி. சான்றிதழ்படி 56–வயதிலே நான் ஓய்வு பெற்றேன். நம் கல்லூரியில் முதல்வர்களாக இருப்பவர்களுக்கு மட்டும் ஓராண்டு, ஈராண்டு நீட்டிப்பு வழங்கும் நிலை இருந்தது. வழக்கத்திற்கு மாறாக, ஒரு பேராசிரியருக்கு இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு வழங்கப்பட்டது. இச்சிறப்பு என்னைத் தவிர நம் கல்லூரியில் வேறு எந்தப் பேராசிரியருக்கும் கிடைக்காத பேறு என்பேன். இது எனக்கு இறைவன் அளித்த மிகப்பெரிய அங்கீகாரம். இதற்குக் காரணமாக இருந்த அன்றைய முதல்வர் பேராசிரியர் அப்துல் சமது அவரையும் நிர்வாகத்தையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

அன்றைய நாட்களில் கல்லூரி மாணவர் மன்றம் ஒவ்வொரு கல்லூரியிலும் இருந்தது. அந்த மன்றத்தை

ஒருங்கிணைக்கும் பொறுப்பை அன்றைய முதல்வர் பேராசிரியர் இ.பி.முகம்மது இஸ்மாயில் அவர்கள் என்னிடம் ஒப்படைத்தார்கள். அன்றைய மாணவர் தேர்தல் அரசியல் தேர்தலைப் போலவே நடைபெறும். தேர்தல் அதிகாரியாக நான்தான் செயல்பட்டேன். தேர்தலில் போட்டியிடும் மாணவர்கள் மெயின்கார்டு கேட்டில் இருந்து கல்லூரிவரை யானை மீதும் குதிரை மீதும் லாரிகள் மீதும் வந்த காட்சிகள் இன்றும் என்கண் எதிரே உள்ளன. தேர்தலில் வெற்றிபெறும் தலைவர், செயலர், துணைச் செயலர் ஆகியோரைக் கொண்டு மாணவர் மன்றம் அந்த ஆண்டிற்கு நிகழ்த்தப்படும். இவர்களை திருப்தியோடு செயல்படுத்த வைப்பது எளிதாக இல்லை. சிறுசிறு பிரச்சனைகளுக்குக் கூட கல்லூரியை மூட வேண்டும் என்று வெளியே நின்று விடுவார்கள். அவர்களை சமாதானப்படுத்தி கல்லூரியை சிறப்பாக நடைபெறவைப்பது அவ்வளவு எளிதாக இல்லை. தோளோடு தோள் நின்று மாணவர்களின் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக என்னுடன் கூடவே இருந்த அன்றைய விலங்கியல் துறைத்தலைவர் முனைவர் தங்கவேல் அவர்களும் இன்றைய முஸ்லிம் லீக் தலைவரும் அன்றைய வரலாற்றுத்துறைத் தலைவருமாக இருந்த கே.எம்.காதர் மொகையிதீன் அவர்களையும் நன்றியோடு நினைத்துப்பார்க்கின்றேன். 1985–ஆம் ஆண்டில் நம் கல்லூரி ஒரு வரலாற்றைப் படைத்தது, பேராசிரியர் நைனார் முகம்மது அவர்கள் நம் கல்லூரியின் முதல்வராக பணி ஏற்கின்றார். ஒல்லியான உருவம், மிக உரத்த சிந்தனை, தியாகமான வாழ்வினைக் கொண்ட உன்னதமான மாமனிதர் அவர்.

என்னுடைய செயல்களை வளாகத்திலே இருந்து அன்றாடம் கவனித்துக் கொண்டே இருந்த காரணத்தால் மாணவர் மன்றத்தை கலைத்துவிட வேண்டும் என்ற செயல்திட்டத்தை என்னிடம் கொடுத்தார். அப்பணியில் வெற்றி பெற்றாலும் கூச்சல், குழப்பம், கல்லெறிதலில் நானும் சிக்கினேன். ஆனால் இரும்புக் கரங்களோடும் கனிவான இதயங்களோடும் அதை முதல்வர் சமாளித்தார்.

மாணவர் மன்றத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த பெருமை முதல்வரையே சாரும். அதன் விளைவால் ஜாலி ஜமால் என்று பரவலாக பேசப்பட்டது முறிந்து ஜெயில் ஜமால் என்ற பெயர் நம் கல்லூரிக்குக் கிடைத்தது. அதன் விளைவால் தமிழகத்தில் உள்ள கல்லூரிகளில் மிக ஒழுக்கமான கல்லூரி என்ற முத்திரை நம் கல்லூரிக்குக் கிடைத்தது. பேராசிரியர் நைனார் முகம்மதுக்குப் பிறகு பதவியேற்ற முதல்வர்கள் எல்லாம் நிம்மதியாக இருக்க வழிவகுத்த பெருமை அவரையே சாரும். அவர் ஒரு தீர்க்கதரிசி நேர்மை, நியாயம், ஒழுங்கு என்பன மட்டுமே அவருடைய மந்திரங்கள்.

கல்லூரியின் முன்னாள் மாணவர் என்ற முறையில் அந்த அமைப்பின் பொதுச் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றி உள்ளேன். இந்ந அமைப்பிற்கு சில ஆண்டுகள் பேராசிரியர் நியமத்துல்லா அவர்கள் தலைவராகவும் இருந்தார்கள். அதன் பிறகு உருதுத் துறையின் தலைவராக இருந்த பேராசிரியர் ஹஸ்ரத் அவர்கள் தலைவராக இருந்தார். தற்பொழுது கணிதத்துறை இயங்கும் கட்டடம் கட்டுவதற்கு நிதிதிரட்ட பாரதரத்னா எம்.எஸ்.சுப்புலெச்சுமி அவர்களுடைய ஓர் இன்னிசை கச்சேரியை ஒரு பெரியவரின் உதவியால் தேவர் ஹாலில் ஏற்பாடு செய்யப்பட்டது. கச்சேரிக்கு மறுநாள் குமாரி ட.விஜயலெச்சுமியின் நடனம் நடைபெற்றது. எம்.எஸ்.எஸ். அவர்களின் இன்னிசைக் கச்சேரியின் இறுதியில் நன்றி கூறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுது நான் எனது உரையில், எங்கள் ஜமால் முஹம்மது கல்லூரிக்கு அதிகாரம் இருந்தால் அம்மையாருக்கு பாரதரத்னா விருதையே அளித்துச் சிறப்பித்திருப்போம் என்று கூறியபொழுது அவையில் எழுந்த கரவோசை இன்னும் என் காதுகளில் ஒளித்துக் கொண்டு இருக்கின்றது. அதே போல நம் கல்லூரியில் உள்ள அப்துல் கபூர் ஆடிட்டோரியம் கட்டுவதற்காக நிதித்திரட்ட நடிகர் திலகம் சிவாஜிகணேசனை அவரது அண்ணன் நமது முன்னாள் மாணவர் தளபதி சண்முகத்தின் உதவியால் வியட்நாம்வீடு நாடகம் போட ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நாடகம் நமது அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இந்த இரு நிகழ்ச்சிகளும் டிக்கெட் விற்பனை செய்ய நான் தெருத்தெருவாக அழைந்திருக்கிறேன். கடை கடையாக ஏறி இறங்கியிருக்கிறேன். இது போன்று எல்லா நிலைகளிலும் என் பங்கை மனதாரச் செய்தபெருமை எனக்கு உண்டு. இன்றும் உபயோகத்தில் இருக்கும் சைக்கிள் நிறுத்தும் இடம் என் சொந்த முயற்சியால் உருவானது என்று சொல்வதை விட ஆண்டவனின் கட்டளையாக ஏற்றுச் செய்து முடித்தேன்.

காஜாமியான் உணவு விடுதியின் விடுதிக் காப்பாளராக இருந்த மேஜர்.ஷா அவர்களுடன் இணைந்திருந்த காரணத்தால் விடுதியின் ஆண்டு விழாக்களை ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடத்த என் பங்கை அளித்துள்ளேன்.

ஓர் ஆண்டு விழாவிற்கு மேஜர்.ஷா அவர்களால் அழைக்கப்பட்டு ஆளுனர் ஷா அவர்கள் சிறப்பு

விருந்தினராக மேடையை அலங்கரித்த காட்சி எனக்குப் பசுமையாக இருக்கிறது. அதே போன்று நமது கல்லூரி ஆண்டு விழாக்களைச் செம்மையாக நடத்தும் பொறுப்பையும் முதல்வரின் ஆணைப்படி சிறப்பாக ஏற்பாடு செய்த பெருமையும் எனக்கு உண்டு. ஓர் ஆண்டு விழாவில் திருந்திய உள்ளம் என்ற நாடகத்தை நானே எழுதி இயக்கி வெற்றிபெறச் செய்த காரணத்தால் அகில இந்திய வானொலியில் பல நிகழ்ச்சியில் நான் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்நாடகத்தில் கணக்குப் பிள்ளையாக நடித்த முனைவர் சுந்தரம் என்ற பேராசிரியர் பொள்ளாச்சியில் உள்ள என்.ஜி.எம். கல்லூரியில் முதல்வராக இருந்து ஓய்வு பெற்று என்னை இன்றும் வந்து பார்த்துச் செல்வதை பெருமையாக நினைக்கின்றேன்.

தேசிய மாணவர் படையில் நான் செய்த சாதனைகள் மகத்தானது. அவை அனைத்துக்கும் காரணம் இறைவன்தான் என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை. என்.சி.சி.–ல் இருபத்தி இரண்டு ஆண்டுகள் பணியாற்றி உள்ளேன். ஆண்டாண்டு தோறும் டெல்லியில் நடைபெறும் குடியரசு தினவிழாவில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த சிறப்புப் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பல போட்டிகள் நடைபெறும். போட்டிகளில் முதலிடம் பெறக் கூடிய அணிக்கு பிரதம மந்திரியினுடைய கொடி கொடுக்கப்படும். அந்த அணியின் தலைமை பொறுப்பேற்கும் தலைவராக 1980–ஆம் ஆண்டு தமிழ்நாடு, பாண்டிச்சேரி என்.சி.சி. இயக்குநர் என்னை நியமித்தார்கள். திருச்சி குரூப் என்.சி.சி. என்பது பல மாவட்டங்களை உள்ளடக்கியது ஆகும். இதுவரை திருச்சி குரூப்பில் இருந்து டெல்லிக்கு அணித்தலைவராக சென்றவர்கள் இருவர் மட்டுமே ஒருவர் மேஜர்.ஷா அவர்கள், இரண்டாவது நான்.

இருவருமே ஜமால் முஹம்மது கல்லூரியைச் சேர்ந்தவர் என்பது பெருமைக்குரிய செய்தி. நான் தலைமை ஏற்றுச் சென்ற அணி டெல்லியில் நடந்த போட்டிகளில் வெற்றிமேல் வெற்றி பெற்று எல்லா மாநிலங்களையும் பின்னுக்குத் தள்ளியது. எங்கள் அணிக்கு அன்றைய இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையாரிடம் இருந்து கொடியைப்பெற்ற பெருமை ஜமாலுக்கு உரியது. திருச்சி குரூப் என்.சி.சி–யில் அந்தப் பெருமையைப் பெற்ற ஒரே அதிகாரி நான் மட்டும் தான் என்பதை அடக்கத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெற்றிபெற்றதன் காரணத்தால் அணித்தலைவர் என்ற முறையில் பிரதம மந்திரி இந்திராகாந்தி அம்மையார் வீட்டில் அவருடன் காலை சிற்றுண்டி சாப்பிடும் பேறு கிடைத்தது.

ஒரு ஜமாலியனுக்கு கிடைத்த மாபெரும் பெருமை இது, என் அணியுடன் சென்னை திரும்பியதும் அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அன்றைய ஆளுநர் திரு. பட்வாரி ஆகியவர்களின் பாராட்டுக்களை நேரில் பெற்றேன். அதே போன்று ஓர் அணியை தலைமை ஏற்று காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகருக்குச் சென்று மலையேறும் பயிற்சியில் கொடிநாட்டினேன். நான் பணியாற்றிய 2(TN) Armd Sqr N.C.C–யின் இராணுவ அதிகாரிகள் விடுப்பில் செல்லும் போதெல்லாம் அந்த இடத்தை நிரப்ப என்னை நியமித்த பெருமையினை எண்ணிப்பார்கின்றேன். இந்தச் சிறப்பு என் ஒருவனுக்குத் தான் கிடைத்தது என்பது நம் கல்லூரிக்கும் பெருமை அல்லவா!.

என்.சி.சி.–யில் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற பிறகு எனக்கு ஒரு விருது கிடைத்தது. இந்தியாவில் மிகச்சிறந்த என்.சி.சி. அதிகாரிகள் என்று சிலரை தேர்வு செய்து அவர்களுக்கு நிரந்தர மேஜர் என்ற விருதை இந்திய குடியரசுத் தலைவர் வழங்குவது வழக்கம். தமிழ்நாடு, பாண்டிச்சேரி என்.சி.சி.–க்கு அந்த ஆண்டு விருதைப் பெற்ற ஒரே அதிகாரி நான் என்பதை சொல்வதில் பெருமிதம் அடைகிறேன். துணைவேந்தர் திரு. மணிசுந்தரம் அவர்களுக்கு கர்னல் (Col.) விருது கொடுக்கும் விழா தரணிகாணாத வகையில் நடத்தப்பட்டது என்பதை நாளேடுகள் முழங்கின. அப்பொழுது Group Commander–ஆக இருந்த என் வகுப்புத் தோழர் ஜமாலியன் Col. David என்பவர் விழாப் பொறுப்புகளை எல்லாம் என்னிடம் கொடுத்து அனைவரும் வியக்கும் வண்ணம் ஏற்பாடு செய்ததை மறக்க முடியாது.

N.C.C.–யில் ஏற்பட்ட ஒரு புதிய வரலாறு பலருக்குத் தெரிய வாய்ப்பில்லை. அதற்காக இதனை எழுதுகின்றேன். 1967–ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சி முடிவுற்று தி.மு.க. ஆட்சி பேரறிஞர் சி.என்.அண்ணாதுரை அவர்களின் தலைமையில் கோட்டையைப் பிடித்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒரு திருப்பு முனையாக ஏற்பட்டது. N.C.C.–யின் கட்டளைச் சொற்கள் அனைத்தும் இந்தியில் தான் இருந்தன. சான்றாக சாவ்தான் என்ற இந்தி கட்டளை நேராக நில் என்ற அட்டென்சனுக்கு உபயோகிக்கப்பட்;டது. அறிஞர் அண்ணா எதிர்த்து போராடிய காரணத்தால் சுமார் பதினெட்டு மாதங்கள் N.C.C.–யின் பயிற்சிகள் தமிழகமெங்கும் முடக்கப்பட்டன. அன்றைய பிரதம மந்திரி இந்திராகாந்தி அம்மையாரும், அறிஞர் அண்ணாவும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை ஆங்கிலத்தில் மட்டுமே கட்டளைகள்


SM
Wedding Decorator
Wedding Decoration
Birthday Party
Event Management
Photography & Videography
Light & Sounds | DJ
13, Kaveri Nagar, Subramaniyapuram, Trichy - 620 020.
(T) 0431 - 2333969 (M) +91 97868 00667


திருமண மற்றும் வீட்டு விஷேசங்களுக்கு தேவையான
மளிகை பொருட்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.
சம்சுதீன் மளிகை
காந்தி மார்க்கெட், திருச்சி
Proprietor - R.சதர்
99941 41311
தங்களது வீட்டின் அனைத்து விஷேசங்களுக்கும் பிரியாணி வகைகள்,
சிக்கன், மட்டன் வகைகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
R.M.S கேட்டரிங்
பீமநகர், திருச்சி


DEQUE Press
Quality Offset Printers & Binders
Since 1979
Conference Brochure | Abstract Book | Book Wrapper |
Certificate | Newsletter | Pamphlet | Catalogue | Notice
Souvenir | CD Sticker | Booklet |
Letter Head | Envelope
2, Chennai Bye-Pass Road, Khaja Nagar, Trichy - 20.
Call : 83000 58877 | 83000 58844




E - WASTE - Certified by Tamilnadu Pollution Control Board

**CONTACT**
S.F. No. 165, Porur Village, Ambattur Taluk,
Thiruvallur District. Chennai
blazon.in | +91 98433 39000

**HAND PHONE**
+91 94440 36557, +91 90030 77866
+91 94444 05910
www.ewastetritech.com

V P H
*Vaishale Prawn Hatchery*
The Smart Farmer's Choice



S S H
*Sudhith Shrimp Hatchery*
The Smart Farmer's Choice

Loction : ECR 106 & 107, Perunthuravu, Seekankuppam Post, Cheyyur Taluk, Kanchipuram Dist-603305.
E-mail: vaishaleaqua@yahoo.com Cantact : Mr. P. SATHEESH, Admin Manager - 9751882468

V A F
*Vaishali Aqua Farms*
Shrimply The Best

Branches: NAGAPATTINAM, RAMANATHPURAM,
THIRUVARUR, KANCHIPURAM, MAHARASHTRA
E-mail: vaishleaqua@yahoo.com
Contact: Mr. V. DHANRAJ, Managing Director - 9444023799



V A L
*Vaishali Aquaa Lab*
Microbiology & PCR Testings

Loction : # 103, South Thoppu Street, Thondi, Ramanathapuram Dist-623409.
E-mail: vaishaleaqua@yahoo.com
Cantact: Mr. A. VIJAYAKUMAR, Technician - 8754892662





For Trade Enquiry : +91 9940 333 111
10 over a Decade
ST COURIER®
The People's Choice
AN ISO 9001:2015 CERTIFIED COMPANY
SAFE and PROMPT DELIVERY
10th anniversary
ST COURIER
A Decade of Success
ST COURIER Pvt.Ltd.
#199, Hariyan Street,
C.Pallavaram, Chennai - 43.
044 -22 666 666.
www.stcourier.com , info@stcourier.com




D. RENGANATHAN
NATHAN
STILLS & VIDEOS
Jamal Mohamed College,
New Complex, Trichy - 20. Mob : 98424 12339




Sri Abirami
INDUSTRIES
E. MOHAN
94433 36992
73970 56992
Mfrs. of Aseptic Hospital,
House, Office, School & College
Furniture and Specialist
in College & Hospital Furniture,
Truss & Grill Works
No.5, VIP Anna Nagar,
Kela Kondaiyampettai,
Chennai Bye-Pass Road, T.V.Kovil,
(Near SMI Force), Trichy-5.
E-mail : abiramiindust06@gmail.com
AR
INDUSTRIES
94433 36992 | 73970 56992
Mfrs. of Aseptic Hospital, House, Office,
School & College Furniture and Specialist
in College & Hospital Furniture,
Truss & Grill Works
Door No. 5/451, Madurai Road,
Near Manikandam Union Office,
Manikandam P.o., Trichy Dt. - 620 012.
E-mail : abiramiindust06@gmail.com

# JAMAL MOHAMED COLLEGE

Since 1951

(AUTONOMOUS)

College with Potential for Excellence

Re-Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC

(Affiliated to Bharathidasan University)

TIRUCHIRAPPALLI – 620 020

Phone: 0431-2331135, 2331235 Email: principaljmc@ymail.com



Janab. N.M. Khajamian Rowther
FOUNDER






Hajee. M. Jamal Mohamed Sahib
FOUNDER

## COURSES OFFERED

## UG COURSES

| AIDED (MEN) | SELF FINANCE (MEN) | SELF FINANCE (WOMEN) |
|---|---|---|
| • B.A. Arabic<br>• B.A. Economics<br>• B.A. English<br>• B.A. History<br>• B.Com. (2 Sections)<br>• B.Sc. Botany<br>• B.Sc. Chemistry (2 Sections)<br>• B.Sc. Computer Science<br>• B.Sc. Mathematics<br>• B.Sc. Physics<br>• B.Sc. Zoology | • B.A. English<br>• B.Com. (4 Sections)<br>• B.B.A. (4 Sections)<br>• B.C.A. (5 Sections)<br>• B.Sc. Computer Science (2 Sections)<br>• B.Sc. Hotel Mgt & Catering Science (2 Sections)<br>• B.Sc. Information Technology<br>• B.Sc. Visual Communication<br>• B.Litt. Tamil | • B.A. Arabic* • B.A. English (2 Sections)<br>• B.B.A. • B.Com. (4 Sections)<br>• B.Sc. Biotechnology<br>• B.Sc. Fashion Tech. & Costume Designing<br>• B.Sc. Nutrition & Dietetics<br>• B.Sc. Computer Science (2 Sections)<br>• B.Sc. Mathematics (3 Sections)<br>• B.C.A. (3 Sections) • B.Sc. Chemistry<br>• B.Sc. Information Technology<br>• B.Sc. Physics (2 Sections) • B.Sc. Zoology*<br>• B.Sc. Microbiology • B.Litt. Tamil |

## PG COURSES

| AIDED (MEN) | SELF FINANCE (MEN) | SELF FINANCE (WOMEN) |
|---|---|---|
| • M.A. Arabic<br>• M.A. Economics<br>• M.A. English<br>• M.A. Tamil • M.Com.<br>• M.Sc. Botany<br>• M.Sc. Chemistry<br>• M.Sc. Mathematics<br>• M.Sc. Physics<br>• M.Sc. Zoology<br>• MCA (Approved by AICTE) | • M.A. History • M.A. English<br>• M.Sc. Chemistry<br>• M.Sc. Computer Science<br>• M.Sc. Information Technology<br>• M.Sc. Biotechnology<br>• M.Sc. Microbiology<br>• M.Sc. Physics • M.Sc. Zoology<br>• M.Sc. Mathematics<br>• MCA (Approved by AICTE)<br>• MBA (Approved by AICTE)<br>• M.Com. and M.S.W. | • M.A. Arabic • M.A. English<br>• M.Sc. Mathematics • M.Sc. Physics<br>• M.Sc. Microbiology • M.Sc. Biotechnology<br>• M.Sc. Chemistry • M.Sc. Computer Science<br>• M.Sc. Information Technology<br>• M.Sc. Fashion Tech. & Costume Designing<br>• M.Sc. Nutrition & Dietetics<br>• MCA (Approved by AICTE)<br>• MBA (Approved by AICTE )<br>• M.Com. and M.S.W. |

| | |
|---|---|
| RESEARCH-AIDED PROGRAMMES | M.Phil. English, Zoology |
| RESEARCH – SELF FINANCE PROGRAMMES (for MEN & WOMEN) | M.Phil. & Ph.D. Arabic, Biotechnology, Botany, Chemistry, Commerce, Computer Science, Economics, English, History, Mathematics, Management Studies, Microbiology, Physics, Tamil & Zoology M.Phil. Nutrition & Dietetics, Social Work* |
| PG Diploma Programmes | P.G.D.C.A., P.G.D.C.H. & P.G.D.W.P.M.,<br>P.G. Diploma in Islamic Banking & Financial Management, Fermentation Technology, Bioinformatics and Biodiversity Informatics* |
| Certificate & Diploma Programmes | • Certificate in Arabic, Diploma in Arabic, Advanced Dip. in Comp. Applications with Arabic<br>• Certificate in Accounting Technician by CMA Institute, CMA Foundation, • Tally Accounting Package & Type Writing<br>• Certificate in Functional Arabic, Diploma in Functional Arabic, Diploma in Urdu,<br>• Diploma in Computer Applications and Business Accounting and Multilingual DTP (CABA-MDTP) – Cert. will be issued by Ministry of HRD, Govt. of India.<br>• Diploma in Acupuncture • Certificate & Diploma in Human Psychology |



Dr. S. ISMAIL MOHIDEEN
Principal

COST OF APPLICATION FORM

| COURSE | In Person / Download | By Post |
|---|---|---|
| AIDED UG | Rs. 50/- | Rs. 80/- |
| AIDED PG | Rs. 60/- | Rs. 90/- |
| UNAIDED UG | Rs. 100/- | Rs. 130/- |
| UNAIDED PG | Rs. 120/- | Rs. 150/- |
| M.B.A | Rs. 500/- | Rs. 550/- |

For further details visit www.jmc.edu



Dr. A.K.KHAJA NAZEEMUDEEN
Secretary & Correspondent

இருக்க வேண்டும். நம் மாணவர்கள் அடுத்த மாநிலத்திற்கு பயிற்சிக்கு சென்றால் அங்கே இந்தி இருக்கலாம் என்பதை ஒப்புக் கொண்டு N.C.C. பயிற்சிகள் மீண்டும் ஆங்கிலக் கட்டளைகளைக் கொண்டு துவங்கின.

ஆனால் அவ்வளவு முயற்சிகளும் நடைமுறை சாத்தியம் இல்லாமல் இன்றும் இந்தியில்தான் கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன என்பதை வரலாற்று நிகழ்ச்சியாகக் குறிப்பிடவிரும்புகின்றேன். அதே காரணத்தால் தான் ஆகாஷ்சுவானி என்று சொல்வதற்கு பதிலாக ஆல்இன்டியா ரேடியோ என்று அகில இந்திய வானொலியில் பயன்படுத்துவதும் இதனால்தான். புதுடெல்லியிலிருந்து செய்தி வாசிக்கும் பொழுது ஆகாஷ்சுவானி என்று சொல்வதும் சென்னை மற்றும் திருச்சியிலிருந்து செய்தி வாசிக்கும் பொழுது ஆல்இண்டியா ரேடியோ என்று சொல்வதும் அன்று ஏற்பட்ட வரலாறு ஆகும். இது பற்றி தெரியாதவர்களுக்காக இதை எழுதியிருக்கின்றேன்.

அல்ஹாஜ் ஜனாப் M.J.முகம்மது சையத், பேராசிரியர் E.W.P.தாமஸ், பேராசிரியர் E.P.முகம்மது இஸ்மாயில், முனைவர் சி.நைனார் முகம்மது, பேராசிரியர் N.அப்துல் சமது ஆகிய ஐந்து முதல்வர்களிடம் பணியாற்றி இருக்கிறேன். என்னை எல்லோரும் மிக அன்புடனும் மரியாதையுடனும்தான் நடத்தி இருக்கின்றார்கள். பேராசிரியர் தாமஸ் அவர்களுடைய மனைவி திருமதி. ஹில்டாதாமஸ் அவர்கள்தான் காஜாமியான் மேல்நிலைப் பள்ளியை முதல் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று அப்பள்ளியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டதை நான் அறிவேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினராக இருந்த நமது முதல் முதல்வர் சையது அவர்கள் புத்தனாம்பட்டி நேரு நினைவு கல்லூரியை நிறுவ, பல்கலைக்கழகத்திற்கு அவர் அனுப்பிய பரிந்துரைதான் வேதவாக்காக இருந்ததை நான் எண்ணிப்பார்க்கிறேன். அவரது தலைமையில் தான் 29.6.1967 அன்று அன்றைய தமிழக முதல்வர் பேரறிஞர் சி.என்.அண்ணாதுரை அவர்களால் அக்கல்லூரி திறந்து வைக்கப்பட்டது என்பதை இங்கே குறிப்பிடுவதில் பெருமை அடைகின்றேன். அவரது குடும்பத்தினர் என்மீது அளவில்லாத பாசத்தோடு இருந்ததை நன்றியோடு நினைத்தும் பார்க்கின்றேன். டாக்டர் A.L.முதலியார், டாக்டர் ராதாகிருஷ்ணன், சி.பி.ராமசாமி ஐயர், டாக்டர் ஜாகீர் உசைன் போன்ற பல மேதைகள் நம் கல்லூரிக்கு வருகை புரிந்ததற்கான காரணம் முதல் தாளாளர் ஜமால் மொய்தீன் மற்றும் ஜனாப் சையது அவர்களும்தான். இந்த மேதைகளுடைய பேச்சை எல்லாம் நான் நேரிலேயே கேட்பதற்குக் காரணமாக இருந்த 1,2,3,4 என்ற வகுப்பறைகள் திறக்கப்பட்டு இருந்த காட்சியை நான் மறக்க முடியாது. அதே போன்று மற்ற முதல்வர்கள் எல்லாரும் என்னிடம் அன்பு காட்டியதை நான் நினைத்துப் பார்க்கின்றேன். பேராசிரியர் தாமஸ் அவர்கள் ஒழுங்குக்கு பெயர் பெற்றவர். உள்ளத்தால் உயர்ந்த உன்னதமானவர். அவர் சூட் அணிந்து கொண்டு இறுதிநாள் வரை சைக்கிளில் மட்டும்தான் வந்து போவது ஓர் அருமையானக் காட்சி. பேராசிரியர் இஸ்மாயில் அவர்கள் குழந்தை உள்ளம் படைத்தவர். மாணவர்கள் கல்லூரிக்கு வராது வெளியில் நிற்கும் பொழுது அவர்களை உள்ளே எப்படிக் கொண்டு வருவது என்பதில் மிகுந்த அக்கரை எடுத்துக் கொண்டவர். யாரிடமும் கடிந்து பேசாதவர். உள்ளத்தில் கள்ளம் கபடம் அற்றவர். அழகான தோற்றம் கொண்டவர். பேராசிரியர் சமது அவர்கள் வசதி இல்லாத மாணவர்களுக்கு ஓடோடி வந்து பாகுபாடு இல்லாமல் உதவிக்கரம் நீட்டியவர். அவர் ஏற்றிருந்த எல்லா பணிகளையும் இறைப்பணியாக எளிமையாகவும் திறமையாகவும் செய்த முதல்வர்.

பேராசிரியர் அப்துல் சமதுக்குப் பிறகு பொறுப்பேற்ற முதல்வர்களில் சிலர் என்னுடைய அருமை மாணவர்களாக இருந்திருக்கின்றார்கள். அவர்களுடைய செயல்பாடுகளைப்பற்றி நான் அறிந்திராத காரணத்தால் அவர்களைப் பற்றிக் கூறுவது நாகரிகமாக இருக்காது என்றே எண்ணுகின்றேன். முதல்வர்கள் மட்டுமல்ல 1954–ஆம் ஆண்டு மாணவர் பருவம், 1959 முதல் ஆசிரியராகத் துவங்கி அன்றிலிருந்து நான் ஓய்வுபெறும் வரை கல்லூரி நிர்வாகத்தினர் என்னை மிக மரியாதையோடு நடத்தியிருக்கிறார்கள் என்னைப்பற்றி யாராகினும் நிர்வாகத்திடம் தவறாகக் கூறினால், மேஜர் தவறு செய்ய மாட்டார். அவரைப் பற்றி இனிமேல் பேசவேண்டாம் என்று அன்று செயலாளராக இருந்த ஹாஜி அப்துல் காதர் அவர்களே கூறியதாக நான் கேள்விப் பட்டபொழுது இறைவா எனக்கு எந்த அற்பமான புத்தியையும் கொடுக்காது. அர்ப்பணிப்பை மட்டும் கொடு என வேண்டினேன்.

பணி ஓய்வு பெற்று இத்தனை ஆண்டுகள் உருண்டோடியும் என்னிடம் படித்த அன்றைய மாணவர்கள் வெளிநாடுகளில் இருந்தும், வெளியூர்களிலிருந்தும் என்னைப் பார்க்க இன்றும் வருகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் ஜமால் முகம்மது கல்லூரி என்பதை நான் என்றுமே மறந்தது இல்லை.

கல்லூரியை நிறுவிய ஜனாப் காஜாமியான் ராவுத்தர் அவர்களையும், ஜனாப் ஜமால் முகம்மது அவர்களையும் அறிய எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் அதன் பிறகு கல்லூரியினுடைய நிர்வாகத்தினர் அத்தனை பேர்களையும் நன்றாகவே அறிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இன்றைய கல்லூரியின் செயலர் ஹாஜி. N.M.அப்துல் காதர் அவர்களுடைய மகனார் டாக்டர்.காஜா நஜிமுதீன் அவர்களும் அவர்களுடைய குமாரர்களும் என்னிடம் காட்டும் அன்புக்கும் மரியாதைக்கும் நான் என்றென்றும் நன்றி உடையவனாக இருப்பேன்.

ஜமால் முஹம்மது கல்லூரி என்ற ஒரு மாபெரும் ஸ்தாபனம் இல்லாமல் போயிருந்தால் என்போன்று கிராமத்து இளைஞர்கள் அன்று படித்திருக்க வாய்ப்பு இல்லை. மேலும் நாமக்கல், சேலம் திருச்செங்கோடு போன்ற பகுதிகளில் கல்லூரிகளே அதிகமாக இல்லாத ஒரு சூழ்நிலையில் அப்பகுதி மாணவர்கள் எல்லாம் நம் கல்லூரி தான் படிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தது. இந்த ஸ்தாபனத்தை நிறுவிய மேதைகள் பேருக்காகவும், புகழுக்காகவும் நிறுவவில்லை. அர்ப்பணிப்பு உணர்வோடு இந்த இறைப்பணியை செய்து இருக்கின்றார்கள். எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பதில் பெருமை இல்லை, எப்படி வாழ்ந்தோம் என்பதில்தான் பெருமை இருக்கிறது. மனிதன் இறந்து போகலாம் ஆனால் அழிந்துபோகக் கூடாது என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்த காரணத்தால் இவ்வளவு பெரிய அரும்பணியைச் செய்து இருக்கிறார்கள். அவர்கள் கால்களைத் தொட்டு நான் வணங்குகின்றேன். சமுதாயத்திற்கு உன்னதமான தத்துவங்களை எல்லாம் செயல் மூலம் அவர்கள் உணர்த்தி இருக்கிறார்கள். அவர்களுடைய சந்ததியர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இறைவன் என்முன்னால் தோன்றி உனக்கு ஒரு வரம் கொடுக்கின்றேன் உன் வயதைக்குறைத்து இந்தியாவில் உள்ள ஒரு கல்லூரிக்கு உன்னைப் பேராசிரியராக நியமிக்க விரும்புகிறேன். நீ விரும்பும் கல்லூரியைச் சொல் அங்கே உனக்கு வாய்ப்புத் தருகின்றேன் என்று கூறினால் நான், ஆண்டவரே என்னை மனிதனாக்கிய, என்னை மக்களிடம் அடையாளம் காட்டிய, என் உள்ளத்தில் என்றும் குடிகொண்டுள்ள என்னை வாழவைத்த ஜமால் முஹம்மது கல்லூரியிலேயே எனக்குப் பணிகொடுங்கள் என்று நான் சொல்லுவேன்.

வாழ்க ஜமால்...

---



2000 PRIZES பரிசுகள் №. 109586 Value Rs. பொருமானம் ரூ.50,000

Trichinopoly District War Committee திருச்சினாப்பள்ளி ஜில்லா யுத்த கமிட்டி

GRAND RAFFLE மகத்தான அதிர்ஷ்ட சீட்டு

IN AID OF
THE GOVERNOR'S WAR FUND
கவர்னர்பிரான் யுத்தநிதி உதவிக்காக
To be drawn on or after April 25th 1941

8 AS

ALL NEW ARTICLES

St. Joseph's I. S. Press, Trichy.—1940

Name (பெயர்)
Address (விலாசம்)

Prizes include Four New Motor Cars, Gold Jewels, Radio Sets, Bulls, Typewriters, Silver vessels, Sewing Machines, Defence Bonds, Savings Certificates, Gramophones, Cycles, Clocks, Watches, Electric Fans, Musical Instruments, Tennis Rackets, Brass Vessels, Silk and Cotton Clothing and other valuable and costly articles.

(ஒப்பம்) ஜெ. ஆர். பேட்,

(Sd.) J. R. BETT,
*Collector & President, Trichinopoly District War Committee.*

*N. B.*-Please keep this Ticket very carefully.

**RULES**

1. The Raffle Sub Committee of the Dt. War Committee consists of the following:—Messrs. Bett, Collector; Coelho, Judge; Singaravelu Mudaliar, T. D. C.; Zamindar, Kadavur; Rev. J. D'Souza, S.J., Principal, St. J. College; Hasan, Sub Collector; Selvanayagam, Narasimhachari, Karunakara Menon, R. D. Os.; R. Howe, Supt., Central Jail; Raghunathan, D. E. O; Martin, D.S.P.; N. M. K. M. Ro[illegible] and Mrs. Bett.
2. This Sub Committee will settle all questions connected with Raffle, and its decisions will be final and legally binding.
3. The purchase of a ticket implies acceptance of these rules.
4. Prizes will be in kind as described on this ticket and not in cash.
5. The List of Prize winners will be published at the Collector's Office and at all Thasildar's and Dy. Thasildar's Offices in the District and in the Local Press. Winners of prizes will also be individually notified by post, as far as possible.
6. Prize winners must produce their tickets themselves or by duly authorised agent. No prize will be given unless the ticket is produced.
7. Prizes which remain unclaimed 30 days after the results are notified at the Collector's Office, will be sold and the proceeds credited to the War Fund.
8. The Raffle will be drawn on April 25th, 1941, or on such later date as may be fixed by the Raffle Sub Committee, at a place and time which will be notified in due course, and advertised in the Local Press, and at all Taluk Offices and Police Stations.

(Signed) J. R. BETT, *President.*

விதிகள்

(ஒப்பம்) ஜெ. ஆர். பேட், தலைவர்.

கான் சாஹிப் ந.மு. காஜாமியான் இராவுத்தர் அவர்களை இரண்டாவது உலகப்போர் நிதிக் கமிட்டி உறுப்பினராக அரசு நியமித்திருந்தது. அதில் லாட்டரி சீட்டு மூலம் நிதி திரட்டும் குழு உறுப்பினராக இருந்தமைக்கான சான்று மற்றும் அவர் தம் சொந்த பணத்தில் ரூ.50,000/– வழங்கியுள்ளமை இதன் மூலம் அறியப்படுகிறது.

# ஜமால் ஓர் அழகிய குடும்பம்

Dr. M.M. ஷாகுல் ஹமீது
மேனாள் துணை முதல்வர், ஜமால் முகம்மது கல்லூரி
தாளாளர், அய்மான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி–21.



Not a single blade of grass would growing this soil - 'புற்பூண்டுகூட முளைக்க முடியாத மலட்டு நிலம்' என்ற அமில வார்த்தைகள் ஒரு புறம்.

This building will become a TajMahal in future - 'இக்கட்டிடம் ஒரு தாஜ்மஹாலாக உருவெடுக்கும்' என்ற அமுத வார்த்தைகள் மறுபுறம்.

இவற்றுக்கு நடுவே 'கல்வி வானில் ஒரு எழு ஞாயிறாக' உதயமானதுதான் இந்தத் தங்க மாளிகை ஜமால் முகம்மது கல்லூரி – 1951. இதை வடிவமைத்து, உரமிட்டு, நீர் ஊற்றி உருவாக்கியவர்கள் ஜமால் முஹம்மது அவர்களும், காஜா மியான் இராவுத்தர் அவர்களும் ஆவார்கள். இவர்கள் தொலைநோக்குச் சிந்தனையும், சமுதாய அக்கறையும் கொண்ட பெரும் வணிக வள்ளல் பெருந்தகைகள். இறைவனின் அளவிலா அருளும், கரையிலா கருணையும் அவர்கள் கனவை நனவாக்கியது.

காலம் யாருக்காவும் காத்திருப்பதில்லை. அந்தப் பெருமக்கள் மறைந்தாலும் காலத்தோடு சேர்ந்து துளிர்விட்டு, மரமாகி, பூத்து, காய்த்து குலுங்க ஆரம்பித்தது கல்லூரி. இன்று அதற்கு அகவை 67. அசுர வளர்ச்சி என்றால் மிகையில்லை. காரணம் அதை வழிநடத்திய, நடத்திக் கொண்டிருக்கின்ற தயான மனம் கொண்ட ஆட்சி மன்ற பெருமக்கள்.

'Show us the Right Path' - 'எங்களை நேர் வழியில் நடத்தாட்டுவாயாக' என்ற இறை வசனத்தை தாரக மந்திரமாகக் கொண்டு தலைமை ஏற்று நடத்திய முதல்வர்கள், கற்பித்தலை அறப்பணியாக மேற்கொண்டு அர்ப்பணிக்கும் பேராசிரியர்கள், ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பி, பிறருக்கு முன் மாதிரியாகத் திகழும் மாணவச் செல்வங்கள், வேலையைச் சேவையாகச் செய்யும் பணியாளர்கள்.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கி இன்றொரு ஆலமரமாக பொலிவுடன் திகழ்ந்து வருகிறது. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் படித்து வெளியேறி இன்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் செம்மையோடு வாழ்ந்து வருகிறார்கள். தாம் படித்த கல்லூரிக்கு பெருமை சேர்த்து வருகிறார்கள்.

ஒரு கல்லூரியின் தரம் அதன் பேராசிரியர்களின் தரத்தைப் பொறுத்துள்ளது. பேராசிரியர்களின் தரம் மாணவர்களின் தரத்தை உயர்த்துகின்றது. இப்பரிமாண வளர்ச்சி விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்து சென்றுகொண்டே இருக்கிறது. இந்த வெற்றியின் சூட்சுமத்தை மறைந்த மரியாதைக்குரிய மேனாள் செயலர் அப்துல்கபூர் சாகிப் அவர்களின் கூற்று நன்கு விவரிக்கும். "We own the staff and they own the college".

நல்லதிலும், கெட்டதிலும் ஒன்றுகூடும் பாங்கு நம் கல்லூரிக்கு மட்டுமே உரிய தனித்தன்மை. அத்தனித் தன்மை இன்றுவரை நடைமுறையில் இருந்து வருவதே நம் கல்லூரியின் வெற்றிக்கு மிக முக்கிய காரணம் என்றால் அது மிகையில்லை.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்பார்கள். ஆனால் ஜமால் எனும் பல்கலைக்கழகம் ஓர் அழகிய குடும்பம்.

வாழ்க ஜமால்! வாழ்க வாழ்கவே!!

# என் இரண்டாம் கருவறை



கவிஞர் நாகூர் ரூமி,
ஜமால் முகம்மது கல்லூரி மேனாள் மாணவர்

தாயின் கருவறையில் ஒரு குழந்தை இருப்பது அதிகபட்சமாக ஒன்பது மாதங்கள்தான். ஒரு சரியான பள்ளியோ கல்லூரியோ ஒரு தாயின் வேலையை பல ஆண்டுகள் செய்கின்றது என்பதுதான் உண்மை. பள்ளி அல்லது கல்லூரி என்று சொல்லும்போது அதன் கட்டிடங்களைப் பற்றி நான் பேசவில்லை. ஒரு கல்லூரிக்குக் கட்டிடங்கள், வகுப்பறைகளெல்லாம் தேவைதான். ஆனால் அவைகளால் மட்டும் ஒரு கல்லூரி உருவாகிவிடுவதில்லை. அவை வெறும் உடல்தான். ஒரு கல்லூரியின் உயிர் அதன் பேராசிரியர்கள்தான்.

அந்த வகையில் உடலும் உயிரும் அழகின் வடிவாய் அமைந்த ஜமால் முஹம்மது கல்லூரியில் 1975லிருந்து 80வரை நான் படித்த காலகட்டம் என்னை மீட்டுருவாக்கம் செய்த காலகட்டம். உடலுக்கு உணவூட்டி உயிர் கொடுக்கிறாள் தாய். ஆனால் ஒரு சரியான கல்லூரி மாணவனின் அறிவுக்கும் ஆன்மாவுக்குமான உணவாக அமைகிறது.

ஜமால் முஹம்மது கல்லூரியில் 1980ல் நான் எம்.ஏ. ஆங்கில இலக்கியம் முடித்தேன். என் வாழ்க்கையின் மறக்க முடியாத காலகட்டங்களில் அது ஒன்று. பொக்கிஷங்களைப்போல அமைந்த என் பேராசிரியர்களால் நான் உருவாக்கப்பட்ட பொற்காலம் அது. எல்லாப் பேராசிரியர்களும் மரியாதைக்கு உரியவர்கள். சிலரோ போற்றுதலுக்குரிய சிற்பிகள். அப்படி என்னை உருவாக்கிய சிற்பிகளில் சிலரைப்பற்றி இங்கே கொஞ்சம் பேச விரும்புகிறேன்.

பி.ஏ.ஆங்கில இலக்கியம் படிக்க விண்ணப்பப் படிவத்தை நான் பூர்த்தி செய்தேன். அதில் First Preference, Second Preference, Third Preference என்று இருந்த மூன்று கட்டங்களிலும் ஆங்கில இலக்கியம் என்று நான் எழுதியிருந்தேன். பி.காம். படிப்புக்குப் புகழ்பெற்ற கல்லூரியாக அன்றே இருந்தது ஜமால். ஆனால் நான் அப்படி எழுதியதைப் பார்த்த அப்போதைய முதல்வர் இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் என்னை அழைத்து, உனக்கு பி.காம். தருகிறேன் என்று சொன்னார். சிரித்துக்கொண்டே. நான் ஆங்கில இலக்கியம்தான் படிக்க விரும்புவதாகச் சொன்னேன். ‘இப்படி வா’ என்று என்னை அருகே அழைத்த அவர், ம்ஹ்ம், இங்க்லீஷ்காரன் மாதிரிதான் இருக்கே என்று சொல்லிச் சிரித்துவிட்டு ஆங்கில இலக்கியம் படிக்க அனுமதித்து கையெழுத்திட்டார்!

ஆங்கிலத்துறையிலும், தமிழ்த்துறையிலும், உர்து துறையிலும் சில மாணிக்கங்கள் இருந்தன. அவர்கள் எனக்கு பேராசிரியர்களாக அமைந்தது நான் செய்த பாக்கியம். உதாரணமாக, ஆல்பர்ட் சார், யூசுஃப் சார், மன்சூர் சார், ஹஸ்ரத் சுஹ்ரவர்த்தி, நயினார் முஹம்மது சார் ஆகியோரைக் குறிப்பிட வேண்டும்.

## பேரா. எஸ். ஆல்பர்ட்

எளிமை, அறிவாற்றல், தெளிவு ஆகியவற்றின் உருவம் அவர். ஒருமுறை நான் வாலஸ் ஸ்டீவன்ஸின் Of Mere Being என்ற ஆங்கிலக் கவிதையை தமிழாக்கம் செய்திருந்தேன். அதை அவரிடம் காட்டினேன். என்னைப் பாராட்டிய அவர் அதே கவிதையை கல்லூரி பழைய சஞ்சிகையொன்றில் தான் மொழிபெயர்த்திருந்ததைக் காட்டினார். ஏறத்தாழ நாங்கள் இருவருமே கவிதையை சரியாகப் புரிந்துகொண்டு, கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகத்தான் மொழிபெயர்த்திருந்தோம். தலைப்பைத் தவிர. தலைப்பில் என்னை அவர் தோற்கடித்திருந்தார்! நான் கொடுத்த தலைப்பு ‘வெறும் இருப்பு பற்றி’. அவர் கொடுத்திருந்த தலைப்பு ‘சும்மா இருப்பது பற்றி’! புரிந்துகொள்வது என்றால் என்னவென்று புரிந்துகொள்ள வைத்தவர் அவர்.

உலக சினிமா பற்றிய ஆழமான அறிவும் அனுபவமும் கொண்டவர் ஆல்பர்ட் சார். திருச்சியில் அவர் நடத்திக்கொண்டிருந்த சினி ஃபோரம் மூலமாக பல உலக சினிமாக்களைப் பார்க்கவும், உலகளாவிய பண்பாட்டை புரிந்துகொள்ளவும் முடிந்தது.

ஒருமுறை டி.எஸ். எலியட்டின் The Waste Land என்ற கவிதை புரியவில்லை என்று அவரிடம் சொன்னேன். என்ன புரியவில்லை என்று கேட்டார். எதுவுமே புரியவில்லை என்றேன். சிரித்தார். ஆங்கிலக்கவிதையைக் கண்டு என்ன அச்சம்? எல்லாமே ஏபிஸிடி–தானே என்றார்! சட்டென்று ஒளி கிடைத்தது போல் ஆனது. ஆமாம். வெறும் ஏபிஸிடி–யைப் பார்த்து ஏன் பயப்பட வேண்டும்? அப்படியானால் laughing to the ears என்ற வாக்கியத்தை எப்படிப் புரிந்துகொள்வது என்றேன். ஒவ்வொரு சொல்லுக்கும்

அர்த்தம் புரிந்தாலும் ஒட்டுமொத்தமாக கவிஞர் என்ன சொல்ல வருகிறார் என்று புரியவில்லை என்றேன். காதுவரை யாராவது சிரித்துப் பார்த்திருக்கிறாயா என்றார். இல்லை என்றேன். மண்டை ஓட்டைப் பார்த்தால் அப்படித்தான் இருக்கும் என்றார். ஆமாம் என்றேன். அப்படியானால் அந்த கவிதையில் வரும் மனிதன் செத்தவனுக்குச் சமம் என்று கவிஞர் சொல்ல வருகிறார் என்றார். ஆங்கில இலக்கியத்தின் ஆழங்கள் எனக்குப் புலப்பட ஆரம்பித்தன.

## ஹஸ்ரத் சுஹ்ரவர்த்தி

மென்மைக்கு ஒரு உருவம் கொடுக்க முடிந்தால் எப்படியிருக்கும் ? அது ஹஸ்ரத் சுஹ்ரவர்த்தி சாரைப்போல இருக்கும். ஆமாம்! நான் உர்து வகுப்பில் சேர விரும்பி துறைத்தலைவர் ஹஸ்ரத் சுஹ்ரவர்த்தி சாரிடம் பேசினேன். நீ ஏன் உர்து படிக்க விரும்புகிறாய் ? உர்து பேசத்தெரியுமா என்றார். தெரியாது ஆனால் கஜல் விரும்பிக் கேட்பேன் என்றேன். அப்படியா ஒரு கஜல் சொல்லு என்றார். நான் பல கஜல்களை மனப்பாடமாக வைத்திருந்தேன். சொன்னேன். மகிழ்ந்துபோன அவர் உர்து படிக்க அனுமதி வழங்கினார். பி.ஏ.யில் உர்து வகுப்பில் படித்த எல்லா மாணவர்களிலும் உர்து தெரியாத ஒரே மாணவன் நான்தான்! ஆனால் அந்த ஆண்டு நான்தான் உர்துவில் கல்லூரியிலேயே முதல் மாணவனாகத் தேறினேன்! தமிழைவிட வேகமாக உர்துவை என்னால் எழுத முடிந்தது அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்!

**தில் மெ ஹகீகத் ஹை**
**ஜிந்தகீ முஸீபத் ஹை**
**தேகோ ஜி பைசா நஹீ**
**ஜிந்தகி ஐஸா வஹீ**
**ஹம் ஏக் முஸாஃபிர் ஜரா**
**கம் தேக்கோ தஸ்வீர் மேரா**

என்று உர்துவில் நான் ஒரு ‘கவிதை’ கிறுக்கினேன். அதை சுஹ்ரவர்த்தி சாரிடம் காட்டினேன். ‘ஜரா’ என்பது குறைந்த அளவிலான பொருளைக் குறிக்கும். என் கவிதையில் இருந்த ‘ஜரா’ மனிதர்களுக்குப் பொருந்தாது! நான் கொஞ்சம் பிச்சைக்காரன் என்று சொல்ல முடியுமா என்ன!

என்னைப் பாராட்டி கல்லூரி சஞ்சிகையில் அக்’கவிதை’யைப் பிரசுரித்த அவர் அதில் இருந்த பொருந்தாத, அர்த்தம் கெட்ட ‘ஜரா’ என்ற சொல்லை மாற்ற என்னிடம் அனுமதி கேட்டார்!

தமிழிலும் உர்துவிலும் பாண்டித்தியம் பெற்ற அறிஞர் அவர். திருக்குறளை உர்துவில் மொழிபெயர்த்தவர். சாகித்ய அகாடமி விருது பெற்றவர். இந்தியாவெங்கிலும் அவர் முஷாயிராவுக்குக் செல்லாத ஊரே இல்லை என்று சொல்லலாம். அவ்வளவு பெரிய ஆளுமை முட்டாள்தனமான என் ‘கவிதை’யைத் திருத்த என் அனுமதி கேட்டது!

நான் கல்லூரிப்பணிபுரிந்த வட ஆற்காடு மாவட்டங்களில் பேசப்படும் உர்துவை நினைத்தால் வாந்திதான் வருகிறது. ஆனால் சுஹ்ரவர்த்தி சார் பேசிய உர்து எப்போதுமே அழகான தூய உர்து. ஒருமுறை நான் அவர் வீட்டு மாடியில் இருந்து கீழே இறங்கினேன். பார்த்து மெதுவாகப் போ என்று அவர் உர்துவில் சொல்லும்போது ‘மெதுவாக’ என்பதற்கு ஆஹிஸ்தா ஆஹிஸ்தா என்று சொன்னார். ஹல்லு ஜா என்று சொல்லவில்லை! ‘ஆஹிஸ்தா’வுக்கும் ‘ஹல்லு’வுக்கும் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வித்தியாசம் உள்ளது என்பதை உர்து அறிந்தவர்கள் அறிவார்கள்! இல்லத்துக்கு வா என்பதற்கும் வூட்டாண்ட வா என்பதற்கும் இடையில் உள்ள வித்தியாசம் மாதிரி என்று வைத்துக்கொள்ளுங்களேன்!

சிறந்த உர்துக் கவிஞரான சுஹ்ரவர்த்தி சார் பூவே குல், நாலே தில் என்ற அவரது கவிதைத் தொகுப்பை எனக்கு கையெழுத்திட்டு பரிசளித்தார். அதை இன்றுவரை பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறேன். அதில் ஓரிடத்தில் அவர் எழுதியிருப்பார்:

## கம் ஸெ காலி ஜிந்தகீ பஸந்த் நஹீ

வேதனை இல்லாத வாழ்க்கையில் எனக்கு விருப்பமில்லை என்று அதற்குப் பொருள்! எதையும் தாங்கும் இதயம் நமக்கு வந்துவிட்டால் துன்பமானது துன்பத்தின் தன்மையை இழந்துவிடும் என்று என் ஞானாசிரியர் மர்ஹூம் ஹஸ்ரத் அப்துல் வஹ்ஹாப் கூறுவார்கள். மனித உள்ளத்தை புடம் போட வல்ல வார்த்தைகளை எழுதிய கவிஞர், என் ஆசான், ஹஸ்ரத் சுஹ்ரவர்த்தி அவர்கள். என் இரண்டாவது மகளுக்கு ஷாயிஸ்தா என்று சுஹ்ரவர்த்தி சாரின் இரண்டாவது மகளின் பெயரைத்தான் வைத்துள்ளேன்! உடலை விட்டு அவர் போயிருக்கலாம். ஆனால் மாணவர்களின் இதயங்களை விட்டு அவர் என்றும் போகமாட்டார்.

## எஸ். யூசுஃப் சார்

முக்கிய கருத்துக்களை மட்டும் எடுத்து, நூறு பக்கத்தில் உள்ள விஷயங்களை நாலு பக்கங்களில்

உங்களால் சுருக்கித் தரமுடியுமா ? யூசுஃப் சாரால் முடியும். அவரால் மட்டும்தான் முடியும். யூசுஃப் சாரிடமிருந்து நான் கற்றுக்கொண்ட அந்த விஷயம் என் வாழ்வில் இன்றும் முக்கிய பங்களித்துக்கொண்டிருக்கிறது. ஒருமுறை ஒரு நூலைப் படித்துவிட்டால் நான் குறிப்புகள் எடுத்துக் கொள்வேன். அதன் பிறகு அந்தப் புத்தகம் எனக்குத் தேவையில்லை ! அப்படிப் படிக்கவும் எழுதிவைக்கவும் கற்றுக்கொடுத்தவர் யூசுஃப் சார். இன்றுவரை அதுதான் எனக்கு உதவிக்கொண்டிருக்கிறது. முக்கியமானவை, மிக முக்கியமானவை ஆகியவற்றை அடையாளமிட்டுப் படிக்கும் முறையையும் நான் அவரிடமிருந்தே கற்றுக்கொண்டேன்.

ஆங்கிலத்துறையில் இருந்த சிறப்பு நூலகத்தில் இருந்த முப்பதாயிரம் புத்தகங்களில் எந்த நூல், எந்த வரிசையில், எத்தனையாவது அடுக்கில் இருக்கும் என்று துறை நூலகருக்கும் யூசுஃப் சாருக்கும் மட்டும்தான் தெரியும் ! நூல்களோடு யூசுஃப் சார் ஆத்மார்த்தமான தொடர்பு வைத்திருந்தார். படிக்கிற காலத்தில் நான் குடியிருந்த வீட்டுக்குக் கீழே யூசுஃப் சார் இருந்தாலும் என் உள்ளத்தில் எப்போதும் அவர் மேலேயே இருக்கிறார்.

## லயன் மன்சூர் சார்

தமிழ் இலக்கணம், தமிழிலக்கியமென்றாலே இனம்புரியாத அச்சம் எங்களுக்கு இருந்தது. நான் அரபி, உர்து போன்ற மொழிகளை எடுத்துப் படித்ததற்குக் காரணமும் அதுதான். ஆனால் மன்சூர் சார் ஒரு விதிவிலக்கு. அவர் வகுப்பெடுத்தால் மற்ற மொழி மாணவர்களும் அவர்களது வகுப்புகளுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு மன்சூர் சார் வகுப்பில் வந்து அமர்ந்துகொள்வார்கள். தமிழை இவ்வளவு சுவையாகக் கற்றுத்தரமுடியுமா என்று வியக்க வைத்தவர். என் மீது தாயன்பு கொண்டவர். நானும் காதல் கோட்டை என்ற திரைப்படத்தை இயக்கி தேசிய விருது பெற்ற இயக்குனரான அகத்தியன் (என் நண்பர் பேராவூரணி கருணாநிதி) இருவரும் கவிதைகள் எழுதியெழுதி அவரிடம் கொடுப்போம். அவர் 'ஓகே' சொன்ன பிறகுதான் எங்களுக்கு நம்பிக்கை வரும். எங்களின் ஆக்கப்பூர்வமான திறமைகளை வளர்த்துவிட்டவர் அவர். எப்போது என்னைப் பார்த்தாலும் நெற்றியில் முத்தமிட்டு அணைத்துக் கொள்வார்.

ஆங்கிலத்துறை பேராசிரியராகவும் ம்யூசிக் ட்ரூப்பின் இயக்குனராகவும் இருந்த ஜெயச்சந்திரன் சாரையும் எங்களால் மறக்க முடியாது. அசாதாரணமான நகைச்சுவை உணர்வு கொண்டவர். ஒருமுறை ஒரு மாணவனிடம், நீ கி.ஆ.பெ. விஸ்வநாதனுடைய சொந்தக்காரன்தானே ? என்று கேட்டார். அவன், இல்லை சார், அது வேறு சுந்தரம் என்று பதில் சொன்னான். உடனே ஜெயச்சந்திரன் சார் அவனிடம், I see, I thought unnecessarily highly of you என்றாரே பார்க்கலாம் !

இன்னும் பஞ்சநாதன் சார், ஆங்கிலத்தை முறைப்படி உச்சரித்த சிம்மக் குரலோன் ஷௌகத் அலி சார், முஹம்மதலி சார் என்று எல்லோரையும் பற்றி எழுத ஆசைதான். ஆனால் ஒரு புத்தகம்தான் போடவேண்டும். அவ்வளவு உள்ளது !

ஆல்பர்ட் சார், யூசுஃப் சார், மன்சூர் சார், சுஹ்ரவர்த்தி சார் ஆகியோருடைய தாக்கம் என் வாழ்வில் நிரந்தரமானது. நாகூர் ரூமி என்பது அவர்களும் சேர்ந்ததுதான்.

## ஹாஸ்டல்

ஜமால் முஹம்மது கல்லூரியின் ஹாஸ்டலையும், வெள்ளிக்கிழமைகளில் போடப்பட்ட குஸ்காவையும், வட்டத்தட்டு மட்டன் கறியையும் மாணவர்களால் மறக்க முடியுமா ? அதன் சுவையும் அது கொடுத்த ஆரோக்கியமும் தனி. ஹாஸ்டலில் ஷா என்று ஒரு வார்டன் இருந்தார். அவர் ரொம்ப 'ஸ்ட்ரிக்ட்'. நேரம் தவறாமை அவரது தனிச்சிறப்பு. ஒருமுறை அவர் பெயர் கொண்ட கவர்னரை ஹாஸ்டல் விழாவுக்கு அழைத்திருந்தார். பத்து மணிக்கு கவர்னர் வரவில்லையென்றால் விழாவை அவரில்லாமலே தொடங்கிவிடுங்கள் என்று உத்தரவு கொடுத்திருந்தார் ! நல்ல வேளை, கவர்னர் நேரத்துக்கு வந்து அவர் மானத்தை அவரே காப்பாற்றிக்கொண்டார் !

ஜமால் என்றாலே அழகு என்றுதான் பொருள். உடல் அழகாக வேண்டுமென்றால் உடற் பயிற்சி செய்யவேண்டும். மனமும் மூளையும் அழகாக வேண்டுமென்றால் ஜமால் முஹம்மது கல்லூரியில் படிக்க வேண்டும்.

நான் ஒரு ஜமாலியன் என்பதில் எனக்கு எப்போதுமே பெருமை உண்டு. நான் படித்தபோது இரண்டாயிரம் மாணவர்கள் இருந்திருப்பார்கள். இன்றோ பத்தாயிரத்துக்கும் மேல் ! முஸ்லிம் சமுதாயத்துக்குப் பெருமை சேர்க்கும் ஜமால் முஹம்மது கல்லூரி ஒரு பல்கலைக்கழகம் என்று சொல்லவேண்டும். அதை உருவாக்கிய பெரியோர்கள் இம்மையிலும் மறுமையிலும் கண்ணியத்துக்கு உரியவர்கள்.

* * * * *

# இந்தியக் கலாச்சாரத்தை உலக அரங்கில் நிகழ்த்திக் காட்டிய ஜமால் - ஜமாலியன்கள்

கலைமாமணி மு. இளங்கோவன்
செயலர் மற்றும் இயக்குநர் – கவின் கலைக் குழு, திருச்சி

அன்புநிறை பெரியோர்களே! அறிவுநிறை சான்றோர்களே!! ஆற்றல்மிகு மாணவச் செல்வங்களே!!!

இப்பொழுது இறைவன் என் முன்னே தோன்றி, என்ன வரம் வேண்டும் எனக் கேட்டால் நான் ஜமால் முகம்மது கல்லூரியில் படித்த அந்த 5 ஆண்டுகளைத் திரும்பவும் வாழ வேண்டும் என வரம் கேட்பேன். அத்தனை சுகமானது அந்த ஐந்தாண்டின் இனிய நினைவுகள்...

காலம் எத்தனை வலிமையானது காலப் பயணத்தில் பின்னோக்கி பயணிக்க எத்தனிக்கும் என் இதயம்.. இனிய நினைவுகளை, அசைபோட அசைபோட தித்திக்கும் என் சிந்தை மனவானில் சிறகடித்துப் பின்னோக்கிப் பறக்கும் என் மனது...

1984–ஆம் ஆண்டில் கல்லூரியின் முதல்நாள் பிரமிப்பான அந்த காலைப்பொழுதில் கல்லூரியில் நுழைந்த கணப்பொழுதில் என் காலடியின் ஒசையை விட என் இதயத்துடிப்பின் ஒலி சற்று கூடுதலாய் என் செவியில்.. வறிய குடும்பத்தில் பிறந்து, தாய் மொழித் தமிழ் வழியில் பள்ளிக்கல்வி முடித்து கல்லூரியில் கால்பதிக்கும் எங்கள் பரம்பரையின் முதல் குருத்தாய் தயங்கித் தயங்கி நடக்கிறேன்...

மிதி வண்டியில் நுழைந்த எனக்கு அந்தக் காலத்திலேயே கார்களில் பவனி வந்த மாணவர்களின் நவநாகரீக உடையும் மிடுக்கான நடையும் நுனிநாக்கு ஆங்கிலமும் என்னுள் இருந்த தாழ்வு மனப்பான்மையை இன்னும் அதிகப்படுத்தியது. அச்சமும் அதைரியமுமாய் வணிகவியல் இளநிலை முதலாமாண்டு (B.Com. B Sec.) வகுப்பறையில் நுழைந்தேன்.

ஆனால் அங்குதான் தாயின் பேரன்பையும் அதன் மகத்துவத்தையும் உணரத்தொடங்கினேன். பாகுபாடற்ற அன்புடன் கருணைக் கடலாய் என்னை நம் கல்லூரித்தாய் வாரியணைத்தாள் சமத்துவமாய் எங்கள் அனைவருக்கும் அன்பையும் அறிவையும் வாரி வழங்கினாள்.

இந்தியாவின் எதிர்காலத்தைக் கட்டமைக்கும் இளைஞர் சமுதாயத்தை உருவாக்கும் அளப்பரிய பணியை திறமையாய் ஆற்றும் அற்புதமான பேராசிரியர்களின் பேரறிவுக்கடலில் மூழ்கி முத்தெடுக்கத் தொடங்கினோம் அன்றைய காலகட்டத்தில் பேராசிரியர்கள் இஸ்மாயில் சாஹிப் (கல்லூரி முதல்வர்), நியாமத்துல்லா (H.O.D.) ஷேக் முகம்மது (SM), N. ஷேக் முகம்மது (NSM), A. ஷேக் மொய்தீன் (ASM), சிந்தாஷா, சுபான்கான், N. அப்துல் காதர் (NAK), R. காதர் மொய்தீன் (RKM), சுல்த்தான் இப்ராஹிம் (SI), முபாரக் அலி மற்றும் குலாம் மொய்தீன் போன்ற பேராசிரியர்கள் அளித்த கல்விதான் எங்களது வாழ்க்கையின் அடித்தளம்.

கொஞ்சம் கொஞ்சமாய் என் கூச்சம் எனைவிட்டு விலகத்தொடங்கியது. தாழ்வு மனப்பான்மையின் பிடியிலிருந்து மெல்ல விடுபடத் தொடங்கினேன். நாட்டு நலப்பணித் திட்டத்தில் என்னை இணைத்துக் கொண்டேன். மற்ற துறைகளில் படிக்கும் மாணவர்களும் எனது நட்பு வட்டத்தில் இணைந்தார்கள். சாதித்து தனித்துவம் அடைவது ஒரு நோக்கமாய் இருந்தாலும் நாம் சார்ந்த இந்த சமுதாயத்திற்கு சேவை செய்யவேண்டும் என்பது தான் உன்னதமானது என்று என்னுள் சமுதாயச் சேவை உணர்வை மேலோங்கச் செய்தது நம் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டத் துறை என்றால் மிகையாகாது. அப்பொழுது தமிழ்த் துறையின் பேராசிரியர் மேஜர் ஏ. நடராஜன் அவர்கள் நாட்டு நலப்பணித் திட்டத் தலைமை அலுவலராக எங்களைத் திறம்பட வழி நடத்தினார்.

பொதுவாக கிராமங்களில் நாட்டு நலப்பணித் திட்ட முகாம்கள் நடக்கும். கிராம மக்களுக்கு சேவை செய்வதற்காக நடக்கும் 10 நாள் முகாமில் என்னதான் மாணவர்கள் கட்டுப்பாட்டுடனும் சிறப்பாகவும் சேவைபுரிந்தாலும், கிராம மக்களின் மனங்களில் மாணவர்கள் பற்றி ஒரு சிறு ஐயப்பாடு நிலவுவதைத் தவிர்க்க முடியாது. ஒரு இனந்தெரியாத மெல்லிய கோடு மக்களுக்கும், மாணவர்களுக்குமிடையே இருக்கும்.

இதை உடைத்தெறிய அல்லது வெகுவாகக் குறைக்க, அப்பொழுது மேஜர். ஏ. நடராஜன் அவர்கள் மனதில் உதித்தது ஒரு யோசனை நமது நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களுக்கு, மக்களின் மனதுக்கு நெருக்கமான மற்றும் கிராம மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கிராமியக் கலைகளைக் கற்றுக் கொடுத்து, முகாமின் ஆரம்ப நாட்களில் கிராம மக்களுக்கு கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதின் மூலம் அவர்களின் அன்பையும் ஆதரவையும் கூடுதலாகப் பெறமுடியும் என்று நம்பினார். மேலும் அதன்மூலம் மக்களுக்கும், மாணவர்களுக்குமான நெருக்கம் அதிகரிக்கும் என்றும் திடமாக நம்பினார்.

அதன் விளைவாக அன்று இருந்த நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கு நம் மண்ணின் கலைகளைக் கற்றுத்தர திருச்சி மாநகரத்தின் முக்கியமான அடையாளங்களில் ஒன்றான முக்கொம்பில் நடைபெற்ற 1984–85–ஆம் ஆண்டுக்கான 10 நாள் முகாமில் ஏற்பாடு செய்தார். நாற்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வமுடன் கற்றுக் கொண்டனர். இக்கலைகளை பாய்லர் பிளான்ட் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் திரு. ஞ. நடராஜன் அவர்கள் திறம்படக் கற்பித்தார், கிராமியக் கலைகளை நேரில் கூட பார்க்க வாய்ப்பற்ற பல மாணவர்களில் நானும் ஒருவனாக அந்த முகாமில், கரகம், காவடி போன்ற கிராமிய நடனங்களைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். எனது கலைப்பயணம் அங்குதான் துவங்கியது. இறுதியாக அந்த நாற்பது பேரிலிருந்து 12 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து தொடர்ச்சியாக இக்கலைகளைக் கற்றுத்தரவும் நம் கல்லூரியின் கலைக்குழுவாக உருவாக்கவும் முடிவு செய்யப்பட்டது. அந்த 12 பேர்களில் நானும் ஒருவனாக தேர்வு செய்யப்பட்டேன். இதுதான் நம் கல்லூரியின் முதல் கிராமியக் கலைக்குழு உதயமான வரலாறு. அதன்பின் நம் கல்லூரியின் கிராமியக் கலைக்குழு பல்வேறு நிகழ்ச்சிகளிலும், போட்டிகளிலும் பங்கேற்று சிறப்பாக செயல்படத் துவங்கியது.

அன்றைய காலகட்டத்தில் நமது கல்லூரியின் கணிதத்துறைப் பேராசிரியர் முனைவர் H. முகம்மது சலாஹுத்தீன் அவர்கள், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும் மற்றும் கலைப்பண்பாட்டுத் துறை ஒருங்கிணைப்பாளராகவும் சிறப்புடன் செயல்பட்டுக் கொண்டிருந்தார். நம் கல்லூரிக் கலைக்குழுவின் சிறப்பான செயல்பாடுகளைக் கவனித்து, நம் கலைக்குழுவைத் தேர்வு செய்து பல்கலைக்கழக கலைக்குழுவுடன் இணைத்தார். எனினும் பல்கலைக்கழகக் கலைக்குழுவில் அதிகபட்சம் 10 பேர்தான் பங்கேற்க முடியும் என்பதால் ஏற்கனவே 12 பேர் கொண்ட நம் கல்லூரிக் கலைக்குழுவில் இருந்து 10 பேரை மட்டும் தேர்வு செய்தனர். அந்த 10 பேரிலும் ஒருவனாக நான் தேர்வுபெற்றேன்.

நம் மாணவர்கள் இணைந்த பல்கலைக்கழக கலைக்குழு முதன்முதலாக 1985–ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தில் நடைபெற்ற தென்னிந்திய பல்கலைக் கழகங்களுக் கிடையேயான கலைப்போட்டிகளில் பங்கேற்றது. முதல் நாள், முதல் போட்டியே நம் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற கிராமிய நடனப் போட்டி தான். அதில் முதல் பரிசும் தங்கப் பதக்கமும் பெற்றது மட்டுமல்லாது பெருவாரியான போட்டிகளிலும் வெற்றி பெற்று தென்னிந்திய அளவில் ஒட்டுமொத்த சாம்பியனாக வலம் வந்தது.

இத்தகையக் கலைப்போட்டிகள் அசோசியேசன் ஆஃப் இந்தியன் யுனிவர்சிட்டீஸ் (Association of Indian Universities) மற்றும் மத்திய மனிதவள மேம்பாடு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் நிகழ்த்தப்படும் போட்டிகள் என்பது குறிப்பிடத்தக்கது. அப்பொழுது முதல் நம் கல்லூரிக் கலைக்குழுவும் சரி, நம் மாணவர்கள் இணைந்த பல்கலைக்கழக கலைக்குழுவும் சரி எங்கு சென்றாலும் வெற்றிகளைக் குவிக்கத் துவங்கியது. தென்னிந்திய அளவில் மட்டுமல்லாது, தேசிய அளவிலும் வெற்றிகள் தொடர்ச்சியாய் வந்தடைய, நம் மாணவர்களின் கலைத்திறன் எட்டுத்திக்கிலும் பரவத் தொடங்கியது.

1987–ஆம் ஆண்டு மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் சார்பாக இந்திய கலாச்சார விழா (Festival of India in USSR) சோவியத் ரஷ்யாவில் நிகழ்த்த முடிவு செய்யப்பட்டு, சோவியத்தின் தலைநகர் மாஸ்கோவில், லெனின்கிராட் எனும் மைதானத்தில் துவக்க விழா நடைபெற்றது. கோலாகலமாக நடைபெற்ற அவ்விழாவில், அப்போதைய சோவியத் யூனியனின் தலைவர் கோர்ப்சேவும், அப்போதைய நம் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும் கலந்துகொண்டு நம் இந்தியக் கலைஞர்களைப் பாராட்டியது எங்கள் நெஞ்சத்தை விட்டு நீங்கா நினைவுகளாக இன்னமும் நிலை பெற்றுள்ளது. அவ்வினிய கலை விழாவில் எங்களுடன் பத்மா ஷேசாத்ரி, பர்வீன் சுல்த்தானா, M.S. சுப்புலெஷ்மி, தபலா இசை மேதை ஜாஹீர் உசேன் உள்ளிட்ட பல்வேறு பிரபல கலைஞர்கள் கலந்து கொண்டார்கள் என்பதை பெருமையுடன் நினைவுகூர்கிறேன்.

பெருமைமிகு அவ்விழாவில் பங்கேற்கும் கலைஞர்களை குடியரசுத் தலைவர் நியமித்த அதிகாரிகள் குழாம் தேர்வு செய்தது. அவ்வதிகாரிகள், அசோசியேசன் ஆஃப் இந்தியன் யுனிவர்சிட்டீஸ் (Association of Indian Universities) சார்பாக, அகில இந்திய அளவில் மிகச்சிறந்த மாணவர்களைத் தேர்வு செய்வதற்காக ஒரு சிறப்புப் போட்டித் தேர்வு 1987–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புது தில்லியில் நடத்தினர். அதில் நாடு முழுவதும் இருந்து மிகச் சிறந்த பல்கலைக்கழக அணிகள் கலந்து கொண்டனர். அதிலும் நம் மாணவர்கள் அடங்கிய பாரதிதாசன் பல்கலைக்கழக கலைக்குழு அணி போட்டியிட்டு மிகச் சிறப்பாக வென்றது. கிராமியக் குழு நடனம் மற்றும் இந்தியக் குழுப் பாடல் ஆகிய இரண்டு பிரிவுகளில் இந்தியக் கலாச்சார விழாவில் பங்கேற்க நம் பல்கலைக்கழகம் தேர்வு செய்யப்பட்டது.

அதில் கிராமியக் குழு நடனப் பிரிவில் முழுக்க முழுக்க நம் கல்லூரி மாணவர்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டது மிகவும் பெருமையாக இத்தருணத்தில் நினைவு கூறத்தக்கது. மேலும் இக்குழுவில் ஆறு பேர் மட்டும் தான் பங்கேற்க முடியும் என்ற சூழலில் அந்த ஆறு பேரில் ஒருவனாக நானும் தேர்வு பெற்றேன்.

01. M. இளங்கோவன் (நான்)
02. P. இளங்கோவன்
03. N. வெங்கட் ராமன்
04. P. சுந்தர் ராஜ்
05. P. குகன் ராஜ்
06. S. ரஹீம்

ஆகிய ஆறு பேர் இடம் பெற்றோம். எங்களது பயிற்சியாளர் திரு P. நடராஜன் அவர்களும் எங்களுடன் பங்கு கொண்டது கூடுதல் சிறப்பு.

எங்களுடன் இந்தியக் குழுப் பாடல் பிரிவில் நம் கல்லூரியின் முன்னாள் மாணவரும் இன்றைய திரைப்பட இயக்குநர் மற்றும் திரை இசையமைப்பாளருமான திரு. ஜேம்ஸ் வசந்தன் மற்றும் நம் கல்லூரியின் முன்னாள் மாணவர் திரு ஆன்ரூ சந்தோஷ் ஆகியோர் உள்ளிட்ட பல்வேறு கல்லூரி மாணவ மாணவிகள் இணைந்த இந்தியப் பாடல் குழுவும் இடம் பெற்றது.

நம் கல்லூரியின் கணிதத்துறைப் பேராசிரியரும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் கலைப் பண்பாட்டுத் துறை ஒருங்கிணைப்பாளருமான முனைவர் H. முகம்மது சலாஹுத்தீன் அவர்களின் சீரிய தலைமையில், சோவியத் யூனியனில் நடைபெற்ற இந்தியக் கலாசார விழாவில், மொத்தம் 21 பேர் கொண்ட எங்கள் கலைக்குழுவின் கலைப் பயணம் இனிய 21 நாட்களாய் தொடர்ந்தது. கலுகா, வியஸ்மா, விட்டப்ஸ்க், தாலின் போன்ற 17 பெரு நகரங்களில் (இன்று பல நாடுகளாய் சிதறிக் கிடக்கிறது) எங்களது கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. சோவியத் யூனியனின் தலை நகர் மாஸ்கோவில் நடைபெற்ற கலை விழாவின் தொடக்கவிழா நிகழ்ச்சியின் ஒரு பகுதியாய் எங்களுக்கு கிரெம்ளின் மாளிகையில் மிக பிரம்மாண்டமான வரவேற்பும் சிறப்பான விருந்தும் அளிக்கப்பட்டது. இரு நாடுகளின் முக்கிய பிரமுகர்கள் மட்டும் கலந்து கொண்ட மிகச்சிறப்பான விருந்து அது.

பின்னர் நம் கல்லூரி மாணவர்கள் மட்டும் உள்ளடக்கிய கிராமிய குழு நடன அணி தனியாகவும் இந்திய குழு பாடல் அணி தனியாகவும் பிரிக்கப்பட்டு நாங்கள் சோவியத் ரஷ்யாவின் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதிக்கு பயணம் மேற்கொண்டோம். இந்திய குழு பாடல் அணி சோவியத் ரஷ்யாவின் தெற்கு மற்றும் தென்மேற்கு பகுதிக்குப் பயணம் மேற்கொண்டது.

எங்களுக்கென்று தனியாக ஒரு சிறப்பு ரயில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் எங்களுக்கு படுக்கை வசதி மற்றும் குளியலறையுடன் கூடிய தனித்தனி குளிர்பதன அறைகள் சகல வசதிகளுடனும் ஒதுக்கப்பட்டது. உணவகம், திரையரங்கம், நடன அரங்கம், சலவையகம் உள்ளிட்ட அனைத்து சொகுசு வசதிகளும் உள்ளடக்கிய தனிச்சிறப்பு ரயில் எங்களை பல்வேறு நகரங்களுக்கு, குறிப்பாக ஃபின்லாந்து எல்லை வரை அழைத்துச் சென்றது. சோவியத் ரஷ்ய மக்களின் அதீதமான அன்பும் பாசமான வரவேற்பும் எங்களைத் திக்குமுக்காடச் செய்தது. எங்களுடன் அசோசியேசன் ஆஃப் இந்தியன் யுனிவர்சிட்டீஸின் இணைச் செயலாளர் Dr. சாம்ப்சன் டேவிட், மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி மார்கரட் ஆல்வா மற்றும் அத்துறையின் உயர் அதிகாரி திரு மிஸ்ரா உட்பட பல உயரிய அதிகாரிகள் குழு வந்திருந்து எங்களை சிறப்புடன் வழி நடத்தினர்.

நம் மாணவர்களின் கலைத் திறனை தேசம் கடந்து சர்வதேச அளவில் எடுத்துச் சென்றதில் நம் கல்லூரியின் பங்கு அளப்பரியது. மண்ணுக்கடியில் இருக்கும் கரித்துண்டுகள் சிறந்த வல்லுனர்களின் கைகளிலில் கிடைத்தால் எப்படி பட்டை தீட்டி வைரக்கற்களாய் மிளிரச் செய்வார்களோ, அப்படி நம் கல்லூரி, சாமானியர்களாய்

இருந்த எங்களை சர்வதேச அளவில் புகழ்பெற்ற கலைஞர்களாய் உருவாக்கியது.

பின்னர் 1987 முதல் 1989 வரை முதுநிலை வணிகவியல் (M.Com.) பட்டப்படிப்பைத் தொடர்ந்தேன். இந்த ஐந்தண்டு காலமும் எனது கலைத்திறன் பல்வேறு வகையில் மேம்பட்டது. 1990 – ம் ஆண்டு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் (Life Insurance Corporation of India) நிர்வாக உதவியாளராக பணியில் சேர்ந்தேன். ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் அலுவலகப் பணிபுரிந்தாலும் என்னுள் இருந்த கலை தாகம் என்னை ஏதாவது சாதிக்கத் தூண்டிக்கொண்டே இருந்தது. நம் கல்லூரி எனக்களித்த கிராமியக்கலை எனும் பொக்கிஷத்தை கல்லூரி மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கற்றுத்தர ஆரம்பித்தேன். சில ஆண்டுகள் நம் பாரதிதாசன் பல்கலைக்கழக கிராமியக்கலை பயிற்சியாளராக பணிபுரிந்தேன்.

2007–ம் ஆண்டு கவின் கலைக்குழு எனும் நிறுவனத்தைத் துவக்கி அதன் செயலர் மற்றும் இயக்குனராக திறம்பட செயல்பட்டு வருகிறேன். நம் கல்லூரியின் முன்னாள் பேராசிரியரும், தமிழ்த்துறைத் தலைவரும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலருமான மேஜர் ஏ. நடராஜன் இக் கலைக்குழுவைத் துவக்கியது முதல் தலைவராகவும் திரு N. வெங்கட்ராமன் அவர்கள் பொருளாளராகவும் இருந்து திறம்பட வழி நடத்தி வருகிறார்கள்.

2008–ம் ஆண்டு முதல் இன்று வரை புனித சிலுவைக் கல்லூரியில் கிராமியக் கலைப் பயிற்சியாளராக சிறப்புடன் செயல்பட்டு வருகிறேன். மாணவப் பருவத்தில் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பல பரிசுகளையும், பதக்கங்களையும் மற்றும் கோப்பைகளையும் பெற்றது மட்டுமல்லாது பயிற்சியாளராக உருவெடுத்ததும் மாணவ மாணவிகளுக்கு இக்கலைகளைத் திறம்படப் பயிற்றுவித்து போட்டிகளில் வெற்றி வாகை சூட வைத்துக்கொண்டு வருகிறேன். 2011 –ம் ஆண்டில் நம் ஜமால் முகம்மது கல்லூரி மாணவிகளுக்கு கிராமியக்கலைகளில் பயிற்சியளித்து நம் கல்லூரி ஆண்டு விழாவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தியதை மிகவும் பெருமையாகக் கருதுகிறேன். தமிழகத்தில் மட்டுமல்லாது கேரளாவிலும் பள்ளிக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இக்கலைகளைக் கற்றுக் கொடுத்து வருகிறேன்.

N.C.C. மாநில அணி மாணவ மாணவியர்களுக்கு இக்கிராமியக் கலைகளை மிகச் சிறப்பாகப் பயிற்சியளித்து அகில இந்திய அளவில் நம் நாட்டின் தலை நகர் புதுதில்லியில் நடைபெற்ற போட்டியில் முதல் பரிசுகளை இரண்டு முறை பெற்றுத் தந்துள்ளேன்.

2012 –ம் ஆண்டு தஞ்சையில், பல்வேறு பள்ளிகளிலிருந்து 160 பள்ளி மாணவ மாணவியருக்கு (120 மாணவிகள் மற்றும் 40 மாணவர்கள்) கரக நடனத்தைப் பயிற்சியளித்து, தென்னகக் கலைப் பண்பாட்டு மையத்தின் சார்பாக புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் பங்கேற்று, பரிசுபெற்று அன்றைய குடியரசுத் தலைவர் திருமதி பிரதீபா பாட்டீல், பிரதமர் மன்மோகன் சிங், திருமதி சோனியா காந்தி, நிதியமைச்சர் திரு ப. சிதம்பரம், மத்தியமைச்சர் புதுவை நாராயணசாமி உள்ளிட்ட பல அமைச்சர்களின் பாராட்டுக்களைப் பெற்றோம்.

தேசியளவில், புதுதில்லி, உதய்ப்பூர், மும்பை, கோவா, ஹைதராபாத், சென்னை, மேற்கு வங்காளம், ஒரிசா, பெங்களூர்,கல்கத்தா உள்ளிட்ட பலநகரங்களில்நடைபெற்ற பல்வேறு கலை மற்றும் கலாச்சாரத் திருவிழாக்களிலும், தேசியக் கிராமியக் கலைவிழாக்களிலும் தமிழகத்தின் சார்பாக எங்களது கவின் கலைக்குழு தேர்வு செய்யப்பட்டு எனது மாணவிகளுடன் பங்கேற்றிருக்கிறேன்.

தேசிய அளவில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் எங்கள் கலைக்குழு தேர்வு செய்யப்பட்டு பல நாடுகளில் நடைபெற்ற சர்வதேச கலை விழாக்களிலும் சிறப்பாக பங்கேற்றிருக்கிறோம். 2010–ம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற தீபாவளித் திருவிழாவில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பாக சிறப்பாக பங்கேற்று அனைவரின் பாராட்டுகளையும் பெற்றேன்.

2012–ம் ஆண்டு ஓமனில் நடைபெற்ற கலைத் திருவிழாக்களில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பாக பங்கு பெற்றிருக்கிறேன். சோகாரில், இந்தியன் சோஷியல் கிளப் சார்பில் நடைபெற்ற நாட்டுப்புற நாட்டியம் என்னும் கலை நிகழ்ச்சிகளிலும், மஸ்கட் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற மயக்கும் மண்வாசனை என்னும் கலைத் திருவிழாவிலும் எனது மாணவிகளுடன் பங்கேற்றிருக்கிறேன். எட்டுத் திக்கும் நம் கிராமியக் கலைகளைக் கொண்டு சேர்ப்பதில் இது என் சிறிய பங்கு என்பதை தங்களுடன் பணிவாய் பகிர விழைகிறேன்.

பள்ளி, கல்லூரி, மாவட்ட, மாநில, மண்டல மற்றும் தேசிய அளவிலான கலைப் போட்டிகளுக்கு நடுவராக (Judge) பணியாற்றி, என்னால் முடிந்த அளவிற்கு அரிய பொக்கிஷங்களான நம் கிராமியக் கலைகளை சிறப்புடன் கற்க நம் மாணவ மாணவிகளை ஊக்குவித்து வருகிறேன். அசோசியேசன் ஆஃப் இந்தியன் யுனிவர்சிட்டீஸின் நடுவர் பட்டியலில் (Panel of Judges) நடுவராகத் தொடர்ந்து

பணிபுரிந்து கொண்டு இருப்பது நம் தமிழகத்தில் மிகச் சிலருக்கே கிடைத்த அரிய வாய்ப்பு என்பதை பெருமையுடன் இத்தருணத்தில் பகிர விரும்புகிறேன்.

நம் தமிழக கிராமியக் கலைகளை மிகச் சிறப்பாக வளர்க்கவும், ஊக்குவிக்கவும், நாட்டின் பல மாநிலங்களுக்கு மட்டுமல்லாது பல்வேறு நாடுகளுக்கு நம் கலைத் திறமைகளைக் கொண்டு செல்லவும் பல்வேறு அரசு மற்றும் அரசுசாரா கலை நிறுவனங்களில் பொறுப்பு வகித்து வருகிறேன். அதில் ஒரு சிலவற்றை மட்டும் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமைகொள்கிறேன்.

1. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை
2. தென்னகக் கலைப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்
3. மாநிலக் கலைப் பண்பாட்டுத்துறை, சென்னை
4. தென்னிந்திய சமூக கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக் கழகம், சென்னை
5. தமிழகப் பண்பாட்டுக் கழகம், திருச்சி
6. மேற்கு மண்டல கலைப் பண்பாட்டு மையம், உதய்ப்பூர்
7. இந்தியக் கலாச்சார உறவுகளின் சபை, புதுதில்லி

முப்பது ஆண்டுகளுக்கும் மேலான என் கலைப் பயணத்தில் நான் பெற்றுள்ள பல்வேறு விருதுகளில் ஒரு சிலவற்றை மட்டும் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.

1. 2008–ம் ஆண்டு கிராமியக் கலைச் செம்மல் எனும் விருது சௌத் இந்தியன் சோசியல் அண்ட் கல்ச்சுரல் அகாதமியால் வழங்கப்பட்டது
2. 2010–ம் ஆண்டு ராஜ கலைஞன் விருது தமிழகப் பண்பாட்டுக் கழகத்தால் வழங்கப்பட்டது
3. சிறந்த நடனப் பயிற்சியாளர் விருது நான்கு முறை, லையன்ஸ், ரோட்டரி போன்ற சமூக அமைப்புகள் மூலம் வழங்கப்பட்டது
4. Illustrious Alumnus Award – எனும் பெருமைமிகு விருது நம் கல்லூரியில் 2011–ம் ஆண்டு வழங்கப்பட்டது
5. Meritorious Award – எனும் சிறப்புமிகு விருது புனித சிலுவைக் கல்லூரியில் வழங்கப்பட்டது
6. 2015–ம் ஆண்டு நூற்றாண்டுக் கலைஞர்கள் விருது திருச்சி ரசிக ரஞ்சன சபாவால் வழங்கப்பட்டது
7. 2013–ம் ஆண்டு சிறந்த நாட்டுப்புறக் கலைஞன் விருது புதுதில்லி தமிழ்ச் சங்கத்தில் வழங்கப்பட்டது
8. Best National Folk Dance Choreographer Award எனும் விருது இரண்டாண்டுகள் தொடர்ச்சியாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மஹாராஷ்ட்ரா மாநிலம், புனேயில் உள்ள அகில பாரதீய சான்ஸ்கிரட்டிக் சங்க் எனும் அமைப்பு வழங்கி கௌரவப்படுத்தியது
9. 2011–ம் ஆண்டு, தமிழகத்தின் மிக உயரிய விருதான கலைமாமணி விருது அன்றைய முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தமிழக நாட்டுப்புறக்கலைகளை ஊக்குவிப்பதிலும், இளைய சமுதாயத்திற்கு நம் கலைப் பொக்கிஷங்களை பயிற்றுவிப்பதிலும் என்னுடைய சிறப்பான பங்களிப்புக்காக கிராமியக்கலைப் பயிற்றுனர் எனும் பிரிவில் வழங்கி கௌரவித்தார்.

இத்தகைய என்னுடைய கலைத்திறமைகளும், நான் பெற்ற பெருமைகளும், நான் அடைந்த புகழும் நம் கல்லூரி எனக்களித்த பெரும் அருட்கொடையேயாகும்.

எல்லாப்புகழும் நம் கல்லூரிக்கே!!

இவ்வுலகம் உள்ளவரை நம் கல்லூரியின் புகழ் நிலைத்திருக்கும்!!!

* * * * *

*with Best Compliments from*

# S.S.STEELS

*Dealers in*

**ARS-Power TMT, PULKIT-TMT, JSW, SAIL, VIZAG-TMT,**
**Angles & Channels Etc.,**





**எங்களிடம் கட்டிடங்களுக்கு தேவையான அனைத்து விதமான**
**முறுக்குக் கம்பிகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.**

**Ph : 0431-2714975, 2709693 | Cell : 94436 44633, 94432 87808, 94872 79717**

**No.2, Sub-Jail Road, Palakarai, Trichy - 620 008. E-mail : sssteels.trichy@gmail.com**

# V3 IMAGING TECHNOLOGIES

**90/108, General Bazzar, Thennur, Trichy - 620 017.**

**HCL Authorized channel partner for sales & service**
**Exclusive for Toshiba&Konica Minolta copiers**

5 ANNIVERSARY

www.v3its.co.in | 77081078650, 7708278650 | 0431-4544365 | 0431-2793650
info@v3its.co.in | 9894337650, 9894333247 | v3imagingtech@gmail.com





- Sales/Service/AMC for Copier, EPABX & Projectors
- Comprehensive service contract for copiers
- Communication & Network cabling
- Interactive white boards
- Supply of spares,ink&Toners for all Printers & Copiers
- Video Wall
- Computer and Laptop Services

HCL





Trichy | Karur | Theni | Salem
Madurai | Tirunelveli | Thiruvarur

TOSHIBA Leading Innovation >>> KONICA MINOLTA KYOCERA Gestetner HITACHI EPSON SIEMENS

# Unity Public School

(Affiliated to CBSE up to Class XII)
(A Cradle for Good Etiquettes)

**Enter into the world of wisdom through the gate of Islam "Great opportunity for your beloved children to learn both Islam and formal Education at one Haven"**



- CBSE Curriculum to take care of Academics.
- Sports, Games and Taek Wondo to take care of Physical Education.
- Islamic Curriculum and Vlead (Personality Development Course) to take care of Character Education.
- State of Art Labs & Activity Rooms
- Indoor & Outdoor Games Facility
- 250+ Capacity Auditorium (Air Conditioned)
- 1000+ Capcaity School Masjid (Air Conditioned)

No. 109, Lakeview Road, (Behind Birla Planetarium),
Kottur, Chennai - 600 085. Phone : 24451233, 24451244
www.unitypublicschool.com, E-mail : unitypublic@unityschool.in

# QUADRA net

திருச்சி மாநகரின் அதிவேக இணையசேவை

***Hi-speed Wireless Broadband for Business & Home Users, Live Streaming, Leased Line & Dedicated Line Internet Services.***

superfast internet speeds

superamazing value for money

superhuge download limits



**Call +91-98420 72721**
**0431-2331415**

**www.quadraindia.in / quadranet**

#11/07 First Floor JMC Complex Race Course Road Khaja Nagar
Trichy Tamil Nadu INDIA 620020

# JAMAL THE BEAUTY

**SHALAUDEEN,**
Former Professor, Dept. of Mathematics,
Jamal Mohamed College,
Trichy - 620 020.

JAMAL means beauty. JAMAL stands for unity. JAMAL is a family. It is exactly 51 years since I joined Jamal after my Post Graduation there. It is 21 years, I retired. It is said that as the age increases the brain shrinks. Memory fades. But, I do not know why my memories of Jamal are so fresh even now as if it has gone into every pulse of mine. To recollect reverberating moments of 50 years in fact has been a fascinating experience. I delight, I enjoy, I rejuvenate with every moment there at the age of 73 years now.

Tears roll in my eyes when I think about my institution which was started in 1951, for nearly 26 years without any capitation fees, without Govt. Aid, it was paying salaries and perks till the institution became an aided Institution. Not even a single month went without payment of salaries.

One thing very often striking in my mind, when the college started in 1951, the jurisdiction of Madras University was from Madras to Kanyakumari which included big and well established Institutions like Loyola, Madras Christian College, St.Josephs, American College in Madurai, St.Xaviers in Palayamkottai and for all of them, a two year old Jamal was a night mare. In every sports activity like football, athletics, and hockey, Madras University team always had Jamalians. I recollect with profound respect nd regard Mr. S. Thiagarajan, Physical Director who made Jamal to stand tall and ever remembered.

Still, I admire the vision and foresight of the founders of our institution and the founder Principal Alhaj Janab Sayeed Sahib..

There were no full-fledged class rooms, there was not even an auditorium. Yet Jamal stood above all in teaching and learning . Teaching in an ideal way, has been the soul of Jamal. Dr. Hari Rao, Prof. E.W.P. Thomas, Prof. C.S. Kamalapathi, Prof. Thorgal, Prof. S.N.Devanathan, Prof. Abraham, Prof. D.N.Krishnamoorthy, Prof. Rabindran, Prof. Paul Sundar Raj and the list would go on and on who made their departments make their mark.

What a fantastic team was there in the Maths Department. Every member has been contributing the team with excellent brotherhood. Not a single soul had any difference. Here, I should mention Dr. G. Ramachandran who made the dept. to reach its peak.

I wanted Jamal to be second to none. In my thirties, I spent no idle hours at home. At this context, I wish to tell one thing to youngsters who aspire for a job in a firm/organisation. In any firm/organisation you are employed, strive for making the firm/organisation second to none. You will be an asset. I feel proud in conveying that two of my students, Dr. Sindhasha and Dr. Kader Mohideen became Principals of my Alma Mater and now my student's student and Dr.Ismail Mohideen has become the Principal of this great institution. I am sure Jamal would reach glorious heights.

Coming to another part of my service, NSS was introduced in selected 9 colleges in 1970-71 in Madras University area to make the students realise the lives of poor, to serve them,to learn group living, and develop their own personality. I was entrusted with the responsibility of the Programme Officer for our college. What has been amazing about it, is students' readiness to serve the needy in hard

conditions without bothering their sufferings. They have served in remote rural areas in Kolli hills, Mohanur, Yercaud, Gundur and in slums in Woraiyur where beedi workers dwell. They stayed with them for days together and served them. In the adopted village Gundur, they eradicated illicit distillation in the area which was much appreciated by D.I.G. Vaikunth and other Police personnels.

The students not only went to rural areas but also served the Trichy public during the festive occasions and calamities. For the services rendered by Trichy colleges, the public of Trichy for the first time in the country created an endowment for N.S.S. During the worst ever floods in Tiruchirapalli in 1977, the students of our college swam against the current in Woraiyur bridge to give food and milk to the marooned. Seeing the three pioneering colleges, St.Joseph's, Holy Cross and Seethalakshmi College worst affected by floods with knee high silt in class rooms, labs and hostels, the students of Jamal Mohamed College strived for fourteen days at a stretch in these colleges and left premises only after seeing the reopening date in the notice board.

Hon'ble Chief Minister Dr. M.G. Ramachandran and other ministers who visited the colleges to find the flood havoc and after seeing the students serving as scavengers, presented a Role of Honour to our college. I would be ungrateful if I do not mention Dr. V. Natarajan, Prof. Panchanathan and Prof. Abdul Hayath for all their help, guidance and support in running the Programmes. The ultimate impact of students' service had developed the excellent cordial relationship among Police, students and the Public. There was no student unrest, there were no group clashes and in fact there was no divisions in the society.

Jamal became the training centre for Programme Officers of other colleges. More than seven training programmes have been conducted. When Bharathidasan University was established in 1982, I was selected as the first Programme Coordinator for the University including affiliated colleges in Trichy, Tanjore and Pudukkottai districts. My basic thinking was Bharathidasan University to be second to none. I do not know how it became a Josh. As a five year child, Bharathidasan University won the Inter University Championship for three years in succession in 1987, 1988 and 1989 conducted for 42 Universities by the Association of Indian Universities, New Delhi. The services of Jamal Mohamed College students namely, Elangovan, Guhan Raj, Ilango, Vekataraman, Sundar Raj, Abdul Rahim, James Vasanthan and Andrew Santhosh made Bharathidasan University not only to win Championships for three years in succession but also made 18 member Bharathidasan contingent selected for Festival of India in U.S.S.R. in 1987. Only 36 students were selected all over India for the Festival of India.

It was on July 7, 1987 Festival of India was inaugurated by the President Gorbachev and our Prime Minister Mr. Rajiv Gandhi in Lenin Stadium, Moscow. It was scintillating sight to see the one lakh audience stood up and gave standing ovation to these students when they were asked to go around the arena when the Programme was over. Dr. V. Natarajan of Tamil Department, Dr.Uma Maheswari of Thiruvaiyaru College and Mr. Natarajan Physical Director of Thiruverumbur School were instrumental in making the students reach such a mark. It is a fact that students given opportunities would develop their potentials can be seen from James Vasanthan who has become a well known Music Director and KalaiMaMani Elangovan who has taken the mission for Tamil culture.

Two memorable instances occurred in U.S.S.R which I am unable to forget: We were travelling in Moscow one day in an Air controlled Bus. At the central place in Moscow there were banners, festoons and balloons with inscription ' Long live Mayor Pishkinov. (Exact name not in memory). I asked the Group in charge who was a senior officer in USSR whether it was political. No,

he said. Then he narrated one incident. His sister was residing in Lenin Hills (like St. Thomas Mount) One night in worst winter there was a complete black out. In winter, temperature in Moscow touches -30 degrees Celsius. His sister made a direct call to this Mayor. "I am Helena from Lenin Hills. Every where it is dark and too chill.

My one year child is having fever. My husband is out of town on duty. " Within sometime there was knock at the door saying, "I am Mayor to whom you phoned". She opened the door and saw him carrying logs of wood in his hand. He said "I am going to Power Station, till the supply is restored make use of this wood". Saying that, he went to Power Station to restore the supply. The repair went on till 6 A.M. At that time power people asked about his stay in chill weather. He said in one sentence "THEY ARE UNDER MY CARE"

**SECOND INCIDENT :**

After our performances in Moscow, we divided into two groups. One was headed by me to Northern Provinces and the second was headed by Dr. Uma Maheswari for Southern Provinces. Towards the fag end of the tour, we were in Taalin, North West city in USSR close to Finland and near to North Pole. In summer, the sun sets around 2 A.M and raises around 2.45 A.M. In winter, vice versa. After our Programme was over around 2 A.M. we were getting into the bus. There was a middle aged lady standing at the entrance with a tall charming boy at her side. When I was about to enter, the interpreter said that the lady wanted to talk to me. I asked,"What". She said she was watching the students in T.V. and the girls did not allow even their finger touched. Pointing towards the boy at her side, she said, "He is my only son aged 25 years. He finished M.Tech. in Moscow University and working in Moscow Research Centre. Would there be any parent in India who would take my son as their son in law. I promise. I would take care of the girl as more than my daughter".

Hearing that, I asked the girls in my group to get into the bus immediately. I said," Look! I brought these children assuring their parents that I would take care of them as more than my daughters. You do one thing. You advertise in Indian News papers and if a girl and their parents willing go ahead". Afterwards I came to know that, a Post graduate girl from Delhi University married him and they live happily with children.

Before leaving, I asked her why did she tell like that. She said in one word,

"IN THE WHOLE WORLD, PARENTS LIVING FOR CHILDREN THAT IS INDIA"

"Here parents may starve, but won't allow their children to starve."

"Here parents may buy clothes for festive occasions not for them but for children first"

"Here parents do not sleep when their children are sick"

"Here parents bow down before the Almighty not for them but for the future of their children". Such is the culture imbibed in this land for generations by grandfather, great grandfather and so on. Let us preserve it.

The whole world is proud of India. It is because of the personalities like our Founders who left a lasting culture in Jamal which brings true meaning of life. Millions of students established their lives through Jamal and they are spreading the noble culture of Jamal all over the world and live like examples to others.

Long live India.

Ever live Jamal with its glory.

Aameen

# ஜமால் முகம்மது கல்லூரி சரித்திரத்தில் ஓர் அரிய சகாப்தம்



M. அப்துல் ரஹ்மான் M.A.,Ex.M.P.
மாநில முதன்மைத் துணைத் தலைவர்
இந்திய யூனியன் முஸ்லிம் லீக், சென்னை.

தமிழகத்தில் வரலாற்றுத் தடம்பதித்த கல்வி நிறுவனங்கள் மிகச்சில. அவைகளுள் நமது ஜமால் முகம்மது கல்லூரியும் ஒன்று என்பதைவிட நம் கல்லூரிக்கான தனித் தகுதிகளும், தனித் தன்மையும் ஒப்பீடு காட்ட இயலாதவை. கல்லூரியின் வரலாற்றுச் சிறப்புகளைப் பரவலாக நாம் அறிந்திருந்தாலும் எனது மாணவப் பருவத்தில் என்னுள்ளே ஏற்படுத்திய எண்ணத் தாக்கங்களையும், உள்ளத்து உணர்வுகளையும் வெளிக்காட்டுகிற ஆக்கமாகவே இதனை எழுதுகிறேன்.

ஏழை எளிய மற்றும் சிறுபான்மைச் சமூக மாணவர்கள் கல்லூரிப் பட்டப் படிப்புகளுக்கு அவ்வளவு எளிதாகச் சென்றிட முடியாது என்கிற கடினமான சூழல் இருந்த சமயத்தில், அச்சூழலின் அழுத்தத்தைக் குறைத்து, உயர்கல்வி கற்க முற்படும் அனைத்து மாணவர்களுக்கும் உரித்தான கல்லூரியாக ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு மேலான சுதந்திர சகாப்தமாய் விளங்குகிற இக்கல்லூரியைத் தமிழகம் பெற்றிருப்பது ஒரு பெரும் பாக்கியம். இந்நிறுவனத்தின் தோற்றத்திற்கு முழுமையான பங்களிப்பை வழங்கியவர்கள் இருவர். மர்ஹூம் காஜாமியான் இராவுத்தர், மர்ஹூம் ஜமால் முகம்மது இராவுத்தர் சாஹிப் ஆகியோர். இந்த இரு சான்றோர் பெருமக்களும் வழங்கிய இக்கல்லூரி ஏழை, எளிய சமூக மக்களுக்கு ஒரு பெருங்கொடையாகத் திகழ்வதை எவராலும் மறுத்திடவியலாது.

1975–ஆம் ஆண்டு பள்ளிப்படிப்பை முடித்து கல்லூரியில் சேரும் ஆர்வத்தில் நான் முதலில் தேர்ந்தெடுத்தது திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி தான். எனது கிருத்துவ மாணவ நண்பன் ஒருவன் இக்கல்லூரியில் சேர்வதற்கான ஆர்வத்தை என்னுள்ளே உருவாக்கியதே அதற்குக் காரணம். எனது பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்த காரணத்தால் நான் ஒரு முஸ்லிம் மாணவனாக இருந்தாலும் அக்கல்லூரியில் சேர்கிற அழைப்புக் கடிதம் வந்தது. அப்போதெல்லாம் முஸ்லிம் மாணவர்கள் என்றால் உங்களுக்குத்தான் ஜமால் முகம்மது கல்லூரி இருக்கிறதே! அங்கே போகலாமே! என்று சொல்லி திருப்பி அனுப்பிவிடுவார்களாம். ஆனால் எனது மதிப்பெண்கள் நிறைவாக இருந்த காரணத்தால் என்னவோ! அங்க சேரும்படி சொல்லிவிட்டார்கள். அந்த இளமைப் பருவத்தில் நமது ஜமால் முகம்மது கல்லூரியைப் பற்றி நான் அறிந்திராத நிலையில் நமது கல்லூரியில் சேர நான் முயற்சிக்கக்கூட இல்லை என்பதுதான் உன்மை.

இந்த கட்டத்தில்தான் எனது தந்தையார் என்னை ஜமால் முகம்மது கல்லூரியில் சேர்ப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து, திருச்சிக்கு அழைத்துச் சென்று விடுக்கிற செய்தியை என் தாயார் மூலம் அறிந்தேன். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பேரியக்கத்தின் இன்றைய தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் முகைதீன் அவர்கள் நமது கல்லூரியில் வரலாற்றுத் துறைத் தலைவராக பணியாற்றிக் கொண்டிருந்த காலம். எனது தந்தையாரும், பேராசிரியர் அவர்களும் மிக நெருங்கிய நண்பர்களாய் இருந்ததால் நான் பள்ளிக்கூட இறுதி வகுப்புத் தேர்வு எழுதிக் கொண்டிருந்தபோது பேராசிரியர் அவர்களிடம் என் தந்தையார் என் கல்லூரி படிப்புக்காக சொல்லி வைத்துவிட்ட தகவல் பிறகுதான் தெரிய வந்தது. ஒரு குறிப்பிட்ட நாளில் என்னை என் தந்தையார் அழைத்துக் கொண்டு திருச்சிக்கு வந்து, பேராசிரியர் கே.எம். காதர் முகைதீன் அவர்களிடம் ஒப்படைத்து கல்லூரியில் சேரும்படி செய்த அந்த நாள்தான் ஜமால் முகம்மது கல்லூரியின் சிறப்புகளை உணரச் செய்தது. அதற்கு முன்பு சற்று கசப்பாய் இருந்த உணர்வுகள் நமது கல்லூரிக்குள் நுழைந்தவுடன் இனிப்பாய் மாறிய விந்தையை இன்னமும் எண்ணி, எண்ணி மகிழ்கிறேன்.

நமது கல்லூரியில் PUC வகுப்பு மாணவனாகச் சேர்ந்து, மெயின் ஹாஸ்டல் என்று எல்லோராலும் அப்போது அழைக்கப்பட்ட காஜாமியான் ஹாஸ்டல்தான் நாம் தங்கப்போகும் மாணவர் விடுதி என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்குப் பெருத்த ஏமாற்றம் கிடைத்தது. பார்ப்பதற்கே பிரமாண்டமாக எனக்குத் தெரிந்த அந்த

விடுதியில் என்னை சேர்க்காமல், அதன் அருகில் மண்சுவரால் அடைக்கப்பட்ட ஒரு சிறிய குட்டிக் கட்டிடத்தைக் காண்பித்து இதுதான் நீ தங்கிப் படிக்கப் போகிற விடுதி என்று என் தந்தையார் சொன்னதைக் கேட்டு அழுதே விட்டேன். அதுதான் அப்போதைய மாஸ்க் ஹாஸ்டல் (MOSQUE HOSTEL). காரணம் பேராசிரியர் கே.எம்.கே அவர்களின் நேரடி கண்காணிப்பில் அவ்விடுதி இயங்கிக் கொண்டிருந்தது. மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மாணவர்களுக்கான விடுதியாக இருந்தது. கசப்பில் தொடங்கிய என் உணர்வு, ஜமால் முகம்மது கல்லூரியில் சேர்ந்ததால் இனிப்பாய் மாறி, பிறகு மாஸ்க் ஹாஸ்டலில் தங்கவைக்கப்பட்டதால் மீண்டும் கசப்பில் கொண்டுபோய் நிறுத்தியது. ஆனாலும் போகப் போக, மனநிலையில் மாற்றம் ஏற்பட்டு, சரி என்று ஒத்துப்போன என் எண்ண ஓட்டத்தில் ஓராண்டு படிப்பு முடிந்து மறுஆண்டு காஜாமியான் ஹாஸ்டலில் சென்று விட்டேன். 2–வது இங்கே முக்கியம் அல்ல. இந்த ஓராண்டில் ஏழைமாணவர்களுடன் தங்கியிருந்த நாட்களில் என் உள்ளத்தில் ஏற்பட்ட எளிமையும், அடக்கமும், பெருந்தன்மையும், மார்க்க ஒழுக்கமும் என்னைச் சீராய் செதுக்கின என்றுதான் சொல்ல வேண்டும். நமது கல்லூரியில் என் தொடக்க நிலையோ என்னை நேர்கோட்டில் அழைத்துச் சென்றது எனக்குக் கிடைத்த பெரும் பேறு. அந்த மனநிலைதான் இன்றுவரை என்னுள்ளே எல்லா நிகழ்வுகளிலும் பிரதிபலித்துக் கொண்டே இருக்கிறது.

நமது கல்லூரியிலேயே மேற்படிப்பைத் தொடர்ந்த எனக்குப் பல்வேறு சமயங்களில் பல்வேறு நிகழ்வுகள் பாடங்கள் நடத்தின. ஏழை மாணவர்களின் பெற்றோர்களைக் கனிவுடன் அணுகும் கல்லூரி தாளாளர் அப்துல் காதர் அவர்கள் (இன்றைய தாளாளர் ஜனாப் நஜ்முதீன் சாகிப் அவர்களின் தந்தையார்); இன்முகத்தோடு மாணவர்களை அணைத்து, அழைத்துப் பழகிய கல்லூரி முதல்வர் மர்ஹூம் இ.ம. முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்கள்; ஜாதி மத வேறுபாடற்ற சமூக நல்லிணக்கத்தைப் பறைசாற்றும் பல்சமய பேராசிரியர்கள்; ஒரு குடும்பத்து உறவினர்கள் போன்ற பாச உணர்வுடன் பழகிய பல்வேறு சமுதாயத்து மாணவர்கள், இராணுவக் கட்டுப்பாடான நல்ல பாதுகாப்பும், நேரிய கண்காணிப்பும் வழங்கிய ஹாஸ்டல் டெபுடி வார்டன் மேஜர் ஷா; அவ்வப்போது ஒழுக்க நெறியைக் கற்பித்திடும் சன்மார்க்கச் சொற்பொழிவுகள் என ஏராளமாக அடுக்கிக் கொண்டே போகலாம். கல்லூரி பாடத்திட்ட வகுப்புகள் மாத்திரமல்ல; வாழ்க்கையில் பண்படத்தக்க பல பயிற்சி வகுப்புகளும் அவ்வப்போது நடைபெறும். இத்தகைய பயிற்சிகள்தான் பாடத்திட்ட கல்வியையும் தாண்டி நல்ல மனிதனாக வாழ வடிவமைத்து சிற்பிகளாக என்னைப் போன்ற பல மாணவர்களுக்கும் அமையப் பெற்றன. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பல்வேறு துறைகளில் இன்று சிகரங்களாய் பரிணமிக்கக் காரணமாய் இருந்த நமது கல்லூரியை எந்த மாணவனாலும் மறக்கவே முடியாது.

அதனால்தான் உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளிலும், உள்நாட்டிலும் பணிபுரியும் நம் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் ஆங்காங்கே JMC முன்னாள் மாணவர்கள் அழைப்பு என்றே உருவாக்கி, நமது கல்லூரியின் வளர்ச்சிக்குத் துணை நிற்கிறார்கள். தமிழகத்தில் நமது கல்லூரி முன்னாள் மாணவர்கள் அமைப்புகளைப்போல வேறு எந்த கல்லூரிக்கும் இல்லை என்பதை இன்னமும் பலரும் அதிசயத்தோடு சொல்வதைப் பார்க்க முடிகிறது. தொடக்க நிலையிலிருந்து இந்த மாணவர் அமைப்பு உருவாவதற்கும் பேராசிரியர் முனைவர் M.M. ஷாகுல் ஹமீது அவர்களின் முழுமையான ஈடுபாடு மறக்கமுடியாது. நமது கல்லூரி தொடங்கிய நாளிலிருந்து இத்தனை ஆண்டுகள் கடந்து இந்நாள் வரையிலும் Capitation Fee என்று கூடுதல் தொகையாக ஒரு பைசாக்கூட வாங்கிடாத ஒரு நல்ல கல்வி நிறுவனம் என்கிற பெருமிதத்தை ஒவ்வொரு மாணவரும் உணர்ந்திருப்பதே இதற்கு மிக முக்கியக் காரணம்.

முன்னாள் மாணவர்களுக்கான அமைப்பை முதன்முதலாக ஐக்கிய அரபு பெருநகர் துபாயில் தொடங்கியபோது அதற்குப் பின்புலமாக இருந்தவர்களில் நாமும் பெருமளவில் பங்கு கொண்டோம் என்கிற மன நிறைவு எனக்குண்டு. அதன்மூலமாக நமது கல்லூரி வளாகத்தினுள் இருபெரும் கட்டிடங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இன்னும் பல கட்டிடங்களுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் துணை நின்ற பெருமை துபாய் மாணவர் அமைப்புக்கு உண்டு. முதன்முதலாக NAAC ஆய்வுக்குழுவினர் நம் கல்லூரிக்கு வந்தபோது துபாய் மாணவர் அமைப்பின் சார்பில் நாங்கள் அங்கிருந்து இதற்காகவே பிரத்தியேகமாகப் பயணித்து வந்து அந்த ஆய்வுக் குழுவினருடன் கலந்துரையாடல் செய்து, படிப்பை முடித்து விடைபெற்றுச் சென்ற எங்களின் மனநிறைவை வெளிகாட்டினோம். அப்போது உங்கள் அனைவரின் தகவல்களும் இயற்கையாகவே உயிரோட்டத்துடன் இருந்தன; செயற்கையாக நாங்கள் எதனையும் உணரவில்லை; இதற்காகவே உங்கள் கல்லூரிக்கு முதன்மை ஸ்தானம் கொடுக்கலாம் என அந்த ஆய்வுக் குழுவின் தலைவர் சொன்னது இன்னமும் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அதன்படியே

NAAC–ல் முதன்முறையாக நம் கல்லூரிக்கு உயர்நிலை தகுதி கிடைத்ததை நம் கல்லூரி நிர்வாகத்தினரும், பேராசிரியர்களும் பலமுறை சொல்லி, சொல்லி மகிழ்ந்ததை மறக்கமுடியாது.

நமது கல்லூரியின் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் 1978–79 கல்வி ஆண்டில் நடைபெற்றன. மூன்று நாட்கள் நடைபெற்ற பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளில் திருக்குர்ஆன் மனனமாக ஓதும் போட்டி அகில இந்திய அளவில் முதல் நிகழ்ச்சியாக நடந்தேரியது. தேசிய அளவிலான போட்டி என்பதால் பல்வேறு மாநிலங்களிலும் உள்ள ஆங்கிலம், உருது, இந்தி போன்ற மொழிகளிலான செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு ஏராளமான விண்ணப்பங்கள் வரப்பெற்றன. ஒருநாள் முழுவதும் நடைபெற்ற இந்த கிராஅத் போட்டிக்கு மிக மூத்த உலமாக்கள் ஐவர் நடுவர்களாகப் பொறுப்பேற்று நடத்தித் தந்தனர். அப்போது குர்ஆன் மஜ்லிஸ் என்கிற மாணவர் அமைப்பு நமது கல்லூரியில் மார்க்கம் சம்பந்தமான நிகழ்வுகளை நடத்தும் வழக்கம் இருந்தது. எனவே இந்த கிராஅத் போட்டியின் எல்லா ஏற்பாடுகளையும் குர்ஆன் மஜ்லிஸ் மாணவர் அமைப்பே முன்னின்று நடத்திட கல்லூரி முதல்வர் வாய்ப்பு அளித்தார். குர்ஆன் மஜ்லிஸ் அமைப்பின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றிருந்த நான் அனைத்து ஏற்பாடுகளையும் செவ்வனே செய்து வெள்ளிவிழா குழுவினர் பாரட்டையும், பட்டயத்தையும் பெற்றது இன்றளவும் இனிப்பாய் நினைவில் நிழலாடுகிறது. மாணவப் பருவத்தில் தேசிய அளவிலான ஒரு நிகழ்ச்சியை நடத்தும் பயிற்சிகளால் நமது கல்லூரியில் நான் பெற்றதால் வெளிநாடுகளில் பணிபுரிந்தபோது இதுபோன்ற பல நிகழ்வுகளை மிகச் சிறப்பாக நடத்துவதற்கு ஒரு நல்ல அனுபவமாக உணர்ந்தேன்.

இதைப்போலவே, கடுமையான மழையினால் திருச்சி மாநகரம் வெள்ளக்காடாய் மாறிய போது பல்வேறு இடங்களுக்குச் சென்று நிவாரணப்பணிகள் ஆற்றியது; கல்லூரி பேராசிரியர்களின் அறவழிப் போராட்டத்திற்குத் துணைநிற்கும் வகையில் அனைத்து கல்லூரிகளின் மாணவர்களைத் திரட்டி அமைதி வழியில் அரசின் கவனத்தை ஈர்த்தது; மிலாது விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளில் முஸ்லிம் அல்லாத சகோதர சமுதாயத்து சான்றோர் பெருமக்களைச் சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து உரையாற்ற வைத்தது; கிராமப் புறங்களுக்குச் சென்று இலவச மருத்துவ முகாம் நடத்தியது; இவைகளெல்லாம் மாணவப் பருவத்திலேயே நம்மை மிகவும் சிறந்த நெறியில் பக்குவப்படுத்திக் கொள்ள பயன்பட்டன என்றால் மிகையாகாது.

2009–ஆம் ஆண்டு வேலூர் தொகுதியில் நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டபோது நமது கல்லூரி நிர்வாகிகளும், முதல்வர் மற்றும் பேராசிரியர்களும் தொகுதிக்கே நேரில் வந்து எனக்காக எனது வெற்றிக்காகப் பணியாற்றியது வாழ்வில் மறக்கமுடியாத ஒன்று. நமது கல்லூரியில் பயின்ற ஒரு மாணவன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வருவது நமது நம் கல்லூரிக்குப் பெருமை என்கிற உணர்வில்தான் அவர்களின் வருகை மெய்ப்பிக்கப்பட்டது. பெற்றோர் – பிள்ளை பாச உணர்வைப் போன்று கல்லூரி – மாணவர் என்கிற பிணைப்பு நமது கல்லூரியைப் பொறுத்தமட்டில் அலாதியானது. இத்தகைய பாச நேச உணர்வும் பாங்கினை எனக்குத் தெரிந்து மற்ற எந்த கல்லூரியிலும் நான் கண்டதில்லை.

நமது கல்லூரியிலிருந்து MBA வகுப்புக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த 60 சீட்டுகளுக்கும் மேலாக இன்னும் 60 சீட்டுகள் வேண்டும் என்று விண்ணப்பம் செய்யப்பட்டு, அதற்கான அதிகாரிகளின் ஆய்வு முடிவுற்று நான்கு ஆண்டுகள் ஆகியும் டெல்லி AICTE–யிலிருந்து எந்த பதிலும் இல்லை என்கிற தகவலை 2010–ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் Dr. ஷேக் முகம்மது அவர்கள் மூலம் அறிந்தேன். இதுபோன்று எத்தனை மடங்கு சீட்டுகள் நம் கல்லூரிக்கு அதிகமாகக் கிடைத்தாலும் 'போதாது' என்கிற அளவில் மாணவர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஜமால் முகம்மது கல்லூரியை நோக்கி பெருமளவில் வருவதை நன்கு உணர்ந்திருந்த எனக்கு ஒருவிதமான உந்துதல் உருவாகியது. எப்படியாகிலும் டெல்லியில் AICTE அதிகாரிகளைச் சந்தித்து கூடுதலாக 60 சீட்டுகளைப் பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்ற முயற்சியில் மிகத் தீவிரமாக இறங்கினேன். இதற்காக AICTE–யின் சேர்மனையே நேரில் சந்தித்து வலியுறுத்திப் பேசும்போது எல்லா கல்லூரிகளிலிருந்தும் இதுபோன்ற வேலைகளுக்கு அந்தந்த நிறுவனங்களின் நிர்வாகிகளோ அல்லது பேராசிரியர்களோதான் இங்கு வருவார்கள்; ஆனால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு, ஒரு கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவரே வந்து ஈடுபடுவது என்பதை இப்போதுதான் பார்க்கிறேன்; உங்களின் ஈடுபாட்டை உணர்கிறேன்; மதிக்கிறேன் என்று AICTE சேர்மன் என்னிடத்தில் மகிழ்ச்சிப் பெருக்கோடு சொல்லி, 60 கூடுதல் சீட்டுகளுக்கான அதிகாரப்பூர்வ ஆணையையும் என் கையிலேயே ஒப்படைத்ததை என் வாழ்நாளில் மறக்க வியலாத ஒன்றாக எண்ணுகிறேன். கிடைத்தவுடனேயே நம் கல்லூரி முதல்வரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்தபோது அவருக்கு ஏற்பட்ட இன்ப அதிர்ச்சியை அறியமுடிந்தது.

நமக்கு இந்த கூடுதல் சீட்டுகள் கிடைக்குமா? என்ற சந்தேகத்தில் இருந்த நம் கல்லூரிக்கு அது கிடைத்தே விட்டது என்கிற பெருமகிழ்ச்சியை கல்லூரி நிர்வாகிகளும், பேராசிரியர்களும் பெற்றதை நான் பெற்ற பேறாக எண்ணி வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்தினேன்.

அதேபோல தற்காலிக பேராசிரியர்களாகப் பணிபுரிந்த 50–க்கும் மேற்பட்ட பேராசிரியர்களை நிரந்தரமாக்க பெரிதும் முயற்சித்து 33% பெண் பேராசிரியர்கள் நிரப்பப்பட்டால்தான் ஆண் பேராசிரியர்களுக்கு ஏற்பு ஆணை வழங்கப்படும் என்ற காரணம் காட்டப்பட்டு பரவலாக எல்லா கல்லூரிகளின் விண்ணப்பங்களும் அரசாங்கத்தால் மறுக்கப்பட்டன. அந்த நேரத்தில் தமிழக சிறுபாண்மை கல்லூரிக்கு மட்டும் இந்த விதி தளர்த்தப்படுகிறது என்கிற அறிவிப்பை உருவாக்கி, நம் கல்லூரி விண்ணப்பங்களை ஏற்கச் செய்து, அத்தனை தற்காலிகப் பேராசிரியர்களும் நிரந்தர பேராசிரியர்களாக நியமனம் செய்தவதற்கு நமது முயற்சியும், உழைப்பும் காரணமாக இருக்கும் பேற்றினை வல்ல இறைவன் எனக்குத் தந்தான். அந்த பேராசிரியர்களெல்லாம் இன்று சந்தித்தாலும் கூட நன்றியுணர்வோடு இதனை நினைவுபடுத்திப் பேசுவது எனக்கு எப்போதுமே மகிழ்வைத் தரக்கூடிய ஒன்று.

நமது கல்லூரியில் எல்லா அடிப்படை வசதிகள் இருந்தும் மாணவர்கள் மட்டுமே படித்துக் கொண்டிருந்த நிலையிலிருந்து மாணவிகளையும் படிக்கச் செய்யும் விரிவாக்க அனுமதி கேட்டு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்த போது அனுமதி கிடைக்காமல் தாமதமாகிக் கொண்டே இருந்த தகவல் கிடைத்தது. அப்போது அப்பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ஜெகதீசன் அவர்கள் வெளிநாடு சுற்றுப்பயணம் முடித்து துபாய் வழியாகத் திரும்புகிறார் என்கிற செய்தியறிந்து அவருக்கு நமது முன்னாள் மாணவர் அமைப்பின் சார்பாக துபாயில் வரவேற்ற நிகழ்ச்சி ஒன்றை மிகச் சிறப்பாக நடத்திடவும், நம் கல்லூரியில் மாணவிகள் சேர்க்கையைத் தொடங்க எப்படியும் அனுமதியை வாங்கிவிடுவோம் என்றும் திட்டமிட்டோம். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கல்லூரி நிர்வாகிகளையும், முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் சிலரையும் துபாயிக்கு வரவழைத்து அந்த வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கு கொள்ளச் செய்தோம். அந்த நிகழ்ச்சியில் துணைவேந்தரை வரவேற்றும் – நான் பெண்களின் கல்வி நிலைபற்றியும், அதிலும் குறிப்பாகச் சிறுபான்மை முஸ்லிம் சமுதாயப் பெண்களின் கல்வித் தேவை பற்றியும் குறிப்பிட்டு எல்லா அடிப்படை வசதிகளையும் முக்கியத் தகுதியாகக் கொண்டிருக்கும் ஜமால் முகம்மது கல்லூரியில் பெண் பிள்ளைகளும் சேர்ந்து படித்திடும் அனுமதி தேவைப்படுகிறது, ஏற்கனவே அதற்கான விண்ணப்பமும் கல்லூரியிலிருந்து தரப்பட்டுள்ளது; அனுமதி கிடைக்க நீங்கள்தான் பரிசீலனை செய்ய வேண்டும்; அனுமதி கிடைக்குமா? என்பதை இந்த மேடையிலேயே நம்முடைய துணை வேந்தர் அறிவிக்க வேண்டும் என்று பேசி முடித்தேன். பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ஜெகதீசன் அவர்கள் மேடையிலேயே அறிவிப்பு செய்து, நான் திருச்சி திரும்பியதும் கல்லூரி முதல்வர் என்னை வந்து சந்திக்கலாம்; அனுமதிதர உறுதியளிக்கிறேன் என்று அறிவித்தபோது என்மேனியில் ஏற்பட்ட சந்தோஷ அதிர்வலைகளை என்னால் மறக்க வியலாது. அன்றுதான் மாணவர்களும், மாணவிகளும் தனித்தனி பகுதிநேர வகுப்புகளாகப் படிக்கும் முடிவைக் கல்லூரி நிர்வாகம் எடுத்தது. இதன்மூலம் இருபாலரும் ஒன்று சேர்ந்து படிக்கும் Co-Education முறை தவிர்க்கப்பட்டு தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக நம் கல்லூரியில்தான் தனித்தனி நேரம் ஒதுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட வரலாறு உருவாயிற்று.

இப்படியே பல்வேறு நிகழ்வுகளை நினைவலைகளாகச் சொல்லிக் கொண்டே போகலாம். நிறைவாகச் சொல்ல விரும்புவது ஒன்றுதான்.

தூய எண்ணத்தோடும், தொலைநோக்குச் சிந்தனையோடும் உருவாக்கப்பட்ட நமது ஜமால் முகம்மது கல்லூரி காலமெல்லாம் நீடித்து நிலைத்து நிற்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. கல்லூரியின் மூலம் பல, பல ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மாணவ மாணவிகள் உயர் கல்வி பயின்று செல்வர்; எனவே கல்லூரியின் வளர்ச்சி பயணத்தில் நிர்வாகத்தினரோடு நாம் அனைவரும் ஒத்துழைத்து ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது நம் உயிருள்ள காலம் வரையிலும் செயலாற்றிக் கொண்டே இருப்போம் என்கிற உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவோம்; வல்ல இறைவன் அதற்கு எல்லா வகையிலும் துணை நிற்பானாக!

ஆமீன்.

# ஜமால் - என் இனிய நினைவலைகள்



M.AJ. முஹம்மது இக்பால்,
பொதக்குடி.
முன்னாள் தலைவர் JMC ALUMNI KUWAIT CHAPTER
முன்னாள் தலைவர் தமிழ்நாடு முஸ்லீம் கலாச்சார பேரவை, குவைத்.

தமிழக முஸ்லீம்களிடையே 1960–களில் பள்ளிப் படிப்பை முடித்து மேற்கல்வி கற்பதில் ஒரு எழுச்சி ஏற்பட்ட காலம் என்றே சொல்லலாம். அதற்கு முன்பாக தமிழக முஸ்லீம் சமுதாயத்தில் பட்டபடிப்பு முடித்தவர்கள் மிகக் குறைவாகவே இருந்தனர். திருமறையின் முதல் சூராவிலேயே கற்பதை வலியுறுத்திய சமுதாயத்தின் பரிதாப நிலை அன்றைய காலக்கட்டதில் அப்படிப்பட்டதாகத்தான் இருந்தது என்று சொல்வதே உண்மை. அன்றிருந்த ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட முஸ்லீம்களில் பெரும்பாலானோர் மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங் போன்ற கிளை நாடுகளுக்குச் சென்று கிடைத்த கீழ்மட்ட வேலைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, பொருள் ஈட்டி தங்களின் குடும்பங்களுக்கு அனுப்பி வைப்பவர்களாகவே இருந்தனர். அதில் மிகக் குறைவானவர்களே சிறிய, பெரிய வகை வணிகர்களாக இருந்து செல்வத்தை தேடுபவர்களாக இருந்தார்கள். அப்படிப்பட்ட சமுதாயத்தில் தான் தங்களின் பிள்ளைகளாவது உயர் கல்வியைப்பெற வேண்டும் என்ற வேட்கை அவர்களிடம் ஆழமாக இருந்தது. அன்று தஞ்சை, ராமநாதபுரம் மற்றும் பல மாவட்டங்களிலிருந்து உயர்கல்வி நாடிச் சென்றோரை வரவேற்று கல்வி தந்த கல்வி நிறுவனம் நம் ஜமால் முகம்மது கல்லூரி என்று கூறினால் மிகையாகாது. குறிப்பாக அன்று தஞ்சை மாவட்டத்தில் இருந்த கூத்தாநல்லூர், பொதக்குடி, அடியக்கமங்கலம், அத்திக்கடை, கொடிக்கால்பாளையம், நாகூர், நாகப்பட்டினம் போன்ற கீழத்தஞ்சையை சேர்ந்தவர்களும், அய்யம்பேட்டை, ராஜகிரி, பாபநாசம் போன்ற மேல் தஞ்சையை சேர்ந்த மாணவர்களும் பெரும் அளவில் நம் கல்லூரியில் பயிலக்கூடிய அரிய வாய்ப்பைப் பெற்றனர்.

அந்த மாணவர்களை அரவணைத்து வழிகாட்டியவர்களில் நம் கல்லூரியின் முன்னால் முதல்வர் மதிப்பிற்குரிய இஸ்மாயில் சாஹிப், பேராசிரியர்கள் ஹயாத், MMS போன்றோரின் பங்கு பெரிய அளவிலே இருந்ததை இங்கு நினைவுகூர விரும்புகிறேன். அந்தக் காலக்கட்டத்தில் கல்லூரியின் விடுமுறை நாட்களில் இந்தப் பகுதி மாணவர்கள் ஒன்றாகப் புகை வண்டியில் ஊருக்குச் செல்வதும், மீண்டும் ஒன்றாகவே ரயில் பயணம் செய்து கல்லூரிக்குத் திரும்புவதும் ஒரு சுகமான அனுபவம் என்றே சொல்வேன். அப்படி ஜமாலில் மேற்படிப்பு முடித்து தம் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொண்டு, இன்று பல சாதனையாளர்கள் நம் தமிழகம் முழுவதும் பரவி உள்ளார்கள். இன்றைய காலக்கட்டத்திலும் நம் கல்லூரியில் பயின்ற பல மாணவர்கள் சாதனையாளர்களாக மலர்ந்து சமுதாயப் பணியாற்றி வருவதை கண்கூடாகக் காண்கிறோம்.

இதற்குக் காரண கர்த்தாவானவர்கள் நம் நாட்டின் சுதந்திரப் போராட்ட களத்திலே தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, சமுதாய பணியாற்றி வந்த மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய சென்னை ஜமால் முஹம்மது சாஹிப் அவர்களின் குடும்பமும், திருச்சியைச் சேர்ந்த காஜாமியான் ராவுத்தர் குடும்பமும் தான் என்பதை நாம் என்றும் நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும் நினைவு கொள்ள கடமைப்பட்டுள்ளோம். அந்த இரண்டு குடும்பங்களின் கனவு, கடின உழைப்பால் முஸ்லீம் சமுதாய மக்கள் மட்டுமின்றி ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்திற்குமே உன்னதக் கல்விப் பணியை அந்த குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆற்றி வரும் பாங்கு போற்றுதலுக்கு உரியதாகும். தென்னகத்தின் அலிகார் என்று சொல்லக்கூடிய அளவிலே இன்று ஜமால் நீண்டு வளர்ந்து கல்வித் துறையிலே கொடிகட்டி பறப்பதை காண மனதெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது.

நாங்கள் நம் ஜமாலில் படிக்கும் நாட்களில் பெற்ற அனுபவங்கள் ஏராளம், ஏராளம். இன்று நாமெல்லாம் நல்ல குடிமகனாக வாழ்ந்து வருவதற்கு ஜமால் என்ற பாசறையில் பெற்ற பயிற்சியே காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது. குறிப்பாக இஸ்லாம் சார்ந்த வாழ்க்கை நெறிமுறையை மிக ஆழமாக மனதிலே பதித்துக் கொண்ட காலகட்டம் அது. உதாரணமாக புனித ரமலான் மாதத்தில் கூட்டாக அமர்ந்து சஹர் செய்வதாக இருக்கட்டும், கல்லூரி பள்ளிவாசலிலே அமர்ந்து நோன்பு திறக்கும்

நிகழ்வாகட்டும், மற்றும் வருடா வருடம் HOSTEL DAY கொண்டாட்டமாகட்டும் என்றுமே பசுமையாக மனதிலே பதிந்து விட்ட இன்பகரமான நினைவுகளே. அன்று ஜமால் கேம்பஸில் கற்றுக்கொண்ட இஸ்லாமிய நெறி இன்று வரை வாழ்க்கையை செம்மைப் படுத்தி வருகிறது.

நம் நாடு விடுதலை அடைந்திருந்த கால கட்டத்தில், சமுதாய மேம்பாடே பெரிதான நோக்கமாகக் கொண்டு மாமேதைகள் ஜமால் முகம்மது சாஹிப் மற்றும் காஜாமியான் ராவுத்தர் இவர்களின் கனவுத் திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி நிறுவனம் இன்று ஆலம் விருட்சமாக வேர்விட்டு வளர்ந்து ஆண்கள் / பெண்கள் இருபாலரும் ஏறத்தாழ 11,000–ம் மாணவர்கள் கற்கக்கூடிய கல்விக் கூடமாக வளர்ந்திருப்பது கண்டு மகிழ்ச்சியும், உவகையும் அடைகிறோம். இது ஒரு மாபெரும் சாதனை ஏக இறைவனின் கருணையே.

நான் குவைத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது ஏறத்தாழ 5 ஆண்டுகள் JMC ALUMNI KUWAIT CHAPTER–ல் என்னை ஈடுபடுத்திக் கொண்டு, அதன் தலைமையேற்று நற்பணி ஆற்றக்கூடிய மகத்தான வாய்ப்பினைப் பெற்றேன். அந்தக் காலகட்டத்தில் ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு கல்லூரி வளாகத்திற்குச் செல்லும் வாய்ப்பினை பெற்று Prof. MMS அவர்களுடன் சேர்ந்து கல்லூரி வளாகத்தைச் சுற்றி வரும்போது சவூதி, துபாய், சிங்கப்பூர், புருனை போன்ற நாடுகளில் செயல்பட்டு வரும் ALUMNI CHAPTERS சார்ந்த முன்னால் மாணவர்கள் நம் கல்லூரியின் INFRASTRUCTURE வளர்ச்சியில் பங்குகொண்டு பல கட்டிடங்கள் கட்டித்தந்திருப்பது மற்றும் பல நல்ல காரியங்களில் பங்காற்றியிருப்பதை பார்த்த போது என் மனதிலும் KUWAIT ALUMNI சார்பாக இந்த நல்ல பணியில் நம் பங்கை அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஆழ்மனதில் இருத்திக் கொண்டு, KUWAIT திரும்பியதும் அதற்கான ஏற்பாடுகள் செய்து நம் கல்லூரி மாணவர்கள் மற்றும் நம் சமுதாய மக்களின் அன்பளிப்போடு உதயமானது தான் இன்று காஜாமியான் விடுதியில் உதயமாயிருக்கும் KUWAIT ALUMNI BLOCK. என் BATCH-MATE சகோதரர் Dr.ஷேக்முகம்மது அவர்கள் கல்லூரி முதல்வராக இருந்தபோது, அந்தக் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்துக் கொண்டு KUWAIT BLOCK–ஐ திறந்து வைக்கும் நல்வாய்ப்பைப் பெற்றேன், அல்ஹம்துலில்லாஹ். இன்று உலகம் முழுவதும் பரவி பணியாற்றி வரும் JAMALIANS நம் கல்லூரியின் வளர்ச்சியில் பங்கேற்பதோடு, தாங்கள் பணிபுரியும் நாடுகளில் நல்ல பல சமுதாய பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு வாழ்ந்து வருவதையும் நாம் காண்கிறோம். அதுமட்டுமல்லாமல் இன்று தமிழகத்திலுள்ள ஆயிரக்கணக்கான கிராமங்களிலும், சிறு, பெரு நகரங்களிலும் நம் JAMALIANS அந்தந்த ஊர்களின் உயர்வுக்கு தன்னால் இயன்ற சேவைகளை ஆற்றி வருகிறார்கள். கிராம நிர்வாகத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது, அந்தந்த ஊர் பொதுமக்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடுவது, போன்ற நல்ல பல காரியங்களை ஆற்றி வருவதை எங்கு சென்றாலும் காண முடியும்.

இன்றைக்கு நமது கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ள தாளாளர் டாக்டர். காஜா நஜிமுதீன், பொருளாளர் ஜமால் முகம்மது மற்றும் மற்ற கல்லூரி நிர்வாகிகள், கல்லூரியின் நிர்வாகத்தை மிகச் சிறப்பாக நடத்தி, நம் தமிழக மக்களுக்குக் கல்விப் பணியாற்றி வருவதை பார்க்கும் போது மனதிற்கு மட்டிலா மகிழ்ச்சியாக உள்ளது. கல்விப்பணி என்பது வியாபார மயமாக்கப்பட்ட இந்தக் காலகட்டத்தில் எந்தவிதமான வியாபார நோக்கமும் இல்லாமல், சமுதாய மக்களுக்கு நல்ல கல்வி கொடுப்பதை தன் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு இன்று நம் ஜமால் எத்தனை எத்தனையோ பெரிய கல்வியாளர்கள், சமுதாயத் தலைவர்கள், வணிகர்கள், பெரும் புரவலர்கள் என அனைத்துத் தரப்பு பண்பாளர்களையும் உருவாக்கித் தருகிறது என்றால் அது மிகையாகாது.

இவ்வளவு சிறப்புப் பெற்று விளங்கும் இக்கல்லூரியை உருவாக்கிய இருபெரும் மாமனிதர்கள்

M.ஜமால் முஹம்மது சாஹிப்,

ஜனாப் N.M.காஜாமியான் ராவுத்தர்

இவர்களின் தன்னலமற்ற சேவையை நினைவு கூர்ந்து, அதை நம் நிகழ்கால மற்றும் வருங்கால சந்ததியினருக்கும் எடுத்துக்கூறும் முகமாக வரும் 11.07.2018 அன்று நம் கல்லூரியின் நிறுவனர் நாள் விழாவினை நடத்தி, அன்றைய தினத்திலே இந்த இருபெரும் வள்ளல்களின் வாழ்க்கை குறித்து சிறப்பு மலர் வெளியிடவிருக்கும் செய்தி அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

வல்ல இறைவன் மென்மேலும் வளர்ச்சியைத் தந்து, தொடர்ந்து சமுதாயப் பணியாற்றிட எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்வோமாக!!!

* * * * *

# அழகு ஜமால் - மலரும் நினைவுகள்



பேராசிரியர் அ. கமாலுதீன்,
மேனாள் துணை முதல்வர், இயற்பியல் துறைத் தலைவர்,
ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 020.

ஜமால் என்னும் அரபிச் சொல்லிற்கு 'அழகு' என்று பொருள்படும். தற்போது ஜமால் முகம்மது கல்லூரி அனைத்து நிலைகளிலும் அழகு பெற்று தன்னிகரற்ற, சிறப்பு மிக்க, பல்நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகளைத் தன்னுள் கொண்டு பெயருக்கேற்றாற் போல் திகழ்கிறது.

கல்லூரி உருவாவதற்கு அடித்தளமிட்ட ஹாஜி. ஜமால் முகம்மது சாகிப், கான் சாகிப் காஜாமியான் இராவுத்தர் (நிறுவனத் தலைவர்) ஹாஜி. ஜமால் மொய்தீன் சாகிப் (நிறுவன செயலாளர்), ஹாஜி. அப்துல் சமது சாகிப் (நிறுவன பொருளாளர்), ஹாஜி முகம்மது சயீத் சாகிப் (நிறுவன முதல்வர்) ஆகியோரை சமுதாயம் மறக்க இயலாது.

கல்லூரி தொடங்குவதற்கு முன் அதற்கு அடித்தளமிட்ட ஹாஜி. ஜமால் முகம்மது சாகிப் உலகை விட்டுப் பிரிந்தமையால் அவருடைய பெயரால் நினைவால் ஜமால் முகம்மது கல்லூரி என்று பெயரிட்டுத் தொடங்கிய கான்சாகிப் ந.மு. காஜாமியான் இராவுத்தரை மறக்க முடியுமா ? தோல் கொடுத்த தோழனுக்கு சிறப்புச்செய்து நன்றி மறவா ஆத்மா அல்லவா கான்சாகிப். ஜமால் குடும்பம் ந.மு. குடும்பம் இணைப்பிரியா தோழமை கொண்டு சமுதாயத்திற்கு கொடுத்த அறிவுப்பெட்டகம் ஜமால் முகம்மது கல்லூரி ஆகும்.

ஹாஜி ஜமாலுத்தீன் சாஹிப் மிகவும் கண்டிப்பானவர், நேர்மையானவர், நிர்வாகத்தில் தேவையில்லாமல் தலையீடு செய்யாமல் கல்லூரியின் வளர்ச்சியை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டவர். மிடுக்கான தோற்றமுடையவர். அவர் தான் 1968–ல் எனது பணி ஆணையில் கையெப்பமிட்டு கல்லூரி ஆசிரியப் பணியில் தடம் பதிக்க அனுமதியளித்தவர். அவரும் கல்லூரிக்கு ஓர் அழகாகும்.

கல்லூரியின் நிறுவன முதல்வர் சயீத் சாஹிப் அவர்களை கல்லூரிக்குள் காலடி வைத்த எவராலும் மறக்க முடியாது. தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணியைத் துவக்கிய மனிதர் உழைப்பால் உயர்ந்து கல்லூரியின் முதல்வரானார். 1951–ஆம் ஆண்டு கல்லூரி தொடங்கப்பட்ட பொழுது திருச்சி மாநகரத்தில் எந்த கல்லூரி முதல்வருக்கும் கார் (நான்கு சக்கர வண்டி) கிடையாது. கல்லூரி முதல்வர்களில் கார் வைத்திருந்த ஒரே முதல்வர் ஜமால் கல்லூரி முதல்வர்தான். MDJ 306 என்பது அவரது கறுப்பு காரின் எண்களாகும். ஷேர்வாணியை மேல் ஆடையாகவும், சுருவால் பைஜாமாவை கீழ் ஆடையாகவும் அணிந்து தலையில் ஜின்னா கேப் கிரீடமணிந்து மிடுக்கு நடையுடன் வரும் போது பார்ப்பவர் மனதைக் கவரும். மாணவர்கள் அறியாமலேயே குட் மார்னிங் என சொல்லி விடுவார்கள். கல்லூரி வராண்டாவில் முதல்வர் நடந்து வரும்போது எவராவது ஒரு மாணவன் கண்டு கொள்ள வில்லையானால் சயீது சாகிப் அவர்களே குட் மார்னிங் என்று சொல்லுவார்கள். அந்த மாணவன் வெலவெழுத்து தலை குனிவான். மாணவர்களை ஈர்க்கக் கூடிய சக்தி அவரிடத்தில் குடிகொண்டிருந்தது.

கல்லூரி அரசு மானியம் பெறும் கல்லூரியாக இருந்தாலும் மானியம் வர தாமதமாகும் போது கல்லூரி ஆசிரியர், ஆசிரியரல்லாதவர்களுக்கு மாத சம்பளம் வழங்க பணம் போதாது. அப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் கல்லூரியின் மதிப்பைக் காப்பாற்ற துணை நின்றவர் கல்லூரியின் நிறுவன பொருளாளர் N.M.K. அப்துல் சமது சாகிப் ஆவார்கள். முதல்வர் பொருளாளரிடமிருந்து பணத்தைக் கடனாகப் பெற்று குறிப்பிட்ட தேதியில் சம்பளத்தை பட்டுவாடா செய்தார்கள். ஜமால் வரலாற்றில் சம்பளம் வழங்குவது தாமதிக்கப்படவேயில்லை. தற்போது Direct Payment அரசு நேரடி வழங்கல் வந்துவிட்டது.

முதல்வர் சயீத் சாகிப் அவர்கள் மார்க்கப் பற்றுள்ளவர், தொழுகையில் மிகவும் பேணுதலாக இருப்பார். கல்லூரி வளாகத்தில் பள்ளிவாசலை உருவாக்க அப்போது மாவட்ட கலெக்டராக இருந்த ஜனாப் குலாம் முகமது பாஷா அவர்களைத் தூண்டி 1960–ஆம் ஆண்டு ஜமால் பள்ளிவாசலை அழகுபட உருவாக்கினார். கலெக்டரும், முதல்வரும், டாக்டர் சபியுல்லாஹ் கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினரும் (பஜ்ரு) காலைத் தொழுகைக்கு பள்ளிக்குத் தவறாமல் வந்து விடுவார்கள்.

மாணவர்களுக்கு மார்க்கக் கல்வியை போதிக்கும் நல்ல நோக்கத்தில் வாரந்தோறும் வியாழன் மாலை அஸர் தொழுகைக்குப் பிறகு குர்ஆன் மஜ்லிஸ் என்ற அமைப்பின் மூலமாக தீனியாத் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தார். வரலாற்றுத்துறை பேரா. சையது இபுராகீம் எம்.ஏ.எல்.டி. குர்ஆன் மஜ்லிஸ் இயக்குனருடன் முதல்வர்

அவர்களும் தவறாது நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள். மாணவர்களுக்கு ஒரு ரோல் மாடலாக சயீத் சாகிப் விளங்கினார்கள் என்றால் அது மிகையாகாது. அன்னாரின் நினைவாக காஜா நகரில் ஒரு தெருவிற்கு சயீத் சாகிப் தெரு என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

1950, 60–களில் மூன்று கல்லூரிகள் திருச்சியில் இருந்தன. கல்லூரிப் படிப்பின் தரத்தை உயர்த்த மற்ற கல்லூரிகளிலிருந்து ஓய்வு பெற்ற நல்ல ஆசிரியர் பெருமக்களை கல்லூரியில் பேராசிரியர்களாக நியமித்தார். ஷேக்ஸ்பியர் கமலபதி சார், சைகாலஜி சர்மா சார், தமிழ்த்துறையில் பேராசிரியர் இறையருட் கவிமணி அப்துல் கபூர், பேரா. நயினார் முகம்மது, தலைப்பாகை தேவர் அவர்கள், பிஸிக்ஸ் பேரா. டொர்கல், பொருளாதாரத்துறையில் டாக்டர் பிள்ளை, ஆங்கிலத் துறையில் பேராசிரியர் நஞ்சுண்ட மூர்த்தி, விலங்கியல் துறையில் டாக்டர் ஹரிராவ், இயற்பியல் துறையில் பேரா. தேவநாதன், பேரா. ஹீட் ராஜாக் விக்டர், கணிதத்துறையில் பேரா. ஈஸா, பேரா. ஜோசப், லாஜிக் பேரா. ஆப்ரஹாம், கெமிஸ்ட்ரி பேரா. உஸ்மான் அலி, பெரியசாமி, காமர்ஸ் பேரா. E.P.M. இஸ்மாயில், நிஜாமுத்தீன், ராமமூர்த்தி, எகனாமிக்ஸ் பேரா. நூர் முகம்மது, அப்துல் சமது, அப்துல்லா பாஷா இன்னும் பலர். இவர்களுக்கெல்லாம் கிரீடம் வைத்தாற்போல் விளங்கியவர் ஆங்கிலப் புலமைப் பெற்றப் பேரா. தாமஸ் அவர்கள். கல்லூரியுடைய நிறுவன துணை முதல்வராகவிருந்து சயீத் சாகிப் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தார்கள். அன்னாரின் நேர்மை, சொல் வளம், திறமையால் சயீத் சாகிபிற்கு பிறகு ஓர் ஆண்டு கல்லூரி முதல்வராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்கள். இயற்பியல் துறைப் பேராசிரியர் புனிதவளனார் கல்லூரியில் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாமின் (Classmate) வகுப்புத்தோழர் என்பதும் ஓர் அழகுதான். விடுதியில் மேஜர் ஷா அவர்களின் பங்களிப்பை மாணவர்கள் மறக்க முடியாது.

**M.Sc. Physics :**

1960–களில் இயற்பியல் (Physics) முதுகலை படித்த முஸ்லிம்கள் சென்னை பல்கலைக்கழகத்தில் இருவர்தான் இருந்தனர். எனவே M.Sc. Physics தொடங்க விண்ணப்பம் போடப்பட்டது. சின்டிகேட் மீட்டிங்கில் உறுப்பினராகவிருந்த ஒரு கல்லூரி முதல்வர் ஜமாலில் எப்படி M.Sc. ஆரம்பிக்க முடியும் ? அங்கு என்ன இருக்கிறது. “Only palmara trees are there and not even a blade grass would grow there - பனை மரங்கள்தான் அங்கு உள்ளன மேலும் புல் செதும்பு கூட அங்கு முளைக்காது“ என்று சொல்லியிருக்கிறார். அதற்கு சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் லெட்சுமணசாமி முதலியார் மறுப்புத் தெரிவித்து M.Sc. தொடங்க புற்கள் தேவையில்லை, இன்ஷா அல்லாஹ் கட்டிடங்கள் உருவாகும் என்றார். அன்னாரின் வாக்குப்படி இன்று வளாகம் கட்டிடங்களால் நிரம்பியிருக்கிறது.

1966 ஜூன் மாதம் M.Sc. தொடங்க பல்கலைக்கழகம் அனுமதியளித்தது. வெறும் 8 சீட்டுகள்தான். அதில் ஒன்றை எனக்கு வேண்டும் என்று பலமுறை முதல்வரைச் சந்தித்தேன். 8 சீட்டுகளும் மெரிட்டில் போடப்பட்டுவிட்டன. திரும்ப சந்தித்துக் கேட்டபொழுது ‘Kamaludeen, nothing is in my hand. We have applied for 4 additional seats. pray to Allah’ என்று சொன்னார். இரண்டு நாட்கள் கழித்து பிரின்சிபால் பியூன் தங்க காசீம் என்னிடம் வந்து ‘வாங்க சாப் உங்களைக் கூப்பிடுகிறார்’ என்றார். நான் ஓடிப் போய் பார்த்தேன். ‘Kamaludeen Allah has accepted your prayer. we have got 4 additional seats’ என்று Admit M.Sc. Physics என்று எழுதி சீட்டைக் கொடுத்தார். இந்நிகழ்வை எனது வாழ்நாளில் மறக்க முடியாது. அன்னாரின் உதவியால் ஜமால் கல்லூரியின் First Batch M.Sc. Physics (1966–68) என்ற பேற்றினை பெற்றேன்.

கல்லூரி மற்ற துறைகளிலும் சிறக்க வேண்டுமென்பதற்காக Sports and Games–ல் பேரா. தியாகராஜனை P.D.–ஆகப் போட்டு கல்லூரியின் பெயர் ஓங்க ஆவண செய்தார். ஜமால் Foot ball team மிகவும் பெயர் பெற்றது.

N.C.C.–யில் அரபி பேரா. அப்துல் ரஹ்மான் அவர்களின் சேவையை மறக்க முடியாது, Captain என்றால் அவர்தான் Captain. கணீர் குரலும் கண்டிப்பும் மிக்கவர். ஜமால் N.C.C. பல கேடயங்களை பெற்று முதல் நிலையில் இருந்தது.

முதல்வர் இஸ்மாயில் சாகிப் (1971–85) காலத்தில் பல புதிய கோர்ஸ்களள் தொடங்கப்பட்டன. ஹாஸ்டின் பிளாக் போன்ற பல கட்டிடங்கள் கல்லூரி வளாகத்தில் உருவாயின. வரலாற்றுத் துறை தொடங்கப்பெற்று பேரா. K.M. காதர் மொகிதீன் அதன் தலைவரானார்.

அடுத்து வந்த முதல்வர் பெரும்புலவர் பேரா. சி. நயினார் முகம்மது (1985–89) காலத்தில் கல்லூரியின் தரம் ஒழுக்கத்திலும் நடைமுறையிலும் சிறந்து விளங்கியது. கல்லூரியின் சிறப்பு அம்சமாக கம்யூட்டர் கோர்ஸ் பில்டிங் கட்டி தொடங்கப்பட்டது. பேரா. மேஜர் அரவாண்டி கம்யூட்டர் துறைக்கு நல்ல முறையில் வித்திட்டார். அதன் பின் கணிதத் துறைப் பேரா. முஹம்மது இஸ்மாயில் துறையை நன்கு கவனித்தார். முதல்வர் பெரும்புலவர் தீனியாத் துறையில் அக்கறை

காட்டி நபிகள் நாயகத்தின் வாழ்வும், வாக்கும் என்ற நூல் வெளியாகவும், தீனியாத் துறை, 'இஸ்லாம் ஓர் அறிமுகம்' என்ற நூலில் மூன்று பகுதிகளும் முதல்வரின் தூண்டுதலால் பேராசிரியர்களால் எழுதப்பட்டு அடியேனால் சரிபார்க்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, எழுதப்பட்டு வெளியிடப்பட்டன.

அடுத்து வந்த முதல்வர் அப்துல் சமது சாகிப் (1989–98) கல்லூரியின் வடபுறம் அமைந்த அஸ்பெஸ்டாஸ் கூரைக் கட்டிடங்கள் எடுக்கப்பட்டு மாடிக் கட்டிடங்கள் உருவாயின. பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் Syndicate Member-ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அடுத்து வந்த முதல்வர் அப்துல்லா பாஷா (1998–2003) காலத்தில் கல்லூரியின் 5 வது மணி (V hour) மாணவர் எண்ணிக்கை குறைவாகிவிடுகிறது. எனவே நோன்பில் மட்டும் ஒரு Session–ஆக காலை 9.00 முதல் மதியம் 1.30 வரை வைக்கலாம் என அடியேன் ஆலோசனை நல்கினேன். அவர் ஒப்புதல் அளித்து அதே போல ஒரு hour-க்கு 50 நிமிடங்கள் என Time Table போடப்பட்டது. Full Attendance வந்தது. மாணவர்களும், ஆசிரியர்களும் இதையே தொடரலாம் என ஆர்வப்பட்டதால் அது தொடரப்பட்டது. மாலையில் கல்லூரி Infrastructure உபயோகமில்லாமல் இருப்பதால் மாலையில் பெண்கள் கல்லூரி தொடங்கலாம் பலர் ஆலோசனை சொன்னதால் மாலை 2.00 மணி முதல் 6.30 வரை நடத்த முடிவு செய்யப்பட்டு பெண்களுக்காக முதலில் மூன்று கோர்ஸ்கள் மட்டும் தொடங்கப்பட்டது. ஹாஸ்டல் கிடையாது. இதுவரை முஸ்லிம் சமுதாயப் பெண்கள் கல்லூரிப் படிப்பு படிக்க அச்சம் கொண்டிருந்தனர். எப்போது ஜமாலில் தொடங்கப்பட்டதோ பெற்றோர்கள் தைரியமாக பல பெண்களை கல்லூரியில் சேர்க்க முன் வந்தனர். இன்று மாணவிகள் எண்ணிக்கை பல்கிப் பெருகிவிட்டது. 2003–ல் முதல்வர் அப்துல்லா பாஷாவும், துணை முதல்வராக அடியேனும் பணி ஒய்வு பெற்றோம்.

கல்லூரி இன்று மாபெரிய கல்லூரியாக உருவெடுத்து விளங்குகிறதென்றால் அதற்கு அடிக்கல்லாக, ஜமால் மரம் இன்று ஆல்போல் தழைத்து பூத்து பெருகி கல்வி கனி தருகிறதென்றால் அதற்கு விதைகளாக இருந்து தங்களை அர்ப்பணித்த அந்த மகாத்மாக்களை நினைவு கூறுவோம்.

May their Souls rest in Paradise.

* * * * *


With best compliments from

IATA

Muzamil
HAJ SERVICE

email : muzamilhajj@gmail.com

Services : AIR Tickets / Hajj & Umra Packages / Visa / Passport

**Trichy :**
#5, 1st Floor, Khaja Mohideen St.,
Palakkarai (Opp. NM Masjid), Trichy - 620 008.
Phone : 0431 - 2703915
**90925 01191, 94984 06276**

**Chennai :**
#341, 2nd Floor, T.H. Road, Near Adam Market,
Triplicane, Chennai - 600 005.
Phone : 044 - 28512366/28523915
**94449 42451, 98412 60717**

**Hyderabad :**
#5-8-170/B, 2nd Floor, 21st Century Complex
Namppally, Hyderabad - 500 001.
Phone : 040 2320 2028
Phone : **97108 74471**

# உயர் கல்வியில் ஜமால் முகம்மது கல்லூரியின் பங்கு



திரு. P. சாகுல் ஹமீது,
மேனாள் விலங்கியல் துறைத் தலைவர்,
ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 020.

விலங்கியல் முதுகலைத்துறை 1969–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். நான் அப்பொழுது ஆய்வியல் உதவியாளராக (Research Asst.) மாநில மீன் வளர்ச்சித் துறை, சென்னை எண்ணூரில் பணி புரிந்து வந்தேன். ஆசிரியராக வேண்டும் என்ற ஆர்வத்தில் ஜமால் முகம்மது கல்லூரிக்கு விண்ணப்பித்தேன். விண்ணப்பித்தவர்களில் மிகச்சிலரே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டனர். அதில் நானும் ஒருவன். அப்போது முதல்வராக இருந்த ஹாஜி. சயீத் சாஹிபிடமிருந்து அவரது சென்னையில் உள்ள மகன் வீட்டிற்கு வருமாறு அழைப்புக் கடிதம் வந்தது. அவர் சிரித்த முகத்துடன் என்னை வரவேற்று உரையாடலைத் தொடங்கினார். எனது கல்வித் தகுதி மற்றும் அனுபவத்தைக் கேட்டறிந்தார். பாளையங்கோட்டை St. சேவியர் கல்லூரியில் இளங்கலையும், சென்னை மாநிலக் கல்லூரியில் முதுகலையும் படித்தேன் எனக் கூறிய போது அவர், நீ குறும்புக்கார பையனா ? என வினா எழுப்பினார். அதிர்ச்சி அடைந்தவனாக, நான் இந்நாள் வரை ஒழுக்கத்துடன் படித்து வந்திருக்கிறேன் என அமைதியாகக் கூறினேன். அந்நாட்களில் அந்த இரு கல்லூரிகளும் மாணவர்களின் போராட்டங்களுக்கு பிரபலமாகி இருந்தன. அதனால் தான் அவ்வாறு அவர் கேட்டிருக்க வேண்டும். ஒரு வாரத்தில் முதல்வர் அலுவலகத்தில் எனக்கு முறையாக நேர்முகத் தேர்வு நடைபெற்றது. Demonstrator-ஆக விலங்கியல் துறையில் தேர்வு செய்யப்பட்டேன். பின்பு விரிவுரையாளராக பதவி உயர்வு பெற்றேன்.

விலங்கியல் துறை ஆரம்பிக்கப்பட்டது ஜமால் முகம்மது கல்லூரியின் உயர்கல்விப் பயணத்தில் ஒரு மைல் கல்லாக அமைந்தது. கல்லூரி நிர்வாகத்தால் முனைவர் பட்ட ஆய்விற்காக Fulbright Scholarship-ல் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்ட மிகச்சிறந்த கல்வியாளரான Dr. ஹரிராவ்; அவர்களின் தலைமையில் விலங்கியல் துறை சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்தது. அவர் துறையிலுள்ள அனைத்து விரிவுரையாளர்களையும், ஆராய்ச்சி செய்வதற்கும் முனைவர் பட்டம் பெறுவதற்கும் ஊக்குவித்தார். அவரது சீரிய முயற்சியால், சென்னை பல்கலைக்கழகம் விலங்கியல் துறைக்கு முனைவர் பட்டப்படிப்புத் தொடங்க அனுமதி அளித்தது.

Dr. வீரராகவன், Dr. அக்பர்ஷா, Dr. ருக்னுதீன், Dr. தங்கவேலு ஆகியோர் Dr. ஹரிராவ் அவர்களை ஆய்வு வழிகாட்டியாகக் கொண்டு பகுதி நேர Ph.D ஆய்வுப் படிப்புக்கு பதிவு செய்தனர். நான் கடல் அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் அறிவியலில் ஆர்வம் கொண்டதால் UGC ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் (FIP) கிடைக்கும் வரை காத்திருந்தேன். அது எனக்கு 1980–ல் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் Centre for Advanced Study in Marine Biology மையத்தில் கிடைத்தது. கல்லூரி நிர்வாகம் அனுமதி அளித்தது.

ஒவ்வொரு ஆசிரியருடனும் Dr. ஹரிராவ் அவர்கள் மிகவும் அன்பாகவும், வெளிப்படையாகவும் பேசி அவர்கள் தங்களின் கல்வித் தரத்தை மேம்படுத்திக் கொள்ள உதவினார். ஆசிரியர் களுக்கென கருத்தரங்கினையும் ஏற்பாடு செய்வார். ஆசிரியர்களின் வகுப்பறை கற்பித்தலையும் மதிப்பீடு செய்வார். முதுகலைப் படிப்பு, ஆராய்ச்சி படிப்பு போன்றவற்றில் தனிச் சிறப்பாக நம் விலங்கியல் துறை செயல்பட்டுக் கொண்டிருந்தது. இங்கு படித்த மாணவர்கள் உயர் ஆய்வில் இந்தியாவில் மிகச் சிறந்த நிறுவனங்களான AIIMS, JNU, CCMB, ALM-IBMS-ஆல் பணியமர்த்தப்பட்டனர். மேலும் சிலர் வெளிநாடுகளில் நல்ல வாய்ப்புகளைப் பெற்றனர் மற்றும் சிலர் IAS, IPS, IFS போன்ற தேர்வுகளில் தேர்வாகினர்.

மிகச்சிறந்த அர்ப்பணிப்பு மிகுந்த தலைமை இருந்ததால்தான் மாணவர்களின் உயர்ந்த தரத்திற்கு காரணமாக இருந்தது. அதேபோல் நம் கல்லூரியில் M.Sc (Phy.), M.Sc (Maths), M.Com, M.A (Eco) M.A (Eng), MCA போன்ற படிப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் பல முஸ்லிம் மாணவர்களும் மற்றவர்களும்

பயனடைந்தனர். இங்கு படித்த முஸ்லிம் மாணவர்கள் நம் கல்லூரி மட்டுமல்லாது பல கல்லூரிகளில் பேராசிரியர்களாகப் பணியமர்த்தப்பட்டனர். நம் கல்லூரி பல கல்லூரி முதல்வர்களையும் உருவாக்கித் தந்துள்ளது. 1970–களில், நம் கல்லூரி நிர்வாகத்தினர் கல்லூரியை மேம்படுத்த பல முயற்சிகள் மேற்கொண்டனர். அதில் ஒன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசனை கொண்டு வியட்நாம் வீடு என்ற நாடகம் நடத்தி தொகை பெற்றது. பணத்தேவையை நிறைவு செய்ய அப்போது உதவி முதல்வராக இருந்த திரு. இஸ்மாயில் சாஹிப் அவர்கள் திருநெல்வேலி சென்று செல்வந்தர்களைச் சந்தித்து கல்லூரி மேம்பாட்டுக்கு நிதி திரட்ட என்னை தேர்ந்தெடுத்தார்கள்.நானும் திருநெல்வேலி குடும்பத்திலிருந்து வந்தவன் என்பதை முதல்வர் நன்கு அறிந்தவர். நான் அப்போதைய செயலர். திரு. ஹாஜி. M.I. ஜமாலூதீன் சாஹிப் மற்றும் முதல்வர். திரு. இஸ்மாயில் சாஹிப் ஆகியோர் திருநெல்வேலி சென்றோம். சர்குணா பார்மஸி நடத்தி வந்த – அல்ஹாஜ் திரு. ஜமால் முகம்மது வீட்டில் நம் செயலர் தங்கினார்கள் (ஜமால் குடும்பத்தின் நெருங்கிய உறவினர்). அவர் முஸ்லிம்களுக்கான அனாதை இல்லம் மற்றும் சதக்கத்துல்லா அப்பா கல்லூரியின் நிறுவனராகவும் இருந்தார். அவர் பிரபலமானவராகவும் பலராலும் மதிக்கத்தக்கவராகவும் இருந்தார். எங்களுக்கு நிதி திரட்டுவதிலும் அவர்தான் வழிகாட்டியாகவும் இருந்தார்.

நம் செயலரோடு பயணிக்கும் ஓர் அற்புத வாய்ப்பாக நான் அதை கருதினேன். மிகுந்த எளிமையுடனும், வார்த்தைகளில் தெளிவுடனும், சுருக்கமாகப் பேசுவதிலும் வல்லவராக இருந்தார். வானியலில் அவரது அறிவுக் கூர்மை என்னை பிரமிக்க வைத்தது. பல நட்சத்திரங்களைப் பற்றியும் அவற்றின் இயக்கம் மற்றும் பயன்களையும் அவர் அழகாக எடுத்துரைத்தார். எனினும் ஒரே நேர்கோட்டில் இருக்கும் மூன்று நட்சத்திரங்களை (Huntars) பற்றி அவர் கூறியது என் நினைவுக்கு வருகிறது. அவை இரவு நேரங்களில் மேற்கு நோக்கி நகரும் எனக் கூறினார். எனவே கடலில் இரவில் பயணிப்போருக்கு அவை வழிகாட்டியாக அமைகின்றன என விளக்கினார். நிதி திரட்டுவதில் எனது ஆர்வத்தையும் பங்கையும் பாராட்டினார். திரு. ஜமால் முகம்மது அவர்களின் வழிகாட்டுதலில், செல்வந்தர்களின் ஒவ்வொரு வீடாக சென்று ரூ. 20,000/- எங்களால் திரட்ட முடிந்தது. 1970–களில் அது மிகப்பெரிய தொகை. காஜாமியான் விடுதியின் மேற்கு பகுதியில் கட்டப்பெற்ற கட்டிடத்தில் இந்த பணமும் பயன்படுத்தப்பட்டது.

கடல் சுற்றுச் சூழல் படிப்பில் Ph.D. பட்டம் பெற எனது ஆர்வம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. 1976–ல் UGC-FIP-Fellowship-க்காக நான் முதல்வரிடம் கேட்டபோது 1978–ல் நம் கல்லூரியின் வெள்ளிவிழா ஆண்டு கொண்டாடப்பட இருக்கிறது. அதனால் அதன்பிறகு அனுப்புகிறேன் என உறுதியளித்தார். அதேபோல் 1980–ல் எனக்கு அனுமதி கிடைத்தது. அதனை நான், நம் கல்லூரியால் கிடைத்த அரிய பொன்னான வாய்ப்பாகக் கருதினேன். இதனால் எனக்குப் பல ஆராய்ச்சியாளர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்து. ஆய்வின் பல பரிமாணங்களை நான் கற்றுக்கொள்ள முடிந்தது. ஆய்வுத் திட்டம் தயாரித்தல், ஆய்வைப் பற்றி எழுதுதல், பிரசுரித்தல், பன்னாட்டு அறிவியல் அறிஞர்களைத் தொடர்பு கொள்ளுதல், அரசு நிதி நல்கை குழுவிடமிருந்து ஆய்வு நிதி கோரி விண்ணப்பித்தல் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டேன். ஆய்விற்குப் பின் மீண்டும் 1984–ல் நம் கல்லூரிக்கு Ph.D. பட்டம் பெற்றுத் திரும்பினேன். அப்போது ஜனாப். அப்துல்லா பாஷா அவர்கள் காஜாமியான் விடுதியின் துணை வார்டனாக பொறுப்பேற்றிருந்தார். அவர் என்னை விடுதியின் முதுகலைப் பிரிவிற்கு ஒருங்கிணைப்பாளராக இருக்குமாறு கேட்டுக்கொண்டார். ஒருங்கிணைப் பாளராக மூன்று வருடங்களும் துணை வார்டனாக ஓராண்டும் (1987–88) பணியாற்றினேன். கல்லூரி நிர்வாகத்திற்காக அப்போதைய முதல்வர் பெரும் புலவர் திரு. சி. நயினார் முகம்மது அவர்கள் எங்களைச் செதுக்கினார்கள். கற்பித்தல், ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுதல் மற்றும் விடுதிப் பொறுப்பு போன்ற வேலைகளில் என்னை அர்ப்பணித்துக் கொண்டேன். ஆராய்ச்சிகளில் முன்னேற்றமடைய தரமான கட்டுரைகளை எழுத வேண்டியிருந்தது. என் முழு கவனமும் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சிக்கான நிதி பெறுவதற்கு விண்ணப்பிப்பதில் இருந்தது.

என் ஆராய்ச்சி கட்டுரைகளால் எனக்கு எளிதாக Ph.D. வழிகாட்டி அங்கீகாரம் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் அளிக்கப்பட்டது. அப்போது இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் (MOEF) காவேரி ஆற்றில் மாசுபாடு குறித்து ஒரு ஒருங்கிணைந்த காவேரி ஆய்வுத் திட்டத்தை வெளியிட்டது. பாரதிதாசன் பல்கலைக்கழகமும் இணைந்து மொத்தம் ஐந்து பல்கலைக்கழகங்கள் இதனை செயல்படுத்தின. எனது விண்ணப்பமும் ஏற்கப்பட்டு ஜமால் முகம்மது கல்லூரியும் தேசிய அளவில் நிறுவப்பட்ட

அந்த ஆய்வுத் திட்டத்தில் பங்கேற்க வழி ஏற்பட்டது. முழுமையாக நிதி கொடுக்கப்பட்ட இத்திட்டத்தில் நம் கல்லூரி 1989–ல் இணைந்தது. புகழ்பெற்ற மும்பையில் உள்ள பாபா அணு ஆய்வு மையத்தால் காவேரி ஆற்றில் கதிரியக்கம் என்ற ஆய்வுத்திட்டம் எனக்கு 1990–ல் வழங்கப்பட்டது. இது நம் கல்லூரி, தேசிய அளவில் புகழ்மிக்க நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும் வாய்ப்பை ஏற்படுத்தியது. இத்திட்டத்தில் தரமான ஆய்வுத் தகவல்களுடன், தரவுகளும் கொடுக்கப்பட்டதால், அந்நிறுவனத்திடமிருந்து கல்பாக்கம் கடற்கரை ஒட்டியுள்ள கடல் நீரிலும் மன்னார் வளைகுடா பகுதியிலும் மேற்கொள்ள திட்டம் தயாரிக்கப்பட்டு என்னிடம் அளிக்கப்பட்டது. நன்கு வளர நம் கல்லூரி விலங்கியல் துறையும், இந்திய அணுசக்தித் துறையும் இணைந்து பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

ஆய்வுத் திட்டங்களால் நாட்டுக்கும், கல்லூரிக்கும் கிடைத்த பயன்கள்

1. காவேரி ஆய்வுத் திட்டத்தினால், திருச்சிராப்பள்ளியில் பாதாளச் சாக்கடை, தேசிய நதிப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.
2. கூடங்குளம் அணுமின் திட்டம் துவங்கும் முன், சுற்றுச் சூழலில் இருந்த கதிரியக்கம் பற்றிய தரவுகள் அணுசக்தித் துறைக்கு வழங்கியுள்ளோம். இத்தரவுகள் அணு உலையிலிருந்து சுற்றுச் சூழலுக்கு கதிரியக்கம் கசிந்துள்ளதா என்பதை அளவிடப் பயன்படுகின்றன.
3. கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் மேற்கொண்ட வெப்ப சூழலியல் ஆய்வுத் தரவுகள் தேசிய முக்கியத்துவம் பெற்றன. இத்தரவுகள் அணுமின் நிலையத்திலிருந்து வெளியேறும் நீரின் வெப்ப அளவை வரையறை செய்ய அரசுக்குப் பேருதவியாக இருக்கின்றன.
4. என்னிடம் Ph.D பயின்ற 6 மாணவர்கள், நம் கல்லூரி விலங்கியல் துறையில் பணியமர்த்தப்பட்டனர்.
5. நீர் மாசு நிர்வாகத்தில் முதுகலைப் பட்டப்படிப்பு (P.G. Diploma in Water Pollution Management) விலங்கியல் துறையில் துவக்கப்பட்டது.
6. சூழலியல் ஆய்வகம் விலங்கியல் துறையில் நிறுவப்பட்டது.

இவைகள் எல்லாம் நம் கல்லூரி நிர்வாகம், அர்ப்பணிப்புள்ள பேராசிரியர்களுக்குக் கொடுத்த ஊக்கம் மற்றும் ஆதரவுகளால் ஏற்பட்ட உயர்கல்வி வளர்ச்சிக்குச் சான்றுகளாகும்.

* * * * *

எந்த நேர்காணலிலும் நான் ஜமாலைப் பற்றிப் பேசாமல் இருந்ததில்லை. திருச்சி வரும்போதெல்லாம் யாருக்கும் தெரியாமல் ஜமாலைச் சுற்றி வருவேன். பல்வேறு துறைகள் செழிந்தோங்கும் வரலாற்றில் ‘என் கல்லூரி’ என்று பூரிப்புக் கொள்வேன்.

எழுபதை நோக்கி அடியெடுத்து வைக்கும் ஜமாலை எண்பத்திரண்டு வயதில் பெருமிதத்தோடு பார்க்கிறேன். இப்பேரால் விருட்சத்தை நட்டுவைத்த கரங்களை நன்றி சொல்லி வாழ்த்துகிறேன். அதன் எழுபதாம் ஆண்டு விழாவிலும் கலந்து கொள்ள மனது பேராசைப்படுகிறது.

கவிஞர். சிற்பி பாலசுப்பிரமணியம்
(1951 – ஆண்டு ஜமால் முகம்மது கல்லூரி முதல் அணியில் பயின்றவர்)

# Jamal – The Elixir of Life

**Y. Humayun Sharief**
Scientist 'D'
Central Silk Board, Govt. of India, Bangalore.
E-Mail: sheriefcsb@gmail.com



Glorious Jamal is an institution which has shown the way to millions and millions of students to lead successful life by imparting not only education but also all the needful and valuable life skills. Now a days, it is rare to see an institution which moulds the character and personality of each and every student so that he can develop his individuality and helpful to the family and the society in general. Jamal is such an institution which takes care of holistic development of the students' community right from 1951 to till date.

The two great founders of the institution, Hajee. M. Jamal Mohamed Sahib and Janab. N.M. Khajamian Rowther not only started the college but also paved the foundation of sovereign culture in this holy soil. Generation after generation, it is fully protected by the following Managements with excellent unity and noble thought in their heart and soul. No one can deny the fact that irrespective of any difference like caste, colour, religion, status, and language, Jamal makes every student to feel proud of the superior treatment which is meted out here. Naturally it is carried and spread by the students in their work places, family and society, in the different corners of the world.

I also got an exceptional opportunity to study in this soil from 1982 to 1992. Jamal embraced me when I was unable to get medicinal studies after my +2. Having interested in human anatomy, I chose to join B.Sc. Zoology in 1982. The journey which I enjoyed over 10 years in Jamal, chiselled me in every aspect. The hallmark of Jamal is the remarkable phenomenon of the relationship between the students and the teachers. The teachers extend their parental care to the students' community. That's why; the students of Jamal always keep the immortal association with their alma mater. I could not forget the teaching methodology adopted by Dr.Gulam Mohideen who could make even a difficult subject into lucid and interesting. We learnt the subjects thoroughly and easily. Sincere students are always the favourite to their teachers. I also cold make myself a favourite student of Dr. Selvam. On seeing my sincerity in bringing the dissection box regularly to the class irrespective of practical classes, he extended a special care to me in all aspects and motivated me to give best performance both in theory and practical examinations.

In supporting the students, the teachers did not show any hesitation and difference among the various departments of the college. It is also the unique feature of our College. I chose Chemistry as my optional subject while I was doing my B.Sc. Zoology. Dr. Siddiq Ali, Prof. of Chemistry, used to take special classes for students. When I was unable to attend his classes, he graciously called me and handed over his notes so that I could copy it. He advised me to return it on the same day evening.

Since there was no photocopying facility near my home, I dared to write it with my own hand and successfully completed in the short span of time and returned it. It is an unforgettable incident in my life. It helped me to learn a lesson that if we begin a task with complete dedication, we can finish it fruitfully. All the credit goes to my teachers like Dr. Siddiq Ali sir.

Dr. Subramaniyam, Dr. Veera Raghavan and Dr. Ibram Shaw, the great stalwarts of the Dept. of Zoology helped us to learn the nuances of PG and M.Phil. courses. Their Scholarly guidance and excellent subject knowledge made us to have deep understanding of the subject and develop the sincere research attitude.

How can I forget the great teacher and humanitarian, Dr. Thangavelu?, the then Head of the Dept. of Zoology who was having unwavering confidence on me and entrusted the keys of the Laboratory so that I could come and do the research work at any point of time. That trust motivated me to concentrate in my research day and night and helping other scholars to do their research.

I am indebted to Dr. P. Shahul Hameed who was observing me right from my UG days and identified my research acumen. He is the right example for the teachers who give individual attention to students and tap their potentialities by providing opportunities. Immediately after my M.Sc. he summoned me. To my pleasant surprise, he offered me the opportunity to work as Project Asst. in his Kaveri River Project under the Ministry of Environment and Forest, Govt. of India. I worked in the Project for 3 years. His guidance and support was like a father to son which helped me to learn with affection. This kind of supreme culture is inculcated in our great institution. Without the support of above mentioned mentors, I could not have reached my current position of SCIENTIST-D in Central Silk Board, GOI, Bangalore, India.

It is because of the special grace of Almighty Allah, the institution is blessed with Magnanimous Management, excellent Faculty members who always work with a team spirit and well disciplined students' fraternity. I feel extremely proud to be a Jamalian which offers me a special status wherever I go. But for the experience of Jamal, I could not have tasted the elixir of life.

* * * * *

**A.Humayun Kabeer** M.Sc,M.Ed.,M.Phil
P.G.Asst (Physics)
The Crescent Higher Secondary School
Avaniapuram-Aduthurai.



I am 1980-83 UG 1983-85 PG (Physics) Batch. I am from small town of Panruti. when I reached our college I really astonished by the college and the hostel atmosphere. I started to learn not only physics but also discipline, punctuality and Islam.

I cannot forget Prof. Kamaludeen , Prof. Jiyavudeen, HOD Razak sir. I learnt punctuality from S.Subburathinam sir and teaching from Umar Basha and Hussain sir.

After completion of my college studies, I started my carrier as teacher. The teaching of physics which I learned from our college made me a successful teacher. Implementation of Dheenyath classes in my school which is in the model of our college.When I am doing my PG the Anti-dowry association was started and I carried about both to my school students. Also I remember Prof.Sheik Mohammed sir former prinicipal, I travelled with him many times for sunday jamath at various places around Trichy. I earned many good friends such as Physics HOD Jamal Mohamed Jaffer vice prinicipal shihsabudeen prof.Ismail prinicipal all are my batch mates.

Apart from that my class mate Haja Hameed HM Mydeen NIC Chennai Afsar HM Mydeen PGT Akbar PGT.

In cultural also we participated along with physics HOD Jafer at festember REC (NIT) TMC Thanjavur.

The evergreen, everlasting long live Jamal.

# My Sweet Memories of Jamal

**M.K. Hidayatullah, B.Sc., B.L.,**
Ex-Additional Government Pleader (Writs) Madras High Court, Chennai – 600 014.
Quondam Part Time Professor in Law, The New College, Chennai – 600 014.

It gives me immense pleasure to share my association with the great institution Jamal. The two great philanthropists Janab. M. Jamal Mohamed Sahib and Janab. N.M. Khajamian Rowther founded the institution with great a vision and mission. Today, our institution is marching ahead carrying the legacy with the dynamic management members and administers. Millions and millions of students are educated and settled all over the globe, spreading the fragrance of holy Jamal.

Janab Alhaj Mohamed Sayeed Sahib M.A.,L.T., was the intellectual who contributed a lot in establishing the institution striving hard with the management. The Management found him to be fittest founder Principal to whom it could safely entrust the entire administrative powers. The magnanimous management never opted even to question him on any subject including his unique style of functioning and fineness of daily administrative caliber. It was the greatest honour that Almighty Lord Allah, the most Beneficent, the most Merciful adorned on him. The most cerebrated, loved, cherished, adorned and renowned institution JMC whose alumni never fail or opt to leave the city of trichy (whenever they have even a solitary or rare occasion to visit the Town), without paying at least a flying visit to the precincts and campus of their great motherly institution which is none other than their second home. Their hearts are full of warmth and joy on the very sight of the institution. In addition, they seldom fail to offer the prayers in the magnificent and elegant mosque which imbibed and inculcated religious fervor discipline and practice to adhere to the basic and fundamental duty which is the most important pillar of Islam viz: the five times prayers. Prof. Kader Ibrahim (now stationed at Hyderabad) was our co-student friend, philosopher and guide within the routine duty to offer prayers and observe fasting on all the 30 days of Holy month of Ramazhan and offering the special Tharaveeh prayers in the mosque, late night too.

The green and cherished memory, the disciplined life and practice acquired in the institution made us strong, determined, and unabated in observing fasting right from the year 1963 till now unshaken, unfettered, uninterrupted and without any break All praise is to Allah, the Almighty who created me, made me a student of Jolly Jamal and afforded me the opportunity to continue to have the association of the alumni, my erstwhile professors, hostel mates, classmates, eminent and exalted learned professors like Janab Prof Osmanali Sahib, (chemistry); Prof Razack Saheb, (Physics); Prof Essa Sahib (Maths); Prof Usmani (NCC), Prof Naziruddin (NCC); Tamil Prof. Devar Ayya; Tamil Prof (Cum Principal) Janab Nainar Mohamed Sahib, Tamil Prof Janab Sathar Sahib, Tamil Prof Janab Pitchai Mohamed; Prof Victor (our warden); Prof Thangavel (our Zoology Professor) and HOD, Prof Rao (Zoology); Prof Paul Sundararaj (Botany); the great English Shakespearean Professor Kamalapathy and so on. They were not only our teachers cum professors but our friends, philosophers and guides.

Alhaj Janab Mohamed Sayeed Sahib was not only just our Principal but our defacto guardian showering on us his abundant love, affection and affinity providing all his students justice, liberty, and equality of status and opportunity making no distinction irrespective of the religion, caste, colour or creed of his students. He never even thought of punishing a student for misbehavior (which was the rarest of rare cases during his tenure as the Principal) without affording a fair opportunity of hearing and

ample opportunity to state the defense following the rule of law viz., "Audialteram partem = nobody shall be condemned unheard" which action of his was based upon the principles of natural justice, equity and good conscience. He had the utmost patience to permit the legitimate expectations of the students adhering to the constitutional mandate and encourage the student to exhibit their talents. However he will never tolerate or digest the malafide intention or undisciplined action or mischief by any student. There was never any element of arbitrariness in any of his action or deeds not only against the students but also against his colleagues including non-teaching staff. He allowed and encouraged the students magnanimously, to practice freedom of speech fearlessly subject, of course to, certain reasonable but justice, equity and good conscience. He was a judge in all respects. He proved to be a legendary figure and established his inner instinct in helping the poor students offering free education and other facilities. His students now are spread all over the world remembering him and the institution as part of their life doing duas for him and the institution almost every day. He stood as a unchallenged testimony in implementing the saying that "Existence of power is different from exercise of power" by being always cautious and careful to contain, and control his auger (which was the rarest of rare occasion) that too very politely. He used to forestall his students by himself first offering his salams "Assalamu Alaikum my dear students".

Such a legendary personality, whose style of functioning was impossible to imitate and emulate cent percent was however achieved with greatest efforts and sustained practice, by his successors-in-office, our beloved English professor and Vice Principal Mr. EWP Thomas; Prof. Ismail Sahib; Prof. Nainar Mohamed Sahib and line of his other descendants adorning the office of the principalship of the great institution.

The present young and energetic Principal Janab. Prof. Ismail Mohideen, with all his humility and humble nature will definitely, Insha Allah Shine, and prove his metal by the grace of Almighty Allah, with the guidance and Co-operation of the current selfless, devoted and dynamic Management steered by Janab Dr.A.K. Khaja Nazeemudeen Sahib D.Litt (Secretary and Correspondent) and the Treasurer Janab Alhaj Jamal Mohamed Sahib, flying the flag of the founders high. I pray Almighty Lord Allah to give enormous strength and support to them and bless the team of present dedicated and service oriented Management and the Vigour, peace, plenty, prosperity and excellent health not only to the men and steer the institution but bless them with all prosperity, peaceful, purposeful and pleasant life to their beloved wives, children, grand children, relation etc., who too contribute their personal sacrifice of precious time in co-operating with their service oriented chiefs to obviate their devotion and dedication of sacrifice which they make and render for the advancement of the institution 'Jamal'. The present management treats the devotion and service as their paramount and supreme choice and consideration compared to their business, ignoring their own personal vocation. The present management gives credence to their unstinted involvement in the affairs of the institution preferring not their precious personal life over looking their comforts, in letter and spirit. Masha Allah!. certainly, Almighty Allah will take care of all their devotion towards the institution and suitably reward them both in this world and also in the hereafter and build palaces in the paradise for them.

Though I had only a very short span of time in meeting my beloved brethren Janab Alhaj Dr.A.K. Khaja Nazeemudeen Sahib D.Litt, Secretary and Correspondent of JMC on 10.05.2017 who welcomed me with pleasant smile amidst his very busy schedule for the day in his prodigiously decorated secretary cum Correspondent's chambers adorned with the amazing excerpts of the verses of Holy Quran framed elegantly mollifying the invitees entering the chambers which appease and pacify, cool and calm them bestowing peace of mind and heartfulness. It is

nothing but special that the splendor and decoration in his chambers reminding the Almighty Lord first and foremost teaching the plain truth that the guest is sitting before an able administrator, highly literate who has got with him the presence of Almighty in his chambers.

I was extremely overwhelmed and pleased with the mannerism of the secretary Sahib whose dynamism in every sphere emerged outwardly by his simple, noble and pleasing characteristic bursting with laughter and serene smile gestures. I learnt a lot from him about his ancestors and the founders of the management of our greatest institution. The education and service imparted by them to women who are present daughters, future wives, mothers and grandmothers is nothing but a devoted service to the Almighty Himself in strict adherence to the preaching and practice of Rahmathullil Aalameen Rasoolullah Sallallahu Alaihivasallarn. Those lucky girl students are the future wives, future mothers; future mother-in-laws; future grandmothers, future leaders of Nation; future academicians, Professionals like doctors, Engineers, lawyers etc., who will implicitly the education, discipline and decorum learnt at JMC to their off springs, siblings and their better halves. Imparting of education to the Ladies is equal to educating the entire family, their household, their husbands, senior citizens in the house, children, grownup sons, daughters, sons-in-law, daughters-in-law, grand children, of course great grand children and so on and so forth.

**Holy Prophet preached that for seeking education "you shall travel even to China".**

**Jamal is such a destination.**

**-May Allah reserve a special status and specially construct a paradise in the heaven for those who are instrumental to impart education to the blessed students.**

# EXPERIENCE @ JMC

**Dr. D. Raja Jebasingh**
Master of Philosophy in Commerce – 2000-2001
Current Position: Asst. Director – Research
St. Joseph's College of Commerce, Bengaluru.

"I am the person that I am today thanks in a big ingredient to JMC, and to the Research Department of Commerce!

"I have to admit that I have gained so much knowledge as well as many skills in my one-year experience at JMC that gave me the potential to proceed to the PhD and take the sky as my only limit.

"My experience at JMC was very fulfilling, not only with regards to the course content but also to the networking opportunities I received. Our professors were true professionals who shared their experience and knowledge with enthousiasm.

Our Professors are very dedicated and helpful. I really enjoyed studying and got a lot out of that year. Overall my academic year studying M.Phil at JMC was an outstanding experience which radically changed the course of my career and life.

But also, my experience in JMC allowed me to interact and work with people from all over the County and coming from different cultures, which is something I must do every day in my job. The knowledge I gained, the moments I lived and the friends I made there are still part of me until today, and I hope they continue to walk together with me into the future, hopefully a persist one"

Sincerely,
(Dr. D. Raja Jebasingh)
Date : 23-04-2018
Place : Bengaluru

# ஒரு ஜமாலியனின் நினைவு அலைகள்

K.R. சையத் அப்துல் சுபஹான்
1954 – 1956
இடைநிலை வகுப்பு (Intermediate)
முன்னாள் தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்

1950களில் அன்றைய கோயமுத்தூர் மாவட்டம், இன்று ஈரோடு மாவட்டத்தில் இருக்கும் சிறிய கிராமம் கரட்டுப் பாளையம் நான் பிறந்த ஊர். துவக்கப்பள்ளியில் அங்கு 5–வது வகுப்பு படித்தபோது என் தந்தையார் காலமானார். நான் என் தாயாருடன் என் தாத்தா மர்ஹூம் S. சையத் இப்ராஹிம் சாஹிப் அவர்கள் வீட்டில் வசித்து சத்தியமங்கலத்தில் உள்ள மாவட்ட வாரிய உயர்நிலைப்பள்ளியில் 6–வது வகுப்பில் சேர்ந்து படித்து வந்தேன்,

வருடம் 1954, மே மாத இறுதி S.S.L.C. தேர்வு முடிவுக்காக காத்திருந்த நேரம். மேற்கொண்டு என்ன செய்வது படிப்பதா ? அல்லது வேலையில் சேர்வதா என்று நினைத்துக் கொண்டிருந்த வேளையில் என் தாத்தா அவர்கள் என்னை அழைத்து மேற்கொண்டு என்ன செய்யப்போகிறாய் என்று கேட்டார். நான் பதில் ஏதும் கூறாமல் இருந்தேன். கல்லூரியில் சேர்ந்து படிக்கிறாயா ? என்று அவர் கேட்டபோது நான் மகிழ்ச்சியுடன் சரி என்று சொன்னேன். அந்த நாட்களில் என் தாயாரின் அக்கா மகனார் மர்ஹூம் ஹாஜி S.M. சையத் அஸ்மத்துல்லா சாஹிப் B.A.B.T., அவர்கள் திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் B.A., 2–ஆம் ஆண்டு படித்துக் கொண்டு இருந்தார். அவரை அழைத்து அவர் படிக்கும் ஜமால் முஹம்மது கல்லூரியில் என்னைச் சேர்த்து விடும்படி சொன்னார்.

SSLC தேர்வு முடிவுகள் வந்தவுடன் என் அண்ணன் என்னை திருச்சி அழைத்துச் சென்றார். அங்கு தன்னுடன் படித்துக் கொண்டிருந்த மர்ஹூம் H. முனாப் அவர்கள் உதவியுடன் அன்றைய நிறுவன முதல்வர் M.J.Mohammed Sayeed Saab அறைக்குள் அழைத்துச் சென்றார். ஜனாப். முனாப் அவர்கள் சிறந்த பூப்பந்து, தடகள விளையாட்டு வீரர். கல்லூரியின் செல்லப்பிள்ளை. அவர் என்னை அழைத்து முதல்வர் அறைக்குள் நுழைந்ததும் முதல்வர் அவரிடம் சிரித்தபடி கேட்ட கேள்வி இன்னும் எவ்வளவு பேரை அழைத்து வருவீர்கள் என்று கேட்டு என்னிடம் எங்கிருந்து வருகிறீர்கள் என்று ஆங்கிலத்தில் கேட்டார். நான் கோயமுத்தூர் மாவட்டம், சத்தியமங்கலத்தில் இருந்து வருகிறேன் என்று சொன்னவுடன் அவ்வளவு தூரத்தில் இருந்து ஜமால் முஹம்மது கல்லூரியில் சேர வந்தது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது என்று சொல்லி நான் விரும்பிய முதல் Group-லேயே சேர அனுமதித்தார். இதுதான் ஜமால் முஹம்மது கல்லூரியில் நான் நுழைந்த வரலாறு.

கல்லூரி திறந்தவுடன் பெட்டிப் படுக்கையுடன் வந்த நான் காஜாமியான் விடுதியில் சேர்க்கப்பட்டேன். காலை உணவு விடுதியில் கொடுக்கப்பட்டது. மஞ்சள் நிறத்தில் அரிசியுடன் செய்த உணவு என்ன உணவு என்று கேட்டபோது குஸ்கா என்று சொன்னார்கள். நான் குஸ்கா சாப்பிட்டது அதுதான் முதல்முறை. என்ன சுவை! என்ன சுவை ! அன்று ஜமால் முஹம்மது கல்லூரியில் படித்த அனைவருக்கும் பிடித்த உணவு குஸ்காதான். விடுதியின் நடுவில் பூப்பந்து ஆட திறந்த வெளி அரங்கம், அருகிலேயே சிறிய அறையில் வானொலிப் பெட்டி, மாலை 8.00 மணி வரை சிலோன் வானொலி திரைப்படப் பாடல்கள். ஆனால் புதன் கிழமை மட்டும் ஹிந்தி திரை இசை பாடல்களின் தொகுப்பான பினாகா கீத் மாலா கேட்ட மாணவர்கள் விருப்பப்படி 8 முதல் 9 மணி வரை நீட்டிக்கப்படும்.

முதல் நாள் விடுதியில் கல்லூரிக்குச் செல்லும்போது ஓர் ஊர்வலம் அதுவும் மாணவர்களின் ஊர்வலம் கல்லூரியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. நான் என்ன என்று கேட்டபோது இந்த மாணவர்கள் எல்லாம் தஞ்சாவூர் மற்றும் அதைச் சுற்றி இருக்கும் ஊர்களில் இருந்து தினமும் தொடர் வண்டியில் காலையில் வந்து மாலை திரும்புவார்கள். விடுதியில் சேர்ந்து படிக்க இயலாதவர்கள், அடித்தட்டில் இருந்து வந்த இவர்களுக்கு ஜமால் முஹம்மது கல்லூரிதான் சிறந்த படிப்பைத் தந்து உயர்நிலைக்கு கொண்டு வருகிறது. இன்று இப்படிப் படித்தவர்கள் உலகமெங்கும் முக்கியமாக சிங்கப்பூர், மலேசியா, அரபு நாடுகளில் chapter வைத்து தாங்களும் வாழ்க்கையில்

முன்னேறி முடிந்த அளவு ஜமால் முஹம்மது கல்லூரியில் படிக்கும் வசதி இல்லாதவர்களுக்கும் கல்லூரி மூலமாக உதவித் தொகை வழங்குகிறார்கள்.

## சில நினைவுகள்

முதல் நாள் வகுப்பில் நுழைந்தவுடன் ஆங்கில வகுப்பு Prof. E.W.P. தாமஸ் அவர்கள் வந்து துணைப்பாடம் (Non-Detail) எடுத்தார்கள். அவருடைய ஆங்கிலம் இனிமையாக இருந்த போதும் பள்ளியில் தமிழ் வழி மூலமாக படித்த எங்களுக்கு புரிந்துக் கொள்ள சிரமமாக இருந்தது. புரிந்தும் புரியாமலும், அறிந்தும் அறியாமலும் இருந்த சூழ்நிலை. துணைப்பாடத்தில் சிறு சிறு கதைகள் என்பதால் சிறிது சுவாரசியமாக இருந்தது.

அடுத்து கணித வகுப்பு Prof. முஹம்மது ஈஸா சாஹிப் அவர்கள் வந்து தன்னை அறிமுகப்படுத்திய பிறகு அல்ஜீப்ரா பாடம் எடுத்தார். நான் பள்ளியில் ஒரு பாடமாக படித்து இருந்தால் புரிந்து கொள்வதில் சிரமம் இருக்கவில்லை. ஆனால் மாணவர்கள் பலர் அவரைப் பார்ப்பதும் பிறகு என்னைப் பார்ப்பதுமாக இருந்தார்கள். எனக்கு ஏன் என்று தெரியவில்லை. வகுப்பு முடிந்தவுடன் என்னிடம் வந்து .... முஹம்மது ஈஸா சாஹிப் அவர்களுக்கு நீங்கள் தம்பியா என்று கேட்டார்கள். அப்போதுதான் எனக்கு ஏன் அவர்கள் என்னையும் பேராசிரியர் அவர்களையும் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள் என்று புரிந்தது. அவருடைய சாயல் என்னிடத்தில் கொஞ்சம் இருந்ததுதான் சந்தேகத்திற்குக் காரணம். நான் அவர் உறவினர் இல்லை என்று கூறினேன்.

Physics விரிவுரையாளர் R. தேவநாதன். அவர் வகுப்புக்கு வந்தபோது Good Morning என்று சொல்லி தமிழில் எங்களை வரவேற்றார். எல்லோருக்கும் ரொம்ப மகிழ்ச்சி, ஆரவாரம் செய்யமுடியவில்லை. அன்றைய கல்லூரியில் இருந்த Discipline அது. முடிந்தவரை ஆங்கிலத்திலும் சிறிது தமிழிலும் விரிவுரை ஆற்றுவார்.

Mr. விக்டர் Physics Lab Demonstrator மாணவர்களுக்கு ஏற்ற நண்பர், பரிசோதனைக் கூடத்தில் பல உதவிகள் செய்வார்.

C.C.C. College Cadet Corps - NCCல் சேர விருப்பம் இல்லாதவர்கள் இதில் சேர்ந்து விடுவார்கள். வெள்ளை மேல் சட்டை மற்றும் கீழே வெள்ளை முழுக் கால் சட்டை சீருடை. சிறிய பேட்ஜில் JMC என்றும் C.C.C. என்றும் இருக்கும். இதைச் சட்டையில் குத்திக் கொள்ள வேண்டும். பேராசிரியர் இஸ்மாயில் சாஹிப் அவர்கள் இதற்குத் தலைவர். முக்கிய வேலை கல்லூரியில் நடக்கும் விழாக்களில் மேடை முதலியவற்றை ஒழுங்கு படுத்தி மாணவர்களை குறிப்பிட்ட இடங்களில் உட்கார வைக்கும் தன்னார்வலர்கள் (volunteers) 1955–ல் சென்னை புதுக் கல்லூரியில், அன்றைய துணை ஜனாதிபதியாக இருந்த Dr. S. ராதாகிருஷ்ணன் அவர்கள் பங்கு பெற்ற விழாவிற்குத் தன்னார்வலர்களாக எங்களை அழைத்துச் சென்றார்கள். மறக்க முடியாத பயணம். என் முதல் சென்னை பயணமும் அதுதான். விழா இரண்டு நாள் நடைபெற்றது. முதல் நாள் துவக்க விழாவிற்கு பலதரப்பட்ட பிரமுகர்களும் அரசியல்வாதிகளும் கலந்து கொண்டார்கள். எனக்குத் தந்த பணி வாசலில் நின்று வருபவர்களின் அனுமதிச்சீட்டைப் பார்த்து அவர்களை உள்ளே அனுமதிப்பது. பிரபல அரசியல்வாதிகளை நேராகப் பார்க்கும் ஒரு வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

இரண்டாம் நாள் மாலை முஷேரா என்ற உருது கவிஞர்களின் கவிதை வாசிப்பு. சென்னையில் இருந்த முஸ்லிம் பெருமக்கள் பலரும் கலந்து கொண்ட நிகழ்ச்சி. மிகவும் அமைதியாக நடந்த விழா இன்றும் என் நினைவில் இருக்கும் ஒன்று.

அடுத்து ஆண்டுதோறும் ஜமால் முஹம்மது கல்லூரியில் நடைபெறும் மீலாத் விழா. அன்றைய இரவு விருந்து கல்லூரியின் புல்வெளியில் மிகச் சிறப்பாக நடைபெறும். நிகழ்ச்சியில் மாற்று மத அறிஞர்களும் பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்புரையும் வாழ்த்துரையும் வழங்கி மத நல்லிணக்கத்திற்கு ஒரு உதாரணமாக இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஜமால் முஹம்மது கல்லூரியில் படித்த இரண்டு வருடங்களில் நிறுவனன முதல்வர் Prof. M.J. Mohammed Sayeed Saab அவர்களைச் சந்தித்து பேசக்கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை. திருச்சியில் பல வருடங்களுக்குப் பின் தொடங்கி இரண்டு கலைக் கல்லூரிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் 3–ஆவது கலைக் கல்லூரியாக அமைந்தது ஜமால் முஹம்மது கல்லூரி. இந்தக் கல்லூரியை ஒரு சிறப்பான கல்லூரியாக உருவாக்கிய பெருமை Prof. M.J. Mohammed Sayeed Saab அவர்களையே சேரும். இன்றும் வாடா மலராக இருக்கும் ஜமால் முஹம்மது கல்லூரிக்கு கொடை வள்ளல் காஜாமியான் ராவுத்தர் அவர்கள் மற்றும் கல்லூரியை

துவக்குவதற்கு பல வழிகளில் முயற்சி எடுத்த ஜமால் முஹம்மது சாஹிப் அவர்கள் 2 தூண்கள் என்றால் Prof. M.J. Mohammed Sayeed Saab அவர்கள் 3–வது தூணாகவும் பல வருடங்களாக நிர்வாக பொறுப்பில் இருக்கும் நிர்வாக உறுப்பினர்களும் பின்னால் வந்த முதல்வர்களும், பேராசிரியர்களும் 4–வது தூணாக திகழ்கிறார்கள்.

தேர்வு முடிவுகள் வந்தவுடன் கல்லூரிக்கு வந்து மதிப்பெண் தாள்களைப் பெற்றுக் கொண்டு சென்றோம். என் விருப்பம் பொறியியல் படிப்பு என்று இருந்ததால் கோயமுத்தூரில் இருந்த அரசினர் பொறியியல் கல்லூரிக்கும் மற்றும் இரண்டு தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கும் பொறியியல் படிப்புக்கான விண்ணப்பங்களை அனுப்பினேன். சில நாட்களில் மூன்று கல்லூரிகளிலும் நேர்முக தேர்வுக்குச் சென்றேன். அரசினர் பொறியியல் கல்லூரியில் அட்மிஷன் கிடைத்தது. என்னுடன் ஜமால் முஹம்மது கல்லூரியில் Ist Group 100 பேரில் படித்த எவ்வளவு பேர் பொறியியல் படிப்புக்கு விண்ணப்பித்தார்கள் எனத் தெரியாது.

ஆனால் மாநிலத்தில் உள்ள வெவ்வேறு பொறியியல் கல்லூரிகளில் 6 பேருக்கு இடம் கிடைத்தது. 5 பேருக்கு கோயமுத்தூரிலும் ஒருவருக்கு சென்னை கிண்டி அரசினர் பொறியியல் கல்லூரியிலும் கிடைத்தது. அன்று சென்னை மாகாணம் மிகவும் அகண்டது. மலபார் மாவட்டம், தென் கனரா மற்றும் ஆந்திராவின் ஒரு பகுதியும் சேர்ந்தது. Composite Madras State-ஆக இருந்தது. இதில் இருந்தது மொத்தம் 8 பொறியியல் கல்லூரிதான், இந்தப் பகுதியில் இருக்கும் கலைக் கல்லூரியில் படித்து பொறியியல் படிப்புக்காக ஆயிரக்கணக்கோர் விண்ணப்பித்து இருப்பார்கள். வெளி மாநிலங்களிலும் இருந்தும் 8–ல் 6 தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கும் விண்ணப்பித்தும் இருப்பார்கள். இதில் ஜமால் முஹம்மது கல்லூரியில் படித்த 6 மாணவர்களை பொறியியல் படிப்புக்குத் தகுதியானவர்களாக ஆக்கிய முழுப் பெருமையும் ஜமால் முஹம்மது கல்லூரிக்கே சேரும்.

பொறியியல் கல்லூரிகளில் பட்டம் பெற்று நான் தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் 1960–ம் ஆண்டே பணியில் சேர்ந்தேன். அப்போது படித்துத் தேர்வு முடிவுகள் வரும் முன்பே வீடு தேடி வேலைக்கான உத்தரவுகள் வரும். 35 வருடம் பணியாற்றி 1995–இல் பணியில் இருந்து ஓய்வு பெற்றேன். இந்தக் காலத்தில் 1977 முதல் 1982 வரை ஐந்து ஆண்டுகள் தான்சானியா நாட்டிற்கு மத்திய அரசின் Deputation மூலமாக பணியாற்றி மீண்டும் வாரியத்தில் சேர்ந்து படிப்படியாக பதவி உயர்வுப் பெற்று 1993–ம் வருடம் தலைமைப் பொறியாளர் ஆனேன்.

எங்கள் குடும்பத்திலும் ஜமால் முஹம்மது கல்லூரிக்கு இருந்த உறவு என் அண்ணார் மற்றும் என்னுடன் முடியவில்லை. எனக்குப்பின் என் தாய் மாமாவின் Grandson Mr. ஷமீருல்லா பஷீர் 1995–98 வரை B.Sc., Computer Science–ம் 1998 முதல் 2001 வரை MCA–வும் படித்து தற்போது Senior Software–ஆக கலிபோர்னியா – அமெரிக்காவில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். அடுத்து என் துணைவியாரின் தம்பி மகனார் Mr. S.F. சையத் பர்ஹான் ஜமால் முஹம்மது கல்லூரியில் 2007 முதல் 2010 வரை BCA படிப்பும் 2010 முதல் 2012 வரை MBA படிப்பும் முடித்து Ani Technologies Pvt. Ltd–ல் Assistant Marketing Managerஆக சென்னையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

இதுமட்டுமல்ல எங்கள் குடும்பத்தில் இருந்து 1953–ம் வருடம் என் அண்ணார் மர்ஹூம் ஹாஜி S.A. சையத் அஸ்மத்துல்லா சாஹிப் B.A.B.T., அவர்கள் ஜமால் முஹம்மது கல்லூரியில் முதல் அடி எடுத்து வைத்தார்கள். இன்று அவருடைய மகனார் Dr. S.A. சையத் அஹமத் பைரோஸ் M.A., Ph.D., அவர்கள் உதவிப் பேராசிரியராக (தமிழ்) இக்கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். எங்கள் குடும்பத்தின் தொடர்பு தொடர்ந்து ஜமால் முஹம்மது கல்லூரிக்கு இருக்கும் என்பதற்கு இவையெல்லாம் உதாரணங்கள்.

பல வருடங்களாக ஜமால் முஹம்மது கல்லூரியின் தொடர்பு இல்லாமல் இருந்தது. வருடா வருடம் நடைபெறும் Alumni Meet–ல் பங்கு கொள்ளலாம் என்று இருந்தாலும் பல காரணங்களால் முடியாமல் போய்விட்டது. இறுதியில் 2015–ல் நடைபெற்ற Alumni Meet–ல் என் துணைவியார் ஜனாபா ஜாயிதா உடன் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். மேடையில் என்னை கௌரவித்தபோது ஜமால் முஹம்மது கல்லூரியில் நடந்த சில நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தேன். அப்போது நான் என் சட்டைப் பையை தொட்டு இதில் என்ன இருக்கிறது. பணமா, மொபைல் போனா, கடிதங்களா என்று அரங்கத்தில் கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்து சொல்லுங்கள் பார்க்கலாம் என்று கேட்டேன்.

சிறிது நேரத்தில் நானே இவையெல்லாம் இல்லை சுமார் 59 வருடங்களாக நான் பாதுகாத்து வைத்திருக்கும் கல்லூரியில் நான் படித்து வெளியே சென்றபோது பேராசிரியர்கள் மற்றும் கல்லூரித் தோழர்களிடம் வாங்கிய ஆட்டோகிராப் என்று சொன்னதும் அரங்கமே அதிர்ந்தது. மேடையில் இருந்த முக்கிய பிரமுகர்கள் அந்த ஆட்டோகிராப் புத்தகத்தை ஆர்வத்துடன் பார்த்து என்னையும் வாழ்த்தினார்கள்.

2016–ம் வருடம் நடந்த Alumni Meet–ல் Distinguished Alumni என்ற விருதை எனக்கு அளித்து ஜமால் முஹம்மது கல்லூரி என்னை கௌவரப்படுத்தியது. ஒரே குறை அன்று என் துணைவியார் என்னுடன் இல்லை.

பேராசிரியர் E.W.P. தாமஸ் அவர்கள் நட்பைப்பற்றி பாடம் நடத்திக்கொண்டு இருக்கும்போது கீழே கண்ட வரிகளைச் சொன்னார்கள்.

Death is not the failing of senses

But forgetting by friends

இதற்கு உதாரணமாக அமைந்தது எனக்கு 5 மாதங்களுக்கு முன் வந்த ஈத் வாழ்த்து மடல். 24.08.2017 அன்று Dr. A. அப்துல் வாஹித் B.Sc., M.B.B.S., ஹாங்காங்கில்இருந்து அனுப்பியது.போதியதபால்தலைகள் இல்லாதால் கப்பல் மற்றும் தரை வழியாக சுமார் நான்கு மாதம் கழித்து 2018 ஆண்டு ஜனவரி முதல் தேதி அன்று கிடைத்தது. முக்கிய விபரம் என்னவென்றால் எனக்கும் Dr. A. அப்துல் வாஹிதுக்கும் ஜமால் முஹம்மது கல்லூரியில் இரண்டாண்டு படித்த பிறகு எந்த தொடர்பும் இல்லை. ஆனால் சுமார் 61 வருடங்கள் கழித்த நான் கல்லூரில் படித்த போது ஆட்டோகிராபில் தந்த முகவரியான சத்தியமங்கலத்திற்கு அனுப்பி இருக்கிறார். மேலே கண்ட வரிகள் எவ்வளவு உண்மை. இன்றும் நான் 80 வயது கடந்தும் நண்பர்களால் மறந்து போகாமல் வாழ்ந்து கொண்டு இருக்கிறேன் என்பதற்கு உதாரணம். (வாழ்த்து மடல் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

இன்றைய என் முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தவர்கள்.

முதலில் அல்லாஹ்வின் கருணை.

இரண்டாவது என் தாத்தா

மர்ஹூம் S. சையத் இப்ராஹிம் சாஹிப் அவர்கள் என் மேற்படிப்புக்குச் செய்த உதவிகள்.

மூன்றாவது என்னை பொறியாளர் படிப்புக்கு தகுதியுள்ளவவனாக உருவாக்கிய ஜமால் முஹம்மது கல்லூரியும். பொறியாளர் ஆக்கிய அரசினர் பொறியியற் கல்லூரியும்(கோயமுத்தூர் )ஆகும்.

நான்காவது தமிழ்நாடு மின்சார வாரியம் என்னைப் பணியில் அமர்த்தி பல முக்கியப் பொறுப்புகளையும், பதவி உயர்வுகளையும் தந்து ஒரு சிறந்த Protection Engineer (பாதுகாப்புப் பொறியாளராக) உயர வைத்தது.

ஜமால் முஹம்மது கல்லூரி நிறுவன நாள் விழாவில் வெளியிட இருக்கும் மலரில் என்னை ஒரு கட்டுரை எழுதக் கூறி என் 64 வருட வாழ்க்கையை திரும்பி பார்க்க வைத்த ஜமால் முஹம்மது கல்லூரி நிர்வாகத்திலும் முக்கிய பங்கு வகிக்கும். Janab Dr. K.A. காஜா நஜிமுத்தின் சாஹிப் Secretary மற்றும் Correspondent அவர்களுக்கும், ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப் பொருளாளர் அவர்களுக்கும், முதல்வர் ஹாஜி Dr. S. இஸ்மால் முஹிதீன் சாஹிப் அவர்களுக்கும் கல்லூரி நிறுவன நாள் விழாவிற்கு Co-ordinator ஆக இருக்கும் பேராசிரியர் K. முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்களுக்கும் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், பேராசிரியர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

# பசுமை நிறைந்த நினைவுகள்



(1979 – 81 B.Sc., வேதியியல்)

கவிஞர். கோ.வசந்தகுமாரன்
(மனித வள மேம்பாட்டுத் துறையின் ‘உதய பாரதி’
தேசிய விருதினைத் தமிழ் மொழிக்காகப் பெற்றவர்)

நினைத்தாலே இனிக்கும் ..............

1979–ஆம் ஆண்டு, ஜமால் முகம்மது கல்லூரியில் கல்வி பயிலவேண்டும் என்கிற என் கனவு நிறைவேறியது. நிலவில் கால் வைத்த முதல் மனிதனின் மகிழ்ச்சியைத் தந்தது இந்நிகழ்வு என்றால் மிகையாகாது. நான் விரும்பிய வண்ணம் இங்கு வேதியியல் படித்தேன். (1979–1981).

ஜமால் முகம்மது கல்லூரியை எனது போதி மரம் என்றே சொல்லலாம். அந்த போதிமர நிழலில் ஆசைகள் வளர்த்தேன். வகுப்பறைகள் வசந்த மண்டபங்களாகத் தெரிந்தன. சிறகுகளால் வருடிக்கொடுப்பது போல பாடம் நடத்தும் லாவகம் கைவரப்பெற்ற பேராசிரியர்கள் அங்கே இருந்தனர் – இப்பொழுதும் கூட. கவிஞர் சிற்பி பேட்டியில் (குமுதம்) ஜமால் முகம்மது கல்லூரிப் பேராசிரியர் கபூர் பாடம் நடத்தினால் புல்லாங்குழல் வாசிப்பது போல் இருக்கும் என்று கூறியிருக்கிறார். மரபுகள் மீறாத மாணவப் பருவம். எனக்கு அங்கே வாய்த்தது. கல்லூரி எங்களுக்குக் கூண்டாக அல்ல கூடாகத் திகழ்ந்தது. தன்னம்பிக்கை மிகுந்த நாட்கள் அவை.

கல்லூரி முதல்வர் கம்பீரமிக்க இஸ்மாயில், தமிழ்த்துறைத் தலைவர் பெரும்புலவர் சி. நயினார் முகமது, வேதியியல் துறைத் தலைவர் கண்டிப்பு மிகுந்த உஸ்மான் அலி, சிரிக்கச் சிரிக்க பாடம் நடத்தும் தமிழ்ப் பேராசிரியர் ஷாஜகான் ஆகியோர் என் நினைவுகளில் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள்.

ஜமால் முகம்மது கல்லூரியில் இடம் கிடைப்பது அரிது. விடுதியில் இடம் கிடைப்பது அரிதினும் அரிது. நான் இரண்டு ஆண்டுகள் விடுதியில் தங்கிப் படித்தேன். காஜாமியான் விடுதியில் நான் உண்ட உணவுதான் காலத்தை எதிர்த்து நிற்கும் வலிமையை இன்றுவரை எனக்கு வழங்கிவருகிறது. அரசு வழங்கும் உதவித்தொகை (Scholarship) விடுதிக் கட்டணத்தை ஓரளவு ஈடு செய்துவிடும். அந்த உணவுக்கு ஈடான சுவையை இன்றுவரை நான் வேறெங்கும் உணர்ந்ததில்லை.

மொழி, இனம், சாதி, மத வேறுபாடுகளைக் கடந்த சமத்துவ சங்கமம் ஜமால் முகம்மது கல்லூரி. ஈரான், மலேசியா போன்ற நாடுகளிலிருந்தும் மாணவர்கள் கல்வி கற்க வந்திருந்தனர். பல்வேறு கலாச்சாரப் பண்பாட்டுப் பரிமாற்றம் நாகரீகமாக எங்களுக்குள் நடந்து கொண்டிருந்தது.

என் இலக்கிய அறிவு ஜமால் முகம்மது கல்லூரியில்தான் விரிவடைந்தது என்று கூறலாம். நான் ஒரு அரசு அதிகாரியாகப் பணிபுரிகிறேன் என்பதைவிட ஒரு கவிஞனாக உயரந்திருக்கிறேன் என்பதில் பெருமைக் கொள்கிறேன். வேதியியல் மாணவனாக இருந்தாலும் என் கவிதைகளை தமிழ்த்துறை அங்கீகரித்தது – ஆண்டு மலரில் என் கவிதையை அச்சேற்றி அழகு பார்த்தது. இந்நாள் வரை 5 கவிதை நூல்கள் படைத்திருக்கிறேன். மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை வழங்கிய தேசிய விருது (உதய பாரதி) உட்பட பல்வேறு தன்னாட்சிக் கல்லூரிகளில் எனது மனிதன் என்பது புனைபெயர் கவிதை நூல் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. 2018 மார்ச் 24–25 தேதிகளில் சாகித்ய அகாதமி அழைப்பின்பேரில் கோஹிமா நகரில் உள்ள நாகாலாந்து பல்கலைக் கழகத்தில் கவிதைகள் வாசித்துப் பெருமைப் பெற்றிருக்கிறேன். ஜமால் முகம்மது கல்லூரியின் தமிழ்த்துறை எனக்குள் ஊன்றிய விதையே இத்தகைய மரமாக வளர்ந்து தழைக்கிறது என்பதே உண்மை.

ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும் கல்லூரி விழாவுக்கு மு.மேத்தா, அப்துல் ரகுமான், சிற்பி போன்ற இலக்கிய ஜாம்பவான்கள் வருகை புரிந்து சிறப்புரையாற்றியிருக்கிறார்கள். ஒரு முறை கவிஞர் கண்ணதாசன் விடுதி ஆண்டு விழாவுக்கு வருகை புரிந்து உரை நிகழ்த்தினார். காலங்களில் அவள் வசந்தம்... என்று தொடங்கும் அவர் எழுதிய திரைப்பாடலை அவரே பாடி எங்கள் இதயத்தை நெகிழவைத்தார். கல்லூரிக் கவிஞன் என்று நண்பர்கள் என்னை கவிஞர் கண்ணதாசனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தனர். வாழ்க என்றார்.

திறமை மிகுந்த மாணவர்களைத் தேடிப்பிடித்து கௌரவிக்கத் தவறியதேயில்லை கல்லூரி நிர்வாகம். விளையாட்டுத் திறனை வளர்த்து தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளவைத்து மாணவர்களைத் தரம் உயர்த்திய கல்லூரி. ஜமாலியன் என்று பெருமையோடு கூறிக்கொள்ளும் அளவுக்கு என்னைப் போன்ற பழைய மாணவர்களைக் கௌரவப்படுத்திய ஜமால் முகம்மது கல்லூரியை எங்கள் உள்ளத்திலிருந்து யாரால் அகற்றிவிட இயலும் ?

ஜமாலியன்கள் பலரும் சிறந்த இலக்கிய வாதிகளாய், விளையாட்டு வீரர்களாய், நிர்வாகத்திறன்மிக்க அதிகாரிகளாய், மிகப்பெரிய தொழிலதிபர்களாய், பொது நலனில் அக்கறைக் கொண்ட அரசியல் வாதிகளாய் பரிணமித்திருப்பதை அவ்வப்போது அறிந்து மகிழ்கிறேன். இவர்களைப் பட்டியலிட்டால் பக்கங்கள் போதாது.

சீருந்தில் கல்லூரியைக் கடக்க நேரும் தருணங்களில் ஜமால் முகம்மது கல்லூரி என்ற கோயிலை மானசீகமாக வணங்கியபடியே செல்வது என் வழக்கமாகிவிட்டது.

சென்ற மாதம் திருச்சி வந்திருந்தபோது கல்லூரி வெளிச் சாலை வழியாக சீருந்தில் பயணம் செய்ய நேர்ந்தது. 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்னும் தத்துவ வரிகளுக்கேற்ப கல்லூரி வளாகம் கான்கிரீட் எழுச்சியால் நிறைந்திருந்தது. ஆனாலும் இவ்வளாகத்தின் கிழக்குப் பகுதியில் புராதானச் சின்னம் போல் வசீகரிக்கும் அந்தப் பழைய வெண்ணிறக்



கட்டிடத்திற்கும், அதன் முன் பரந்துவிரிந்திருக்கும் பூக்கள் அரும்பிய தோட்டத்திற்கும் ஈடாக எதைச் சொல்ல இயலும்! என்னைப் பொறுத்தவரை இக்கட்டிடம் ஒரு எட்டாவது அதிசயம். நான் படித்தபோது அங்குதான் கல்லூரி முதல்வர் அறையும், தமிழ்த்துறையும் இருந்தன. கட்டிடக் கலையைப் பாடம் நடத்திக்கொண்டிருக்கும் மொகலாய மன்னர்களின் அரண்மனை போன்ற பகுதி அது.

இன்றுபோல் மக்கட் பெருக்கமோ, வாகனப் பெருக்கமோ அப்பொழுது இல்லை. கல்லூரி வளாகத்தில் புறாக்களும், குயில்களும், வண்ணத்துப் பூச்சிகளும் சுதந்திரமாகப் பறந்து திரிந்து கொண்டிருந்தன. வேப்ப மரங்கள் பூத்துக் குலுங்கி கோடையைக் குளிர்காலமாக்கிக் கொண்டிருந்தன. வகுப்பறைகளுக்கு வெளியிலும் நாங்கள் பாடம் கற்றுக் கொண்டிருந்தோம். இப்பொழுது கல்லூரியை நின்று நிதானித்து இரசிக்கவும், அக்கால நிகழ்வுகளையும் – இக்கால நிகழ்வுகளையும் ஒப்பீடு செய்து சிலாகிக்கவும் அவகாசமில்லை. காலம் இளமையைக் கொள்ளையடித்த பிறகு துரத்தும் வாழ்க்கைமுறை சற்றே நின்று நிதானித்து இளைப்பாற மனிதர்களை அனுமதிப்பதில்லை, தூரத்தில் ஒளிரும் நிலவை இரசிப்பது போல் என்னை ஆளாக்கிய ஜமால் முகம்மது கல்லூரியைப் பார்த்து ரசிக்க வேண்டியிருக்கிறது. என் காலடிச் சுவடுகள் கலையாமல் கல்லூரி வளாகத்தில் அப்படியே இன்னும் இருப்பதாக உணர்கிறேன். கல்லூரிக்கும் காஜாமியான் விடுதிக்குமிடையே ஒரு வண்ணத்துப் பூச்சியைப் போல் இப்பொழுதும் என் மனம் படபடத்து அலைகிறது.

இத்தகைய உணர்வுகள்தான் காவிரிபாயும் திருச்சி மாநகரை ஒரு புண்ணியஸ்தலமாக நினைத்து என்னைச் சிலிர்க்க வைக்கிறது.

பின்குறிப்பு :–

<u>கோ. வசந்ததுமாரனின் கவிதை உலகு</u>

கவலைகள் பிசைந்து
பெருங்கவலை செய்தேன்.
பெருங்கவலை பிடறியைத் தாக்க
தற்கொலை முனையில்
தத்தளித்த என்னை
ஒரு பூவை நீட்டிக் கேலி செய்தது
பாறை பிளந்து முளைத்த செடி – (சதுர பிரபஞ்சம், ப.80)

என்னும் முத்திரைக் கவிதைக்குச் சொந்தக்காரரான கோ. வசந்தகுமாரன். ஊருக்கெல்லாம் சோறு போட, நெல் மட்டுமே விதைக்கும், தஞ்சாவூர்காரர் (மனிதன் என்பது புனைபெயர், ப.16). இவரது பிறப்பிடம் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த ஒரத்தநாடு. வேதியியல் பயின்ற அவர், கவிதை உலகில் அடி எடுத்து வைத்த ஆண்டு 1986; பாலைவனத்துப் பூக்கள் என்பது என்பது இவரது முதல் கவிதைத் தொகுப்பு ஆகும். சொந்த தேசத்து அகதிகள் (1987), மனிதன் என்பது புனைபெயர் (1994), மழையை நனைத்தவள் (1995) என அடுத்தடுத்து வெளிவந்த கவிதைத் தொகுப்புக்களைத் தொடர்ந்து, 2017–ஆம் ஆண்டில் வெளிவந்திருக்கும் இவரது ஐந்தாவது கவிதைத் தொகுப்பு சதுர பிரபஞ்சம். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க விருதையும் திருப்பூர் தமிழ்ச் சங்க விருதையும் தமது மனிதன் என்பது புனைபெயர் என்னும் கவிதை நூலுக்காகப் பெற்றுள்ள வசந்தகுமாரன், மனித வள மேம்பாட்டுத் துறையின் உதயபாரதி தேசிய விருதினைத் தமிழ் மொழிக்காகப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. 2004–ஆம் ஆண்டு திருவனந்தபுரத்தில் நிகழ்ந்த சாகித்ய அகாதமியின் புதிய குரல்கள் (New Voice) என்னும் கவியரங்கில் இவர் வாசித்த கவிதை, மலையாளக் கவிஞர் ஓ.என்.வி. குரூப்பின் பாராட்டினையும் ஒட்டுமொத்த அவையினரின் வரவேற்பினையும் பெற்றது.

* * * * *



# என் வாழ்வில் வழிகாட்டும் கைக்காட்டியாய் ஜமால் முகம்மது கல்லூரி

**G.KARTHIK,** M.Sc, M.Phil., Ph.D, MLIS.,
(Qualified : CSIR - NET, GATE, TN-SET)
Chemist, Surface Team, Oil & Natural Gas Corporation Ltd.,
Karaikkal.

அனைவருக்கும் பள்ளி மற்றும் கல்லூரி வாழ்க்கை என்பது ஒரு மறக்க முடியாத அனுபவமாகத்தான் இருக்கும். எக்காலத்திலும், என் பணி ஓய்வு காலத்தில் கூட பள்ளி மற்றும் கல்லூரி நாட்களை மற்றவர்களுடன் உரையாடும் பொழுதும் நான் படிக்கும் காலத்தில் என்று கூறி தன் நினைவுகளை அடிக்கடி நினைவு கூர்ந்து மகிழ்வார்கள்.

அவ்வகையில், நிறுவனர் விழாவுக்காக எனது ஜமால் முஹம்மது கல்லூரியின் நினைவுகளையும், என்னை இந்நிலைக்கு உயர்த்தியமைக்கு நன்றி உரைக்கும் விதமாகவும் இக்கட்டுரையை சமர்ப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

## கல்லூரி சேர்க்கை

2004–ல் இளநிலை வேதியியல் முடித்துவிட்டு முதுநிலை வேதியியல் பயில்வதற்காக கல்லூரிகளைத் தேர்வு செய்யும் பொழுது எனது முதல் மற்றும் முழு விருப்பம் ஜமால் முஹம்மது கல்லூரியாகத்தான் இருந்தது. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, என்னுடைய உறவினர் அண்ணன் ஜமால் முஹம்மது கல்லூரியில் முதுநிலை வேதியியல் இரண்டாமாண்டு பயின்றார். அவர் கூறியது மட்டுமல்லாமல், நான் கேள்விப்பட்டதும், ஜமால் முஹம்மது கல்லூரியில் உள்ள வேதியியல் துறை மிகவும் நேர்த்தியான துறை என்பதாகும். இரண்டாவதாக, நான் என்னுடைய பள்ளி பருவத்தை இஸ்லாமிய பள்ளியில் பயின்றதால், கல்லூரியும் இஸ்லாமிய கல்லூயில் பயில வேண்டுமென விருப்பம்.

ஆனால், அச்சமயத்தில் ஜமாலில் வேதியியல் துறையில் சேர்வது என்பது மிகவும் கடினமான செயல். எனக்கு சேர்க்கை கிடைக்குமோ என்ற அச்சம் இருந்தது. சேர்க்கை நடைபெறும் போது அங்கு அமர்ந்திருந்த துணை முதல்வரும், தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் அவர்கள் எனக்கு கல்லூரியில் இடம்தர மறுத்துவிட்டனர். ஆனால்,நானோ விடாப்பிடியாக,ஐயா நான் இக்கல்லூரியில் முதுகலைப் படிக்க வேண்டுமென்பது எனது விருப்பம் என்று, மேற்கூறிய இரண்டு காரணங்களையும் கூறினேன். அவர் உடனே இக்கல்லூரியில் படித்தால் நன்கு படித்து நல்ல மதிப்பெண் பெற்று உயர் நிலைக்கு செல்வேன் என்று உறுதி கூறினால் இடம் கொடுப்பேன் என்று கூறினார். அவரின் கட்டளைக்கு ஒப்புக் கொண்ட பின்னரே சேர்க்கை. கிடைத்திருக்காவிட்டால் இந்நிலை வந்திருப்பேனோ என்று சந்தேகம் எழுகிறது.

## முதல் பருவம்

கல்லூரியில் சேர்ந்த சில நாட்களிலே, எனக்குக் கல்லூரி வளாகம் மிகவும் பிடித்துவிட்டது. அதற்கு முக்கியக் காரணம், அழகிய மற்றும் தூய்மையான வளாகம். நண்பர்கள் மற்றும் பேராசிரியர்கள் வகுப்பு எடுக்கும் முறைகள் என்னுடைய முதற் பருவம் சற்று கடினமாக இருந்தது. அதற்கு முக்கியக் காரணம், நான் இளநிலையைத் தமிழில் பயின்று முதுநிலையை ஆங்கிலத்தில் பயில்வதால் ஏற்பட்ட சில மாறுதலே காரணம். இருந்த பொழுதும் பேராசிரியர்களின் துணையுடனும், நண்பர்களின் உதவியுடனும் நான் சிறப்பாக மீண்டு வந்தேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## பேராசிரியர்கள்

வேதியியல் துறை பேராசிரியர்களின் திறன் மற்றும் வகுப்பெடுக்கும் முறை மிகவும் நேர்த்தியாக இருக்கும். குறிப்பாக கூறினால், பேரா. மஸ்கர் நசீப் கான் ஐயா, பேரா. சிகாபுதின் ஐயா, பேரா. அப்துல் நசீர் ஐயா ஆகியோர் வகுப்பெடுக்கும்பொழுது மிகவும் கடினமான பாடங்களைக்கூட எளிமையாக விளக்குவார்கள்.

இளவயது பேராசிரியர்களை எங்களுடைய சீனியர்களாகத்தான் கருதினோம். ஆதலால் அவர்களுடன் எந்நேரத்திலும் சந்தேகம் கேட்டாலும் சொல்லிக்கொடுப்பார்கள்.

## வார வேலைவாய்ப்பு வகுப்புகள்

நானும், என்னுடன் படித்த சக நண்பர்களும் இன்று நல்ல நிலையில், நல்ல ஊதியத்துடனும், சிறந்த பணியில் உள்ளோம். அதற்கு மிக முக்கியமாக நான் கருதுவது, எங்களது பேராசிரியர் மஸ்கர் நசீப் கான் ஐயா அவர்களின் மேற்பார்வையில் நடைபெற்ற வார வேலைவாய்ப்பு மற்றும் ஊக்கப் பயிற்சி வகுப்புகள் (Motivational Classes) அவ்வகுப்புகளில் வெளியிலிருந்து அழைத்து வரப்பட்ட நேர்த்தியான துறை வல்லுனர்கள், நமது கல்லூரியின் முன்னாள் மாணவர்களைக் கொண்டு வகுப்புகள் நடைபெறும். அந்த வகுப்புகளில் ஊக்கம் பெற்றதும் வேலை வாய்ப்புகளைப் பற்றித் தெரிந்து கொண்டோம்.

## நான்காம் பருவ செய்முறை ஆராய்ச்சி பயிற்சி (Project)

நான் நான்காம் பருவம் படிக்கும் பொழுது செய்முறை ஆராய்ச்சி கட்டுரை சமர்ப்பிக்க வேண்டும். என்னுடைய பேராசிரியர் திரு. அன்வர் சாதிக் ஐயா அவர்கள் என்னுடைய பொறுப்பு பேராசிரியர். அவர் என்னிடம் வெளியில் தொழிற்சாலையிலோ, வேறு ஏதேனும் வேதியியல் ஒய்வுக் கூடத்திலோ பயிற்சி பெறுமாறு கூறினார். ஆனால், சோதனையாக எனக்கு எங்குமே வாய்ப்புக் கிடைக்கவில்லை. தோராயமாக ஒரு மாதம் காலம் அலைந்தும் எனக்கு மட்டும் வாய்ப்பு கிடைக்கவில்லை. எனக்கு மிகவும் வேதனையாகவும், அழுகையாகவும் இருந்தது. இதை பேரா. அன்வர் சாதிக் அவர்களிடம் கூறினேன். உடனே அவர் என்னைத் தேற்றி ஆறுதல் கூறினார். மேலும் விரைவில் கிடைக்கும் என்றும் நம்பிக்கை கூறினார். கடவுளின் அருளால் திருச்சியிலேயே எனக்கு ஆராய்ச்சிக் கட்டுரைக்குத் தொழிற்சாலையில் வாய்ப்புக் கிடைத்தது.

## எதிர்நோக்காத தொலைபேசி அழைப்பு (Surprise Call)

கல்லூரி முடித்து ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு தோராயமாக 2012–ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். நான் அப்பொழுது, NISR - Bhubaneshwar - ல் Ph.D படித்துக் கொண்டு இருந்தேன். அப்போது, ஒரு இனிய காலை வேளையில், என்னுடைய செல் பேசிக்கு அழைப்பு வந்தது.

அப்பொழுது, பேரா. மஸ்கர் நசீப் ஐயா அவர்கள் எதிர் நோக்காத விதமாக என்னை அழைத்து நலம் விசாரித்ததுடன், என்னுடைய வேலை பற்றியும், Ph.D பற்றியும் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்றும் வழி காட்டினார். இவ்வுரையாடல் ஏறக்குறைய 45 நிமிடங்கள் நீடித்தது. ஐயாவினுடைய கடின வேலைப்பளுவிற்கு இடையேயும் என்னை அழைத்து நலம் விசாரித்ததும், வளர்ச்சிக்கு வழி கூறியதும், நான் ஒரு பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

## சிறப்பு விருந்தினராக அழைப்பு (Guest Lecture for Motivational Class)

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு முதுகலை வேதியியல் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வகுப்பை எடுக்கும் வாய்ப்பை வேதியியல் துறை ஏற்படுத்திக் கொடுத்தது. அந்த அழைப்பு வந்த போது நான் என்னுடைய பெரும் பாக்கியமாகவே கருதினேன். மேலும் படித்த கல்லூரியில் பேராசிரியர்களுக்கு மத்தியில் சிறப்பு விருந்தினராக அமர்வது என்பது இறைவன் கொடுத்த வரமும், ஜமால் முஹம்மது கல்லூரி கொடுத்த வழிகாட்டுதலும் என்று சொன்னால் மிகையாகாது.

இதுபோல், ஏராளமான நிகழ்வுகளைக் கூறிக் கொண்டே செல்லலாம். ஜமால் முஹம்மது கல்லூரி ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்பையும், எங்களது துறையின் உதவியினாலும் நானும், எனது சக நண்பர்களும் நல்ல நிலையில் உள்ளோம். நான் ஜமால் முஹம்மது கல்லூரியின் வழிகாட்டுதலினாலும், துறையின் உதவியினாலும் CSIR-NET, GATE, TN-SET, NISER நுழைவுத் தேர்வு, TN-Polytechnic நுழைவுத்தேர்வு போன்றவற்றை தேர்ச்சி பெற்று நல்ல ஆராய்ச்சி மையங்களான CSIR-CECRI காரைக்குடி, CSIR-NIIST திருவனந்தபுரம், CSIR - NIISTNISER - Bhubaneshwar, Sookmyung University - South Korea போன்றவற்றில் பணிபுரிந்துள்ளேன். இப்போது ONGC-ல் பணி புரிகிறேன். இவை அனைத்திற்கும் வழிகாட்டியாகவும், என் வாழ்க்கைக்கு கைகாட்டியாகவும் அமைந்தது ஜமால் முகம்மது கல்லூரி என்று சொன்னால் உள்ளபடியே மிகையாகாது.

நன்றி.

# 1963 - 66 GOLDEN PERIODS

**Janarthanan.V**
Tamilnadu Civil Supply Corporations
Assistant Manager (Rtd)
Student : 1963 - 1966



தென்னகத்தின் அலிகர் என நமது கல்லூரிக்கு பெயர் வரக்காரணமான இரு பெரும் வள்ளல் பெருமக்களாகிய ஹாஜி. ஜமால் முகம்மது சாகிப் மற்றும் ஜனாப். காஜாமியான் ராவுத்தர் ஆகியோரை இந்நாளில் நினைவு கூர்ந்து சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். ஏன் வணங்க வேண்டும்? காரணம், இக்கல்லூரியில் நானும் சக மாணவர்களும் பயிலக் காரணமானவர்கள் என்பதாலும், அவர்களால் வழி நடத்தப்பட்ட நற்பண்பு, மரியாதை, தன்னடக்கம், கடின உழைப்பில் நம்பிக்கை, நேர்மை ஆகியவற்றை பாடங்களில் இடையே பயிற்றுவித்தாலும் தான். இதன் காரணமாகத்தான் எங்கள் படிப்பை முடித்த பின் சமுதாயத்திலே போற்றப்படும் விதத்தில் எங்கள் வாழ்க்கை அமைந்தது என்றால் அது மிகையல்ல.

நாங்கள் கல்லூரில் சேர்ந்த போது, முகப்பில் உள்ள மாடி கட்டிடம், (ஜமால் மொய்தீன் பில்டிங்) மட்டுமே இருந்தது. அங்கும் இங்குமாக 3 அடி உயர சுற்றுச் சுவரில் மேலே கூரை வேயப்பட்ட செட் 5 அல்லது 6 இருந்தது. கல்லூரி சுற்றிலும் மண் சாலையே. இதை நினைவில் நிறுத்தி 50 ஆண்டுகளுக்குப் பிறகு கால் பதித்த வேலை, பிரமிப்பூட்டும் கட்டிடங்கள் அநேகம், முற்றிலும் தார் சாலை என பரிணாம வளர்ச்சியின் உச்சத்தைக் கண்டேன்.

நமது கல்லூரியில் 1963–66ல் B.Com வகுப்பு படித்து பட்டம் பெற்றேன். இரண்டு ஆண்டுகள் வேலையில்லா பட்டதாரி. தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கங்களின் பொறுப்பில் நவீன அரிசி ஆலைகள் (Modern Rice Mills) 13 இயங்கி வந்தன. 1968–ல் ஆண்டு நான் திருச்சியில் இயங்கிய ஆலையில் மேலாளராகப் பணிபுரிந்தேன். அது சமயம் 1972–ம் ஆண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (Tamilnadu Civil Supply Corporation) தனது கட்டுப்பாட்டிற்குள் இந்த ஆலையைக் கொண்டு வந்தது. இதில் உதவி மேலாளர் பதவி வகித்தேன் (Assistant Manager) எனது தந்தை T.D. வீரப்பா 1988–ல் இயற்கை எய்தினார்.

அவரது வணிகத்தைக் கவனிக்க வேண்டி, 1988–ல் VRS கொடுத்து விட்டேன். எனது பிரிவு உபசாரத்தில் பங்கேற்ற எனது Chairman Cum Managing Director திரு K.R. நம்பியார் I.A.S. அவர்கள் என்னை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார். இதன் உச்சமாக “He is one among



the pillars of the corporation, I do not know who will replace him" என்றார். இதை நான் என் வாழ்நாள் சாதனைக்குக் கிடைத்த புகழாரமாக ஏற்றுக் கொண்டேன். ஊழல் மலிந்த அலுவலகத்தில் நேர்மையாகவும் சிறப்பாக என் கடமையைச் செயலாற்றியமைக்காகவும் கிடைத்தப் பரிசாக ஏற்று மகிழ்ந்தேன்.

நாங்கள் கல்லூரியிலிருந்து பிரியும் போது ஒரு சொவினர் (முகவரி மற்றும் புகைப்படத்துடன்) போட்டோம். 50 ஆண்டுகள் கடந்தன. என் சக நண்பர் என்னிடம் மற்றவரைத் தேடும் பொறுப்பினைச் சுமத்திவிட்டனர். முகவரியில் மாற்றம், தொலைபேசி கிடையாது. யார் என்ன நிலையில் உள்ளனர் ? தெரியாது ? முயன்றேன்.

2007–ம் ஆண்டு டெலிபோன் டைரக்டரி மூலம் என் நண்பர்கள், உறவினர்கள் மூலம் 7 மாதங்களில் 700 தொலைபேசி அழைப்புகள் பேசி, ஒருவாராக 38 பேரை பிடித்தோம். என் பிடியிலிருந்து 16 பேர் என் கண்களில் நீரை நிரப்பிவிட்டு நழுவி விட்டனர். மீதம் உள்ள 22 பேரோடு, முன்னால் மற்றும் இந்நாள் முதல்வர்கள், செயலாளர் ஆகியோர் உதவியுடன் Golden Jubilee Old Boys Get together Meeting 21.07.2016–ல் கல்லூரியில் கூட்டி மகிழ்ந்தேன். இச்செயலைப் பாராட்டி நமது கல்லூரி நிர்வாகம் 15.08.2016–ல் DISTINGUISED ALUMNIUS AWARDEES MEETING–ல் என்னைக் கவுரவித்து மொமெண்டோ கொடுத்தார்கள்.

நாங்கள் கல்லூரியில் பயின்ற கால கட்டத்தில் பலவித விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் எனக் கலந்து சாதனை படைத்தோம். அவற்றில் சில...

Foot Ball - R. Sivasubramanian, Captain of the Team - University Player Rank. இவரோடு S. அக்பர் ஜான் மற்றும் A. அப்துல் பாரி, P. அலெக்சாண்டர் ஆகியோர் 1965–66, 1966–67 (ஏப்ரல் 1966 வரை) 10 போட்டிகளில் சென்னையில் கலந்து 10 கோப்பைகளையும் வென்று வந்தனர்.

Tennis S.பாலசுப்பிரமணியன் Captain of the Team. Inter College Competition-களில் பல முறை வெற்றியைப் பறித்தார். N.C.C.–யில் இவரது குரூப் டாக்டர் ஜாகிர் ஹீசைன் மற்றும் ஜெனரல் காரியப்பாவிற்கும் Salute Honour செய்ய பேறு பெற்றார். உமறுப்புழவர் தமிழ்ப் பேரவை உறுப்பினராக இருந்தார். Cricket - K.S. ரெங்கராஜன் - Captain of the Team.

R.P. சீனிவாசன் Ganddhian Study Circle (Secretary) மற்றும் T.M. சிவசுப்பிரமணியன் (Joint Secretary) இவர்கள் College Planning Form–மில் இணைந்து சமூக சேவை செய்து கல்லூரிக்கு நற்பெயரை ஈட்டிக்கொடுத்தனர். தமிழ்ப் பேச்சுப் போட்டியிலும் பல பரிசுகளை வென்றனர்.

1963–66 B.Com மாணவர்கள் காலம் கல்லூரிக்கு ஒரு Golden Period ஆகவும், இவர்கள் எதிலும் சளைத்தவர்கள் அல்ல என்ற பாராட்டையும் ஒருமனதாகப் பெற்றோம்.

நாங்கள் கல்லூரி நாட்களில் செய்த குறும்புகள், தேர்ச்சியில் நூறு சதவிகிதம் வென்று காட்டியது. அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றிக் கனி பறித்தது. அனைத்தும் கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் விதமாக அமைந்தது.

செய்யும் தொழிலில், வேலையில் நாணயம் காத்தது, குடும்பம் என ஆன பின் பொறுப்போடு செயல்பட்டது, பிள்ளைகள் மேன்மைக்குப் பாடுபட்டு வெற்றி கண்டது. இன்று பேரப்பிள்ளைகளுடன் களிப்போடு விளையாடுவது என எங்கள் வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் ஆக அனைத்திலும் நாங்கள் தனித்தன்மையோடு வாழ்கின்றோம். We are Jamalians என்று கூறி பெருமைப்படுகின்றோம்.

வாழ்க Jamalians வெல்க Jamal.

* * * * *

"ஜமால் முகம்மது கல்லூரியின் தொடக்க கால வரலாறு முதல் தற்காலம் வரை இக்கட்டுரையாளர் நன்கு அறிந்தவர். ஜமால் முகம்மது கல்லூரி தொடங்குவதற்குப் பல்கலைக்கழக ஆய்வுக்குழுவில் பங்கேற்றிருந்த ஒருவர் ஜமால் முகம்மது கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தைப் பார்த்துப் புற்கள் கூட முளைக்காது என்று கூறினார். ஆனால் இன்று அந்நிறுவனம் உலகெங்கும் புகழ்பெற்ற ஆளுமைகளைத் தந்த ஆலமரமாய்ப் பரந்து விரிந்திருக்கின்றது. இந்நிறுவனம் இருமுனையாக வாழ்ந்தவர் களையும் கண்டிருக்கின்றது."

பேராசிரியர் எம்.ஏ. அக்பர்ஷா
ஓய்வுபெற்ற பேராசிரியர்,
முன்னாள் இயக்குநர், தொலைக்கல்வி மையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி – 620024.

# என் இரண்டாவது தாய் - ஜமால்

ஜமாலியன் G. சத்தியராஜ் M.Sc., B.Ed.,
மாணவர் : 2009 – 2011
Dept. First, University 6th Rank,
M.Sc., (Zoology) 2009 - 2011
Address : PG Asst. (Zoology), Neyveli - 607 802,
Cuddalore. | Cell : 97885 60634



## அனைவருக்கும் வணக்கம்.

நான் 2009–2011 ஆம் ஆண்டில் நமது கல்லூரியில் முதுகலை விலங்கியல் பிரிவில் படித்தேன். அன்று முதல் நான் ஜமாலியன் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று பெருமையுடன் கூறிக்கொண்டு வருகிறேன். என்னுடைய அனுபவங்கள் நமது கல்லூரியில் நிறைய உள்ளது. அவற்றுள் சிலவற்றை மட்டும் பகிர்ந்து கொள்கிறேன்.

எங்களது விலங்கியல் துறையில் அனைத்து ஆசிரியர்களும் ஆங்கிலத்திலேயே பேசுதல் மற்றும் பாடம் நடத்துவதை பார்த்ததும் பயம் அதிகமாகி முன் இரண்டு மாதங்களிலேயே கல்லூரியை விட்டு சென்று விடலாம் என்று நினைத்தேன். அப்போது எனது ஆசிரியர் ஒருவரிடம் கேட்டபோது (பெயர் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் அனைத்து ஆசிரியர்களும் எங்களது நலனில் அக்கறை கொண்டவர்கள்) இதற்காக நீ பயப்படவோ, கவலைப்படவோ கூடாது. நமக்கு வராத ஒன்றைத்தான் சவாலாக ஏற்றுக் கொண்டு சாதிக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார். இந்த வார்த்தை எனக்குள் பெரிய நம்பிக்கையை ஏற்டுத்தியது.

அதிலிருந்து கடினமாக படிக்க ஆரம்பித்தேன். ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 3 – 4 மணி நேரம் மட்டுமே உறங்குவேன். படித்துக் கொண்டே இருப்பேன். முதல் செமஸ்டர் தேர்வும் வந்தது. நன்றாக எழுதினேன். தேர்வு முடிவும் வந்தது. பயத்துடன் பார்க்க விலங்கியல் துறையில் முதல் மாணவனாக தேர்ச்சி பெற்றதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்டேன். எனது ஆசிரியர்கள் அனைவரும், உடன் படித்த நண்பர்களும் எனக்கு பாராட்டுத் தெரிவித்தனர். இது என் வாழ்க்கையில் பெற்ற முதல் வெற்றி.

எனது தாய்க்கு நான் போன் செய்து துறை அளவில் முதலிடம் பெற்றதை தெரிவித்தேன். எனது பெற்றோருக்கு நான் கொடுத்த முதல் சந்தோஷம். நான் போன் செய்யும்போது எனது தாய் வயலில் கூலி வேலை செய்து கொண்டிருந்தார். அருகில் வேலை செய்பவர்களிடம் எனது தாய் நான் முதலிடம் பெற்றதை சொல்லிச் மகிழ்ந்த எனது தாயின் குரல் இன்னமும் காதில் ஒலிக்கிறது. இதற்குக் காரணம் எனது மற்றொரு தாய் ஜமால் முகம்மது கல்லூரி என்பதுதான் உண்மை,

அன்றிலிருந்து முதுகலை படித்து முடிக்கும் வரை வெறியுடன் படித்தேன். நான்கு செமஸ்டர்களிலும் நான்தான் துறையில் முதல் மாணவன். நான் மிகவும் பின்தங்கிய பொருளாதார குடும்பத்தைச் சார்ந்தவன். எனது பெற்றோர் தம்பியையும், என்னையும் படிக்க வைப்பதற்காக வயல்களை விற்றுவிட்டனர். நான் முதலாவது மதிப்பெண் எடுத்தற்காகவும், வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதற்காகவும் ஒவ்வொரு செமஸ்டரிலும் ரூ. 1000/–ற் கான காசோலையை எனது ஜமால் முஹம்மது கல்லூரி எனக்கு வழங்கியது. அந்தத் தொகை எனது படிப்புச் செலவிற்கு மிகவும் உதவியாக இருந்தது.

எங்களது ஆசிரியர்கள் படிப்போடு சேர்த்து வாழ்க்கை முறையையும் போதித்தனர். அதில் ஒன்று நாம் ஆசிரியர்கள் எப்பொழுதும் மாணவர்களுக்கு உண்மையானவர்களாக இருக்க வேண்டும். நாம் ஒரு வகுப்பிற்கு செல்லவில்லை என்றாலும். மாணவர்கள் தங்களுக்கு இன்று கிடைக்க வேண்டிய பயனுள்ள தகவல் கிடைக்காமல் போய்விட்டதே என்று கவலைப்படும் அளவுக்கு நம்முடைய கற்பித்தல் இருக்க வேண்டும் என்று கூறினார். இந்த செய்தி என்னுள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த அறிவுரையை இன்று வரை எனது மாணவர்களிடம் கடைபிடித்து வருகிறேன்.

நான் விலங்கியல் துறையில் முதல் மாணவனாக வெற்றி பெற்றதோடு பல்கலைக்கழக அளவில் ஆறாவது மாணவனாகவும் வெற்றி பெற்றதற்கு முக்கியக்காரணம் எனது ஆசிரியர்கள்.

தமிழ்வழியில் படித்த நான் பணியாற்றிய அனைத்து தனியார் பள்ளியிலும் வெற்றிக்கொடியை நட்டுவைத்து ஜமாலியன் என்ற பெருமையை நிலைநாட்டினேன். அதோடு நெய்வேலி NLC மேல்நிலைப் பள்ளியில் முதுகலை விலங்கியல் ஆசிரியராக பல நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் மத்தியில் முதலாவதாக தேர்ச்சி பெற்று பள்ளியில் இருந்து ஒரே ஒரு இடத்தையும் நான் பிடித்து சிறப்பாக பணியாற்றி வருகிறேன். இதற்கு முழுவதும் எனது ஜமால் முஹம்மது கல்லூரியும் எனது விலங்கியல் துறையும் (ஆசிரியர்கள்) தான் காரணம் என்பதை எப்பொழுதும் பெருமையுடனும் நன்றி கலந்த வணக்கத்துடனும் கூறிக்கொண்டுதான் இருப்பேன்.

வாழ்க பாரதம், வளர்க எங்கள் ஜமாலியன் குடும்பம்.

# ஜமால் முஹம்மது கல்லூரியில் என் நினைவுகள்

ஹாஜி M.J.அப்துல் ரவூப்
வழுத்தூர்

வல்லோனாம் அல்லாஹ்விற்கே புகழெல்லாம் எனப் போற்றி, வானமும் வையமும் போற்றும் நல்மார்க்கம் இஸ்லாத்தை தந்த வள்ளல் எம்பெருமான் கண்ணான கண்மணி காசிம் ரசூல் நபிமீது கனிவான ஸலவாத்தும் ஸலாமும் உரைத்து,

உலகத்தில் உயர்வடைய உயர்கல்வி தனை ஈந்த என்றும் என் சிந்தைதவழ் ஜமால் முஹம்மது கல்லூரியின் நினைவலைகளை பகிர்கின்றேன்.

உயர்கல்வி கற்றுக் கொள்வதற்காக கி.பி.1978 ஆம் ஆண்டு ஜமால் முஹம்மது கல்லூரியில் நான் சேர்ந்தேன். அன்று முதல் இன்றுவரை நான் ஒரு ஜமாலியன். ஜமால் முஹம்மது கல்லூரியில் கல்வி கற்றவன் என்று கூறிக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். காரணம் எனது கல்வியில் ஆழ்ந்த அக்கறை கொண்ட ஆசிரியப் பெருமக்களை எனக்கு அறிமுகப்படுத்தியது இக்கல்லூரிதான். கல்லூரியில் எனக்கு மிகவும் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர் அரபித்துறைப் பேராசிரியர் இப்ராஹிம் அவர்கள்.

எங்களுக்குள் மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொண்டு வருவதற்காக பேராசிரியர் இப்ராஹிம் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை எண்ணிப்பார்க்கும் போது இன்றளவும் மகிழ்ச்சியடையச் செய்கிறது. இலக்கியம், இஸ்லாம், பொது அறிவு போன்ற தலைப்புகளில் கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப் போட்டி ஆகியவற்றை நடத்துவார்கள். இதன் மூலம் எங்களது கல்வித் தகுதி மென்மேலும் வளர்ச்சியடைந்தது. பலவற்றையும் தேடிப் படிக்கும் ஆற்றல் வளர்ந்தது. இது போன்ற போட்டிகளில் முதல் பரிசு பெற்றிருக்கிறேன் என்பதை இன்றளவும் எண்ணிப்பார்க்கிறேன்.

பலதரப்பட்ட மொழி, கலாச்சாரம், பண்பாடு, மதங்கள் என்று இந்தியாவில் வாழும் மக்கள் வேறுபட்டு நின்றாலும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்தியாவில் மதச்சார்பற்ற தன்மை அனைத்து நாடுகளையும் வியப்பில் ஆழ்த்திக்கொண்டு இருக்கிறது. இந்தியாவில் வாழும் மக்களுக்கு மத்தியிலும் இன மத பேதங்கள் இன்றி சகோதரத்துவத்துடன் வாழும் காட்சிகளையும் நம்மால் பார்க்க முடிகிறது. இது போன்ற சமுதாயத்தை கட்டமைப்பதில் ஜமால் முஹம்மது கல்லூரியின் பங்களிப்பு மிகவும் மகத்தானது.

கல்லூரி வளாகத்திற்குள் மாணவர்கள் தங்களது பெயர் சொல்லி அழைக்கப்படுவது கிடையாது. அவரவருக்கென வழங்கப்பட்ட வரிசை எண்களைக் கொண்டே அழைக்கப்படுவார்கள். இதற்கான காரணத்தை அறிந்துகொண்ட போது மிகவும் ஆச்சரியமும் வியப்பும் ஏற்பட்டது. காரணம், மாணவர்களை பெயர் சொல்லி அழைக்கும் போது அவர்களுடைய மதத்தின் பெயரால் மாணவர்களுக்கு மத்தியில் வேறுபாடு வந்துவிடக்கூடாது என்பதற் காகவே இதுபோன்று எண்களைக் கொண்டு ஆசிரியப் பெருமக்கள் எங்களை அழைத்தார்கள். இந்த கல்லூரி எனக்களித்த வரிசை எண் 2472. இன்றளவும் என்னால் மறக்க முடியாத அளவிற்குத் திகழ்கிறது.

ஜமால் முஹம்மது கல்லூரியின் சுற்றுச் சூழலும், சுகாதாரமான அமைப்பும் ஒவ்வொரு மாணவனுக்கும் அனுபவப்பாடமாக அமைந்தது. கல்லூரி வளாகத்தில் எங்கு சுற்றிப் பார்த்தாலும் குப்பைகள் அற்று தூய்மையாக காட்சிஅளிக்கும் எமது ஜமால் முஹம்மது கல்லூரி. அதுமட்டுமல்ல இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இக்கல்லூரி தென்னகத்தின் அலிகர் என்று பாராட்டிக் கூறினார். ஆனால் ஜமாலியன்களான எங்களுக்கு இக்கல்லூரி தென்னகத்தின் தாஜ்மஹாலாகத் திகழ்கின்றது.

வாழ்ந்தால் இவர்கள் போல் வாழ வேண்டும் என்ற எண்ணம் இங்கு கல்வி கற்ற ஒவ்வொரு மாணவருக்கும்

தோன்றும் வகையில் இக்கல்லூரியின் நிறுவனர்கள் வள்ளல் ஜமால் முஹம்மது அவர்களும், வள்ளல் காஜா மியான் இராவுத்தர் அவர்களும் திகழ்கிறார்கள். மிகப் பெரும் செல்வச் செழிப்புடன் திகழ்ந்த இவர்கள் தான் மட்டும் தலைசிறந்து விளங்க வேண்டும் என்று பாராமல் நம்மைக்கொண்டு சமுதாயம் பலன் அடையவேண்டும், பயன்பெற வேண்டும் என்று மிகப்பெரும் பொருட்செலவில் ஜமால் முஹம்மது கல்லூரியை நிறுவியுள்ளார்கள். இவ்விருவரது எண்ணத்திற்கேற்ப இக்கல்லூரியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் வேடந்தாங்கலாகத் திகழ்கிறது.

தான் மட்டும் ஜமாலியனாக இருக்கக்கூடாது தனது பிள்ளைகளும் ஜமால் முஹம்மது கல்லூரியில் தான் கல்வி கற்க வேண்டும் என்று இக்கல்லூரியில் கல்வி கற்ற ஒவ்வொருவரையும் எண்ணச் செய்கிறது. இக்கல்லூரியில் கல்வி கற்கும் வாய்ப்பு நமக்கு கிடைக்கவில்லையே என்று இக்கல்லூரியில் பயிலாதவர்களை ஏங்க வைக்கிறது.

ஜமால் முஹம்மது கல்லூரியின் சேவைகள் என்றென்றும் தொடரவேண்டும் என்று ஏக இறைவன் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன்.

கல்லூரியின் சேவை மென்மேலும் வளர

வாழ்த்துக்களுடன்...

# My Sweet Memories at JMC – rewinding my thoughts many years back ….

**M. Parveez Ahamed** - MCA
First Batch (1988-91)

First of all I would like to thank JMC management for giving me an opportunity to write my JMC memories in this special edition to commemorate founder’s day of Jamal Mohamed College. I am very proud to be part of this very first batch of MCA in JMC where most of my batch mates whom I have been in touch and interacted with are in good positions in various companies. One cannot forget the JMC management and professors who made us to what we are now. I take this opportunity to thank all of my professors at this point of time.

During these 3 years in JMC, apart from our regular classes, we have participated in various inter college events and one such thing that our batch initiated was to form a Quiz club and I very much cherish the day when Anwar and myself conducted the inter college computer quiz competition for the very first time.

I could not forget the tour which we went to Kanyakumari and Kerala. All of us had very enjoyable moments during this tour. This trip helped us to create more bondage with all of our classmates and professors.

I wish all the very best to the current and future students of JMC for a bright career in their life.

With regards,
M.Parveez Ahamed,Chennai.

# PLEASANT MEMORIES OF JMC

- K NAGARAJAN -



I studied B.Com, in our great Jamal Mohamed College in the year 1975 -78. I have studied in Tamil medium up to SSLC in Government schools and PUC in Government Arts College, Karur. In the year 1975, our college was famous for B.Com and all the students wanted to join B.Com in our college. If anyone got B.com, admission with hostel in our JMC was great achievement in 1975. I am one of the students who got that opportunity to study in our great institution. The best part of my life is "my student life" in our college; I stayed in the hostel where I got great experiences in my life. It was the powerhouse of making valuable human relationships without any differences. We have enjoyed every day, having fun, friendship with different kinds of students, being flexible with others and sometimes doing small sacrifices for my friends. In our hostel mess excellent food was provided for the students. JMC "Kuska" was wonderful and ever popular food. In the Hostel Major Shah was the warden, really he was a terror personality and he was strict in maintaining pin drop silence during the study hours in the hostel. He only taught us the discipline in the hostel which moulded our meaningful and successful life.

I studied in a village school in Tamil medium and joined B.com in English medium, where everything sounded Greek and Latin.  But our college professors patiently taught us with individual care. I should add that every student followed the ground rules of class discipline and inculcated the habit of giving respect to the professors.

Our former Principal Sheik Mohamed was role model for me to set a life Goal; it's a major ingredient in one's life. Compass how much important to the Captain of a Ship, likewise students need proper guidance in college studies and our college professors' suitably guided and planted a good seeds in our mind.

Nowadays colleges have become commercial business centers, but our founders have started the college to serve the society, they are great visionaries, running the institution without profit motive, ( my mess bill per month was only Rs 90 in 1975) treated all the students belonging to different religions as their own children, taught us faith in God and helping others. Now founder's next generation is carrying out the desires of the founders. I am certainly very proud of JMC which is the holy soil to attain righteousness to the lucky folk like me.

A day passed and I didn't feel it..

A year gone I didn't feel it,

A time has come to say goodbye in 1978

It's a time to leave my friends

My heart silently cried and consoled

I carry my friends in my heart

I carry many pleasantries in my mind

I carry the smell of JMC soil in our soul..

I smile while I say goodbye to my JMC

But I hide hot tears behind the smile,

I pray to God to give strength and power to trustees

I pray to God, JMC to grow more and more…

Your student,

(K NAGARAJAN Role No: 5854)

# 'SHOW US THE RIGHT PATH' - INSHA ALLAH

**B. Padmanaban,** Ph.D., FPPAI.
Alumnus of Jamal Mohamed College (1974-75) &
Executive Committee member JMC Trichy Chapter (2017-18)
Principal Scientist (Agricultural Entomology), ICAR-National Research Centre for Banana, Thayanur (Post), Tiruchirapalli- 620 102.



I have great pleasure to share my experience as Jamalian about the great Jamal Mohamed College of Tiruchirapalli. I had the opportunity to have my education at pre-university level during the academic year 1974-75. Prof. M. Ismail , M.Com, Sahib was then principal of the college. I and my cousin joined together and had the education in a highly reputed College, which always gave us proud .My roll number was 2475. Indeed it was a great challenge to get admission in this reputed college those days because there was no self finance system for education. During admission time many cars will be parked near the Principal Sahib's chamber. Everyone will be anxiously proud to get seat, in a tense state.

I am very much like the college slogan "show us the right path'. I thank the person or team coined this very important slogan, like a mantra. By repeated recitation of this word make the students to move in a correct path in a disciplined way and mould as a responsible human being useful for the nation.

I am very pleased and proud about the founders' of the Jamal Mohamed College, Tiruchirapalli, the great two philanthropists Haji.M.Jamal Mohamed Sahib and Janab N.M.Khajmian Rowther, freedom fighters. My salutes to both great gentlemen, for their foresightedness in establishing a educational institution of this magnitude for the benefit of all students' community. In those days a very few colleges were there for education. When the education has become a commodity and educational institutions have become commercial centres is a social reality , we thank the founders for having donated liberally their land located in the prime area for the social cause, without thinking to make business out of this area. Those days itself they have identified that education would only be good tool for the individual and social success. As one of the beneficiary of your college I join with the other students; community in saluting the great giants of philanthropy for generosity and magnanimity in establishing this important temple of modern education for the yeoman service.

I had the education by the teachers under direct supervision of the following : Dr M. A. Akbarsha, Dr. Shahul Hammed, Dr. Veeraraghavan, Dr. A. Sankaran, English teachers like Sri.K.Radhakrishnan, Mr.Jayachandran , Chemistry teacher, Mr Basheer Ahamed . I am unable to recollect names of other teachers in Physics, but still I have mental picture of them. I think Mr Velayutham? and other teacher from Aravankuruchi. Tamil teacher a very senior person comes from Khajamalai colony. Those days for our college identity cards, black and white pass port size photographs were taken by the Physics Department. I remember the everlasting memories of all the teachers who gave wonderful education, with which we are able to get job and shine in our assigned duties to the satisfaction of our superiors.

Once again thank the administration and Principal of JMC for inviting to share our experiences.

JMC having completed 66 years of excellence, I wish that JMC should become a deemed University in the years to come.

# Memoirs of the College days… 1984-89



**Dr. Chandrasekar,** M.Sc, M.Tech., Ph.D.
(IIT - New Delhi)



It has been rightly said that 'college life is the best part of life' that will relive in your mind ever. It is indeed a most beautiful part of anyone's life and so is mine. Yes, My College Jamal redefined my life. I did think of a college to study whether it is serious or for the purpose of getting a degree… it always overwhelmed in my mind that it would be only Jolly Jamal… so I decided to join 'Jamal', the college which has bestowed me the everlasting valuable human relationships in my successful educational journey. At the same time, we learnt how the classes were cancelled, bunk, cutting… we all learnt the new phases of life. We also learnt about fighting for the rights that is how the 'college strike'…

The first year in 1984, after 3 months of regular college, some intelligent students announced 'college strike'. We all marched towards the collector office to give big list of AGENDA to be considered… which was never materialized and that was the end of the scenario … a new Principal took charge of the college and enforced a strict regulations, guidelines and rules. Then on a 'jolly' became 'joli' now a systemic, dynamic processes for learning and related activities.

Our class of BSc Botany students may be 32 students in my class and in the first day itself, a Professor asked to introduce ourselves and our interest, each one expressed in their tone. The tone of telling the background by the students invoked the teacher to ask another question, 'How many have joined Botany, the Plant Sciences with interest?' There were only 3 hands raised up that included mine. I really saw the real fresh minds of my prosperous classmates… some with ambitions, few aiming for 3 year degree, few looking to further study to become teachers, college teachers and so on.

By setting their goals in their heart and all the boys worked with pace. We spent the second year was seriously, thinking that we would have one more year to go out of the college so it would be better to prepare and have loads of fun. In the regular learning, we did contribute to the community collectively, as prosperous Botanist we were asked to go to Mookombu, a miniature dam with an organized park, greenery for the city of Trichy. We were asked through the NSS to provide cleaning and organizing the services including the study of plants in the Mookombu gardens… There we got the opportunity to learn the spirit of team work and developed our own interpersonal skills.

The 3rd year was filled with only Botany papers and small project work, we complied a report of the agricultural crops in the district and interacted with state Agriculture department to understand the production of agro crops, cash crops, horticulture crops etc. another phase of learning for us.

After B.Sc., what was left?... I had the option for getting to a job or pursue further education. So the immediate which I thought was the job of a Medical Representative. Since we learnt about the chemicals, their effects and more to interact with the public, I planned that I could make it. Moreover I wanted to own a Scooter at the earliest since all along the 5 years, I cycled from home to college and other related activities in the Trichy.

My father convinced to pursue only further education so I had applied only 3 institutions… I found a course on MSc Wildlife Sciences offered by the Wildlife Institute of India, Dehradun. Admission letter came-in but for some reasons could not,

another was Jamal, which was easier for me since I passed first class from this college. St. Joesph's was another option.

Hence happily I joined M.Sc., Botany in Jamal. So another serious year began. We learned Botany…



Botany… and Plants only for another 2 years...! During the first year, we got the acumen of doing research in plants… we used to do weekly seminars within our class, teachers judged our speaking ability that too on the topics given by them which were not taught… We had to refer some research papers which were available in the library and the university library which was always next door… now this has been shifted.

One of the herculean tasks during the M.Sc., was the collection and preparation of herbarium in which the teachers provided an insight and provided the collection should be unique and innovative. So the destination we selected was Udagamandalam.

It was the most memorable event in which we decided to have collection of plants and fundoos as well. So we had and had huge collection of plants and learned a technique of preservation of plants of varied kinds.

Another interesting as well as difficult task was the Master thesis. We all did with all seriousness since some had inherent objective of pursuing doctoral degree and some scoring higher marks for obtaining their first class who missed the good percentage in the theory exams. We all did splendid job in completing the Master thesis. One of the unique feature of our batch 1987-89 was, we were the second batch after the introduction of the PG Department of Botany after the Bharathidasan University sanctioned JMC to offer M.Sc., Botany. In fact we learnt that the then HOD proposed to start Applied Botany but the university felt that Botany would be more generic. However we had exclusive paper on Horticulture wherein we could have skilled in landscape design and horticulture, we learnt about the Green house which we also experienced it in Ooty.

The college gifted us the immortal memories of going on plant collection trips and having endless fun with classmates. Though the college part of life is over, it still lingers beautifully in my mind and fills my heart forever with abundant happiness. Every time I recollect my college days, I feel like transported to the golden period of my life and I become very nostalgic. I feel grateful to my alma-mater which made my life meaningful and colourful.

The batch of 1984-87.



B. Chandrasekar, Shajehan, Shekabdullah,
G Venkatachalam, K Arjunan, Kanagasamy,
Tamil Selvan



# அடிப்படையில் ஓர் அடிப்படை
# ஜமால் முஹம்மது கல்லூரிக்கு நன்றியுரை



**NAZURULLAH KHAN** M.Sc.
Founder and Brainchild of Globalisaion of Arabic Learning
KHANSOFT MALAYSIA.

மலேசியாவில் நான் ஏழு வயதில் ஆரம்பப் பள்ளியில் படிக்கும் காலத்தில், மாலை நேரத்தில் அரபுப் பாடசாலையில் (மதரஸாவில்) படிக்கச் சென்றேன். அங்கு அரபு எழுத்துகளை அறிந்து புரிந்து படிக்காமல் மனனமாய் எழுத்துக்களை சொல்லிப் படித்து வந்தேன். சிறு வயதில் அரபு மொழி புரியவில்லையே என்ற ஏக்கம் என் மனதில் இருந்தது.

இந்தியாவில் சிறுபான்மையான முஸ்லிம் சமுதாய மக்கள் கல்வி மேம்பாட்டிற்காக 1951–ம் ஆண்டு ஜனாப் M.ஜமால் முஹம்மது சாஹிப் மற்றும் ஜனாப் M.N. காஜாமியான் இராவுத்தர் அவர்களால் திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி உருவாக்கப்பட்டது. இது அரசு உதவிபெறும் சிறுபான்மையினர் கல்லூரி என்பது அனைவரும் அறிந்ததே.

மலேசியாவில் பள்ளிப்படிப்பு (11–ஆம்வகுப்பு) முடித்து, தமிழகத்தில் திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் புகுமுக வகுப்பு (P.U.C) 1972–73ம் ஆண்டு படிக்கும் நல்ல வாய்ப்புக் கிடைத்தது. அங்கு இரண்டாவது மொழிப்பாடமாக தமிழ், இந்தி, அரபு, பிரெஞ்ச், உருது ஆகியவை இருந்தன. எனக்கு சிறு வயதில் அரபு புரியாததால், நான் P.U.C–யில் பிரெஞ்ச் மொழியைத் தேர்வு செய்தேன். ஆனால், எனது மூத்த கல்லூரி மாணவ நண்பர்கள் என்னை அரபு மொழியைத் தேர்ந்தெடுக்கும்படி அறிவுரை செய்தார்கள். எனவே, நான் அரபு மொழியைத் தேர்ந்தெடுத்து, பேராசிரியர் N.V.அப்துல் ரஹ்மான் அவர்களுடைய வகுப்பில் அமர்ந்தேன். பேராசிரியர் N.V.அப்துல் ரஹ்மான் அரபு மொழியை கற்றுக் கொடுத்த முறை, என்னை அரபு மொழியின்பால் ஈர்த்தது. அரபு மொழியின் மீது அதிக ஆர்வம் ஏற்பட்டது. அரபு மொழி புரியவில்லையே என்ற ஏக்கம் நீங்கி, அரபு மொழி மீது தாக்கம் ஏற்பட்டது. அவர் கற்றுத் தந்த முறை, அரபு மொழி என் உள் மனதில் ஆழப்பதிந்தது. அதனால் P.U.C. வகுப்பில் கல்லூரியிலேயே முதன்மை மாணவனாகத் தேர்ச்சி அடைந்தேன்.

இளங்கலை பட்ட வகுப்பு B.Sc–ல் 1973–76 ஆண்டுகளில் நான் விரும்பிய முதன்மைப் பாடவகுப்பை கல்லூரி முதல்வர் பேராசிரியர் E.P.முஹம்மது இஸ்மாயில் தவிர்த்து, B.Sc–ல் வேதியியலை முக்கிய பாடமாகப் படித்தால் அது மலேசியாவில் பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

B.Sc–ல் (வேதியியல்) படிக்கும்போது இரண்டு ஆண்டுகள் (1973–75) அரபு மொழி கற்று, சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வில் முதன்மை மாணவனாகத் தேர்ச்சியடைந்து ஜவஹர்லால் நேரு நினைவுப் பரிசைப் பெறும் தகுதி பெற்றேன். இதனால் எனக்கும் ஜமால் முஹம்மது கல்லூரிக்கும் நற்பெயர் கிடைத்தது.

கல்லூரியில் படிக்கும்போதே பல அரபு நூல்களைப் படித்து, அரபுப் புலமையை வளர்த்துக் கொண்டேன். எளிய முறையில் இனிய அரபு மூல மொழியை அதாவது திருக்குர்ஆனை படித்து புரிந்து கொள்ள ஒரு புதிய முறையை கணினியில் மென்பொருள் மூலம் உலகிற்கு அறிமுகம் செய்ய எண்ணம் கொண்டேன். அதற்காக கணினி அறிவைப் பெற்று எனது மென்பொருள் உருவாக்கம் ஆரம்பமானது.

திருக்குர்ஆனின் மொழியாகிய அரபு மொழியை தமிழக முஸ்லிம் சமுதாயம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையில் பட்டப் படிப்பில் அரபு மொழியை முதன்மைப் பாடமாக தமிழகத்தில் அறிமுகப்படுத்திய பெருமை ஜமால் முஹம்மது கல்லூரியைச் சாரும்.

ஜமால் முஹம்மது கல்லூரியில் கல்வி பயிலும்போது பேராசிரியர்களிடம் நான் என் சந்தேகங்களை தெளிவு செய்துகொள்ளும் முறையிலும், எனது புகைப்படக் கலையின் திறமையிலும் விருப்பம் கொண்டவார்களாக இருந்தார்கள். கல்லூரியில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும், விழாக்களையும் படம் பிடித்து, அந்தந்த பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கும் வழக்கம் இருந்ததால், அனைத்துத் துறை பேராசிரியர்களிடமும்

எனக்கு பழக்கமும் நெருக்கமும் ஏற்பட்டது. எங்களுக்கிடையே பாசப்பிணைப்பு மலர்ந்தது. நான் ஜமால் முஹம்மது கல்லூரியில் கல்வி பயிலும் காலத்திலேயே அனைத்துப் பேராசிரியர்களின் மனதிலும் எனக்கு நீங்காத இடம் கிடைத்தது. இளங்கலை பட்டப் படிப்பு முடித்து முதுகலை படிப்பிற்காகக் கல்லூரியிலிருந்து சென்ற பின்னரும், எனக்கும் ஜமால் முஹம்மது கல்லூரி பேராசிரியர்களின் தொடர்பு நீடித்து வந்தது.

அரபு மொழியை தமிழ், ஆங்கிலம் மற்றும் மலாய் (Malay) மொழிகள் மூலம் தானும் கற்று, பிறருக்கும் கற்பிக்கும் எளிய முறையை விளக்கும் மென்பொருள் உருவாக்கத்தில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்க்க ஜமால் முஹம்மது கல்லூரி எனக்குச் செய்த உதவிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மலேசியாவிலிருந்து தமிழகம் வரும் போது தவறாமல் நான் கல்வி பயிலும் போது முதல்வர்களாக பணிபுரிந்த ஜனாப் பேராசிரியர் E.P.முஹம்மது இஸ்மாயில் மற்றும் ஜனாப் முனைவர் C.நைனார் முஹம்மது ஆகியோரைச் சந்தித்து எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வேன். அவர்களும் எனக்கு மேலும் ஊக்கம் அளித்தார்கள். இதனால் நானும் மென்பொருள் உருவாக்கத்தில் உற்சாகம் அடைந்தேன்.

முனைவர் K.அப்துல்லாஹ் பாஷா அவர்கள் 1998–ஆம் ஆண்டு முதல்வராகப் பணியாற்றிய போது, மென்பொருள் உருவாக எனக்கு ஆர்வமும் ஊக்கமும் அளித்தார்கள். ஜமால் முஹம்மது கல்லூரியில் (1989–1998) ஆண்டுகளில் முதல்வராக இருந்த பேராசிரியர் ஜனாப் ஹாஜி N.அப்துல் ஸமது அவர்கள் அய்மான் கல்லூரியில் (AIMAN College) தாளாளராக இருக்கும் போது பேராசிரியர் M.M.ஷாஹுல் ஹமீது அவர்கள், JMC முன்னாள் மாணவர் சங்க பொறுப்பாளராக இருந்தவர், அக்கல்லூரியில் எனது மென்பொருளின் பயன்பாட்டை விளக்க சந்தர்ப்பம் அளித்தார்கள்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் கணினித் துறைத்தலைவர் முனைவர் A.R.முஹம்மது இஸ்மாயில் அவர்கள் துறையில் உள்ள கணினி ஆய்வகத்தை எனது ஆராய்ச்சிக்குப் பயன்படுத்த அனுமதி தந்து ஊக்கப்படுத்தினார்.

முனைவர் ஹாஜி ஜனாப் M.ஷேக் முஹம்மது அவர்கள் (2003–2011) ஆண்டுகளில் ஜமால் முஹம்மது கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய போது, எனது கான்சாப்ட் மென்பொருள் பற்றி விளக்கிய போது கல்லூரி மாணவர்களுக்கு அரபு மொழியை மென்பொருள் மூலம் கற்பிப்பதற்கு அனுமதி அளித்து, ஊக்கப்படுத்தினார்கள். மேலும், முனைவர் ஜனாப் சு.காதர் முஹைதீன் அவர்கள் (2011–2013) ஆண்டுகளில் முதல்வராகப் பணியாற்றிய போதும் கல்லூரி மாணவர்களுக்கு தன்முனை பயிற்சி வகுப்பு மற்றும் அரபு மொழிக்கும் ஆங்கில மொழிக்கும் உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை விளக்கி பாடங்களை நடத்த வாய்ப்புக் கொடுத்து உதவினார்கள்.

முனைவர் ஹாஜி A.M.முஹம்மது சிந்தாஷா அவர்கள் (2013–2014) ஆண்டு முதல்வராக பணிசெய்தபோது, முழுமை அடைந்த கான்சாப்ட் மென்பொருளுக்கு வெளியீட்டு விழா நடத்த வேண்டும் என விரும்பினார். ஜமால் முஹம்மது கல்லூரியில் கான்சாப்ட் பொருள் வெளியீட்டு விழாவிற்கு கல்லூரி செயலாளர் முனைவர் A.K. காஜாநஜீமுதீன் அவர்கள் அனுமதி அளித்தார். அவ்வெளியீட்டு விழாவிற்கு மலேசியாவிலிருந்து 82 விருந்தினர்கள் ஜமால் முஹம்மது கல்லூரிக்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்தார்கள். ஜமால் முஹம்மது கல்லூரி மென்பொருள் வெளியீட்டு விழாவிற்கு வந்திருந்த மலேசியா விருந்தினர்களை உபசரித்த விதம் அவர்கள் மனதில் ஜமால் முஹம்மது கல்லூரி நீங்காத இடம் பிடித்தது. ஜமால் முஹம்மது கல்லூரியில் நடைபெற்ற ''கான்சாப்ட்மென்பொருள்'' வெளியீட்டு விழா நிகழ்ச்சிகளை சன் டிவி, ராஜ்டிவி, விஜய் டிவி, ஜெயா டிவி உட்பட 18 முக்கிய தொலைக் காட்சிகள் சிறப்புடன் பேட்டி எடுத்து ஒளிபரப்பினார்கள். தி இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம்ஸ் ஆப் இந்தியா, டெக்கான் கிரானிகல் ஆகிய ஆங்கில நாளேடுகளும், தினந்தந்தி, தினமலர், மாலைமலர், மணிச்சுடர் போன்ற பல தமிழ் நாளேடுகளும் தமிழ் நேசன் தமிழ் மலர் மற்றும் தினக்குரல் ஆகிய மலேசிய நாளேடுகளும் மென்பொருள் வெளியீட்டு விழாவைப் பற்றிய செய்திகளை விபரமாக வெளியிட்டனர். கான்சாப்ட் மென்பொருள் தனித்தன்மை வாய்ந்த மென்பொருள் என்று சுட்டிக் காட்டினார்கள்.

முனைவர் ஹாஜி A.M.முஹம்மது சிந்தாஷா அவர்கள் முதல்வராகப் பணியாற்றிய போது எனக்கும் ஜமால் முஹம்மது கல்லூரிக்கும் இடையே கான்சாப்ட் மென்பொருளை கல்லூரியில் அறிமுகம் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இது அரபுமொழியைக் கற்க ஒரு மாற்று முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முனைவர் ஹாஜி A.M.முஹம்மது சிந்தாஷா அவர்கள் என்னிடம் கான்சாப்ட் ஆங்கில வழி அரபு மொழி கற்றல் விளக்கங்கள் ஆங்கிலத்தில் தானே இருக்கிறது. தமிழ் நாட்டில் அதிக முஸ்லிம் மக்களுக்கு தமிழும் அரபும் தான் தெரியும் எனவே, தமிழ்நாட்டிற்கு தமிழ் வழியில் அரபு மொழி கற்றல் மென்பொருள் உருவாக்கினால் பயனுள்ளதாக இருக்கும் என்றார். காகிதத்தில் முடியாது, ஆனால் கணினியில் முடியும் என்று சிந்தித்தேன். அதில் உருவாகியதுதான் மும்மொழி கற்றல் கற்பித்தல் என்ற புதிய முறைக் கான்சாப்ட் மென்பொருள்—அறிமுகப்படுத்தப் பட்டது அரபு மொழியை ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் கற்க இப்போது கான்சாப்ட் மென்பொருள் ஒரு புதிய வடிவம் பெற்றுள்ளது. அதற்கு முனைவர் ஹாஜி A.M.முஹம்மது சிந்தாஷா அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் முதுகலை மற்றும் அரபு ஆராய்ச்சி துறையும், அதன் பேராசிரியர்கள் முனைவர் A.முஹைதீன் அப்துல் காதர், முனைவர் M.அப்துல் காதர் மற்றும் முனைவர் A.முஹம்மது இஸ்மாயில் ஆகியோரும் எனக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தார்கள்.

முனைவர் S.முஹம்மது சாலிஹ் அவர்கள் (2014–2017) ஆண்டுகளில் முதல்வராகப் பணியாற்றும்போதும் முன் மாதிரி திட்டம் The First Pilot Project உருவாகி முழுமையாக நடைபெற்றது. அதில் முப்பது மாணவிகளுக்கு ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் என 30 மணிநேரம் 15 நாட்கள் முழு மூச்சாகப் பயிற்சி நடைபெற்றது. அனைத்து மாணவிகளும் முழுமையாக கற்றுப் பயனடைந்தனர். மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்குவதற்காக கல்லூரியில் பெரிய விழா நடத்தினார்கள். அதில் 1000 மாணவிகள் முன்னிலையில் கான்சாப்ட் பயின்ற மாணவிகள் குறுகிய காலத்தில் கான்சாப்ட் மென்பொருளில் கற்றுக் கொண்டதை மின்னியல் திரையில் விளக்கிக் காட்டி தங்களின் தனித்திறமையை வெளிப்படுத்தினார்கள், அவர்கள் அனைவருக்கும் விழாவில் பங்கேற்றதற்கான சான்றிதழ், பயிற்சி நிறைவுக்கான சான்றிதழ் என இரண்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஜனாப் ஹாஜி M.J.M.கபூர் சாகிப் அவர்கள் (1988–2011) செயலாளர் மற்றும் தாளாளராக சேவையாற்றும் போது மென்பொருள் உருவாக்கம் பற்றி விசாரிப்பார்கள். ஜனாப் M.J.M.கபூர் சாகிப் அவர்களுக்குப் பின்பு முனைவர் A.K.காஜா நஜீமுதீன் 2011 ஆண்டு செயலாளராகப் பொறுப்பேற்ற போது ஜமால் முஹம்மது கல்லூரி வளாகத்தில் எனது மென்பொருள் தொடர்பாக ஆராய்ச்சி செய்வதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். கல்லூரி வளாகத்தைப் பயன்படுத்திக் கொள்ள எனக்கு சிறப்பான தனி அங்கீகாரம் அளித்தார்கள்.

ஜனாப் ஹாஜி கலீல் அஹமது அவர்கள் கல்லூரி நிர்வாகத்தில் பொருளாளராக 28 ஆண்டுகள் (1989–2017) சேவை செய்து அரும்பணியாற்றினார்கள். அவர்களும் என்னிடம் கான்சாப்ட் மென்பொருள் விரைவில் முழுமைப்படுத்தி முதன் முதலில் இக்கல்லூரியில் அறிமுகப்படுத்த விரும்பினார்கள். பொருளாளார் ஹாஜி M.J.ஜமால் முஹம்மது சாகிப் அவர்களும் மற்றும் துணைச் செயலாளர் ஜனாப் முனைவர் K.அப்துல் ஸமது அவர்களும் மென்பொருளை விரைவில் பூர்த்தி செய்து முதன் முதலில் ஜமால் முஹம்மது கல்லூரியில் நடைமுறைப்படுத்த என்னை ஆர்வ மூட்டினார்கள். இவ்வனைத்து நடவடிக்கைகளுக்கும் ஜமால் முஹம்மது கல்லூரியின் நிர்வாகக் குழு முழு ஒத்துழைப்பு நல்கியது.

கல்லூரி நிறுவனர்களின் தொலைநோக்கு கொள்கைகளை தற்போது பணியாற்றும் நிர்வாகம் திறமையுடன் செயல்படுத்தி வருகிறார்கள். இன்றைய நிர்வாகிகள் நன்கு செயலாற்றி இக்கல்லூரியை மென் மேலும் வளர்ச்சியடைய உறுதுணையாக இருந்து சேவை செய்து கொண்டிருக்கிறார்கள்.

முனைவர் K.Nஅப்துல் காதர் நிஹால் (சுயநிதிக் கல்லூரி இயக்குநர்) அவர்கள் 2014 ஆண்டு முதல் கான்சாப்ட் மென்பொருள் வகுப்புகளை மாணவர்களுக்கு நடைமுறை வகுப்புகள் பாதிப்படையாமல் அவர்கள் ஆர்வமாக படிக்கக்கூடிய நாட்களைக் குறிப்பிட்டு ஒவ்வொரு ஆண்டிற்கும் கால அட்டவணைகளைக் கொடுப்பார். மேலும் கான்சாப்ட் கணினி வகுப்பிற்குக் தேவையான மின்னியல், மின்னணு சாதனங்களை அமைக்க ஏற்பாடுகளை செய்துகொடுப்பார். அவர்கள் கொடுத்த ஊக்கம் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது.

தற்போது ஜமால் முஹம்மது கல்லூரியின் முதல்வராக சேவை செய்யும் ஹாஜி முனைவர் S.இஸ்மாயில் முஹைதீன் அவர்கள் மாணவ சமுதாயம் அரபு–ஆங்கிலம்–தமிழ் ஆகிய மும்மொழியைத் தெளிவுடன் கற்று உயர்ந்த நிலையை அடைய கான்சாப்ட் மென்பொருள் பெரிதும் பயன்பெற வேண்டும் என்ற அவருடைய விருப்பம் எனக்கு மேலும் ஊக்கத்தைத் தருகின்றது.

நான்உருவாக்கிய "கான்சாப்ட்" என்ற மென்பொருள் உலகளாவிய பிணையத்தளத்தில் (Global Platform) ஒலிப்புலனில் அழகிய ஒளி வர்ணத்தில் எளிய இனிய முறையில் தமிழ்–ஆங்கிலம்–மலாய் மொழிகளில் அரபுமொழியைக் கற்கவும் மற்றும் மற்றவர்களுக்கு கற்பிப்பதற்கும் உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. கான்சாப்ட் மென்பொருள் கற்பவர்களின் எழுத்தாற்றல், பேச்சாற்றல் அரபு எழுத்துக்கள் உச்சரிப்பின் நுட்பம் மற்றும் நுணுக்கங்களை மேன்மைப்படுத்துகிறது. அரபு மொழி இலக்கண கட்டமைப்புக் கூறுகளை கான்சாப்ட் மென்பொருள் மூலம் கற்பவர்கள் அம்மொழியை எளிதாகவும், இலக்கண நயத்துடனும் சொற்றொடர்களை அமைத்துக் கொள்வதையும், அதிகமான அரபு மொழி நெடுங்கணக்கியல்களை கற்றுக் கொள்ள வல்லமையையும் கற்பவர்களுக்கு உருவாக்குகிறது. இதன் மூலம் கற்பவர்கள் அம்மொழியை தங்குதடையின்றிச் சரளமாகப் பேசுவதற்கான திறன் பெறுகிறார்கள். கான்சாப்ட் மென்பொருள் மூலம் கற்பவர்கள் சுயமாக சிந்திக்கவும், சுயமாகப் பிழைகளை திருத்திக் கொள்ளவும் உதவுகிறது. பாரம்பரிய கற்பித்தல் முறைக்கு ஈடாக, மொழிகளைக் கற்றுக் கொள்ள கற்பவர் எளிதாக இனிதாக சுயமாகக் கற்றுக் கொள்ளவும் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்கும் கான்சாப்ட் மென்பொருள் மிகவும் பயனுள்ளதாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஜமால் முஹம்மது கல்லூரியில் படித்த மாணவர்கள் ஜமால் முஹம்மது கல்லூரியைவிட்டு வெளியே சென்றபின்பும், என்றென்றும் அவர்கள் அக்கல்லூரியின் மாணவர்களாகவே பெருமைப்படுகிறார்கள். எனவே, ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம் மிக அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அச்சங்கத்தில் நானும் ஒருவன்.

நான் ஜமால் முஹம்மது கல்லூரியில் அரபு மொழி பயிலும் போது எனக்கு அரபு மொழி மீது அதிக ஈர்ப்பு உண்டாகியது. நான் படித்த வேதியியல் கொள்கைகள் மற்றும் தத்துவங்கள் அரபு மென்பொருள் உருவாக எனக்கு மிகவும் உதவியாக அமைந்தது.

வேதியியலில் படித்த பகுப்பாய்வுக் கொள்கைகள் எனது மென்பொருள் உருவாக்கத்தில் தேவையற்ற செய்திகளை நீக்கி, தேவையான அறிவார்ந்த பயன்பாட்டினை முழுமையுடன் நிறைவடைய மிகவும் உதவியது. ஆகையால், முழுமையடைந்த பன்மொழி பன்வழி செயல்பாட்டு முறையில் அரபு மொழி கற்றல் மற்றும் கற்பித்தல் எளிமையான முறையில் இம்மென்பொருள் உருவாகியுள்ளது. நான் விரும்பிய பாடத்தை எனக்குத் தராமல் வேதியியல் பாடத்தை படிக்க என்னை ஆர்வமூட்டிய முதல்வர் E.P.முஹம்மது இஸ்மாயில் அவர்களின் செயல் இறைவனின் தூண்டுதல்தான் என நான் எண்ணுகிறேன்.

இதனால் கான்சாப்ட் என்ற அடிப்படை அரபு மொழியை ஆங்கிலம் மற்றும் தமிழ் அரபு மொழி கற்றல் கற்பித்தல் என்ற கான்சாப்ட் மென்பொருள் பன்மொழி வழி செயல்பாட்டு முறையில், கணினி வழியில் கற்க ஜமால் முஹம்மது கல்லூரி ஒரு அடித்தளமாக அமைந்தது. ஜமால் முஹம்மது கல்லூரியை உருவாக்க அடிப்படைக் காரணமாக இருந்தவர்களின் தொலைதூர நோக்கமும், உலகமக்கள் அனைவரும் பயன்பெறும் கான்சாப்ட் மென்பொருள் உருவாக்கம் என்ற எனது வாழ்நாளின் அடிப்படை நோக்கமும் ஒன்றாக அமைந்துள்ளது.

ஜமால் முஹம்மது கல்லூரி

நிறுவனர்களின் நோக்கம்,

இக்கல்லூரி முதல்வர்களின் ஊக்கம்,

அரபு மொழியின் மீது எனக்கிருந்த தாக்கம்,

மும்மொழியில் கணினி மென்பொருள் உருவாக்கம்

என்பதில் நான் மிகப் பெருமிதம் அடைகின்றேன்.

எனது நோக்கம் ஜமால் முஹம்மது கல்லூரிக்கு எனது முழு ஒத்துழைப்பையும் சேவைகளையும் அளித்து என்றென்றும் செயல்படுவது என்பதாகும். ஜமால் முஹம்மது கல்லூரியின் அடிப்படையான தொலைநோக்குப் பார்வை எனது எண்ணங்களில் பிரதிபலிக்கப்பட்டு உலகளாவியப் பயன்பாட்டு மென்பொருளாக உருவாகியுள்ளது.

இதற்கு உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கு எனது நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

* * * * *

# விலாசம் தந்த விடிவெள்ளி



**S.M. MAZHAR NAZEEB KHAN**
Co-ordinator, Civil Services Examination Study Centre
Jamal Mohamed College, Tiruchirappalli.

திருச்சி வாழ் முஸ்லிம்கள் தொன்று தொட்டு பீடித்தொழில் ஒன்றையே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்வாதார வசதியின்றி கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள். உயர்கல்வி கற்றால் தான் அரசுப் பணிகளில் சேரவும் அதிகாரம் நிலைநாட்டவும் முடியும் என்ற உண்மை நிலையை கருத்தில் கொண்டு ஜனாப் ஜமால் முஹம்மது சாஹிப் மற்றும் ஜனாப் காஜாமியான் இராவுத்தர் அவர்கள் 120 ஏக்கர் நிலப்பரப்பில் 11–07–1951ஆம் தேதி அன்று இச்சமுதாயத்தின் சீரிய மணிமகுடமாக திகழும் ஜமால் முஹம்மது கல்லூரியை நிர்மாணித்தார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரை ஆலமரம் போன்று வளர்ந்து பல்கிப் பெருகி வேர்களும் விழுதுகளும் தாங்கி ஆயிரக்கணக்கானவர்களுக்கு இல்லை, இல்லை இலட்சக்கணக்கானவர்களுக்கு நிழல் தந்து இளைப்பார உதவி செய்கிறது.

திருநெல்வேலியில் நான் பள்ளிப் படிப்பை முடித்து 1971–ல் உதயமான சதக்கத்துல்லா அப்பா கல்லூரியில் PUC பயின்று மேற்கல்வி பயில ஆலோசனை செய்து கொண்டிருந்த நேரத்தில் நமது ஜமால் முஹம்மது கல்லூரியில் B.Sc வேதியியல் படிக்கும் வாய்ப்பினை அல்லாஹ் ஏற்படுத்திக் கொடுத்தான். அந்த நேரம் நம் கல்லூரியில் B.Com மற்றும் B.Sc (Che) பாடங்கள் கொடிக்கட்டிப்பரந்த காலம் இவ்விரண்டிலொன்றை பயிலவே மாணவர்கள் ஆர்வம் கொண்டிருந்தார்கள். நம் கல்லூரியில் 1972 முதல் 1975 முடிய B.Sc (Che) விடுதியில் தங்கிப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மஸ்ஜித் சார்ந்த சூழ்நிலை உலகக் கல்வியை மார்க்கக் கல்வியோடு சிறப்பாகப் பயில உதவி செய்தது.

நான் படிக்கும் போது நம் கல்லூரியில் M.Sc. (Chem), பாடம் வரவில்லை ஆகவே கள்ளிக் கோட்டை பல்கலைக்கழகத்தை சேர்ந்த Farook College-யில் சென்று M.Sc (Che) பயின்றேன். M.Sc (Che)பரீட்சையில் நல்ல மதிப்பெண்களோடு தாய் வீடான ஜமால் முஹம்மது கல்லூரிக்கு மே 1978–ல் வந்தேன். நமது கல்லூரிச் செயலாளர் மரியாதைக்குரிய அப்துல் காதர் சாஹிப் அவர்களை வீட்டில் சந்தித்து திருநெல்வேலி ஜனாப் ஜமால் முதலாளி அவர்கள் என்னை ஆசிரியர் பணிக்காக தங்களைச் சந்திக்கச் சொன்னார்கள் என்று கூறினேன். வீட்டிலிருந்த செயலாளர் அவர்கள் உடனடியாகப் புறப்பட்டு கல்லூரிக்கு வந்து முதல்வர் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்களிடம் திருநெல்வேலி ஜமால் முதலாளி இந்த பையனை அனுப்பியுள்ளார்கள். உடனடியாக வேலையில் சேர்த்துக் கொள்ளுங்கள் என அன்புக் கட்டளையிட்டார்கள். 1978 ஆகஸ்டு திங்கள் 24ம் நாள் Assistant Professor– ஆக இக்கல்லூரியில் சேர்ந்தேன். மாண்புள்ளம் கொண்ட நம் செயலர் அவர்கள் எனது மதிப்பெண்கள் என்ன என்று கூட கேட்கவில்லை, சமுதாயத்தின் வளர்ச்சி ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு கல்லூரியில் பணி புரிய இடமளித்தார்கள்.

''செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்''

என்ற கருத்துக்கு அணிகலன் சேர்க்கும் விதத்தில் கல்வியை வணிகமாக நினைக்கும் காலக் கட்டத்திலே வார்த்தைகளுக்கு மதிப்பளித்து வரலாற்றில் சிறப்பாக இடத்தை பெற்றார் அப்பெருந்தகை. அத்தோடு நில்லாமல் நமது மரியாதைக்குரிய செயலர் ஹாஜி. K.அப்துல் காதர் சாஹிப் அவர்கள் 1986ஆம் ஆண்டு ஜமால் முஹம்மது கல்லூரி பள்ளிவாசலை மேற்பார்வை பார்த்துக் கொள்ளும் மிகப்பெரிய பொறுப்பை எனக்கு நல்கினார்கள். அதுவரை அந்தப் பொறுப்பை அவர்களே மேற்கொண்டு வந்தார்கள்.

ஜமால் முஹம்மது கல்லூரி பள்ளிவாசலுக்கென ஒரு தனிச்சிறப்புண்டு. நமது கல்லூரியில் பயிலும் மாணவர்களை புடம் போட்ட தங்கமாகவும், பட்டை தீட்டப்பட்ட வைரமாகவும் மாற்றும் பட்டறை ஆக அது திகழ்கின்றது. மேலும் அவர்கள் உலகளாவச் சென்று ஒளிசிந்தும் நட்சத்திரங்களாக பிரகாசிக்க வழிவகை செய்கின்றது.

1986–ஆம் ஆண்டு நம் கல்லூரிப் பொருளாளராக இருந்த அல்ஹாஜ் M.J.M.அப்துல் கபூர் சாஹிப் அவர்கள் முதல்வர், பேராசிரியர் நயினார் முகம்மது

சாஹிப் அவர்களின் ஆலோசனையின் பெயரில் Purchase Section என்ற அமைப்பை நமது கல்லூரிக்கு பொருட்கள் கொள்முதல் செய்வதற்காக நிறுவி அதன் CoOrdinator–ஆக என்னை நியமனம் செய்தார்கள். அதுவரை நமது கல்லூரியின் அனைத்துத் துறைகளும் தமக்குத் தேவையான பொருட்களைத் தாங்களே கொள்முதல் செய்து வந்தார்கள். இப்புதிய பொறுப்பினை ஏற்று நடத்துவது மிகப்பெரிய சவாலாக அமைந்திருந்தது. அன்றைய பொருளாளர் ஹாஜி ஜனாப் M.J.M. அப்துல் கபூர் சாஹிப் மற்றும் முதல்வர் நயினார் முஹம்மது சாஹிப் ஆகியோரின் சீரிய ஆதரவினால் இத்துறையை பத்தொன்பது ஆண்டுகள் வெற்றிகரமாக நடத்திச் செல்ல பேருதவியாய் அமைந்தது.

ஜனாப் அல்ஹாஜ் M.J.M. அப்துல் கபூர் சாஹிப் அவர்கள் எனக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவுரை கூறுபவர்களாகவும், வழி நடத்துபவர்களாகவும் இருந்துள்ளார்கள். என்னை எப்போதும் மௌலானா என்று அழைத்து வந்தார்கள். எந்தக் காரியத்தை எடுத்தாலும் அது வெற்றி பெரும் வரை ஓயவே மாட்டார்கள். ஒருமுறை என்னிடம் அவர்கள் ஒரு செயலை இவ்வாறு செய்யுங்கள் என Casual-ஆக கூறினார்கள். பின்னர் என்னை அழைத்து நான் சாதாரணமாக ஒரு காரியத்தை சொன்னாலும் அதனைக் கட்டாயம் முடிக்க வேண்டும் என அர்த்தம் கொள்ள வேண்டும் என விவரித்தார்கள். அன்னாரிடம் குடிகொண்டிருந்த Simplicity என்னை வெகுவாகக் கவர்ந்தது.

பேராசிரியர் அப்துல் சமது அவர்கள் முதல்வராக இருந்த பொழுது, ஈரோட்டிலிருந்து ஒரு முதியவர் தன் மகன் முஷ்தரீக் பாஷா M.C.A படிப்பதற்காக நம் கல்லூரிக்கு வந்திருந்தார். ஈரோட்டின் மிக முக்கிய பிரமுகரும், நமது கல்லூரிச் செயலாளர் ஜனாப் ஹாஜி M.J.M. அப்துல் கபூர் சாஹிப் அவர்களின் நெருங்கிய உறவினருமான ஹாஜி E.K.M. தாஜ் அவர்களிடமிருந்து கனம் செயலாளர் அவர்களுக்கு சிபாரிசு கடிதம் கொண்டு வந்திருந்தார். நம் கல்லூரி முதல்வர் உடனடியாக இடம் தர ஒத்துக் கொண்டார்கள். ஆர்வம் மிகுதியால் கனம் செயலாளரவர்களை கண்டு சிபாரிசு கடிதம் கொடுத்தோம். உடனே அவர்கள் கல்லூரி வளாகத்திற்கு வெளியில்தான் உறவுமுறை, கல்லூரிக்குள் அதனைப் பாராட்டுவதில்லை என்று கூறி மாணவனுக்கு இடம் அளிக்க திட்டவட்டமாக மறுத்து விட்டார்கள். பல நாட்கள் சமாதானப்படுத்திய பின்னர்தான் மாணவனுக்கு இடம் கிடைத்தது. ஆகவே எதிலும் தனக்கு அல்லது தன்னுடைய உறவுக்கு என்று பார்க்காத தன்னிகரில்லா தன்மை கொண்டு விளங்கினார்கள். ஆகவே உறவு முறை, சிபாரிசு என்று கூறி அவர்களை அணுகுவது மிகவும் சிரமமாக இருந்தது.

நமது கல்லூரி பள்ளிவாசலுக்கு வருகை தரும் போது அதன் சுவர்களை, கட்டிடத்தை கவனமாக பார்க்கக் கூடியவராக இருந்தார்கள். அவர்களின் பார்வைக்கு ஒரு சிரிய விரிசல் தென்பட்டாலும் அதனை உடனடியாக செப்பனிட உத்தரவு இடுவார்கள்.

சென்னை, ஜமாலியா மதரஸா மஸ்ஜிதின் மைய வாடியின் சுற்றுச்சுவர் இல்லாத ஒரு குறை இருந்து வந்தது. அதற்காக பெரு முயற்சி செய்து வெற்றிகரமாக முடித்து வைத்தார்கள்.

வழக்கமாக கல்லூரி காலங்களிலும் விழாக் காலங்களிலும் ஒரே மாதிரி ஆடை உடுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள். ஒருமுறை திருநெல்வேலிக்கு அன்னாருடன் பயணித்த போது, நாகூர் E.M. ஹனிபா அவர்களின் பாடல்களை ரசித்து கேட்டு வந்தார்கள். இதன் இடையில் இறைவனிடம் கையேந்துங்கள் பாடல் வந்தபோது மெய்மறந்து It is the master piece of நாகூர் E.M. ஹனிபா என்று கூறினார்கள். அல்ஹாஜ் M.J.M. அப்துல் கபூர் சாஹிப் அவர்கள் தனது தகப்பனாரோடு நம் கல்லூரியின் ஆரம்ப காலம் முதல் தொடர்புள்ளவராக இருந்தார்கள். கல்லூரி சம்பந்தமான அனைத்து நிகழ்வுகளையும் வருடம் தவறாமல் சொல்லக் கூடியவராக இருந்தார்கள். ஆகவே, அன்னாரை வரலாற்றுப் பெட்டகம் என்று சொன்னால் மிகையாகாது.

நம் கல்லூரி மாணவர்கள் 1986 முதல் 2004 முடிய கல்லூரி மஸ்ஜிதில் நோன்பு திறக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ரமலானின் ஒவ்வொரு நாளும் இப்தாருக்கு ஒவ்வொரு மாவட்டத்தை சேர்ந்த மாணவர்கள் ஏற்பாடு செய்தார்கள். இது மாணவர்களிடம் சமுதாய தொண்டிற்கு ஒரு பயிற்சியாக அமைந்தது. Special Ifthar நிகழ்ச்சிகளும் மஸ்ஜிதிலேயே நடத்தப்பட்டன.

மேலும் 2004 முதல் 2013 முடிய தீனியாத் கல்வியின் இயக்குனராகப் பொறுப்பேற்று பணியாற்றும் வாய்ப்பு அல்லாஹ் நல்கினான். அந்தச் சமயத்தில் பெண்களுக்கான தீனியாத் வகுப்புகள் வெள்ளிக் கிழமை அன்று நடத்த முடிவு செய்யப்பட்டது.

2013 மே 31 அன்று நான் பணி நிறைவு அடைந்த பொழுது நமது மரியாதைக்குரிய செயலாளர் / தாளாளர் Dr. A.K காஜா நஜ்முத்தீன் அவர்கள் என்னை அழைத்து கல்லூரித் தேர்வு நெறியாளராக பணிசெய்யச் சொன்னார்கள். அது மிகவும் சிரமமான பணியாயிற்றே என்று சொன்ன போது உங்களால் அதனை திறமையாக செய்யமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது எனக்கூறி மேலும் Confidential Section மேற்பார்வை செய்ய நீங்கள் தகுதியானவர் என்று பொறுப்பு நல்கினார்கள். அதற்கு மரியாதைக்குரிய கல்லூரிப் பொருளாளர் ஜனாப் M.J. ஜமால் முஹம்மது சாஹிப் அவர்களும் உறுதுணையாக இருந்தார்கள். 2013 மே மாத முதல் 2017, மே மாதம் முடிய, நான்கு ஆண்டுகள் தேர்வு நெறியாளராக கல்லூரிக்குப் பணி செய்ய அல்லாஹ் வாய்ப்பளித்தான்.

இன்றைய காலத்தின் கட்டாயமாக நமது கல்லூரி மாணவர்கள் UPSC தேர்வு எழுதி மிகச்சிறந்த ஆளுமை உள்ளவராக ஆக வேண்டும் என்ற நோக்கில் 2012, மார்ச் மாதம் Civil Services Examination Study Centre நமது மரியாதைக்குரிய செயலாளர் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் முழுமையான ஈடுபாட்டோடு அமையப் பெற்று அதன் ஒருங்கிணைப்பாளராக செயல்பட எனக்கு வாய்ப்பளித்தார்கள்.

நான் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றாலும் நமது கல்லூரி மஸ்ஜிதின் மேற்பார்வைப் பணியை தொடர்ந்து பார்த்து வர கனம் கல்லூரி தாளாளர் அவர்களும் கனம் பொருளாளர் அவர்களும் அன்புக் கட்டளை இட்டுள்ளார்கள்.

கல்லூரி மாணவர் பருவத்தில் திருச்சி – ஊரே முன்பின் தெரியாத எனக்கு முகவரி தந்து முதன்மைப்படுத்திய என் கல்லூரியையும் அதன் சீர் மிகு நிர்வாகத்தையும் கண் இமை மூடும் நேரம் கூட என் வாழ்நாளில் மறவேன் என உறுதி கூறி நிறைவு செய்கிறேன்.

வஸ்ஸலாம்.

* * * * *

Janab M. Jamal Mohamed Sahib's Speech at Second Round Table Conference on

## 'RESERVE POWERS FOR CURRENCY AND EXCHANGE'

"There was some talk in the discussion of the Conference about reserve powers as regards Currency and Exchange. It is a very bitter subject and the less said about it the better because if, during the past few years anything did more to estrange, embitter and rouse the people in the country, it is this policy of the Government, so far as the Exchange and Currency are concerned has been the worst that could be imagined and apart from the fact they commit serious blunders, the most unfortunate part of it is that they will not correct themselves in time. They will not listen to the appeals and pleading of the people; they merely say "We have no open mind in the matter, we are going to use all the decisions we have already made".

Even recently, what happened? Inspite of the fact that the whole country disapproved of the policy, and the Assembly recorded its vote against it unanimously, as far as the Non-officials were concerned, and even the Government of India evidently getting tired of their old ratio Policy wanted to get out of it, the Secretary of State, a gentle man by the ay who had newly come to this office-sitting here six thousand miles away - I don't want to attack him personally; it is the system I am talking about - dictates a certain policy and imposes it against the will of the people and the Assembly and even of your own Agents on the spot. That has given enough proof, if proof were needed, why there should be no such safeguards so far as exchange and currency are concerned. In fact, it is the best proof why that system should be done away with forthwith."

# நீங்காத நினைவுகள்



**Dr. N. GNANA SABAPATHY,**
B.Sc., PGDBA., PGDPM., MBA., Ph.D.,
(Former Senior Accountant / BHEL / Trichy - 620 014.
Former Director / MBA & MCA, Guru Nanak College, Chennai - 600 042)

நமது ஜமால் முஹம்மது கல்லூரியில் நான் M.Sc (கணிதம்) பயின்ற காலம் (1969–1971) வாழ்நாளில் என்றென்றும் மறக்க முடியாத வருடங்கள்.

அப்போது எனது தந்தை ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்தில் Goods Clerk ஆக இருந்தார். எங்கள் குடும்பம் ஸ்ரீரங்கத்தில் இருந்தது. எனக்கு ரயிலில் இரண்டாம் வகுப்பு Free Pass உண்டு. (அப்போது ரயிலில் I, II, III கிளாஸ் என 3 வகுப்புகள் உண்டு) காலை 9.00 மணிக்கு ஸ்ரீரங்கத்தில் ஆபீஸ் டிரெயினைப் பிடித்து, பொன்மலை அல்லது திருச்சி ஜங்ஷனில் இறங்கி, ஓட்டமும் நடையுமாக கல்லூரியை அடைவோம். (ரயில் சீக்கிரம் வந்தால் ஜங்ஷன், தாமதமானால் பொன்மலை) டிரெயின் ஸ்டுடென்ஸ் அனைவரும் தினமும் 5 அல்லது 10 நிமிடம் தாமதமாகவே கல்லூரியை அடைவோம்.

கணிதத் துறைக்கு Prof. முகமது ஈசா, துறைத் தலைவராக இருந்தார். மாணவர்களிடம் நன்கு பழகுவார். ஆனாலும் சற்று விலகியே இருப்பார். Prof. ஸ்ரீனிவாசன் புதுக்கோட்டையிலிருந்து வருவார். எங்களுக்கு Complex Variable எடுத்தார். அவர் வகுப்பு எடுக்கும் முறை எங்களால் மிகவும் விரும்பப்பட்டது. கரும் பலகையில் மிகக் குறைந்த இடத்தையே பயன்படுத்துவார். Prof. துவாரகாச்சாரி இனிமை யாக வகுப்பை நடத்திச் செல்வார். சந்தேகங்களை பொறுமையாக விளக்கிச் சொல்வார். Prof. முகமது ஈசா அவர்களின் உறவினர் (Prof. ஆன சிராஜிதீன் என எண்ணுகிறேன்) அவருடைய ஸ்டைலே தனி. (Analysis VI எடுத்த பேராசிரியர் பெயர் தற்போது நினைவுக்கு வரவில்லை, மன்னிக்கவும்) திரு. ராமச்சந்திரன் என்ற விரிவுரையாளர் M.Sc., M.Phil., முடித்தவுடன் நமது கல்லூரியில் பணியினைத் துவங்கினார். பிராட்டியூர் அவரது ஊர்.

அப்போதைய College Canteen, தற்போது Commerce Department அருகே உள்ள Staff Room–ல் இயங்கியது. காலை 8.00 மணி முதல் மாலை 5.00 வரை செயல்படும் (டீ 13 பைசா–என நினைக்கிறேன்)

கல்லூரியில் நூலகம் இருந்தும் ஒரு சிலரே அதனைப் பயன்படுத்தினர். நூலகத்தின் பயன்பாடு அப்போது எங்களுக்குத் தெரியாது என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதை ஜமால் முகம்மது கல்லூரி கற்றுக்கொடுத்தது. மற்ற கல்லூரி மாணவர்கள், ஜமால் முகம்மது கல்லூரி மாணவர்களை, ஜாலி ஜமாலியன்ஸ் என்பர். அது எங்களுக்கு மிகவும் பெருமையாக இருக்கும்.

மீண்டும் வருமா அந்த மாணவர் பருவம் ?

அக்கால மலரும் நினைவுகளில் மூழ்க, ஓர் வாய்ப்பளித்த அனைவருக்கும் எனது நன்றியினை காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்.

* * * * *



# இராவுத்தர் இனமும் பரிமள சுன்னத் ஜமாத்தும்



இளசை காஜா,
எட்டையபுரம்

மனித குலத்தின் பரிணாம வளர்ச்சியில் மக்களை இனம் கண்டு கொள்ளும் நிலையில் உருவானதே பலவிதப் பிரிவுகளாகும். தமிழகத்தின் திரை கடல் ஓடி திரவியம் தேடி மரக்கலங்களில் சென்று கடல் வணிகம் செய்த கடற்கரை ஓர வணிக முஸ்லிம்களை மரைக்காயர் என்றும் இந்தியாவின் தென்பகுதியில் படைக்கலன் அமைத்து ஆட்சி செய்தவர்களை தக்கினியர் என்றும் வடபகுதியில் இருந்து படையெடுத்து வந்தவர்களைப் பட்டாணியர் என்றும் இஸ்லாமிய மக்களை நிலப்பகுதி வாரியாக இனம் குறித்துச் சொன்ன போதிலும், எட்டயபுரத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இஸ்லாமிய மக்களுக்கு இராவுத்தர் என்றும் அதன் பிரிவில் ஜமாத்தாக தமிழகத்தில் மட்டுமல்ல கேரளப் பகுதிகளிலும் குடியேறி வாழ்ந்த இஸ்லாமியர்களை பரிமள சுன்னத் ஜமாத்தினர் என்றழைக்கும் சிறப்புகள் உண்டு! இராவுத்தர் இனப்பிரிவிலிருந்து பரிமள சுன்னத் ஜமாத் உருவானது ஒரு அற்புத நிகழ்வாகும்.

கி.பி.1620–க்குப் பின் தமிழகத்தில் பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குப்பின் நாயக்கர் வமிச வழி ஆட்சி மிகச்சிறப்பாகவும் செழிப்பாகவும், வலிமையாகவும் தமிழகத்தின் தென்பகுதிகளில் நடந்து வந்த காலம். அதுசமயம் எட்டயபுரம் மன்னருடைய ஆட்சிக் காலத்தில் முத்தமிழும் புகழ் மணக்க கல்வியாளர்களும், அறிஞர் பெருமக்களும், கவிஞர்களும், கலைஞர்களும் சிறப்புடன் மன்னரால் ஆதரிக்கப்பட்டனர்.

வளமான ஆட்சி நிர்வாகம் எட்டயபுரம் மன்னரவையில் வலிமையான படை பலத்துடனும் நிர்வகித்து வந்தார். அதுபோது மிகச்சிறந்த குதிரைப்படை ஒன்று அமைக்க வேண்டும் என்ற மன்னரின் அவாவினால், வடஇந்தியாவில் மொகலாய மன்னர்களின் படைகளுக்கு அரபு நாட்டுக் குதிரைகள் அதிகமாக வருவதை அறிந்த எட்டயபுரம் மன்னர் கடல் வணிகத்தில் புகழ் பெற்று வந்த கீழக்கரை வள்ளல் சீதக்காதி மரைக்காயரைத் தொடர்பு கொண்டு தமது அரசவைக்கு குதிரைப் படை தேவை குறித்துக்கூற, சீதக்காதி மரைக்காயரும் எட்டயபுரம் மன்னரின் வேண்டுகோளை ஏற்று உடனடியாக அரபு நாட்டில் வணிகத்தொடர்பு மூலம் அரபுக் குதிரைகளை கப்பல் மூலம் தருவித்து எட்டயபுரம் மன்னருக்கு அனுப்பி வைத்தார்.

அரபு நாட்டுக் குதிரைகளின் வளர்ச்சியும் கவர்ச்சியும் மன்னரின் மனம் மகிழ்ந்தது. ஆனால் அதுவரை எட்டயபுரம் அரசவையில் இருந்த கால்நடைப் பணியாளர்கள் காலாட் படைகளுக்குத் தேவையான காளை மாடுகளைத்தான் பராமரித்துப் பழக்கமே தவிர, குதிரைகளின் பராமரிப்புத் தெரியாமல் அவைகளுக்கு பருத்திக்கொட்டையும் புண்ணாக்கும் காய்ந்த தீவனங்களும் கொடுக்க, நாளடைவில் அரபு நாட்டிலிருந்து வந்த குதிரை அனைத்துமே நலிந்து மெலிந்து இறந்து விட, செய்தி அறிந்து மன்னர் மிகவும் வேதனைப்பட்டார்.

இருந்த போதிலும் மீண்டும் வள்ளல் சீதக்காதி மரைக்காயரை அழைத்து குதிரைகளின் நிலை குறித்து மன்னர் கூற, குறைபட நடந்த பராமரிப்புப் பணிகளின் விபரம் அறிந்த வள்ளல் மன்னருக்கு ஆறுதல் கூறி தாமதமில்லாமல் அடுத்து அரபு நாட்டிலிருந்து 100 குதிரைகளையும் அதைப்பராமரிக்க 10 இஸ்லாமிய அரபிகளையும் அழைத்து வந்து முறையான பராமரிப்புப் பணிகள் செய்ய வந்த குதிரைகள் அனைத்தும் தளதளவென ஜொலிப்பது கண்டு எட்டயபுரம் மன்னர் அகமகிழ்ந்து போனார்.

தினமும் குதிரைப்படைகளின் அணி வகுப்பும், போர் வீரர்களின் உற்சாகமும் கண்டு, குதிரை லாயங்களில் சிறப்பாகப் பணிபுரியும் அரபி முஸ்லிம்களுக்கு தக்க மரியாதையும், தொழுகைப்பள்ளி, உணவுக்கூடங்கள், தங்கும் வசதி என தாராளமாகச் செய்தார்.

பக்கத்து பாளையத்துக்காரர்கள் எட்டயபுரம் மன்னரின் குதிரைப்படை கண்டு வியந்து பேசுவதைக் கேட்டு எட்டயபுரம் மன்னர் பெருமையுடன் மகிழ்ந்த நிலையில் ஒரு வருடம் ஓடிவிட்டது. இந்த சூழலில் அரபிகள் வஞ்சகமில்லாமல் உடனிருந்த பணியாளர்களுக்கு போதிய பயிற்சி கொடுத்து அவர்களையும் தயார்படுத்தினர். ஒரு வருடம் கழிந்த ஒரு நாள் 10 அரபிகளும் எட்டயபுரம்

மன்னரின் முன் மிக்க மரியாதையுடன் ஸலாம் கூறி பணிவுடன் நிற்க, மன்னரும் வரவேற்று என்னவென்று வினவ,

மகாராஜா நாங்கள் இங்கு வந்து ஒரு வருடமாகிவிட்டது. நாங்கள் நாடு திரும்ப விரும்புகிறோம் எனக்கூற, ஐயையோ, அரபிகள் போனால் குதிரைகள் செத்துப் போகுமே என எண்ணிப் பதறிப்போன மன்னர், அரபிகளே உங்களுக்கு நான் என்ன குறை வைத்தேன் ? வேறு யாராவது தங்களிடம் தவறாக நடந்து கொண்டார்களா ? என வினவ,

இல்லை மன்னா, உங்கள் தயவில் ஆதரவில் நாங்கள் அனைவரும் மிக்க மரியாதையுடனும், நலமுடனும் மட்டுமல்ல இஸ்லாமிய முறைப்படி வணக்க வழிபாடு வசதிகளுடனும் இருக்கிறோம். பின்னர் என்ன குறை உங்களுக்கு உள்ளது என மன்னர் மீண்டும் வேண்ட,

மன்னர் பெருமானே, இஸ்லாமியர்களாகிய நாங்கள் தகாத பெண் உறவு வைத்துக் கொள்ளமாட்டோம். எங்களுக்கு எல்லா வசதிகள் இருந்தும் ஹலாலான (முறையான) பெண் உறவு இல்லை என்பது தான் என அரபிகள் வெட்கத்துடன் கூற,

அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் அதைக் கூறுங்கள் என மன்னர் கேட்க,

நாங்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு இஸ்லாமிய பெண்ணைத் திருமணம் முடிக்க வேண்டும். ஆனால் இங்கு எங்களைத்தவிர இஸ்லாமிய குடும்பம் ஏதுமில்லையே என அரபிகள் விபரம் கூற,

அப்படியா, அமைச்சரே உடனடியாகப் பறை அறிவியுங்கள். நமது அரண்மனையில் பணிபுரியும் இந்த 10 அரபிகளையும் எந்தப் பெண்கள் மனமுவந்து இஸ்லாமாகி மணம் புரிந்து கொள்கின்றனரோ அவர்களுக்கும், அவர்களுடைய வழி வழி வாரிசுகளுக்கும் அரண்மனை ஊழியர் அந்தஸ்த்து கொடுக்கப்படும் என மன்னர் தீர்மானமாகக்கூற, அதன்படியே முஸ்லிம்களின் நற்குணம் அறிந்த அவர்களுடன் பணிபுரிந்த ஊழியர்களே தங்களின் பெண் மக்களை இஸ்லாமிய முறைப்படி 10 அரபிகளுக்கும் திருமணம் முடித்து வைத்தனர்.

அன்றைய சூழலில் அரபி மக்கள் மிகவும் சிரம திசையில் வாழ்ந்தனர். ஆகவே இஷ்டமான வேலை, கைநிறையப்பணம் கண் நிறைந்த மனைவி, மக்கள் என்ற சூழலில் அரபி முஸ்லிம்கள் எட்டயபுரம் மக்களுடன் ஐக்கியமாகவும் மகிழ்வுடனும், மன்னரின் குதிரைகள் வளர்ப்புப் பணியில் மிகுந்த சிரத்தையுடன் வாழ்ந்து வந்தனர். அரபிகளும் தமிழ் கற்று வாழும் நிலையில் அவர்களை இனம் சொல்லி அழைக்க இராவுத்தர் (இராவுத்தர் – குதிரைக்காரன்) என்ற பெயரில் அன்று தோன்றிய இனப்பெயர் இன்றும் எட்டயபுரம் வழித்தோன்றலின் மக்கள் வாழும் ஊர்கள் அனைத்திலும் இராவுத்தர் என்ற அடைமொழியும் அழைக்கும் பெயருடன் சேர்ந்து கொண்டது.

இந்தச் சூழலில்தான் இன்னுமொரு அற்புதம் நடந்தது. அரபு நாட்டில் ஷேக் பரீது அத்தார் வமிச வழியில் வந்த சேக் முகம்மது அலியார் என்பவர் பரிமளம் கமழும் அத்தர் வகை வியாபாரத்தின் பொருட்டு அரபு நாட்டிலிருந்து கி.பி.1640–ல் கேரளா வழியாக தமிழக எல்லை பேட்டை (திருநெல்வேலி) வந்தடைந்து அங்குள்ள இஸ்லாமியர்களின் அளவில் அத்தர் வணிகம் செய்து வந்தார். வரும் வழியில் அவருடைய இயற்கை ஆர்வம் தமிழை அழகாகப் பேசவும் கற்றுக் கொள்ள, ஒரு கட்டத்தில் அடுத்து அத்தர் வணிகத்திற்கு எங்கு போகலாம் என்ற ஆலோசனையில் மதுரை செல்லும் வழியில் எட்டயபுரத்தில் இஸ்லாமியர்கள் உள்ளனர் என அறிந்து வந்தவருக்கு இருக்கும் முஸ்லிம்கள் அனைவருமே அரண்மனை ஊழியத்தில் இருப்பது அறிந்து அவர்களின் வழிகாட்டுதலில் எட்டயபுரம் மன்னரைச் சந்தித்து மணம் கமழும் பரிமள அத்தரை முன் வைத்துப் பேசிய போது, மன்னருக்கு சேக் முகம்மது அலியாருடைய மணமுள்ள அத்தருடன் அவருடைய அழகுத்தமிழ் பேச்சும் பிடித்தும் போக, இனி நீங்கள் எங்கும் செல்ல வேண்டாம். இனி எமக்குத் தினமும் அரசவைக்குப் போகுமுன் அத்தர் பூசிவிடவும், சமயம் கிடைக்கும் போதெல்லாம் ஏனைய தமிழ்ப் புலவர்களுடன் நீங்களும் என்னுடன் அளாவிக்கொண்டிருந்தாலே போதும் என்று அன்புக்கட்டளையிட மன்னருடன் சேக் முகம்மது அலியார் இணக்கமாகிவிட மற்ற ராவுத்தர்களுடன் இவரும் கலந்து உறவாகி அவர்களுடைய மக்களில் ஒரு பெண் மகளைத் திருமணம் முடிக்க கி.பி.1642–ல் பிறந்த தவசீலரே சீராப்புராணம் படைத்த உமறுப்புலவர் ஆவார்.

இராவுத்தர் இனத்துடன் இணைந்த சேக் முகம்மது அலியின் பரிமள வணிகத்தின் பெயராலேயே அதன் வமிசவழி மக்கள் பரிமள சுன்னத் ஜமாத்தைச் சேர்ந்தவர்கள் என அழைக்கப்பட்டனர்.

பல்கிப்பெருகும்மக்கள்வழிவழிதோன்றல்களாகிய பரிமள சுன்னத் ஜமாத்தைச் சேர்ந்த அனைவருமே அமுதகவி அரசு உமறுப்புலவரின் வாரிசு மக்களாவர்.

பரிமள சுன்னத் ஜமாத்தினரின் வழித் தோன்றல்கள் தங்களின் நயமான பேச்சு, நம்பிக்கையான வியாபாரம் கல்விச்சிறப்பு, இவை அனைத்தும் இருப்பினும் இராவுத்தர் இனத்தின் அஞ்சாமை அதிகாரம் இவைகளுடன் சென்ற இடமெல்லாம் வாழும் வகை நிலமெல்லாம் பெயரும் புகழுடனும் தலைமைத் தனத்துடனும் வாழ்ந்து வரலாயினர்.

எட்டயபுரத்திலிருந்து இடம்பெயர்ந்த பரிமள சுன்னத் ஜமாத்தைச் சேர்ந்த மக்கள், பேட்டை, மதுரை, மேலூர், திண்டுக்கல் முகமதியாபுரம், திருச்சி பாலக்கரை, சேலம் மவுஸ்புரம் என புகழுடன் வாழுகின்றனர். பேட்டையில் பிறந்த காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப், திருச்சி பாலக்கரை ஜமால் முகம்மது கல்லூரி நிறுவனர் காஜா எஜமான், சென்னை சேக்முகம்மது ராவுத்தர் ஷிப்பிங் கம்பெனி அதிபர், திண்டுக்கல் மானா மூனா குரூப், புகாரி ஓட்டல் குரூப் அதிபர்கள் எனப் புகழ்பெற்ற மக்களின் பெயர்களை பட்டியலிடலாம்.

அல்ஹம்துலில்லாஹ்

இப்பரிமள சுன்னத் ஜமாத், தென்னகத்தின் பல்வேறு பகுதியில் யாபித்து சமூக பணியினை ஆற்றினாலும் தமிழகத்தின் நடுப்பகுதியான திருச்சியில் ஒரு கட்டமைப்பான ஜமாத்தினை ஒருங்கிணைத்ததும் திருமணத்தில் திருமணப் பதிவேடு என்ற முறையை அறிமுகம் செய்ததும் பரிமள சுன்னத் ஜமாத்தே. திருச்சி பாலக்கரையில் முகம்மது மியான்கான், காஜாமியான் இராவுத்தர் இவர்களின் ஷரீஅத் சார்ந்த அரும்பணி இன்றைய கால ஜமாத் கட்டமைப்பின் ஆணிவேராகும். ஜமாத் கட்டமைப்புதான் சமுதாயத்தின் பலம். அதனை அழகான முறையில் ஒருங்கிணைத்து செயல்படுத்திய பெருமை பரிமள சுன்னத் ஜமாத்தைச் சேரும். குறிப்பாக திருச்சியில் மியான் இராவுத்தர் குடும்பத்தைச் சாரும் என்றால் அது மிகையாகாது.

* * * * *



உமறுப்புலவர் மணிமண்டபம்



உமறுப்புலவர் அடக்க இடம்



உமறுப்புலவர் அரசவைப் புலவராகப் பணிசெய்த பழமையான அரண்மனை.

# சமுதாயத்தின் ஒளி விளக்குகள்... !



பீ. அப்துல்காதர் B.Sc., B.Tech
செயலாளர், JMC முன்னாள் மாணவர் சங்கம் – சென்னை பிரிவு
Managing Partner, A.K. Builders, Chennai

பெயரைச் சொன்னாலே பெருந்தன்மை தெரியும்... !

இவர்களது பெயரை நினைத்தாலே வள்ளல் தன்மை எதிரில் வந்து நிற்கும்... !

ஆம். இருபெரும் வள்ளல்களான ஹாஜி M. ஜமால் முகம்மது சாஹிப் மற்றும் ஜனாப் N.M. காஜாமியான் இராவுத்தர் சாஹிப் இவர்களது பெயருக்கு அந்த சக்தி உண்டு... !

தாழ்ந்து கிடக்கும் இந்த இஸ்லாமிய சமுதாயம் கல்வியில் முன்னேறி அந்த முன்னேற்றத்தின் மூலம் சமூக பொருளாதார அந்தஸ்தைப் பெற்று அதன் மூலம் அனைத்து வித உயர்வுகளையும் இந்த சமுதாயம் பெற வேண்டுமெனும் எண்ணம் இவர்களுக்கு அன்றைய காலகட்டத்திலேயே உதித்தது.

நினைப்பது சுலபம், நிறைவேற்றுவது கடினம் அல்லவா ?

ஆனால் இவர்களுக்கு அது கடினமாகத் தெரியவில்லை...

சமுதாய உயர்விற்கான கல்வி என நினைத்த மாத்திரத்திலலேயே அதற்கான ஆரம்பமாக அன்றே அப்போதே அறுபது ஏக்கருக்கும் மேலான இடத்தில் புனித மிகு ஜமால் முகம்மது கல்லூரியையும் மற்றும் பல கல்வி நிறுவனங்களையும் இருபெரும் வள்ளல்கள் இணைந்து உருவாக்கினார்கள். இன்றைக்கு உலகளாவிய அளவில் ஜமாலியன்களை உருவாக்கி அனுப்பி உயர்ந்து பரந்து நிற்கும் ஜமால் முகம்மது கல்லூரி தென்னகத்தின அலிஹார் பல்கலைக்கழகம் என்று அனைவராலும் பெருமையோடு பேசப்படுகிறது.

இந்த இருபெரும் வள்ளல்கள் மக்களுக்கு ஒளி வழங்கும் சூரியனைப் போலவும், இரவில் மக்கள் ஒய்வாக அமைதியோடு உறங்குவதற்கு வெளிச்சம் தரும் சந்திரனைப்போலவும், இஸ்லாமிய சமுதாயம் மட்டுமல்லாமல் அனைத்து சமுதாயத்தினருக்கும், குறிப்பாக ஏழை கிராமப்புற மாணவர்கள் நன்மை பெறும் பொருட்டு கல்வி ஒளியை அனைவருக்கும் வழங்கிய சூரியனாகவும், சந்திரனாகவும் இருவரும் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர்.

இவர் சந்திரர் எனில் அவர் சூரியர்... !

இவர் சூரியர் எனில் அவர் சந்திரர்... !

இன்றைக்கு பத்தாயிரம் மாணவ, மாணவிகள் படிப்பதற்கு வசதியாக பல்வேறு கட்டிடங்கள், பல்வேறு துறைகள் என ஜமால் விரிவடைந்திருக்கிறது எனில், சமுதாய உயர்வை எண்ணி இந்த இருபெரும் வள்ளல்கள் ஹாஜி M. ஜமால் முகம்மது சாஹிப் மற்றும் ஜனாப் N.M. காஜாமியான் இராவுத்தர் சாஹிப் இணைந்து கல்லூரியை உருவாக்கினார்கள். அன்றைக்கு இருவரும் இணைந்து விதைத்த கல்வி விதை இன்றைக்கு ஆலமரமாக – கல்லூரி, பள்ளிக்கூடம், அநாதை இல்லம், மசூதி என கிளை விரிந்து சமுதாய உயர்விற்கான நிழலைத் தந்து கொண்டிருக்கிறது. இவர்களது உயர்ந்த குணம் எப்படிப்பட்டது என்றால்....

அன்பை சுவாசித்து, அன்பு உள்ளவரை யாசித்து,
கல்வி ஒன்றையே யோசித்து,
அனைத்து மக்களையும் நேசித்து,
மாணவர்களிடத்தில் தாயாய் அன்பைக் காட்டினார்கள்.
அதே நேரத்தில் தந்தையாய் கண்டிப்பையும்
காட்டினார்கள்.

நட்பின் இலக்கணமாய் திகழ்ந்த இவர்களால் இன்றைக்கு பேரும், புகழும் பெற்று விளங்கும் ஜமால் முகம்மது கல்லூரி சமுதாய உயர்வின் ஓர் உயர்ந்த அடையாளமாய் – கல்விக்கான கலங்கரை விளக்காக விளங்குகிறது.

அன்றைய காலகட்டத்தில் சிறந்த தொழில் அதிபர்களாக விளங்கிய இவர்கள் தானுண்டு, தன் தொழிலுண்டு – தன் குடும்பம், தன் பிள்ளைகள் என இருந்திருந்தால் சமுதாயம் அதள பாதாளத்திற்கு தள்ளப்பட்டிருக்கும். நம்மையெல்லாம்

மீட்டெடுத்த இவர்கள் காலாகாலத்திற்கும் நம்மாலும், நமது வாரிசுகளாலும் நினைவில் கொள்ள வேண்டியவர்கள்!

தோல்ஏற்றுமதிநிறுவனம்(Leather Exports Company) நடத்தி அதன் மூலம் நம் நாட்டிற்கு அந்நிய செலவாணி (Foreign Exchange) ஈட்டித்தந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பையும் கொடுத்து நமது நாட்டில் தோல் தொழிற்சாலை வளர்ச்சி அடைவதற்கு COUNCIL FOR LEATHERS EXPORTS–னுடைய முன்னனி தலைவர்களாக இருந்தார்கள்.

நம் நாட்டில் சுதந்திரத்திற்காக அந்தக் காலக் கட்டத்தில் பல லட்சங்கள் நன்கொடையாக வழங்கி தங்களது செல்வத்தாலும் உடல் உழைப்பாலும் தேசபக்தர்களாக தங்களை அர்பணித்து வந்தார்கள்.

இறை வசனங்களின் அடிப்படையில் வாழ்ந்து, இறைவனிடமே உதவி கேட்டு சமுதாயத்திற்கு உதவிய இவர்கள் இறைநேசர்களாய் வாழ்ந்து, இறைவனால் பொறுத்துக்கொள்ளப்பட்டவர்கள்... !

காலமெல்லாம் இவர்களைப் போற்றுவோம்... !

வாழ்க வள்ளல் ஜாமல் முகம்மது சாஹிப்... !

வாழ்க வள்ளல் காஜாமியான் ராவுத்தர் சாஹிப்... !

வாழ்க ! வாழ்க !
ஜமால் முகம்மது கல்லூரி வாழ்க... !

* * * * *

# மானாஜானா நானாமூனா



கவிஞர். செந்தமிழ் மாமணி
அல்ஹாஜ் இ. முஹம்மது அலி, திருச்சி

கள்ளிப் பூக்களை
கல்விப் பூக்களாய்
மாற்றிய கல்லூரி
ஜமால் முஹம்மது
கானல் நீராய்
இருந்த கல்வியை
கடலெனத் தந்த
வள்ளல் ஜமால்
மானா ஜானா
நானா மூனா
தனித்த இரு மலர்கள்
இணைந்த போது
தென்றல் வந்தது
தெம்மாங்கு பாட
வண்டுகள் வந்தன
வரிசையாய் நின்றன
கல்வி மகரந்தம்

கணக்கின்றிப் பெற்றன
ஒன்றாய் இரண்டாய்
இருபத்து நூறாய்
எண்ணில் அடங்கா
எண்ணிக் கையில்
எழுந்து நின்றன
இறுமாப் புடனே
ஜமாலில் உருவானான்
ஜெகத்தினை உருவாக்கினான்
ஜெகம்புகழ் ஜமாலின்
கர்த்தா இருவர்
மானா ஜானா
நானா மூனா
நிறுவனர் தம்மை
நினைவில் நிறுத்தி
நிதமும் போற்றுவோம்
வாழ்க வாழ்கவே

# பேரொளி வீசும் பெருமைமிகு ஜமால்



த. ஆசிப் அஹமத்,
உதவிப் பேராசிரியர், பொருளியல் துறை,
மஜ்ஹருல் கலைக்கல்லூரி,
ஆம்பூர் – 635 802. வேலூர் மாவட்டம்.

தமிழக கல்வி வரலாற்றில் தாரகை ஒளி வீசி
தனித்துவமாய் விளங்கி வரும்
திருச்சியின் தீன்விளக்கே

வற்றாமல் வளம் சுரக்கும் வள்ளல்
குணம் கொண்ட கல்வி வள்ளல்
உள்ளமும் உயிரும் ஒருமிதம் ஓங்கி
உயர் கல்வி தாங்கி உயர்ந்து நிற்கும்
ஜமால் முஹம்மது கல்லூரி வாழ்க

மாமறை நெறியும் மாநபி வழியும் நாணயம்போல் நாநிலம்
நடக்க தடம் போட்டுகாட்டத் தக்க தொரு இடமே
சமத்துவ ஜமால் முஹம்மது கல்லூரி வாழ்க

தோல்தொழில் நடத்தியதினால் தாள்மோகம் ஏதுமின்றி
தீன் நெறி சிறப்பதற்கு கல்வி ஒளி ஏற்றி காலங்காலமாய்
கலங்கரை விளக்கமாய் விளங்கிடும் ஜமால் முஹம்மது
கல்லூரி வாழ்க

வானளவு கல்வி பரப்பாகி கடல் அலையாய் இமைக்கல்வி தந்து
ஏழை மக்களையும் எவரெஸ்டில் ஏற்றிவைக்க
எந்நாளும் ஏணிப்படியாய் இருந்துவரும் ஏற்றமிகு ஜமாலே வாழ்க

கோடிக்கணக்கான மாணவர்கள் கொண்ட துறையில்
கொடிகட்டி பரப்பதற்கு தக்க திறமையை தக்க நேரத்தில் தந்து
தாகித் தோரையும் தலைநிமிர வைக்கும் தன்மான ஒளி
விளக்கு ஜமாலே வாழ்க

அன்னை பூமியில் அருங்கல்வி தந்தாலும்
என்னைப் பூமியிலும் எண்ணிலடங்கா மாணவர்களை எண்ணற்ற துறையில்
ஏற்றம் காணச் செய்து ஏற்றம் காணும் ஏற்றமிகு ஜமாலே வாழ்க

உன்னில் படித்தவர்கள் அகிலம் முழுவதும் கல்வி ஒளி வீசி
சூரியன் மறையா நாட்டில்
சுடர் ஒளி ஏற்றிவைக்கும் சுந்தர ஜமாலே
சத்திய போராளியாய் சமத்துவ ஒளி வீசும் ஜமாலே

# காதலின் ஆசையிலே!

**THARVES MYDHEEN. M**
Infra Tech Specialist (MSSQL DBA) at
Cognizant Technology Services
1995 -1998 (B.Sc Phy)
1998 - 2001 (MCA)



*சீர்மிகு இதழ் தனில் நேர்மிகு சரந்தொடுத்து*
*கார்மேக சாரலென*
*பார்மகிழ் புலமேந்தி*
*தார்மீக வண்ணமீட்டும் உனை*
*யாம் கண்ட பிறவிப்பயன் என*
*தனித்தொரு வரமாய்*
*கனிப்பழா நீ சொட்டும்*
*தித்திப்பில் திகட்ட காணோம்*
*விசை இல்லா இசை என*
*தசை பற்றும் எம்பென*
*எம் வாழ்வுதனை உருவடித்தாய்!*

*ஏழையின் சிரிப்பினில் இறைவனை காண*
*வாழையடி வாழை என*
*தாழை இலை சுனை படர்ந்து*
*மழை சொறியும் சோலை என்றாங்கு*
*இரு பெருந்தகையால்*
*ஏற்றிட்ட தீபம் நீயே!*

*பற்பல சமயமாயினும்*
*கற்பல புலம் எடுத்து*
*நற்பல கருமங்களில்*
*அற்புத ஒன்றென அமைத்திட்டனரே!*

*அவர் தொடுத்த மாலை அதை*
*மணம்கமல விதியீட்டி*
*நன்மனம் சேர்த்திட்ட*
*நைனார் முகமது அவர்களும்*
*எளிமையின் நயம்படைத்த*
*வலிமையான அரண் படைத்த*
*அப்துல் சமது அவர்களும்*
*முதல்வர்களாய் முன்னெடுத்து*
*அப்பெரியார்களின் பெயர் காக்க*
*அரிதொரு நெறிபடைத்தனரே!*

*தளராத ஈகையினை*
*தாராள மனமதில்*
*ஏராள ஏழைகளை*
*பாராள வித்திட்ட*
*செல்வத்தின் பயன்தனை*
*கல்வெட்டில் பதியாது*
*புல்வெட்டி பயிர்காத்த*
*மேல்தட்டு மாந்தரென*
*வான்புகழ் ஏந்தினும்*
*இறைவாசம் பரப்பி*
*இம்மையிலும் பெயர் பதித்த*
*எம் கோமான்கள்*
*திரு ஜமால் முகமது – திரு காஜாமியான்*
*அவர்களுக்கு*
*நன்றி போற்ற வார்த்தை போதாது!*

*புழுதியில் தான் புரண்டாலும்*
*பழுதனை பொருட்டாது*
*கல் என துடித்தோர்க்கு*
*நில்லென நிழலிட்ட*
*ஒழுதனில் தொழுதுண்டு*
*பயிலென வழிகொடுத்து*
*கைகளில் வரமென*

*வாழ்வின் உரமென உனை*
*படைத்திட்டனரே!*

*தாய்மொழி பலவாகினும்*
*தாய்வழி உணர்வுமேவி ஒன்றுகூடி*
*உம்மடி களைப்பாறி*
*எம்மதி தெளிவு*
*ஓர் மொழி ஒரு சொல் (ஜமாலியன்)*
*உயிருக்கே பெருமையாக*
*உயர்பெயர்தனை பெற்றிட்டோமே!*

*தறியிட்ட பலநூல்கள் ஒருசேர*
*ஆடையினும் கவசமாகி*
*தேசத்தைக் காத்திட*
*நன்னெறி பயில்ந்தோமே!*

*கலக்கத்துடன் சுற்றினாலும் உம்மால்*
*பெற்ற*
*பழக்கத்தில் வந்தோரை காணுகையில்*
*அழுக்கற்ற மனம் அது வடிக்கின்ற*
*மழைப்பெருக்கு ஆனந்தத்தில்*
*கரைப்போமே!*

*கழனியில் நீ இரைத்த பயிர்களின் பயனது*
*உன் பேருன்றி உலகலாவி பூத்திட்டதே!*

*கந்தையிலே கற்றிட்டாலும்*
*விந்தை உலகின் வேற்றுமை காணோம்*
*மந்தையிலே போட்டியாயினும்*
*சிந்தையிலே உன்னால் வென்றிட்டோமே!*

*யாமறிந்த வார்த்தைகளில்*
*உயர்வுள்ளம் பெற்றமதி இயற்றிட்ட*
*மடைதாண்டி வெள்ளமென*
*தடையின்றி உன்மேல் வந்த மடல்!*

*வாழிய வாழிய*
*உளமது உள்ளவரை*
*உலகுக்கே நீ என்று*
*வாழிய வாழியவே.*

## ஜமால் முகம்மது இராவுத்தர்

*கெடுதலையைச் செய்துவந்த வெள்ளையரை விரட்டுதற்கு*
*விடுதலைப் போராட்டத்தில் வீரமுடன் செயல்பட்டார்*
*காந்திமகான் திரட்டிய நல்விடுதலையின் நன்நதிக்குக்*
*காலிக்கா சோலையினைக் கனிவுடனே ஈந்திட்டார்*

.....................................................................

முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,
இணைப்பேராசிரியர் & தமிழ்த் துறைத் தலைவர்,
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)

# கடமை வீரர்
# ஜமால் அப்துல் கஃபூர் அண்ணார்



ஈரோடு ஈ.கே.எம். தாஜ்

உன்னத ஜமாலியா குடும்பத்தில்
உதித்தார் உயர்குண உத்தமராய்
தன்னலம் கருதா தலைவரென
தரணிக் கொருமணி முத்தானார்
அன்பால் கவர்ந்தார் அனைவரையும்
அல்ஹாஜ் அப்துல் கஃபூரண்ணார்
தன்னில் ஆளுமைத் திறனோடு
திகழ்ந்தார் பலதுறை வித்தகராய்!

எண்ணில் அடங்கா சிறப்புடனே
எளிமை அடக்கப் பண்புடனே
தன்னிகர் இல்லாக் கல்லூரி
தமிழக திருச்சி மாநகரில்
கண்ணியர் ஜமால் முஹம்மதுடன்
காஜா முஹைதீன் வள்ளலுடன்
ஒன்றாய்த் தந்தை பெயர்சூட்டி
இணைந்து நிறுவி பணிபுரிந்தார்

கல்வித் தொண்டில் அறுபதாண்டு
கடமை உணர்வில் பலபொறுப்பில்
பல்கலைக் கழகப் புகழ்ஈட்டி
பலதுறைக் கல்விக் கலைக்கூடம்
வெல்லும் தரத்துடன் வளர்த்ததனால்
விழுதுகள் விரிந்த ஆலம்போல்
பல்லா யிரமாய் மாணவர்கள்
பயின்று உலகில் பரவினரே!

கல்லூரி ஜமால் முஹம்மதுவில்
கல்வி பெற்றதும் மாணவர்கள்
பல்வேறு நாட்டில் அமைத்தார்கள்
முன்னாள் மாணவர் சங்கங்கள்
வல்லார் செயலர் கஃபூரவர்தான்
வாகாய் அவற்றைத் துவக்கிடுவார்
நல்விதம் கல்லூரி வளர்வதற்கு
நிறைவாய் உதவிகள் பெற்றிடுவார்!

இறைவன் நல்லடி யாராகி
இரசூல் அன்பில் மனமுருகி
உறுதி கொண்ட உள்ளத்தால்
உழைத்தார் அனைவர் நலன்கருதி

பெருமதிப் புற்ற ஜமாலிய்யா
போற்றும் அரபிக் கல்லூரி
உறுதுணை தலைவர் பொறுப்பாற்றி
ஒளிர்வாய் மஸ்ஜிதும் விரிவுசெய்தார்!

பெரம்பூர் ஜமாலியா உயர்நிலைப்
பள்ளியில் எளியோர் பயின்றிடுவர்
இறைவன் இல்லம் அடங்கும் கபுருஸ்தான்,
நரிக்குடி ஜமால் வலியுல்லாஹ்,
நலிந்தோர்க் குதவிடும் நிதிலஜ்னா
